நானென்றும் நீயென்றும்...!

ஜெய்சக்தி

நானென்றும் நீயென்றும்...!

முதல் பாகம்

நானென்றும் நீயென்றும்...!

அத்தியாயம் - 1

நல்ல ஓவியங்கள் அங்கே காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன!

நீண்ட பெரிய ஹாலில் இரண்டு புறமும் ஏன்? நான்கு புறமும் கூட. ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஏழிசை வல்லபி மிகுந்த ஆர்வத்துடன் காலை எட்டி உள்ளே வைத்தாள். மெதுவாக இடது புறத்தில் இருந்து ஒவ்வொரு ஓவியமாக நின்று பார்க்க ஆரம்பித்தாள்.

அத்தனையும் கோட்டோவியங்கள். பென்சிலால் வரையப்பட்டிருந்தன.

மிக அழகான ஓவியங்களாக இருந்தன. வெறும் பென்சிலை வைத்துக் கொண்டு இத்தனை மந்திர ஜாலங்கள் காட்ட முடியுமா? என்பது போல அந்த ஓவியங்கள் அந்த பெரிய ஹாலையே அழகு படுத்திக்கொண்டிருந்தன.

பெரிய அளவில் கூட்டம் இல்லை. அழகான முறையில் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது அந்த ஹால்.

கோவையினுடைய முக்கியமான அறக்கட்டளை நிறுவனம்

ஒன்று அந்த ஹாலை இளம் ஓவியர்களுக்காக, வளரும் ஓவியர்களுக்காக இலவசமாகவே கொடுத்துக் கொண்டிருந்தது.

மாதம் ஒரு முறையாவது ஓவியக் கண்காட்சி நடந்து கொண்டிருக்கும்.

ஏழிசை வல்லபியும் தவறாது அந்த ஓவியக் கண் காட்சியைக் காண்பதற்கு வருவாள். நுண் கலைகளில் அவளுக்கு ஆர்வம் எங்கெல்லாம் கவிதைகள் படிக்கிறார் களோ அங்கெல்லாம் போய் கூட்டத்தில் ஒருத்தியாக அமர்ந்து ரசித்துக் கேட்பாள். இத்தனைக்கும் அவளே ஒரு கவிதாயினி தான்.

எங்கெல்லாம் பட்டி மன்றங்கள் நடக்கிறதோ அங்கே போய்க் கேட்பாள். தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் அவள் பட்டிமன்ற மேடைகளில் ஏறுவதும் உண்டு.

எங்கெல்லாம் கலை தொடர்பான விஷயங்கள் நடை பெறுகின்றனவோ அங்கெல்லாம் ஏழிசை வல்லபியை பார்க்கலாம்.

நடுத்தரக் குடும்பத்தில் இருந்து வருகிறாள் ஏழிசை வல்லபி. ஒரு சகோதரனும், ஒரு சகோதரியுமாக அவளது வாழ்க்கை இனிமையாகத்தான் ஓடிக் கொண்டிருக்கிறது.

பெரிய ஏற்றத் தாழ்வுகள் இல்லை. பெரிய அளவில் சுக துக்க வேறுபாடுகள் இல்லை. அதனால் வாழ்க்கை சம தளத்தில் ஓடிக் கொண்டிருந்தது. இன்னும் சொல்லப் போனால் அழகான ஒரு ஆறு போல ஓடிக் கொண்டிருந்தது.

சகோதரனுக்கே இன்னும் திருமணம் ஆகவில்லை என்பதால், இன்னமும் அவளது திருமணம் பற்றிய பேச்சு எடுக்கப்படவில்லை.

நல்லது 'இப்போதைக்கு தப்பித்தோம் எவ்வளவுக்கு எவ்வளவு ரசனைகளை மேம்படுத்திக்கொள்ள முடியுமோ?

அவ்வளவுக்கவ்வளவு ரசனைகளை மேம்படுத்திக்கொண்டு வாழ்க்கையை அனுபவிப்போம்' என்ற முடிவோடு இருந்தாள்.

ஒரு பள்ளியிலே மேல்நிலைப் பள்ளி ஆசிரியையாக அவள் வேலை பார்த்தாள். அதனால் வார இறுதி நாட்களிலேயே அவளுக்கு நேரம் கிடைத்தது.

ஒரு பெண் - கிராமத்துப் பெண் - அவள் தன் கணவனுக்காக காத்திருக்கிறாளாம். அவள் நின்று கொண்டிருந்த விதமும், சேலைக்கட்டும் அவ்வளவு அற்புதமாக இருந்தது. பின்கொசுவம் வைத்து சேலை கட்டிக்கொண்டு நின்று கொண்டிருந்தாள் அந்தப் பெண்.

குடிசையின் முன்புறத்திலே உள்ள தாழ்வாரத்தில் இருந்து இறங்கிய அந்த மூங்கில் தூணைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள்.

அவள் கண்களில் கணவனுக்கான எதிர்பார்ப்பும் காத் திருப்பும், காதலுமாக, அத்தனை உணர்வுகள் காட்டப் பெற்றிருந்தன.

அந்த ஓவியத்தை விட்டு நகரவே முடியாதவள் போல நின்று கொண்டிருந்தாள் ஏழிசை வல்லபி.

அந்த ஓவியத்தின் ஒரு பக்க கீழ் மூலையிலே யாருடைய கையெழுத்து இருக்கிறது என்று குறுகுறுப்பாக பார்த்தாள். 'உமா' என்று கிறுக்கலாக எழுதியிருந்தது.

உமா..!

அடேயப்பா...!

இதை வரைந்தவள் ஒரு பெண்ணா? இருக்கும் இருக்கும்.

ஒரு பெண்ணால்தான். இத்தனை உணர்வுகளை புரிந்து கொள்ள முடியும்.

அந்தப் பின்னணியும் சரி. அந்த பெண் நிற்கிற விதமும் சரி...! அந்த குடிசைக் கதவை லேசாக திறந்து வைத்திருந்த அழகும் சரி...! பின்னாலே அடுப்பின் மேலே இருந்த பானையும் சரி! அதிலே இருந்து லேசாக வந்து கொண்டிருந்த ஆவியும் சரி... இத்தனையும் சோறு பொங்கி வைத்துக் கொண்டு கணவனுக்காக காத்திருக்கிற அந்த பெண்ணினுடைய யதார்த்த நிலையை அழகுற எடுத்துக் காட்டியது!

"ஒவியம்னா இப்படித்தான் இருக்கணும்! அந்த பெண்ணை மட்டும் நினைக்காம அவ நின்னுட்டு இருக்கிற நேரம்! சாப்பாடு கூடா ஆகியிருக்காம் பாரேன் எப்படி கற்பனையை! என்று எண்ணிக் கொண்டாள்.

"நினைச்சேண்டி நீ கண்டிப்பா இதுக்கு வருவேன்னு" என்று குரல் கேட்கவும் திரும்பிப் பார்த்தாள்! சுபத்ரா அவளது கல்லூரித் தோழி.

ஏழிசை வல்லபி ஆச்சரியப்பட்டாள் முகம். மலர்ந்தது "ஏய் சுபத்ரா என்னாச்சு கொஞ்ச நாளா உன்னைக் காணலை."

"என்ன ஆச்சு குழந்தை அழுகுது" என்றாள் சுபத்ரா.

ஏழிசை சிரித்தாள். "ஜோக்காக்கும்!"

"இல்லடி! நிஜமாவே குழந்தை அழுது. குழந்தை பொறந்துருச்சுல்ல. ஏழெட்டு மாசமாச்சுல்ல. விட்டுட்டு வரமுடியலை. இன்னிக்குத்தான் ஒரு டூ அவர்ஸ் எங்க வீட்டுக்காரரை கொஞ்சம் பார்த்துக்கச் சொல்லிட்டு வந்திருக்கேன். வீட்லேயே இருந்து எனக்கு தலையே வெடிச்சிரும் போல ஆயிருச்சு."

"என்னடி இப்படி சொல்றே? குழந்தையே ஒரு ஓவியம் மாதிரிதான். அது நிக்கறதும் நடக்கறதும் போறதும் வர்றதும் எவ்ளோ அழகா இருக்கும். கைய கால ஆட்டி அதோட கண்கள பார்க்கறதும் சிரிக்கிறதும்! அதைவிட என்னடி பெரிய டென்ஷன் ரிலீஃப் வேணும்?"

"அதெல்லாம் உண்மைதான் ஆனால் த்ரூ அவுட் வீட்லேயே இருக்கிறது கஷ்டமாயிருக்கு. குழந்தையை இந்த ஸ்டேஜ்ல எடுத்துக்கிட்டு அலைக்கழிக்கிறது தப்பில்லையா? இன்பெக்ஷன் ஆகலாம். அப்புறம் ஒரு கூடையைத் தூக்கிட்டு எல்லாத்தையும் எடுத்துட்டு வரணும். அதனால எங்கேயும் போறது இல்லைடி!"

.....!

"ஒரு டென் மந்த்ஸ் ஆகட்டும். ஒன் இயராவது ஆகட்டும்னு வெயிட் பண்றேன். அப்படியிருந்தும் எனக்கு இந்த உமாவோட ஓவியம்ன ஒடனே மனசு கேக்கலை. அதை சாக்கா வைச்சுட்டு ஒரு டூ அவர்ஸ் பார்த்துக்கங் களேன்னு விட்டுட்டு வந்திருக்கேன்.

இன்ஃபாக்ட் கார்ல வெளியில வெயிட் பண்றாரு குழந்தை கையில இருக்கு" என்றாள்.

"அப்படியா? பேபி சிட்டிங்னு உட்கார வைச்சுட்டியாக்கும்" என்றால் ஏழிசை வல்லபி.

"ஏன்? நம்ம நாள் முழுக்க பாக்கறது இல்லையா? டூ அவர்ஸ் பார்க்கட்டுமே. பார்த்தாத்தான் கஷ்டம் தெரியும்." என்றாள் இவள்.

"அப்படியெல்லாம் சொல்ல முடியாது. ஒரு வேளை அவர் என்ஜாய் பண்ற டைப்பா இருந்தா?"

"அப்படி இருந்தா நல்லது தானே? இப்படி ஒரு டிரையல் பார்த்திருக்கேன். ஒரு வேளை ஒத்து வந்துட்டா அப்பப்ப வெளியில விசிட் அடிச்சிரலாம்ல" என்று கண்ணைச் சிமிட்டினாள் சுமித்ரா.

"இரு இரு. நான் போய் அவர்கிட்ட வார்னிங் கொடுத்திடறேன்" என்றாள்.

"வந்திருவீங்களே இதுக்குன்னே கொஞ்சம் பேரு" என்று அவள் செல்லமாக கடிந்து கொண்டாள்.

இரண்டு பேரும் சிரித்தார்கள்.

"இல்லடி.. என் ஹஸ்பெண்ட் ரொம்ப நல்ல டைப் தான். இன்ஃபாக்ட் அவரு தான் சொன்னாரு. வீட்லயே அடைஞ்சு கிடக்கிறியேம்மா வா. காரை எடுத்துக்கிட்டு போவோம். நீ வேண்ணா அந்த எக்ஸிபிஷன்லே போய் ஒரு டீ அவர்ஸ் சுத்திட்டு வா. நான் குழந்தையோடு வெளியில கார்ல இருக்கிறேன். ஏதாவது அவசரம்னா கூப்பிட்டா வந்துருவீல்ல". அப்படின்னு சொல்லி கூட்டிட்டு வந்தாரு" என்றாள் சுபத்ரா பெருமையுடன்

ஏழிசை வல்லபிக்கு முகத்தில் ஆச்சரியக் குறி தோன்றியது. "நிஜமாவாடி?"

"ஆமாடி மாசம் இருபத்தஞ்சாயிரம் ரூபாய் சம்பாதித்து கொடுக்கிறேன்ல" என்றாள் சுபத்ரா.

"அப்புறம் வீட்ல இருக்கேன்னே?" என்று கேட்டாள்.

"இப்பத்தான் ஆறு மாசம் லீவு கொடுக்கிறாங்களேடி. முதலில் ஒரு மூணு மாதம் லீவு போட்டிருக்கேன் எம்.எல் போட்டிருக்கேன். முடிச்சுட்டு போய், நைன் மந்த்ஸ் ஆனவுடனே போய் ஜாயின் பண்ணிக்கலாம்னு இருக்கேன்" என்றாள்.

ஏழிசை வல்லபி பெருமூச்சு விட்டாள். "பரவாயில்லடி நீங்க ஆபீஸ்ல இருக்கிறதுனால அதுவும் கவர்மெண்ட் ஆபீஸா இருக்கிறதுனால இப்படி யெல்லாம் லீவு கிடைக்குது. ஆனா நாங்கெல்லாம் நைன் மந்த்ஸ் எடுத்தோம்னா ஸ்டூடன்ஸோட ஸ்டடிஸ் பாதிச்சிரும். அவ்வளவு சீக்கிரம் குடுக்கமாட்டாங்க." என்றாள்.

"அதென்னடி அவங்க குடுக்கறது. நம்ம லீவு நம்ம எடுத்துக்கலாம்." என்றாள்.

"எடுத்துக்கலாம் ஆனால் நமக்குன்னு ஒரு மனசாட்சி இருக்குல்ல" என்றாள் ஏழிசை வல்லபி.

"சரிசரி, மனசாட்சியையே பார்த்துக்கிட்டு உட்கார்ந்திரு" என்றாள்

ஏழிசை வல்லபி புன்னகைத்தாள். "என்னடி! இப்பத்தான் என்னமோ எனக்கு கல்யாணமாகி குழந்தை வரிசையில நிற்கிற மாதிரி வேற நாம பேச ஆரம்பிச்சுட்டோம்" என்றாள்.

"அதெல்லாம் சொல்லவே முடியாது. டபக்குன்னு இன்னிக்கே ஒரு மாப்பிள்ளை அமையலாம். நாளைக்கே ஒரு மாப்பிள்ளை அமையலாம்" என்றாள் சுபத்ரா.

"இப்போதைக்கு வேணாம்னு வேண்டிக்கிட்டிருக்கேன்டி. ஆனா நீ சொன்ன மாதிரி இன்னிக்கு நாளைக்கெல்லாம் நடக்காது. ஏன்னா அண்ணா இருக்காங்கள்ளே, அண்ணாவுக்கு முடிச்சுட்டுத்தான்" என்றாள் ஏழிசை வல்லபி.

"அதையும் நம்பிக்கிட்டு இருக்காதே. ஜென்ட்ஸ் திடீர்னு திரும்பிடுவாங்க. எப்படி ஒரு தங்கையை வச்சுக்கிட்டு கல்யாணம் பண்றதுன்னு உங்க அண்ணன்

சொன்னான்னு வச்சுக்க உடனே உங்க பேரன்ட்ஸ் ஒத்துக்குவாங்க'' என்றாள் சுபத்ரா.

''வேண்டாண்டி. அதையெல்லாம் சொல்லி பயமுறுத்தாதே. நாம என்ஜாய் பண்ண வந்திருக்கோம் லெட் அஸ் என்ஜாய்'' என்று திரும்பி ''சுபத்ரா இங்க பாரேன் இந்த ஓவியத்தில் எவ்வளவு ஒரு அழகு! அந்தப் பொண்ணு காத்துக்கிட்டு நிக்கிற விதத்தையும் அந்த கண்ணுல தெரியற ஆர்வம்...! எதிர்பார்ப்பு...! காதல்...! நிஜமாவே இந்த ஓவியர் நல்ல ஓவியர்டி எப்படி இத்தனை நாள் தெரிஞ்சுக்காம போனேன்?'' என்று கேட்டாள்.

''அது டு இயர்ஸ் முன்னாடி தான் ஒரு கண்காட்சி வச்சாப்ல. அதுக்குப்பிறகு இப்பத்தான் வச்சிருக்கிறாரு'' என்றாள்.

''உமான்னு போட்டுருக்கு. வச்சிருக்காரு அப்படின்னு சொல்றே'' என்று கேட்டாள் ஏழிசை வல்லபி.

''அது உமாகாந்தன்! முழுப் பேரு'' என்று சுபத்ரா ஏதோ சொல்ல வந்தவள் போல ஆரம்பித்து விட்டு நாக்கைக் கடித்துக் கொண்டு ''வேண்டாம், அதைப்பத்தி என்ன இப்போ?'' என்றாள்.

''எதைப் பத்தி'' என்றாள் ஏழிசை வல்லபி.

''அதெல்லாம் ஒரு நாளைக்கு தெரிஞ்சுக்கலாண்டி. இப்ப நமக்குத் தேவை ஓவியத்தை பார்க்கறதுதான். பார்க்கலாம்'' என்று சுற்றிப் பார்த்தார்கள்.

''இங்கே பாருடி'' என்று சற்று தூரத்திலே ஒருவரை காட்டினாள் ''இவருதான் சத்யபிரகாஷ். உமாவோட அண்ணன்'' என்றாள்.

''ஓ!'' என்று அவள் லேசாக கண்களை அந்த இளைஞன் மேல் ஒட்டினாள்.

ஓரளவு உயரம்! மாநிறம்! அரும்பு மீசையும் களையான முகமுமாக நின்று கொண்டிருந்தான் அந்த இளைஞன். சட்டையை இன் பண்ணி இருந்தான். ''இவருன்னா இவருதான் இந்த கண்காட்சியை நடத்தறாரா'' என்று கேட்டாள் ஏழிசை வல்லபி.

''ஆமா! அவரு தான் அவரோட பிரதருக்கு ரொம்ப இன்ஸ்பிரேஷன். வாட் எ நைஸ் பர்ஸனாலிட்டி'' என்றாள்.

''என்ன பண்றாரு, தெரியுமா? என்று கேட்டாள் ஏழிசை வல்லபி.''

தெரியலை. ஏதோ சின்னதா பிஸினஸ் பண்ற மாதிரி கேள்விப்பட்டேன். என்ன பண்றாங்கன்னு தெரியலை. அந்த அளவுக்கு டீட்டெய்ல்ஸ் தெரியலை.''

சற்று நேரம் மூன்று நான்கு படங்களை பார்த்ததற்கு பிறகு ஓரிடத்திலே போய் அமைதியாக நின்றார்கள். ஏனென்றால் அந்த ஓவியம் அவர்கள் அப்படி கண்ணை இழுத்தது.

இரண்டு இளம் பெண்கள் நொண்டி விளையாடுவது போன்ற ஓவியம்.

''பரவாயில்லடி இப்படி ஒரு பிரதர் கிடைக்கிறதுக்கு அந்த ஓவியர் ரொம்ப கொடுத்து வைச்சிருக்கணும்'' என்றாள் ஏழிசை வல்லபி.

''அதென்னமோ நிஜம்தாண்டி. உண்மையாவே உமாவுக்கு இப்படி ஒரு பிரதர் கிடைக்கிறதுக்கு உமாகாந்தன் குடுத்துத் தான் வச்சிருக்கணும்'' என்றாள் சுபத்ரா.

சுபத்ரா பேசுவதில் ஒரு அர்த்தம் தொக்கி நிக்கிறாற் போல தோன்றியது. கல்லூரி நாட்களில் இருந்தே அவள் இப்படித்தான். எப்பொழுதும் புலம்பலாகத்தான் பேசுவாள். 'உனக்கு என்னடிம்மா' என்பது போலத்தான் பேச்சே ஆரம்பிப்பாள். எல்லோருடனும் அப்படித்தான் பேசுவாள்.

ஏதோ தனக்கு குறை போலவும் மற்றவர்களுக்கெல்லாம் வாழ்க்கை நிறைவாக இருக்கிறாற்போலவும் தான் பேசுவாள். அதனால் அவள் இப்போது அப்படிப் பேசியது ஏழிசை வல்லபிக்கு பெரிய அளவிலே வித்தியாசமாக தெரியவில்லை.

சிரித்துக் கொண்டாள். ஆனால் அந்த சத்தியபிரகாஷை இன்னொரு முறை திரும்பிப் பார்க்க வேண்டும் போல தோன்றியது.

திரும்பிப் பார்த்தாள்! கன கம்பீரமாக நின்று கொண்டிருந்தான் அந்த இளைஞன்.

அதே நேரத்திலே அவனுடைய பார்வையும் அவளிடத்திலே வந்து மோதியது.

கவரப்பட்டாற்போல இரண்டு பேரும் ஓரிரு விநாடிகள் பார்த்துக் கொண்டார்கள்.

பிறகு சட்டென்று ஏழிசை வல்லபி தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவனும் அங்கிருந்து வேகமாக ஏதோ வேலை இருப்பவன் போல நகர்ந்து சென்று விட்டான்.

இன்னும் சற்று தூரம் போனார்கள். இன்னும் இரண்டு மூன்று ஓவியங்களைப் பார்த்தார்கள்.

சுபத்ரா திரும்பி ஏழிசை வல்லபியிடம்.

"நிச்சயமா இந்த ஓவியங்களை பார்க்கறதுக்கு டூ அவர்ஸ் பத்தாதுடி மறுபடியும் நாளைக்கு டூ அவர்ஸ் வரப் போறேன்" என்று சொன்னாள்.

அதற்குள்ளாக அவளது செல்ஃபோன் ஒலித்தது. "குழந்தை அழறான் போல இருக்குடி. நான் கிளம்பறேன்" என்று சொல்லி திரும்பியவள் சட்டென்று நின்றாள்.

அப்போது எதிரே அந்த இளைஞன் வந்தான்.

சற்று முன் பார்த்த இளைஞன் அல்ல வேறொரு இளைஞன்.

அவன் வந்தான்.

சுபத்ரா நின்று "ஹலோ உமாகாந்தன் இங்கே வாங்க" என்றாள்.

அவன் வந்தான். திரும்பி "இவங்க ஏழிசை வல்லபி இவங்கள இன்ட்ரொட்யூஸ் பண்ணிக் கோங்க. கோயமுத்தூர்ல ஒரு முக்கியமான ஃபிகர். நிறைய நுண்கலை விஷயங்களில் ஆர்வமுள்ளவங்க. பேசுவாங்க! கவிதை எழுதுவாங்க, ஓவியம் கூட கொஞ்சம் ட்ரை பண்ணுவாங்கன்னு நினைக்கிறேன். பாடுவாங்க. அறிமுகப்படுத்திக் கோங்க சார்" என்று சொல்லிவிட்டு "நான் வரேன்" என்று வேகமாக போய் விட்டாள்.

ஏழிசை வல்லபி உமாகாந்தனை நோக்கி வணக்கம் போட்டாள்.

உமாகாந்தன் மிகச் சிறிய வயதினனாக இருந்தான். ஓரிரு நிமிடங்கள் நின்று பார்க்கப் பார்க்கத்தான் அந்த உண்மை ஏழிசை வல்லபிக்கு புரிந்தது.

அது மெல்ல மெல்ல உள்ளே உள்ளே இறங்கியது

அத்தியாயம் - 2

"என்னடா இன்னும் முடிக்கலையா" என்று கேட்டுக் கொண்டிருந்தாள் ஏழிசை வல்லபி.

"இல்லை மிஸ். எனக்கு சரியா வரமாட்டேங்குது" என்றான் மாணவன்.

ஏழிசை வல்லபி அந்த மாண வனுடைய அருகிலே போய் நின்று பார்த்தாள்.

பிராக்டிக்கல் வகுப்பு நடந்து கொண்டிருந்தது.

ஏழிசை வல்லபி அந்த மேனிலைப்பள்ளியிலே வேதியியல் எனப்படும், கெமிஸ்டிரி பாடத்தைப் போதிப்பவளாக இருந்தாள்.

அது ஒரு கிராமத்துப் பள்ளி. அங்கே இருக்கிற குழந்தைகள் எல்லாம் கிராமத்திலே இருந்து வருகிறவர்கள்.

அவர்களுடைய முதல் பிரச்சினை அவர்களுக்கென்று இருக்கின்ற தாழ்வு மனப்பான்மை. அதனால் அவர்கள் வேதியியல் பாடம் என்றாலே ஏதோ வானத்தில் இருந்து குதித்தாற் போல எண்ணிக் கொள்கிறார்கள் என்பது அவளுக்குப் புரிந்திருந்தது. அதனால் அவர்களுக்கு மெது மெதுவாக புரிய வைக்க வேண்டிய அவசியம் அவளுக்கு இருந்தது.

"பொதுவாக எல்லாரும் இலக்கணம் கணிதம், இதை யெல்லாம் பார்த்தாலே பயப்படறீங்க. எதுக்கு? அதை புரிஞ்சுக் கிட்டா அது மாதிரி சுவாரசியமான விஷயம் இல்லை. அதுமாதிரி நீங்களும் இந்த சப்ஜெக்ட்டை லைக் பண்ணப் பழகிக்கணும். எடுத்தவுடனே பயந்தீங்கன்னா அதுவே மனசுல ஒரு திரை போட்ட மாதிரி ஆயிடும். அதுக்குள்ள போகவே உங்களால முடியாது. புரிஞ்சுக்குங்க" என்று பலமுறை சொல்லி இருக்கிறாள்.

பலவிதங்களில் அவள் ஸ்டிரிக்டான ஆசிரியை என்று பெயர் பெற்றிருந்தாலும் கூட அவள் மாணவர்களிடம் காட்டுகிற பரிவுக்காகவும் அணுகுமுறைக்காகவும் அவளை மாணவர்கள் பெரிதும் விரும்பினார்கள்.

'கெமிஸ்டிரி பாடத்தைக் கூட இப்படி ஜாலியா சொல்லிக் கொடுக்க முடியுமா?' என்று மற்ற ஆசிரியர்கள் பார்த்து ஆச்சரியப்படுகிற அளவிலே தான் அவளுடைய வகுப்பு இருக்கும்.

பொதுவாக அறிவியல் பாடங்களில் மாணவர்கள் ஏதோ ஒரு கவசத்தை மாட்டிக் கொண்டு கவனமாக கவனிக்கிறாற் போல தீவிரமாக அமர்ந்து கொண்டிருப்பார்கள். ஆனால் ஏழிசை வல்லபியினுடைய வகுப்பில் அவள் சிரித்துக் கொண்டே தான் பாடம் எடுப்பாள்.

மாணவர்களும் அவ்வப்போது கலகலவென்று சிரிப்பார்கள். அவள் கொடுக்கிற உதாரணங்கள் அப்படி இருக்கும். ஆனால் மாணவர்களுக்கு பாடத்தைப் பொறுத்த வரை பயம் கிடையாது ஆனால் மற்ற விஷயங்களில் அவள் கண்டிப்பாகத்தான் இருப்பாள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

"இந்த ஃபார்முலாவை நூறு தடவை எழுதிட்டு வந்துரு" என்பாள்.

"மேடம், இம்போஸிஷனெல்லாம் கொடுக்கக் கூடாது" என்பான் மாணவன் அவள் பக்கத்திலே வந்து.

"இது இம்போஸிஷன் இல்லையே. இன்னிக்கு நீ சொல்லாம விட்டுட்டே உம்மனசுல நிக்கலை. இத்தனை தடவை எழுதினா உன் மனசுல நிக்கும் அவ்வளவுதான்."

அவனும் அவள் ஆசிரியர் அறைக்கு செல்லும் வரை பக்கத்திலேயே நடந்து வந்து என்னென்ன விதமாக எதிர்க்க முடியும் என்று பார்ப்பான்.

அவளும்சிரித்துக் கொண்டே கண்டிப்பாக அதே நிலையில் நின்று விடுவாள்.

"போங்க மிஸ். உங்க கிட்ட கேட்டுப் பிரயோஜனம் இல்லை" என்பான் அவன்.

"தெரியுதில்லை அப்புறம் ஏன் கஷ்டப்படறே பேசாம எழுதிரு. எழுதிறதுக்கு முன்னால வேண்ணா என் மேல கோபம் இருந்தா ஒரு பேப்பரை எடு. அதுல என்னைப் பத்தி என்னென்ன திட்டணுமோ திட்டிக்கோ. திட்டிட்டு அப்புறம் கிழித்து போட்டுடு. திரும்பி எழுது" என்றாள்.

"திரும்பி பார்முலாவா எழுது" என்பாள்.

அவன் சிணுங்குவான் "உங்களப் பத்தி திட்டி எழுதுறதுக்கு பதிலா பேசாம நான் பார்முலாவே எழுதிருவேன்" என்பான்.

"சரி அதைச் செய்" என்பாள்.

விளையாட்டுப் போல அவள் மாணவர்களை கையாளுகிற விதம் அவர்களுக்குப் புரிந்திருந்தது.

அவள் தங்கள் மேல் ஆழமான அக்கறை வைத்திருக்கிறாள் என்பதை புரிந்து கொள்ளுவார்கள். அதனால் ஒரு சில பள்ளிகளைப் போல ஒரு சில ஆசிரியர்களைப் போல இண்டர்னல் மார்க் என்று பயமுறுத்த வேண்டிய அவசியம் அவளுக்கு இருந்ததே இல்லை.

சிரித்துக் கொண்டே சொல்லுவாள். "இண்டர்னலுக்கு மார்க்கை ஒரு ஆயுதமா வச்சுக்க விரும்பலை. நீங்க என்னைப் புரிஞ்சுக்கணும். நான் உங்களைப்

புரிஞ்சுக்கணும். இரண்டு பேரோட எய்மும் உன்னோட டெவலப் மெண்ட்டுக்குத்தான்னு புரிஞ்சுக் கிட்டீன்னா நான் எதை வச்சும் மிரட்ட வேண்டியதில்லை" என்று சொல்லுவாள்.

அப்படியெல்லாம் அவள் சொல்லும் போது மாணவர்களுக்கு அது ஆழமாக உள்ளே இறங்கும். ஒரு சில ஆசிரியர்கள் அவளிடம் கோபிப்பதும் உண்டு "எதுக்கு நீ இப்படி அவனுககிட்ட சிரிச்சு சிரிச்சு பேசுறே? கொஞ்சம் இடம் கொடுத்தீன்னா தலைக்கு மேல போயிடுவாங்க. நீங்கள்ளாம் இப்படி பண்ணினீங்கன்னா நாங்க ஸ்டிரிக்டா இருக்கிறதா பேர் வரும்" என்று கூட சொல்லுவார்கள்.

அவள் சிரித்துக் கொண்டே "நான் ஸ்டிரிக்டா இல்லைன்னு யாரு சொன்னது. நீங்களே மாணவர்கள் கிட்ட போய் கேட்டுப்பாருங்க. ஸ்டிரிக்டா இருக்கிறதுன்னா சீரியஸா இருக்கிறதுங்கற அவசியமில்லை."

"அவங்களுக்கு புரிய வைக்கணும். படிக்க வைக்கணும் பாடத்தை பொறுத்த வரைக்கும் அவங்ககிட்ட ஸ்டிரிக்டா இருக்கணும். மற்றபடி வீ ஆர் நாட் டீலிங் வித் லெட்ஜர்ஸ் நாம ஹியூமன் பீயிங்க்ஸ் கூட பழகிட்டிருக்கோம். அதுவும் அடலஸண்ட் ஸ்டேஜ் குழந்தைங்க. அவங்களை நாம எப்படி நடத்துணுமோ அப்படி நடத்துனா அவனும் அதே மாதிரி நடந்துப்பான்." என்று சொல்லுவாள்.

"என்னவோ நீயும் உன் சைக்காலஜியும்" என்பாள் அவளுடன் வேலை செய்கிற கலாவதி டீச்சர்.

"ஆனால் இவ சொல்றது என்னமோ நிஜம்தான்" என்று தன்னொத்த வயதுள்ள ஆசிரியர்களிடம் சொல்லுவாள். "இவகிட்ட வாலாட்டறதே இல்லை. இவ கூப்பிட்டு என்ன வேலை சொன்னாலும் பம்மிட்டு செய்யறானுங்க. என்ன

மந்திரம் போட்டிருக்கான்னு தெரியலை" என்று சொல்லுவாள்.

அவள் அப்படிச்சொன்னாலும் கூட வல்லபிக்குக் கோபம் வராது.

ஏனோ கலாவதி டீச்சரை அவளுக்குப் பிடிக்கும். கலாவதி டீச்சர் மற்றவர்களைப் போல பின்னாலே பேசுகிறவர் அல்ல என்பது அவளுக்குத் தெரியும். நேரடியாகச் சொல்லுவாள். ஆனால் அதோடு விட்டுவிட்டுப் போவாள்.

தனக்கு எப்படி மாணவர்கள் பயப்படுகிறார்களோ அதே போல கலாவதி டீச்சரிடமும் சக ஆசிரியர்கள் கொஞ்சம் பயந்தாற் போலத்தான் நடந்து கொள்ளுவார்கள் என்று தெரியும்.

கலாவதியின் நட்பு அவளுக்கு மிகவும் உதவிகரமாக இருந்தது என்று சொல்லலாம். ஆனால் மற்றவர்களிடம் பேசுவது போல இவளிடம் "வாங்க போங்க" என்று பேச மாட்டாள். உரிமையாக வா, போ என்றுதான் பேசுவாள்.

இரண்டு பேருமாக நடந்து ஆசிரியர்கள் அறைக்குப் போனார்கள்.

அவரவர் டேபிளில் அமர்ந்தார்கள்.

நல்ல வேளையாக ஏழிசை வல்லபிக்கு கடைசி டேபிள் அதற்கு முந்திய டேபிள் கலாவதியுடையது அதனால் அந்த நீளமான அறையிலே கலாவதியிடம் மட்டும் அவள் ஏதாவது பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றால் பகிர்ந்து கொள்வதற்கு வசதியாக இருந்தது.

கலாவதி சிரித்துக் கொண்டே கேட்டாள். "அப்புறம் நேற்று எங்க போனே? ஓவியக் கண்காட்சிக்குப் போயிருப்பியே" என்றாள்.

ஏழிசை வல்லபி சிரித்தாள். "கண்டுபிடிச்சுட்டீங்களே" என்றாள்.

"பின்னே கழுதை கெட்டா குட்டிச்சுவரு தெரியாதா" என்றாள்.

"ஆனாலும் அநியாயத்துக்கு என் பேரை டேமேஜ் பண்றீங்க" என்றாள் ஏழிசை வல்லபி.

"என்னடா, உரிமையாச் சொன்னேன்" என்றாள் கலாவதி.

"என்னைக் கழுதைன்னு சொன்னாக் கூடப் பரவாயில்லை. ஆனால் ஓவியக் கண்காட்சியை போய் குட்டிச்சுவருன்னு சொல்விட்டீங்களே. நியாயமே இல்லை" என்றாள்.

"பாரு உன்னைப் பத்தி சொன்னா உனக்கு ரோஷம் வரணும். உனக்கு எதுக்கு ரோஷம் வருதுன்னு பாரு உன்னை திருத்தவே முடியாது" என்றாள் அவள்.

"அது சரி நேத்து பள்ளிக்கூடத்தில ஒரு பிரச்சினை ஆச்சு" என்றாள் அவள்.

"என்னங்க" என்றாள் ஏழிசை.

"இல்லை, அந்த வகுப்புல எட்டாம் வகுப்பு டீச்சரில்லே? அந்தம்மா ஒரு குழந்தையைப் போட்டு அடி அடின்னு அடிச்சுருச்சு" என்றாள்.

"அப்படியா" என்றாள்.

"ஆமாம் சாரி நேத்துன்னு சொன்னேனில்ல, வெள்ளிக்கிழமை அன்றைக்கு நடந்துருச்சு. நீதான் வெள்ளிக்கிழமை அன்னிக்கு ஏதோ டீச்சர்ஸ் புரோகிராமுக்கு போயிட்டியே"

"ஆமா அது எதுவோ இன்சர்வீஸ் டிரெயினிங்னு சொன்னாங்க போனேன்."

"நல்லாவே அடிச்சிட்டாங்கப்பா. "அப்புறம் என்னாச்சு" என்றாள் ஏழிசை வல்லபி.

"நல்லவேளைக்கு அவங்க அப்பா வந்தவரு பரவாயில்லைங்க இவன் ரொம்ப குறும்பு தான். இவ செய்யறதெல்லாம் அநியாயம்தான். நாங்களே வீட்டுல அடிச்சுக் கொல்றோம். இங்க நீங்க அடிச்சிட்டீங்க பரவாயில்லை இங்கயாவது திருந்தினா சரின்னு சொல்லிட்டு போயிட்டாரு."

"அவருகிவரு கம்ப்ளைண்டுன்னு ஆரம்பிச்சிருந்தாருன்னா ரொம்ப கஷ்டம்தான்."

ஏழிசை வல்லபி கொஞ்சம் சிந்தனையுடன் அவளைப் பார்த்தாள். "ஆமா டீச்சர் இது பெரிய விஷயம் தான் ஏன்னா அடி உதவற மாதிரி அண்ணன் தம்பி கூட உதவ மாட்டான்னு சொல்லுவாங்க. அடிக்க வேண்டாம். அப்படியே ஒரு பிரம்பை வைத்துக் கொண்டு மிரட்டினா அது ஒரு இதுதான். ஆனால் நிறைய பேர் அதை மிஸ் யூஸ் பண்ணிடறாங்க. ரெண்டு பக்கமும் தவறுகள் இருக்கு. என்ன பண்றதுன்னு தெரியலை. எப்படி பேசறது எப்படிச் சொல்றதுன்னும் தெரியலை." என்றால் ஏழிசை வல்லபி.

"அது அப்படித்தான் இப்ப வர வர டீச்சர்ஸோட பொழப்பு ரொம்ப கஷ்டமாத்தான் இருக்கு. அடிக்கக் கூடாது. பேசக்கூடாது. திட்டக்கூடாது இதெல்லாத்தையும் அவன் அட்வான்டேஜா எடுத்துக்கறான். அவன் விவரம் புரியாத குழந்தை, அவனுக்கு விவரம் புரிய வைக்கிறதுக்கு ஏதாவது ஒரு மெத்தடு யூஸ் பண்ணித்தானே ஆகணும்" என்றாள் கலா.

"அது கரெக்ட்தான் ஆனா அது லெவல் மீறிப் போகும் போதுதான் பிரச்சினைகள் வந்துருது" என்றாள் ஏழிசை.

"அது சரி அதை விடு நீ போனியே ஓவியக் கண்காட்சி அது நல்லா இருந்ததா?"

"ஆமாங்க மேடம் நல்லா இருந்தது. ரொம்ப அருமையா இருந்தது இந்த வார மெல்லாம் இருக்கு. நீங்க கூட ஈவ்னிங் சாரைக் கூட்டிட்டு போய்ட்டு வந்தா நல்லா இருக்கும். இல்லைன்னா நெக்ஸ்ட் சாட்டர்டே கூட போகலாம்."

"சரி ஒண்ணு பண்ணு அடுத்த சனிக்கிழமை வேணா நீ சொல்லு. நானும் வரேன். ரெண்டு பேரும் போகலாம்" என்றார் கலாவதி.

"ஆமாங்க மிஸ் உண்மையாவே ரொம்ப நல்லா இருந்தது. ஏன்னா அதில இன்னொரு ஆச்சரியம் தெரியுமா?" என்றாள்.

"என்ன ஆச்சரியம்?" என்றாள் கலாவதி.

"அந்த ஓவியங்களை வரைஞ்சவரு" என்று சொல்லி அவள் உமாவைப்பற்றி சொன்னவுடனே கலாவதியின் முகத்தில் பெருத்த ஆச்சரியம் தோன்றியது.

"அப்படியா! பரவாயில்லையே. ஆனால் அதுக்கும் ஓவியம் வரையற டேலன்டுக்கும் சம்பந்தம் இல்லைன்னு வச்சுக்கோ. இருந்தாலும் சொசைட்டியில தன்னை இப்படி ஆரோக்கியமான முறையில வெளிப்படுத்திகறது ரொம்ப நல்ல விஷயமில்லே" என்றார் கலாவதி.

"ஆமாங்க மிஸ். எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. இதுக்கு உமாவை பாராட்டறதை விட அவருடைய பிரதரை பாராட்டணும்னு தோணுது" என்றாள் ஏழிசை.

"அப்படியா சொல்றே?" என்றார் கலாவதி.

"ஆமாம். அவருடைய பிரதராம் சத்யபிரகாஷ்னு பேரு அவருதான் இவரை என்கரேஜ் பண்ணி இந்த பீல்டு டைவர்ட் பண்ணி இப்ப வந்து ரொம்ப குரோயி ஆர்ட்டிஸ்ன்ற மாதிரி நல்ல பேரு வாங்கிட்டிருக்காரு.

"அத்தனைக்கும் பின்னாடி பேக்ரவுண்டா நின் செய்யறது சத்யபிரகாஷ் சார்தான் அப்படின்னு சொல்லிக்கிறாங்க."

"அடடே, ஆமா சத்யபிரகாஷ் நான் கேள்விப்பட்டிரு கேனே.

அரசாங்க வேலை கிடைத்தும் கூட அதை அவ உதறிட்டாரு. அப்படி சொன்னாங்க யாரோ? பர்சன ரெஸ்பான்சிபிலிட்டி இருக்கு அதனால அரசாங்க வேலை வேணாம்னு உதறிட்டாரு என்று கேள்விப்பட்டேன் என்றார் கலாவதி.

"ஓ! அப்படியா பிரதருக்காக தியாகம் பண்றாரு இல்லை?"

ஆமாம்மா.

"இந்த மாதிரி ஒரு குடும்பத்துல யாராவது ஒருத்தரு இப்படி பிரச்சினைக்குரியவங்களா வந்துட்டாங்கன்னா அந்தக் குடும்பமே பாதிக்கப்பட்டுருது. நான் பார்த்திருக்கேன். நிறைய குடும்பங்கள்ள தியாகங்கற பேர்ல மாட்டிக்கிறவங்க ஏதாவது ஒருத்தங்க மிஸ் பிகேவ் பண்ணா அதுல 'மாட்டிக்கிறவங்க நிறைய விஷயங்கள் இருக்கு என்றாள்.

"ஆமாம் மிஸ் இருக்குது. எனக்குத் தெரிஞ்சு ஒரு பேராசிரியர் குடும்பத்துல இப்படிதான் நடந்துச்சு. அவங்க ஹஸ்பெண்ட் இவங்க ஏதோ ஒரு காரணத்துக்காக கொஞ்ச

நாள் விலகி இருக்கும் போது அவங்களோட சிஸ்டரையே மேரேஜ் பண்ணி அதனால அந்தக் குடும்பத்துலேயே நிறைய பிரச்சினை வந்துச்சு தெரியுமா? அது மகா துரோகம் இல்லையா? அவங்க மனசுல எவ்வளவோ வேதனைகள் இருந்திருக்கும்."

"அது வேற வேற விதமாக வெளிப்பட்டிருக்கும்" என்றாள் ஏழிசை.

"சரிப்பா! எனக்கு இந்த பீரியட் ஃப்ரீ உனக்கு" என்றாள்.

"ஆமா எனக்கும் இந்த பிரியடு ஃபிரி. ஆனால் ரெக்கார்டு நிறைய இருக்கு" என்றாள்.

"அதான் எல்லாருமே கடைசியில தானே கரெக்ட் பண்றாங்க. நீ ஏன் முதலிலே இருந்து பண்ணிக்கிட்டிருக்கே. இப்ப தான் வருஷம் ஆரம்பம் அதுக்குள்ளே ஏன் பண்ணிக்கிட்டிருக்கே? என்று கேட்டார் கலாவதி.

"அப்படி இல்லைங்க மேடம். நம்ம முதல்ல கரெக்ட்டா இருக்கணும். பல சமயங்களில் அடலஸண்ட் பிள்ளைங்களுக்கு வீட்லயிருந்தாலும் சரி வெளியிலிருந்தாலும் சரி உபதேசம் பண்றதை விட நம்ம நடந்து காட்டறது நல்லது.

அவன் இந்த வீக்குல ரிக்கார்டு கொடுத்தான்னா? இந்த வீக்குல ரிக்கார்ட கரெக்ட் பண்ணி கொடுத்தேன்னா அடுத்த வீக் அவன் ஒழுங்கா கொடுப்பான். சப்போஸ் நான் அஞ்சு ரெக்கார்ட் ஒண்ணா பண்ணினேன்னு வச்சுக்கங்க. அவனே அடுத்தவங்க கிட்ட சொல்லிட்டுப் போவான். இவங்களே ரெகுலர் இல்லை. இவங்க வந்து நம்மளுக்கு உபதேசம் பண்றாங்க அப்படின்னு."

"அய்யோடி! அம்மா! உன்கிட்ட பேசவே முடியாது. நீ எல்லாத்துலயும் கரெக்ட். 'கரெக்ட் காந்தாமணி' என்று கலாட்டா செய்தார் கலாவதி.

"தப்பாச் சொல்றீங்களே?" என்று சிரித்தாள் அவள்.

"வேறு என்ன பேரு வைக்கலாம். யோசிக்கிறேன் உனக்கு நல்லதா ஒரு பேரு வைக்கணும்" என்றார் கலாவதி "பசங்க தான் பேரு வைப்பாங்க. நீங்களுமா பேரு வைக்க போறீங்க" என்று சிரித்தாள் ஏழிசை வல்லபி.

"இன்னொரு விஷயம் தெரியுமா உனக்கு? நம்ம ஸ்கூல் நிறைய பேருக்கு ஏன் எனக்கு கூட பேரு வைச்சிருக்காளுக ஆனா உனக்கு மட்டும்தான் 'ஸ்வீட்டி'ன்னு பேரு வச்சிருக்காங்க" என்றாள் கலாவதி.

"அப்படியா?" என்றாள் உற்சாகமாக, சுவாரசியமாக கேட்டாள் ஏழிசை.

"ஆமா நீ ரொம்ப ஸ்வீட்டாம். ஸ்டூடண்ட்ஸை திட்டினாலும் கேர் எடுத்துக்கிறியாம் அதனால உனக்கு ஸ்வீட்டி அப்படின்னு பேரு வச்சிருக்காங்க."

"ஏழிசை சிரித்தாள். "எனக்கு பாவக்கான்னு பேரு வச்சிருந்தாக்கூட நான் பெரிசா எடுத்துக்கமாட்டேன். ஏன்னா ஸ்டூடன்ட்ன்னா பேரு வைப்பான் பேரு வைக்கலைன்னா அவன் ஸ்டூடண்டே இல்லை. அடல்ட் ஸ்டேஜ்னு இருந்தா குறும்பு பண்ணுவான் பண்ணலைன்னா அவன் ஸ்டூடண்டே இல்லை. அதை நாம புரிஞ்சுக்கிட்டோம்னா அதை ரசிக்க ஆரம்பிச் சுட்டோம்னா அவனுக்கு குறும்பு பண்ற சுவாரசியமே போயிடும்" என்றால் ஏழிசை.

"ஓகோ! இப்படி ஒரு விஷயம் இருக்கா? ஆமாம் நம்ம டென்ஷனானா நம்ம டென்ஷனை வேடிக்கை பார்த்து இன்னும் பண்றான். அவன் கூட சேர்ந்து சிரிச்சோம்னு வைச்சுக்கங்களேன்."

"ஆமா என்ன பண்றது. கரெக்ட்டான ஐடியா நல்லாருக்கே" என்று பாராட்டிக் கொண்டாள் கலாவதி.

"சரி நான் கரெக்ஷன் முடிச்சிடறேன்" என்று அவள் ரெக்கார்டு நோட்டுப் புத்தகங்களை எடுத்து எதிரிலே வைத்துக் கொண்டாள். பக்கத்திலே ஒரு குறிப்பு நோட்டு வைத்துக் கொண்டாள்.

ஒவ்வொரு மாணவனின் பெயரையும் எழுதி அதிலே சொல்ல வேண்டிய விஷயங்களை அக்கறையாக குறித்துக் கொண்டிருந்தாள்.

கலாவதி அவள் வேலை செய்கிற அழகை ஒரு நிமிடம் பார்த்து விட்டு தானும் நோட்டு புத்தகங்களில் ஆழ்ந்தாள்.

எவ்வளவு தீவிரமாக அவள் கரெக்ஷன் செய்த போதிலும் இரண்டு மூன்று நோட்டு புத்தகங்களை முடித்தவுடனே அவளுக்கு அந்த ஓவியக் கண்காட்சி நினைவுக்கு வந்தது.

அவளுக்கு உமாகாந்தனின் நினைவு வந்த உடனே சத்யபிரகாஷின் நினைவு வந்தது.

தலையை குலுக்கிக் கொண்டு மறுபடியும் வேலையில் ஆழ்ந்தாள் ஏழிசை வல்லபி.

அத்தியாயம் - 3

"அண்ணா ப்ளீஸ் அண்ணா! என்னை வேலை செய்ய விடுண்ணா" என்றாள் மைதிலி.

திரும்பிப் பார்த்து புன்னகைத்து விட்டு தான் செய்து கொண்டிருந்த காரியத்தை தொடர்ந்தான் சத்யபிரகாஷ்.

"சத்தியாண்ணா! ப்ளீஸ் அண்ணா இப்ப நீ தோ
ஊத்தவேன்னு யாரு கேட்டா?" என்று சிணுங்கினா
மைதிலி சத்யபிரகாஷின் தங்கை.

உமாகாந்தன் அந்தப் பக்கமாக நின்று இதை வேடிக்
பார்த்துக் கொண்டிருந்தான்.

"பாவம் மைதிலி! உனக்கு ரொம்ப வேலை. அதனா
கொஞ்சம் ஹெல்ப் பண்ணலாமேன்னுட்டு வந்தேன். இ
ஒரு தப்பா?" என்றான் சத்யபிரகாஷ்.

"தப்பே இல்லை அண்ணா. ரொம்ப சூப்பரா தோ
ஊத்தறே! தயவு செய்து இந்தப் பக்கம் வாண்ணா."

அதற்குள் அங்கு வந்த திலகம் "ஏண்டி! இப்ப என்
அவன்தான் ஊத்தட்டுமே அவன் நல்லாதான் தோ
ஊத்துவான்" என்றார்.

சற்று தூரத்திலே சிட்டவுட்டிலே அமர்ந்து செய்தி
தாளை பார்த்துக் கொண்டிருந்த ஏழுமலை செய்தித்தாளை
கீழே நகர்த்தி விட்டு மெல்ல எட்டிப் பார்த்து புன்னகைத்து
கொண்டார்.

அடிக்கடி இந்த வீட்டில் நடக்கிற கதைதான் இது.

"நீ போய் உட்காரு. நீயும் அம்மாவும் எல்லா வேலையும்
செய்யறீங்க இன்னிக்கு நானும் உமாவும் உனக்கு
வேணுங்கற வேலை செஞ்சு தரப் போறோம்" என்றான்
சத்யபிரகாஷ்.

"விடிஞ்சது" என்று தலையில் கை வைத்துக்
கொண்டாள் மைதிலி.

"ஏன் இதெல்லாம் நாங்கள் செஞ்சு கொடுக்கறது
இல்லையா" என்று கோபமானான் உமாகாந்தன்

"செய்வீங்க செய்வீங்க. ரெண்டு பேரும் எல்லாத்தையும்
போட்டு யூஸ் பண்ணி வச்சுட்டு போயிடுவீங்க. அப்புறம்
நான்தானே பாத்திரம் கழுவ வேணும்" என்றாள் மைதிலி.

"இதப் பாரு இவளுக்கு ஹெல்ப் பண்ணினா எவ்வளவு
கோச்சுக்கிறா. ஓ.கே. இது வந்து நம்மளுக்கு ஒரு பிரஸ்டிஜ்
இஷ்யூ. இன்னிக்கு நாம என்ன பண்றோம். நாமளே
பாத்திரம் கழுவிடறோம்" என்றான் சத்யபிரகாஷ்.
உமாகாந்தன் அண்ணனை முறைத்தான்.

"வேணுமா இது உனக்கு? மத்ததெல்லாம் செஞ்சிடலாம்
இந்த பாத்திரம் கழுவுற வேலை உனக்கும் எனக்கும் ஒத்து
வருமா?" என்றான்.

"விடுடா டிரெயினிங் எடுத்துக் கலாம்டா" என்றான்.

உடனே மைதிலி சிரித்தாள். "அதானே பார்த்தேன்
அம்மாவுக்கும் தங்கைக்கும் உதவி செய்கிற மாதிரி வந்து
டிரெயினிங் எடுக்கிறீங்களா ரெண்டு பேரும்? இப்ப அந்தப்
பக்கம் போறீங்களா இல்லையா?" என்று செல்லமாக
மிரட்டினாள்.

"இப்ப நீதான் அந்தப் பக்கம் போகணும் இவளை
இழுத்துக் கொண்டு போய் அங்க உட்கார வைடா"
என்றான் சத்யபிரகாஷ்.

மைதிலியை நகர்த்துவதற்காக அவள் அருகிலே
உமாகாந்தன் வந்தவுடனே அவளே சிரித்து விட்டு "சரி சரி
நான் இந்த டைனிங் டேபிள் சேர்லயே உட்கார்றேன்.
நீங்க தோசை வார்த்துக் கொடுங்க" என்றாள்.

வேடிக்கையாக அதை சொன்னாலும் சகோதரர்கள்
இருவரும் எல்லாமே சிறப்பாக செய்வார்கள் என்று
அவளுக்குத் தெரியும்.

"வெறும் தோசை தானா? ஐய்யய்யோ இது என்னதாவது மேக்கப் பண்ணி வைப்போம்ல அப்ப பார்த்து பெரிய இது?" என்றாள் கேலியாக.

"வெறும் தோசையா? இரு கொஞ்ச நேரத்துல நாங்க வெங்காய தோசை ஊத்தறோம்" என்றான் உமாகாந்தன் சரசரவென்று வெங்காயத்தை வெட்டினான்.

நிஜமாகவே அருமையான வெங்காய தோசை டைனிங் டேபிளுக்கு வந்தது.

"என்னம்மா நினைச்சே உங்களை மாதிரி நினைச்சியா மாவு புளிச்சா பணியாரம் பண்ணுவீங்க" என்றாள் சத்யபிரகாஷ்.

"அந்த அட்ஜெஸ்ட் மெண்ட் தெரியணுமில்லை. அதான் முக்கியமாக சமையலுக்கு தெரிய வேண்டிய விஷயம் தெரியுமா?" என்றாள் மைதிலி.

"ஆமா இது ரொம்ப பெரிய விஷயம் பார்த்தியா. இட்லி மீந்து போனா இட்லி உப்புமா பண்ணிடுவீங்க. சப்பாத்தி மீந்து போனா பொடிச்சுப் போட்டு சில்லி சப்பாத்தி பண்ணிடுவீங்க. இதைத் தூக்கி அதை தூக்கி இதுல போட்டு ஒரு சமையல் பண்ணிடுவீங்க இது எங்களுக்கு தெரியாதாக்கும். காஞ்சு போன பிரெட் இருந்தா தண்ணில போட்டு பிரெட் உப்புமா பண்ணிடுவீங்க" என்றாள் சத்யபிரகாஷ்.

மைதிலி கலகலவென்று சிரித்தாள்.

"அம்மா, இந்த அண்ணன்களை வைத்துக் கொண்டு இந்த சமையல் டிரிக்கெல்லாம் பேசக் கூடாது" என்றாள்.

"ஆமாடி, எல்லாத்தையும் புட்டுப்புட்டு வைக்கறானுங்க. யாராவது விருந்தாளிங்க வந்தா நாம இவனுங்க ரெண்டு பேரும் மானத்தை வாங்கிடுவாங்க போல" என்றார் அவரும் கேலியில் சேர்ந்து கொண்டு.

"அதெல்லாம் கசப்பான அனுபவங்களோட வெளிப்பாடு" என்ற குரல் கேட்கவும் திரும்பிப் பார்த்தார்கள் திடுக்கிட்டுப் போய்.

பேப்பருக்குள் தலையை புதைத்துக் கொண்டிருந்த அப்பா பேப்பரை நீக்கி விட்டு நச்சென்று ஒரு கமெண்ட் அடித்தார்.

இப்போது ஆச்சரியப்படுவது எல்லோருடைய முறையும் ஆயிற்று.

ஒரு நிமிட அமைதிக்கு பிறகு எல்லோரும் கலீரென்று சிரித்தார்கள்.

"அப்பா நீங்களுமா?" என்றாள் மைதிலி.

"எத்தனை நாள் தான் கஷ்டப்படறது? என்னைக்காவது ஒரு நாளைக்கு பேசத்தானே வேண்டும். விஷயத்தை வெளிய சொல்லித்தானே ஆக வேண்டும்?" என்றார் அப்பா.

"அம்மா உன் பேரை டேமேஜ் பண்றாரு. எனக்கு ஒண்ணும் இதுல பாதிப்பு இல்லை" என்றாள் மைதிலி.

சகோதரர்கள் இருவரும் அதை ஆசையுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

திலகம் தன்னுடைய இடுப்பிலே கையை வைத்துக் கொண்டு கணவனை முறைத்தாள்.

"ஆகட்டும். இனிமே நாளைக்கு வறண்ட ரொட்டியாவே கொடுக்கிறேன்" என்றாள்.

"கொடு! நான் போய் டோஸ்ட் பண்ணை சாப்பிட்டுக்குவேன்."

"அதான், நம்ம வீட்டுல பிரச்சினையே அதுதான் எல்லாருக்கும் கொஞ்ச கொஞ்சம், அரைகுறை சமையல் தெரிஞ்சதோ இல்லையோ அதை வைத்துக் கொண்டு கலாட்டா செய்து கொண்டிருக்கிறீர்கள்." என்றாள் திலகம் பாதி உண்மையும் பாதி பொய்யுமாக.

இதற்குள்ளாக அடுத்தடுத்து வெங்காய தோசை மளமளவென்று வந்து கொண்டிருந்தது.

"அப்பா! தேங்காய் சட்னிக்கும் வெங்காய தோசைக்கும் ரொம்ப சூப்பரா இருக்குப்பா? வாங்க வாங்க" என்று அப்பாவை அழைத்தாள் மைதிலி.

"வந்துடறேம்மா! கரெக்டும்மா. ஒரு சேஞ்ஜ்வேணும் பரவாயில்லை. இந்தப் பயலுக நல்லாத் தான் செஞ்சிருக்கானுக" என்று அவரும் எழுந்து வந்தார்.

அன்று திலகத்தையும், மைதிலியையும் தந்தை ஏழுமலையையும் அமர வைத்து சகோதரர்கள் இருவரும் மாறி மாறி வேலை செய்வதை பார்த்து அவர்கள் மூன்று பேருக்கும் உள்ளூர சிரிப்பு.

பாராட்டவும் செய்து கொண்டார்கள். "என்ன இப்ப செலிபரேஷன்" என்று கேட்டாள் மைதிலி.

"ஆமா செலிபரேஷன் தான். உமாவோட கண்காட்சி சூப்பரா போச்சு தெரியுமா?" என்றான் சத்யபிரகாஷ்.

"அப்படியாண்ணா. நான் கூட வரணும்னு நினைச்சேன் இந்த தடவை எனக்கு வர முடியாம போச்சு" என்றாள் மைதிலி.

"இதெல்லாம் நோ எக்ஸ்கியூஸ். நீ வரணும்னு நினைச்சிருந்தின்னா கண்டிப்பா வந்திருக்கலாம். எங்கிட்ட சொல்லியிருந்தாகூட நான் கூட்டிட்டுப் போயிருப்பேன்" என்றான் சத்தியபிரகாஷ்.

"அதான் எல்லாத்தையும் இங்கேயே பார்த்துட்டேனே அண்ணா."

"இல்லைம்மா நீ அப்படி சொல்லக் கூடாது. அந்த ஹால்ல அந்த லைட்டிங் எஃபெக்டோட பார்க்கும் போது அவ்வளவு ஒரு அற்புதமா இருந்துச்சு தெரியுமா? அந்த காத்துக் கிட்டிருந்த மாதிரி ஒரு பெண்ணோட படம் அதுக்கு எத்தனை பேரு டிமாண்ட் தெரியுமா? நல்ல விலைக்குப் போச்சும்மா அது" என்றான்.

மைதிலியின் முகம் வாடி விட்டது.

"அதை விலைக்குக் கொடுத்திட்டீங்களா? அது எனக்கு ரொம்ப பிடிச்சிருந்தது."

"அதுக்கென்ன இன்னொண்ணு அதே மாதிரி வரைஞ்சாப் போச்சு."

"ஏண்ணா, இன்னொண்ணு வரைஞ்சா அந்த அளவுக்கு வருமா என்னன்னு தெரியலை அற்புதம்ண்ணா. அந்தப் பொண்ணு ஏதோ காத்திட்டிருக்கிறதும். முகத்துல ஒரு காத்துக்கிட்டிருக்கிற உணர்ச்சியுமா என்ன சொல்றது எல்லாமே அதுல இருந்துச்சு" என்றாள் மைதிலி.

பெற்றோர்கள் இருக்கையிலே காதல் என்கிற வார்த்தையை அவள் பயன்படுத்த விரும்பாமல் இப்படிச் சொல்கிறாள் என்பது அவர்கள் இருவருக்கும் புரிந்தது.

"எல்லார் கிட்டயும் நல்ல பாராட்டுத்தான்மா. இனிமே உமாவைப் பத்தி கவலைப் பட வேண்டியதில்லை.

ஓரளவுக்கு பணம் வர ஆரம்பிச்சாச்சு. பேரும் வந்தாச்சு
என்றான் சத்யபிரகாஷ்.

உடனே உமாகாந்தன் குறுக்கிட்டு "இல்லைண்ணை
வெறும் பணத்துக்காக மட்டும் இல்லை. நல்ல ஒ
ரெகக்னிஷனுக்காக கூடத்தான் இந்தக் கண்காட்சி நா
செய்ய வேண்டியது இருக்கு. அதுவும் வேணும் இது
வேணும்." என்றான்.

"ஃபாரின்ல எல்லாம் ஒரு ஓவியம் விலைக்குப் போ
போதும் அவன் லைப்ல செட்டிலாயிடலாம். அதே மாதி
தான் கதை எழுதறவன் கூட ஒரு கதை நல்லா போ
போதும் லைஃப்ல செட்டில் ஆயிடலாம். ஆனால் இ
அப்படி இல்லையே. ஆனா இப்பதான் கொஞ்ச கொஞ்சம
வந்திட்டிருக்கு" என்றான் சத்தியபிரகாஷ்.

"ஆமாண்ணா ஓவியர் ஆதிமூலம் இல்லை? அவரோட
ஓவியங்களெல்லாம் லட்சக் கணக்கில் போச்சு" என்றா
உமா.

"ஆமாமா. நானும் கேள்விப் பட்டேன்" என்றா
சத்யபிரகாஷ்.

"சரி இப்ப என்ன பண்ணப் போறீங்க? டிஃபனுக்
வாங்க" என்றாள் மைதிலி.

"ஆமா இல்லை. வயித்துப் பாட்டையும் பார்க்க
மில்லே" என்றான்.

"இப்போ உமா எனக்கு தோசை வார்த்துக் தா. நா
சாப்பிட்டுக்கறேன் அப்புறம் நீ சாப்டுக்கோ. என்
அண்ணன் மார்கள் இருவரும் பேசிக்கொள்ள.

"என்ன ஒரேயடியா எங்களை ஒதுக்கி வச்சுட்டீங்
எங்களுக்கு என்னமோ பண்ணவே தெரியாத மாதி

தான் ஊத்தித் தரேன்" என்றாள் மைதிலி.

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். அது! ஒரு ஒரு
இதுக்கும் ஒரு கைப் பக்குவம் இருக்கு தெரியுமா. இப்ப
என்னோட கைப் பக்குவம் எடுத்துக்கயேன். எவ்வளவு
டேஸ்டா வந்திருக்கு" என்று தம்பட்டம் அடித்துக்
கொண்டான் சத்யபிரகாஷ்.

மைதிலி சிரித்தாள்.

"அண்ணா, என்ன ஆச்சுன்னா உனக்கு ஒரே
கலாட்டாவா இருக்கே" என்றாள்.

சத்யபிரகாஷ் ஒரு நிமிடம் அமைதியானான். பிறகு
பெருமூச்சு விட்டு விட்டு சொன்னான். "இல்லைம்மா
இத்தனை நாள் பட்ட பாட்டுக்கு இந்த எக்ஸ்பிஷன்ல தான்
பலன் கிடைச்சிருக்கு. ஒரு ரெகக்னிஷன் கிடைச்சிருக்கு.
மோர் தேன் எனிதிங் ரெகக்னிஷன் கிடைச்சிருக்கு. அது
எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு" என்றான்
சத்யபிரகாஷ்.

பெற்றோர்களும். மைதிலியும் அதை மவுனமாக
ஆமோதித்துக் கொண்டார்கள்.

உமாகாந்தனை ஒரு நிலைக்குக் கொண்டு வர வேண்டும்
என்பதற்காக சத்யபிரகாஷ் எவ்வளவு பாடுபடுகிறான்
என்பது அவர்களுக்கு தெரியும். அதிலே ஒரு புள்ளி இந்தக்
கண்காட்சி. இது ஒரு குறிப்பிட்ட மைல் கல் என்று
சொல்லலாம். அந்த நிலையை அடைந்து விட்டதாக
அவர்கள் எல்லோருமே உணர்ந்தார்கள்.

அந்த மகிழ்ச்சி உமாகாந்தனுக்கும் இருந்தது. அதனால்
தான் சகோதரர்கள் இரண்டு பேருமாக சேர்ந்து கொண்டு
ஒரு கலக்கு கலக்கிக் கொண்டிருந்தார்கள்.

கனமான அந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்காக மைதி வேண்டும் என்றே இளைய சகோதரன் உமாகாந்தனிட வம்பு இழுத்தாள். ''ஐயே பிசினாரின்னு காமிச்சுட்ட யில்லே'' என்றாள் 'ஏன் என்ன பண்ணினேன்?'' என்றா அவன்.

''வீட்டில இருக்கிற வெங்காயத்தை வைச்சு வீட்டி இருக்கிற மாவை எடுத்து தோசை வார்த்து எங்களுக் டிரீட் கொடுப்பீங்களா நீங்க? ஸ்வீட் வாங்கிட்டு வரலேன்னா கூடப் பரவாயில்லை. இப்ப செஞ்சீங்களே இதே மாதிரி வீட்டிலேயிருந்து ஏதாவது எடுத்து, அட, ஒரு ரவை எடுத்து ஏதோ ஒரு ஸ்வீட் பண்ணிக் கொடுத்திரு கலாமில்லே'' என்றாள் மைதிலி.

''அண்ணா பாருண்ணா, இவ நாம இங்கிருக்கிற பொருளை எடுத்துச் செஞ்சுட்டோம்னு சொல்லிக் காட்டறா?'' என்றான் உமாகாந்தன்.

எப்பொழுதுமே உமாகாந்தனும் மைதிலியும் பொய் யாகவே சண்டை போட்டுக் கொள்வார்கள்.

சில நேரத்தில் சீரியஸாகவும் போட்டுக் கொள்வார்கள். ஆனால் அடுத்த நாள் பார்த்தால் இரண்டு பேரும் சுமுகமாய் இருப்பார்கள்.

வழக்கம் போல் நடக்கிற நிகழ்ச்சியாக அதை எடுத்துக் கொண்டு அதை பெரிதாக கண்டு கொள்ளவில்லை. ஆனால் சத்யபிரகாஷ் மட்டும் ''ஆரம்பிச்சுட்டீங்களா'' என்றான் சலிப்பாக.

''பின்னே என்னண்ணா இது? மானப் பிரச்சினைண்ணா இது. அதுக்குத்தான் நான் சொன்னேன் வெளியில வாங்கிட்டு வரலாம் அன்னபூர்ணாவுல வாங்கிட்டு வரலாம் இல்ல வேற ஹோட்டல்ல வாங்கிட்டு வரலாம்னு சொன்னேன்.''

''டேய் விடுறா. அவ சொன்னா கிடக்கிறா.''

''நாளைக்கு நாம ஒண்ணு பண்ணுவோம். என்னென்ன வேணுமோ வாங்கிட்டு வந்து வீட்டுல ஒரு பெரிய ஐட்டமா செஞ்சு கொடுத்தாப் போவுது. என்ன மைதிலி வேணும் உனக்கு?'' என்றான் சத்தியபிரகாஷ்.

'எனக்கு...!' என்று அவள் பட்டியல் போட்டாள்.

''எனக்கு ஃப்ரைடு ரைஸ் அல்லது பிரியாணி அப்புறம் என்ன செய்யலாம். 'தேங்காய் சாதம், அப்புறம் தயிர் சாதம் தயிர் சாதம்னா சும்மா வெறுமனே தயிர் சாதமில்லை அதுல இந்த திராட்சை, முந்திரி எல்லாம் போட்டு செஞ்சு தரணும்'' என்றாள்.

''இப்படியே சாப்பிட்டேன்னு வச்சுக்கோ நல்லா உடம்பாயிடும்! அப்புறம் உனக்கு மாப்பிள்ளை தேடறதுக்கு நான் ஊரு ஊரா அலைய வேண்டியதுதான்'' என்றான் சத்யபிரகாஷ்.

''அண்ணா இது மட்டும் பேசாதேன்னு சொல்லியிருக்கேனில்ல. நீ மட்டும் சிக்கிக்க மாட்டியாம்? நான் மட்டும் சிக்கிக்கணுமா? எப்படா இங்கிருந்து என்னை அனுப்பறதுன்னே இருப்பியா?'' என்று பொய்ச் சண்டை போட்டாள் மைதிலி.

''ஆமா, உன்னை அனுப்பினா தானே அண்ணனுக்கு வழி பிறக்கும். அவரு கவலை அவருக்கு'' என்றான் உமாகாந்தன்.

''டேய்! நீ ஏதாவது ஒரு பக்கம் பேசுடா. ஒண்ணு அவ பக்கம் பேசு. இல்லைன்னா என் பக்கம் பேசு. எங்கிட்ட

இருந்து சேம் சைடு கோல் போடறே'' என்றா சத்தியபிரகாஷ்.

''ஜய இவன் எப்பவுமே இப்படித்தான்'' என்றா மைதிலி.

''இப்ப இவ மட்டும் என்ன பண்றாளாம்'' என் அவளை கை காட்டினான் சகோதரன்.

''அவ என் சிஸ்டர்டா. அவ உனக்கும் சிஸ்டர். ரெண் பேருக்கும் செல்லப் பிள்ளை'' என்றான் சத்யபிரகாஷ்.

உமா தலையிலே கையை வைத்துக் கொண்டு ஓ நிமிடம் அமர்ந்து விட்டான்.

பிறகு அம்மாவைப் பார்த்து ''இவங்களை வைச்சுட் என்னம்மா பண்றது'' என்றான்.

''நீ ஒண்ணும் பண்ண வேண்டாம். அந்த வெங்கா தோசையை சாப்பிடு'' என்றாள் மைதிலி.

''போடி இவளே! கொஞ்சமாவது அறிவு இருக்க ஏதாவது ஒரு பக்கம் நிக்கணும். அப்படின்னு அண்ணை சொல்றாங்க எப்படி நிக்க முடியும்? நீ சொல்ற பாய்ண்ட் கரெக்டா இருந்தா உன் பக்கம் பேசுவேன். அண்ணை சொல்ற பாயிண்ட் கரெக்டா இருந்தா அண்ணன் பக்க பேசுவேன்.''

''அதானே நீயே ஒரு ரெண்டுங் கெட்டான்.'' என்றா மைதிலி. அவள் அந்த வார்த்தையை சொல்லி முடித் வுடனேயே உமாகாந்தனின் முகம் சுருங்கி விட்டது.

சட்டென்று அங்கே ஒரு அமைதி நிலவியது.

சாப்பிட்டுக் கொண்டிருந்த தட்டை அப்படியே வைத் விட்டு விறுவிறு என்று எழுந்து தனக்கென்று ஒதுக்க

ட்டிருக்கும் முதல் மாடி அறைக்கு விறுவிறுவென்று ஏறிப் போய் விட்டான்.

மைதிலி தவித்துப் போய் அமர்ந்து விட்டாள்.

கண்களில் கண்ணீர் கட்டியது.

திரும்பி மூத்த சகோதரனைப் பார்த்தாள். ''அண்ணா ான் விளையாட்டா... ஐ டிண்ட் மீன் எனித்திங்'' என்று விளக்கம் சொல்ல ஆரம்பித்தாள்.

சத்யபிரகாஷ் நீண்ட தொரு பெருமூச்சு விட்டான்.

''புரிஞ்சதும்மா, புரிஞ்சது'' என்றான்.

எல்லோருமாக உமாகாந்தன் மாடி ஏறிப் போன திசையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அத்தியாயம் - 4

''ராகவன் இன்னிக்கு வரலை'' என்றாள் ஏழிசை வல்லபி கவலையாக. அப்போதுதான் முதல் பீரியட் முடித்து விட்டு வந்திருந்தாள்.

எப்பொழுதும் அவளுக்கு முதல் பீரியடில் வகுப்பு எடுப்பது மிகவும் பிடித்தமான விஷயம். அந்த காலைப் பொழுதில் எல்லோரும் பிரெஷ்ஷாக இருப்பார்கள்.

கடினமான பாடப் பகுதிகளை அப்பொழுது சொல்லிக் கொடுத்தால். மாணவர்களுடைய மனதிலே இறங்கும். அதனால் பாடம் எடுக்கும் பொழுது உற்சாகமாகத்தான் இருந்தாள். ஆனால் அந்த முதல் பீரியட் முடிந்து வந்த உடனேயே ஆசிரியர் அறையில் அமர்ந்து முகத்தை துடைத்த படி சொன்னாள்.

''இன்னிக்கு ராகவன் சாப்பிடறதுக்கு வரலை.''

அவளுடைய தோழியர்களும் கலாவதி மூச்சு இருந்தார்கள். எல்லோரும் 'கொல்' என்று சிரித்தார்க "சிரிக்காதீங்க எப்போதும் ரெகுலரா வரும். இன்னி வரலை" என்று சொல்லி விட்டு செல்ஃபோனை எடு அம்மாவுக்கு போன் செய்து கேட்டாள்.

பெரும்பாலும் பள்ளியின் சட்ட திட்டங்களைக் க பிடிப்பாள். பள்ளி வளாகத்திற்குள் செல்ஃ போ பயன்படுத்தமாட்டாள். ஆனால் இன்றைக்கு ஏனோ அவளுக்கு தவிப்பாக இருந்தது.

செல்போனை எடுத்து அம்மாவை அழைத்தாள். "அம்ம ராகவன் வந்துச்சா? சாப்பிட்டுச்சா" என்று கேட்டாள்.

அம்மா அந்தப் பக்கம் என்ன பதில் சொன்னார்களோ தெரியவில்லை

ஓ.ஹோ. இன்னிக்கு லேட்டா வந்துட்டாராக்கும். சரி, எனக்கு கவலையா இருந்தது" என்றாள்.

உடனே அந்தப் பக்கம் அம்மா "ஏண்டி இதெல்லா பெரிய கவலையா?" என்று கேலி செய்தார் போலும்.

"போம்மா, உனக்கு என்ன? கேலியா இருக்கு என் மன எனக்குத்தானே தெரியும்." என்று சொல்லி விட்டு செல்ஃபோனை ஆப் செய்தாள்.

மறுபடியும் எல்லோரும் சிரித்தார்கள்.

கலாவதி கூட அவளைப் புன்னகையுடன் வாஞ்சை யாகப் பார்த்தபடி அமர்ந்து கொண்டிருந்தாள். 'ராகவன்' என்று அவளால் கௌரவிக்கப்பட்டவர் வேறு யாரும் இல்லை. திருவாளர் காகம் தான். கொஞ்ச நாளாக அவளுடைய வீட்டிற்கு ஒரு அண்டங்காக்கை வந்து கொண்டிருந்தது.

காலை எட்டு மணிக்கெல்லாம் வந்து கேட்டினுடைய க்கவாட்டு தூணின் மேலே அமர்ந்து கொள்ளும். அந்த நேரத்தில் இவள் பரபரப்பாக ஏதாவது போவதும் வருவதுமாக இருப்பாள். ஆனால் இவள் அருகிலே போனாலும் கூட அந்த காகம் அவளை கண்டு அஞ்சுவது இல்லை. பறப்பதும் இல்லை.

இவள் அதைப் பார்த்து விட்டு 'ஒ இது நம்ம ப்ரெண்டு போல இருக்கு!' என்று நினைத்துக் கொண்டு 'இரு இரு சாப்பாடு கொண்டு வந்து வைக்கிறேன்' என்று சொல்லி சாப்பாடு கொண்டு போய் வைத்தாள்.

அந்த காகம் ஆசையாக உண்டு முடித்தது. அன்றிலிருந்து தினமும் எட்டு மணி வாக்கில் வந்து விடும். இவளும் அம்மாவுக்கு உதவி செய்து விட்டு கொஞ்சம் வேலைகளை முடித்துக் கொண்டு எட்டரை மணி வாக்கில் குளித்து விட்டு வருவாள்.

வந்தவுடனே முதல் வேலையாக அவள் வீட்டில் விக்கிரகங்கள் இருந்ததால் அதற்கு பூஜை செய்வாள். அதற்கு பூஜைக்காக நைவேத்தியம் என்று ஒரு வெள்ளிக் கிண்ணத்திலே கொஞ்சம் சாதம் எடுத்து வைப்பாள். அடுத்த காரியமாக உடனே போய் அந்த காகத்திற்கு சாதம் வைப்பாள்.

அது சாப்பிட்டு விட்டு ஸ்டைலாக அந்த கேட்டின் மேல் உட்கார்ந்து கொள்ளுவதையும் மூக்கால் அந்த கேட்டின் மேல் நுனியை உரசிக் கொள்ளுவதையும் பார்த்து அவளுக்கு ஒரே ஆச்சரியம். சிரிப்பும் கூட. 'நான் உன் நண்பன் என்று சொல்விக் கொள்வது போல அலட்டிக் கொள்ளாமல் அமர்ந்து கொண்டிருக்கும்.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகுதான் அவளுடை சகோதரன் சம்பத் கவனித்தான். "என்ன புள்ள பண்ணிட்டிருக்கே?" என்றான்.

"அண்ணா இதைப் பார்த்தியா, இந்த காக்கா தின வருது. சரியா எட்டு மணிக்கு வருது பாரேன். நா பக்கத்துல போய் நின்னா கூட அது ஒண்ணுமே செய்யாது பயப்படாது பாரு" என்றாள்.

அவன் சிரித்துக் கொண்டே பார்த்தான். பார்த்து கொண்டிருந்தான். அவள் வேண்டும் என்றே போய் அந் கேட்டிற்கு பக்கத்திலே நின்றாள். அதுவும் போ கொடுப்பது போல அந்த கேட்டின் மேல் கம்பியின் மே அமர்ந்து கொண்டிருந்ததே ஒழிய நகர வில்லை.

"பார்த்தியா நான் சொன்னேனில்லை?"

உடனே சம்பத் ஓடிப் போய் செல்ஃபோனை எடுத்து கொண்டு வந்து காகமும் அவளும் சேர்ந்து நிற்கிறாற் போ ஒரு போட்டோ எடுத்தான்.

"சரிசரி, பார்த்தியா! ஒரு புது ஃபிரெண்ட் உனக் கிடைச்சாச்சு."

அவள் "அண்ணா இதுக்கு நான் ஒரு பே வைச்சிருக்கேன்."

அவன் சிரித்தான்.

"சிரிக்காதேண்ணா நிஜமா நல்லதா ஒரு பே வைச்சிருக்கேன்."

சொல்லு பார்க்கலாம்."

'ராகவன்' என்றாள்.

அவன் கலகலவென்று சிரித்துக் கொண்டு "எந்த ராகவன் இதைக் கேட்டு அவமானப் படப் போறானோ" என்றான்.

"எதுக்கு அவமானப் படணும். அதுவும் ஒரு உயிரு. அதுக்கு பேரு வைக்கக் கூடாதுன்னு யாரு சொன்னா."

பாரேன் எத்தனை காக்கா இருக்கு. ஒரு காக்கா மாதிரி இன்னொண்ணு இருக்கா. ஒரு வேளை அதுங்களுக்கு வாயி யிருந்தா பேரு வச்சுக்குமாக்கும்."

"அம்மாடி. உன்கிட்ட பேச என்னால முடியாது" என்று நகர்ந்தான் அவன்.

அதைப் பள்ளியிலே வந்து சொல்லியிருந்தாள். இன்றைக்கு ஏனோ அவள் காலையில் புறப்பட்ட போது ராகவன் வரவில்லை.

கொஞ்சம் கவலையாகிவிட்டது. ஆனால் எட்டே முக்கால் மணிக்கெல்லாம் பள்ளிக்கூடத்திற்கு வந்து விடுவாள். அதனால் வண்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டு வந்து விட்டாள். ஆனாலும் ராகவன் வந்ததா? சாப்பிட்டதா? என்ற கவலை உள்ளுக்குள் ஓடிக் கொண்டிருந்தது. அதனால்தான் முதல் பீரியட் முடிந்தவுடன் அம்மாவுக்கு போன் செய்து கேட்டாள்.

அவளுக்கென்று நான்கைந்து பேர் ஆசிரியர்கள் அங்கே தோழிகளாக இருந்தார்கள். அவர்கள் எல்லோருமே இவளைப் புரிந்து கொள்ளுவார்கள். கேலி செய்வார்கள். ஆனால் இவளைப் புரிந்து கொள்ளுவார்கள்.

"என்னாச்சு ராகவன் வந்துட்டாரா" என்றாள் அவள்.

"ஆமாம் வந்துட்டாராம்" என்றாள் நிம்மதியாக.

அப்போது கேம்ஸ் டீச்சர் உள்ளே வந்தார். "என்னமோ அரியர் வந்திருக்குதாம்பா. இந்த தடவை கேஷா

கொடுக்கிறாங்களாம். போய் வாங்கிக்கங்க. ஆபீஸ்ல சொன்னாங்க. நான் வாங்கிட்டேன்'' என்றாள். கையில் இருந்த காசைக் காட்டியபடி.

''அப்படியா என்ன திடீர்னு?'' என்று கேட்டாள் கலா டீச்சர்.

''தெரியலை என்னன்னு ஈசிஎஸ்ல தானே போடுவாங்க இந்த தடவை மட்டும் கையில கொடுக்கறாங்க போல இருக்கு. ஏய் போப்பா போய் வாங்கிக்கோ'' என்றாள் வல்லபியை பார்த்து.

வல்லபி கலா டீச்சரைப் பார்க்க இரண்டு பேருமாக எழுந்து போனார்கள்.

கையில் அந்தத் தொகையை வாங்கிக் கொண்டு வந்து அமர்ந்தாள் ஏழிசை வல்லபி. உடனே மனதிற்குள்ளே ஒரு எண்ணம் ஓடியது. நடுத்தரக் குடும்பம், என்பதால் பட்ஜெட் போட்டுத்தான் நடத்துவார்கள். அதிலும் இரண்டாவது பெண்ணான நித்ய கல்யாணி கல்லூரியில் முதுகலை வகுப்பில் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள்.

தமிழ் இலக்கியத்தைத் தேர்ந்தெடுத்து படித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய படிப்புச் செலவு இருந்தது. ஏழிசை வல்லபியின் அம்மாவும் அப்பாவும் எல்லா வற்றையும் திட்டம் போட்டுத்தான் நடத்துவார்கள்.

இரண்டு பெண்களுக்குமான சேமிப்புக்காக ஒரு தொகையை எடுத்து வைத்து விட்டுத்தான் குடும்பச் செலவுக்கே ஒரு தொகையை பயன்படுத்துவார்கள். பெரும்பாலும் அவளுடைய தொகையை பயன்படுத்த மாட்டார்கள்.

தேவைப்பட்டால் கொஞ்சமாக எடுத்துக் கொண்டு மீதமிருக்கிற பணத்திற்கு அவளுக்கு நகைகளாக வாங்கி தங்கமாக வாங்கி சேமித்துக் கொண்டிருந்தார்கள் என்பதை அவள் அறிவாள்.

இந்த அரியரைக் கொண்டு போய் கொடுத்தாலும்கூட அம்மா ஏதாவது தங்கமாகத்தான் வாங்குவார்கள் என்று யோசித்துக் கொண்டிருந்த பொழுதே திடீரென்று பொறி தட்டினாற் போல அந்த எண்ணம் தோன்றியது.

திரும்பி கலா டீச்சரிடம் சொன்னாள்.

கலாவதி டீச்சர் அவளை ஆழ்ந்து பார்த்தாள். ''அவ்வளவு பிடிச்சிருக்கா உனக்கு அந்த ஓவியம்?'' என்று கேட்டாள். ''ஆமாம் ரொம்ப பிடிச்சிருக்கு.''

''அது சரி, இவ்வளவு பணத்தைக் கொண்டு போய் ஓவியம் வாங்குறதுக்காக செலவு பண்ணினா உங்க வீட்டுல ஒத்துக்குவாங்களா?''

உடனே அவள் தனது செல்ஃபோனை எடுத்து சம்பத் குமாருக்கு போன் அடித்தாள். ''அண்ணா எனக்கு ரொம்ப ஆசையா இருக்குண்ணா?'' என்று ஆரம்பித்து அந்த கோரிக்கையை வைத்தாள்.

சம்பத் குமார் அந்தப் பக்கமாக இருந்து ''அது சரி அம்மா அப்பா ஒத்துக்கணுமே'' என்றான்.

''அண்ணா ஒத்துக்குவாங்கண்ணா. நீ சொன்னீன்னா கேட்பாங்க. இந்த ஒரே ஒரு தடவைண்ணா.''

''சரி அடிக்கடி இந்த மாதிரி கேட்மாட்டேன்னு சொல்லு. நான் எப்படியாவது அம்மா அப்பாவை கன்வின்ஸ் பண்றேன்'' என்றான்.

"ப்ளீஸ் அண்ணா!"

"நீ சரின்னு சொல்லு நான் உடனே போகணும். அந்த ஓவியம் வித்திராம இருக்கணுமே. எனக்கு இப்ப அது வேற கவலையா இருக்கு" என்றாள்.

"ஓ.கே. ஓ.கே. நான் அம்மா அப்பா கிட்ட சொல்லிக்கிறேன். நீ போய்க்கோ" என்றான்.

அவள் அந்த அரை நாளை மிகவும் கஷ்டப்பட்டு ஓட்டினாள். பிறகு பிற்பகலில் போய் தலைமையாசிரியரிடம் சொல்லி விடுமுறை வாங்கிக் கொண்டாள்.

கலா டீச்சர் மூக்கின் மேல் விரலை வைத்தாள். "என்னடி அம்மா இந்த விஷயத்துக்காக ஹாஃப் எ டே லீவா?" என்றாள்.

"ஆமா இங்கிருந்து கலையரங்கம் தூரம். போயிட்டு திரும்பி எல்லாம் வர முடியாது. நமக்குத்தான் பர்மிஷனெல்லாம் கிடையாதே. அதனாலே ஒரு ஹாஃப் எ டே லீவு. நான் சாட்டர்டே ஸ்பெஷல் கிளாஸ் வைத்து காம்பன்ஸேஷன் பண்ணிக்கறேன்."

"சரி சரி நடத்து நடத்து."

"ஆனா எனக்கு அவங்க ரெண்டு பேரையும் பழக்கமில்லையே. நேத்துதான் என் ஃபிரண்டு அந்த உமாகாந்தனை எனக்கு இன்டர்டியூஸ் பண்ணினா" என்று தனக்குத்தானே பேசிக் கொண்டாள்."

"சத்யபிரகாஷை எங்களுக்குத் தெரியும்பா. எங்க வீட்டுக்காரரோட ஃபேமிலி பிரண்டுக்கு தெரிஞ்சவன் எப்படியோ பழக்கம். நான் வேண்ணா அவருகிட்ட ஃபோன் நம்பர் வாங்கி லஞ்ச் டைம்ல போன் பண்ணி சொல்லிடறேன். நீ அதுக்கு அப்புறம் கிளம்பு" என்றாள்.

"என்ன சொல்லப் போறீங்க?"

"நீ வர்றேன்னு மட்டும் சொல்றேன் மத்ததெல்லாம் நீ அங்க போய் பேசிக்கோ. ஏன்னா அவன் என்ன விலை சொல்லப்போறான்னு தெரியலையே."

அதற்கு பிறகு ஏழிசை வல்லபிக்கு இருப்பு கொள்ள வில்லை. கடந்த இரண்டு தினங்களாகவே அந்த ஓவியம் அவள் கண்களுக்குள் இருந்து கொண்டே இருந்தது.

அந்த ஓவியம் மட்டும் தனக்குக் கிடைத்து விட்டால் அதை அழகாக ஃப்ரேம் செய்து தன்னுடைய அறையில் மாட்டிக் கொள்ளலாம் என்று கனவு காண ஆரம்பித்து விட்டாள்.

"என்ன ஆச்சு, கனவா?" என்று சிரித்தாள். கலா டீச்சர் பிற்பகலில் தலைமை ஆசிரியரிடம் சொல்லி விடுமுறை வாங்கிக் கொண்டு வண்டியை எடுத்துக் கொண்டு போனாள்.

அந்த நேரத்தில் நல்ல வேளையாக சத்யபிரகாஷும் உமாகாந்தனும் இருந்தார்கள். இவள் பரபரப்பாக அங்கே போய் நின்றாள்.

"வாங்க மேடம்" என்றான் உமாகாந்தன் "நீங்க அந்த சுபாஷினி மேடம்..." என்று ஆரம்பிக்க. "ஆமாம்மா அன்னைக்கு இன்ட்ரொட்யூஸ் பண்ணி வச்சாங்களே அவங்களேதான்."

"சரி சரி. இந்த டைம்ல வந்திருக்கிங்க."

"இல்லை. நான் ஒரு ஆஃப் எ டே லீவு போட்டுட்டு வந்தேன்." என்றாள்.

சத்யபிரகாஷும் உமாகாந்தனும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். "லீவு போட்டுட்டு பார்க்க வந்தீங்களா" என்றார்கள்.

"இல்லை. இல்லை. எனக்கு அந்த பர்டிகுலர் ஓவியம் விலைக்கு வேணும். அதை கேக்கறதுக்கு வந்திருக்கேன்." என்றாள்.

"எந்த ஓவியம்?" என்றார்கள்.

விற்பனை ஆகப் போகிறது என்ற உடனே உமாகாந்தன் முகத்திலும் ஒரு ஆர்வம் தோன்றியது.

"அதான் சார் அந்த பொண்ணு பார்த்துக்கிட்டு நிக்கிறது மாதிரி வரைஞ்சிருந்தீங்களே. பின் கொசுவம் சேலை கட்டிக்கிட்டு குடிசைக்கு முன்னாடி நிக்கிற மாதிரி. ரொம்ப அழகான ஓவியம் சார் அது. அந்த உணர்வு என் கண்ணுக்குள்ளேயே இருக்கு. பின்னாடி வேற அந்த பானையில இருந்து சோறு பொங்கின அந்த ஆவி, படம் மாதிரி அப்படியே பிக்சரைஸ்டா இருந்தது சார் எப்படி சார்? அப்படி வரைஞ்சீங்க. அந்த நிக்கிற தோரணை...! அவ மனசு...! அவ கண்ணில் இருந்த ஏக்கம்...! ஒரு காதல்...! சூப்பர்ப்... சார்" என்றாள் உணர்வு மயமாக.

அவர்கள் இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். 'ப்ளீஸ் சார்' என்றாள்.

"நீங்க எக்ஸ்பிஷன் வந்து பார்த்துட்டு போய் ரெண்டு நாள் ஆச்சு" இல்லே!" என்றான் உமாகாந்தன்.

அவள் கேள்விக்குறியாக பார்த்தபடி "ஆமா" என்றாள்.

"நீங்க அன்னிக்கே சொல்லியிருந்தாக் கூட நாங்க பிளாக் பண்ணி வச்சிருப்போம்" என்றான் உமாகாந்தன்.

"ஓ! ஆனா உண்மையா அப்ப எனக்கு ஐடியா இல்லை. இன்னிக்கு வந்து ஒரு அரியர் வந்துச்சு சார். அது வந்த வுடனே தான் எனக்கு உடனே இதை வாங்கிக்கலாமேன்னு தோணுச்சு" என்றாள்.

"ஓ!" என்றார்கள். சத்தியபிரகாஷும் உமாகாந்தனும் கோரஸாக

"அப்படின்னா கிடைக்காதோ சார்?" என்றாள்.

"சாரி மேடம்! நீங்க ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம். நீங்க வாங்கப் போறீங்கன்னு எங்களுக்கு எப்படித் தெரியும். ஒரு நல்ல ஆஃபர் வந்தது கொடுத்துட்டோம்" என்றான்.

"ஆனால் ஓவியம் இருக்கே" என்று கையைக் காட்டினாள்.

"இல்லை... வாங்கினவருகிட்ட நாங்க ரிக்வெஸ்ட் பண்ணியிருக்கோம். இந்தக் கண்காட்சி முடியற வரைக்கும் இருக்கட்டும்னு. இது முடிந்ததும் பத்திரமா கொண்டு போய் கொடுக்கணும்" என்று.

"ஓ! சரி!" என்றவள் இரண்டு நிமிடம் அமைதியாக நின்றாள்.

"உட்காருங்க மேடம்" என்று அவளுக்காக ஒரு சேரை எடுத்துப் போட்டு அமரச் செய்தார்கள்.

அந்தப் பெரிய ஹாலின் ஓரத்திலேயே ஒரு டேபிளும் சேரும் வந்தவர்கள் அமருவதற்காகவும் ரெண்டு மூன்று சேர்களும் இருந்தன. அமரச் செய்தார்கள்..

"காபி சாப்பிடுகிறீர்களா?" என்றான் உமாகாந்தன்.

பரபரவென்று போய் காபிக்கு ஏற்பாடு செய்து விட்டு வந்தான். அந்த நேரத்தில் எதிரிலே இருந்த அவளுடைய

முகம் வாடிப் போனதையும் பலவிதமாக மாறிப் போவதையும் ஆழ்ந்த பாவனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

உண்மையாகவே இந்தப் பெண்ணுக்கு அந்த ஓவியம் மிகவும் பிடித்திருந்தது என்பது அவனுக்கு புரிந்தது. அவள் சேர் கைப்பிடியில் சற்று நேரம் கையை தேய்த்துக் கொண்டிருந்தவள். முகம் மலர்ந்து "ஏன் சார்? அவங்ககிட்ட சொல்லி மறுபடியும்" என்றாள்.

அவன் தோளைக் குலுக்கினான் "தெரியலைங்களே மேடம்! அது எப்படி கேக்கறது. கொடுத்துட்டு நாங்க திருப்பிப் போய் கேக்கறது நல்லா இருக்குமா?" என்றான். "ஆமா நல்லா இருக்காது!" என்று அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

"சரிங்க சார்" என்று மறுபடியும் ஒரு முறை அவள் எல்லா ஓவியங்களையும் பார்த்தாள்.

அவளுடனேயே உமாகாந்தன் வந்து எந்தெந்த சூழ்நிலைகளில் வரைந்தது என்றெல்லாம் விளக்கிக் கொண்டு வந்தான்.

தனக்கு கொடுக்கப்படுகிற வி.ஐ.பி.ட்ரீட்மெண்ட் ஓவியம் இல்லையென்று சொன்னதற்கான சமாதானம் அவளுக்குப் புரிந்தது.

"நீங்க வேண்ணா வேற ஏதாவது ஓவியம்?" என்று உமாகாந்தன் இழுக்க "இல்லை சார் எனக்கு அதுதான் ரொம்ப பிடிச்சிருந்தது..." "அந்த ஓவியத்தைப் பற்றி சொல்லி வீட்டுல பர்மிஷன் வாங்கியிருந்தேன்" என்றாள்.

ஒரு அரை மணி நேரத்துக்கு மேல் செலவழித்து விட்டு 'சரிங்க சார்' என்று புறப்பட்டாள்.

அவள் சற்று சோர்வாகவும் முகம் வாடிப் போயும் நடந்து போய் தனது வண்டியை எடுப்பதை சத்யபிரகாஷும் உமாகாந்தனும் ஆழமாக பார்த்தார்கள்.

பிறகு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அத்தியாயம் - 5

வகுப்பறையை விட்டு வெளியே வந்தாள் வல்லபி. "மிஸ் உங்களை எச்.எம். கூப்பிடறாங்க" என்று வந்தான் அலுவலக உதவியாளர்.

"அப்படியா புக்ஸ் வச்சுட்டு வந்துடறேன்" என்று சொல்லி விட்டு. ஆசிரியர் அறைக்குப் போய் தனது மேஜை மேல் புத்தகங்களையெல்லாம் வைத்து விட்டு வாஷ் பேஸினில் கையைக் கழுவி துடைத்துக் கொண்டு ஓடினாள்.

"வாம்மா" என்று வரவேற்றார் ஹெட்மாஸ்டர்.

எதிரிலே இரண்டு பேர் அமர்ந்திருந்தார்கள். ஒன்று கலாவதி டீச்சர்!

இல்லொன்று அவள் சற்றும் எதிர் பாராத ஒரு நபர்.

ஆச்சரியமாக மாறி மாறிப் பார்த்தாள்.

"நமக்குத் தெரிஞ்ச தம்பிதாம்மா. ஏதோ உன்னைப் பார்க்கணும்னு வந்திருக்காப்ல" என்றார் ஹெட்மாஸ்டர். "அப்படிங்களா சார் தாங்க் யூ" என்று திரும்பி வணக்கம் சொன்னாள்.

கலாவதி டீச்சரும் சத்யபிரகாஷும் இந்த நேரத்தில் வந்திருப்பதை அவள் எதிர்பார்க்கவில்லை.

"சரிம்மா. நீங்க வேண்ணா போய் பேசுங்க" என்று சொல்லி அனுப்பி வைத்தார் தலைமை ஆசிரியர்.

சத்யபிரகாஷும் கலாவதி டீச்சருமாக வெளியிலே வந்தார்கள்.

'விசிட்டர்ஸ் அறை' என்று ஒரு சின்ன அறை அந்தப் பள்ளியிலே இருந்தது.

அந்த அறைக்குப் போனார்கள்.

"மேடம் உங்களுக்கு ஒரு குட் நியூஸ். உங்களுக்காக அந்தப் பெயிண்டிங், அந்த ஓவியம் தாயாரா இருக்கு" என்றான் சத்யபிரகாஷ்

அவளால் நம்பவே முடியவில்லை.

உலக அழகி போட்டியிலே ஜெயித்த உலக அழகி பெரும்பாலும் இரண்டு கன்னங்களிலும் கையை வைத்துக் கொண்டு ஆச்சரியப்பட்டாற் போல ஒரு போஸ் கொடுப்பார்களே அதுமாதிரி 'ஓ' வென்று சுத்த வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது.

அடக்கிக் கொண்டாள். "அப்படியா சார்" அப்படியா ரொம்ப தாங்க்ஸ்" என்றாள் உணர்ச்சி வசப்பட்டு.

"கலாவதி டீச்சர், புன்னகையோடு அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஆமா மேடம், நீங்க ரொம்ப இன்ட்ரஸ்ட்டா கேட்டீங்க அதனால் தான் உங்களுக்காக வாங்கிட்டு வந்திருக்கிறோம்." ஆனாலும் அகென் த சேம் திங் முடியற வரைக்கும் உங்களுக்கு கொடுக்க முடியாது. முடிஞ்சதுக்கு அப்புறம் நீங்க வந்து கலெக்ட் பண்ணிக்குங்க."

"சார் எவ்வளவு" என்றாள் அவள்.

"மேடம், ஓவியத்திற்கு விலை கிடையாது. அதற்கு உங்களுக்கு உண்டான சக்தி எவ்வளவோ அதை பே பண்ணிக்கலாம். உங்களைப் பொறுத்த வரைக்கும் நாங்க எந்த விலையும் நிர்ணயம் செய்யலை. ஏன்னா நீங்க அந்த அளவுக்கு அந்த ஓவியத்தை ரசிச்சிருக்கிங்க" என்றான்.

அவள் முகத்தில் புன்னகை அரும்பியது. அவள் லேசாக வெட்கப்பட்டாள். "தாங்க்ஸ் சார்" என்றாள்.

கலாவதி டீச்சர் அதற்குப் பிறகு எப்படி சத்யபிரகாஷை தெரியும் என்று விளக்கம் சொன்னாள். அவளும் கேட்டுக் கொண்டாள்.

சத்யபிரகாஷிடம் திரும்பி "ரொம்ப நல்ல பொண்ணு, படிச்சது ரசாயனம். ஆனால் ஆர்ட்ஸ்ல ஒரு இன்ட்ரஸ்ட் அவளுக்கு" என்று இவளைப் பற்றி புகழ்ந்து தள்ளினாள்.

"போதும் டீச்சர்."

"இல்லை இல்லை தெரிஞ்சுக்கட்டும். எப்படி இருந்தாலும் இனிமே நீ அடிக்கடி ஓவியக் கண்காட்சிக்குப் போவே. கலைத் துறையில் ஆர்வம் உள்ளவங்க தெரிஞ்சுக்கறது நல்லது தானே" என்றாள்.

சத்யபிரகாஷ் ஒரிரு நிமிடங்கள் கழிந்த பின்பு எழுந்தான், "ரொம்ப தாங்க்ஸ் மேடம். நீங்க நேத்து ரொம்ப டிப்ரஸ்ஸாயி போன மாதிரி இருந்தது. எனக்கும் தம்பிக்கும் ரொம்ப கஷ்டமா போச்சு. அதனாலதான் ரெண்டு பேரும் ஆலோசனை பண்ணி இந்த ஏற்பாட்டை பண்ணினோம். சரி, உங்களுக்கு சொல்லிட்டா நீங்க ரொம்ப சந்தோஷப் படுவீங்க. இல்லையா? அதுக்காகத்தான் வந்தேன். ஆக்சுவலா இந்த வழியில வரவேண்டிய வேலையும் எனக்கு இருந்தது. டீச்சரையும் பார்த்து ரொம்ப நாள் ஆச்சு.

எல்லாத்தையும் ஒண்ணா கிளப் பண்ணிக்கிட்டேன்'' என்றான்.

மறுபடியும் அவள் நன்றி சொல்லித் தீர்த்துவிட்டாள்.

சத்யபிரகாஷ் கிளம்பும் போது ''ஆனால் இன்னொரு விஷயம் சொல்லணும். இந்த ஒவியம் உங்களுக்கு கிடைச்சதுக்கு ரெண்டு பேருக்கு நன்றி சொல்லணும்.''

''யாரு அது?'' என்றாள் அவள்.

''ஒண்ணு உங்க அண்ணா... இன்னொன்று கலாவதி டீச்சர்.''

''எங்க அண்ணாவா?'' என்று ஆச்சரியமானாள். ''எப்படி?'' என்றாள்.

''அதை நீங்க உங்க அண்ணாகிட்டயே கேட்டுக்கங்க'' என்று குறும்பாக சிரித்தான் சத்யபிரகாஷ்.

கலாவதி டீச்சரும் சேர்ந்து சிரித்தார்.

சத்தியபிரகாஷ் கிளம்பினான். அவர்கள் வாசல் வரை வந்து வழியனுப்பினார்கள்.

நல்லவேளையாக இரண்டு பேருக்கும் ஓய்வு. தொடர்ச்சியாக இடைவேளையும் இருந்ததால் அவர்கள் வகுப்பு பாதிக்காமல் இருக்கிறது என்ற துணிவிலே இரண்டு பேரும் கேட் வரையிலே வந்தார்கள்.

விடைபெற்றுக் கொண்டு அவர்கள் திரும்பும்போது. ''ஆஹா! சத்யபிரகாஷும் அண்ணனைப் பற்றிச் சொல்லிட்டானா? இனி உனக்கு மண்டை உடைஞ்சிடுமே. ராகவன் ஒரு நாளைக்கு சாப்பிட வரலைன்னாலே நீ ஒர்ரி பண்ணிக்குவே'' என்று கிண்டல் செய்தார் கலாவதி டீச்சர்.

அதே நேரத்தில் தன்னுடைய பைக்கை உதைத்து ஸ்டார்ட் பண்ணப் போன சத்யபிரகாஷ் காதுகளில் அந்த வார்த்தை விழுந்தது.

''ராகவன் சாப்பிட வராட்டி ஒர்ரி பண்ணிப்பாங்க'' என்ற உடனேயே 'யாரா இருக்கும் அந்த ராகவன்? அந்த ராகவன் உண்மையிலே பாக்கியசாலியாகத்தான் இருக்க வேண்டும்.' என்ற எண்ணம் அவன் மனதுக்குள் ஓடியது. சட்டென்று தலையை சிலுப்பிக் கொண்டான்.

'இது என்ன இப்படியெல்லாம் புத்தி போகிறது.' என்றெண்ணியபடி தன்னுடைய வேகத்தை பைக்கை உதைத்து ஸ்டார்ட் செய்வதில் காட்டினான்.

அதே நேரத்தில் ஏழிசை வல்லபிக்கு இப்படிக் கலாவதி டீச்சரும் அண்ணனும் எப்படி இதிலே பங்கு பெற்றார்கள் என்ற எண்ணம் தோன்றியது.

கலாவதி டீச்சரிடம் அப்போதே கேட்டுக் கொள்ளலாமே என்று ஆரம்பிக்கையில் ''ரொம்ப நேரம் யோசிக்காதே. பாவம், நேத்து நீ ரொம்ப டிப்ரஸ் ஆயி ஃபோன் பண்ணினியா. ஆப்ட் டேவ் லீவெல்லாம் போட்டுட்டுப் போனே சீக்கிரம் லீவு எடுக்காத பொண்ணு இந்த ஒவியத்துக்காக லீவு வேற போட்டுட்டுப் போனே! கையில பணம் கிடைச்சவுடனே ஒவ்வொரு பொண்ணு மாதிரி கொலுசு வாங்கறேன், தங்கம் வாங்கறேங்காம பெயிண்டிங் வாங்கறேன்னு துடிச்சிட்டு கிடந்தியே. இதெல்லாம் பார்த்த உடனே எனக்கு கஷ்டமா போச்சு. அதான் நைட்டு சத்யபிரகாஷுக்குபோன் பண்ணினேன். அந்த பொண்ணு ரொம்ப ஆசையா வந்தாப்பா அந்த ஒவியம் கிடைக்கலையாட்ட இருக்கு என்றேன். உங்க

அண்ணனும் போய் சந்திச்சிருப்பான் போலிருக்கு'' என்றார் கலாவதி டீச்சர்.

அந்த கேள்விக்கு அன்று மாலை விடை கிடைத்தது. சம்பத் குமாருக்கு தங்கைக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கையிலே அந்த எண்ணம் தோன்றியது.

நேற்று மாலை தங்கை மிகவும் முகம் வாடியிருந்ததைப் பார்த்தான். மென்மையான மனது உடையவள் காக்கா வரவில்லை என்றால் அதற்காக கவலைப்படுகிறவள். இவளுக்கு அந்த ஓவியம் ரொம்பவும் பிடித்தது போலிருக் கிறதே என்று எண்ணிக் கொண்டவன். மறுநாள் காலை வல்லபி பள்ளிக்கூடத்திற்குப் போனதற்கு பின்பு பைக்கை எடுத்தான்.

சத்யபிரகாஷினுடைய தொழிலைப் பற்றியும் அவனைப் பற்றியும் அவன் நண்பர்களிடம் கேள்விப் பட்டிருக்கிறான்.

சத்யபிரகாஷ் ஒரு பெரிய கார் ஃபிரெஷ்னிங் சென்டர் என்று வைத்திருந்தான். புதிதாக இப்போது உருவாகிக் கொண்டிருக்கிற கான்செப்ட் என்பது அவனுக்குத் தெரியும்.

வெறும் வாட்டர் வாஷ் மட்டும் இல்லாமல் ஒரு காரை எந்தெந்த விதத்தில் அழகு படுத்த முடியும். என்பதற்கான ஆலோசனைகள் கொடுப்பது. அதற்கு தேவையான பொருட்களை பொருத்திக் கொடுப்பது என்று அவன் ஒரு தொழிலை வைத்துக் கொண்டிருந்தான்.

'மைதிலி கார் ஃபிரெஷ்னிங் சென்ட'ருக்கு தன்னுடைய பைக்கை ஓட்டிக் கொண்டு போனான்.

காலை நேரத்தில் கண்டிப்பாக அலுவலகத்தில் இருப்பான் என்று ஒரு எண்ணம். அதே போல அவனும் இருந்தான்.

தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். ''சார்! நான் சம்பத் குமார்'' என்றான்.

''அப்படியா உட்காருங்க!'' என்று அமர வைத்தான் சத்யபிரகாஷ்.

''என்ன விஷயம் சார்'' என்று கேட்டான். ''ஆக்சுவலா நான் கார் சம்பந்தமாவோ ஃபிரஷ்னிங் சம்பந்தமா நான் வரலை' சார் இந்த டூலிங்க்காக வரலை. வேற ஒரு விஷயத்துக்காக வந்திருக்கேன்'' என்றார்.

''அப்படியா! சொல்லுங்க, சொல்லுங்க.''

''உங்க பிரதரோட ஓவியக் கண்காட்சிக்கு என் சிஸ்டர் நேத்து வந்திருக்காங்க. ரெண்டு மூணு நாளைக்கு முன்னாடி ஒரு தடவை பார்த்துட்டு வந்துட்டு. அந்த பெண்ணோட ஓவியம், அதான் காத்திருக்கிற மாதிரி ஒரு பெண்ணோட ஓவியத்தை சிலாகிச்சு சொல்லிக்கிட்டிருந்தாங்க'' என்று ஆரம்பித்தான்.

சத்யபிரகாஷ் புரிந்து கொண்டான்.

''ஓ. ஆமாம், ஆமாம், ஸ்கூல்ல கூட பி.ஜி. டீச்சரா இருக்கேன்னு சொன்னாங்க. நேத்து கூட ஓவியக் கண்காட்சிக்கு வந்தாங்க. ஆனால் அவங்க விருப்பப்பட்ட அந்த ஓவியம் போயிடுச்சே!'' என்றான் வருத்தத்துடன்.

''ஆமாம் சார்! சொன்னா. நேத்து முதலே பாவம் ரொம்ப டிப்ரஸ்டா இருக்கா'' என்றான்.

சத்யபிரகாஷ் ஒரு பெருமூச்சு விட்டான். "இப்படி ஒரு சிச்சுவேஷன் நாங்க எதிர்பார்க்கலையே சார். ஒரு வார்த்தை அன்னைக்கு சொல்லியிருந்தாங்கன்னா கூட நான் ரீட்டெயின் பண்ணி வச்சிருப்பேன். அன்னிக்கு பிரச்சினை என்னென்னா அவளுக்கு ஐடியா இல்லை. நேத்துத் தான் அவளுக்கு வரவேண்டிய ஒரு அரியர் வந்திருக்கு அந்த தொகையை அப்படியே கொடுத்துட்டு இந்த ஓவியத்தை வாங்கிக்கலாம்னு அவ ரொம்ப ஆசைப்பட்டா. உங்களுக்கு பெண்கள் நிலைமைதான் தெரியும்ல. எங்கிட்ட பர்மிஷன் வாங்கி, பெற்றோர்கிட்ட பர்மிஷன் வாங்கி வரும் போது அந்த ஓவியம் இல்லையே, கிடைக்கலையேன்னு ரொம்பவும் பீல் பண்ணினா" என்றான்.

"ஓ!" என்று கேட்டுக் கொண்டான் சத்யபிரகாஷ்.

"சார் நல்லா யோசிச்சுப் பாருங்க சார். என் சிஸ்டர் ரொம்ப ஆர்டிஸ்டிக் சென்ஸ் உள்ளவ. தினமும் காலையில எட்டு மணிக்கு ஒரு காக்கைக்கு சாப்பாடு போடுவா. அதுகிட்ட என்ன ஃப்ரெண்ட்ஷிப் தெரியுமா? பாருங்க" என்று தன்னுடைய செல்ஃபோனில் உள்ள போட்டோவை காட்டினான். சத்யபிரகாஷுக்கு சுவாரசியம் ஏற்பட்டது.

"ம் ஹூம்! அப்படியா" என்று ஆர்வமானான். "அந்த ஓவியத்தைப் பற்றி உங்க உமாகாந்தன் கூட இப்படி நினைச்சிருப்பாரா என்னன்னு தெரியலை. அவ்வளவு அருமையா வீட்டுல வந்து சொல்லிக்கிட்டிருந்தா. எங்க அம்மா ஒரு கட்டத்துல சலிச்சுப் போய் ஏய் மறுபடியும் அந்த ஓவியம்னு ஆரம்பிச்சே அப்படின்னு ஒரு பத்து மணிக்கு கடுப்பாயிட்டாங்கன்னா பாருங்களேன். அப்படி சொல்லிக் கிட்டிருந்தா" என்றான்.

சத்யபிரகாஷ் கொஞ்சம் யோசித்தான். அவன் யோசிக்க ஆரம்பிக்கிறான் என்ற உடனேயே சம்பத் குமார் சரியான பாயிண்டில் அடித்தான்.

"சார். அந்த ஓவியத்தை வாங்கியிருக்கிறவங்க யாருன்னு பாருங்க சார். ஒரு வேளை கொஞ்சம் ரிச் பீப்பிள் சும்மா ஒரு ஏதோ ஒரு ஆபீஸ் மூலையிலயோ ஏதோ ஒரு பக்கம் மாட்டக் கூடியவங்களோ இருந்தா?! ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி நீங்க திருப்பி வாங்கித் தாங்க சார்" என்றான்.

"இல்லை...! அட்வான்ஸ் கொடுத்துட்டாங்களேன்னு யோசிக்கிறேன்."

"அட்வான்ஸ் தானே சார் கொடுத்திருக்காங்க. நீங்க அவங்களை எப்படியாவது கன்வின்ஸ் பண்ணி வேற ஒரு ஓவியம் கொடுங்களேன். ஏதாவது ஒரு பொருத்தமான காரணம் சொல்லிக்கோங்களேன். பாருங்களேன். என் சிஸ்டர் அவளோட ரூம்ல மாட்டிப்பா. ஒரு நல்ல கலா ரசிகைகிட்ட போய் சேருவது முக்கியமா? ஏதாவது ஒரு பணக்காரங்க வீட்டிலேயோ பெரிய ஆபீஸ்லேயோ ஓரத்தில ஒரு டெக்கரேட்டிவ் பீஸா அது இருக்கிறது முக்கியமா? யோசனை பண்ணுங்க" என்றான் சம்பத் குமார்.

சத்யபிரகாஷுக்கு சம்பத் குமார் சொன்னதில் இருக்கிற நியாயம் புரிந்தது. "ஓ.கே. சார் நான் பிராமிஸ் பண்ண முடியாது. ஆனால் டிரை பண்றேன்" என்றான்.

"போதும் சார். இந்த வார்த்தையே போதும்" என்றான். எழுந்திருக்கும் போது "சார்! உங்களைப் பத்தி எல்லாரும் சொன்னாங்க. உமாகாந்தனுக்கு இன்ஸ்பையரிங் ஸோர்ஸே

நீங்கதான் அப்படியெல்லாம் சொன்னாங்க. சகோதரப் பாசம்னா என்னன்னு தெரியுது. அதனால தான் என் சகோதரிக்காக நான் நேர்ல வந்து உங்ககிட்ட ரிக்வஸ்ட் பண்ணிக்கிறேன்" என்றான்.

சத்யபிரகாஷ் கலகலவென்று சிரித்தான். "ஆமாம் சார் இனம் இனத்தோட தானே சேரும். நைஸ் மீட்டிங் யு சார். நாம நல்ல ஃப்ரெண்ட்ஷிப்பை டெவலப் பண்ணிப்போம்" என்று கைகுலுக்கி விட்டு "நீங்களும் ஓவியக் கண்காட்சிக்கு வாங்க சார்."

"ஆமாம் சார். உங்க ஓவியக் கண்காட்சிக்கு வந்துட்டா என் தங்கை இன்னொரு செலவு வைப்பா" என்று சிரித்தான்.

"அப்படியே எல்லாரும் சொன்னா எப்படி? அப்புறம் என் தம்பி பிழைப்பது எப்படி?" என்று சொல்ல மறுபடியும் சிரித்தான்.

அந்த நிகழ்வு நினைவுக்கு வர சம்பத் குமார் தங்கையினிடத்திலே நடந்ததைச் சொன்னான்.

மனது நெகிழ்ந்து போனாள். "அண்ணா நெஜமாவா அண்ணா! நீ எனக்காக போய் கேட்டியா அண்ணா. ரொம்ப தாங்க்ஸ் அண்ணா" என்றாள்.

"இல்லை நீ புடவை நகைன்னெல்லாம் கேட்கறது இல்லை. அதை வாங்கிக் கொடுங்க இதை வாங்கிக் கொடுங்கன்னு வீட்ல தொந்தரவு கொடுக்கறது இல்லை. பாவம் நீ ரொம்ப ஆசைப்பட்ட ஒரு பொருள் அது உனக்கு கிடைக்காம போகக் கூடாதுங்கறாதுக்காக ஸ்டெப் எடுத்தேன். இப்படியெல்லாம் கதை மாதிரி கேட்காதே! எனக்கு ஏதாவது ட்ரீட் கொடு."

"ட்ரீட் தானே என்ன வேணும் சொல்லு" என்றாள் ஆசையாக.

"அதான் இந்த சின்னது இருக்குதே! அது அன்ன பூரணாவுக்கு போகலாமான்னு கேட்டுக்கிட்டு இருக்கு கூட்டிட்டுப் போறியா?"

"ஓ.கே. போகலாம்" என்று அவள் அன்றைக்கு வந்த அரியரில் தனக்கு என்று வைத்துக் கொண்டிருந்த பணத்திலே குடும்பத்தாரை அழைத்துக் கொண்டு போய் கொண்டாடினாள். அந்த ஓவியம் கிடைத்ததற்காக. அந்த ஓவியம் வந்து சேர்ந்ததற்குப் பிறகு என்னென்ன பிரச்சினை களை வரவழைக்கப் போகிறது என்பது அப்போதைக்குப் பாவம் வல்லபிக்கும் தெரியவில்லை. சம்பத் குமாருக்கும் தெரியவில்லை.

யாருக்குத் தெரிந்தால் என்ன? காலம் அதன் விளையாட்டை செய்து கொண்டே தானே இருக்கிறது.

அத்தியாயம் - 6

இரண்டு நாட்களுக்கு முந்திய நினைவுகள் வந்து மோதின உமாகாந்தனின் மனதிலே. கடந்த இரண்டு நாட்களாக ஓவியக் கண்காட்சியில் சட்டு சட்டு என்று ஓவியங்கள் விற்றதினால் அவன் மகிழ்ச்சியடைந்து போயிருந்தான்.

அந்த மகிழ்ச்சியில் இரண்டு நாட்களுக்கு முன்பு வீட்டில் நடந்த நிகழ்வு ஒரு புறம் ஒதுங்கியிருந்தது.

இன்றைக்கு இரவு உறங்கப் போகும் போது அப்படியே அது அவன் மனதிலே வந்து அலைமோதியது.

"போடா! இரண்டுங் கெட்டான்" என்று மைதிலி அவனை பேசிய உடனே கோபித்துக் கொண்டு மேலே தன்னுடைய அறைக்கு வந்து விட்டாள்.

கீழேயோ!

எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்து திகைத்துப் போய் நின்றார்கள்

பெருமூச்சு விட்டார்கள்.

மைதிலி தனது சகோதரன் சத்யபிரகாஷிடம் "அண்ணா நான் வேணும்னு சொல்லலை சாரி அண்ணா, சாரி அண்ணா!" என்று திரும்ப திரும்பச் சொன்னாள்.

"புரியுதும்மா, எனக்கு புரியுது, ஆனால் அவனுக்கு கோபம் வந்துடுச்சு" என்றான்.

"இப்ப என்னண்ணா செய்யறது?" என்று படபடப் பானாள் மைதிலி.

"ஒண்ணும் செய்ய வேண்டாம். பேசாம சாப்பிடு" என்றான்.

அண்ணா என்று மறுபடியும் ஆரம்பிக்க...

"சொன்னா கேளும்மா... இப்ப உடனே போய் அவனிடம் எது சொன்னாலும் புடிக்காது. பேசாம எல்லாரும் சாப்பிடுங்க. கொஞ்ச நேரம் அவனை தனியா இருக்க விடுங்க. லெட் ஹிம் பி அலோன். அதுக்கப்புறம் நீ போய் பேசினேன்னா எடுபடும். இப்ப நீ போய் பேசினா வார்த்தை தான் வளரும்" என்றான்.

மைதிலிக்கு அது புரிந்தது.

அதற்கு பிறகு எல்லோரும் மவுனமாகவே சாப்பிட்டார்கள்.

ஒரு ஒன்பது மணி வரைக்கும் மைதிலி நகத்தைக் கடித்துக் கொண்டு இங்குமங்குமாக நடந்து கொண்டிருந் தாள். பிறகு அண்ணனைப் பார்த்துக் கேட்டாள் சைகை யிலேயே.

"சரி போ" என்பது போல அவன் சொல்லவும். வேகமாக மாடி ஏறிப் போனாள்.

அங்கே உமாகாந்தன் ஏதோ ஒரு புத்தகத்தை கையிலே வைத்துக் கொண்டு ஜன்னலுக்கு வெளியே வெறித்துப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

"அண்ணா!" என்றாள். திரும்பிப் பார்த்தான்.

முகத்திலே ஒரு வெறுமை குடி கொண்டிருந்தது. "என்ன மைதிலி?" என்றான்.

"நீ சரியா சாப்பிடலை" என்றாள்.

"இல்ல பரவாயில்லை போதும்" என்றான் உமாகாந்தன்.

"இல்லை அண்ணா. நான் மறுபடியும் தோசை ஊத்திக் கொண்டு வந்து ஹாட் பேக்ல வைக்கட்டுமா?" என்றாள்.

"சரி" என்றான் சுருக்கமாக.

அவளுக்கு அதற்கு மேல் எப்படி பேச்சை வளர்ப்பது என்று தெரியவில்லை.

உள்ளே நுழைந்தாள்! "ஐ ஆம் வெரி சாரி அண்ணா. நான் எதையும் மீன் பண்ணலை. நான் வேணும்னு சொல்லலை." என்று பரிதவித்துப் போனாள் மைதிலி.

உமாகாந்தன் ஒரு நிமிடம் அமைதியாக நின்றான். பிறகு தனது இடது கரத்தால் மைதிலியின் வலது கன்னத்தை தடவிக் கொடுத்தான்.

"தெரியும்டா! நீ வேணும்னு சொல்லலை" என்றான்.

"அப்புறம் ஏண்ணா நீ இவ்வளவு மூட் அவுட்டா இருக்கே!" என்றாள்.

உமாகாந்தன் ஒரு பெரு மூச்சு விட்டான். "என்ன செய்யச் சொல்றே. மூட் அவுட் ஆயிடுச்சு அதை சரி பண்றதுக்காகத்தான் ட்ரை பண்ணிட்டிருக்கேன். இட்ஸ் நாட் யுவர் ஃபால்ட். இட்ஸ் மை ஃபால்ட். உம்மேல எனக்கு எந்தக் கோவமும் இல்ல எம்மேல தான் எனக்கு கோவம்" என்றான்.

"அய்யோ! அண்ணா" என்று அவள் ஆரம்பிக்க

"இல்லை. இல்லை. வேற எதுக்காகவும் இல்லை. இப்ப உன்கிட்ட கோச்சுட்டு வந்துட்டனே அதுக்காக... நீ பிரியமானவ! எதார்த்தமா ஏதோ ஒண்ணு சொன்னே அதுக்கு போய் நான் கோவிச்சுட்டு வரலாமா! வந்தாச்சு அப்புறம் ஈகோ விடுதா! அதான் மெயின்டெய்ன் பண்ணிட்டு நின்னுட்டு இருந்தேன். திருப்பி வரலாமா! எப்படி உன்னை சமாதானப்படுத்துறதுன்னு யோசிச்சுட்டு இருந்தேன்" என்றான்.

மைதிலியின் முகம் மலர்ந்தது! "இது பெரிய விஷயமா! ஏதாவது ஒரு கிப்ட் கொடுத்தா என் கோபம் எல்லாம் பறந்துரும்ல" என்றாள்.

"ஏய்! திஸ் இஸ் ஃபிஷிங் ஃபார் கிஃப்ட். நல்லாவே இல்லை" என்றான்.

"ஆமா! பின்ன? கேக்காம வாங்கித் தறியா நீ! என்றாள்.

"பாத்தியா! எனக்கான வாய்ப்பை கெடுத்துடறடி நீ! ஆக்சுவலா என்ன நினைச்சுட்டிருந்தேன் இந்த ஓவியக் கண்காட்சி முடிந்தவுடனே நல்லதா ஏதாவது வாங்கித் தரலாம். அப்படின்னு இருந்தேன்" என்றான் உமாகாந்தன்.

மைதிலி சடசடவென்று நாலு குட்டு தலையிலே குட்டிக் கொண்டாள்.

"மைதிலி உனக்கு அறிவு இருக்கா? இப்படியாடி கெடுத்துப்பே?" என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டாள்.

அதைப் பார்த்து உமாகாந்தன் சிரித்தான். "நெசமாத் தாண்டா! இந்த ஓவியக் கண்காட்சியில் நிறைய ஓவியங்கள் போயிருக்கு. ஓரளவுக்கு வருமானம் வந்துருக்கு.எல்லாத்தை விடவும் சந்தோஷம் பிரகாஷ் அண்ணனோட ஆசை நிறைவேறியிருக்கு. அதுனால கண்டிப்பா செலபரேட் பண்ணனும். அம்மாவுக்கு, அப்பாவுக்கு, உனக்கு எல்லாத்துக்கும் ஏதாவது வாங்கித் தரணும். ஆக்சுவலா என்னோட முதல் வருமானம் இல்லையா இது! அப்படியெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தேன்" என்றான்.

"சரிண்ணா, நீ என்ன வேணும்னாலும் செய்ண்ணா. நீ எனக்கு காஸ்லி கிப்ட் வாங்கித் தரணும்னு இல்லண்ணா. நீ உன்னோட பென்சில் கொடுத்தின்னா கூட போதும்" என்றாள்.

உடனே அவன் சின்னக் குழந்தைகள் செய்வது போல "அஸ்கு புஸ்கு! அந்த பென்சில்ல ட்ரா பண்ணித்தான் நான் இவ்வளவு இயர்ன் பண்ணியிருக்கேன். என்னோட மெயின் பாயிண்டையே நீ கேக்கறியே நீ" என்றான்.

மறுபடியும் அவள் தலையிலே பொய்யாகக் கொட்டிக் கொண்டாள்.

"சாரி! சாரி! பென்சில்தான் உனக்கு விலை உயர்ந்தது இல்லை? நான் ஏதோ சின்னக் குழந்தைகளுக்கு சொல்ற

மாதிரி சொல்லிட்டேன். பரவால்லை நீ வேற எது வேல்யு லெஸ் வேல்யு இல்லாததுன்னு நினைக்கிறியோ அதைக் கூட வாங்கிக் கொடு" என்றான்.

அவன் திரும்பி அவளைப் பார்த்தான்.

"இந்தா பாருடி., என்னைப் பொறுத்த வரைக்கும் எதுவுமே வேல்யு இல்லாதது இல்ல. ரொம்ப சாதாரணமா நினைக்கிற விஷயம். எப்படி ஒரு வாழ்க்கையே புரட்டிப் போடும்னு எனக்குத் தெரியுண்டி" என்றான்.

மைதிலி மறுபடியும் தொடக் கூடாத இடத்தில் தொட்டு விட்டதை உணர்ந்தாள்

"அய்யோ அண்ணா நீ ஏன் இப்படி எல்லாம் பேசறே விட்டுடுண்ணா. டேக் லைஃப் ஆஸ் இட் இஸ்" என்றாள்.

அவன் மறுபடியும் பெருமூச்சு விட்டுட்டுச் சொன்னான். "நான் சொன்னதில் என்ன தப்பு? சர்வ சாதாரணமா எல்லாரும் சொல்லிக்கிற விஷயத்தை நான் பெருமையா சொல்லிக்க முடியாதில்லையா! அப்படித்தானே என் நிலைமை இருக்கு. அது மட்டுமா அதனால உனக்கும் தானே பாதிப்பு" என்றான்.

"எனக்கு ஒண்ணும் பாதிப்பில்லே" என்றாள் மைதிலி.

"இல்லை உனக்கு நாளைக்கு கல்யாணம்னு ஆரம்பிக்கும் போது" என்று அவன் சொல்ல ஆரம்பிக்க "அது கெடக்கு சனியன். இன்னும் நாலு வருஷம் ஐந்து வருஷம் பார்க்கலாம். அதுக்கெதுக்குண்ணா இப்ப ஓர்ரி பண்றே. அதுக்குள்ளே அட்லீஸ்ட் நீ பத்து எக்ஸ்பிஷனாவது நடத்திரணும். உமாகாந்தன் உமாகாந்தன்னு எல்லாரும் உன் பேரைச் சொல்லணும். அதுதான் எனக்கு

இப்போதைக்கு வேணும். அதுக்கப்புறம் என்ன நடக்குதுன்னு பார்க்கலாம்" என்றாள்.

"இத பார்றா, பத்து எக்ஸ்பிஷனுக்கு பத்து கிஃப்ட் வாங்கலாம்னு பிளான் பண்றே!" என்றான்

"ஆமா! நீ அவ்வளவு சக்ஸஸ்ஃபுல் ஆனா அவ்வளவு கிப்ட் கேட்டா என்ன. நீ சக்ஸஸ் ஃபுல் ஆகறதுதான் முக்கியம்? கிப்ட் இல்லை முக்கியம்" என்றாள்.

"நல்லா பேசறடி. நல்லா டிரெயினிங் எடுத்துக்கோ. இப்படியே ஆத்துக்காரங்ககிட்ட பேசிப் பேசி கறந்துடலாம்" என்றான்.

"யாருக்குத் தெரியும்! அது பேசுமோ இல்லையோ யாருக்குத் தெரியும்! என்றாள்.

அவன் சிரித்தான் "ஆனாலும் ஏண்டி இப்படி வரப் போற ஆளை மட்டம் தட்டுறே" என்றான்.

"ஓ! வரப் போறே மாப்பிள்ளையை மட்டம் தட்டிட்டேனோ?" என்று ஒரு பொய்யாக கவலை காட்டினாள்.

"ஆனால்! ஒகே, ஒகே, வேற ஏதாவது சொல்லிக்கோ" என்றான்.

"காமதேனுன்னு சொல்லிக்கிறேன் சரியா!" என்றாள்.

"அப்பவும் கறக்கறதுலதாண்டி இருக்கிறே நீ" என்றான் உமா.

"ஆமாண்ணா! பெண் ஜென்மங்களே இப்படித்தான்." என்று அவள் கவலையானாள்.

"சரி இப்ப என்ன நீ சாப்பிட வர்றியா இல்லையா!" என்று கேட்டாள் அவள்.

"சரி நீ போ, தோசை ஊத்தி வை! ஆர்டினரி தோசை போதும். வெங்காய தோசை வேண்டாம். நான் இப்ப கிளம்பி வர்றேன்" என்றான்.

அவள் கீழே இறங்கி வந்தாள்.

மைதிலி இறங்கி ஓடினாள்.

கீழே டைனிங் டேபிளுக்கு அருகிலேயே அமர்ந்திருந்தான் சத்யப் பிரகாஷ்.

"என்ன ஆச்சு?" என்று கேட்டான் சைகையிலேயே.

அவள் கட்டை விரலை உயர்த்தி சக்ஸஸ் என்று சிரித்து விட்டு சமையலறை நோக்கி ஓடினாள். அதற்குப் பிறகு சத்யபிரகாஷ் எழுந்து போனான்.

உமா இப்பொழுதும் அதே மாதிரி ஜன்னலுக்கு வெளியிலேதான் பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான்.

தங்கையை சமாதானப்படுத்தி அனுப்பி விட்டான். இருந்தாலும் இன்னமும் அவனுக்கு முழு ஆறுதல் ஏற்படவில்லை.

"வரலாமா" என்று வந்து நின்றான் சத்யபிரகாஷ். "வாண்ணா" என்றான்.

"ஏண்டா அவ கிட்ட போய் நீ?" என்றான்.

"சாரின்னா! சடனா நர்வஸ் ஆயிட்டேன். அதுமாதிரி ஆயிடறது. என்னை மீறி ஆயிடறது" என்றான்.

"நீ இன்னும் ரொம்ப டச்சியா இருக்கேப்பா. ஏதாவது ஒரு வார்த்தை எங்கேயாவது சம்பந்தமானாக் கூட நீ ஏன் டென்ஷனா ஆகறே?"

"புரிஞ்சுது அண்ணா. அதுவும் மைதிலி அப்படியெல்லாம் பேசுவாளா? எனக்குத் தெரியும். அவ ஏதோ விளையாட்டா என்கிட்ட சண்டை போட்டுட்டா. ஆனா எல்லாத்தையும் விளையாட்டா எடுத்துக்கற மாதிரி மெண்டாலிட்டியும் ஃபிசிக்கும் எனக்கு இல்லையே" என்றான்.

"ஏய் ஸ்டாப் திஸ் நான்சென்ஸ். நானும் உன்னை பூஸ்ட் பண்ணனும்னு பார்க்கிறேன். ஏண்டா, எதுக்கு நீ இப்படி ஓர்ரி பண்ணிக்கிறே?" என்றான்.

"பின்னே ஓர்ரி பண்ணிக்காம என்ன பண்றது. இந்த விஷயம் ஹோல் பேமிலியையும் அஃபக்ட் பண்றது. தெரியுமா?" என்றான்.

"எவன் சொன்னான்?" என்று கேட்டான் சத்ய பிரகாஷ்.

"தெரியுது ஊரெல்லாம் நேரடியா பேசலைன்னாலும் முதுகுக்குப் பின்னாடி பேசறாங்களே" என்றான் உமாகாந்த்.

"பேசிட்டு போகட்டும். அதைப்பத்தி நமக்கென்ன. நம்மளது பேமிலி. நாம தான் பேமிலி. நாம என்ன முடிவு எடுக்கறோம், எதைப்பத்தியும் நாம என்ன ஃபீல் பண்றோங்கறதுதான் முக்கியம்" என்றான்.

"சரிண்ணா, நீயே சொல்லு என்னோட பிரச்சினை மைதிலியை பாதிக்குமா? பாதிக்காதா?" என்று கேட்டான் காட்டமாக!

சத்யபிரகாஷ் ஒரு நிமிடம் மவுனம் சாதித்தான்.

"தெரியலைடா! ஆனா, நாளைக்கு வரப் போற பிரச்சினையை வச்சு இன்னைக்கு ஒர்ரி பண்றதுங்கறது அவசியமில்லைங்கறது என்னோட கருத்து" என்றான்.

"சொல்றதுக்கு நல்லாருக்குண்ணா." என்றான் உமாகாந்தான் சலிப்புடன்.

"இத பாரு உமா! நீ மட்டும் இந்த பிரச்சினையில தனியா இல்லை. நானும் இருக்கேன். கூட அம்மா அப்பா இருக்காங்க. எல்லாருமா சேர்ந்து நாளைக்கு நடக்கப் போற விஷயத்துக்காக எதுக்கு இன்னைக்கு ஒர்ரி பண்ணிக்கிறே" என்றான்.

"இல்லைண்ணா. எப்படி இருந்தாலும் பிரச்சினை வரும்னுதான் எனக்கு தோணுது" என்றான்.

"கண்ணா, அண்ணைக்கு பாத்துக்கலாண்டா" என்று திரும்பத் திரும்ப உமாகாந்தனிடம் பேசி அவனை ஒரு வழியாக சமாளித்து சற்று நேரம் ஜோக்குகள் அடித்து. அவனை கீழே நடத்திக் கொண்டு வந்து சாப்பிட வைத்து அனுப்பி விட்டு தன்னுடைய அறைக்குப் போன போது. சத்யப்பிரகாஷ் கிட்டத்தட்ட சலித்துப் போயிருந்தான்.

மைதிலி ஏதோ தெரியாமல் உதிர்த்த வார்த்தை. இவ்வளவு தூரம் பிரச்சினைகளை கிளப்பும் என்றும் அவன் எதிர் பார்க்கவில்லை.

உமாகாந்தன் ஒரு வழியாக இப்பொழுது ஒரு சமநிலைக்கு வந்து விட்டான்.

ஃபார்முக்கு வந்து விட்டான். என்று எண்ணிக் கொண்டிருந்தது போய் ஒரே ஒரு சின்ன வார்த்தை அவனை இந்த அளவுக்கு வெடிக்கச் செய்கிறதே என்று சத்யப்பிரகாஷுக்கு கவலையாகக் கூட போய் விட்டது.

லேசாக ஒரு ஓரத்தில் ஒரு சலிப்புணர்வு தோன்றியது "எத்தனை நாளைக்கு இப்படி போராடுவது? எப்பொழுது தான் இந்த சூழ்நிலை சரியாகும்" என்று எண்ணம் தோன்றியவுடனே வழக்கம் போல அவனது ஆழ்மனது எழுந்து நின்றது.

"வாட் கேன் நாட் பி கியூர்ட் ஹேஸ் டு பி எண்ட்யூர்டு என்ற பழமொழி நினைவுக்கு வந்தது.

சில விஷயங்களை வாழ்க்கையில் எடுத்துக் கொள்ளத் தான் வேண்டும் என்று உமாகாந்தனுக்கு புரிய வைக்கத் தான் வேண்டும்.

அதற்காக போராடத்தான் வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

போராடலாம், அதனால் பலன் கிடைக்க வேண்டுமே? கிடைக்குமா என்ற கவலையும் இருந்தது.

இன்றைக்கெல்லாம், இந்த வாரத்தில் எல்லாம் உமாகாந்தன் உற்சாகமாக நடமாடிக் கொண்டிருந்ததையும் இந்த ஒவியக் கண்காட்சியில் அவனுக்கு கிடைத்த பாராட்டையும் பார்க்கும் பொழுது எப்படியும் ஜெயித்து விடலாம் என்ற எண்ணம் இப்போது அவனுக்கு துளிர் விட்டது. துளிர் விட்டதென்ன நன்றாகவே வளர ஆரம்பித்து விட்டது.

தன் அறை முழுவதும் அடுக்கி வைத்திருந்த புத்தகங் களில் ஒன்றை உருவினான். நிறைய செல்ப் இம்புரூவ் மெண்ட் புத்தகங்கள் அவனிடத்தில் இருந்தன. அந்தப் புத்தகங்களிலே அவன் கையிலே எடுத்த புத்தகம் சொன்னது "வாழ்க்கையை சந்தித்துப் பார் நீ எதை யெல்லாம் பிரச்சினையாக நினைத்தாயோ அதுவெல்லாம்

பொடிப் பொடியாக உதிர்ந்து போவதை. உன் கண் முன்னே காண்பாய்" என்று.

அந்த நேரத்திற்கு அந்த வாக்கியம் அவனுக்குத் தேவையாக இருந்தது.

"பார்க்கலாம். நம்மை மீறி என்ன நடந்து விடும்?" என்று தன்னைத் தானே ஊக்குவித்துக் கொண்டு அவன் போய் படுக்கையில் படுத்தான்.

அறையில் நிசப்தம் நிலவியது!

ஃபேன் ஓடுகின்ற சப்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது.

அதை உற்றுக் கவனித்து ரசித்துக் கொண்டே அவன் மெல்ல மெல்ல உறக்கத்தில் ஆழ்ந்த நேரத்தில் அந்த முகம் அவன் மனதிலே இருந்து தோன்றியது.

ஓவியக் கண்காட்சிக்கு வந்திருந்த அந்த முகம். எத்தனையோ பேர் வந்திருந்தார்கள்!

எத்தனையோ அழகழகான பெண்கள்! சொஃபிஸ்டி கேடட் லேடீஸ் என்பார்களே அது மாதிரி மிகுந்த செல்வந்தர்கள் குடும்பத்திலே இருந்த வந்த பெண்கள்!

கல்லூரி மாணவிகள்! சாதாரணமாக உடை அணிந்து எளிமையாக வந்த பெண்கள்! என்று எத்தனை பெண்கள் அந்த கண்காட்சிக்கு வந்திருந்தார்கள். ஆனால் அந்த ஒரு முகத்தை மட்டும் ஏன் அப்படி நின்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

கிட்டத்தட்ட பார்வையை கழட்டி வேறு இடத்தில் பொருத்துவதே கஷ்டமாகி விட்ட நிலையல்லவா இருந்தது.

அந்த முகம் ஏன் இப்படி தன் மனதிலே பதிந்தது என்று எண்ணிக் கொண்டான்.

உடனே இலேசான குறு நகை தோன்றியது.

"சத்யா ரொமான்ஸா டா இப்ப தான் வயசு கோளாறு எல்லாம் வருதா? வேண்டியதுதான்." என்று சிரித்துக் கொண்டான்.

அந்த எண்ணம் ஏற்பட்டதுமே அவனுடைய மனநிலையும் மாறியது.

மூடு மாறியது என்பார்களே அது போல சமநிலை ஏற்பட அப்படியே உறக்கத்தில் ஆழ்ந்து விட்டான்.

அத்தியாயம்- 7

அந்த பிரம்மாண்டமான பங்களாவின் கேட் பங்களா வாட்ச்மேனால் திறக்கப்பட்டது.

சத்யபிரகாஷ் தன்னுடைய இண்டிகா காரை செலுத்திக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

இடத்தைப் பொறுத்து அவன் தன்னுடைய வாகனத்தை அமைத்துக் கொள்வான். இது மாதிரி பெரிய இடங்களுக்குச் செல்லும் பொழுது பைக்கில் நுழைந்தால் சரியாக இருக்காது என்பதாலேயோ என்னவோ ஒரு செகண்ட் ஹாண்ட் இண்டிகா காரை தனக்கென வாங்கி தனக்கும் தன் குடும்பத்துக்கும் பயன்படுத்திக் கொண்டிருந்தான்.

பங்களாவின் உள்ளே நுழைந்து காரை நிறுத்திய வுடனேயே யாரோ ஒரு வேலையாள் கேட்டார்.

"ராஜபாண்டியன் சாரை பார்க்கணும்" என்றான் சத்ய பிரகாஷ்.

"நீங்க!" என்றார்கள்.

"நான் 'சத்யபிரகாஷ். மைதிலி கார் ப்ரெஷ்னிங் சென்டரோட ஓனர்" என்றான்.

"அப்படியா, வாங்க வாங்க! உட்காருங்க" என்று வரவேற்று அமரவைத்து விட்டு போனார்கள்.

அது பெரிய ஹால்!

பிரம்மாண்டமாக இருந்தது. இரண்டு புறத்திலும் அந்த பிரம்மாண்டமான கதவுகளின் வேலைப் பாடு அருமையாக இருந்தது.

உள்ளே நுழைந்த வுடனேயே இரண்டு புறத்திலும் இரண்டு வகையான சோபா செட்டுகள் இருந்தன.

இவன் வலது புறமாக இருந்த சோபாவில் அமர வைக்கப் பட்டான்.

அதற்கு நேர் எதிராகவும் ஒரு டீப்பாய் இடையிலே இருக்க ஒரு ஸோஃபா இருந்தது.

அந்த டீப்பாயின் மேல் பல விதமான பத்திரிகைகள் இருந்தன.

ஒன்றை எடுத்து புரட்டிக் கொண்டிருந்தான். அதற்குள்ளாக ஒருவர் வந்து "டென் மினிட்ஸ்ல சார் வரேன்னு சொன்னாங்க. அது வரைக்கும் நீங்க ஏதாவது படிச்சிட்டிருங்க. காஃபி அல்லது டீ" என்றார்கள்.

"இல்லை, பரவாயில்லை!" என்றான்.

"இல்லை சார்.. கண்டிப்பா ஏதாவது சாப்பிடணும் இல்லைன்னா சார் எங்களை கோபித்துக் கொள்வார்" என்றார் அந்த உதவியாளர்.

"ஓ.கே. அப்படின்னா எனக்கு காஃபியே கொடுத்திருங்க."

ராஜபாண்டியன் வருவதற்குள்ளாக காஃபி வந்தது.

மிக அருமையாக இருந்தது.

சுவைத்து குடித்துக் கொண்டிருந் தான்.

ஏதோ சினிமாக்களில் வருகிற பெரிய பங்களாக்களைப் போல அது இருந்தது.

வெகு தூரத்தில் அந்த பெரிய ஹாலின் நடுவில் இறங்கி வந்த அந்த படிகளில் ராஜபாண்டியன் இறங்கி வந்தார்.

"அப்புறம், மிஸ்டர் சத்யபிரகாஷ் வாங்க!" என்று வரவேற்றார்.

"சாரி சார்! இன்ஃபார்ம் பண்ணாம வந்துட்டேன். நீங்க டென்னோ கிளாக் வெளியே போவீங்கன்னு தெரியும். எதுக்கும் டிரையல் பாக்கலாம்னு வந்தேன்."

"ஒ.கே. ஒ.கே. இட் டஸன்ட் மேட்டர்! டஸன்ட் மேட்டர். ஆக்சுவலா நீங்க இன்னும் ஒரு பதினைந்து நிமிஷம் தாமதமாக வந்திருந்தால் நான் போயிருப்பேன்."

"ஐ ஆம் சாரி சார்! நான் உங்க கிட்ட அப்பாயிண்ட் மெண்ட் வாங்கி இருக்கணும்" என்றான் சத்தியபிரகாஷ்.

"பரவாயில்லப்பா! பரவாயில்லப்பா!" என்று அமர்ந்தார். நடுத்தர வயதிலே இருந்தார்.

"அது ஒரு சின்ன விஷயம் நடந்து போச்சு" என்றான் சத்யபிரகாஷ்

"என்ன?" என்று கேட்டார் ராஜபாண்டியன்.

"இல்லை, உங்களுக்கு ஒரு ஓவியம்...! நீங்க செலெக்ட் பண்ணியிருந்திங்க. அது...! அன் பார்சுனேட்லி எனக்கும் தெரியாம என் பிரதர் வேற யாருக்கோ பிராமிஸ் பண்ணிட்டான் ஃபுல் பேமெண்டும் வாங்கிட்டான்

போலிருக்கு. அதான் என்ன செய்யலாம்னுட்டு உங்க கிட்ட..." என்று இழுத்தான்.

ராஜபாண்டியன் மேற்கத்திய ஸ்டைலிலே தோளை ஒரு குலுக்கு குலுக்கினார். பிறகு சொன்னார் "அப்படியா! ம்... ம்ஹூம்...! அது எந்த ஓவியம் அது" என்று இழுத்தார்.

அந்த ஓவியம் கூட முழுமையாக அவருடைய மனதிலே பதியவில்லை என்பது சத்யபிரகாஷுக்கு கொஞ்சம் தைத்தது. "அதான் சார் அந்த கிராமத்துப் பொண்ணு அது... வரப் போற தலைவனுக்காக காத்திட்டிருக்கிற மாதிரியான ஒரு ஓவியம்" என்றான்.

"யா... யா... தட்ஸ் ரைட். ஆமா! ஆமா! அது கொஞ்சம் நல்லா இருந்தது. அதனால தான் செலெக்ட் பண்ணேன்."

"இல்ல சார், அது நீங்க எங்க யூஸ் பண்ணப் போறீங்க...!" என்று அவன் இழுக்க.

"அது என்னோட ஆபீஸ்ல அந்த வெயிட்டிங் ரூம்ல மாட்டலாம்னு இருக்கேன். ஏன்னா அங்கே கொஞ்ச வி.ஐ.பி.ஸ் வருவாங்க" என்று இழுத்தவர்.

"ஓ.கே. ஒரு ப்ராப்ளம் ஆயிடுச்சுன்னா என்ன பண்றது? இட் டஸ்ன்ட் மேட்டர். அதே மாதிரி இன்னும் இரண்டு மூன்று கூட இருந்ததே அதில் ஏதாவது ஒண்ணை வேணா கொடுத்தர்றீங்களா?" என்றார்.

சத்யபிரகாஷ் மனதில் பெருத்த நிம்மதி ஏற்பட்டது. முகம் மலர்ந்தது.

"ஓ.கே. சார் கண்டிப்பா அதுக்கு ஈக்குவலண்டா... சொல்லப்போனா அதைவிட நல்ல ஓவியமா கூட ஒண்ணு நாங்க உங்களுக்கு தந்துடறோம்."

"தென் தட் இஸ் ஸெட்டில்ட். நோ பிராப்ளம். அடுத்த ஓவியக் கண்காட்சிக்கும் கூப்பிடுங்க சத்யபிரகாஷ். உங்க பிரதர் நல்லா வருவாப்ல" என்றார்.

"ரொம்ப நன்றி சார்" என்றான்.

"சரி அப்புறம்" என்று சொல்லவும். "சரி அவ்வளவு தான் மேட்டர் முடிந்தது" என்பது புரிந்தது.

"ஓ.கே. சார் உங்க நேரத்தை எடுத்துக்க விரும்பலை. நன்றி சார். இதுக்கு ஒத்துக்கிட்டதுக்கு" என்று சொல்லி விட்டு அவன் கிளம்பினான்.

கிளம்புகிற நேரத்தில் அவர் மீண்டும் அழைத்து "சத்யா! எங்க மதர் கூட ஏதாவது தஞ்சாவூர் பெயிண்டிங் மாதிரி பண்ணித் தர முடியுமான்னு கேட்டாங்க. இந்த ஆவிலை கிருஷ்ணன் அந்த மாதிரி ஏதாவது பண்ணித் தர முடியுமா? என்று கேட்டார்.

"கண்டிப்பாக சார் உமா கிட்ட சொல்றேன்." என்று சொல்லிவிட்டு அவன் பெருத்த நிம்மதியுடன் கிளம்பினான்.

முதல் நாளே உமாகாந்தனும் அவனும் பேசிக் கொண்டிருந்தார்கள். "அந்த பொண்ணு உண்மையிலே அந்த ஓவியத்தை ரொம்ப லைக் பண்ணுதாட்ட இருக்கு. நமக்கு கொடுக்க முடியாம போச்சு! என்னடா உமா" என்று சொல்லிக் கொண்டிருந்தான் சத்யபிரகாஷ்.

"ஆமா அண்ணா" என்றான் உமாகாந்தன்.

அதற்கு பிறகு சம்பத்குமார் வந்து கேட்ட கேள்விகள் நியாயமாக இருந்ததன.

ஏதோ ஒரு வெயிட்டிங் ரூம்லயோ அல்லது டிராயிங் ரூமிலோ ஒரு ஆர்னமென்ட்டல் பீஸா அது மாட்டப் பட

போலிருக்கு. அதான் என்ன செய்யலாம்னுட்டு உங்க கிட்ட...'' என்று இழுத்தான்.

ராஜபாண்டியன் மேற்கத்திய ஸ்டைலிலே தோளை ஒரு குலுக்கு குலுக்கினார். பிறகு சொன்னார் ''அப்படியா! ம்... ம்ஹூம்...! அது எந்த ஓவியம் அது'' என்று இழுத்தார்.

அந்த ஓவியம் கூட முழுமையாக அவருடைய மனதிலே பதியவில்லை என்பது சத்யபிரகாஷுக்கு கொஞ்சம் தைத்தது. ''அதான் சார் அந்த கிராமத்துப் பொண்ணு அது... வரப் போற தலைவனுக்காக காத்திட்டிருக்கிற மாதிரியான ஒரு ஓவியம்'' என்றான்.

''யா... யா... தட்ஸ் ரைட். ஆமா! ஆமா! அது கொஞ்சம் நல்லா இருந்தது. அதனால தான் செலெக்ட் பண்ணேன்.''

''இல்ல சார். அது நீங்க எங்க யூஸ் பண்ணப் போறீங்க...!'' என்று அவன் இழுக்க.

''அது என்னோட ஆபீஸ்ல அந்த வெயிட்டிங் ரூம்ல மாட்டலாம்னு இருக்கேன். ஏன்னா அங்கே கொஞ்ச வி.ஐ.பி.ஸ் வருவாங்க'' என்று இழுத்தவர்.

''ஓ.கே. ஒரு ப்ராப்ளம் ஆயிடுச்சுன்னா என்ன பண்றது? இட் டஸ்ன்ட் மேட்டர். அதே மாதிரி இன்னும் இரண்டு மூன்று கூட இருந்ததே அதில் ஏதாவது ஒண்ணை வேணா கொடுத்தர்றீங்களா?'' என்றார்.

சத்யபிரகாஷ் மனதில் பெருத்த நிம்மதி ஏற்பட்டது. முகம் மலர்ந்தது.

''ஓ.கே. சார் கண்டிப்பா அதுக்கு ஈக்குவலண்டா... சொல்லப்போனா அதைவிட நல்ல ஓவியமா கூட ஒண்ணு நாங்க உங்களுக்கு தந்துடறோம்.''

''தென் தட் இஸ் ஸெட்டில்ட். நோ பிராப்ளம். அடுத்த ஓவியக் கண்காட்சிக்கும் கூப்பிடுங்க சத்யபிரகாஷ். உங்க பிரதர் நல்லா வருவாப்ல'' என்றார்.

''ரொம்ப நன்றி சார்'' என்றான்.

''சரி அப்புறம்'' என்று சொல்லவும். ''சரி அவ்வளவு தான் மேட்டர் முடிந்தது'' என்பது புரிந்தது.

''ஓ.கே. சார் உங்க நேரத்தை எடுத்துக்க விரும்பலை. நன்றி சார். இதுக்கு ஒத்துக்கிட்டதுக்கு'' என்று சொல்லி விட்டு அவன் கிளம்பினான்.

கிளம்புகிற நேரத்தில் அவர் மீண்டும் அழைத்து ''சத்யா! எங்க மதர் கூட ஏதாவது தஞ்சாவூர் பெயிண்டிங் மாதிரி பண்ணித் தர முடியுமான்னு கேட்டாங்க. இந்த ஆவிலை கிருஷ்ணன் அந்த மாதிரி ஏதாவது பண்ணித் தர முடியுமா? என்று கேட்டார்.

''கண்டிப்பாக சார் உமா கிட்ட சொல்றேன்.'' என்று சொல்லிவிட்டு அவன் பெருத்த நிம்மதியுடன் கிளம்பினான்.

முதல் நாளே உமாகாந்தனும் அவனும் பேசிக் கொண்டிருந்தார்கள். ''அந்த பொண்ணு உண்மையிலே அந்த ஓவியத்தை ரொம்ப லைக் பண்ணுதாட்ட இருக்கு. நமக்கு கொடுக்க முடியாம போச்சு! என்னடா உமா'' என்று சொல்லிக் கொண்டிருந்தான் சத்யபிரகாஷ்.

''ஆமா அண்ணா'' என்றான் உமாகாந்தன்.

அதற்கு பிறகு சம்பத்குமார் வந்து கேட்ட கேள்விகள் நியாயமாக இருந்தன.

ஏதோ ஒரு வெயிட்டிங் ரூம்லயோ அல்லது டிராயிங் ரூமிலோ ஒரு ஆர்ணமென்ட்டல் பீஸா அது மாட்டப் பட

வேண்டுமா என்று கேட்டது. சத்யபிரகாஷுக்குள் சிந்தனையை எழுப்பியிருந்தது.

அதனால்தான் எதற்கும் முயற்சித்துப் பார்ப்போம் என்று இந்த பங்களாவிற்கு வந்தான்.

வந்ததற்குப் பிறகு ராஜபாண்டியனிடம் பேசும் பொழுது "அது! நீங்க எந்த ஒவியம்?" என்று கேட்டவுடனேயே சம்பத் குமார் கேள்வியின் நியாயம் இன்னும் திர்க்கமாக அவனுக்குள் பதிந்தது.

அது எந்த ஒவியம் என்று கேட்கிறவருக்கு கொடுப்பதை விட அந்த ஒவியத்தைப் பற்றி அவ்வளவு உணர்ச்சிகரமாக சிலாகித்துப் பேசிய அந்தப் பெண்ணுக்கு கொடுப்பதுதான் நியாயம். தான் செய்தது சரிதான் என்று இப்போது அவனுக்கு உறுதிப்பட்டது.

மிகவும் மகிழ்ச்சியுடன் மாருதியை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

அன்றைக்கெல்லாம் பிற்பகல் அறையிலும், அலுவலகத் திலும் அவனுக்கு இருப்பு கொள்ளவே இல்லை. "பாவம் நேற்று அந்தப் பெண் ரொம்பவும் வருத்தப்பட்டுப் போனாளே அவளுக்கு இந்த செய்தி தெரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்" என்று எண்ணிக் கொண்டவன்.

கலாவதி டீச்சர் வேலை செய்யும் பள்ளி... அது...! எங்கிருக்கிறது என்று கலாவதியினுடைய கணவரிடமே விசாரித்துக் கொண்டான்.

விசாரித்துக் கொண்டுதான் பிற்பகலில் வண்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

அதுவும் உடனடியாக ராஜபாண்டியன் வீட்டிற்கு சென்று வந்த ஒரு மணி நேரத்திற்குள்ளாக புறப்பட்டான்.

அந்த பள்ளிக்குப் போய் ஏழிசை வல்லபியிடம் அந்த ஓவியம் உங்களுக்குத்தான். என்று சொல்லிவிட்டு அவளுடைய முகபாவங்களை ஆழ்ந்து பார்த்து விட்டு, ரசித்து விட்டு திரும்பி வரும் பொழுது அவனுக்குள்ளே ஒரு நிறைவு இருந்தது.

"பரவாயில்லை! இன்றைக்கு ஒரு நல்ல காரியம் செய்தோம்." என்று எண்ணிக் கொண்டான். ஆனால், இந்த நேரத்தில் முதல் நாள் இரவு அந்த பெண்ணுடைய முகம் தன் மனதுக்குள் ஊடாடியதெல்லாம் சற்று மறந்து போயிருந்தது.

உறங்கப் போகும் நேரத்தில் எண்ணிய எண்ணம் அல்லவா? அது ஒரு ஓரத்தில் மறைந்து போய் விட்டது. ஆனால் அந்த ஓவியத்தை அந்தப் பெண்ணுக்கு கொடுக்க வேண்டும் என்று எண்ணம் மட்டும் திரும்பத் திரும்ப அவனுடைய மனதிலே தோன்றியதால் ராஜபாண்டி யனைச் சந்திக்க காலையிலே புறப்பட்டு விட்டான். நல்ல வேளை அப்பாயிண்ட்மெண்ட் இல்லாமல் போய் நின்றதற்கு அவர் ஏதாவது கோபித்துக் கொள்வாரோ என்ற அச்சம் இருந்தது.

இந்த கார்ஃபிரஷ்னர் செண்டர் வைத்திருப்பதினால் அவனுக்கு ஒரு சில லாபங்களும் இருந்தன. தங்களுடைய காருக்காகவே நிறைய செலவழிக்கக் கூடிய கோஷல் வரர்கள் சில பேர் அவனுக்கு பழக்கமாக இருந்தார்கள்.

அவர்களுடைய பணப் புழக்கத்தினாலோ என்னவோ அடுத்தடுத்து புதிய கார்கள் வாங்குவது. அந்த கார்களுக்கு தேவையான அலங்காரங்களை செய்து ரசிப்பது என்று அவர்கள் நிறைய செய்வார்கள்.

அப்படிப்பட்டவர்களுக்கு செய்கிற சேவையினால் அவனுக்கும் ஓரளவுக்கு லாபம் வந்து கொண்டிருந்தது. அதனால் குடும்பச் செலவுகளை அவன் நன்றாகவே பார்த்துக் கொண்டான்.

உமாகாந்தனுக்கும் தேவையான உதவிகளைச் செய்வதும் அவனுக்கு சுலபமாக இருந்தது.

கிட்டத்தட்ட மூன்று நான்கு ஆண்டுகளாக குடும்பத்தில் வீசிய புயல் இப்பொழுது தான் சற்று ஓய்கிறாற் போல அவனுக்கு தோன்றியது.

உமாவை இந்த வழியிலே இழுத்து விட்டது மிகவும் நல்லதாக போனது. அவன் மனக் குழப்பங்களுக்கெல்லாம் இது ஒரு வடிகாலாக இருக்கக் கூடும் என்ற அவனுடைய கணிப்பு சரியாக போயிற்று.

அவன் ஓவியங்களில் ஆர்வம் காட்டுகிறான் என்பதைப் பார்த்தவுடனேயே அதையே ஒரு முக்கிய இழையாக பிடித்துக் கொண்டான் சத்யபிரகாஷ்.

இப்பொழுது உமாகாந்தனிடமும் தெளிவு ஏற்பட்டிருக்கிறது. என்ற எண்ணம் தோன்றியது. ஆனாலும் திடீர் திடீரென்று கோபித்துக் கொள்கிறான்.

முந்தைய நாள் அவன் மனத்தில் ஏற்பட்ட போராட்டமும் அவன் சட்டென்று மைதிலியை கோபித்துக் கொண்டதும் அவன் மனதிலே ஓடிக் கொண்டுதான் இருந்தது. இதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணமும் என்ன செய்வது என்று தெரியாத குழப்பமுமாக இரண்டும் அவன் மனத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன.

அதையும் மீறி வல்லபிக்காக அந்த ஓவியத்தை ஒதுக்கிச் சொல்லி விட்டு வந்தது என்பது கொஞ்சம் மகிழ்ச்சியையும் அவனுக்குள் ஏற்படுத்தியிருந்தது.

காரில் விசிலடித்துக் கொண்டே ஓட்டிக் கொண்டிருந்தான். திடீரென்று அவனுக்கு சம்பத்குமார் காட்டிய ஃபோட்டோ நினைவுக்கு வந்தது. அந்த காகம் அந்த கேட்டிற்கு மேலே அழகாக அமர்ந்து கொண்டிருப்பதையும், அதற்கு பக்கத்திலே நின்று கொண்டு பெருமையாக போஸ் கொடுப்பதையும் பார்த்து அப்போது அவனுக்கு சிரிப்பாக இருந்தது.

இப்போது அவனுக்கு அந்த பெண்ணைப் பற்றிய ஒரு அனுமானத்திற்கு அது உதவி செய்கிறாற்போல தோன்றியது.

ஒரு சின்னப் பறவையிடம் நேசம் காட்டும் பெண்ணாக இருக்கிறாள். அதன் பக்கத்தில் நின்று கொண்டு பெருமையாக போஸ் கொடுக்கிறாள். எப்படிப்பட்ட பெண் இவள்?

ஒரு பெரிய பள்ளியிலே ஆசிரியையாகவும் இருக்கிறாள். அங்கேயும் பணிகளைச் சரியாக செய்து விடுகிறாள். இங்கேயும் தனக்கென்று இருக்கக் கூடிய தன்னுடைய விருப்பங்களை முறையாக நிறைவு செய்து கொள்கிறாள்.

இப்படிப்பட்ட பெண்களை காணக் கிடைப்பதே இன்றைக்கு எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது. சற்று நேரத்தில் அந்த தலைமையாசிரியரிடம் பேசிக் கொண்டிருக்கும்போது அவர் அவளை புகழ்ந்து தள்ளி விட்டார். ''ரொம்ப அருமையான பெண். உயிரை கொடுத்து குழந்தைகளுக்கு பாடஞ் சொல்லித் தருவா.

குழந்தைகள் எல்லாரும் அவளிடம் அவ்வளவு பிரியமாக இருக்காங்க. விரட்டவே மாட்டா. ஆனா, அவ என்ன சொன்னாலும் கேட்பாங்க" என்று என்னென்னமோ அவர் சொன்ன தெல்லாம் இப்பொழுது நினைவுக்குள் ஓடியது.

நட்புக்கு ஏற்ற குடும்பம் அது என்று அவனுக்குப் புலப்பட்டது. அந்த சம்பத் குமார் எவ்வளவு அருமையாக ஆசையாக வந்து அந்தப் பெண்ணுக்காக வாதாடினார் எவ்வளவு நல்ல கருத்துக்களை எடுத்து வைத்தார்.

நல்ல வேளையாக அவர் கேட்ட கேள்விதான் ராஜபாண்டியனிடம் போய் அந்த ஓவியத்தை கேட்கச் செய்தது என்று எண்ணிக் கொண்டான்.

அந்த ஓவியத்தை அந்தப் பெண்ணுக்கு கண்டிப்பாக கொடுத்துவிடு என்று மீண்டும், மீண்டும் எண்ணிக் கொண்ட பொழுது இன்னொரு எண்ணம் கூட அவனுக்கு தோன்றியது. உமாகாந்தனிடம் சொல்லி அந்த போட்டோவை அடிப்படையாக வைத்து ஒரு ஓவியத்தை ஏன் வரையச் சொல்லக் கூடாது.

அதற்கு அந்தப் பெண்மணி அனுமதி அளிப்பாளா? அனுமதி வாங்க வேண்டும். வாங்கி உமாகாந்தனிடம் சொல்லி அதை ஒரு அழகான ஓவியமாக்கி அந்தப் பெண்ணுக்கே பரிசாகத் தரவேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

உமாகாந்தன் கண்டிப்பாக செய்வான். ஏனென்றால் தன்னுடைய ஓவியத்தை அவ்வளவு சிலாகித்த ஒரு பெண்மணிக்காக அவன் செய்யமாட்டானா என்று எண்ணிக் கொண்டவன். பிற்பகலில் ஓவியக் கண்காட்சிக்கு சென்றபொழுது அந்த ஐடியாவை சொன்னான்.

'போட்டோ வேணுமே' என்றான் உமாகாந்தன்.

"நான் வேணா அந்த சம்பத் குமார்கிட்ட கேட்டு வாங்கித் தரேன்" என்றான்.

சொல்லும் போதே ஒரே ஒருமுறை பார்த்து பழகியிருக்கிறோம். எந்த உரிமையில் சம்பத் குமாரிடம் கேட்பது என்று தோன்றியது. ஆனாலும் 'இல்லை எப்படியாவது வாங்கிடலாம். இந்த ஓவியம் வேணும்னா அதைக் கொடுங்க அப்படின்னு கேட்போம்' என்று எண்ணிக் கொண்டான்.

அந்த கருத்தை உமாகாந்தனிடம் வெளிப்படையாக சொல்லவும் செய்தான்.

"சூப்பர் ஐடியா அண்ணா. நான் அருமையா வரைஞ்சுடறேன். நீயே ஆச்சரியப்படப் போறே பாரு" என்று சொன்னபொழுது உமாகாந்தனுடைய அளவு கடந்த உற்சாகம் சத்யபிரகாஷுக்கு ஏனோ நெருடலாக இருந்தது.

அத்தியாயம் -8

"வாங்க வாங்க சார்" என்று உற்சாகமாக வரவேற்றான் சத்யபிரகாஷ்.

'வந்தாச்சு' என்று உள்ளே வந்தார் பிரசாந்த்.

அந்த ஊரின் மிகப்பெரிய கோடீஸ்வரர் வீட்டுக் குழந்தை.

"அப்புறம் லேட்டஸ்டா என்ன வச்சிருக்கீங்க" என்று கேட்டார் பிரசாந்த். கேட்டார் என்றால் மிக வயதானவர் என்று பொருள் இல்லை மிக இளமை இருபதுகளில் இருக்கிறான்!

மிகப் பெரிய செல்வந்தர் குடும்பத்தின் ஒரே வாரிசு என்று சொல்லலாம். ஒரு சகோதரர் இருக்கிறார். இருந்தாலும் அவர் திருமணமாகி சென்றுவிட்டதால் இவர் தான் செல்லப்பிள்ளையாக இருந்தார்.

"சார் நான் என்ன வச்சிருக்கிறது. உங்களுக்கு என்ன வேணும்? என்று சொல்லுங்கள் தரேன்" என்று சொன்னான் சத்யபிரகாஷ்.

"இப்ப இருக்கிற காருக்கு சீட்டை மாத்தணும்" என்றான் பிரகாஷ்.

"ஏன் சார்?"

"அதுவே ரொம்ப கம்பர்ட்டபிளா இருக்கே" என்று இழுத்தான் சத்யபிரகாஷ்.

"அட! என்னய்யா நீங்க உங்களுக்கு வியாபாரமே செய்யத் தெரியலை. நீங்க சொல்லணும். உங்க சீட்டு நல்லா இல்ல சார். வேற மாத்திருங்க. நான் போட்டு ஒரு வருஷம் ஆச்சு. அப்படின்னு சொன்னா தானே உங்களுக்கு வியாபார டெக்னிக் தெரியுதுலு அர்த்தம்" என்று கேலி செய்தார் பிரசாந்த்.

சத்யபிரகாஷ் அழகாக சிரித்தான்.

"அப்படி ஒரு இரண்டு தடவை சொல்லி உங்க தலையில கட்டினேன்னு வைங்க சார். அடுத்த தடவை நீங்க வரமாட்டீங்களே! அந்த ஆள் கிட்ட போனா வெட்டியா செலவு வைப்பான்ல நெனைப்பிங்க" என்றான்.

"ஓகோ... இப்படி ஒரு டெக்னிக் இருக்கோ" என்றான் பிரசாந்த்.

இருவரும் சிரித்தார்கள்.

"ஓ.கே.சார் என்ன வேணும் சொல்லுங்க" என்றான்.

"லேட்டஸ்டா அந்த சீட் வந்திருக்கில்லையா எனக்கு அதுமாதிரி வேணும்!"

"என்கிட்ட இருக்கிற டிசைன் வேற எந்தக் கார்லயும் இருக்கக் கூடாது அப்படிப் பார்த்து நீங்க பண்ணித் தரணும்" என்றான் பிரசாந்த்.

"பண்ணிட்டாப் போச்சு, எனக்கென்ன சார் கஷ்டம்!" என்றான்.

"அதான் உங்களுக்கு ஒரு கஷ்டமும் இல்லை இல்லையா? அப்போ சந்தோஷமா செஞ்சு கொடுக்கணும்" என்று பிரசாந்த் தனக்கு காருக்குள்ளாக என்னென்ன வேண்டும் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தான்

சத்யபிரகாஷ் தன்னுடைய லெட்டர் பேடை எடுத்து வைத்துக் கொண்டு அதிலே விவரமாக குறித்துக் கொண்டான்.

"ஒன் வீக் டைம் கொடுங்க சார்! அசத்திடறேன்."

"ஓ.கே. அப்ப காரை எப்ப கொண்டு வந்து விடட்டும்?" என்று கேட்டான் பிரசாந்த்.

"வேண்டாம் சார். இப்ப வேண்டாம் நான் எல்லாம் பிளான் பண்ணிட்டு எப்படிப் பண்ணினா நல்லாருக்கும்னு என்று ஸ்கெட்ச் போட்டுட்டு நான் உங்களுக்கு சொல்றேன். ஒன் வீக் கழித்து கொண்டு வந்து விடுங்கள் அப்புறம் நாம நான்கு நாட்கள் கழித்து காரை எடுத்துக் கொள்ளலாம்." என்றான் சத்யபிரகாஷ்

"தட் இஸ் ரியலி குட்" என்று மகிழ்ச்சியானான் பிரசாந்த்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு இளம்பினான்.

இளம்புவதற்கு முன்பாக சுற்றிலும் நோட்டமிட்டான் "நல்ல இடமாத்தான் வைச்சிருக்கீங்க. எவ்வளவு ஏரியா இருக்கும்" என்று கேட்டான்.

"சார் அது இந்த இடம் மட்டும் டுவெண்டி செண்ட்ஸ் இருக்கும். அந்த பக்கத்துல ஒரு பங்களா இருக்கு அதுல பதினைந்து செண்ட் இருக்கு."

"உங்களுதா...?"

"அய்யய்யோ! இவ்வளவு சொத்துக்கு நான் எங்கே போவேன். ஓனர் ஃபாரின்ல இருக்காரு. என்னோட பொறுப்புல தான் ஏழெட்டு வருஷமா இருக்கு."

"அப்படியா பாரின்ல இருந்து வருவாரா இல்லை. அங்கே செட்டில்டா?" என்று கேட்டான் பிரசாந்த்.

"அங்கே செட்டில்டு மாதிரிதான் தெரியுது."

"பின்ன என்னய்யா நைசா பேசி விலைக்குக் குடுங் கன்னு கேட்டு வாங்கிக்க வேண்டியதுதானே" என்றான்.

"அதுக்கெல்லாம் வாங்கற சக்தின்னு இருக்குல்ல சார். விலை அதிகமா இருக்கும்" என்றான் சத்தியபிரகாஷ்.

"சும்மா ஒரு டிரையல் பாருய்யா. பிசினஸ்னா இப்படித் தான் சும்மா முட்டிப் பார்க்கணும். குடுக்கலைன்னா ஓ.கே. பரவாயில்லை. ஒருவேளை சரி வச்சுக்கோ அப்படின்னுட் டார்னா?" என்றான் பிரசாந்த்.

சத்யபிரகாஷுக்கு கூட அது சரியென்று பட்டது.

"ஓரளவுக்காவது தயாராயிட்டுத்தான் கேட்கணும்."

"ஏன்யா, என்னை மாதிரி ஒரு நாலு இளிச்சவாயன் மாட்டினா நீங்க ரெடியாயிட மாட்டீங்க?" என்றான் பிரசாந்த்.

சத்யபிரகாஷ் சிரித்தான்.

"நீ ஒரு பிழைக்கத் தெரியாத ஆளுய்யா" என்றான் உரிமையாக. ஒரு சகோதரனைப் போல பேசுவான் என்பதால் உரிமையாக சொன்னான்.

"என்னைமாதிரி நாலு பேர் வருவாங்க இல்லே? கொஞ்சம் கறந்துடு. நாங்க எல்லாம் பிரஸ்டீஜுக்காக கொடுப்போம்பா" என்றான்.

சத்யபிரகாஷ் அவனுடைய வெளிப்படையான பேச்சைக் கேட்டு சிரித்தான்.

"சார்! நிறைய லாபம் பார்த்தா வியாபாரம் சீக்கிரம் போயிடும். நியாயமான லாபம் பார்த்தா வியாபாரம் நிக்கும் சார்."

"அதுவும் கரெக்ட்தான். ஆனா எங்கிட்ட எதுவும் கேக்கறதுக்கு தயங்காதய்யா. சப்போஸ் அப்படி இப்படி அந்த இடத்தை வாங்குறதுக்கு லோன் கீன் வேண்ணா சொல்லு நான் அரேஞ்ச் பண்ணித் தரேன்" என்றான் பிரசாந்த்.

"ரொம்ப தாங்க்ஸ் சார்!" என்று சிரித்தான் சத்யபிரகாஷ்.

பிரசாந்த் வெட்டி ஜம்பமாக பேசக் கூடியவனல்ல என்பதனால் அவசியம் நேர்ந்தால் கேட்டுக் கூடப் பார்க்கலாம் என்று அவனுக்குத் தோன்றியது.

பிரசாந்த் கிளம்பிப் போனதற்கு பிறகு பிரசாந்த் கூறிய யோசனை நல்ல யோசனையாகத்தான் தெரிந்தது.

எப்படியும் இந்த இடத்துக்காரர் அந்த பங்களாவை தன்னுடைய பொறுப்பில் தான் விட்டு வைத்திருக்கிறார். ஏழெட்டு வருடத்தில் ஒரே ஒரு முறை வந்திருக்கிறார். மேலும் கோயமுத்தூருக்கு வரவேண்டிய அவசியம் எனக்கு

இல்லை அதான் என்ன பண்றது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னார்.

ஒரு வேளை இடத்தை விற்று விட்டால் உடனேயே வேறு இடம் பார்த்து...! அவுட்டர் போய்...! அய்யோ சரி கேட்டுப் பார்க்கலாம்'' என்று யோசித்தான்.

மெது மெதுவாகத்தான் கேட்டுப் பார்க்க வேண்டும் எடுத்த உடனேயே கேட்டு அவர் மிக அதிகமான விலையைச் சொல்லி விட்டார் என்றால் தன்னால் முடிய வேண்டும் அல்லவா என்றும் யோசித்தான்.

சத்யபிரகாஷுக்கு இப்போது வருவாய்க்கு குறைச்சல் இல்லை.

கார் ஃபிரெஷ்னிங் சென்டர் என்ற முறையிலே கார்களை அழகு படுத்துவதை ஒரு கலை போல செய்து கொண்டிருந்தான்.

அவனுடைய வாடிக்கையாளர் எல்லாமே மேல் தட்டு வர்க்கத்தை சேர்ந்தவர்கள். கார் வைத்திருப்பதை அவர்களெல்லாம் ஏதோ ஒரு பொம்மையை வைத்திருப்பது போல எண்ணிக்கொண்டு 'பெட் அனிமல்ஸ்' என்பார்களே அது மாதிரி கார்களை விதவிதமாக வாங்கி வைத்துக் கொள்கிறவர்கள் என்பதனால் அவர்கள் தங்கள் ரசனைக் கேற்ற விதத்தில் கார்களுக்கு செலவு செய்ய தயாராக இருந்தார்கள். அதனால் சத்தியபிரகாஷுக்கு நல்ல வகையில் நல்ல வருமானம் கூட வந்து கொண்டிருந்தது.

''பார்க்கலாம். நல்ல யோசனையாக தெரிகிறதே'' என்று எண்ணிக் கொண்டே உள்ளே இருந்து ஒரு ஃபைலை எடுத்தான்.

''ஓவியக் கண்காட்சியில் போய் அமர்ந்ததினாலோ என்னவோ கொஞ்சம் கணக்கு வழக்கு பார்க்கவே இல்லை. பார்த்துவிடலாம்'' என்று எண்ணி ஃபைலை எடுத்த உடனேயே மனதிற்குள்ளே ஒரு எண்ணம் தோன்றியது.

அன்றைக்கு பள்ளிக் கூடத்திற்கு சென்ற பொழுது அந்த பெண்ணும் கலா டீச்சரும் பேசிக் கொண்டார்களே யாரோ ராகவன் என்று பேசிக்கொண்டார்கள். அந்த ராகவன் யாராக இருக்கும் என்ற எண்ணம் தோன்றியது.

தன்னைத் தானே உலுக்கிக் கொண்டான். யாராக இருந்தால் என்ன? ஏதோ ஒரு ராகவன் அந்த வல்லபி என்கிற பெண்ணுக்கு தெரிந்தவனாக இருக்கிறான் என்பது என்னை எந்த விதத்தில் பாதிக்கும்?

அப்படியெல்லாம் பாதித்து விடக்கூடாது என்று சிரித்துக் கொண்டான். ஆனால் அவன் நினைத்தது நடக்கவில்லை.

எதிர்பாராத விதமாக சம்பத் குமார் அவர்களுடைய வளாகத்திற்குள் வந்து பைக்கை நிறுத்தி விட்டு வந்தான்.

சம்பத் குமாரைப் பார்த்தவுடன் சத்யபிரகாஷ் மனதில் மகிழ்ச்சி பொங்கியது. ''வாங்க, வாங்க, மிஸ்டர் சம்பத்'' என்று வரவேற்றான்.

''வரேன் சார்! வணக்கம் சார்'' என்று அவன் உற்சாகமாக வந்து உட்கார்ந்தான்.

எடுத்த உடனே ''ரொம்ப தாங்க்ஸ் சார்'' என்றான்.

''எதுக்கு சார் தாங்க்ஸ்?''

''இல்லை என் சிஸ்டருக்கே அந்த பெயிண்டிங்கை கொடுக்கறேன்னு நீங்க சொல்லியிருக்கீங்க அவளுக்கு ஒரே

சந்தோஷம். அதான் தாங்க் பண்ணிட்டுப் போகலாம்னு வந்தேன்'' என்றான்.

''அதுக்கு நான் உங்களுக்குத் தான் தாங்க் பண்ணனும் நீங்க தானே சொன்னீங்க ஏதோ ஒரு வெயிட்டிங் ரூம்லயோ ஒரு டிராயிங் ரூம்லேயோ ஒரு அணிகலன் மாதிரி தொங்க விடறதை விட லைக்கிங் உள்ளவங்களுக்கு கொடுக்கறது நியாயம் தானேன்னு சொன்னீங்க இல்லையா?! யோசிச்சேன். எதுக்கும் நம்ம கிட்ட வாங்கறேன்னு சொல்லியிருந்தவங்க கிட்ட ஒரு முட்டு முட்டிப் பார்த்தேன். நீங்க சொன்னது கரெக்ட் தான் சார். அவர் ஆபீஸ் வெயிட்டிங் ரூம்ல தான் மாட்டற ஐடியால இருந்தார். அப்படீங்கறப்ப அதை ஏன் உண்மையா லைக் பண்றவங்க கிட்ட கொடுக்கக் கூடாதுன்னு தோணிச்சு. நல்ல வேளை கேட்டேன். ஓ.கே. பண்ணிட்டாரு'' என்றான்.

சம்பத்குமார் புன்னகையோடு அவன் பேசுவதை பார்த்துக் கொண்டிருந்தான்.

''அது அப்படித்தான். சில பேர் வெறும் அழகுக்காகவும் ஒரு பெருமைக்காகவும் வாங்கி வச்சுக்கறாங்க. சில பேர் ரசனைக்காக வாங்கி வச்சுக்கிறாங்க. ரசனைக்காக வாங்கற வங்களுக்குத்தான் நாம் இம்பார்டன்ஸ் கொடுக்கணும்'' என்றான் சம்பத்குமார்.

''அது உண்மைதான்சார். கலைஞர்களுக்கு உயிரே அப்ரிஷியேஷன் தான். பாராட்டுத்தான். அது ரசனை உள்ளவங்ககிட்ட இருந்துதான் கிடைக்கும்'' என்றான்.

''தட்ஸ் ட்ரூ!''

இரண்டு பேரும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந் தார்கள்.

''நீங்க? உங்க ஜாப் எப்படி?'' என்று விசாரித்தான்.

''எங்களுக்கு என்ன சார் டென் டு ஃபைவ் ஜாப் கொஞ்சம் எக்ஸ்டிராவா வேலை செய்ய வேண்டியிருக்கும். மாசமானா சம்பளம் கத்தையாட்டம் வந்துரும். பாங்க் ஜாப் தானே ஓடுது!'' என்றான் சம்பத்குமார், தொடர்ந்து

''ஆனால், சார் எனக்கென்னமோ உங்களை மாதிரி இருக்கறவங்களை தான் பிடிக்குது. நீங்க கவர்ண்மென்ட் ஜாபே வேணாம்னு சொல்லிட்டீங்களாமே'' என்றான்.

''ஆமா சார், எனக்கு ஃபேமிலில கொஞ்சம் ரெஸ்பான் ஸ்பிலிட்டி இருக்கு. கவர்ன்மென்ட் ஜாப்னா டிரான்ஸ்பர் பண்ணுவாங்க. இங்கே நான் விட்டுட்டு போக முடியாதுன்னு யோசிச்சுத்தான் இப்படி முடிவெடுத்தேன். எனக்கு இந்த கார்மெக்கானிஸத்துல ஒரு இன்ட்ரஸ்ட் உண்டு. ஒரு ஆட்டோமொபைல் டிப்ளமோ கூட பண்ணினேன்.

அதனால யோசிச்சேன் பேசாம இதுல ஏதாவது பண்ணுவோம் அப்படின்னுதான் இந்த கார்ஃபிரஷ்னிங் சென்டர் பண்ணினேன். அது லேட்டஸ்டா வந்துட்டு இருக்கிற கான்ஸெப்ட் சார்.''

''ஆமா, ஆமா அதாவது எப்படி நகை பிளாட்டினம், வைரம்னு சொல்லி காசை பிடுங்கிடறீங்களோ அது மாதிரி சூட், பெல்ட்னு எதையாவது ஒண்ணை ஹைஃபையா சொல்லி காசை பிடுங்கிடுவீங்க தெரிஞ்ச விஷயம்தானே'' என்று சிரித்தான் சம்பத்குமார்.

"சார் குடுக்க தயாரா இருக்காங்க. வாங்கறோம். அதுக்காக சும்மா வாங்குறது இல்லை சார். ஓரளவு நீட்டா பண்ணிக் கொடுத்துட்டுதான் வாங்கறோம்."

"கரெக்ட் சார்! சில பேர் இந்த காரை வச்சுக்கறதுக் காகவே செலவு பண்றதும் வித விதமாக அழகு படுத்திக் கறதுக்காக செலவு பண்றதுக்கும் அவங்க கிட்ட பணம் இருக்கு. ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு ஹாபி. இப்ப என் தங்கை எப்படி இந்த பெயிண்டிங்கை வாங்கினாளோ அது மாதிரின்னு வச்சுக்குங்களேன்" என்றான்

இருவரும் சிரித்துக் கொண்டனர்.

"சும்மா சொல்லக்கூடாது சார்! உங்க சிஸ்டருக்கு நல்ல ரசனை" என்றான் சத்யபிரகாஷ்.

"அதையேன் கேக்கறீங்க சார்! ரசனையா! சின்ன சின்ன விஷயங்கள்ல கூட ரொம்ப ஆசையா இருப்பா" என்றான்.

அப்பொழுதுதான் கேட்கலாமா வேண்டாமா என்று தோன்றியது.

மெல்ல வாய் திறந்து "ஏன் சார் அன்னைக்கு நான் போயிருந்தப்ப கூட ஏதோ ராகவன்னு கூட பேசிட்டிருந் தாங்க" என்றான் பேச்சுக்கு நடுவே.

சம்பத்குமார் அதை கேட்டவுடனே ஒரு நிமிடம் சத்யபிரகாஷை உற்றுக் கவனித்தான்.

"அது பெரிய கதை சார்! சஸ்பென்ஸ் சார்! அது இன்னொரு நாளைக்குச் சொல்றேன்" என்றான்.

சத்யபிரகாஷுக்கு 'சப்' என்று ஆனது இப்பவே சொல்லியிருக்கக் கூடாதா என்று தோன்றியது.

சட்டென்று தன்னுடைய தீர்மானம் நினைவுக்கு வர கேட்டான். "ஏன் சார் நான் ஒண்ணு கேட்பேன் நீங்க தப்பா நினைக்காதீங்க" என்றான்.

"கேளுங்களேன்" என்றான்.

"நீங்க செல் ஃபோன்ல ஒரு போட்டோ வைத்திருந்தீங்க இல்லையா அதை எனக்கு மெயில் பண்ண முடியுமா" என்று கேட்டான்.

சம்பத்குமார் யோசனையுடன் அவனைப் பார்த்தான். சத்யபிரகாஷ் படபடப்பாக "அய்யய்யோ நீங்க எதுவும் தப்பா நினைக்காதீங்க! அது ரொம்ப அழகா இருந்தது. ஒரு சாதாரண சீன். இல்லை அது... அப்படி ஒரு காகத்துக்கிட்ட ஒரு பொண்ணு நிக்கறது! அந்த காகம் பயப்படாம நிக்கறதுங்கறது சாதாரண சீன் இல்லை. அதை ஏன் ஒரு பெயிண்டிங்கா பண்ணக் கூடாதுன்னு எங்களுக்கு தோணுச்சு."

இப்பொழுது ஆச்சரியப்படுவது சம்பத் குமாரின் முறையாயிற்று

"ஓ... அப்படியா சொல்றீங்க!"

"ஆமா சார் உங்க சிஸ்டருக்கு அழகா ஒரு பெயிண்டிங் பண்ணி கொடுக்கலாம் அப்படின்னு நினைக்கிறேன்." என்றான் சத்யபிரகாஷ்

"ஆஹா! இப்படி ஒரு அதிர்ஷ்டம் கிடைக்கணுமே! தாராளமா செய்ங்க. உங்களுக்கு நான் மெயில் பண்றேன் உங்க மெயில் ஐ.டி. கொடுங்க" என்று கேட்டான்.

"ஓ.கே. சார் ரொம்ப தாங்க்ஸ்" என்றான்.

"எதுக்கு?"

"இல்லை என்ன இருந்தாலும் ஒரு வயசுப் பொண்ணோட போட்டோவை கொடுக்கறது, கொஞ்சம் தயக்கம் காட்ட வேண்டிய விஷயம். எங்க மேல நம்பிக்கை வைத்து அனுப்பறேன்னிங்களே அதுக்கு சொன்னேன்."

"சார்! எனக்கும் தராதரம் தெரியும் சார். நீங்களும் உங்க பிரதரும் ரெண்டு பேரும் கலைஞர்கள்" என்றான்.

"பிரதர் மட்டும் தான்" என்றான்...

"இல்லை! இல்ல நீங்களும் ஓவியம் வரைவீங்கன்னு கேள்விப்பட்டிருக்கிறேன். அதுவும் இல்லாம பாருங்களேன் இப்ப கார்லேயே அழகு படுத்தற யோசனைல தானே இருக்கீங்க" என்றான்.

ஏனோ சத்யபிரகாஷுக்கு சம்பத் குமாரை மிகவும் பிடித்துப் போயிருந்தது. சம்பத் குமாருடன் தனக்கு ஒரு நல்ல நட்பு அமையும். என்று தோன்றியது.

"ஓ.கே. சார். ஆனா இன்னொரு விஷயம். இதை உங்க சிஸ்டர்கிட்ட சொல்லாதீங்க." என்றான்.

"ஏன்?"

"சஸ்பென்ஸா கொடுப்போம் சார். அப்போ இன்னும் ரொம்ப ஹாப்பியாயிருவாங்க சார்."

"அது கரெக்ட் ரெண்டு மாசத்துல அவளுக்கு பர்த் டே கூட வருது. அதுக்குள்ள ரெடியாயிட்டா நல்லாயிருக்கும்" என்றான்.

"அதுக்குள்ள தாராளமா ரெடியாயிடும் சார். சூப்பரா வாட்டர் கலர் பெயிண்டிங் பண்ணித் தந்துடலாம். இல்லே ஆயில் பெயிண்டிங் கூட பண்ணிடலாம்" என்றான்.

"அப்படீங்கறீங்க?" என்று சம்பத் குமார் உற்சாகமானான்.

"ரொம்ப நல்லா இருக்கு சார்" என்று எழுந்தவன் மீண்டும் அமர்ந்தான். "ஏன் சார் ஒரு யோசனை" என்றான்.

"சொல்லுங்களேன்" என்றான் சத்யபிரகாஷ்.

"இவ்வளவு பெரிய ஷோரும் வைச்சிருக்கீங்க உங்க ஆபீஸ் சூப்பரா இருக்கு. இங்க அழகா ஒரு ஷோகேஸ் மாதிரி வைத்து அதுல பிரதரோட பெயிண்டிங்கை வைக்கலாமே. அப்பப்ப அப்டேட் பண்ணி வைக்கலாமே" என்றான்.

சத்யபிரகாஷின் கண்கள் விரிந்தன. "ஆஹா இது சூப்பர் ஐடியா சார்" என்றான்.

"ரொம்ப தாங்க்ஸ் சார்!" என்றான் உற்சாகமாக. "இந்த தாங்க்ஸ் எனக்கு இல்லை என் சிஸ்டருக்கு ஐடியா கொடுத்த என் சிஸ்டருக்கு அனுப்புங்க" என்றான் அவன்.

"அப்படியா அவங்க எங்கே வந்திருக்காங்களா?" என்றான்.

"இல்லை இந்தப் பக்கமா போயிருப்பா போல இருக்கு. அப்புறம் அவங்க ஆபீஸ் எப்படி இருக்குன்னுல்லாம் கேட்டுட்டிருந்தா?"

"நான் சொன்னேன் இப்படி இப்படியெல்லாம் இருக்கும்னு. அப்பதான் அவதான் இந்த ஐடியா கொடுத்தா" என்றான்.

"பிரில்லியண்ட் ஐடியா சார். நிச்சயமா இங்க வர்றவங்க பூராவும் கோஆஸ்வரங்க தான். பிடிச்சுப் போச்சுன்னா என்ன விலை வேணும்னாலும் கொடுத்து எடுத்துப் பாங்களே சார்" என்றான் சம்பத்குமார்.

"ஆமா சார்! வெரிகுட் ஐடியா நான் உடனே ஏற்பாடு பண்றேன்" என்றான்.

சம்பத்குமார் விடைபெற்றுப் போனதற்கு பின்பு அப்போதைக்கு அவன் மனத்திலே ஒரு தீர்மானம் செய்து கொண்டான். இந்த ஓவியத்தை தானே வரைவது என்று.

உமாகாந்தன் காட்டிய உற்சாகம் நெருடலாக இருந்ததோ. இல்லை இந்த பெண்ணிலுடைய குணங்கள் எல்லாம் போற்றுதலுக்குரியதான இருந்ததோ எது காரணமோ தெரியவில்லை. அவன் தானே வரையலாம் என்று முடிவெடுத்துக் கொண்டான்.

மறுபடியும் ஃபைலை திறந்தான். "அந்த ராகவன் யாராக இருக்கும்?" என்ற கேள்வி அவன் மனதிற்குள்ளே எழும்பி விஸ்வரூபம் எடுத்தது.

அத்தியாயம் -9

"முடியவே முடியாது! எனக்கு பாக்கெட் வச்சுத்தான் ஸ்கர்ட் வேணும்" என்று குதித்துக் கொண்டிருந்தாள் மகேஸ்வரி.

"ஏய் சொன்னா கேளுடி! யாருமே இந்த காலத்துல இப்படியெல்லாம் ஸ்கர்ட்டுல பாக்கெட் வச்செல்லாம் இது பண்ணிக்கிறதில்லை."

"பாக்கெட் வெளியே தெரியக்கூடாது. ஆனா பாக்கெட் இருக்கணும் என்றாள். "நான் அந்தக் காலத்துல அத்தை வீட்டுல ஒரு பாவாடை இருந்துச்சு பார்த்தேன். அதனால எனக்கு தச்சுக் கொடுங்க" என்று ரகளை செய்தாள் மகேஸ்வரி.

அம்மாவும் அப்பாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். "ஆமா, நீ ஒரு பொண்ணு மாதிரி நடந்துக்கோடி" என்றாள் அம்மா.

"நான் ஒண்ணும் ஆட்டம் போடலை நான் துருதுருன்னு இருக்கிறேன்."

"என்னை வீட்டில அடக்கி வைக்கணும்னு நினைக்காதிங்க அதெல்லாம் அந்தக் காலம். பொண்ணுங்க ளெல்லாம் வீட்டுலதான் அடங்கிக் கிடக்கணும்னு நினைக்கறது" என்றாள்.

"அது சரி! அதுக்கு ஸ்கர்ட்ல வந்து பாக்கெட் வை இல்லைன்னா நான் வந்து பெல் வச்சுட்டு அடிப்பேன்கறே. இதெல்லாம் என்னடி" என்றாள் அம்மா.

"அதானே எனக்குப் பிடிக்குது. ஏம்மா பெண்கள்ன்னா இப்படிதான் இருக்கணும்னு ஏதாவது இருக்கா. நான் இப்படித்தான் இருப்பேன் ஐ வான்ட் டு பி ஃப்ரீ" என்றாள்.

"உன்னை கான்வென்ட்ல படிக்க வைச்சது பெரிய தப்பாப் போச்சு. எதுக்கெடுத்தாலும் இங்கிலீபீசு எடுத்து அவுத்து விட்டுரு."

அப்பாவுக்கு சிரிப்பு வந்தது.

அப்பாவும் மகளும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். "இத பாரும்மா! சொன்னா கேளுடா இப்படியெல்லாம் அடம் பிடிக்கக் கூடாது. இன்னும் நீ கொஞ்சம் பெருசாகப் போற பிள்ளை. ஏன் இப்படி யெல்லாம் பண்றே" என்றார்.

"நான் ஒண்ணும் பெரிசாவெல்லாம் ஆக மாட்டேன்" என்று கடுப்பாக சொல்லி விட்டு வெளியே ஓடினாள் மகேஸ்வரி.

"கிட்டத்தட்ட பையனை மாதிரி எல்லாம் பண்றாடி இவ." என்றார் சலிப்புடன் அப்பா.

"இருந்துட்டுப் போகட்டுங்க அவளுக்கு ரொம்ப செல்லங்கொடுத்தாச்சு அவள் அண்ணன் காரனும் சும்மா இருக்க மாட்டேங்கறான் அப்புறம் என்ன பண்றது?" என்றாள் அம்மா.

மகேஸ்வரி உற்சாகமாக வெளியே போனாள். எப்படியும் குழந்தைகளோடு விளையாடுவதுதான் வழக்கம் தான். ஆனால் பெண் குழந்தைகளோடு சேருவதே இல்லை அவளுக்கு ஆண் பிள்ளைகளோடு விளையாடுவது தான் பிடித்திருக்கிறது.

"எங்கயிருந்தோ இப்படி வந்திருக்கு" என்று அம்மாவும் அப்பாவும் திட்டினாலும் கூட அவள் காதிலே வாங்கிக் கொள்ள மாட்டாள்.

மூச்சரும் அப்படித்தான்! நேராக பையன்கள் விளையாடிக் கொண்டிருக்கின்ற இடத்திற்குப் போனாள்.

அவர்கள் குடியிருந்த இடம் ஒரு பெரிய காலனி.. சுற்றிலும் வீடுகள் நடுவிலே நிறைய இடம் இருந்தது.

அங்கே விளையாடுவதற்கு நிறையப் பேர் துணைக்கு இருந்தார்கள். ஆனால் பத்து ஆண்டுகளுக்கு முன்பு என்கிற போது அப்பொழுது குழந்தைகள் ஆண்களும் பெண்களும் ஒன்றாகத்தான் அந்தக் காலனியிலே விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

இன்னும் கம்ப்யூட்டர், செல்ஃபோன் இதெல்லாம் வந்திருக்கவில்லை. குழந்தைகள் எப்பொழுது பார்த்தாலும் டி.வி.முன் உட்கார்ந்து கொண்டிருக்கிற பழக்கம் அதிகரித்திருக்கவில்லை. குறைந்த பட்சம் அந்தக் காலனியில் அந்த வழக்கம் இல்லாதிருந்தது.

குழந்தைகள் வெளியே ஆசையாக விளையாடுவார்கள். பெற்றோர்களும் அதை அனுமதிப்பார்கள்.

ஒரு பத்தாண்டுகள் வரையிலும் மகேஸ்வரி சாதாரண மாகத்தான் இருந்தாள். ஆனால் அதற்குப் பிறகு அவளுடைய குணங்களிலே பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன.

ஜான்சி ராணி போன்ற வீராங்கனைகளின் கதைகளைத் தான் படிப்பாள். படித்து விட்டு அம்மாவிடம் சொல்லுவாள் "அம்மா, இவங்களெல்லாம் பாருங்க ஆம்பளைங்களை மாதிரிதான் இருந்திருக்காங்க. பொம்பளைங்கன்னா பொட்டிப் பாம்பா இருக்கணும்னு என்ன இருக்கு. நான் அப்படியெல்லாம் இருக்க மாட்டேன்" என்று வாயடிப்பாள்.

"சரி உனக்கு என்ன புடிக்குதோ செஞ்சுக்கோடி. எல்லாம் கொஞ்ச நாள்தான் அதுக்கப்புறம் ஒழுங்கா இருக்கணும் தெரியுமா."

"என்ன ஒழுங்கா இருக்கணும். இந்தக் காலத்துல பாருங்க எல்லாரும் சுடிதார் போட்டிருக்காங்க. ஜீன்ஸ் போட்டிருக்காங்க நானெல்லாம் அப்படித்தான் உடுத்துவேன்."

"என்ன?! பாவாடை தாவணி உடுத்து. ஸ்கெர்ட் பிளவுஸ் போடுன்னா எல்லாம் மாட்டேன் என்று சொல்லுவா.

"சரி அவளுடைய ரசனை அப்படி இருக்கிறது" என நினைத்தாற்போல பெற்றோர்களும் அவளுக்கு ஜீன்ஸ் ஷர்ட் என்றும் வாங்கிக் கொடுப்பார்கள்.

தலைபின்னி அலங்காரம் செய்து விடுகிறேன் என்றால் அவளுக்கு பிடிக்காது. "நான் முடியை ஷார்ட்டா வைத்துக் கொள்ளப் போகிறேன்" என்பாள் அம்மாவிடம்.

"முடி அழகா இருக்குடி. நீளமா நல்லா அப்படியே நெளிஞ்சு நெளிஞ்சு பாக்கறதுக்கே அழகா இருக்கு. இதை ஏன் கெடுத்துக்கணும்னு நினைக்கறே?" என்றாள் அம்மா.

"இது ஒண்ணும் கெடுத்துக்கறது இல்லை. நான் அழகு படுத்திக்கிறேன். எதுக்கு கூந்தலெல்லாம் காமிச்சுட்டு அதை வைச்சுட்டு ஆண்களை அட்ராக்ட் பண்ணிட்டிருக் கணுமா?" என்றாள் பதினாறு வயதிருக்கும்போது.

அம்மா அதிர்ந்து போனாள் "என்னடி பேசற நீ?" என்று அடிக்கவும் கூட போய்விட்டாள்.

"போம்மா, நீ!" என்று கையை ஆட்டி விட்டு வெளியே ஓடி விட்டாள்.

அவர்கள் அப்போதெல்லாம் அதை பெரிதாக எடுத்துக் கொள்ள வில்லை.

ஒன்றிரண்டு ஆண்டுகள் ஓடியது. மகேஸ்வரிக்கு தன் மனதில் ஏற்பட்டுக் கொண்டிருக்கக் கூடிய மாற்றங்கள் மெல்ல புரிந்தது. அவளுக்கு ஏனோ பெண்களுக்கு நடுவிலே இருப்பதற்கு பிடிக்கவேயில்லை. அவள் பெண்கள் இருக்கும் இடங்களில் அவள் அமரவும் மாட்டாள்.

அத்தை வீடு, மாமா வீடு என்றெல்லாம் உறவினர்கள் வரும்போதும் சரி இவர்கள் போகும்போதும் சரி அவர்கள்

ஒத்த வயதுடைய பையன்களோடுதான் விளையாடிக் கொண்டிருப்பாள்.

உடல் நிலையிலும் பெருத்த வித்தியாசம் இல்லை என்பதாலும் யாரும் அதை பெரிதாக எடுத்துக் கொள்ள வில்லை ஆனால் அவளுக்குள்ளே ஒரு பெரிய எரிமலை போல எண்ணங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக் கிறது. என்பதையும் உள்ளுக்குள்ளே ஏதோ பிரச்சினைகள் துவங்கி இருப்பதை என்பதையும் பெற்றோர்கள் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் அவளுடைய சகோதரன் புரிந்துகொண்டான்.

மூத்த சகோதரன்!

அவளைக் கவனித்துக் கொண்டிருந்தான். அவ்வப்போது கவனிப்பான். தங்கையின் மீது அளவு கடந்த பிரியம். அவளுக்குத் தேவையானதையெல்லாம் அவன் தான் வாங்கிக் கொடுப்பான்.

"சரி! புரட்சிக்காரப் பெண்மணியாக வருவாள் போலிருக்கிறது" என்று சிரித்துக்கொள்வான். ஆனால் அவளுக்கு கீழே இருந்த சகோதரியோ நேர்மாறாக எல்லாப் பெண்களையும் போல பெண்களோடு பழகுவது கோலம் போட்டு பழகுகிறேன்.

அதைசெய்கிறேன், சமையல் செய்கிறேன் இதைச் செய்கிறேன் என்று கொஞ்சம் கொஞ்சமாக அந்த மனப்பான்மையோடு வளர்ந்தாள்.

மகேஸ்வரியோ நேர்மாறாக இருந்தாள். "என்னை சாப்பாடு ஆக்குன்னெல்லாம் சொல்லாதே. ஐ வான் டு பி கம் அன் இன்ஜினியர்" என்பாள்.

"ஏண்டி இன்ஜினியர் ஆனா சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவே?" என்பாள் அம்மா.

"சமைக்கறதுக்கு ஆள் போட்டுப்பேன்" என்பாள்.

"அதெல்லாம் போகப் போக ஆளே கிடைக்காதுடி. நாமே செஞ்சு பழகிக்கிறது தான் நல்லது. ஃபாரின் போறேன்னு சொல்றியே அங்க போனா செல்ஃபா தான் பண்ணிக்கணும் தெரியுமா?" என்பான் சகோதரன்.

"அங்கே எல்லாத்துக்கும் மிஷின் இருக்கு" என்பாள். "என்னத்துக்கு மிஷின் இருக்கு" என்றான்

"ஆமா துவைக்கறதுக்கு மிஷின் இருக்கு. டிஷ்வாஷிங் குக்கு மிஷின் இருக்கு. அப்புறம் குக்கிங்குக்கு எல்லாமே இருக்கு. ரைஸ் குக்கர் அது இதுன்னு இருக்கே. அப்படி சமைத்துக் கொள்வேன் எனக்கு ஒண்ணும் வெரைட்டி தேவையில்லை" என்பாள்.

"போடி உங்கிட்ட எவன் பேசுவான்!" என்று எழுந்து போய்விடுவான் சகோதரன்.

தேடித்தேடி எடுத்து சகோதரனுடைய உடையை எடுத்து டெய்லரிடம் கொடுத்து தனக்கேற்ற வகையிலே திருத்தி அமைத்து அணிந்து கொள்ளுவாள்.

"அண்ணா, உன்னோட செலக்ஷன் சூப்பர்ண்ணா" என்பாள்.

"இப்ப என் சட்டை பேண்ட் எல்லாம் எடுத்துக்கறே ஓ.கே.! உன் செலக்ஷன் சூப்பர்னுட்டு நாளைக்கு நான் செலக்ட் பண்ற பொண்ணுக்கிட்டயும் நீ போட்டிக்கு வந்துற மாட்டியே" என்று அவன் கேலி செய்வான்.

"நான் எதுக்குன்னா நீ செலக்ட் பண்ற பொண்ணுக்கிட்ட போட்டிக்கு வரேன்" என்பாள்.

எல்லாமே விளையாட்டாக எடுத்துக் கொண்டார்கள்.

எல்லாமே விளையாட்டாகத்தான் போய்க் கொண்டிருந்தது.

ஒரு நாள் அந்த விபரீதம் நிகழும் வரை!

அன்றைக்கு எல்லோரும் ஏதோ விசேஷத்திற்கு போய் விட்டு வந்து கொண்டிருந்தார்கள்.

மகேஸ்வரி மட்டும் வீட்டிலே இருந்தாள். "ஏம்மா நீ வரலையா?" என்று கேட்டான் சகோதரன்."

"போண்ணா நான் வரலை ஆரம் மாட்டிக்கோ, நெக்லஸ் மாட்டிக்கோ பட்டுப் புடவை கட்டு பாவாடை கட்டும்பீங்க எனக்கு அதெல்லாம் பிடிக்காது."

"சரி! வேணாம். பட்டுச் சுடிதார் இருக்குல்ல. அதைப் போட்டுக்கயேன். சிம்பிளா ஏதாவது ஒரு சரமா ஒரு செயின் போட்டு வாயேன்" என்றான் சகோதரன் புரிந்து கொண்டவன் போல.

"இல்லைண்ணா. எனக்குப் புடிக்கலை. நான் வரலை" என்றாள்.

"ஏம்மா, வெளிய வந்து பழகணும்மா? மிங்கிள் ஆகணும்மா? என்றான்' அவன் கவலையுடன்.

"மிங்கிள் ஆகறதுக்கு இவ இருக்கால்ல. இவளை கூட்டிட்டுப் போ! அங்க போய் பொம்பளைங்க நடுவில உட்காரும்பீங்க. அவங்க பூரா உட்கார்ந்துட்டு ஊர் வம்பே பேசுவாங்க. ஏய், அந்த வீட்டு கமலா என்ன ஆனா தெரியுமா? இந்த வீட்டு விமலா என்ன ஆனா தெரியுமான்னு" என்று கேலியாக கன்னத்தில் கையை வைத்து நடித்துக் காட்டினாள்.

சகோதரன் சிரித்தான்.

"லொள்ளுடி உனக்கு" என்றான்.

"இதப்பாருண்ணா! இனிமே எங்கிட்ட வாடி போடின்னு பேசாதே வாடா போடான்னு பேசு" என்றாள்.

"ஓ.கே. இதுல என்ன?! செல்லமா வாடா போடான்னு கூப்பிடணுமா கூப்பிட்டா போச்சு. அப்ப நீ என்னை என்னன்னு கூப்பிடுவே 'டூ'ன்னு கூப்பிடுவியா பல்லை உதிர்த்து திடுவேன்" என்றான்.

"நானும் உன்னை டா போட்டுத்தான் பேசுவேன்." "கொன்னேபோடுவேன். மரியாதை கொடுத்து மரியாதை வாங்கிக்கணும்" என்றான் சகோதரன்.

"ஓ.கே. ஓ.கே. நான் உனக்கு மரியாதை கொடுக்கறேன். ஆனால் நீ என்னை வாடி போடின்னு பேசக்கூடாது. டா தான் போட்டுப் பேசணும்" என்றான்.

சில வீடுகளில் குழந்தைகளை டா போட்டு பேசுவதை அவன் பார்த்திருக்கிறான். பெண் குழந்தைகளிடம் டா போட்டு பேசுவார்கள். "சரி அவளுக்கு அப்படித்தான் பிடிக்கிறது போல என்று சரி டா இதிலென்ன, நீ பெரிய டா அவ்ள் சின்ன டா" என்றான்.

"அவ கிட்ட என்னமோ பேசிக்கோ ஐ டோன்ட் லைக்." என்றாள் மகேஸ்வரி.

"சரி, சரி, விடு, ஒண்ணும் ஓரி பண்ணிக்காதே இதெல்லாம் பெரிய விஷயமா" என்று சொல்லி விட்டுச் சென்றான் சகோதரன்.

அப்பாவையும் அம்மாவையும் டாக்ஸியில் ஏற்றி விட்டு இளைய சகோதரியையும் மற்ற மூவரையும் டாக்ஸியில் அனுப்பிவிட்டு அவன் பின்னாலே பைக்கிலே போனான்.

புறப்படும் போது அம்மா கேட்டாள் "ஏண்டா நீயும் வந்துர வேண்டியதுதானே? இல்லம்மா, நான் ஃபுல்லா அங்க இருக்க முடியாது."

"நான் ஒன் அவர் இருந்துட்டு திரும்பி வந்து விடுவேன் எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு" என்றான் மூத்தவன்.

"சரி அப்படித்தான் ஆகட்டும்!" என்று சொல்லிவிட்டு கிளம்பினார்கள்.

டாக்ஸி பாதி தூரம் போனவுடனே திரும்பி வந்தது. எதிரிலே பைக்கில் போய்க் கொண்டிருந்த மகன் நிறுத்தி "என்னம்மா விஷயம்" என்று கேட்டான்.

"டேய் கிப்டை வீட்டிலே வைத்து விட்டு வந்துட்டேன்டா"

"சரி அதுக்கு டாக்ஸியை போட்டுட்டு போகாதீங்க எக்கச்சக்கமா கேப்பாப்ல. நீங்க போங்க. நான் போய் எடுத்துட்டு வர்றேன்."

"எங்க வச்சிருக்கீங்க?" என்று கேட்டான். "பீரோவிலே மேல் தட்டுல வைச்சிருக்கேன்டா. போய் எடுத்துட்டு வந்துரு" என்றார் அம்மா. "சரிம்மா"

"எதுக்கும் அவளை வீட்டை நல்லா பார்த்துக்கச் சொல்லுடா அவ விளையாடிட்டு இருப்பா கேர்ஃபுலா இருக்கச் சொல்லு" என்றாள் அம்மா.

"சரிம்மா சும்மா அவளை ஏதாவது ஒரு குறை சொல்லிட்டு...!"

"இல்லை அது என்ன புள்ளையாட்டமா நடந்துக்குது பையனை மாதிரி ஆடுது" என்றாள் அம்மா அந்த நேரத்திலும் கூட.

"ஓ.கே.ம்மா டாக்ஸி வெயிட்டிங். போங்கம்மா" என்று அனுப்பிவிட்டு பைக்கை எடுத்துக் கொண்டு வந்தான். நான்கைந்து கிலோ மீட்டர் தூரம் போயாகிவிட்டது.

இதற்கு...! இதற்குத்தான்... முதலிலேயே எடுத்து வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுவது" என்று மனதுக்குள் கோபம் கூட வந்தது. சரி, இனி கோபப்பட்டு ஆகப்போவது என்ன? போய் எடுத்துக் கொண்டு வரலாம்" என்று பைக்கை எடுத்துக் கொண்டு திரும்ப வந்தான்.

காலையில் போவதாக இருந்தாலும் கூட காலையில் எடுத்துக் கொண்டு போய் விடலாம். மறுநாள் காலையில் வேறு ஏதோ கல்யாணத்துக்கு போக வேண்டும் என்று பேசிக்கொண்டிருந்ததை அவன் அறிவான்.

காலையிலே நடைபெறப்போகிற கல்யாணம். தூரத்து உறவினர் கல்யாணம் என்பதால் தான் வரவில்லை என்று சொல்லிவிட்டான். இது மிக நெருங்கிய உறவினர் வீட்டு கல்யாணம் மாப்பிள்ளை வீட்டு ரிசப்ஷன் இப்பொழுது நடந்து கொண்டிருந்தது.

கல்யாணத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகவே அம்மாவும், அப்பாவும் ஊருக்குப் போய் விட்டு வந்தார்கள்.

இப்பொழுது ரிஷப்ஷனுக்கு தானும் வரவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தியதனால் அவனும் கிளம்பியிருந்தான்.

வீட்டிற்கு திரும்பி வந்தாகிவிட்டது. கதவை லேசாகத் தள்ளினான். திறந்து கொண்டது.

"அய்யய்யோ! கதவு திறந்திருக்கே. இவ என்ன பண்றா என்று முணுமுணுத்துக்கொண்டே வந்தான்.

நேராக போய் பீரோவைத் திறந்து மேல் தட்டில் இருந்த கிஃப்டை எடுத்துக் கொண்டான். அம்மா அப்பாவின் அறையில் இருந்த பீரோவில் அது இருந்தது.

திரும்பி வரும் போது தான் கவனித்தான். தன்னுடைய அறையிலே சகோதரி ஏதோ செய்து கொண்டிருந்தாள்.

தான் இருக்கும் போது தன்னுடைய அறைக்கு சட்டென்று யாரும் வரமாட்டார்கள். 'இவள் என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்று எட்டிப் பார்த்தான். அவனுடைய அறையிலும் ஒரு பீரோ இருந்தது.

அந்த பீரோவிலும் ஒரு நீளமான கண்ணாடி இருந்தது. அதற்கு முன்பாக நின்று கொண்டு அவள் முகத்திலே லேசாக மீசை வரைந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

சகோதரனுக்கு ஏதோ மாதிரி இருந்தது. 'என்ன செய்கிறாள் இந்தப் பெண் என்று போய்' ஏய் என்னடி பண்றே?' என்றாள்.

அவள் திரும்பி அலட்டிக் கொள்ளாமல் பார்த்தாள். "இன்னைக்குத்தானே சொன்னேன். டி போடாத டா போட்டு பேசு" என்றாள்.

"சரி டா என்ன பண்ணிட்டு இருக்கேடா" என்றான்.

"மீசை வரையறேன்" என்றாள்.

"ரொம்ப அவசியம், இப்ப எதுக்கு உனக்கு மீசை என்று?" கேட்டான்.

"எதுக்கு மீசை? ஆசையா இருக்கு! வரையறேன். உனக்கு ஆசையா இருந்தா நீ கூட பின்னல் போட்டு முடி வளர்த்துக்கோ" என்றாள்.

"அய்யய்யோ, இவளோட பெரிய கூத்து" என்று தலையில் அடித்துக் கொண்டு "அம்மா அப்பா வர்றதுக்குள்ள மீசை

கசையெல்லாம் ஒழுங்கா அழித்து விட வேண்டும். ஆமா. அவங்க பார்த்துட்டு ஷாக் ஆகிடுவாங்க. ஏண்டி இப்படி கேனத்தனமா பண்றே" என்று திட்டி விட்டு வண்டியில் ஏறி கிளம்பிப் போனான்.

கிளம்பிப் போய்க் கொண்டிருக்கையிலேதான் அவனுக்கு அந்த சிந்தனை தோன்றியது. சமீபகாலமாக சகோதரியின் நடத்தையில் பெருத்த மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறாற் போல தோன்றியது.

அவள் நடை உடை பாவனைகளில் கூட பெரிய அளவில் மாற்றம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்று தோன்றியது.

'ஒருவேளை அப்படி இருக்குமோ?' என்ற எண்ணம் தோன்றியவுடன் அவன் பைக்கை ஒரு ஓரமாக நிறுத்தினான் அதிர்ந்து போனாற்போல கொஞ்சம் சிந்தித்தான்.

'சேச்சே! அப்படி இருக்காது' என்று மீண்டும் தலையை உலுக்கிக் கொண்டு வண்டியை எடுத்தான். அது அப்படித் தான் இருக்கப் போகிறது என்பது அப்போது அவனுக்குத் தெரியவில்லை.

அத்தியாயம்- 10

'வல்லபி, வல்லபி' என்று அழைத்துக் கொண்டே உள்ளே நுழைந்தான் சம்பத் குமார்.

அண்ணா என்று பதில் குரல் கொடுத்துக் கொண்டு தனது அறையில் இருந்து வெளியில் வந்தாள் வல்லபி.

"பாரும்மா நீ கேட்ட மாதிரி ஃபிரேம் பண்ணிக் கொண்டு வந்துட்டேன்.' என்று அந்த பெரிய பிரேமை நீட்டினான். வல்லபி அதை ஆசையுடன் வாங்கிக் கொண்டாள்.

"தாங்க்ஸ் அண்ணா தாங்க்ஸ்!" என்றாள்.

"இதுக்கு எதுக்கும்மா தாங்க்ஸ்" என்றான்.

"இல்லைண்ணா. எல்லாத்துக்கும் தான் தாங்க்ஸ்" என்றாள்.

"எல்லாத்துக்கும்னா?" என்று அவன் குறுகுறு என்று பார்க்க. "இல்லை, நீ மெனக்கெட்டுப் போய் அந்த சத்யப்பிரகாஷ் கிட்ட பேசியிருக்கே. நீ கொடுத்த ஐடியா வாலதான் அவர் யோசிச்சுப் பார்த்து சரி அப்ரிசியேட் பண்றவங்க கிட்டதான் இருக்கணும் அப்படின்னு நினைத்து எனக்கு இந்த பெயிண்டிங்கை கொடுத்தாரு" என்றாள்.

"இதென்னம்மா விஷயம். ஆக்சுவலா என்ன தெரியுமா அந்தப் பெரிய மில் ஓனர் வந்து அவருடைய ஆபீஸ் வெயிட்டிங் ரூம்ல மாட்டறதுக்காகத் தான் வாங்கினாராம்? அதுனால சத்யபிரகாஷுக்கும் உங்கிட்ட இருக்கிறதுல ரொம்ப சந்தோஷம்தான்."

"அப்படியாண்ணா பரவாயில்லையே உனக்கு ஐடியா தோணுச்சு இல்லே! இப்படி கேட்டா இப்படி நடக்கும் என்று ஐடியா உனக்கு வந்துச்சுல்லே. அதை நான் யோசிக்கணும்லே" என்றாள்.

"ஓ.கே. அப்படின்னா ஐடியா கொடுத்ததுக்கு, போயிட்டு வந்ததுக்கு, அப்புறம் இப்ப பிரேம் பண்ணிக் கொண்டு வர்றதுக்கு, இன்னும் ஆணி அடிச்சு உன் ரூம்ல மாட்டறதுக்கு எல்லாத்துக்குமா சேர்த்து ஒரு பெரிய தாங்க்ஸா கொடுத்துடு" என்றான்.

தங்கை அவனை குறுகுறு என்று பார்த்து சிரித்தாள்.

"என்னமோ கேட்கிற மாதிரி இருக்கு?" என்றாள்.

"நீ வழக்கமா செய்யிற அயிட்டம்ல ஏதாவது ஸ்பெஷலா இல்லே புதுசா ஏதாவது கண்டுபிடிச்சு எனக்கு ஏதாவது இன்னைக்கு ஈவினிங் வீட்ல ட்ரீட் கொடுத்துடு" என்றான்.

"ஓ.கே.ண்ணா! நோ ப்ராப்ளம் இன்னிக்கு வேண்டாம். வர ஞாயிற்றுக்கிழமை அன்றைக்கு ஒரு கிராண்டா விருந்து கொடுத்துடறேன்" என்றாள்.

"படா கானா" என்று சிரித்தான். "ஓ.கே. அப்புறம் என்ன அப்ப நல்ல இடம் பார்த்து அடிச்சிருவோம் இப்பவே" என்று அவனே, சுத்தி ஒன்றையும் ஆணி ஒன்றையும் எடுத்து வந்து அவளுக்கு விருப்பமான இடத்திலே மாட்டிக் கொடுத்தான்.

தன்னுடைய ரசனைகளை புரிந்துகொண்டு தனக்கு எல்லா விதத்திலும் ஒத்துழைக்கிற அண்ணனை அவள் வாஞ்சையுடன் பார்த்தாள்.

அவன் படத்தை மாட்டி விட்டு இறங்கி நின்று இந்தப் புறமாகவும், அந்தப் புறமாகவும் நின்று "சரியா இருக்காம்மா" என்று கேட்டான்.

"சரியா இருக்குண்ணா" என்றாள்.

அவன் திரும்பி தங்கையைப் பார்த்து சிரித்தான். "நானும் உனக்கு தாங்க்ஸ் சொல்லணும் தெரியுமா?"

"எதுக்குண்ணா?" என்றாள் அவள்.

"இல்லை உனக்காக ரெக்கமண்ட் பண்ணப் போயி எனக்கு ஒரு நல்ல ஃபிரெண்ட் கிடைச்சாரு."

"அப்படியா" என்று அவள் கேட்க.

"ஆமா, சத்யபிரகாஷ் சொல்லிட்டாரு சார். நீங்க டைம் இருக்கும்போது வாங்க நம்ம ரெண்டு பேரும் நல்ல பிரெண்ட்ஸா ஆகிக்கலாம்னு அப்படின்னு சொன்னாரு."

"அப்படியா இனிமே அப்ப அவரு நமக்கு ஃபேமிலி பிரண்டா?" என்றாள்.

"இப்போதைக்கு ஃபேமிலி பிரெண்டில்ல. நான் மட்டும் தான் பிரெண்டு" என்று அவன் கிண்டல் செய்ய "நீதானே ஃபேமிலியே நம்ம வீட்டுல ஃபேமிலியோட மையப் புள்ளியே நீதான்" என்றாள்.

"ஐஸ்ஸு... ஐஸ் வைக்காதே போதும்!" என்றான் அவன்.

"இல்லைண்ணா நிஜமாவே நீதான் மையப்புள்ளி" என்றாள் தங்கை நெகிழ்வுடன்.

"ஆமா, ஆமா அப்படி நெனைச்சுக்கணும். அப்பத்தான் ஆணி அடிக்கிறதெல்லாம் ஒரு திருப்தியா செய்ய முடியும். இல்லைன்னா ஆணி அடிக்கிற வேலையெல்லாம் நம்ம கிட்ட தள்றாங்க பாருன்னு நினைச்சுக்குவோம்ல" என்று சிரித்தான்.

"பார்த்தியா, நான் அடிச்சுக் கொடுக்கச் சொன்னேனா நீதானே ஆசையா அடிச்சுக் கொடுத்தே.

"அதான்மா மையப்புள்ளின்னு நினைச்சதாலேதான் அடிச்சேன்."

இரண்டு பேரும் சிரித்தார்கள்.

"அப்புறம் எனக்கும் சத்யபிரகாஷுக்கும் காமனா ஒரு ஜட்டம் இருக்கு தெரியுமா?" என்றான்.

"என்னது!" என்றாள் அவள் உற்சாகமாய். அதை அவரு தான் சொன்னாரு" என்றான்.

"அப்படியா என்ன சொன்னாரு?" என்றாள்.

"இல்ல அவருக்கு தம்பி மேல உசுரு எனக்கு சிஸ்டர்ஸ் மேல உசிரு. அவருக்கும் சிஸ்டர் பிரதர் மேல ரொம்ப அபக்ஷன் இருக்குமாட்ட இருக்கு. இந்த இரண்டு பேருக்கும் காமன் ஃபாக்டர் இருக்கா? அதனால...! இருக்கா? அதனால நாடக பாணியில் இழுத்தான். அதனால...! என்று.

தங்கை சிரித்தாள்.

பிறகு வாஞ்சையுடன் பார்த்தாள். "உண்மைதாண்ணா? எல்லாரும் சொல்லுவாங்க. ஒரு ஆணின் வளர்ச்சிக்குப் பின்னால ஒரு பெண் இருப்பாங்க அப்படின்னு. ஆனா எல்லாரும் சொல்லிக்கிறாங்க. உமாகாந்தனுடைய வளர்ச் சிக்குப் பின்னால சத்யபிரகாஷ்தான் இருக்காரு அப்படின்னு."

"அப்புறம் இன்னொரு விஷயம் சொல்லணுமே." என்றான் சம்பத் குமார் "என்னது?" என்று கேட்டாள் அவள் மறுபடியும்.

"உன்னோட ஐடியாவுக்கு சத்யபிரகாஷ்கிட்ட ஏகப்பட்ட வரவேற்பு."

"எந்த ஐடியா?"

"அதான் நீ சொன்னியே அவரோட ஆபீஸ் பெரிசா இருக்குன்னு சொன்னவுடனே அங்கே கூட ஒரு ஷோக்கேஸ் வைத்து உமாகாந்தனோட படத்தையெல்லாம் வைக்கலாம்னு. அந்த ஐடியா சொன்னேன். ஹி இஸ் ஸோ ஹாப்பி."

"அதுக்குள்ளே போய் சொல்லிட்டியா?"

"ஆமா! நல்ல விஷயம் கிடைச்சா உடனே சொல்லிடணும். டைம் பார்க்கக் கூடாது அதான் சொல்லிட்டேன்" என்றான்.

"அப்படியாண்ணா அவருடைய ஆபீஸ் பெரிய ஆபீஸா என்றாள்."

"கிட்டத்தட்ட இருபது சென்ட். நிறைய கார்கள் வந்துட்டும் போயிட்டும் இருக்குது. நல்ல காசு கொழிக்கிற பிசினஸ் தான்"

"அப்படியா?" என்றாள்.

"ஆமாம்மா கார் ஃபிரெஷ்னிங் சென்டர்னு வைச்சுட்டு இந்த கார்களை யெல்லாம் மாடர்னைஸ் பண்றது. இம்ப்ரூவ் பண்றது. அந்த மாதிரி ஏதோ பண்றாரு. பெரிய பெரிய கோடீஸ்வரங்க எல்லாம் வந்து இந்த காரை ப்ரெஸ்டீஜுக் காகவே வைச்சிருப்பாங்க, பார்த்தியா. அவங் களெல்லாம் லேட்டஸ்டா என்னென்ன ஃபிட் பண்ணிக்க முடியுமோ அதெல்லாம் ஃபிட் பண்ணிக்கிறாங்க. அவங்களுக்கும் செலவு வச்சிடறாரு. திருப்திப்படுத் திடறாரு. இவரும் காசு பார்த்திடறாரு" என்று சிரித்தான்.

"ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு ரசனை. ஏண்ணா?" என்றாள் அவள்.

"ஆமாம் பின்னே! அரியர் வாங்கிட்டுப் போய் பெயிண்டிங் வாங்கணும்னு ரசனை உனக்கு இருக்குல்ல அதுமாதிரி தான்" என்று அவன் சொல்ல.

"சுத்தி சுத்தி வந்துடுவியே. என்னை கிண்டல் பண்ணிடுவியே" என்றாள்.

"கிண்டல் பண்ணலைம்மா. நான் உண்மையைத்தான் சொல்றேன்."

"என்ன இரண்டு பேரும் ரொம்ப நேரமா மீட்டிங் போட்டுட்டிருக்கீங்க" என்று வந்தாள் நித்யா. "நாங்க பேசினா உனக்கென்னடி வந்தது?" என்றாள் வல்லபி.

"அம்மா ஏழிசை வல்லபி! இந்த சம்பத் குமார் உனக்கு மட்டும் அண்ணன் இல்லை, எனக்கும் அண்ணன் தான். என்கிட்டேயும் பேசலாம்" என்றாள் நித்ய கல்யாணி.

"சரிம்மா. உன் கிட்ட என்ன பேசணும். இன்னிக்கு ஹோம் ஒர்க் எல்லாம் முடிச்சிட்டியா?" என்று அவன் ஆரம்பிக்கவும். "இதுக்கு பேசவே வேண்டாம் என்று நான் போறேன்" என்று அவள் ஓடிவிட்டாள்.

இரண்டு பேரும் சிரித்தார்கள்.

"படிப்பைத் தவிர இவ கிட்ட எல்லாத்தையும் பேசலாம்" என்றான் சம்பத் குமார்.

"விட்டுருன்னா. அவளை ஏன் போட்டு கிண்டல் பண்ற" என்றாள் ஏழிசை வல்லபி."

"அம்மா கிண்டல் பண்ணினாதான் வீடு நல்லா இருக்கும் சீரியஸாவே பேசிட்டு இருக்க முடியுமா?" என்றவன் இன்னொரு விஷயம் கூட இருக்கு" என்று சொல்ல வந்தான்.

"என்னது?" என்று அவள் மறுபடியும் ஆர்வமாக, சற்று யோசித்தவன் போல "வேண்டாம் நான் சொல்லலை. அது சஸ்பென்ஸா இருக்கட்டும்" என்றான்.

மறுபடியும் கடகடவென்று சிரித்தான்.

"எதுக்குண்ணா சிரிக்கிறே?" என்றாள் வல்லபி.

"அது விஷயம் தெரியுமா? நீயும் கலா டீச்சரும், ஏதோ ராகவன் பற்றிப் பேசிட்டிருந்தீங்க போலிருக்கு 'பேச்சு

வாக்குல 'யாரு ராகவன்' என்று கேட்டார் என்றான் சம்பத் குமார்.

ஏழிசையின் வல்லபியின் முகம் சிவந்து போனது.

"அந்த விஷயம் அங்கே வரைக்கும் போயிருச்சா"

"அங்க நீங்கதாம்மா போய் சொல்லியிருக்கீங்க. நாங்க அவருகிட்ட சொல்லலை."

"நாங்க பேசிட்டிருக்கும் போது கேட்டிருப்பாரோ?"

"என்னன்னு தெரியலை. ராகவன் யாருன்னு கேட்டாரு." என்றான்.

அவளது முகத்தில் வெட்கம் படிந்தது.

சிவந்த முகத்துடன் "அண்ணா வேண்டாண்ணா. தயவு செய்து சொல்லாதே. அவரு எப்படி எடுத்துப்பாரோ? ஸ்கூல்லயே கொலிக்செல்லாம் கிண்டல் பண்றாங்க. அவரும் ஏதாவது தப்பா எடுத்துக்கப் போறாரு! என்றாள்.

"ஓ.கே.மா, வித் அவுட் யுவர் பர்மிஷன் நான் சொல்ல மாட்டேன்மா. நானே சஸ்பென்ஸ் அப்படின்னுதான் சொல்லிட்டு வந்திருக்கேன்."

"ஓ.கோ. அங்க ஒரு சஸ்பென்ஸ் இங்க ஒரு சஸ்பென்ஸா" என்றாள் வல்லபி.

"ஆமாம்மா. சஸ்பென்ஸ் வைக்கிறதுலயும் ஒரு சுவாரசியம் இருக்கு தெரியுமா? அதை வச்சுட்டு கொஞ்சம் கடுப்படிச்சுட்டு... கொஞ்ச நாள் வெயிட் பண்ண வச்சுட்டு... சொல்லி அதுக்கப்புறம் ஒரு சேஞ்ச் முகத்தில் வரும் பாரு. அதைப் பாக்கறதுக்கு ரொம்ப நல்லா இருக்கும்" என்றான்.

"என்ன ரொம்ப நல்லாயிருக்கும்?" என்று மறுபடியும் வந்தாள் நித்ய கல்யாணி.

"இதெல்லாம் இருக்கட்டும் அம்மா பஜ்ஜி போட்டு வச்சிருக்காங்க. வாழைக்காய் பஜ்ஜி...!"

"அப்படியா வெரி குட். வெரிகுட். நான் வரேன் சாப்பிடறதுக்கு." என்று ஆர்வமாக சம்பத் குமார் போனான்.

"அண்ணா ப்ரட் பஜ்ஜி அக்கா போட்டு வச்சிருக்கா" "எப்படியோ என்னையும் அப்பாவையும் வைத்து பரிசோதனை பண்றதுன்னு வச்சிட்டிங்க. என்னென்ன குடுக்கணுமோ குடுங்க. நாங்க சாப்பிடறோம்" என்றான் சம்பத் குமார்.

"அம்மாவோட கைப்பக்குவத்தை நீ கிண்டல் பண்ணுவியா?" என்றாள் வல்லபி உண்மையான கோபத்துடன்.

"அம்மாவை யாரும்மா சொன்னாங்க?" என்று அவன் நிறுத்த "அப்புறம் என்ன ஃபில்... இன் த பிளாங்க்ஸா அப்ப என்னைச் சொல்றியா?"

"என்னடா வம்பாப் போச்சு நல்லாயிருக்குன்னுதானே சொன்னேன்" என்று அவன் அப்படியே திருப்ப.

"உங்கிட்ட பேச முடியாதுண்ணா" என்றாள் வல்லபி.

"சரி, பேச வேண்டாம்! என்னை சாப்பிட விடுங்க" என்று அம்மா கொண்டு வந்த பஜ்ஜியையும் அதற்கு ஏற்ற தேங்காய் சட்னியும் வாங்கி ஒரு கட்டு கட்ட ஆரம்பித்தான் சம்பத் குமார்.

பஜ்ஜி அதுபாட்டுக்கு உள்ளே போய்க் கொண்டிருக்க அவன்மனதுக்குள்ளே ஒரு சிந்தனை தோன்றியது.

'மெயில் பண்ணச் சொல்லி கேட்டாரே இந்தப் படத்தை. மெயில் பண்ணலாமா வேண்டாமா என்ன. இருந்தாலும் ஒரு யங்ஸ்டர். ஒரு பொண்ணோட படத்தை அனுப்புங்க நான் வரைஞ்சு தரேன்னு கேட்கறாரு. குடுக்கலாமா வேண்டாமா?' என்று ஒரு போராட்டம் அவன் மனதுக்குள் தோன்றியது.

உடனே இன்னொரு மனது சொல்லியது. மனதில் களங்கம் இருந்தால் இப்படி ஒரு சொந்த சகோதரன் கிட்டே போட்டோ அனுப்ப கேட்பாரா, வேற எப்படியாவது தானே முயற்சி பண்ணியிருப்பாரு. நேரடியா ஒரு சகோதரன் கிட்ட போட்டோ அனுப்புங்க நான் அதை படமா பண்றேன்னு கேட்கும் போது அதிலே எந்த களங்கமும் இருக்கிற மாதிரி தெரியலை.

ஒரு படைப்பாளியினுடைய ஆர்வம்மாதிரிதான் இருந்தது. ஒரு வித்தியாசமான காட்சி கிடைக்கும் போது அதை ஏன் வரைபடமா நல்லா வரைஞ்சு தரக்கூடாது அப்படிங்கற ஆர்வம்தான் அதில இருக்கிற மாதிரி தெரியுது.

"ஒண்ணும் வருத்தப்படறதுக்கு இல்லை. தைரியமா செய்" என்று இன்னொரு மனது சொன்னது. அந்தப் படத்தை வரைந்து கொடுக்கும் பொழுது ஏழிசை வல்லபியின் முகத்தில் எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படும் என்பதை நினைத்துப் பார்க்கையிலே அவனுக்குள்ளேயும் மகிழ்ச்சி தோன்றியது.

ஏதோ யாரையோ வரைந்த படத்திற்கே அவ்வளவு ஆர்வமாக வாங்கிய தங்கை தன்னையே வரைந்த

ஓவியத்தை அவர் விரும்புகிற ஓவியர் கையில் இருந்து வரையப்பெற்றுக் கிடைக்குமானால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவாள்.

"தாராளமாக செய்யலாம். அவளுக்கு செய்ய வேண்டியதுதான். தப்பே இல்லை" என்று முடிவு எடுத்துக் கொண்டான்.

"பிறகு அம்மா எனக்கு கொஞ்ச நேரம் பி.சி.யில வேலை இருக்கு. டிஸ்டர்ப் பண்ணாதீங்க" என்று சொல்லிட்டு தன்னுடைய அறைக்குப் போய்விட்டான்.

முதல் வேலையாக செல்ஃபோனில் இருந்த அந்தப் படத்தை சத்யபிரகாஷுக்கு அனுப்பி வைத்தான். அதே நேரத்தில் சத்யபிரகாஷ் அந்தப் படத்தைப் பார்த்து விட்டு தனக்குள்ளாக ஒரு முடிவு செய்து கொண்டான்.

வீட்டிற்குச் சென்ற பிறகு அதற்கான ஏற்பாடுகளிலும் இறங்கினான்.

பல நாட்களுக்குப் பிறகு அவனது அறையிலே வரைவதற்கான போர்டும் ஸ்டாண்டும் தூசு தட்டி எடுக்கப்பட்டதோடு வரைவதற்கான பொருட்களையும் அவன் தயார் படுத்தினான்.

அந்த நேரத்திலே உள்ளே எட்டிப் பார்த்த மைதிலி, "அண்ணா, என்ன இது அதிசயம்."

"இல்லைம்மா, ரொம்ப நாளா ஆச்சு. ஏதோ ஒரு பிக்சர் கிடைச்சது அதை வரையலாம்னு பாக்கறேன்" என்றான்.

அதே நேரத்தில் உமாகாந்தன் உள்ளே நுழைந்து "வாட்ஸ் ஹேப்பனிங் அண்ணா" என்றான்.

"ஒண்ணும் இல்லை தம்பி நானே ஒரு படம் வரையலாம் டச் விட்டுப் போச்சு வரையலாம்னு பாக்கறேன்."

"தாராளமா செய். எந்தப் படம்?"

"அதாம்ப்பா உங்கிட்ட சொன்னேல்ல. அந்தப் பொண்ணு அந்த காக்கா நிக்கறது" என்று அவன் ஆரம்பிக்க உமாகாந்தன் வியப்புடன் அவனைப் பார்த்தான்.

"என்னையில்ல வரையச் சொன்னே?"

"உன்னை வரையச் சொன்னேன். சரி ரொம்ப நாளாச்சு ஏன் நம்மளே ட்ரை பண்ணக் கூடாது. அப்படின்னுட்டு நெனைச்சு" என்றான்.

"எனக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லை" என்று அலட்சியமாக தோளைக் குலுக்கினான் உமாகாந்தன்.

ஏனோ அவன் அலட்சியமாக தோளைக் குலுக்கிய நிமிடத்தில் தன் உள்ளத்தில் எல்லையற்ற நிம்மதி தோன்றியது போல உணர்ந்தான் சத்தியபிரகாஷ்.

தன்னுடைய மனப் போக்கு குறித்து அவனுக்கே ஆச்சரியமாகவும் இருந்தது.

கேலியாகவும் இருந்தது. இருந்தாலும்" ஓ.கே. நானே வரைஞ்சுக்கறேன். உனக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லையில்லே" என்றான்.

"எனக்கு என்னண்ணா ஆட்சேபணை? தாராளமா வரை அண்ணா." என்றான்.

மிகவும் ஆசையாக பொருட்களை எடுத்து வைத்து பெயிண்டிங்கை ஆரம்பித்த அண்ணனுடைய முகத்தை குறுகுறுவென்று சற்று நேரம் பார்த்தான் உமாகாந்தன்.

சத்யபிரகாஷ் உமாகாந்தன் தன்னைக் கவனிக்கிறான் என்று தெரிந்தவுடனேயே தன் முகத்தில் எந்த உணர்வையும் காட்டிக் கொள்ளாமல் இருக்க அரும்பாடு பட்டு விட்டான். ஆனால் பொங்கி வழிகிறது என்பார்களே, பானையில் பொங்கி வழிகிற மாதிரி அவனுடைய எல்லா அடக்குமுறையையும் மீறி அவன் முகத்தில் ஏதோ மின்னுவதை உமாகாந்தன் உணர்ந்து கொண்டான் போலும்.

லேசான புன்னகை அவன் மனத்திலே, முகத்திலே தோன்றியது. "சரி சரி நான் பக்கத்தில நின்னா என்னோட ஐடியா கொடுத்திட்டே இருப்பேன். அப்புறம் அது உன் படமா இருக்காது. என் படமா இருக்குமோ? நீ உனக்கு எப்படித் தோணுதோ அப்படி வரைண்ணா. அதுக்கப்புறம் வேண்ணா உனக்கு மாஸ்டர் ஒப்பினியன் கொடுக்கறேன்.

"அடேயப்பா! நீ எனக்கு மாஸ்டர் ஒப்பினியன் கொடுக்கறியா" என்று கேட்டு சிரித்தான் சத்யபிரகாஷ். "ஏன்? நான் உலகறிந்த ஓவியராக்கும்" என்றான்.

"நீ உலகறிந்த ஓவியரா இருந்தா என்னடா? உன்னை உருவாக்கின அண்ணனாக்கும் நான்."

அந்த நேரத்தில் உமாகாந்தன் முகத்தில் நெகிழ்ச்சி தோன்றியது.

"நிச்சயமாண்ணா அதிலே என்ன சந்தேகம் என்னை இந்த அளவுக்கு உருவாக்கி உட்கார வைச்சது நீதான். நீமட்டும் இல்லைன்னா" என்று ஒரு நிமிடம் உருகி நின்றான்.

"போதும் போதும் சென்டிமெண்ட் லெட் மி டு மை ஒர்க்" என்று பேச்சை மாற்றி விட்டான் சத்யபிரகாஷ்.

அதே நெகிழ்ந்த முகத்தோடு அங்கிருந்து மெல்ல நடந்தான் உமாகாந்தன்.

அத்தியாயம் - 11

தலைமை ஆசிரியர் தீவிரமான முகபாவத்தோடு அமர்ந்திருந்தார். எதிரிலே சத்யபிரகாஷ் அமர்ந்து கொண்டு இருந்தான்.

இடையிடையே யாரோ வந்து அவரிடம் பேசிக் கொண்டே இருந்தார்கள். ஃபோன் வேறு வந்தது. பல விதமான வேலைகளுக்கு நடுவிலே தன்னை பேச அழைத்திருக்கிறார் என்பது புரிந்தது.

"பாருங்க தம்பி ஆஃப்டர் ஸ்கூல் அவர் தான் கூப்பிட்டேன். இருந்தாலும் இன்னொரு டென் மினிட்ஸ்ல எல்லாம் ஒஞ்சுரும். அது வரைக்கும் வெயிட் பண்றீங்களா" என்றார்.

"ஓ.கே. சார். நோ ப்ராப்ளம். அது வரைக்கும் நான் வெளியில வெயிட் பண்ணட்டுமா?" என்றான்.

"இல்லை இல்லை நீங்க இங்கே உட்காருங்க அப்புறம் ஒர்க் லோட்ல நான் மறந்துடுவேன்" என்றார். அவனும் அங்கேயே அமர்ந்திருந்தான்.

கிளம்புகிற நேரத்தில் ஆசிரியர்கள் ஒவ்வொருவராக வந்து ஏதோ கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"இன்னிக்கு யாருக்கு ஸ்பெஷல் கிளாஸ்?" என்று ஒரு ஆசிரியரிடம் கேட்டார் தலைமை ஆசிரியர்.

அவர் ஏதோ பதில் சொன்னார் "அப்போ உங்களுக்கு இல்லையா நீங்க கிளம்புறீங்களா. ஓ.கே. ஓ.கே." என்று அனுப்பி வைத்தார்.

அதற்குள்ளாக மாவட்டக் கல்வி அலுவலகத்தில் இருந்து ஏதோ ஃபோன் வந்தது. "பர்டிகுலர்ஸ் அனுப்பிட்டோமே சார், நேத்தே அனுப்பிட்டோமே" என்றார்.

"ஒஹோ, வந்து சேரலையோ மெயில் பண்ணி யிருக்கேன் சார்" என்றார்.

அதற்கு அந்தப் புறம் என்ன பதில் சொன்னார்களோ தெரியவில்லை. "ஓ.கே. சார் நான் வேண்ணா ஹார்ட் காப்பி அனுப்பிவிடறேன்" என்றார்.

சத்யபிரகாஷ் அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தான்.

ஃபோனை வைத்து விட்டு திரும்பி அவனிடம் புன்னகைத்தார் "புள்ளி விவரம் கேட்டுக்கிட்டே இருப் பாங்க கொடுத்துக்கிட்டே இருப்போம். அப்புறம் தொலைஞ்சு போச்சும்பாங்க மறுபடியும் அனுப்புவோம் இதே வேலை தான்" என்று சிரித்தார்.

அவனும் தனக்கு தொடர்பு இல்லாதது என்பதால் முழுவதும் தெரிந்து கொள்ள முடியாமல் புன்னகைத்தான்.

"அப்புறம் தம்பி" என்று ஆரம்பித்தார்.

பள்ளி நேரம் முடிவடைந்து விட்டதால் குழந்தைகள் எல்லாம் புறப்படுகிற சந்தடியெல்லாம் ஓய்ந்து கொஞ்சம் அமைதியாக இருந்தது.

இந்தப் பெரிய மைதானத்தினுடைய அந்தக் கோடியிலே மாணவர்கள் விளையாடும் சத்தம் மட்டும்தான் கேட்டது.

"ஏய் விட்ராத புடி, புடி, டேய் டேய்" என்று வாலிபால் விளையாடுகிற மாணவர்களுடைய சத்தம் மட்டும் கேட்டது.

சத்யபிரகாஷ் எதற்காக இந்தப் பீடிகை என்பது போல அமர்ந்திருந்தான்.

'இல்லை இந்த உமா ஒழுங்கா படிக்கிறது இல்லையோ' என்று அவனுக்கு கவலையாக இருந்தது.

"தம்பி உங்க உடன் பிறப்பு பற்றி பேசணும்னுதான் கூப்பிட்டிருக்கேன்."

"அதான் தெரியுமே" என்று அவன் மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

அவன் நினைத்ததற்கு நேர் மாறாக தலைமை ஆசிரியர் ஒன்றிரண்டு நிமிடங்கள் பேசியதும் அவன் கொஞ்சம் திகைத்துப் போனான்.

"ஏன் தம்பி நீங்க இதை கவனிக்கவே இல்லையா?" என்று கேட்டார் தலைமை ஆசிரியர்.

"இல்லை சார்! எனக்கும் ஏதோ பொறி தட்டின மாதிரிதான் இருந்தது. கொஞ்சம் வித்தியாசம் தெரியுது. ஆனா இதெல்லாம் ஒரு பெரிய பிரச்சினையா நாம எடுத்துக்க முடியாதுங்கறதுனால தான் நான் அதுக்கு முக்கியத்துவம் கொடுக்கலை" என்றான்.

"நாங்களும் அப்படித்தான் நினைச்சோம். ஆனால் எப்படி சொல்றதுன்னே தெரியாமதான் இத்தனை நாள், கிட்டத்தட்ட ரெண்டு மாசமா முழித்துக் கொண்டிருக் கிறேன். நல்ல வேளையாக கோயெட் ஸ்கூலா போயிடுச்சு. பன்னிரண்டாம் வகுப்பு முடியறதுக்கு ரெண்டு மூணு மாசம் இருக்கு. பன்னிரண்டாம் வகுப்பு எப்படியாவது முடிச்சிரட்டும்" என்றார்.

அவன் நன்றியுடன் அவரைப் பார்த்தான். "ரொம்ப தாங்க்ஸ் சார்"

"ஆனால் இந்த பிரச்சினையை நீங்க தீவிரமா எடுத்துக் கணும். அதுக்கு என்ன பண்ணனும் ஏது பண்ணனும் நீங்க பார்க்கணும்."

"கண்டிப்பா சார், நீங்க தீர்மானமாவே சொல்றீங்களா?" "இல்லை தம்பி" எனக்குத் தெரியலை. நான் எல்லா வகுப்பிலேயும் எல்லா நேரத்துலையும் போய் உட்காருவது இல்லை. அங்க இருக்கிற டீச்சர்ஸ் கொடுக்கிற ஃபீட் பேக் தான் இது. நான் டீச்சர்ஸ் கிட்ட என்ன சொல்லியிருக் கேன்னா இது சைக்கலாஜிக்கல் ப்ராப்ளம் கூட அதனால இதை பெரிசா மத்தவங்க முன்னாடி விமர்சனம் பண்ணக் கூடாது அப்படின்னு அவங்களுக்கு எந்த அளவுக்கு இதைப் பத்தி ஒரு தெளிவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுத்திருக்கிறேன். இருந்தாலும் குழந்தைங்க, ஸ்டூடன்ஸ் மத்தியில கலாட்டாக்கள் இருக்குது" என்றார்.

சத்யபிரகாஷ் பெருமூச்சு விட்டான். "இருக்கத்தானே செய்யும்" என்றான்.

"எப்பவும் பசங்களோடதான் விளையாடுது. பசங்களோடதான் இருக்கு. ஒரு சில குழந்தைகள் வித்தியாசமா இருக்கும். பையனாட்டம் வளர்ப்போம்னு சொல்லுவாங்க. அதுமாதிரி இந்தப் பொண்ணு போயிட்டிருக்கு. அப்படிங்கறதுனால நான் கண்டுக்கறது இல்லை."

சத்யபிரகாஷ் அப்போதுதான் அந்தக் கேள்வியைக் கேட்டான். அதற்குத் தலைமை ஆசிரியரும் தனக்குத் தெரிந்த அளவிலே பதில் கொடுத்தார்.

"எதற்கும் நீங்க டாக்டர்கிட்ட பாக்கறது நல்லது. நாமளா அனுமானிச்சிட்டிருக்கிறது சரி வராது" என்றார்.

சத்யபிரகாஷ் நீண்டதொரு பெருமூச்சு விட்டுவிட்டு "கண்டிப்பா பாக்கறேன் சார். டாக்டர்ஸ் எந்த அளவுக்கு ஹெல்ப் பண்ண முடியும்?" என்று கேட்டான்.

"இல்லை! டாக்டர்ஸ் கைடன்ஸ் கொடுப்பாங்க. நாமளா பொத்தாம் பொதுவுல பண்றதை விட கண்டிப்பா டாக்டர்ஸ் கைடன்ஸ் வாங்கறது பெட்டர். இன்னொண்ணு என்னன்னா இதுல சோஷியல் பிராப்ளம்ஸ் இருக்கு. இது உங்க குடும்பத்துக்கு சோதனை காலம்தான். நீங்க அதைப் பார்த்து பொறுமையா டாக்கிள் பண்ணனும்."

சத்யபிரகாஷுக்கும் அது புரிந்தே இருந்தது. "இனி ஒவ்வொரு பக்கம் இருந்தும் வரப்போகிற கணைகள்... அதை சமாளிப்பதற்காக தனது குடும்பம் படப்போகிற வேதனை...! என்பதெல்லாம் அவனுக்கு புரிந்திருந்தது. ஆனால் எப்படியாவது சமாளித்து விடலாம் என்ற துணிவும் தோன்றியது.

"தம்பி நான் சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதீங்க. நீங்கதான் இருக்கிறதிலே கொஞ்சம் இளமையா இருக்கிறீங்க உங்க குடும்பத்துல. முதல் மகனும் கூட இந்தப் பிரச்சினையை நல்ல விதமா கையாளணும் அந்தக் குழந்தைக்கும் பாதிப்பு இருக்கக் கூடாது. பெற்றோருக்கும் சரியான முறையில புரிய வைக்கணும் என்றார்.

"சரிங்க சார்" என்றான்.

சொல்லி விட்டானே ஒழிய மலைபோல் தன் முன்னாலே நின்று கொண்டிருக்கிற அந்தப் பெரிய பொறுப்பை எப்படி எடுத்து எப்படி நிறைவேற்றப் போகிறோம் என்பது அவனுக்கு குழப்பமாகவே இருந்தது.

"நீங்க வேணா டீச்சர்ஸ்கிட்ட பேசுங்க. விஷயங்களை வாங்கிக்கங்க. அந்தக் குழந்தைகிட்டயும் பேசுங்க ஆனா அவகிட்ட பேசும் போது எந்த விமர்சனமும் பண்ணாம காயப்படுத்தாம அவங்க பக்கத்தில இருந்து யோசிச்சு அதுக்குத் தகுந்த மாதிரி டீல் பண்ணுங்க சார்" என்றார்.

"முயற்சிக்கிறேன் சார்."

"இல்லை தம்பி. நீங்க படிச்சவங்க நீங்க முயற்சிக்கிறேன்னு சொல்லக் கூடாது. கண்டிப்பா அப்படின்னு சொல்லணும். ஏன்னா இட் இஸ் நாட் கோயிங் டு பி அன் ஈஸி டாக். நீங்க ஒரு பெரிய பிரச்சினைய ஹேண்டில் பண்ணித்தான் ஆகணும். ஆனால் இதுக்கு பின்னால இருக்கிறது மனித மனங்கள். அந்தக் குழந்தையோட பிஞ்சு மனசும் பாதிக்காம. எப்படி டீல் பண்ணனுமோ பண்ணுங்க."

"இன்னொரு விஷயம் சொல்றேன். அந்தக் குழந்தையோட தவறு எதுவும் இல்லை. யாரையாவது கோவிச்சுக்கணும்னா கடவுளைத்தான் கோவிச்சுக்கணும் அவருதான் கன்வீனியண்டா எதிர்ல வரமாட்டாரே" என்றார் தலைமை ஆசிரியர்.

கசப்பான புன்னகை ஒன்று அவர் முகத்திலும் ஓடியது. அது சத்யபிரகாஷினுடைய முகத்திலும் பிரதிபலித்தது. சரிங்க தம்பி "இதை சொல்லிடலாம்னு தான் உங்களை வரச் சொன்னேன்" என்றார்.

சத்யபிரகாஷ் அப்போது அவரிடத்தில் தயங்கியபடி சார் "இதைக் கொஞ்சம் கான்பிடன்ஷியலா...! என்று இழுத்தான்.

"கண்டிப்பா! கண்டிப்பா! கான்பிடன்ஷியலா வச்சுக்கணும்னுதானே ஆப்டர் ஸ்கூல் அவர்ஸ்ல உங்களை

கூப்பிட்டு பேசறேன். டீச்சர்ஸ்க்கும் நான் சொல்லிட்டேன். எங்க டீச்சர்ஸ் ரொம்ப இன்டக்ரட்டி உள்ள டீச்சர்ஸ். அதனால கவலைப் பட வேண்டாம். எங்க அளவுல அந்தக் குழந்தைக்கு எந்தப் பாதிப்பும் இல்லாம காப்பாத்தி அனுப்பறோம். அதுக்கு பின்னாடி வரக் கூடிய விஷயங்களை நீங்க பாத்துக்கங்க."

"சரிங்க சார்! ரொம்ப தாங்க்ஸ் சார்!" என்று சொல்லிவிட்டு எழுந்தான்.

கிட்டத்தட்ட தளர்ந்த நடையுடன் தன்னுடைய அறையை விட்டுப் போகிற அந்த இளைஞனைப் பார்த்து அந்தத் தலைமை ஆசிரியர் பெருமூச்சு விட்டுக் கொண்டார்.

உமா படித்துக் கொண்டிருந்த பள்ளிக்கூடம் அது.

உமாவினுடைய நடத்தையிலே சமீபகாலமாக ஏற்பட்டுக் கொண்டிருந்த அந்த மாற்றங்கள் தான் இதற்கு காரணம். மகேஸ்வரி என்று அவளை வீட்டிலே அழைப்பார்கள்.

மகேஸ்வரி என்று இவன் ஆசையாக அழைப்பான். சின்னதிலிருந்த இவனோடு ஒட்டிக் கொண்டு திரிவாள்.

திடீரென்று அந்த சந்தேகம் அவனுக்குத் தோன்றிய போது மகேஸ்வரியினுடைய நடத்தையிலே பெருத்த மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன.

கிட்டத்தட்ட அந்த சந்தேகம் இப்போது உறுதியாகியது போல மனதிலே பட்டது.

தனக்கு மட்டுமே அந்த சந்தேகங்கள் வந்திருந்தால் குறுக்குப் புத்தி கிறுக்குப் புத்தி என்று தள்ளி விட்டிருக்கலாம். ஆனால் அவள் படிக்கிற பள்ளிக்கூடத்திலும் அப்படி ஒரு சந்தேகம் வந்திருக்கிறது. இனி எப்படி

பெற்றோர் களிடம் போய் சொல்லுவது என்று அவனுக்குப் புரியவில்லை.

அதற்கு முன்பாக உமாவிடம் பேசிவிடலாம் என்று நினைத்தான்.

அந்த நாள் உமாவிடம் "ஏய் உமா கோவிலுக்குப் போகலாம் வர்றியா?" என்றான்.

அதற்குள்ளாக மைதிலி ஓடிவந்து "நானும் வரேன் அண்ணா" என்றாள்.

"இல்லை இல்லை! இன்னிக்கு உமாவோட ஸ்கூல் ஹெச் எம் கூப்பிட்டு என்கிட்ட பேசினாரு. உமாவைப் பத்தி என்கிட்ட ரொம்பப் புகழ்ந்தாரு. அது உமாவுக்கு மட்டும்தான். உனக்குக் கிடையாது. உன்னை அடுத்த தடவை கூட்டிட்டுப் போறேன்."

மைதிலி பழித்துக் காட்டினாள். "சரிடி உனக்கு என்ன பார்சல் சொல்லு, வாங்கிட்டு வந்துடறேன்" என்றாள்.

உடனே மைதிலி "அப்படின்னா எனக்கு பாசந்தி அப்புறமா பால் அல்வா, அப்புறமா" என்று லிஸ்ட் போட ஆரம்பித்தாள்.

"ஏய்! இன்னிக்கு மட்டும் சாப்பிடற மாதிரி கேளு. ஒரு வாரமா வச்சு சாப்பிடற மாதிரி கேட்காதே" என்று கிண்டல் செய்தான் சத்தியபிரகாஷ்.

"ஓ.கே. அண்ணா ரவா தோசை வாங்கிட்டு வா அண்ணா. சரி எந்த ஓட்டல் போறீங்க" என்றாள்.

"நாங்க என்ன அன்னபூரணாவுக்குப் போவோம்."
"அப்படின்னா அங்க காலிபிளவர் ரோஸ்ட் நல்லா இருக்கும். அது வாங்கிக்குவியாம் ப்ரைடு ரைஸ்

வாங்கிப்பியாம்" என்று இரண்டு மூன்று ஐட்டங்களை சொன்னாள்.

சத்யபிரகாஷ் சிரித்துக் கொண்டான்.

"ஒரு பெரிய கூடையில் கொண்டு வந்து இறக்கறேன்."

"இறக்கு, நான் மட்டுமா சாப்பிடுவேன் அம்மா, அப்பா ஏன் இவள் கூட இரண்டாவது தடவை சாப்பிடுவாள்."

சத்யபிரகாஷ் சிரித்தான். "சரி சரி வாயடிக்காதே" என்று ஒரு வழியாக உமாவை அழைத்துக் கொண்டு போனான்.

சொன்ன விதமாக உமாவை அவன் ஹோட்டலுக்கு அழைத்துப் போகவில்லை. நேராக ஒரு பார்க்குக்கு அழைத்துப் போனான்.

"என்னண்ணா பசிக்குதுண்ணா நீ இங்க கூட்டிட்டுப் போறே. ஹோட்டலுக்கு கூட்டிட்டுப் போறேன்னே"

"இங்க ஒரு அரை மணி நேரம் பேசிட்டு போகலாம்."

உமா அவனை ஆச்சரியமாக பார்த்தாள்.

"உனக்கு என் கூட பேசறதுக்கு நேரமே இருக்காதே? இப்ப மட்டும் நேரம் கிடைச்சதா."

பேசும் போது அவன் கையை ஆட்டி ஆட்டி பேசுகிற விதத்தை அவன் கூர்ந்து கவனித்தவுடன் அவன் கையை 'டக்' கென்று நிறுத்திக் கொண்டான்.

பார்க் பெஞ்சில் அமர்ந்தார்கள்.

"உமா, நான் ஒரு விஷயம் கேட்கப் போறேன். உண்மையா சொல்லணும்" என்றான்.

அவள் அவனை ஆச்சரியமாக பார்த்தாள்.

"உனக்கு இந்த மீசையெல்லாம் வரைஞ்சுக்கணும்னு தோணுதா" என்று கேட்டான்.

அவள் ஆர்வமாக "ஆமாம் ரொம்ப இன்ரஸ்ட்டா இருக்கு."

"வேற என்னவெல்லாம் இன்ஸ்ட்ரஸ்ட் சொல்லு."

"நீ அம்மா, அப்பா கிட்ட சொல்ல மாட்டேல்ல" என்று கேட்டான்.

"சொல்ல மாட்டேன் சொல்லு" என்றான்.

அதற்குப் பிறகு அவள் போட்ட பட்டியலைப் பார்த்து அவன் அதிர்ந்தே போனான்.

நிச்சயமாக இதில் ஏதோ விஷயம் இருக்கிறது. என்று தோன்றியது.

"பள்ளிக் கூடத்தில் இப்படியெல்லாம்தான் பண்ணிக் கிட்டிருக்கியா. அதுக்குத் தான் ஹெச் எம் என்னை வரச் சொன்னாரு தெரியுமா?" என்றான்.

அவள் திகைத்துப் போய் பார்த்தாள்.

"பாரு உமா உள்ளதை சொல்லு! இதிலே உன் தப்பு எதுவுமே கிடையாது. உன்னுடைய பிரச்சினை என்னன்னு சொன்னா தான் நாங்க ஹெல் பண்ண முடியும்."

சத்யபிரகாஷின் குரலில் இருந்த அன்பு அவளை அசைத்தது போலும். தன்னுடைய பிரச்சினையை முழுவதுமாக விரித்து வைத்தாள். அவனும் அதை ஆழ்ந்து வாங்கிக் கொண்டான்.

"சரி இதோட விடு" என்று சொல்லி விட்டு ஹோட்டலுக்கு அழைத்துப் போய் அவளுக்கு பிரியமானதை எல்லாம் வாங்கிக் கொடுத்தான்.

தனக்கு நேர்ந்தது என்ன நேர்ந்து கொண்டிருக்கிறது என்பது புரியாமலேயே அவள் விளையாட்டுத் தனமாய் பேசிக் கொண்டிருந்தாள்.

அவனும் அதை விளையாட்டுப் போலவே கவனித்துக் கொண்டிருந்தான். ஆனால் உள்ளே ஒரு பெரிய எரிமலை புகைந்து கொண்டிருந்தது.

பெற்றோர்களிடம் அதில் கொஞ்சத்தை அவன் கொட்டிய பொழுது அவர்கள் அந்த எரிமலைக்குள்ளே சிக்கிக் கொண்டவர்கள் போல துடிதுடித்துப் போனார்கள்.

அத்தியாயம் - 12

கதறிக் கதறி அழுகிற அம்மாவையும் கலங்கிப் போய் அமர்ந்திருக்கிற அப்பாவையும் கையாலாகத்தனத்தோடு பார்த்தான் சத்தியபிரகாஷ்.

நிலைமையை புரிய வைக்கும் போது இது மாதிரியான சோதனைகள் எல்லாம் வரும் என்பது அவன் எதிர்பார்த்ததுதான். ஆனால் நேரடியாக அவைகளைச் சந்திக்கும் போது அவனே கொஞ்சம் கலங்கித் தான் போனான்.

குடும்பத்தையே புரட்டிப் போடக் கூடிய இந்தப் பிரச்சினையை நாம் எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்பதும் அவனுக்கு ஒரு பெரிய கேள்விக்குறியாக இருந்தது.

"என்னடா சொல்றே! என்னால நம்பவே முடியலையே! என் வயித்துல இப்படி ஒரு குழந்தையா" என்று தலையிலடித்துக் கொண்டு அம்மா அழுதாள்.

பதறிப்போய் அவன் பிடித்துக் கொண்டான். நல்ல வேளையாக இப்படி அமர்ந்து பேசும் பொழுது மைதிலியை அவன் கூட அமர்த்திக் கொள்ள வில்லை.

அவளுக்கு அவளுடைய வயதுக்கு ஏற்ற வகையில் தனியாக சொல்லி புரிய வைக்க வேண்டும் என்பது அவனுக்குப் புரிந்தது.

அம்மாவினுடைய கையைப் பிடித்து தடுத்தானே ஒழிய எந்த விதமான ஆறுதல் மொழிகளும் அப்போதைக்கு அவன் சொல்ல வில்லை. அப்படிச் சொல்லுவது முழுமையாக இருக்காது என்பதும் அவனுக்குப் புரிந்தது.

அம்மா அழுது முடித்து ஒய்ந்த பிறகு சொன்னான். "அம்மா உண்மையை ஏத்துக்கத்தான்மா வேண்டும்" என்றான்.

"ஏத்துக்கலாம்டா. இவன் ஒருத்தன் மட்டுமா எங்களுக்கு குழந்தை உன் வாழ்க்கை என்னாவது? மைதிலி வாழ்க்கை என்னாவது?" என்று அழுதாள் அம்மா.

"என்னம்மா செய்ய முடியும். குடும்பத்துக்குள்ள இந்த மாதிரி ஒரு பிரச்சினை வந்தா. அவனை தூக்கி தெருவுலயா போட முடியும்?" என்றான்.

அப்பா அவனை வெறுமையாக பார்த்தார் "வேற வழியில்லைடா. எங்கேயாவது அனுப்பிட வேண்டியதுதான்" என்றார்.

அவன் கோபமாக அப்பாவைப் பார்த்தான்.

"அப்பா நீங்க எப்பவுமே ரொம்ப மெச்சூர்டுன்னு நினைத்துக் கொண்டிருக்கிறேன். நீங்களே என்னப்பா இப்படி பேசறீங்க?" என்றான்.

"மெச்சூரிட்டி வேறப்பா! ஆனா இதே இந்தப் பிள்ளை இல்லைன்னு வச்சுக்கோ இந்த மைதிலிப் புள்ளை நானும் தான் வேற மாதிரி முடிவு எடுப்பேன்."

"மைதிலி பிரச்சினையை எங்கிட்ட விட்டுருங்கப்பா."

"நீ என்னடா சொல்றே நீ இப்பதான் ஏதோ கவர்ன்மெண்ட் வேலை கிடைச்சுப் போயிட்டிருக்கிறே." என்றார் அப்பா ஏழுமலை.

"அப்பா! குடும்பத்துல ஒரு பிரச்சினைன்னு வந்தா அது எல்லாருக்கும்தாம்பா. ஒவ்வொருத்தரும் தனித்தனியா சுயநலமா பார்த்தோம்னா அதுக்குப் பேரு குடும்பம் இல்லை. இன்னிக்கு நானும் மைதிலியும் எப்படி குழந்தைகளோ அதே மாதிரிதான் உமாவும் சரி உமாவை எங்கேயாவது அனுப்புனா என்ன நடக்கும் தெரியுமா?" என்று கேட்டான்.

அவன் இப்பொழுதே அவர்களுடன் பேசத் தயாராகும் முன்பே ஒரளவுக்கு விஷயங்களை திரட்டிக் கொண்டு தான் பேச அமர்ந்திருந்தான்.

அவன் அன்றைக்கு வேண்டுமென்றே உமாவை வெளியே அனுப்பி விட்டு, மைதிலியை அவள் தோழி வீட்டுக்குஅனுப்பி விட்டு, அமர்ந்திருந்தார்கள்.

மைதிலிக்கு ஒரே ஆச்சரியம் "ஏண்ணா ஃப்ரண்டு வீட்டுக்குப் போறதுக்கு அவவ் பண்றியா? என்றாள்.

"ஆமாடி, நீ என்ன சின்ன குழந்தையா? போயிட்டு வா? பத்திரமா வா" என்றான்.

"அப்ப நானும் என் ஃப்ரண்ட்ஸ் எல்லாம் சினிமாவுக்குப் போகலாமா?" என்றாள்.

"எப்பப் போறீங்க?" என்றான் சத்யபிரகாஷ்.

"ஈவ்னிங் ஷோ போறோம் அண்ணா" என்றாள்.

"ஓ.கே. என்ன தியேட்டர்னு சொல்லிட்டுப் போங்க யாராவது கூட பெரியவங்க வர்றாங்களா?"

"ஆமாம்மா! பாமாவோட அம்மாவையும் அப்பாவையும் கூப்புட்டுக்கறோம்."

சரி அப்படி யாராவது பெரியவங்க வந்தா போய்க்கோ நான் வந்து தியேட்டர்ல பிக்கப் பண்ணிட்டு வரேன்." என்று சரமாரியாக ஆணையிட்டு விட்டு தனது அடுத்த கட்டத்திற்கு தயார் செய்தான்.

மைதிலிக்கே ஆச்சரியமான ஆச்சரியம். அங்கே எல்லாம் போய்ப் பழகக் கூடாது என்றெல்லாம் சொல்லுகிற அண்ணன் இன்னைக்கு ஏதோ போயிட்டு வா என்கிறானே என்று அவளுக்கு ஆச்சரியம்.

"என்ன ஆச்சரியமா பாக்கறே. பெரியவங்க கூட போறேயில்லே! அதனால தான் பர்மிட் பண்ணினேன்" என்றான் அவன்.

"சரி எப்படியோ பர்மிஷன் கிடைச்சா சரி" என்று அவளும் மகிழ்ச்சியாக கிளம்பிப் போய்விட்டாள்.

தங்கையை அனுப்பி வைத்த பின்பு உமாவையும் "உமா உன்னை ஹெச் எம் சார் ஏதோ வரச் சொன்னாரு. போய் பார்த்துட்டு வா" என்றான். அதுவும் ஏற்கெனவே அவரிடம் பேசி வைத்திருந்தான்.

"ஒரு இரண்டு மூணு மணி நேரம் அவளை உங்களுடைய பொறுப்பில் வைத்துக் கொள்ளுங்கள். நான் அம்மா அப்பாவிடம் பேசிவிட்டு அழைத்துக் கொள்கிறேன்" என்று.

அதற்குப் பிறகு தான் இப்பொழுது தாய் தந்தையரிடம் அமர்ந்து பேசத் தொடங்கி இருந்தான்.

"என்ன நடக்கும்?" என்றார் அப்பா கொஞ்சம் தெரிந்து கொள்ள முயல்பவராக.

"பார்த்தீங்களா அப்பா! இந்த ரோட்ல எல்லாம் ஆடிப் பாடிட்டு வர்றாங்க அப்படி...! இல்லைன்னா பிச்சை எடுக்கறாங்க."

பிச்சை என்ற வார்த்தையை அவன் பயன்படுத்திய வுடனே மறுபடியும் அம்மா அழுதாள்.

"பொறும்மா பொறு. விஷயம் வந்து நம்ம கைமீறின விஷயம். இதுல உன்னோட தப்போ என்னோட தப்போ அப்பாவோட தப்போ இல்லை உமாவோட தப்புகூட இல்லை.

இப்ப ஒரு குழந்தை முடமா பொறக்குதுன்னா அந்த குழந்தையோட தப்பு என்ன? அதே மாதிரி உமாவுக்கு ஒரு பிரச்சினைன்னா அதுல அவனோட தப்பு இல்லைம்மா இயற்கை செஞ்ச சதிம்மா. என்ன பண்ண முடியும்?" என்றான் சத்யபிரகாஷ்.

"நல்ல வேளையாக இவ்வளவு பொறுப்பாக பேசுகிற மகன் இருக்கிறானே" என்று அவர்களுக்கு அந்த நேரத்தில் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

"அப்பா, புரிஞ்சுக்குங்க. அப்பா அம்மா ரெண்டு பேரும் புரிஞ்சுக்கோங்க. அந்த குழந்தையே இப்ப பெரியமனக் குழப்பத்துல இருப்பாப்ல. ஏன்னா உடம்பு வேற மனசு வேற அந்த மாதிரி ஒரு 'கிளாஷ்' இருக்கும்மா. இந்த மாதிரி சிச்சுவேஷன்ல இப்போ உடம்புல வந்து அவ பெண்ணா இருக்கா. ஆனா மனதளவுல அவளுடைய விருப்பங்கள் மாற்றங்கள் எல்லாமே அவளைப் பொறுத்த வரைக்கும் அவளை ஆணா உணர செஞ்சிட்டிருக்கு. ஒரு பெரிய கிளாஷ் அவளோட உடம்புக்குள் போயிட்டிருக்கு. இந்த சமயத்துல பெரிய மனக்குழப்பங்கள் வரும். டிப்ரஷன்

வரும். இந்த மாதிரி சமயத்துல நம்மளும் பிரச்சினை பண்ணினோம்னா அந்த குழந்தை என்ன பண்ணும்'' என்றான்.

இப்பொழுது அப்பாவும் அம்மாவும் இரண்டு பேரும் கொஞ்சம் கவனமாக பேச்சைக் கேட்க ஆரம்பித்தார்கள்.

அவன் தொடர்ந்தான்... ''இதற்குள்ளாகவே அவன் சு.சமுத்திரனுடைய 'வாடா மல்லி' புத்தகம், ''வித்யா'' இது தொடர்பான மூன்றாம் பால் போன்ற புத்தகங்களை எல்லாம் படித்திருந்தான். செய்திகளைத் திரட்டி இருந்தான்.

அதையெல்லாம் இப்பொழுது அமர்ந்து புரிகிற விதத்தில் சொன்னான்.

''இப்படிப்பட்டவங்களுக்கு சொசைட்டில இருக்கிறது கஷ்டம் தாம்பா. குடும்பத்தில் இருக்கிறது கஷ்டம்தான். ஆனா நம்ம அதை ஏத்துக்கணும். அவங்களுடைய வித்தியாசமான நடை உடை பாவனைகள். இப்ப லுங்கி கட்டி சட்டை போட்டுக்கறது. இது பையனைப் போல நடக்கறது. இனி நம்ம உமாவே ஆரம்பிக்கும். அதை யெல்லாம் நாம ஏத்துக்கத்தான்பா வேணும்'' என்றான் சத்தியபிரகாஷ்.

அப்பா அவனை எரிச்சலுடன் பார்த்தார்.

''ஏன்டா அப்ப நான் ரோட்ல போனா என்னை வேற விதமாத்தான் சொல்லுவாங்க'' என்றார்.

''சொல்லிட்டுப் போகட்டும்பா அதுக்காக?'' என்றான் சத்தியபிரகாஷ்.

''ஆமா அப்படித்தான்னு சொல்லுங்க. அதுக்கப்புறம் யாரு என்ன பேசுவாங்கன்னு பார்க்கலாம்.''

''சொல்றதுக்கு நல்லாயிருக்கும்டா.''

''இருந்தாலும் புரியுது எனக்கு மட்டும் பிரச்சினை வராம இருக்குமா? ஏன் மைதிலிக்கு பிரச்சினை வராம இருக்குமா? வேற வழியில்ல நாம சந்திச்சுத்தான் ஆகணும். நல்லாப் புரிஞ்சுக்கோங்க இந்த மாதிரி சூழ்நிலையில இருக்கிறவங்க அவங்களுக்கு ரொம்ப பாதுகாப்பு குறைவு இருக்குப்பா. ரெண்டு விஷயந்தான் இருக்கு. ஒண்ணு அவங்க பிச்சை எடுக்கணும். இல்லைன்னா...'' என்று அவன் நிறுத்தினான் சொல்லு வதற்கே அவன் வாய் கூசியது.

அம்மா அப்பாவிடம் எப்படி இப்படி ஒன்றை சொல்ல முடியும் என்று இந்தப் பக்கம் அந்தப் பக்கம் பார்த்தான் மேலே விட்டத்தைப் பார்த்தான். கீழே பார்த்தான். பிறகு ''வேற மாதிரி தொழில் செய்ய வேண்டியதுதான்.''

இப்பொழுது அப்பா கூட நெஞ்சைப் பிடித்தாற் போல பிடித்துக் கொண்டு அமர்ந்து அவனைப் பார்த்தார்.

அம்மா இன்னும் கலங்கிப் போனாள்.

''சொல்லும்மா, அப்படி நம்ம குடும்பத்து உறுப்பினரை, அப்படி விட்டுடலாமா'' என்று கேட்டான்.

இரண்டு பேரும் திகைத்துப் போனார்கள்.

மெதுவாக விஷயத்தை உள்ளே இறக்கியாகி விட்டது. இது உள்ளே போய் வேலை செய்யும். உடனடியாக அவர்கள் அதற்கு தீர்வு சொல்லவில்லை என்றாலும் கூட இதைப் பற்றி யோசிப்பார்கள் என்ற நம்பிக்கை அவனுக்கு தோன்றியது.

''சரிப்பா! இதையெல்லாம் சொல்றதுக்காகத்தான் அவங்க ரெண்டு பேத்தையும் அனுப்பியிருக்கேன். இந்த ரெண்டு மூணு புத்தகத்தையும் படிச்சுப்பாருங்க ஏன்னா நான் சொல்றதை விட தயவு செய்து படித்துப் பாருங்க என்று

அவர்களிடம் இரண்டு மூன்று புத்தகங்களை திணித்தான். அவர்களும் அதை கையிலே வாங்கிக் கொண்டார்கள்.

நல்ல வேளையாக அம்மாவுக்கும் சரி அப்பாவுக்கும் சரி கொஞ்சம் புத்தகம் படிக்கிற பழக்கம் இருந்தது.

"இதை வச்சுக்கிட்டு உமா கிட்ட எந்தக் கேள்வியும் கேட்காதீங்க. உமாவை நான் டீல் பண்ணிக்கிறேன். ஏற்கெனவே உமாகிட்ட பேசிட்டேன். "உமா ரொம்ப ஃப்ரஸ்ட்ரேஷன்ல இருக்காப்ல. நிறைய பிரச்சனை அவளுக்குள்ள போயிட்டிருக்கு. இப்ப நாம ஏதாவது அதையும் இதையும் சொல்லி எதையாவது பண்ணிக்கிச் சுன்னா வம்பு."

பெத்த மனம் பித்து இல்லையா? எதையாவது பண்ணிக் கிச்சுன்னா என்ற வார்த்தை அவர்களை தவிப்படையச் செய்தது. கொஞ்சம் திணறித்தான் போனார்கள்.

"என்னடா சொல்றே" என்றார் ஏழுமலை. "ஆமாம்பா ரொம்ப கேர் ஃபுல்லா இருக்கணும். எதையாவது பண்ணிக்கிச்சுன்னா அது பெரிய களங்கமா போயிரும் நமக்கு. தீராத புண்ணாயிரும். வாழ்நாள் முழுக்க நாம நிம்மதியா இருக்க முடியாது. தெரிஞ்சுக்கங்க" என்றான் சத்யபிரகாஷ்.

இரண்டு பேருக்கும் புரிந்தது. "அப்போ வாழ்நாள் முழுக்க நாம இப்படியே கஷ்டப்பட வேண்டியதுதான்" என்று அழுதாள் அம்மா திலகம்.

அம்மா "கஷ்டப் படறதும் கஷ்டப் படாததும் நாளைக்குப் பார்த்துக்கலாம் அம்மா. நீங்க ஒண்ணு தெரிஞ்சுக்கோக்கங்க. பழைய பீஷ்மர் சபதம் மாதிரி நான் ஒண்ணு சொல்றேன். உமாவுக்கு லைஃப் நல்லா செட்டில்

பண்ணிக் கொடுக்கறது என் பொறுப்பு. அதே போல மைதிலிக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை பார்த்து கல்யாணம் பண்ணி வைக்கறது என் பொறுப்பு. அதுவரைக்கும் என் சொந்த வாழ்க்கை பற்றி நான் நினைக்க மாட்டேன்."

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இத்தனை பேரிடி இறங்கிய போதும் கூட இந்த வார்த்தைகள் கொஞ்சம் தெம்பாக இருந்தன.

இரண்டு பேரும் அவனைக் கட்டிக் கொண்டார்கள். அவனுக்குமே கண்களில் கண்ணீர் கரகரவென்று கொட்டியது.

"பாவம்மா! அவள் ரொம்பப் பாவம்! அவளைக் கஷ்டப் படுத்திடாதீங்க" என்றான் கலங்கிய குரலில்.

"சரிடா சாமி! சரிடா! நான் ஒண்ணும் அவ கிட்ட பேசலை."

"நீங்க ஒண்ணும் பேசாட்டியும் கூட உங்க பார்வையில கூட காட்டக்கூடாது. நீங்க இதை தெரிஞ்சுக்கிட்ட மாதிரியே காட்டக் கூடாது. நான் இதை டீல் பண்ணிக் கிறேன். அவங்க ஸ்கூல் ஹெச் எம் கிட்ட பேசிட்டேன். அவருதான் இதை ஹெர்மே ப்ரைட்டா இருக்குமோ அப்படிங்கற சந்தேகத்தையே எனக்குள்ளே குடுத்தாரு. அதுக்கப்புறம் என்னென்ன நடந்துச்சுன்னு உங்களுக்கு தெரியுமா?" என்றான்.

அவர்கள் 'இல்லை' என்று தலையாட்டினார்கள். "அப்பா அம்மா ரெண்டு பேரும் ஒண்ணு தெரிஞ்சுக்கங்க. ஏதோ நம்ம குடும்பத்துக்கு ஒரு வித்தியாசமான விஷயம் நடக்குது.

அதை நாம தாங்கித்தான் ஆகணும். வாழ்க்கையில எத்தனையோ சோதனைகள் எத்தனையோ பேருக்கு இருக்கு. இதுநாள் வரையில ஒரு குறையும் இல்லாமல் எங்களை வளர்த்திருக்கீங்க. அதுல என்னமோ திருஷ்டிப் புள்ளி விழுந்த மாதிரி நடக்குது. நான் பார்த்துக்கறேன் ஆனா. நானும் இருக்கேன்'' என்றான்.

இரண்டு பேரும் கண்ணீர் விட்டபடியே அமர்ந்திருந் தார்கள். ''பொறுமையா இந்தப் புத்தகங்களை படிச்சுப் பாருங்க நான் அட்டை போட்டுக் கொடுத்திருக்கேன். இதுகூட நீங்க படிக்கிறது உமாவுக்கு தெரிய வேண்டாம். தனியா வச்சுட்டு படிச்சுப் பாருங்க. இந்தப் புத்தகங்களில் இப்படி இருக்கக் கூடியவங்க நிலைமை எல்லாம் தெளிவா சொல்லியிருக்காங்க. நான் எவ்வளவு தூரம் விளக்கிச் சொல்ல முடியும்னு தெரியலை. அதனாலதான் இதை படிக்கச் சொல்றேன்'' என்றான்.

அம்மா ''அப்ப இப்படி இருக்கிறவங்க எல்லாருமே குடும்பத்தில இருக்க முடியாதா?'' என்றாள்.

''அது நம்மளைப் பொறுத்ததும்மா. நாம ஏம்மா அவளைக் கை விடணும்?'' நாம சரியான முறையில ஆதரவு கொடுத்தா அவ ஏன் வெளியில போகணும்? உள்ள இருக்கிறதுதான் அவளுக்கு பாதுகாப்பு'' என்றான்.

''நம்மளோட அவ பொருந்தி இருப்பாளா?'' என்றாள். ''தெரியலை அம்மா அது கொஞ்சம் கஷ்டம்தான். அவளுக்கு ஏற்ற மாதிரியும் கொஞ்சம் பொழுதுபோக்கை நாம கொடுத்துட்டு நமக்கு ஏத்த மாதிரியும் கொஞ்சம் அவளை வாழவைக்கணும்தான் வேற வழியில்லை.''

மறுபடியும் அம்மா திடீரென்று ''ஏன்தான் ஆண்டவன் எனக்கு இப்படியெல்லாம் சோதனை கொடுக்கிறானோ'' என்று மறுபடியும் அழுதாள்.

''உனக்கு மட்டும் இல்லைம்மா. குடும்பத்துக்கே இது பெரிய சோதனைக் காலம்தான். இதுல அவளுக்கும் நம்பிக்கை கொடுக்கணும். நம்பளுக்கும் நம்பிக்கை வரணும். வர வச்சுக்கணும். இந்த சிச்சுவேஷன் நாம சந்திச்சுத்தான் ஆகணும். ஆனா இதுல தோத்துறக் கூடாதும்மா'' என்றான்.

அப்பா மவுனமாக அமர்ந்து மகனைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவன் திரும்பி ''என்னப்பா உங்களுக்குப் புரியுதா?'' என்றான்.

அவர் பெருமூச்சு விட்டு விட்டு 'புரியுதுடா' என்றார்.

''ஏம்ப்பா நீங்களே தினமும் திருவாசகம் படிக்கிறீங்களே சிவபுராணம் படிக்கிறீங்களே அதுலே சொல்றாருல்லே ஆணாகி, பெண்ணாகி, அலியாகி அப்படின்னு...! நீங்க படிச்சுப் பாருங்க. மாணிக்கவாசகர் எல்லா இடத்திலயும் வெறும் ஆண், பெண்ணுன்னு சொல்ல மாட்டாராம் ஆணாகி, பெண்ணாகி, அலியாகின்னுதான் சொல்லுவாரு'' என்றான்.

''இப்ப நம்ம தெய்வங்களே அந்த ஃபேக்ட்ட ஏத்துக் கிட்டிருக்காங்கப்பா.''

அப்பா ஒரு பெருமூச்சு விட்டவிட்டுச் சொன்னார். ''நீ சொல்றது கரெக்ட்தான்பா. அந்த ஃபேக்ட்டை ஏத்துக் கிட்டிருக்காங்க. ஆனா எப்பவுமே ஒரு சாதாரணத்திலிருந்து ஒரு அசாதாரணம் வரும் போது ஒரு மெஜாரிட்டில இருந்து

வித்தியாசமா வரும்போது அதுல நிறைய பிரச்சினைகள் இருக்குப்பா.''

சத்யபிரகாஷ் ஒரு நிமிடம் மவுனம் சாதித்தான்.

பிறகு நிமிர்ந்து அவரைப் பார்த்தான். ''இருக்கு. இல்லைன்னு யாரு சொன்னா. அப்படி ஒரு நிலைமையும் நம்மளுக்கு வந்தாச்சு. நாம அதை சந்திச்சுத்தான் ஆகணும். அதை விட்டுட்டு பயந்து சோகமா உட்கார்ந்தா என்ன நடக்கும்'' என்றான்.

அப்பா, மறுபடியும் ஒரு பெருமூச்சு விட்டுட்டு ''புரியுதுப்பா நாங்க ட்ரை பண்றோம். பெத்த வயிறு எப்படி கலங்கும்னு உனக்கு தெரியும்தானே?'' என்றார்.

''அப்பா, உங்களுக்கு நான் துணை இருக்கேன். மூத்த மகனா நான் இருக்கிறேன். நீங்க ஏன் கவலைப் படறீங்க'' என்றான்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்திற்கு மேல் பேசி உணவு உண்ணை மறுத்த அவர்களை வற்புறுத்தி ஆளுக்கு கொஞ்சம் உணவு கொடுத்து. ''சரி போய் ரெஸ்ட் எடுங்க'' என்று அனுப்பி வைத்தான்.

தங்கள் அறைக்குப் போவதற்கு முன்பாக அப்பா திரும்பி வந்து அவனுடைய இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டார்.

''நீ இல்லைன்னா இந்த சிச்சுவேஷனை எப்படி மேனேஜ் பண்ணியிருப்பேன்னு தெரியலை. உன்னைப் பத்தி ரொம்ப பெருமைப்படறேன்பா'' என்று இரண்டு கைகளையும் தன் இரண்டு கைகளாலும் கோர்த்துக் கொண்டு தன் இரு கண்களால் ஒத்திக் கொண்டார்.

''ப்ளீஸ் அப்பா! பெரிய வார்த்தையெல்லாம் பேசாதீங்க. அப்படியெல்லாம் பண்ணி என்னை அந்நியனாக்காதீங்க நானும் உங்களோட மகன்ப்பா. இந்தக் குடும்பத்துப் பொறுப்பை ஏற்க வேண்டிய மகன். டோன்ட் ஒர்ரிப்பா. நான் பார்த்துக்கறேன்'' என்று சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தான்.

அனுப்பி வைத்து விட்டு தன்னுடைய அறைக்கு வந்து அமர்ந்தபிறகுதான் அவனுக்கு புரிந்தது. 'எவ்வளவு பெரிய பொறுப்பு ஒன்று தன்னுடைய தலை மேல் இருக்கிறது. இதை எப்படி சுலபமாக சமாளித்து வெளியே வரப் போகிறோம் என்று பெரிய கவலை அவனுக்கு முன்பாகவும் பெரிய மலையைப் போல விஸ்வரூபம் எடுத்துக் கொண்டே இருந்தது.

அத்தியாயம் - 13

''கல்யாண சமையல் சாதம் காய்கறிகளும் பிரமாதம் அப்படின்னு பாடலாம் போலிருக்கிறதே!'' என்று மகிழ்ச்சியாக சிரித்தான் சத்யபிரகாஷ்.

அந்த டைனிங் டேபிள் பெரியதாகவே இருந்தது. அதன் நடுவிலே நிறைய பதார்த்தங்கள் பாத்திரங்கள் வைக்கப் பட்டிருந்தன.

சத்யபிரகாஷின் குடும்பத்தினர் விருந்துக்காக அழைக்கப் பட்டிருந்தார்கள். சம்பத் குமார் விளையாட்டாக சகோதரியிடம் ''எனக்கு எப்ப ட்ரீட் கொடுக்கப் போறே'' என்று கேட்ட பொழுது அவள் ''அதுக்கென்ன? கொடுக்க றேண்ணா. ஞாயிற்றுக்கிழமை!'' என்று சொன்ன போது

அந்தக் கணத்தில் சம்பத் குமாருக்கு அந்த ஐடியா தோன்றியது.

'புதிதாக ஒரு நட்பு கிடைத்திருக்கிறது. அது நல்ல நட்பாகவும் இருக்கிறது. அதை ஏன் கொண்டாடக் கூடாது' என்று எண்ணியவனாக "ஏம்மா வல்லபி நான் இன்னொரு ஐடியா சொல்லட்டுமா?" என்று கேட்டான்.

"சொல்லுண்ணா. ஐடியா சொல்றதுக்கெல்லாம் பர்மிஷன் கேட்க ஆரம்பிச்சுட்டே? எப்போலேர்ந்து?" என்றாள்.

"இப்போலேருந்துன்னு வச்சுக்கயேன். இல்லை! நாமளே விருந்து பண்ணி நாமளே சாப்பிடறதுக்கு பதிலா இவ்வளவு அழகான ஒரு பெயிண்டிங்கை உனக்காக விட்டுக் கொடுத்தாங்களே அந்தக் குடும்பத்தையே ஏன் நாம சாப்பாட்டுக்கு அழைக்கக் கூடாது. விருந்துக்கு அழைக்கக் கூடாது?" என்று கேட்டான்.

வல்லபி இதை எதிர் பார்க்கவில்லை ஆனால் மகிழ்ச்சியான ஒரு சஜெஷனாகத் தான் தெரிந்தது.

"ஓய் நாட்? தாராளமா செய்யலாம். என்ன கொஞ்சம் அதிகமா செய்யணும் அவ்வளவுதானே? அம்மா இருக்காங்க நித்யா இருக்கா. மெயின் அயிட்டம் எல்லாம் நான் பண்ணிடறேன்" என்றாள்.

"நீ பண்ணிடுவே! நாங்க தானே சாப்பிடணும்?" என்று பெருமூச்சு விட்டான்.

"அப்படியா இனிமேல ஏதாவது கேளு. இதையே நான் பதிலா சொல்லிடறேன்."

"ஐய்யயோ! அப்படி கிப்படி பண்ணிடாதம்மா. அம்மா பழைய காலத்து ஐட்டமா போடுவாங்க. நீ லேட்டஸ்ட்டா

டி.வி. அதுல இதுல பார்த்து ஏதாவது புதுசா பண்ணிக் கொடுப்பே. அந்த வாய்ப்பை நான் கெடுத்துக்க விரும்பலைம்மா" என்றான்.

"ம்... அது..." என்றாள் சகோதரி.

சம்பத் குமார் ரசித்துச் சிரித்தான். அதற்குப் பிறகு தெரிந்து எல்லாமே வேகமாக நடந்தேறியது.

சம்பத் குமார் தன்னுடைய பெற்றோர்களிடம் சத்யபிரகாஷின் குடும்பத்தைப் பற்றிச் சொன்னான். அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்புதான் திடீரென்று வல்லபிக்கு ஒரு சந்தேகம் வந்தது. அண்ணனிடம் தனியாக பேசினாள். "அண்ணா உமாகாந்தனைப் பற்றி உங்களுக்குத் தெரியும்ல" என்று கேட்டாள்.

"என்ன, என்ன விஷயம் எனக்கு ரொம்ப ஒண்ணும் தெரியாது. என்றான்.

அப்போதுதான் அவள் விளக்கிச் சொன்னாள்.

"அப்படியா ஆனா அவரைப் பார்த்தா அப்படித் தெரியலையே."

"தெரியலை அண்ணா. ஆனா எல்லாருக்கும் இது தெரியும். பட் நேரடியா யாரும் காட்டிக்க மாட்டாங்க எப்படின்னாலும் கொஞ்சம் அவருகிட்ட பேசும்போது அவருடைய நடை உடை பாவனைகள்ல கொஞ்சம் வெளிப்பட்டிரும்."

"சரிம்மா, அதைப் பத்தி என்ன இப்போ? "எனக் கொண்ணும் அது பிரச்சனை இல்லை" என்றான் சம்பத் குமார்.

"இல்லைண்ணா! நம்ம அம்மா அப்பாகிட்ட சொல்லி வச்சிரு. எதையாவது எக்குத்தப்பா கேட்டறப் போறாங்க. அப்புறம் அவங்களை கூப்பிட்டு மூக்கை உடைத்த மாதிரி ஆயிடும்."

"ஆமாம்மா! நீ சொல்றது கரெக்ட்தான்! சரி ஒண்ணு பண்ணுவோம் அவங்களை இன்வைட் பண்றதுக்கு முன்னாடி முதல்ல அம்மா அப்பாகிட்ட பேசிடுவோம்" என்றான்.

சம்பத் குமார் கருத்து அவளுக்கும் ஏற்புடையதாக இருந்தது.

பெற்றோர்களிடம் அமர்ந்து பேசினான். அப்பா செல்வ கணபதி அதை இயல்பாக ஏற்றுக் கொண்டார். "ஆமாம்பா நிறையப் பத்திரிகைகள்ளே அங்க இங்க அடிபடுது இருக்கத்தான் செய்யுது." ஆனால் அம்மாவுக்கு அது கொஞ்சம் ஏற்புடையதாக இல்லை.

"ஏம்பா, அப்படி ஆளை எல்லாம் கொண்டு வந்து நாம உள்ளே உழப்பிக்கணுமா" என்றார்?

சம்பத் குமார் கோபத்தை அடக்கிக் கொண்டு அம்மாவைப் பார்த்தான். "எப்படி ஆளுன்னு நெனைச்சீங் கம்மா. நல்ல குடும்பத்துல பொறந்திருக்காப்ல, நல்ல டேலன்ட் இருக்கு, சுயமா தொழில் செய்யறாப்பல. நல்ல டீசன்டான ஃபேமிலிம்மா" என்றான்.

முதலில் மறுத்தாலும் மகனும் மகளும் இரண்டு பேருமாக அவர்களை வீட்டுக்கு விருந்துக்கு அழைப்பதிலே குறியாக இருந்ததனால் ஏற்றுக் கொண்டார்கள்.

"நீங்க நெனைக்கிற மாதிரி எல்லாம் ஒண்ணும் இல்லைம்மா. சத்யபிரகாஷ் ஒரு பெரிய பிசினஸ் மேன்

அப் கம்மிங் பிசினஸ் மேன். சொல்ல முடியாது ஒன் ஆர் டு இயர்ஸ்ல பெரிய கோடீஸ்வரனா நின்னாலும் நிப்பாரு நீங்க வந்து புரிஞ்சுக்கலை."

"இருக்கட்டும்பா! எவ்வளவு பணக்காரங்களா இருந்தாலும் ரெண்டு பொண்ணுங்க நம்ம வீட்டுல இருக்காங்க."

"இல்லைம்மா பொண்ணுங்களுக்கும் இந்த மாதிரி சூழ்நிலைகளெல்லாம் பழக்கணும். நாலு பேரை சந்திக்க பழக்கணும். யாரையும் அவமானப் படுத்தாம இருக்கப் பழக்கணும். இதெல்லாம் தேவைம்மா" என்றான்.

"ஆமா கர்ணாம்பிகை சொன்னாக் கேளு" என்றார் செல்வகணபதி.

ஒருவழியாக அம்மா ஏற்றுக் கொண்டாள். அதற்குப் பிறகுதான் சம்பத் குமார் சத்யபிரகாஷினுடைய ஃபிரஷ்னிங் சென்டருக்கே போய் அழைத்தான்.

"அப்படியா குடும்பத்தோட கூப்பிடறீங்களா? எதுக்கு சார்! உங்களுக்கு இந்த கஷ்டம்" என்று சிரித்தான்.

"நாங்களே கஷ்டப்பட்டா எப்படி சார்! நீங்களும் ஒரு நாளைக்கு கஷ்டப் படுங்க" என்றான் சம்பத் குமார்.

"யார் சமையல்?" என்றான்.

"ஏழிசை வல்லபி சூப்பர் ஸ்பெஷலிஸ்ட் சார்" என்றான் அவன்.

"இப்ப புரியுது சார்! என்று சிரித்தான் சத்யபிரகாஷ்.

"உச்சரம்மா உங்களை மிரட்டி மிரட்டி சாப்பிட வச்சிடறாங்க போலிருக்கு. சாப்பிடலைன்னா உங்களை பெஞ்ச் மேல நிக்க வச்சுடறாங்க போலிருக்கு. இந்தக்

கொடுமையெல்லாம் படறோமே. ஒரு நாளைக்கு அடுத்தவங்களும் வந்து இந்த அவஸ்தையை படட்டுமே என்று முடிவு பண்ணிட்டீங்களா'' என்றான் சிரித்தார்கள்.

''இப்படியே போய் நான் வல்லபிகிட்ட சொல்லட்டுமா?'' என்றான் சம்பத் குமார்.

''ஐயோ வேணாம் சார். நான் சும்மா நீங்க ஃப்ரெண்டுங் கறதுனால அப்படியே கலாட்டா பண்ணினேன். ஓ.கே! நான் பெற்றோர் கிட்ட பேசிட்டுச் சொல்றேன். அவ்வளவு சீக்கிரம் அவங்க மத்தவங்க வீட்டுக்கு வருவாங்களான்னு தெரியலை. அதுவும் உமா இருக்கானே. அவன் வேற சீக்கிரமா மிங்கிள் ஆக மாட்டான்'' என்றான்.

சம்பத் குமார் ஒரு ஆழ்ந்த புன்னகையுடன் சத்யபிர காஷைப் பார்த்தான். ''நான் உங்களை சத்யான்னு கூப்பிடலாமா?'' என்று கேட்டான்.

''தாராளமா'' என்றான் சத்யபிரகாஷ்.

''வா, போன்னு பேசலாமா'' என்று கேட்டான்.

''ஓய், நாட், கிட்டத்தட்ட ஒன் ஆர் டூ இயர்ஸ் டிஃபரன்ஸ் இருக்குமா?'' என்று கேட்டான்.

''ம் இப்படியெல்லாம் என்னுடைய வயசை கேட்டா சொல்லிருவேனா'' என்றான் சம்பத் குமார்.

சத்யபிரகாஷ் புன்னகைத்தான் ''சத்யா உன்னை எனக்கு ரொம்பப் புடிக்குது சத்யா'' என்றான் சம்பத் குமார்.

'ம் ஹூம்...?' என்றான் சத்யபிரகாஷ்.

''இல்லை. ஒரு எக்ஸ்டிராடினரியான சிச்சுவேஷன். இந்த மாதிரி உங்க வீட்டுல ஒரு குழந்தை அவனுக்காக எஃபர்ட் எடுத்து சொசைட்டில ஒரு ஸ்டேண்ட் பண்ண வைக்கணும்

கறதுக்காக நீ என்னவெல்லாம் பண்றப்பா ரொம்பப் பிடிக்குது எனக்கு அதனாலதான் வந்து ஆர்வ யனே வச்சுக்கலாமே. என்னுடைய சகோதரிகிட்டே சொல்லி இந்த விருந்தை ஏற்பாடு பண்ணியிருக்கேன்.

''சத்தியா கொஞ்சம் நெகிழ்ந்து தான் போனான்.''

''தாங்க் யூ சம்பத்'' என்றான்.

இது நாள் வரையில் அவன் தன்னுடைய பிரச்சினைகளை யாரிடமும் மனம் விட்டுப் பேசியதில்லை. இந்தக் கோணத்தில் அவன் தனக்காக சிந்தித்துப் பேசியது அவனுக்கு இதமாக இருந்தது.

''ஆமா சத்யா! இட் இஸ் நாட் எ ஜோக் அப்பா அம்மாவை சமாளிச்சு தங்கச்சிக்கு புரிய வச்சு அந்தப் பையனுக்கு ஃபிரஸ்ட்ரேஷன் இல்லாம, கூட இருந்து ஒரு சப்போர்ட் கொடுத்து இந்த அளவுக்கு கொண்டு வருவதுன்னா இட்ஸ் சிம்ளி கிரேட். அதனால தான் நான் உங்க கூட ஃப்ரெண்டா இருக்கணும்னு ஆசைப்படறேன்.''

சத்யா இன்னமும் நெகிழ்ந்து போனான். ''தாங்க் யூ தாங்க் யூ வெரிமச்'' என்றான்.

''ஃப்ரெண்டுன்னு சொல்லியாச்சுல்ல அப்புறம் என்ன தாங்க் யூ'' என்று மிரட்டினான் சம்பத் குமார்.

''ஓ.கே.குடுத்துருங்க'' என்று அதை திரும்ப வாங்கிக் கொள்வது போல சைகை செய்தான் சத்தியா.

''ம்... இந்தா'' என்று பத்திரமாக கொடுப்பது போல சம்பத் குமாரும் சைகை செய்தான்.

இரண்டு பேரும் சிரித்துக் கொண்டார்கள்.

அதற்குப் பிறகு சத்யபிரகாஷ் பெற்றோர்களிடம் லேசாக சொல்லி வைத்தான். சம்பத் குமாரும் தன் பங்குக்கு நேராக வந்து அவர்களிடம் அறிமுகப்படுத்திக் கொண்டு அழைப்பது ஃபார்மாலிட்டி என்பார்களே அது மாதிரியான ஒரு நாடகத்துக்கு பிறகு தான் இன்றைக்கு அவர்கள் வந்திருந்தார்கள்.

விருந்து கலகலப்பாக கழிந்தது.

முதலில் சாம்பார். இரண்டு வகையான கூட்டுகள், வடை, பாயாசம், இதைத் தவிர புளிக் குழம்பு. இது போக ஒரு வெஜிடபிள் பிரியாணி என்று ஜமாய்த்திருந்தாள் வல்லபி.

"கல்யாண சாப்பாடே போட்ட மாதிரி இருக்கு" என்று தனியாக கிண்டல் செய்தான் சத்யா.

"எனக்கா! இப்போதைக்கு இல்லைப்பா. வல்லபியை தாட்டிட்டுத்தான் என்றான் சம்பத் குமார்.

"வல்லபிக்கு என்னப்பா? அருமையான பொண்ணு அவங்களுக்கு மாப்பிள்ளை ஈஸியா கிடைச்சிரும் உனக்கு ஒண்ணும் பர்டன் இல்லை" என்றான் சத்யா.

"சத்யா கவலைப் படாதே! கண்டிப்பா உங்க குடும்பத்து மேரஜஸ்க்கும் நான் சப்போர்ட் பண்ணுவேன்" என்றான் சம்பத் குமார்.

சற்று நேரத்தில் பெரியவர்கள் எல்லாம் ஒரு பக்கமாக...! நித்தியா, மைதிலி, வல்லபி ஒரு பக்கமாக!

உமா, சத்தியப் பிரகாஷ், சம்பத் குமார் இவர்கள் மூன்று பேரும் ஒரு பக்கமாக என்று பொழுது இனிமையாக கழிந்தது.

பெரியவர்கள் எல்லாம் ஏதோ ஆன்மீகத்தைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்திலே செல்வ கணபதிக்கும் ஏழுமலைக்கும் ஒரு ஒற்றுமை ஏற்பட்டு விட்டது.

"அப்படியா தெரியாம போச்சே தெரிஞ்சிருந்தா நான் நிறைய இந்த மாதிரி தல யாத்திரையெல்லாம் போவேன். அப்படி போகும்போது குரூப்பா உங்களையும் கூப்பிடலாம்" என்று அங்கலாய்த்துக் கொண்டார் ஏழுமலை.

"இனிமே என்ன சார்! கூப்பிடுங்க. எங்க போனாலும் வந்துடறோம் நாங்களும். ஆமா சார் காசிக்கு கூட ஒரு நடை போய்ட்டு வரணும்" என்றார் ஏழுமலை.

"போயிடலாம். நல்லா ஒரு டிராவல்ஸ் ஏற்பாடு பண்ணி ஒரு பத்து நாள் நாம போயிடலாம்" என்று அவர்கள் ஒரு பக்கம் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

சத்யபிரகாஷும், சம்பத் குமாருமாக சீட்டாட்டத்தில் மூழ்கினார்கள்.

பெண்கள் தங்களுக்குள்ளாக சினிமா, சமையல், ஊர் விஷயங்கள் என்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

நித்யாவும் மைதிலியும் கொஞ்ச நேரத்திலேயே ஒருவரை ஒருவர் கேலி செய்கிற பக்குவத்துக்கு வந்து விட்டார்கள்.

"மைதிலிக்கா" என்று அழைத்த போது! "ஏய், நித்யா அக்கான்னு எல்லாம் கூப்பிட வேண்டாம். என்ன ஒரு ஒன் ஆர் டூ இயர்ஸ் டிஃபரண்ட்ஸ் இருக்கும். ஃபிரியாவே பேசு." என்றாள்.

"அப்படியா! ஃபிரியா பேசுறதா இல்லை காசு கீசு கொடுத்துட்டு பேசணுமோன்னு நினைச்சேன்!" என்றாள் நித்யா.

"அய்யோ மொக்க ஜோக் சிரிக்கிற மாதிரி ஏதாவது அடி." என்று அவர்கள் பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

பேசிக்கொண்டே திரும்பிய திலகத்துக்கு வல்லபியை பார்க்கப் பார்க்கப் பிடித்தது. எவ்வளவு அருமையான பெண் இவள். "நல்ல வேலையில் இருக்கிறாள். பொறுப்பாக இருக்கிறாள். இவ்வளவு அருமையாக சமைத்திருக்கிறாள். அம்மாவையும் தங்கையையும் உதவிக்கு வைத்துக் கொண்டு முழுக்க முழுக்க அவள்தான் செய்தாளாமே. பத்துப் பேருக்கு அருமையாக சமைத்திருக்கிறாளே" என்று எண்ணம் ஓடியது.

அதே நேரத்தில் சத்ய பிரகாஷும் சம்பத் குமாருடன் பேசிக் கொண்டே திரும்பினான்.

அம்மா வல்லபியையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

கொஞ்ச நாளாகவே அம்மா எங்கே போனாலும் இந்த மாதிரி வயதுப் பெண்களை உற்றுப் பார்க்கிறாரோ என்பதும் அப்பாவிடம் இப்படி ஒரு பெண்ணு நம்ம சத்யாவுக்கு அமைஞ்சா எப்படி இருக்கும் என்று சொல்லுகிறார் என்பதும் அவனுக்குத் தெரிந்திருந்தது.

அங்கிருந்து கண்ணாலேயே அம்மாவைப் பார்த்து ரச்சரித்தான்.

அம்மா சட்டென்று முகபாவத்தை மாற்றிக் கொண்டு மற்ற மூவருடனும் பேச்சில் கலந்து கொண்டாள்.

"சரி, நாங்க குடுத்த ஓவியம்! எங்கே மாட்டி வச்சிருக்கீங்க" என்று கேட்டான் சத்யபிரகாஷ் சம்பத் குமாரிடம்.

"அதுவா! அது வல்லபியோட ரூம்ல இருக்கு. பார்க்கலாமா" என்றான்.

"அய்யோ, அவங்க ரூமுக்கா" என்று தயங்கியவுடன்.

"இதுல என்னப்பா இருக்கு! வாப்பா" என்று அழைத்துக் கொண்டு போனான்.

திரும்பி வல்லபியை பார்க்க அவளும் "என்னண்ணா!" என்று எழுந்து வந்தாள்.

"நீ பெயிண்டிங் எப்படி வச்சிருக்கே என்று பார்க்கணுமாம் வா காட்டலாம்" என்று போனார்கள்.

உமா மட்டும் தயக்கத்துடனேயே அறைக்கு வெளியிலேயே நின்று அந்தப் படம் மாட்டப் பட்டிருக்கும் இடத்தை பார்த்தான்.

சம்பத் குமாரும், சத்ய பிரகாஷும் உள்ளே போனார்கள்.

சத்யபிரகாஷ் மெல்ல அறையை நோட்டம் விட்டான்.

அழகாகத்தான் வைத்திருந்தாள்.

ஒரு புத்தக அலமாரி இருந்தது. அதில் நிறைய புத்தகங்கள் இருந்தன.

அந்தப் பெயிண்டிங் மாட்டியிருக்கிற இடத்திற்கு நேர் கீழாக ஒரு மேஜை இருந்தது.

"நிறைய புக்ஸ் வச்சிருக்கீங்க" என்றான் சத்யபிரகாஷ். "அதை ஏம்பா கேட்கிறே! பெயிண்டிங், புக்ஸ்னு மாசம் ஒரு தொகை அதுக்கு போயிடும்.

"ஆமா நான் நகை வேணும் அதுவேணும் இதுவேணும்னு கேட்காம இப்படி யூஸ்புல்லா செலவு பண்றதுக்கு நீ என்னை பாராட்டத்தானே வேண்டும்?" என்றாள் வல்லபி.

"அது என்னவோ நிஜம்தான்மா. அறிவு ஜீவி" என்றான் அண்ணன்.

சிரித்துக் கொண்டே வெளியே வந்தார்கள்.

அப்படி வெளியே வருகிற நேரத்தில் லேசாய் திரும்பி அந்த மேஜை மேல் உள்ள புத்தகங்களை பார்த்தான்.

"ம்! செல்ப் நிறைய புக்ஸ் இருந்தும் அப்பப்போ எதைப் படிக்கிறாளோ அதை மட்டும் இங்க வச்சுக்குவா" என்றான் சம்பத் குமார்.

வல்லபி புன்னகைத்தாள்.

சத்யபிரகாஷும் அவளைப் பார்த்து புன்னகைத்துக் கொண்டே திரும்பிப் பார்த்தான்.

புத்தகங்களைப் பார்த்தவுடன் அவன் கண்களில் ஆர்வம் கூடியது.

ஒற்றைப் புருவம் லேசாக உயர்ந்தது. "வாடா மல்லி, நான் வித்யா, அரவாணிகள், என்ற வகையிலே அங்கே இருந்த புத்தகங்களை பார்த்தான்.

சம்பத் குமார் அப்படியே முன்னால் நடக்க இவள் சற்று பின் தங்கி "இதெல்லாம் இப்பதான் இதெல்லாம் எனக்கு படிச்சுப் பார்க்கணும்னு தோணுச்சு. ஸ்கூல் லைப்ரரில இருந்து எடுத்துட்டு வந்தேன்."

சொல்லிக் கொண்டே நகர்ந்த பொழுது அம்மா அழைக்க அவசரமாக போனாள்.

அங்கே நின்று புத்தகங்களை லேசாக புரட்டிப் பார்த்தான் சத்தியபிரகாஷ்.

அந்த நேரத்தில் தான் அவனுக்குள்ளே அந்த சந்தேகம் எழுந்தது!!!

அத்தியாயம் - 14

"டேய் ஒன்பதுடா" என்று ஒரு பையன் குரல் கொடுத்து விட்டு 'ஓடி ஒளிந்தான்.

உமா அந்தத் தெருவில் நடந்து கொண்டு வந்தவள் நின்றாள்.

திடீரென்று சுற்று முற்றும் பார்த்தாள்.

ஒரு சின்னப் பையன்!

எங்கிருந்தோ ஓடி வந்து ஒரு கல்லை எடுத்து அவள் மேல் வீசிவிட்டு ஓடிவிட்டான்.

கல் அவளுடைய முன்நெற்றியில் பட்டது.

ரத்தம் வடிந்தது.

அதற்குள்ளாக அவளது வகுப்பு தோழர்கள் இரண்டு பேர் வந்தவர்கள் இறங்கி உமா என்ன ஆச்சு என்று கேட்டார்கள்.

பள்ளியில் படிக்கும் போது அவளது வகுப்பு தோழர்கள். இப்போது உமா பள்ளிப்படிப்பை முடித்த பின்பு கல்லூரிக்குச் செல்ல வில்லை வீட்டில் இருந்தே கரஸ்பாண்டன்ஸ் கோர்சில் படித்துக் கொள்கிறாள்.

"இல்லை செந்திலு! நான் பாட்டுக்கு வந்துட்டிருக் கிறேன். என் மேல கல்லைத் தூக்கி எறியறாங்க ஒன்பதுன்னு கத்தறாங்க" என்றாள் உமா.

கண்களில் கரகரவென்று கண்ணீர் வழிந்தது.

செந்திலும் அவனோடு வந்திருந்த கேசவனும் இறங்கினார்கள்.

"எவன்டாவன் வெளிய வாங்கடா" என்று உறுமினான் செந்தில்.

அங்கே இங்கே தலையை நீட்டிப் பார்த்துக் கொண்டிருந்த சிறுவர்கள் ஒரே ஓட்டமாக ஓடிப் போனார்கள்.

உமாவின் கண்களில் கண்ணீர் நிறைந்தது.

"முதல்ல காயத்துக்கு கட்டுப் போடணும் வா வா" என்றான் அவன். "இல்லை இங்க தானே வீடு. நான் வீட்டுக்கே போயிடறேன். வீட்லேயே எல்லாமே இருக்கு ஃபஸ்ட் எய்டு பாக்ஸ் எல்லாமே இருக்கு."

"இனிமே நீ தனியா வராதே உமா."

"ஏன்டா! நான் மட்டும் மனுஷி இல்லையா? நான் மட்டும் தனியா வரக் கூடாதா" என்றாள் அவள்.

"நீ மனுஷி தான்! அதைப் புரிஞ்சுக்கறதுக்கு இந்த ஜென்மங்களுக்கு பக்குவம் இல்லையே வா" என்று அவர்கள் பைக்கை தள்ளிக் கொண்டு நடந்து வந்தார்கள்.

அவர்கள் வீட்டுக்குள் வந்து பெற்றோர்களிடம் சொல்லி விட்டுப் போனார்கள்.

அம்மாவும் அப்பாவும் பதைபதைத்துப் போய் அந்தக் காயத்துக்கு மருந்து வைத்துக் கட்டினார்கள்.

அதுவரைக்கும் பொறுமையாய் இருந்த உமா சட்டென்று எழுந்து போய் தனது அறைக் கதவைச் சாத்திக் கொண்டாள். உள்ளே பொருட்களை வீசி டப் டுப்பென்று உடைக்கின்ற சத்தம் கேட்டது.

கருணாம்பிகை வெளியிலே இருந்து கதவைத் தட்டி 'ஏ உமா என்ன பண்றே! என்ன பண்றே!" என்று பதறினாள்

"நான் என்னவோ பண்றேன். உனக்கு என்ன வந்தது. நான் இருக்கிறதே தப்பு. நான் செத்து ஒழியறேன்" என்று கத்தினாள்.

கருணாம்பிகை இந்தப் பக்கம் இருந்து குரல் எடுத்து அழுதாள்.

"அழுங்க! நல்லா அழுங்க! ரெண்டு பேருமா சேர்ந்து என்னைப் பெத்துட்டீங்க! வித்தியாசமா வேற பெத்துப் போட்டுட்டீங்க! இப்ப அனுபவிக்கறது யாரு!" என்று மறுபடியும் கத்தினான்.

அதற்குள்ளாக ஏழுமலை செல்ஃபோனை எடுத்து சத்யபிரகாஷுக்கு போனை அடித்தார். "டேய் ஆரம்பிச் சுட்டான்டா! உள்ள போய் கதவைச் சாத்திட்டு எல்லாத்தையும் போட்டு உடைச்சிட்டிருக்காடா!" என்றார் கலவையான சத்யபிரகாஷ் தன் அலுவலக மேனேஜரிடம் போய் அனுமதி வாங்கிக் கொண்டு புறப்பட்டான்.

"தம்பி! இந்த மாசத்திலேயே நாலு தடவை பர்மிஷன் வாங்கிட்டீங்க" என்றார் மேனேஜர்.

அவன் உதட்டைக் கடித்துக் கொண்டான்.

"உங்க சிச்சுவேஷன் எனக்குப் புரியுது. ஆனால் கவர்மெண்ட் ஜாப்ல இப்படியெல்லாம் பர்மிஷன் இல்லை. தெரியும்லே. எதுக்கும் ஒரு லீவு லெட்டர் கொடுத்துட்டுப் போங்க. யாராவது ஹையர் அஃபீஷியல் வந்தா நான் மேனேஜ் பண்ணிக்கிறேன்." என்றார் வங்கி மேனேஜர்.

அவன் எழுதிக் கொடுத்துவிட்டு வந்தான்.

பைக்கை எடுத்துக் கொண்டு நேராக வீட்டுக்குப் போனான்.

"பாருடா மூணு மணிநேரம் ஆச்சு! உள்ள போய் சாப்பிடவும் இல்லை. ஒண்ணும் இல்லை. என்னமோ ரோட்ல நடந்திருக்கு. அவ ஃப்ரெண்ட்ஸ் வந்து சொல்லிட்டுப் போனாங்க."

சத்யபிரகாஷ் தலையைப் பிடித்துக் கொண்டு சற்று நேரம் சோஃபாவில் அமர்ந்திருந்தான்.

பிறகு எழுந்து "உமா வெளிய வா!" என்றான்.

"நான் ஒண்ணும் வரமாட்டேன் போ" என்றாள் அவள்.

சத்யபிரகாஷ் வந்தவுடனேயே அவளுக்கு கொஞ்சம் தெம்பாக இருந்தது. "அண்ணன் வந்துட்டேன்டா கொஞ்சம் வெளிய வாடா" என்றான்.

அவள் மெதுவாக கதவைத் திறந்தாள்!

சத்ய பிரகாஷ் உள்ளே போனான்.

அங்கங்கே இருந்த பிளாஸ்டிக் பொருட்கள் எல்லாம் தூளே உருண்டு கொண்டிருந்தன. அத்தனை கோபத்திலும் அவள் கண்ணாடிப் பொருட்களை உடைக்கவில்லை என்பதைப் பார்த்து மெல்லப் புன்னகைத்துக் கொண்டான்.

"என்னடா! ஏண்டா?" என்றான்.

"நான் இனிமே ரோட்ல தனியா போக மாட்டேன்" என்றாள்.

"நான் பாட்டுக்கு வந்துட்டிருக்கிறேன். ஏதோ ரெண்டு மூணு குழந்தைங்க! சின்னப் பசங்க! அதுங்களுக்கெல்லாம் யாரு சொல்லித் தர்றாங்க! ஏதோ பெரியவங்க சொல்லிக் கொடுத்து வேடிக்கை பார்க்கறாங்க. கல்லை எடுத்து வீசிட்டான்ங்க" என்று நெற்றியைக் காட்டிக் கொண்டு தேம்பி அழுதாள்.

சத்யபிரகாஷ் சகோதரனும் அல்லாமல் சகோதரியும் அல்லாமல் இருக்கிற தன்னுடைய உடன் பிறப்பை தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

"கொஞ்ச நாளைக்கு இருக்கும்டா! அப்புறம் சரியாப் போயிடும்" என்றான்.

"நான் இனிமே இந்த மாதிரி லேடிஸ் டிரெஸ் போட மாட்டேன். நான் இனிமே ஜென்ஸ் டிரெஸ் தான் போடுவேன். ஹேர் கட் பண்ணிக்கிறேன். நான் பையனாகவே இருப்பேன்" என்றாள் உமா.

"சரிடா உன் விருப்பம் எப்படியோ இரு" என்றான் சத்யபிரகாஷ் "சாப்பிட்டியா இல்லையா? வா சாப்பிடு இனிமே எங்காவது போறதுன்னா சொல்லு. நான் வர்றேன். கொஞ்ச நாள் ஆகற வரைக்கும்" என்றான். ஆறுதல் படுத்தி அழைத்துக் கொண்டு வந்து உணவு உண்ண வைத்தான்.

தானும் அமர்ந்தான்.

தங்களுடைய அலுவலகத்தில் நடந்த வேடிக்கைகளைச் சொன்னான்.

மேனேஜருக்கு போன் செய்து அரை நாள் லீவு சொல்லி விட்டான்.

சற்று நேரம் கழித்து இதுவரை நடந்த உணர்ச்சிக் கொந்தளிப்பின் விளைவாக களைப்புற்றிருந்த உமா படுத்துத் தூங்கி விட்டாள்.

அப்பாவின் அறைக்குப் போய் அம்மாவுடன் குசுகுசு வென்று பேசினான் சத்தியபிரகாஷ். "அப்பா தினமும் அவளுக்கு பிரச்சினை வரும். உள்ளேயும் ஃபிரஸ்ட்ரேஷன்

இருக்கும். அவளுக்கு உள்ளுக்குள்ளேயே என்னென்னமோ நடக்கும்பா. நான் புத்தகங்களிலே படிச்சேன்.

உடம்பு அவளுக்குப் பெண்ணா இருக்கு. ஆனா மனசு ஆணா இருக்கு. அதிலேயும் பாருங்க நமக்கு! ஜென்ரலா வந்து ஆணா இருந்து பெண்ணா மாற்றதுதான் காமன் விஷயமாம். ஆனா இது மாதிரி இருக்கறது ரேர் அப்படிங் கறாங்க நாம சமாளிச்சுத்தான் ஆகணும்" என்றான்.

"என்னடா, பண்ணச் சொல்றே, இந்தக் காலனி ஜனங்க புரிஞ்சுக்கவே மாட்டேங்கறாங்க இந்தப் பசங்கள தட்டி விட்டு ரகளை பண்றாங்க."

"அப்பா பேசாம நீ லோன் போட்டுக் கட்டியிருக்கியே அந்த வீட்டுக்குப் போயிறலாம்பா" என்றான் மகன்.

"அங்க போனா மட்டும் நாலு நாள் கழித்து எல்லாருக்கும் தெரியதான் போகுது. கொஞ்சம் அவுட்டர் வேற."

"அவுட்டர் ஆனா என்னப்பா நீ தான் ரிட்டயர் ஆயிட்டியே. நான் மைதிலியை கொண்டு வந்து காலேஜில் விட்டுடறேன். அது ஒண்ணும் பிரச்சினை இல்லை" என்றான்.

"பஸ்ட் இயர் தானேப்பா போறா? நான் கொண்டு வந்து காலேஜில் விட்டுடறேன்" என்றான்.

அப்பா யோசனையுடன் மனைவியைப் பார்த்தார் திலகம் தலையசைத்தாள்.

"ஆமாங்க, இது பழகுன ஏரியாவுல திடீர் மாற்றம்னா இப்படித்தான் இருக்கும். நாம அங்க போயிடலாம்."

"அது கொஞ்சம் பெரிய ஏரியா தனித்தனி வீடு. நம்ம வீட்டுக்குள்ள என்ன நடக்குதுன்னு அங்க யாருக்கும் தெரியாது.

அப்போது தான் சத்யபிரகாஷ் அந்த யோசனையைச் சொன்னான்.

அவனுக்கு முதல் முதலாக பள்ளியில் தலைமை ஆசிரியர் அழைத்துப் பேசியதற்கு பின்பு உமாவை கவுன்சிலிங்குக்காக ஒரு டாக்டரிம் அழைத்துச் சென்றது நினைவுக்கு வந்தது.

அவர் அவளை பரிசோதித்துப் பார்த்து விட்டு ஹெர்மோ ப்ராடெக்ட் என்று சொன்னார் "அப்படின்னா இவங்க ஜெண்டர்லெஸ், கிராஸ் ஜெண்டர் என்ன வேணும்னாலும் சொல்லலாம்.

"இப்ப உடம்புல உமா பொண்ணா இருந்தா கூட இவங்க மனசுக்குள்ள ஆணா ஃபீல் பண்ண ஆரம்பிச்சிருக் காங்க. இதை நீங்க புரிஞ்சுக்கணும். என்று அவனுக்கும் சொல்லி அவளுக்கும் கவுன்சிலிங் கொடுத்திருந்தார்.

அதெல்லாம் இப்போது நினைவுக்கு வந்தது சத்யபிர காஷுக்கு அது மட்டுமல்லாமல் சகோதரிக்காக மாதம் ஒரு முறையாவது ஒரு மனோ தத்துவ நிபுணரை பார்க்க அழைத்துப் போய் இந்தப் பிரச்சினைகளை சந்திப்பதற்கான தெம்பை கொடுப்பதற்காக கவுன்சிலிங் கொடுத்துக் கொண்டுதான் இருந்தான்.

இப்பொழுது அப்பாவிடம் சொன்னான். "அந்த வீட்டுக்குப் போகும் போது உமாவை இனிமேல் உமாகாந் தன்னே கூப்பிடறோம். உமா இனிமே அங்கே பையனாவே டிரஸ் பண்ணி பையனாவே அறிமுகமாகட்டும்" என்றான்.

"என்னடா சொல்றே. சொந்தக் காரங்க எல்லாம்?"

"அம்மா! இன்னிக்கு இல்லைன்னாலும் நாளைக்கு தெரியதாம்மா போகுது. எல்லா விஷயத்துக்கும் இனிஷியல் ஷாக்ன்னு ஒண்ணு இருக்கும். அந்த இனிஷியல் ஷாக் முடிஞ்சதுக்கப்புறம் ஏத்துக்கறவங்க ஏத்துக்கட்டும் ஏத்துக்காதவங்க இடத்துக்கு உமா போக வேண்டாம்."

அம்மாவும் அப்பாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

வேறு வழியிருக்கவில்லை.

"டேய் இப்படி பண்ணினா உன் கல்யாணம்"

மைதிலி கல்யாணம் என்று ஆரம்பிக்க "இனிமேல் கல்யாணம்னு பேசாதிங்க. மைதிலிக்கு எதுக்கு இப்பவே கல்யாணம்னு கல்யாணம் சொல்லிட்டிருக்கீங்க. அவ படிக்கட்டும் அவ சொந்தமா சம்பாதிக்கிற அளவுக்கு அவளுக்கு ஒரு தொழிலை உருவாக்கிக் கொடுத்திடலாம்" என்றான்.

அப்பாவும் அம்மாவும் அவன் சொல்வதை ஏற்றுக் கொள்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இருக்க வில்லை."

"உமாகாந்தன், அப்படின்னு யாருடா பேரு சொன்னார்?"

"அவ தான். உமாதான் சொன்னா அவளுக்கு அந்தப் பேரு தான் வேணுமாம். அப்பாவும் அம்மாவும் மறுபடியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். "ஏத்துக் கொள்ளலாம்பா. அவ உமாகாந்தனாகவே இருந்துட்டுப் போகட்டும்" என்றார்.

அப்படித்தான் முடிவெடுத்து இப்போதிருக்கிற காலனிக்கு வந்திருந்தார்கள். அவர்கள் முதலில் இருந்த வீடு சிறிய வீடு அதுவும் சொந்த வீடுதான் என்றாலும் அப்பா தன்னுடைய சர்வீஸ் காலத்தில் ரிட்டையர் ஆவதற்கு முன்பாகவே பத்து வருடங்களுக்கு முன்பாகவே லோன் போட்டு இந்த வீட்டைக் கட்டியிருந்தார்.

அவர் ஒத்த அலுவலர்கள் பலர் அந்தக் குடியிருப்பில் இருப்பதாலும் மேல் நடுத்தரக் குடும்பங்கள் அங்கே இருப்பதாலும் அது கிட்டத்தட்ட ஏழு செண்டில் அமைந் திருந்த வீடு என்பதால் அங்கே அவர்கள் சென்றிருப்பது நல்லதுதான் என்று இப்பொழுதும் அவருக்குத் தோன்றியது.

ரிட்டையர் ஆனதற்கு பின்பு அந்த வீட்டில் இருந்து வரும் வருமானம் அவருக்கு உதவி கரமாக இருந்தது. அதனால் தான் தயங்கிக் கொண்டிருந்தார்.

இப்பொழுது தினமும் குழந்தை அடிபட்டுக் கொண்டு வந்தால் எப்படி பாதுகாப்பது என்ற கவலை வரவே சத்யபிரகாஷின் அந்த திட்டத்திற்கு அவர் ஒப்புதல் அளித்தார்.

உமாகாந்தன் என்றுதான் மகளை இல்லை மகனை ஏற்றுக் கொள்ள வேண்டும். என்கிற முடிவுக்கும் அவர்களை படிப்படியாக கொண்டு வந்து சேர்த்தான் சத்யபிரகாஷ்.

அதோடு நிற்கவில்லை அதற்குப் பிறகு இன்னொரு பெரிய அதிர்ச்சியும் அவர்களுக்காக அவன் வைத்திருந் தான்.

ஆறு மாதங்கள் போயிருக்கும். அந்த வீட்டிற்குப் போனதற்குப் பிறகு உமாகாந்தன் அங்கே இருந்தான்.

அந்த நேரத்தில் தான் அலுவலகத்தில் அவனுக்கு மாற்றல் உத்தரவு வந்தது. அதுவும் பாம்பேவுக்கு அருகிலே எங்கோ ஒரு கிராமத்துக்கு வந்தது.

யோசனையில் ஆழ்ந்தான் சத்யபிரகாஷ். வீட்டிற்கு வந்து பெற்றோர்களிடத்தில் சொன்னான்.

அதைக் கேட்ட வுடனேயே பெற்றோர்கள் முகத்தில் தோன்றிய பீதி அவனை நிரம்பவும் யோசிக்க வைத்தது.

அவனும் ஒரு நாள் அலுவலகத்தில் டைம் கேட்டுவிட்டு வந்தவன். தீர யோசித்து அந்த முடிவுக்கு வந்தான். அப்பாவையும் அம்மாவையும் அழைத்து வைத்துக் கொண்டு சொன்னான்.

"அப்பா நான் இந்த ஒர்க்கை ராஜினாமா பண்றேன்" என்றான்.

அதிர்ந்து போனார்கள் ஏழுமலையும், திலகமும்.

"என்னப்பா சொல்றே! ஆமாம்பா! உங்களையும் மைதிலியையும் உமாவையும் இங்க விட்டுட்டுப் போனாலும் எனக்கு நிம்மதி இருக்காது. உங்களால உமாவை தனியா சமாளிக்கவும் முடியாது. அதனால நான் ஜாபை ரிசைன் பண்றேன்."

"தம்பி, யோசிச்சுக்கோ மாசமானா முள்ளங்கிப் பத்தையாட்டம் வருமானம். இதை விட்டுட்டு இவனுக்காக நீ தியாகம் பண்ணிட்டு நாளைக்கு உன் வாழ்க்கையை கெடுத்துக் காதே."

"இல்லைப்பா கவலைப்படாதிங்க! இரண்டு மாசமா நான் ஆல்டர்நேட்டிவ் பிளான் ஒண்ணு பண்ணிட்டேன். என் ஃப்ரெண்டுக்கு வேண்டிய ஒருத்தர். அவங்க வெளி

நாடு போயிருக்காங்க. அவங்களோட பங்களா ஒண்ணும் பக்கத்துல ஒரு பெரிய இடமும் அவன் பொறுப்புல கொடுத்திருக்காங்க. அவனும் இப்ப ஃபாரின் போறான். அதனால என்கிட்ட பேசி அவன் என் பொறுப்புல விடறான். அங்க நான் ஒரு சின்னதா கார் ப்ரெஷ்னிங் சென்டர்னு ஒண்ணு ஆரம்பிக்கிறேன்."

அப்பாவும் அம்மாவும் மறுபடியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"அது இப்போது புதுசா வந்திருக்கிற கான்சப்ட். கார்ல எல்லாம் டெக்கரேட் பண்ணித் தரது. கொஞ்சம் ஹைஃபையா வேணுங்கற வசதி செஞ்சு தர்றது. அதுவும் ஹைகிளாஸ்ல இப்ப வந்து ஃபேமஸ் ஆயிட்டிருக்கு. நல்ல வருவாய் இருக்கும்பா."

"உங்களுக்குத் தெரியாம நான் இப்ப ஈவ்னிங் காலேஜ் மாதிரி சேர்ந்து ஆட்டோ மொபைல் டிப்ளமோ ஒண்ணு பண்ணியிருக்கேன்."

அப்பாவும் அம்மாவும் மறுபடியும் கூடி ஆலோசித்தார்கள்.

பிறகு அப்பா சொன்னார். "ம்... வாழ்க்கையை ரிஸ்கியா பண்ணிக்கிற மாதிரி தோணுது. ஒரு பாதுகாப்பான பாங்க்ல இருந்து நாளைக்கு வருமானம் கிடைக்குமாங்கற நிலைக்கு போறே! உன் வாழ்க்கையை பார்த்துக்கப்பா. உமாவோட பிரச்சினை இருக்கவே இருக்கு. அதுக்காக நீ நாளைக்கு கல்யாணம் குழந்தைகுட்டின்னு வாழ்ந்துடாம இருக்க முடியுமா? நீயாவது அந்த சந்தோஷத்தைக் கொடுப்பா" என்று கேட்டார்.

"அதை பார்க்கலாம்பா. ஏன்னா இப்ப உமாவோட பிரச்சினை இப்படி இருக்கிறதுனால எப்படி இருந்தாலும் ஒரு அலையன்ஸ்னு வரும் போது அவங்ககிட்ட இதெல்லாம் சொல்ல வேண்டியது வரும். அதையெல்லாம் ஏத்துப்பாங்களோ ஏத்துக்க மாட்டாங்களோ தெரியாது. அதனால இப்போதைக்கு கல்யாணம் வேண்டாங்கற முடிவுல தான் இருக்கிறேன். நான் ஏற்கனவே வாக்கு கொடுத்திருக்கேன். உமாவை ஸ்டெபிலைஸ் பண்ணிட்டு மைதிலிக்கு ஒரு வழி பண்ணிட்டுத்தான் என்னைப் பத்தி நான் யோசிப்பேன். அதே ஸ்டாண்ட்ல தான் நான் இப்பவும் நிக்கிறேன்" என்றான்.

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் வேறு வழியிருக்கவில்லை. சத்யபிரகாஷ் பதினைந்தாவது நாள் ராஜினாமா கடிதத்தைக் கொடுத்து விட்டு வெளியே வந்து ஆரம்பித்தது தான் கார் பிரஷ்னிங் சென்டர்.

தனது இருக்கையிலே சாய்ந்தபடி பழைய நினைவுகளை எல்லாம் ஓட்டிக் கொண்டிருந்த சத்யபிரகாஷ் நீண்ட ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு நிமிர்ந்து அமர்ந்தான்.

அப்போது தான் அந்தக் காட்சி அவன் கண்களில் பட்டது. எதிர்பாராத காட்சி! 'படக்'கென்று நிமிர்ந்து அமர்ந்தான்.

கண்களை அகல விரித்துக் கொண்டு தன்னுடைய பெரிய ஏரியாவினுடைய முன் புறக் கேட்டில் பார்வையைப் பதித்து ஆச்சரியம், சந்தேகம், அதிர்ச்சி, எல்லாமும் கலந்த ஒரு உணர்வு பொங்க அமர்ந்து கொண்டிருந்தான்.

அத்தியாயம் - 15

"என்ன ஆச்சரியம்! என்ன இது?" என்று மகிழ்ச்சியாக எதிர்கொண்டு வரவேற்றான் சத்யபிரகாஷ்.

"என்ன சார்! நான் வர்றது பெரிய ஆச்சரியமா?" என்று தன்னுடைய டூவிலரைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தாள் ஏழிசை வல்லபி.

"என்ன இசை இப்படிச் சொல்லிட்டீங்க." என்று சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டு "உங்களை நான் அப்படிக் கூப்பிடலாம்லே."

"ஐயோ! ரொம்ப அழகா இருக்கு இப்படி யாருமே கூப்பிட்டதில்லை. கூப்பிடுங்க" என்றாள் அவளும் ஆர்வமாக.

"வாங்க உள்ளே வாங்க! என்று உள்ளே அழைத்துக் கொண்டு போனான்.

அவனுடைய பெரிய அலுவலகத்தை நோட்டமிட்டபடி அவள் உள்ளே வந்து அமர்ந்தாள்.

"ஃபுல்லா நீங்களேதான் மேனேஜ் பண்ணிக்கிறீங்களா சார்" என்றாள்.

"ஆமாம், மேடம் அக்கவுண்ட்ஸ் அது இதெல்லாம் நானே பார்த்துப்பேன். ஏன்னா பெரிய ஓர்க் இல்லை. மேனுவல் ஓர்க் பக்கமும் நான் போறது இல்லை. அதுக் கெல்லாம் வேணுங்கற ஆட்கள் இருக்கறாங்க" என்றவன்.

"உதவிக்கு பசங்க நிறைய இருக்காங்களே! ஒரு நாலைஞ்சு பேர் இருக்காங்க. அது போக ஒரு லேடி கூட இருக்காங்க" என்றான்.

"அதை பார்க்கலாம்பா. ஏன்னா இப்ப உமாவோட பிரச்சினை இப்படி இருக்கிறதுனால எப்படி இருந்தாலும் ஒரு அலையன்ஸ்னு வரும் போது அவங்ககிட்ட இதெல்லாம் சொல்ல வேண்டியது வரும். அதையெல்லாம் ஏத்துப்பாங்களோ ஏத்துக்க மாட்டாங்களோ தெரியாது. அதனால இப்போதைக்கு கல்யாணம் வேண்டாங்கற முடிவுல தான் இருக்கிறேன். நான் ஏற்கனவே வாக்கு கொடுத்திருக்கேன். உமாவை ஸ்டெபிலைஸ் பண்ணிட்டு மைதிலிக்கு ஒரு வழி பண்ணிட்டுத்தான் என்னைப் பத்தி நான் யோசிப்பேன். அதே ஸ்டாண்ட்ல தான் நான் இப்பவும் நிக்கிறேன்" என்றான்.

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் வேறு வழியிருக்கவில்லை. சத்யபிரகாஷ் பதினைந்தாவது நாள் ராஜினாமா கடிதத்தைக் கொடுத்து விட்டு வெளியே வந்து ஆரம்பித்தது தான் கார் பிரஷ்னிங் சென்டர்.

தனது இருக்கையிலே சாய்ந்தபடி பழைய நினைவுகளை எல்லாம் ஓட்டிக் கொண்டிருந்த சத்யபிரகாஷ் நீண்ட ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு நிமிர்ந்து அமர்ந்தான்.

அப்போது தான் அந்தக் காட்சி அவன் கண்களில் பட்டது. எதிர்பாராத காட்சி! 'படக்'கென்று நிமிர்ந்து அமர்ந்தான்.

கண்களை அகல விரித்துக் கொண்டு தன்னுடைய பெரிய ஏரியாவினுடைய முன் புறக் கேட்டில் பார்வையைப் பதித்து ஆச்சரியம், சந்தேகம், அதிர்ச்சி, எல்லாமும் கலந்த ஒரு உணர்வு பொங்க அமர்ந்து கொண்டிருந்தான்.

அத்தியாயம் - 15

"என்ன ஆச்சரியம்! என்ன இது?" என்று மகிழ்ச்சியாக எதிர்கொண்டு வரவேற்றான் சத்யபிரகாஷ்.

"என்ன சார்! நான் வர்றது பெரிய ஆச்சரியமா?" என்று தன்னுடைய டூவிலரைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தாள் ஏழிசை வல்லபி.

"என்ன இசை இப்படிச் சொல்லிட்டீங்க." என்று சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டு "உங்களை நான் அப்படிக் கூப்பிடலாம்லே."

"ஐயோ! ரொம்ப அழகா இருக்கு இப்படி யாருமே கூப்பிட்டதில்லை. கூப்பிடுங்க" என்றாள் அவளும் ஆர்வமாக.

"வாங்க உள்ளே வாங்க! என்று உள்ளே அழைத்துக் கொண்டு போனான்.

அவனுடைய பெரிய அலுவலகத்தை நோட்டமிட்டபடி அவள் உள்ளே வந்து அமர்ந்தாள்.

"ஃபுல்லா நீங்களேதான் மேனேஜ் பண்ணிக்கிறீங்களா சார்" என்றாள்.

"ஆமாம். மேடம் அக்கவுண்ட்ஸ் அது இதெல்லாம் நானே பார்த்துப்பேன். ஏன்னா பெரிய ஓர்க் இல்லை. மேனுவல் ஓர்க் பக்கமும் நான் போறது இல்லை. அதுக் கெல்லாம் வேணுங்கற ஆட்கள் இருக்கறாங்க" என்றவன்.

"உதவிக்கு பசங்க நிறைய இருக்காங்களே! ஒரு நாலைஞ்சு பேர் இருக்காங்க. அது போக ஒரு லேடி கூட இருக்காங்க" என்றான்.

அவள் ஆச்சரியமாக அவனைப் பார்த்தாள். "சார் பொதுவா இந்த மாதிரி நிறுவனங்கள்ல லேடிஸ்ன்னு!" இழுத்தாள்.

"இல்லை இல்லை, இவங்க ரொம்ப நாளா இருக்காங்க!"

"ஆக்சுவலா இந்த கன்சர்ன் ஆரம்பிச்சதுல இருந்தே இருக்காங்க. அவங்களுக்கு ஒரே ஒரு மகன். ஆனா அவன் அவங்களை விட்டுட்டுப் போயிட்டான். அதனால பொறுப்பா பார்த்துப்பாங்க. இங்கே தங்கிப்பாங்க."

"அது போக ஒர்க் ஷாப் பசங்க இங்கே தங்கிக்கிறாங்க என்றவன். "கங்காம்மா" என்று அழைத்தான்.

"தம்பி!" என்று ஓடி வந்தார்கள் அந்த அம்மா.

"வாங்க இவங்க நம்மளுக்கு வேண்டியவங்க ஏதாவது காபி, டீ வாங்கிட்டு வாங்க" என்றான்.

"வேறென்ன, சாப்பிடறீங்க இங்க பக்கத்துல கேன்டின் இருக்கு. வடை ரொம்ப நல்லா இருக்கும். வாங்கிட்டு வரச் சொல்லட்டுமா?" என்றான்.

"காபி டீ யெல்லாம் வேண்டாம் சார். ஆக்சுவலா நான் ஒரு ஆப்ளிகேஷனுக்காக வந்தேன்" என்றாள்.

"சொல்லுங்க சொல்லுங்க" என்றான்.

"இங்க பக்கத்துல ஸ்கூல்ல தான் எனக்கு சூப்பர்விஷன் மத்தியானத்தோட சூப்பர்விஷன். முடிஞ்சுருது. அங்கே கூட உட்கார்ந்து சாப்பிடறதுக்கு யாரும் இல்லை. சரி நான் உங்களைப் பார்த்த மாதிரியும் ஆச்சு இங்கே ஒரு பக்கமா உட்கார்ந்து சாப்பிட்டுட்டு" என்று இழுத்தாள்.

"ஓய் நாட்! ஆஹா இப்படியெல்லாம் பெண்கள் வந்து போயிட்டிருந்தாதானே களை கட்டும். வாங்க வாங்க"

என்று அவளை அழைத்துக் கொண்டு போய் தனக்கென்று இருந்த அந்தச் சிறிய அறையில் அமரச் செய்தான்.

அங்கே அழகாக ஒரு நீண்ட டேபிள் இருந்தது. அதிலே அவள் தன்னுடைய டிபன் பாக்ஸை எடுத்து வைத்துக் கொண்டு "நீங்க!" என்றாள்.

"வழக்கமா வீட்டிற்குப் போவேன்! இன்னிக்கு என்னமோ அதிசயமா கொண்டு வந்துட்டேன்."

"அப்ப நீங்களும் உட்கார்ந்து சாப்பிடுங்க" என்றாள். அவன் "சரியென்று சொல்லுவானா என்பது போல அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்க. 'ஓய் நாட்' என்று அவனும் தன்னுடைய டிஃபன் பாக்ஸை எடுத்துக் கொண்டு வந்தான்.

"கங்காம்மா ஒரு வேலை செய்ங்க! நீங்க கொஞ்சம் வடை வாங்கிட்டு வந்திடுங்க இவங்களுக்கும் சேர்த்து வாங்கிட்டு வந்துடுங்க" என்றான்.

"சூடா இருக்கும் வடை சாப்பிடலாம்ல." என்றான். "என்ன ஆச்சரியம்! ஏழிசை இன்னிக்கு ஒரு நாள் மட்டும் தானா எத்தனை நாள் உங்களுக்கு சூப்பர்விஷன்?"

"எனக்கு இந்த வாரம் பூரா இருக்கு. அதுக்கப்புறம் கூட இரண்டு நாளைக்கு ஒருதரம் இருக்கு. ஒரு டென் டைம்ஸ் வருவேன்னு நினைக்கிறேன்."

"பேசாம நீங்க இங்கேயே சாப்பிட வந்திடுங்க" என்றான்.

"பட் ஒன் கன்டிஷன்" என்றாள்.

"சொல்லுங்க" என்றான்.

"உங்களுக்கும் சேர்த்துக் கொண்டு வருவேன்" என்றாள்.

"இதுக்கு மேல என்ன இன்பம் வேணும் கொண்டுவாங்க." என்றால் கேலி போல.

"சார் சீரியஸா சொல்றீங்களா. ஃபீல் பண்றமாதிரி தெரியுது" என்றாள்.

"இல்லைங்க! உண்மையாவே உங்க சமையல் அன்னிக்கு ரொம்ப அருமையா இருந்தது. நான் கூட எங்க வீட்ல சொல்லிக்கிட்டு இருந்தேன். மைதிலிக்குக் கூட ரொம்ப பொறாமையாப் போயிருச்சுன்னு வச்சுக்கங்களேன். போதுண்ணா ஓவராத்தான் பில்டப் கொடுத்திட்டீங்கன்னு சொன்னா."

"ஆமா பின்னே எப்பவும் ஒரு லேடியோட சமையலைப் பத்தி இன்னொரு பொண்ணுக்கிட்ட சொன்னீங்க ஒத்துக்கவே மாட்டாங்க" என்றாள்.

"கூடவே அவளுடையதும் நல்லா இருக்குன்னு சொன்னேன் வேற வழியில்லாம."

"மைதிலிகிட்ட சொல்றேன். இருங்க!"

"சொல்லுங்க சொல்லுங்க. எனக்கு ஒண்ணும் பாதிப்பு இல்லை. முக்கியமான சமையல் அம்மாதான். இவ அப்ப அப்ப ரெஸிபி டிரை பண்றேன்னு கொல்லுவா."

"ஏன் சார், நான் இப்ப தான் உங்க கிட்ட பழகறேன். உங்க சிஸ்டரை விட்டுக் கொடுக்கலாமா?" என்றாள்.

"ஆமா இல்லை கரெக்ட் பாயிண்ட். ஆமா உங்க பிரதரும் நானும் ஃப்ரெண்ட்ஸ் ஆயிட்டோமே. நம்ம

ஃபேமிலியும் நல்ல ப்ரெண்ட்ஸ் ஆயிட்டோம். அந்த உரிமையில ஃபிரியா சொன்னேன்னு வச்சுக்கங்களேன்."

"சரிங்க சார் அப்படித்தான் வச்சுக்கிறேனே" என்று தான் கொண்டு வந்திருந்த டிபன் பாக்சில் இருந்து இன்னிக்கு "சிம்பிளா கொண்டு வந்தேன் சார் எலுமிச்சம் பழச்சாதம்" என்றாள்.

"அப்படியா அவசரமா புறப்பட்டு இருப்பீங்க?" அம்மா சமையலா?" என்றாள்.

"இல்லை சார்!" நான் ஏழரைக்கே கிளம்பணும். அம்மாவை அந்த நேரத்துல தொந்தரவு பண்ண வேண்டாம்னு நான் எனக்கு மட்டும் செஞ்சு எடுத்துட்டு வந்துட்டேன்" என்றாள்.

"அப்படியா! ரொம்ப பொறுப்பா இருப்பீங்க போல இருக்கே."

"ஆமாம் சார்! நாம ஒரு டீச்சரா இருந்துட்டு நம்மளே பொறுப்பா இல்லாம அடுத்தவங்களுக்கு எப்படி ஒழுக்கமா இருங்கன்னு சொல்றது?" என்றாள்.

"ம்... எப்படி?" என்று அவன் ஒரு விதமாக முகத்தை வைத்துக் கொண்டு சிரித்தான்.

அவள் அவனை கோபமாக பார்த்தாள்.

பொய்க் கோபம்தான்.

"ஓ.கே. ஓ.கே. சாரி சாரி" என்று சரண்டர் ஆவது போல் இரண்டு கைகளையும் நிறுத்தி சிரித்தான்.

அப்படி அவன் சிரிக்கையிலே மிகவும் அழகாக இருந்தது.

மகன் கைவிட்டு விட்ட ஒரு தாய்க்கு தன்னுடைய இடத்திலே அடைக்கலம் கொடுத்து வைத்திருக்கிற பண்பு அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

இரண்டு பேரும் சற்று நேரம் சிரித்துப் பேசிக் கொண்டு சாப்பிட்டார்கள்.

அவள் தனது பள்ளிக்கூடத்திலே மாணவர்கள் செய்கிற கலாட்டாக்கள் பற்றி எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவனும் ரசித்துக் கேட்டுக் கொண்டான்.

தன்னுடைய கல்லூரிக் காலங்களில் தான் செய்த கலாட்டாக்களை இடையிலே சொன்னான்.

ஒரு மணி நேரம் போனதே தெரியாமல் அப்படியே அவர்கள் செலவழித்தார்கள். அதற்குப் பிறகுதான் அவள் "சரி நான் கிளம்பட்டுமா சார்" என்றாள்.

"ரொம்ப நல்லா இருந்தது நீங்க இங்க வந்தது. ஆக்சுவலா கொஞ்ச நாளாவே எல்லாருகிட்ட இருந்தும் விலகித்தான் இருந்தேன்" என்றான். ஆழ்ந்த பாவனையுடன்.

அவள் சட்டென்று அவன் எதிரிலே அமர்ந்தாள். "நான் உங்கள் கஷ்டங்களை காது கொடுத்துக் கேட்கப் போகிறேன் என்பது போல.

"ஏன் சார்?"

"உங்களுக்குத் தெரியலையா! உமா!" என்று ஆரம்பித் தான்.

அவள் உடனே தனது வலது கையை உயர்த்தினாள். "புரிஞ்சது சார் உங்க கஷ்டம் என்னன்னு "புரிஞ்சது. இந்த வாடா மல்லி, அரவாணிகள் புத்தகமும் நான் வித்யாவும்

படித்தேன் சார். மனசுக்கு ரொம்ப கஷ்டமாயிருந்தது" என்றாள்.

அவன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

இவ்வளவு நேரம் சிரித்ததெல்லாம் மறந்து போனது போல "ரொம்ப கடந்து வந்திருக்கிறோம் இசை!" என்றான்.

இசை என்று அவன் அழைப்பது ஏனோ அவளுக்குப் பிடித்திருந்தது.

புன்னகையுடன் அவனைப் பார்த்துக் கொண்டு சொன்னாள் "கடந்து வந்துட்டீங்க சார்! உண்மை யாவே நான் உங்களைப் பாராட்டணும். இவ்வளவு சப்போர்ட் கொடுத்து அவரு வெளி உலக அனுபவங்களிலே சிக்கிட்டு கஷ்டப்படாம ஒரு சிறகை மூடின மாதிரி மூடி அவரைக் காப்பாற்றி இருக்கீங்க. யு ஆர் சிம்ப்லி கிரேட்" என்றாள்.

அவன் மறுபடியும் ஒரு வேதனைக் கலந்த பாவத்துடன் அவளைப் பார்த்தான். "ஆக்சுவலா ஒரு வகையில நானும் இதற்குக் காரணம்" என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள். "நீங்க எப்படிக் காரணமா இருக்க முடியும்? அவங்க அப்படிப் பிறந்து வந்தது அவங்களுடைய ஃபிசிக்கல் பிராப்ளம். அதுல நீங்களோ உங்க பெற்றோர்களோ யாருமே பங்கெடுத்துக்க முடியாது. யு ஆர் மிஸ்டேக்கன்." அவன் கசப்பாக புன்னகைத்துக் கொண்டான்.

"இல்லை, மேடம் ஒரு நாள் இல்லைன்னா ஒரு நாள் உங்ககிட்ட பேசறேன். அப்புறம் நெக்ஸ்ட் மந்த் உங்க பர்த்டே வருது போல இருக்கு." என்றாள்.

"அது எப்படி உங்களுக்கு?"

"உங்க அண்ணா சொல்லிக்கிட்டு இருந்தாரு."

"அதெல்லாம் சொல்லிட்டாரா" என்றாள்.

"இல்லைங்க. ஏதோ பேச்சு வந்தது. அப்போ பரவாயில்லை அது இதுன்னு பேசிட்டிருந்தப்போ ட்ரீட் அது இதுன்னு பேசிட்டிருந்தோம். அப்ப சொன்னாப்ல" என்று அவன் மழுப்பி விட்டான்.

எந்தக் கட்டத்தில் சொன்னது என்று கேட்டால். தான் அவளுக்காக வரைந்து கொண்டிருக்கிற ஓவியத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமல்லவா? அதனால் அது சஸ்பென் ஸாகவே இருக்கட்டும் என்று நினைத்தான்.

"அப்படி இல்லை நீங்க கொடுத்த ஐடியாவுக்கு ரொம்ப தாங்க்ஸ்!" என்றான்.

"சின்னதா ஒரு ஷோக்கேஸ் பண்ணச் சொல்லி ஒரு மினி சைஸ் ஆர்ட் கேலரி மாதிரி வைக்கச் சொன்னீங்க பாருங்க" என்றான்

அப்போதுதான் அவள் அதை கவனித்தாள்.

அங்கேயே ஒரு மூன்று நான்கு ஓவியங்கள் வைக்கப் பட்டிருந்தன.

"இப்ப ரீசன்டா வரைஞ்சதா? இதெல்லாம் ரொம்ப அழகா இருக்கு சார். உங்க தம்பி உண்மையிலே ரொம்ப டேலண்டட்தான். நீங்க காந்தனை நல்லா டெவலப் பண்ணனும்" என்றாள்.

"அதானே வாழ்க்கையின் லட்சியமாக வைச்சிருச் கிறேன்" என்றான்.

அவள் திரும்பி அவனை கேள்விக் குறியோடு பார்த்தாள். "அப்படின்னா உங்க லைஃப்ன்னு ஒண்ணு இல்லையா என்றாள்?

"இல்லை மேடம்! நான் ஆக்சுவலா கல்யாணமே பண்ணிக்கிறது இல்லைன்னு முடிவு பண்ணியிருக்கேன். ஏன்னா கல்யாணம்னு வரும்போது யாரு வந்தாலும் ஒய்ப்புக்குத்தான் ஃபஸ்ட் உரிமை என்பார்கள். அவங்க இந்த மாதிரி ஒரு குடும்பச் சூழ்நிலையை ஏத்துக்கு வாங்களோ தெரியலை. என்னைக்காவது ஒரு நாள் ஏதாவது ஒண்ணு சொல்லிக் காட்டினாங்கன்னு வையுங்க. அந்த வாடாமல்லியில வற்ற அண்ணா அண்ணி கேரக்டர் மாதிரி ஆயிடும். எதுக்கு ரிஸ்க்? முடிஞ்சா மைதிலிக்கு நல்ல மாப்பிள்ளை பார்த்து பண்ணி வைக்கணும்னு இருக்கேன்" என்றான்.

"அது என்ன முடிஞ்சா? கண்டிப்பா மாப்பிள்ளை கிடைக்கும்" என்றாள் அவள்.

"சம்பத் கிட்ட கூட அதான் சொன்னேன் நல்ல மாப்பிள்ளையா இருந்தா சொல்லுங்க" என்று.

"பார்த்துட்டே இருக்கலாம். ரொம்ப சின்னப் பொண்ணா இருக்கா ஒரு டூ இயர்ஸ் பார்த்துட்டே இருக்கலாம்னு."

"அப்புறம் உங்க கல்யாணத்தைப் பத்தி யோசிக்கலையா சம்பத் முதலில் பண்ணிக்கலாம்னு ஐடியா பண்ணிக் கிட்டிருக்கிறாரா?"

"நீங்க வேற அண்ணனும் உங்களை மாதிரி தியாகம் செய்யறவருதான். முதலில் எனக்கு முடிச்சுட்டுதான்

கல்யாணம் பண்ணுவேன்னு அரிச்சு எடுத்திட்டிருக்காரு. ஆனா இப்போதைக்கு எனக்கு கல்யாணத்துல ஆர்வம் இல்லை. இந்த வேலையை நல்லா என்ஜாய் பண்ணனும் நினைக்கிறேன்.

''கல்யாணம் பண்ணிக்கிட்டு என்ஜாய் பண்ண வேண்டியதுதானே? என்ன இப்படி சொல்றீங்க? யாரோ ராகவன்னு அங்க ஏதோ பேச்சு அடிப்பட்டுக்கிட்டு இருந்ததே'' என்றான்.

அவள் முகம் சிவந்து போனது. ''இந்த ராகவனைப் பத்தி பேச்சை விடுங்க சார்'' என்றாள்.

''எப்படிங்க விடறது. கல்யாணப் பேச்சு வந்தா நேச்சுரலா ராகவன் பேச்சு வருது!''

அவள் குபீரென்று சிரித்தாள். முகம் சிவக்க சிரித்தாள்.

அவன் மலங்க மலங்க விழித்தபடி பார்த்து ''ஏங்க சிரிக்கறீங்க?'' என்றான்.

''ஐயோ சார்'' என்று ஆரம்பித்தவள் டக்கென்று வாயை மூடிக் கொண்டாள்.

அண்ணன் சஸ்பென்ஸ் என்று சொல்லியிருக்கிறானே நாம் அதை உடைத்து விடுவதா என்று எண்ணிக் கொண்டவள்.

''அது பெரிய சஸ்பென்ஸ் சார்.''

''ஓகோ அண்ணனும் தங்கையும் ரெண்டு பேரும் இதைச் சொல்லியே என்னை கவுத்தர்றதுன்னு முடிவு பண்ணியிருக்கீங்களா. இந்த சஸ்பென்ஸ் தாங்கலைங்க. பேசாம அதை உடைத்துவிடுங்க'' என்றான்.

''அண்ணன் உங்ககிட்ட சஸ்பென்ஸ்னு சொல்லியிருக்காரா இல்லையா? அப்புறம் அதை எப்படி நான் உடைக்க முடியும். அந்த ரைட் எனக்கு இல்லை'' என்றாள் அவள்.

அவன் சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு ''சரி எது ரைட்டுன்னு நீங்கதான் முடிவு பண்ணனும்'' என்றான் தன்னை அறியாமல்.

அவள் உடனே பேச்சை மாற்றுபவள் போல ''சார் இந்த ஓவியம் எல்லாம் ரொம்ப நல்லா இருக்கு. ஆனா நின்னு பார்த்தேன்னு வையுங்களேன். இன்னொரு அரியர் வந்தா அவுட் ஆயிடும். இப்போதைக்கு அரியர் எதுவும் வர மாதிரி தெரியலை.''

அவன் சிரித்தான். ''பரவாயில்லை மேடம் உங்க பார்வை போதும். எப்படி இருக்கு என்ற விமர்சனம் சொல்லுங்க. அவள் முழுமையாக ஆராய்ந்து பார்த்து ஒவ்வொரு ஓவியத்திலும் அதன் நிறங்கள் என்ன விளக்குகின்றன என்பது போல தனக்குத் தோன்றிய இன்டர் பிரடேஷன் என்று சொல்வார்களே அதுமாதிரி வேறு வேறு அர்த்தங்களை அவள் சொன்ன போது உண்மையாகவே சத்யபிரகாஷ் வியந்து போனான்.

''மேடம்! அந்த ராகவன் ஓவியரா?'' என்று கேட்டான். அவள் மறுபடியும் சிரிப்பை அடக்கிக் கொண்டு 'இல்லை' என்றாள்.

''ஆனால் கண்டிப்பா உங்களுக்கு கல்யாணம் ஆகும் போது கொஞ்சமாவது ஓவியம் வரையத் தெரிஞ்சவனா கல்யாணம் பண்ணுங்க. அப்பதான் உங்க லைஃப் நல்லா இருக்கும்'' என்றான்.

"நீங்களே பார்த்துச் சொல்லுங்க. ஓ.கே. நல்ல ஆளா பார்த்துருவோம்."

"ஏன் இப்படி சொல்றீங்க?" என்றாள் லேசாக சிவந்த முகத்துடன்?" "ஏன்னா உங்களுக்கு இருக்கிற ரசனையை புரிஞ்சுக்கிறவனாவது இருக்கணுமே இல்லைன்னா பிராப்ளம்தான்."

"எப்படி நீங்கள் உமாகாந்தனுடைய ரசனையை புரிஞ்சுக்கிட்ட மாதிரியா?" என்றான்.

"அப்படியும் வச்சுக்கங்களேன்?" என்றாள் வல்லபி.

"வல்லபி யூ ஆர் எ வெரி இன்ட்ரஸ்டிங் பர்சனாலிட்டி ரொம்ப பிடிச்சிருக்கு. ஏன் நான் உங்க அண்ணன் கிட்டதான் ப்ரெண்டா இருக்கணுமா உங்க கிட்ட இருக்கக் கூடாதா?"

"சார், இது நியாயமே இல்லை. ஃபேமிலி ப்ரெண்டுன்னு சொல்லிட்டீங்க. அதுக்கு அப்புறம் என்ன ஃபேமிலில ஒவ்வொருத்தரையா பிரிச்சு பிரிச்சு சொல்லிட்டிருக்கீங்க. சொல்லாமலே தெரியும். நீங்க எனக்கும் ஃப்ரெண்டுதான்" என்று.

"அந்த ராகவன் என்னை அப்ஜெக்ட் பண்ண மாட்டாரே?" என்றான்.

அவள் மறுபடியும் குபீரென்று சிரித்தாள்.

"ப்ளீஸ் ஃபர்கெட் தெட் ராகவன் நம்ம ரெண்டு பேரைப் பத்தி மட்டும் பேசலாம்" என்றாள்.

"அப்ப நாளைக்கு என்ன சாப்பாடோடு வருவீங்க?" என்றான்.

"உங்களுக்கு என்ன வேணும்னு சொல்லுங்க?" என்றாள் "கருவேப்பிலை சாதம்" என்றான் தொடர்ந்து.

"அப்படி ஒரு சாதமா, சரி அசத்துங்க" என்றான் அவன்.

அவள் சிரித்துக் கொண்டே விடை பெற்றுக் கொண்டு சென்றாள். அந்த பெரிய காம்பவுண்டின் கேட் வரைக்கும் சென்று அவளை வழியனுப்பி விட்டு மகிழ்ச்சியோடு உள்ளே வந்தான்.

அப்போது போன் ஒலித்தது "சொல்லுங்க சபாநாயகம் சார்" என்றான் மகிழ்ச்சியுடன்.

அந்தப் பக்கம் சொன்ன செய்தியும் ஒரே நேரத்தில் மகிழ்ச்சியும் யோசனையையும் அவன் மனத்தில் எழும்பியது.

"பரவாயில்லை! ஏழிலை வல்லபி ராசியான ஆள் தான் உள்ளே வந்தவுடனேயே ஒரு நல்ல செய்தி வந்திருக்கே" என்று எண்ணிக் கொண்டே டேபிளில் இருந்த பேப்பர் வெயிட்டை எடுத்து உருட்டிக் கொண்டே அவள் போன திசையைப் பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தான்.

அத்தியாயம் - 16

ஜக்கடிகாரத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டே பரபரவென்று தன்னுடைய ஃப்ரெஷ்னிங் சென்டருக்குள் நுழந்தான் சத்யபிரகாஷ்.

'லஞ்ச் டைம் ஆயிடுச்சே. வல்லபி வந்துடுவாளே...' என்ற எண்ணம் அவனிடத்திலே பரபரப்பை ஏற்படுத்தி யிருந்தது. நல்ல வேளையாக ஒரு மணிக்குள்ளாக வந்து விட்டான்.

அவசர அவசரமாக ரெட்ஸ்ட் ரூம் போய், முகத்தை திருத்திக் கொண்டு அவன் வந்து தன்னுடைய இருக்கையில் அமர்ந்தான்.

அந்த ரிவால்விங் சேரில் ஒரு சுற்று சுற்றிக்கொண்டே லேசான புன்னகையுடன் வல்லபியின் வரவை எதிர் நோக்கத் தொடங்கினான்.

நேற்று அவள் வந்து விட்டுப் போனதும் நடந்த நிகழ்வு மனதுக்குள்ளே ஓடியது. அவன் இப்பொழுது கார் ஃப்ரெஷ்னிங் சென்டர் வைத்திருக்கக்கூடிய இடத்தினுடைய சொந்தக்காரர் சபாநாயகம். அவர்தான் கனடாவில் இருந்து அவனுக்கு ஃபோன் செய்திருந்தார்.

'தம்பி! ரொம்ப நாளா யோசிச்சுக்கிட்டிருந்தேன். ஒரு விஷயம். இப்ப ஒரு முடிவெடுத்துட்டேன். எதுக்கும் உங்ககிட்ட ஒரு ஆலோசனை கேட்டுக்கலாம். அப்படின்னு தான் ஃபோன் பண்ணினேன்.' என்றார் நேற்று பிற்பகல்.

'சொல்லுங்க சார்.' என்றான் அவன்.

'இல்லை. இப்ப நம்ம இடம், பங்களா எல்லாம் சேர்ந்து அங்க என்ன வேல்யூ இருக்கும்?' என்று கேட்டார்.

ஒரு நிமிடம் சத்யாவின் மனதில், 'கொஞ்சம் குறைத்துச் சொன்னால் என்ன?' என்ற எண்ணம் தோன்றியது.

ஆனால் 'வேண்டாம் நம்மை நம்பி நாணயமாகச் சொல்லுவோம் என்றுதானே கேட்கிறார். குறைத்துச் சொன்னால் அது என்ன நியாயம்?' என்று எண்ணிக் கொண்டு,

''ஃபைவ் க்ரோர்ஸ் வொர்த்துன்னு நினைக்கிறேன் சார். மார்க்கெட் வேல்யூ. ஆனா பொதுவா வாங்கப் போனா,

அதிகமா சொல்றாங்க. விற்கப் போனா குறைவா சொல்றாங்க.' என்றான்.

அவர் அந்தப் பக்கம் சிரித்தார். 'நானும் விசாரிச்சேன் தம்பி. கிட்டத்தட்ட இதுதான் சொன்னாங்க. வேறொருத்தர் கிட்ட கேட்டேன். நாலு கோடின்னாரு ஒருத்தரு. இன்னொருத்தர் நாலரை கோடின்னாரு. நீங்கதான் மேக்ஸிமம் சொல்றீங்க.' என்றார்.

'இல்லை சார். நீங்க எங்கயோ இருந்து நம்பி எங்கிட்ட இந்த இடத்தைக் கொடுத்திருக்கீங்க. நான் உங்களுக்கு நியாயமா நடந்துக்கணும் இல்லையா? எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் அஞ்சு கோடிக்குப் போகும்னு நினைக்கிறேன்.'' என்றான்.

அவன் அந்தப் பக்கம் புன்னகைத்துக் கொண்டார் போலும். ''நல்லது தம்பி. அதான் தம்பி ஒரு யோசனை பண்ணியிருக்கேன். கொடுத்தரலாம்னு நினைக்கிறேன்'' என்றார்.

லேசாக திடுக்கிட்டான் அவன். 'ஓ...' என்றான் அவன் உள்ளடங்கிய குரலில்.

'இருங்க, இருங்க, வருத்தப்படாதீங்க அவசரப் படாதீங்க. ஃபர்ஸ்ட் ப்ரஃபெரன்ஸ் உங்களுக்குத்தான். ஏன்னா இந்த எட்டு வருஷமா நான் அந்த பக்கம் எட்டியும் கூட பார்க்கலை. எல்லாம் ஃப்ரெண்ட்ஸ்கிட்ட விசாரிச்சுக் கிட்டுதான் இருக்கறேன். ரொம்ப அருமையா மெயின் டெயின் பண்ணிக்கிறீங்களாம். நீங்க இருந்தா கூட அப்படி பார்த்துக்க மாட்டீங்க சார். அந்த பையன் அவ்வளவு அருமையா பார்த்துக்கறாரு. அப்படின்னு எல்லாரும்

சொல்றாங்க. நாணயமா வாடகையை வாங்கி அனுப் பிடறீங்க. என்னமோ எனக்கு பெத்த புள்ள மாதிரி செஞ்சிருக்கீங்க. அதனால ஃபர்ஸ்ட் ப்ரஃபெரன்ஸ் உங்களுக்குத்தான்' என்றார்.

'சார், என்னால அஞ்சு கோடியெல்லாம்...' என்று இழுத்தான் சத்யபிரகாஷ்.

"தெரியும், தெரியும், உங்களால அஞ்சு கோடி... நீங்கதான் மேக்ஸிமம் வேல்யூ சொல்றீங்க. வேற ஒருத்தர் நாலு கோடிதான் சொன்னாரு. நான் ஒண்ணு பண்றேன். த்ரீ க்ரோர்ஸ் உங்களால மொபிலைஸ் பண்ண முடியும்னா சொல்லுங்க. கொடுத்தர்றேன். அக்ரிமெண்ட் போட்டு ஒன் இயர்க்கு நான் டைம் தர்றேன்." என்றார்.

சத்யபிரகாஷ் சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை.

'யோசிக்காதீங்க தம்பி. முயற்சி பண்ணுங்க. நான் கேள்விப்பட்ட வரைக்கும் உங்க கார் ஃப்ரெஷ்னிங் சென்டர்ல வர்றவங்கள்லாம் கோடீஸ்வரங்கதான்னு சொல்றாங்க. நல்லா ஏர்ன் பண்ண ஆரம்பிச்சிருக்கீங்கன்னு சொல்றாங்க. என் மனசு மார்றதுக்குள்ள அக்ரிமெண்ட் போட்டுக்குங்க.' என்று சிரித்தார்.

"சார், இது நல்ல ஆஃபர்தான். ஆனா... எப்படி என்னால முடியும்னு தெரியலை. அதிக பட்சம் என்னால ஒரு ஐம்பது லட்சம் புரட்ட முடியும்." என்றான் அவன்.

"ஓ.கே. அட்வான்ஸா கொடுத்துடுங்க. வேற ஏதாவது பேங்க் லோன் அப்படி இப்படி போங்க. நம்ம பங்களாவுக்கே லோன் கிடைக்குமே. போகலாமே நீங்க. வாடகையை வாங்கி. இருபத்தைந்தாயிரம்னு அம்பதாயிரம்

வாடகைக்குப் போகுதே. இப்பவே எனக்கு நாற்பதாயிரம் வாங்கிக் கொடுத்திட்டு இருக்கீங்களே.' என்றார்.

அவனுக்கு அது நல்ல யோசனையாக தோன்றியது.

"சார், எனக்குக் கொஞ்சம் டைம் கொடுங்க" என்றான்.

'ஓ.கே. இப்ப நான் மேட்டரை உங்ககிட்ட சொல்லியாச்சு. எனக்கு மூணு கோடி போதும் தம்பி. நான் அதை வெறும் முப்பதாயிரத்துக்கு வாங்கினேன். முப்பத்தஞ்சு வருஷத்துக்கு முன்னாடி. சென்ட் முப்பதாயிரம்னு வாங்கினேன். இன்னிக்கு அதுக்கு எனக்கு மூணு கோடி கிடைச்சா போதும். என் பசங்க எல்லாம் நல்லா செட்டில்ட்தான். அதை நான் இன்வெஸ்ட் பண்ணிட்டு என்னோட காலத்தை ஓட்டிருவேன். இல்லை மூணு கோடிக்கு ஏதாவது வாடகை வர்ற மாதிரி ஒரு சின்ன போர்ஷனா வாங்கி விட்டா எனக்கு அது பெட்டரா இருக்கும். பெரிய இடமா வெச்சிக்கிட்டு இருக்கிற வரைக்கும் வேஸ்ட் இந்த இடத்துலயும் நான் ஒண்ணும் கட்டப் போறதில்ல. இன்வெஸ்ட் பண்ற ஐடியா இல்ல" என்று விளக்கமாக சொன்னார்.

"சரிங்க சார்" என்று அவன் கேட்டுக்கொண்டான்.

"சார், எனக்கு ஒரு ஒன் வீக் டைம் கொடுங்க. நான் வீட்ல பேசிட்டு சொல்றேன். எனக்கு என்னமோ இது எட்டாக் கனி மாதிரிதான் தெரியுது" என்றான்.

"என்ன தம்பி இப்படி சொல்றீங்க. வயசிருக்கு. உழைப்பிருக்கு. தொழில் இருக்கு. ஏதோ கொஞ்சம் வசதியும் இருக்கு. முட்டி மோதி வாங்கிப் போடுங்க. உங்க ஆயுசு

காலத்திற்கும், உங்க குழந்தைகளுக்கும் கவலையே பட வேண்டாம். பெரிய சொத்தாயிடும்.'' என்றார்.

''அதெல்லாம் உண்மைதான் சார். கேட்கறதுக்கு நல்லாதான் இருக்கு.'' என்றான் அவன்.

''செய்யறதுக்கும் நல்லாதான் இருக்கும். முயற்சி பண்ணுங்க' என்று சிரித்தபடி, 'பெஸ்ட் ஆஃப் லக் தம்பி. எனக்கும், உங்களுக்கும்தான்.' என்று சொல்லிவிட்டு அவர் வைத்து விட்டார்.

சத்யபிரகாஷின் உள்ளத்தில் ஆசை கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. 'இது நல்ல ஆஃபர்தான். ஆனா, மூணு கோடிக்கு எங்க போறது?' என்று யோசித்தான்.

அன்றிரவு வழக்கம் போல் எல்லோரும் அமர்ந்து டைனிங் டேபிளில் உணவு உண்டு கொண்டிருக்கையில் அப்பாவிடம் சொன்னான்.

''அப்பா! ஒரு நல்ல ஆஃபர். த்ரீ க்ரோர்ஸ்தான் கேட்கறாரு. ஆனா அந்த த்ரீ க்ரோர்ஸ் நம்மளால முடியுமான்னு தெரியலையே'' என்றான்.

''அப்படியா தம்பி. அப்படின்னா ஏதாவது முயற்சி பண்ணி வாங்கிப் போடேன்'' என்றார் அப்பா.

''எப்படிப்பா...?'' என்று அவன் விழிக்க.

''ஏன் அந்த வீட்டை வித்துருவோமா? அந்த சின்ன வீடு இருக்குல்ல. நாம முதல்ல இருந்தோமே அந்த வீடு...'' என்றார்.

''அதென்னப்பா பதினைஞ்சு லட்சத்துக்குப் போகும். அதைப் போய் வித்துட்டு...'' என்றான்.

''இந்த வீட்டை வித்துருவோமா?''

''இல்லைப்பா. நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. உங்க சொத்து எதிலேயுமே கை வைக்க வேண்டியதில்ல. ஏன்னா அது உங்க சொத்து. அதுல எங்க மூணு பேருக்கும் பாத்யதை இருக்கு. எனக்காக மட்டும் இதை செஞ்சீங்கன்னா சரியா இருக்காது'' என்றான்.

''சரி, அப்ப யோசி.'' என்றார்.

கடந்த இரண்டு வருடங்களாக அவன் சம்பாதித்தையெல்லாம் ஓரளவுக்கு சேமித்து வைத்திருந்தான்.' அது ஒரு இருபத்தைந்து, முப்பது லட்சம் தேறும்பா.' என்றான்.

''ஒண்ணு வேணா செய்ப்பா. மைதிலிக்கு ஒரு அம்பது பவுன் வெச்சிருக்கமே. அம்பது அறுபது பவுன் இருக்கும். அது ஒரு டென் லேக்ஸ் ஆகும். இப்ப எடுத்துக்க. அவள் கல்யாணத்துக்கு செஞ்சு கொடுத்துரு'' என்றார் அப்பா.

''என்ன மைதிலி?'' என்று திரும்பி மகளைப் பார்த்தார்.

''தாராளமாப்பா. செஞ்சு கொடுத்ததும் நீங்கதான். செய்யப் போறதும் நீங்கதான்.'' என்று அவள் எச்சரிக்கையாகப் பதில் சொன்னாள்.

''விவரமா இருக்கா பாரு'' என்றான் உமா.

''சரி ஒரு தேர்ட்டி ஃபைவ் லேக்ஸ், ஃபிஃப்டி லேக்ஸ் மொபிலைஸ் பண்ணிட்டாக் கூட, மீதியை நாம எங்கயாவது லோன் போட்டு அரேஞ்ச் பண்ணலாம்'' என்றான்.

அப்போது அவனுக்குப் பிரசாந்தினுடைய நினைவு வந்தது. பிரசாந்த்துக்கு உடனே ஃபோன் செய்தான்.

"ஹலோ! நான் இப்ப ஃப்ரீயாதான் இருக்கேன். நேர்ல கிளம்பி வாங்க பேசிக்கலாம்" என்றான் பிரசாந்த்.

அவசர, அவசரமாக சாப்பிட்டுவிட்டு பைக்கை எடுத்துக் கொண்டு போனான்.

பிரசாந்த் அன்றைய அலுவல்களை முடித்து விட்டு, ஒய்வாக அவனுடைய பெரிய பங்களாவினுடைய சிட் அவுட்டில் அமர்ந்து கொண்டிருந்தான்.

"நான் அன்னைக்கே சொன்னேன்ல, இந்த இடத்தைப் புடிச்சு போடுன்னு" என்றான் பிரசாந்த்.

"சார், நீங்க சொன்னீங்க. பட்டுனு போய் எப்படி ஒனர்கிட்ட கேட்கறது? இப்ப அவரா ஆஃபர் பண்ணியிருக்காரு." என்றான்.

"எவ்ளோ சொல்றாரு?" என்று கேட்டான் பிரசாந்த்.

"த்ரீ க்ரோர்ஸ் சொல்றாரு?"

"யப்பா. அடிச்சுதய்யா உனக்கு லக்கு. ம்ம். இது என்ன கிட்டத்தட்ட குதிரைரேஸ்ல அடிச்ச மாதிரிதான். அஞ்சாறு கோடிக்குப் போகும்யா அந்த இடம்." என்றான்.

"இல்லை. அவரே விசாரிச்சுட்டுத்தான் சொல்லியிருக் காரு. ரொம்ப லோ பிரைஸுக்குத்தான் வாங்கினாராம். ஏழெட்டு வருஷமா நீதான்பா மெயிண்டெயின் பண்ணிக் கிட்டு இருக்கறே. அந்த இடத்துக்காக நான் உனக்கே தர்றேன். அப்படின்னு சொல்றாரு." என்றான்.

"இட்ஸ் ரியலி குட். வெரி நைஸ். அப்படி மனுஷங்களும் இருக்காங்களாம்." என்று சிரித்தான் பிரசாந்த்.

"சரி, சரி. உட்காருங்க." என்று எதிரே அமர வைத்துக் கொண்டு, "உங்களால எவ்வளவு மொபிலைஸ் பண்ண முடியும்?" என்று கேட்டான்.

"என்னோட சேவிங்ஸ், பார்சனலா இருக்கக் கூடிய ஜுவல்ஸ், வீட்டுல இருக்கக் கூடிய ஜுவல்ஸ் எல்லாம் சேத்தா, ஒரு ஃபிஃப்டி லேக்ஸ் என்னால மொபிலைஸ் பண்ண முடியும்" என்றான்.

"ஓ.கே. நான் ஒரு ஐடியா சொல்றேன்." என்றான்.

"சொல்லுங்க" என்று கேட்டான் இவன்.

"ரெண்டு பத்திரமா வாங்கிக்கப்பா. ஒண்ணு அந்த பங்களா, பங்களாவைச் சேர்ந்த இடம். அதைத் தனியா ஒரு பத்திரமா பண்ணு. இந்த இடத்தை இன்னொரு பத்திரமா பண்ண முடியுமான்னு கேளு." என்றான்.

"அதுக்கெல்லாம் அவர் ஒத்துக்குவார் சார். பட் அதனால என்ன பலன்?" என்று கேட்டான் பிரகாஷ்.

"அங்கதாம்பா நான் சொல்றதை புரிஞ்சுக்கணும். எனக்குத் தெரிஞ்ச பேங்கர்ஸ் இருக்காங்க. அவங்ககிட்ட நான் பேசறேன். இனிஷியலா அந்த பங்களா. அந்த இடத்தை மட்டும் ஒன் அண்ட் ஹாஃப் க்ரோர்ஸ்க்குப் பேசு. ஏன்னா அது மொத்தமாவே பத்து செண்ட்டுதானே வருது. இந்த பக்கம் இருபது செண்ட் வருதுல்ல." என்றான் பிரசாந்த்.

"ஆமா." என்று இன்னும் புரியாதவனாகப் பார்த்தான் சத்யபிரகாஷ்.

"இந்த ஃபிஃப்டி லேக்ஸை கொடுத்த பிறகு, ஒன் அண்ட் ஆஃப் க்ரோர்ஸ் வந்துச்சுன்னா, ஒன் க்ரோர்தானே... அந்த

ஒன் க்ரோரை அந்த பங்களாவினுடைய வேல்யூ நல்லா வரும். அதுலயே நீ ஒன் அண்ட் ஆஃப் க்ரோர்ஸ், டூ க்ரோர்ஸ் மொபிலைஸ் பண்ணியிரலாம்.'' என்றான்.

சத்யபிரகாஷினுடைய முகம் மலர்ந்தது.

''இப்ப புரியுதா?'' என்று சிரித்தான் பிரசாந்த்.

''ஆமா. அதை நீ வெச்சு ஓ.டி. போட்டு ஒன் அண்ட் ஆஃப் க்ரோர்ஸ் வாங்கிடு. நான் வேண்ணா உனக்கு அவசரத்துக்கு ஒரு த்ரீ, ஃபோர் மன்த்ஸுக்கு ஒரு ஃபிஃப்டி லேக்ஸ் தர்றேன். அப்படியே இன்னொரு இடத்தையும் வெச்சு, இரண்டும் சேர்த்து, இரண்டு பிராப்பர்ட்டீஸ் மேலயும் ஓ.டி. போட்டு, டூ அண்ட் ஆஃப் க்ரோர்ஸ் நீ மொபிலைஸ் பண்ணிரலாம். டென் இயர்ஸ்ல உன்னால முடிக்க முடியாது?'' என்றான்.

''கண்டிப்பா சார். கண்டிப்பா டென் இயர்ஸ்ல என்னால முடிக்க முடியும்.'' என்றான்

''அதை எப்படி ப்ளான் பண்றது அதையும் சொல்லு.'' என்றான்.

''இல்லை சார். அந்த பங்களாவுலேயே அம்பதாயிரம் வாடகை வரும். அதை அப்படியே வாங்கி அடைச்சிக்கிட்டு இருக்கலாம். எப்படியும் நான் மாசம் அம்பது, அறுபது ஆயிரம் சம்பாதிப்பேன் ஃபிஃப்டி தவுஸ்ஸோட். என்னால பே பண்ண முடியும்.'' என்றான்.

''அப்புறம் என்னய்யா கவலை? பிரச்சினையே இல்லை. அதைச் செய் முதல்ல.'' என்று இரண்டு பேருமாக விறு விறுவென்று திட்டம் போட்டார்கள்.

மகிழ்ச்சியோடு வீடு வந்து சேர்ந்தான் சத்யபிரகாஷ். பெற்றோரிடம் சொன்னான். அன்றிரவே இடத்துக்காரரிடம் பேசினான். எல்லாமே கூடி வர ஆரம்பித்தது.

மகிழ்ச்சியோடு அன்றைக்குப் படுக்கப் போகும்போது, வல்லபியினுடைய முகம்தான் அவனுக்கு நினைவுக்கு வந்தது. அந்த பெண் வந்து விட்டுப் போன யோகம்தான் என்று கூட தோன்றியது.

நடக்கின்ற ஒவ்வொன்றையும் யாரோடாவது தொடர்பு படுத்தி பேசுவதென்பது அவ்வளவு புத்திசாலித்தனமல்ல என்று அவனுக்குத் தெரிந்திருந்தது. இருந்தாலும் வல்லபியை நினைப்பதற்கு அது ஒரு காரணமாக இருந்தது என்று வைத்துக் கொள்ளலாம். அதெல்லாம் நினைவுக்கு வர, இப்போது வல்லபிக்காக காத்துக் கொண்டிருந்தான்.

நேற்று எடுத்த முடிவை இன்று காலையிலேயே செயல்படுத்த ஆரம்பித்துவிட்டான். காலையிலேயே கிளம்பி பிரசாந்த்தைப் பார்த்து ஒரு வங்கியில் பேசி முடித்துவிட்டு வந்தார்கள்.

ஒரே மாதத்தில் மீதமிருக்கிற அந்த ஒன்றரைக் கோடியை தயார் செய்து விட முடியும் என்கிற நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டது.

ரெஜிஸ்ட்ரேஷன் முடித்த பிறகு அதை ஓ.டி.யில் வைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் எல்லாவற்றையும் முடித்துவிட்டு வந்தான். பிரசாந்த். 'அரை கோடி தருகிறேன்' என்று சொன்னதே அவனுக்கு பெரிய தெம்பாக இருந்தது.

'ரெஜிஸ்ட் ரேஷன் என்றைக்கோ அதுக்கு முந்தின நாள் வாங்கிக்கிறேன் சார்.' என்றான் அவன். 'ஏன் சார் அதுக்கு ஈடா...?' என்று இவன் ஆரம்பிக்க.

'இல்லை. அதெல்லாம் ஒண்ணும் பிரச்சினையில்ல. பார்த்துக்கலாம்' என்றான்.

உண்மையிலேயே நெகிழ்ந்து போனான் சத்யபிரகாஷ். 'சார்! இவ்வளவு பெரிய அமவுண்ட்டை நீங்க எப்படி என்னை நம்பி...'

'எனக்கு ஆட்களை தெரியும்பா, பெரிய, பெரிய அமவுண்ட்டை எல்லாம் கபளீகரம் பண்ற பெரிய பெரிய பணக்காரங்களை எல்லாம் நான் பார்த்தாச்சு. நீ நடுத்தரக் குடும்பத்துக்காரன். நாணயமா குடுப்பேன்னு எனக்குத் தெரியும்' என்றார்.

அதையெல்லாம் யோசித்துக் கொண்டே இப்போது அமர்ந்திருந்தான். வல்லபி வந்தவுடனேயே, 'வல்லபி! உங்களுக்குத் தெரியுமா?' என்று உற்சாகமாக ஆரம்பித்து நடந்ததையெல்லாம் சொன்னான்.

"அப்படியா சார். ஃபுல் அமவுண்ட் ரெடி பண்ணிட்டீங்களா?" என்றாள்.

"ரெடி பண்ணியாச்சு. வேண்ணா ஒரு ஃபைவ், டென் லேக்ஸ் லேக் ஆகலாம்." என்றான்.

"நான் அண்ணாகிட்ட பேசறேன் அந்த ஃபைவ் லேக்ஸ், டென் லேக்ஸ் ஏதாவது தேவைப்பட்டா, அண்ணா கூட அரேஞ்ச் பண்ணித் தருவான்." என்றாள் அவள்.

"அய்யோ வேண்டாம் வல்லபி. வேண்டாம். இப்பத் தான் பழக ஆரம்பிச்சிருக்கோம். அதுக்குள்ளேயே நீ போய் இவ்வளவு பெரிய அமெண்ட்டெல்லாம்..."

"ஏன் சார்? பெரிய பணக்காரரே எந்த ஈடும் இல்லாம உங்களுக்குக் கொடுக்கறப்போ, எங்க அண்ணா உங்களை நம்ப மாட்டானா? எங்களுக்கும் தெரியும் சார். நீங்க நடந்துக்கறதைப் பத்தி." என்றாள்.

"தெரியும்கறே. என்னைப் பத்தி உனக்க என்ன தெரியும்? சொல்லு," என்றான்.

"நல்லவர் ரசனையுள்ளவர். அப்புறம்..." என்று இழுத்தாள்.

"அப்புறம்?" என்றான்.

"நல்ல அழகானவர்." என்றாள்.

அவன் குபீரென்று சிரித்தான்.

"இப்படியே போய் ராகவன்கிட்ட சொல்லுவியா?" என்று கேட்டான்.

அவள் இப்போது குபீரென்று சிரித்தாள்.

"என்ன நீ? எப்ப ராகவன் பத்தி பேசினாலும் குபீர்னு சிரிக்கறே." என்றான்.

"அதுதான் சஸ்பென்ஸ்" என்றாள்.

அவன் கடுப்பாக, "ஓ.கே. ஓ.கே. எப்ப ராகவன் பத்தி பேசினாலும் இப்படித்தான் நீ கடுப்படிக்கறே. இப்ப என்ன சாப்பாடு கொண்டு வந்திருக்கிறே. அதைப் பார்ப்போம்.' என்று அதற்குத் தாவினார்கள்.

தன்னையறியாமலேயே அவளிடத்தில் தான் உரிமையாகப் பேச ஆரம்பித்து விட்டோம் என்பது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. அவன் தன்னை அப்படி ஒருமையில் பேசுவது தனக்குப் பிடித்திருக்கிறது என்பது வழிசை வல்லபிக்கு புரிந்தது.

முகத்தில் மகிழ்ச்சி பொங்க, "ரொம்ப பசியாக்கும்." என்றபடியே டிஃபன் பாக்சைத் திறந்தான்.

"இன்னிக்கு ஃபுல் மீல்ஸ். சாம்பார், ரசம்..." என்று ஆரம்பித்தாள்.

"டிஃபன் பாக்சைத் தூக்கிக்கிட்டேவா அலையறீங்க." என்று கேட்டான்.

"இல்லையே. நாங்க காலையிலேயே கொண்டு வந்து வெச்சுட்டு போயிட்டோம்." என்றாள்.

அவன் சிரித்தான்.

அவன் விருப்பத்தோடு சாப்பிடுவதை அவள் ஆசையோடு எதிரில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

அத்தியாயம் - 17

விசிலடித்துக் கொண்டே நடமாடிக் கொண்டிருக்கிற அண்ணனை ஜாடையாக கவனித்துக் கொண்டிருந்தார்கள் உமா காந்தனும், மைதிலியும்.

இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு என்னவாக இருக்கும்? என்பது போல கேட்டுக் கொண்டார்கள்.

"இல்லை. எல்லாம் அந்த பங்களா கைக்கு வரப் போகுதில்ல. அந்த சந்தோஷமாக இருக்கும்." என்றான் உமா காந்தன்.

மைதிலி யோசிப்பவள் போல் நடித்தாள். "இல்லைண்ணா அது மட்டுமா இருக்காது. அண்ணன் முகத்துல வேற ஏதோ சந்தோஷம் தெரியுது" என்றாள்.

"அடப் போடி. இந்த சாமியாருக்கு சந்தோஷம்லாம் வேற தேடி வந்துருமாக்கும்?' என்று கிண்டல் செய்து விட்டு அந்தப் புறம் போய் விட்டான் உமா காந்தன்.

மைதிலியும் தன்னுடைய வேலையைப் பார்க்க போய்விட்டாள்.

அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ சத்ய பிரகாஷினுடைய மனத்தில் பெருகிக் கொண்டிருந்த மகிழ்ச்சியின் ஓட்டத்தில் ஒரு புள்ளியைத் தொட்டு விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

கடந்த நான்கு நாட்களாகவே அவன் மகிழ்வாக இருந்தான். தினமும் உணவு இடைவேளையின் போது, ஏழிசை வல்லபி ஏதாவது ஒரு வகை உணவோடு வந்து விடுவாள்.

முதல் நாளைக்கு அடுத்த நாளே மெதுவாக அம்மாவிடமும், அப்பாவிடமும் சொல்லி விட்டான். அவர்களும் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

'இருக்கட்டும்பா. அங்கிருந்து அரை மணி நேரம் ட்ரைவ் பண்ணி போகணும் போலருக்கு அந்த பொண்ணு. அதனால அங்கேயே உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு போகட்டும்.' என்று அம்மா சொன்னாள். 'இப்பதான் எல்லாரும் ஃபேமிலி ஃப்ரண்ட்ஸ் ஆகிட்டோமே.' என்றார்கள் சந்தோஷமாக.

அது மட்டுமில்லாமல் இந்த ஒரு மாத கால இடைவெளிக்குள்ளாகவே இரண்டு குடும்பத்து பெற்றோர் களுமாக இரண்டு, மூன்று மாதங்கள் கழித்து ஒரு தல யாத்திரை போவது பற்றி திட்டம் போட்டுக் கொண்டிருந்

தார்கள். அதனால் அவர்கள் இங்கே வருவதும், இவர்கள் அங்கே போவதும் கூட சகஜமாகி இருந்தது. அதனால் சத்யபிரகாஷுக்கு ஏழிசை வல்லபி வந்து தனது அலுவலகத்தில் உணவு அருந்துவதில் எந்த வித ஆட்சேபணையும் இருக்கவில்லை. சொல்லப் போனால் மகிழ்வாக இருந்தது.

அவளுடைய அறிவின் வீச்சு அவனுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. பள்ளி மாணவர்கள் செய்யும் குறும்புகளைச் சொல்லும் போது அவள் கண்களிலும் குறும்பு மின்னியது.

கிட்டத்தட்ட மாணவர்களுக்குச் சமமாக அவளும் குறும்பாகப் பேசி அவர்களை சமாளித்திருக்கிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது.

"அப்படியா! அதனாலதான் உங்க ஹெச்.எம். உங்களை அவ்வளவு புகழ்றார்." என்றான்.'

"இல்லை சார். அந்த அடலெஸண்ட் ஸ்டேஜுங்கறது ஒரு மாதிரி பப்ளிங் வித் எனர்ஜின்னு சொல்லுவாங்க அவங்களுக்குள்ள நிறைய மாற்றங்கள் ஏற்பட்டு கிட்டு இருக்கும். அப்போ அவங்களை ஒரு பக்கம் நாம குழந்தைங்களா ட்ரீட் பண்ணுவோம். ஆனா, அவங்களுக்கு நம்மளை அடல்ட்டா ட்ரீட் பண்ணனும் அப்படிங்கற எண்ணமும் இருக்கும். சாதாரணமா வீட்டுல என்ன நடக்கும்? அந்த ஸ்டேஜுல பெரிய விஷயங்கள் பேசும் போது அவங்க கலந்து கொண்டால், 'இதெல்லாம் நீ பேசக் கூடாது, நீ அந்த அளவுக்குப் பெரிய மனுஷன் இல்லைன்னு சொல்லி அவர்களை ஒதுக்கி வைப்பார்கள். 'சரி' என்ற சின்ன விதத்தில் ஏதாவது குறும்புகள் செய்தால் உடனே 'இவ்வளவு பெரிய ஆளாயிருக்கே. இது கூட தெரியாதா?

என்று கேட்பார்கள். அவனுக்கே ஒரு குழப்பம் வந்துரும். ஏன்னா, நாம சின்னப் பசங்களா, பெரியவங்களா என்று முடிவெடுக்க முடியாத நிலைமையில் எந்த பக்கம் போவது என்று தெரியாதது போல ஒரு குழப்பம் ஏற்படும். அந்த ஸ்டேஜுலதான் சார். வீட்டுல எல்லாம் ஒரு கேப் வர்றது. கம்யூனிகேஷன் கேப் வர்றது.' என்று அவள் விளக்க, அவன் லேசாக வலது கையை எடுத்து வலது கன்னத்தில் வைத்தாற்போல சாய்ந்தபடி ஆழ்ந்து கவனித்தான்.

"அப்போ அவங்களை என்ன செய்யணும்னா அதுக்குத் தகுந்த மாதிரி ட்ரீட் பண்ணனும்." என்றாள்.

"ம்ஹூம். நீங்க எப்படி ட்ரீட் பண்ணுவீங்க?" என்றான்.

"பாடம் நடத்தும்போது அவங்க ஸ்டூடண்ட்ஸ்தான். அப்ப நான் ரொம்ப ஸ்ட்ரிக்ட்டா இருப்பேன். அவன் எவ்வளவுதான் கெஞ்சிட்டே வந்தாலும், நான் சிரிச்சுக் கிட்டே நான் அவன்கிட்ட என்ன வொர்க் எதிர்பார்க்கிறேனோ அதை வாங்கிருவேன். மற்ற சமயங்களில் கொஞ்சம் ஈக்வலா ட்ரீட் பண்ணுவேன். அதிலேயே அவனுக்கு ஒரு சந்தோஷம் வந்துரும். அப்ப நாம என்ன சொன்னாலும் செய்வாங்க." என்றாள்.

"ம்ஹூம்.' அப்படித்தான் உங்க ஹெச்.எம். கூட சொன்னாரே." என்றான்.

"ஆமா சார். எல்லாரும் நினைக்கிறாங்க மிரட்டி, உருட்டி அப்படி எல்லாம் பண்ணிரலாம் அப்படின்னு நினைக்கிறாங்க. ஆனா, அவங்க, தே ஆர் ஆல்ஸோ ஹ்யூமன் பீயிங்ஸ். புல் ஃபிளெட்ஜ்ட் ஹ்யூமன் பீயிங்ஸ். அவங்களை நாம அப்படி நடத்த முடியாது. மிரட்டலாம்.

நாம நல்லபடியா சொல்லிக் கொடுத்துட்டு மிரட்டி னோம்னா வாங்கிப்பாங்க. நம்ம கடமையைச் செய்யாம அதையும், இதையும் பேசினா மதிக்க மாட்டாங்க. மதிக்கிற மாதிரி நடிப்பான். அவ்வளவுதான்' என்றாள்.

அதிசயிப்பது போல முக பாவனை காட்டிவிட்டு, கலகலவென்று சிரித்தான் சத்திய பிரகாஷ்.

"ரொம்ப நல்லா டீச் பண்றீங்க." என்றான்.

அவள் முகத்தில் வெட்கம் படிந்தது. "ரொம்ப அறுத்துட்டேனா?" என்றாள்.

"இல்லையில்லை, கேட்கறதுக்கு ரொம்ப நல்லா இருந்தது. கிளாஸும் இப்படித்தான் எடுப்பீங்களோ?" என்றான்.

"பொதுவா... கலகலன்னுதான் இருக்கும்னுதான் சொல்றாங்க. எனக்குத் தெரியலை." என்றாள்.

"எனக்குத் தெரியுதுப்பா. நீங்க கொஞ்ச நேரம் பேசுனதுலேயே எனக்கு நல்லா தெரியுது" என்றான்.

அவள் மறுபடியும் வெட்கத்துடன் புன்னகைத்தாள்.

"நான் ஒண்ணு சொல்லட்டுங்களா?" என்றான் சத்ய பிரகாஷ்.

"சொல்லுங்க." என்றாள் அவள்.

"நீங்க அடிக்கடி வெட்கப் பட்றீங்களே. அது ரொம்ப அழகா இருக்கு." என்றான்.

அதற்கும் அவள் வெட்கப்பட்டாள்.

"என்னங்க இது ஆச்சர்யம்! டீச்சர் போய் இப்படி வெட்கப்படறீங்க" என்றான்.

"இல்லை சார். டீச்சர் ஆனாலும் மனுஷிதானே." என்றாள்.

"யா... யா... யா... கண்டிப்பா மனுஷிதான்.' என்று அவன் மீண்டும் சிரித்தான்.'

அந்த நினைவுகளெல்லாம் வர புன்னகைத்தபடி நடந்து கொண்டிருந்தான் சத்யபிரகாஷ்.

உமா காந்தனுக்கு அதற்கு மேல் பொறுக்க முடிய வில்லை. சுற்றுமுற்றும் பார்த்தான். யாரும் இல்லாத பொழுது அண்ணனின் எதிரில் வந்து அமர்ந்தான்.

"அண்ணா! என்ன விஷயம்? ரொம்ப ஜாலியா இருக்கே." என்று கேட்டான்.

"இல்லைடா. இந்த பில்டிங் அமையப் போகுது இல்லையா. நான் நினைச்சதுக்கு மேலயே பிரசாந்த் ஹெல்ப் பண்றாரு. இந்த நம்ம ஏழிசை வல்லபியோட பிரதர் சம்பத் குமாரும் பேங்கல எல்லாம் ஏதோ லோன் வாங்கித் தர்றேன்னு சொல்லியிருக்காரு. இப்ப மெட்டீரியலைஸ் ஆகிடும் போலத்தான் இருக்கு. அதான் ஒரு சந்தோஷம்" என்றான்.

"அப்படியா! ஏழிசை வல்லபியை நீ சந்திச்சியா?" என்று கேட்டான்.

"ஓ... உங்கிட்ட நான் சொல்லலை இல்லை. ஏழிசை வல்லபி நாலு நாளா நம்ம ஆஃபிஸுலதான் வந்து மத்தியானம் லஞ்ச் சாப்பிடறாப்ல" என்றான்.

"ம்ஹூம். சொல்லவே இல்லையேண்ணா..." என்று கேட்டான் உமாகாந்தன்.

"அவ்வளவு முக்கியமான விஷயம்னு நான் நினைக்கலடா. அதுவும் இல்லாம இந்த கட்டிடம் அது இதுன்னு அலைஞ்சுட்டு இருந்ததனால. லோனுக்கு வேற அலைஞ்சுட்டு இருந்ததனால சொல்றதுக்கு நேரம் கிடைக்கல." என்றான்.

உமாகாந்தனுக்கு லேசாக கோபம் எழுந்தது. "சொல்றதுக்கு நேரம் கிடைக்கலியா? இல்லை, விருப்பம் இல்லையா?" என்று கேட்க நினைத்தான். ஆனால் அப்படி கேட்டால், அண்ணனுடைய மனம் நோகுமே என்று நினைத்துக்கொண்டு.

"ஓ.கே. பரவாயில்ல. நீ மட்டும்தான் ஏழிசை வல்லபி கூட உட்கார்ந்து சாப்பிடணும்னு ஏதாவது இருக்கா?" என்றான்.

"அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லையே." என்று சொல்லிவிட்டு. "ஓ.கே.டா நான் கிளம்பறேண்டா..." என்று அவசர அவசரமாக கிளம்பிப் போய் விட்டான்.

இன்றைக்கு வங்கியில் நேரமாகிவிட்டது. வங்கி மேனேஜருடன் அமர்ந்து கிட்டத்தட்ட இரண்டு மூணு மணி நேரத்திற்கு அவர்களுடைய திட்டங்களை சொல்ல வேண்டி இருந்தது.

இத்தனைக்கும் அன்றைக்கு அவர்களோடு ஒரு மணி நேரம் வந்து பிரசாந்த் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

பிரசாந்த் வந்தவுடனேயே அந்த வங்கி அதிகாரி கொடுத்த மரியாதை அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'பெரிய ஆள் சார் இவரு. கோடீஸ்வரன். நேர்ல வந்து உங்களுக்கு சப்போர்ட் பண்றாருன்னா பெரிய விஷயம்

தான். கேரண்டி வேணும்னாலும் போடறேன்னு சொல்லியிருக்காரு' என்றார் அதிகாரி.

இப்படி அவனுடைய உதவியை நிச்சயமாக சத்திய பிரகாஷ் எதிர்பார்க்கவில்லை.

பிரசாந்துக்கு போய் நன்றி சொல்லிவிட்டுத்தான் இன்றைக்கு உணவுக்கு செல்ல வேண்டும் என்று எண்ணிக் கொண்டான். அப்படியே, வங்கி மீட்டிங் முடிந்தவுடனே கிளம்பலாம் என்று நினைத்த போது நேரம் பார்த்தான் இரண்டு மணி. அதனால் கண்டிப்பாக தான் வந்து சந்திப்பதாக பிரசாந்திடம் சொல்லிவிட்டதால் போக வேண்டிய அவசியம் அவனுக்கு இருந்தது.

அந்த கணத்தில் ஏழிசை வல்லபி காத்துக் கொண்டிருப்பாள் என்று கூட உறுத்தலாக இருந்தது. ஆனாலும் அவன் பிரசாந்த்தைப் பார்ப்பதற்குக் கிளம்பி விட்டான். இடையிலே ஒரு முறை ஃபோன் செய்தான்.

"ஒண்ணும் பிரச்சினையில்லை. நான் வெய்ட் பண்றேன்' என்றாள் ஏழிசை.

"இல்லையில்லை, வேண்டாம் நீங்க சாப்பிட்டுங்க." என்றான்.

"தனியா சாப்பிடறதுக்கு கஷ்டமா இருக்குமா?" என்றான்.

"இல்லை. உங்களுக்குத் தெரியாதா? உமா வந்திருக்காரு" என்றாள் அவள்.

"அப்படியா? உமா காந்தன் வந்திருக்கானா? ஓ.கே. சரி நீங்க ரெண்டு பேரும் சாப்பிடறதுன்னா சாப்பிட்டுங்க." என்று உற்சாகமாக சொல்லுவது போல், சொல்லிவிட்டு

ஃபோனை ஆஃப் செய்துவிட்டான். ஆனால், ஏனோ ஒரு பக்கத்தில் அவனுக்குக் குறைந்தாற் போல தோன்றியது.

"உமாகிட்ட இன்னைக்குக் காலையிலதானே சொன்னோம். விளையாட்டுப் போல கேட்டானே...! அப்போ சீரியஸாவே அவனும் ஏழிசை கூட வந்து சாப்பிட வந்துட்டானோ..." என்ற எண்ணம் தோன்றியது.

பிரசாந்த்தைப் போய் சந்திப்பதிலே இருக்கிற மகிழ்ச்சி கூட கொஞ்சம் குறைந்து விட்டது. ஆனாலும் பிரசாந்த்தைப் போய் சந்தித்தவுடனே மீண்டும் அவன் மனத்தில் உற்சாகம் ஏற்பட்டுவிட்டது.

"சார், என்ன சார், எனக்கு இவ்வளவு இதா ஹெல்ப் பண்றீங்க. ரொம்ப நன்றி சார்." என்றான்.

"இல்லைப்பா, நான் உன்னை ஒரு டூ. த்ரீ இயர்ஸா கவனிச்சுட்டு இருக்கேன். நீ ரொம்ப அருமையா பண்ணிக்கிட்டு இருக்கே, உங்கிட்ட ஒரு இண்டெக்ரிட்டி இருக்கு. பல விஷயங்கள்ல நான் உன்னை நோட் பண்ணியிருக்கிறேன். அதனாலதான் தைரியமா நான் உனக்கு சப்போர்ட் கொடுக்கறேன். நீ நல்லா வருவே பாரு." என்றான் பிரசாந்த்.

எந்த விதத்திலேயும் சம்பந்தமில்லாமல் எப்போதாவது வந்து விட்டுப் போகிற இந்த வாடிக்கையாளருக்கு தன் மீது இவ்வளவு அக்கறை இருப்பது அவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது.

"ரொம்ப பெருசா எல்லாம் நினைச்சுக்காதே. எங்கப் பாவுக்கு இப்படித்தான் ஒரு காலத்துல ஒரு பெரிய பணக்காரர் கோயம்புத்தூருல உதவி செஞ்சாராம். அதைப்

பிடிச்சிட்டுத் தான் எங்கப்பா இவ்வளவு தூரம் வந்தாராம். அதனால அவர் சொல்லுவாரு. யாராவது நல்லா வரக் கூடியவங் கன்னு இருந்தா ரிஸ்க் எடுத்து ஹெல்ப் பண்ணு, அப்படின்னு" என்றான்.

சத்யபிரகாஷ் அவரை நெகிழ்ந்து போய் பார்த்தான். "ரிஸ்க் எடுக்கலாம் சார். ஆனாலும், க்ரோர்ஸ் கணக்குல எடுக்கறது கொஞ்சம் ரிஸ்க்தான்" என்றான்.

"ஹலோ! உனக்கு எங்க ஃபேமிலியைப் பத்தி தெரியும்ல. நீ ஒழுங்கா கொடுப்பேன்னு நம்பிக்கை இருக்கு. கொடுக்கலேன்னாலும் அதை எப்படி வாங்கறதுன்னு சக்தியும் எங்களுக்கு இருக்கு. அது தெரியுமா?" என்றான்.

"அதான் சார் பயமாயிருக்கு!"

"அதெல்லாம் நீ கொடுப்பேப்பா, கவலைப்படாதே" என்று அவனை பாராட்டி அனுப்பி வைத்தான் பிரசாந்த்.

அந்த மகிழ்ச்சி அவனுக்குள் நிறைந்திருந்தது. "இது உண்மையிலேயே தெய்வச் செயல்தான். எதிர்பாராத செயல். இப்படி ஒரு உதவி. அதுவும் இப்படி லட்சக் கணக்கிலான உதவி கிடைக்கும் என்பது... மூன்று மாதத்திற்குள் கொடுக்க வேண்டும்தான். இத்தனைக்கு அதற்கு பெரிய வட்டி கூட அவர்கள் வாங்கிக் கொள்ள வில்லை. ஏதோ ஐம்பது பைசா வட்டி என்பது போல சொன்னார்கள். அதுவும் அவனுக்கு ஏற்புடையதாக இருந்தது. இவ்வளவு உதவிகள் கிடைத்திருக்கிறதே...' என்று உண்மையாகவே நெகிழ்ந்துதான் போனான்.

பிரசாந்த்தைச் சந்தித்துவிட்டுச் வெளியே வந்த வுடனேயே மீண்டும் தன்னுடைய அலுவலக நினைவும்,

உமா காந்தனுடைய நினைவும், ஏழிசை வல்லபி யினுடைய நினைவும் வந்தது.

நான்கு நாட்கள் மகிழ்ச்சியாக கழிந்தது. இதிலே இப்போ உமா வந்திருக்கானா? என்ன திடீர்னு உமாவுக்கு ஏழிசை வல்லபி மேல் ஆர்வம் எண்ணிக் கொண்டான்.

யோசித்தபடியே தன்னுடைய காரை தன்னுடைய ஃப்ரெஷ்னிங் சென்டருக்கு திருப்பினான். கார் உள்ளே நுழைந்து காரை நிறுத்தி விட்டு, உள்ளே செல்கிற வரைக்கும் ஓரக் கண்ணால் அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

அது கண்ணாடித் தடுப்பு என்பதால் நன்றாகவே தெரிந்தது. இவன் வருவது கூட தெரியாமல் உமா காந்தனும், ஏழிசை வல்லபியும் அந்த ஷோ கேஸுக்கு முன்னால் நின்று அந்த படங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இவன் உள்ளே நுழையவும்,

"உண்மையாலுமே உமா, ரொம்ப சூப்பரா வரைஞ்சிருக்கீங்க." என்று சொல்லிக் கொண்டிருந்தாள் ஏழிசை.

"உங்களுக்கு ரொம்ப பிடிச்சிருக்கா. உங்களுக்கு ரொம்ப பிடிச்சிருக்குங்கறது எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு." என்று சொல்லிக் கொண்டிருந்தான் உமாகாந்தன்.

"உள்ளே வரலாமா?" என்று அவன் கேட்டுக் கொண்டே நுழையவும் இரண்டு பேரும் சிரித்துக் கொண்டே திரும்பினார்கள்.

"ரெண்டு பேரும் ஓவியங்களை ரொம்ப ரசிக்கிறீங்களாட்ட இருக்கு." என்றான் அவன்.

"பின்னே? என்னுடைய உண்மையான ரசிகையாச்சே இவங்க. இவங்களோட நின்னு இந்த ஓவியங்களைப் பத்தி டிஸ்கஸ் பண்றது எவ்ளோ அருமையான விஷயம்" என்றான் உமாகாந்தன்.

"ஆமாப்பா, உண்மையாவே இவங்க கூட டைம் ஸ்பெண்ட் பண்ணினா ரொம்ப நல்லாதான் இருக்கும்." என்றான் சத்ய பிரகாஷ்.

திரும்பி ஏழிசையிடம், "சம்பத் வந்திருந்தார் பேங்க்குக்கு. வந்துட்டு போய்ட்டார். ஒரு ஒன் ஹவர் இருந்துட்டுப் போயிட்டார்." என்றான்.

"அப்படியா? உங்களுக்குத் தேவையான உதவி கிடைச்சதுதானே...?" என்றாள்.

"அதெல்லாம் பை காட்'ஸ் கிரேஸ். வேணும்கிற உதவி கிடைச்சிட்டு இருக்கு. எப்படியோ நான் நினைச்சது நடக்கும்னு நினைக்கிறேன்" என்றான்.

"கண்டிப்பா. நீங்க நினைச்சதெல்லாம் நடக்கும். நீங்க விரும்பினதெல்லாம் கண்டிப்பா கிடைக்கும்." என்றாள் ஏழிசை வல்லபி.

"என்ன பாட்டி மாதிரி ஆருடம் சொல்றீங்க?" என்றான் சத்யபிரகாஷ்.

"ஜோசியம் இல்லைங்க. உண்மை, ஏன்னா, உழைப்பும், தன்னம்பிக்கையும் இருக்கறவங்களுக்கு கடவுள் கண்டிப்பா உதவி செய்வார். அது மாதிரிதான் இப்ப உங்களுக்கு உதவி கிடைச்சிருக்கு. நீங்க பேராசைப்படல, உங்களுக்கு தானா

வந்து கிடைக்குது. அதுக்கான உதவிகளும் கிடைக்குதில்ல. அது காட்ஸ் வில்ன்னு அர்த்தம்.'' என்றாள்.

''சரிங்க பாட்டி'' என்றான் சத்யபிரகாஷ்.

இரண்டு பேரும் கலகலப்பாக பேசிக் கொள்வதை உமா காந்தன் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

உமாகாந்தன் கூர்ந்து கவனிக்கிறான் என்பதற்காகவே, இன்னும் கொஞ்சம் கலகலப்பாகப் பேசினான் சத்ய பிரகாஷ்.

அப்போதுதான் அவனுக்குத் தோன்றியது. 'வேண்டு மென்றே உமா காந்தனின் முன்னால், உன்னைக் காட்டிலும் நான் அவளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்கிறேன் பார்,'' என்பது போல இருந்தது.

தன்னுடைய மனத்தின் உணர்வுகளைக் கண்டு அவன் திடுக்கிட்டுப் போனான்.

''என்ன ஆச்சு உங்களுக்கு? சார், என்ன ஆச்சு?'' என்று ஏழிசை திரும்ப, திரும்ப கேட்க.

''ஒண்ணும் இல்லை'' என்று தலையை உலுக்கிக் கொண்டான்.

தலையை மட்டும்தான் அவனால் உலுக்க முடிந்தது. அவன் மனத்தில் தோன்றிய தீவிரமான எண்ணங்களை அவனால் அப்போதைக்கு உதற முடியவில்லை.

அத்தியாயம் - 18

பொருட்காட்சித் திடலில் மக்கள் கூட்டம் நிறைந்து கிடந்தது.

எங்கு பார்த்தாலும் தலைகள். எங்கிருந்துதான் மக்கள் கூட்டம் இவ்வளவு வருகிறதோ என்று எண்ணிக் கொண்டான் சத்யபிரகாஷ்.

பல நாட்களுக்குப் பிறகு, இந்த வருடம்தான் அவன் குடும்பத்தோடு பொருட்காட்சிக்கு வந்திருந்தான். அவர்கள் குடும்பம் மட்டுமல்லாமல், ஏழிசை வல்லபியின் குடும்பமும் அவர்களோடு சேர்ந்து வந்திருந்தது.

கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்குப் பிறகு, இன்றைக்கு மறுபடியும் ஏழிசை வல்லபியின் வீட்டில் அவர்களுக்கொரு விருந்து. ஏனென்றால், ஏழிசை வல்லபிக்கு அன்றைக்குப் பிறந்த நாள்.

சத்யபிரகாஷ் இந்த பிறந்த நாளுக்காகவே நேரம் கொடுத்து வரைந்து வைத்திருந்த அந்த ஓவியத்தை அழகாக பேக் செய்து கொண்டு வந்திருந்தான்.

சம்பத் குமாரும், அவனும் ஏதோ ரகசியம் பரிமாறிக் கொள்ளுகிறவர்கள் போல ஒருவரை ஒருவர் பார்த்து புன்னைகைத்து கொண்டிருந்தார்கள்.

ஏழிசை வல்லபிக்கு அது புதிராகவே இருந்தது.

''என்ன? ரெண்டு பேரும் ஏதோ பார்த்து, பார்த்து சிரிச்சுக்கிட்டிருக்கீங்க?'' என்று கேட்டாள்.

''என்னடா வம்பாப் போச்சு, ஃப்ரெண்ட்ஸ் பார்த்து சிரிச்சுக்கக் கூடாதா?'' என்று கேட்டான் சம்பத்.

''இல்லையில்ல. வழக்கமா சிரிச்சுக்கற சிரிப்பு இல்லை இது. ஏதோ கொஞ்சம் வித்தியாசமா தெரியுது'' என்றாள் ஏழிசை வல்லபி.

"நீ இப்ப எதுக்கு எங்களை கவனிக்கறே. நீ விருந்தை கவனி." என்றான் சம்பத்.

"அதெல்லாம் இன்னைக்கு எனக்கு வேலை இல்லை. அம்மாவும், நித்யாவும் என்னை விட மாட்டேன்னுட்டாங்க. உன் பர்த் டேக்கு நீயே வேலை செய்வியா? நீ ஃப்ரீயா இரு. நாங்க செய்றோம், அப்படின்னு சொல்லிட்டிருக்காங்க" என்றாள்.

"அப்படின்னா... என்ன மெனு?" என்று கேட்டான்.

"வழக்கம் போல வடை பாயாசம், அப்பளம், கூட்டு, பொரியல்..." என்றாள் ஏழிசை வல்லபி.

"அப்படின்னா ஸ்பெஷல் ஐட்டம் எதுவும் கிடையாதா!" என்றான்.

"இருக்குண்ணா. நான் ஒரே ஒரு ஐட்டம் மட்டும் பண்ணி வெச்சிருக்கேன். கவலைப்படாதே" என்றாள்.

"என்ன செஞ்சிருக்கே?" என்று கேட்டான் சம்பத் குமார்.

"பிளிபேள்ளாபாத். அது மட்டும் நம்மளோட ஐட்டம்." என்றாள்.

"நிறைய பண்ணியிருக்கியா?" என்றான்.

"நிறைய பண்ணியிருக்கேன். கவலையே படாதே" என்றாள்.

"ஓ.கே. சத்யா நாம ரெண்டு பேரும் ஸ்பெஷலா அதை சாப்பிட்டிருவோம்" என்றான் சம்பத்.

"அப்ப என்னை விட்டுருவீங்களா?" என்று வந்தால் உமாகாந்தன்.

"உன்னை விடுவோமாப்பா. சரி, நீ வேண்ணா முதல்ல உன்னோட ஷேரை எடுத்துக்கோ, அதுக்கப்புறம் நாங்க சாப்பிட்டுக்கறோம்" என்றான்.

"சரி, சரி, அது...!" என்று மிரட்டி விட்டு அந்தப் பக்கம் போனான் அவன்.

ஒரு வழியாக அவள் கேக் வெட்டுவதற்காக கேக் வாங்கிக்கொண்டு வந்திருந்தான் சம்பத் குமார். அவள் கேக் வெட்டுவதற்காக கேக்கை எடுத்து வைத்தார்கள்.

"ஆக்சுவலா இந்த கேக் வெட்டுறதெல்லாம் ஃபாரின் கல்ச்சர். எனக்கு அது அவ்வளவா பிடிக்கிறதில்லை." என்றாள் நித்ய கல்யாணி.

"ஆமாடி, அது கூட கரெக்ட்டுதான்." என்றாள் ஏழிசை வல்லபி.

"ஓ.கே. அப்படின்னா ஒண்ணு செய்வோம். மெழுகு வர்த்தியை ஊதி அணைக்க வேண்டாம். எந்த விளக்கையும் ஊதி அணைக்கிறது நம்ம கல்ச்சர் இல்லை. அதனால் ஏத்தி வெச்சுடு." என்றாள்.

"அப்போ உன்னோட வயசுக்கு நம்பர் வைக்கணுமே." என்று வம்பிழுத்தாள் நித்ய கல்யாணி.

"தெரியுமே... இதெல்லாம் பண்ணுவீங்கன்னு. அதுக்கெல்லாம் நான் ஒத்துக்க மாட்டேம்பா. ஒரே ஒரு மெழுகுவர்த்தி வெச்சு அதை ஏத்துவோம்." என்றாள்.

"அப்ப நீ என்ன ஒரு வயசுக் குழந்தையா?" என்றாள் நித்யகல்யாணி.

"ஆமா. மனசளவுல நான் ஒரு வயசுக் குழந்தைதான்." என்றாள்.

"கேட்டுக்கங்கப்பா, இந்த உலக ரகசியத்தை." என்று கேலி செய்தான் சம்பத் குமார்.

"சரி. சரி. ஆகற வேலையைப் பாருங்க." என்றார்கள் பெரியவர்கள்.

அவர்கள் தீர்மானம் செய்து கொண்டது போலவே. ஏழிசை வல்லபி ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றினாள். சுற்றிலும் நின்று கைதட்டினார்கள்.

உமாகாந்தன் அவளுக்காக ஏதோ பரிசுப் பொருளை வாங்கி வந்திருந்தான்.

அழகான மேஜை விளக்கு. 'நீங்க புஸ்தகம் படிக்கிறதுக்கு யூஸ் ஆகும். அதுக்காக' என்றான் அவன்.

மைதிலி கூட ஒரு சின்ன ஹீரோ பென் வாங்கிக் கொண்டு வந்திருந்தாள், அவள் செலவில்.

பெற்றோர்கள்! அவர்களும் தனியாக ஏதோ பரிச வைத்தார்கள்.

எல்லோரும் கொடுக்கட்டுமென்று காத்துக் கொண்டிருந்தான் சத்யபிரகாஷ். சம்பத் குமார் அவளுக் கென்று அழகாக ஒரு மெல்லிய செயின் ஒன்று தங்கத்தில் வாங்கிப் பரிசளித்தான்.

எல்லோரும் கொடுத்து முடித்ததற்குப் பிறகு,

'டொண்டொடொய்ன்...' என்று சங்கீதம் பாடிக் கொண்டே தன்னுடைய பரிசை எடுத்து கொடுத்தான் சத்ய பிரகாஷ்.

ஆர்வமாக வாங்கிக் கொண்டாள் ஏழிசை வல்லபி. "ஓப்பன் பண்ணி பார்க்கட்டுமா?" என்றாள்.

"பின்னே? அதுக்குத்தானே கொடுக்கிறது" என்றான் சம்பத் குமார்.

ஏழிசை வல்லபி அந்த ஒவியத்தைத் திறந்து பார்த்தாள். பார்த்தவளுடைய கண்கள் அப்படியே நிலைகுத்தி நின்றன.

ஆச்சரியம், அட்மைரேஷன் என்று சொல்வார்களே... அது போன்ற ஒரு ரசிப்புத் தன்மை, வெட்கம், மகிழ்ச்சி என்று எல்லாம் கலந்த உணர்வுகள் மாறி மாறி அவள் முகத்திலே மின்னி மறைந்தன.

சத்யபிரகாஷ் சுற்றிலும் ஆட்கள் இருந்ததாலோ என்னவோ தன்னுடைய உணர்வுகளை முழுமையாக வெளிப்படுத்திக் கொள்ளாமல், அழுத்தமான ஒரு புன்னகையுடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

உமாகாந்தன் இடையிலே குறுக்கிட்டு, "மேடம்! இதுல ஒரு விஷயம் இருக்கு. ஒரு ரகசியம் இருக்கு." என்றான்.

அவள் திரும்பி அவனை ஆர்வத்துடன் பார்க்க, "இது அண்ணாவே வரைஞ்சது. நான் வரைஞ்சதில்ல. அண்ணாவே வரைஞ்சது" என்றான்.

அவள் முகம் இன்னும் மலர்ந்தது. "நிஜமாவா. நீங்களும் வரைவீங்களா?" என்று கேட்டாள்.

"நீங்க வேற, அவர் எனக்காக தியாகம் பண்ணிக்கிட்டு இருக்காரு. ஆக்சுவலா அவர் வரைஞ்சாருன்னு வெச்சுக்கோங்களேன், நம்ம டெபாஸிட் காலியாகிடும்" என்று சிரித்தான் உமாகாந்தன்.

அன்புடன் அவன் தோளை அணைத்து தன்னுடன் நிறுத்திக் கொண்ட சத்யபிரகாஷ் சிரித்தான்.

"அப்படி எல்லாம் இல்லைங்க. அவனோட டேஸ்ட் வேற. என்னோட டேஸ்ட் வேற. என்னோட மைண்ட் வேற இதுல போயிருச்சு. எனக்கு ஓவியம் ஹாபிதான். ஆனா உமாவுக்கு ஓவியம் உயிரு. அதனால. அவனோட என்னைக் கம்பேர் பண்ணாதீங்க" என்றான்.

"இல்லை சார். உண்மையாவே இது ரொம்ப சூப்பரா இருக்கு." என்றாள்.

"அது ஏன்னா... அதுல இருக்கிற ஆள் அப்படி" என்றாள் மைதிலி.

"நான் எப்படிடா சொல்றது அப்படின்னு யோசிச்ச விஷயத்தை அவள் சொல்லிட்டா" என்றான் சத்ய பிரகாஷ்.

எல்லோரும் சிரித்தார்கள்.

ஒரு மட்டம் அந்த ஓவியம் எல்லோர் கைகளுக்கும் போய் விட்டு, பிறகு அவளிடம் வந்தது.

"அண்ணா! நீ பண்ணின வேலை தானே." என்று சகோதரி சகோதரனை மகிழ்ச்சியுடன் பார்த்தாள்.

குறை சொல்லுவது போல பார்த்தாலும்கூட அதிலே ஒரு மகிழ்ச்சியும் இருந்தது.

"ஆமாம்மா. சும்மா உன்னைப் பத்தி பேசிட்டிருக்கும் போது இந்த ஃபோட்டோவைக் காண்பிச்சேன். அவர் என்கிட்ட பெர்மிஷன் வாங்கிட்டுத்தான் இந்த ஃபோட்டோவை வாங்கி இதை வரைஞ்சாரு. இந்தக்கால இளைஞர்களுக்கு இவங்கள்லாம் விதிவிலக்கும்மா.

அவங்ககிட்ட ஃபோட்டோ கொடுக்கலாம், அப்படிங்கறதால கொடுத்தேன். அதுல ஒண்ணும் உனக்கு ஆட்சேபணை இல்லையே" என்றான்.

"அண்ணா! இப்படி ஒரு ஓவியம் எனக்குக் கிடைக்கிறதுக்கு நான் கொடுத்து வெச்சிருக்கணும். இதுல என்னண்ணா எனக்கு ஆட்சேபணை?" என்றாள்.

"நான் இப்பவே கொண்டு போயி என் ரூம்ல மாட்டறேன்." என்று சொல்லி, சம்பத் குமாரின் உதவியுடன் உமா காந்தன் வரைந்திருந்த ஓவியத்திற்குப் பக்கத்திலேயே இதை மாட்டினாள்.

சத்யபிரகாஷ் உண்மையாகவே பெருமிதமாக உணர்ந்தான்.

"ஏண்ணா! அந்த காக்காவுக்கு பர்த் டேவுக்கு என்ன பண்ணுவே? சப்போஸ் அதுக்கு பர்த் டே இருந்தா அதுக்கு இந்த மாதிரி ஒரு ஓவியம் வரைஞ்சு கொடுப்பியா?" என்று கேட்டான் உமா காந்தன்.

எல்லோரும் சிரித்தார்கள்.

சம்பத் குமார் தங்கையினுடைய முகத்தை உற்று கவனித்துக் கொண்டே இருந்தான். ஆனால், தான் கவனிப்பது தெரியாமல் பார்த்துக் கொண்டான்.

அவள் முகத்திலே ஒரு நெகிழ்ச்சியும், மகிழ்ச்சியும் தெரிந்தது.

புகழ் பெற்று வருகிற ஒரு ஓவியனுடைய சகோதரன், தனக்காக ஒரு ஓவியம் வரைந்து, அதைத் தன்னுடைய பிறந்த நாளிலே பரிசாகக் கொடுத்திருக்கிறார் என்பது அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அந்த மகிழ்ச்சியோடுதான் இப்போது அவர்கள் அந்த பொருட்காட்சிக்கு வந்திருந்தார்கள்.

கூட்டத்திலே கொஞ்சம், கொஞ்சமாக பிரிந்து விட்டார்கள் என்றாலும் கூட சத்யபிரகாஷும், வல்லபியும் ஒரே பக்கமாக வந்து கொண்டிருந்தார்கள்.

மற்றவர்களெல்லாம் சற்று தள்ளிப் போய் விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அவர்கள் அப்போது ஒரு ஸ்டாலைப் பார்த்து விட்டு, நாடக மேடைக்குப் பக்கத்திலே கிட்டத்தட்ட வந்து விட்டார்கள்.

திடீரென்று ஒரே சத்தமாக இருந்தது.

எல்லோரும் திடு திடுவென்று ஒவ்வொரு பக்கமாக ஓடினார்கள்.

ஏதோ நான்கைந்து நாய்கள் ஒன்று கூடிக் கொண்டு சத்தம் போட்டபடி, குரைத்த படி வேகமாக துரத்திக் கொண்டு வரவும் மக்களெல்லாம் சற்று பீதியடைந்து ஒதுங்கினார்கள்.

கூட்டம் முண்டியடித்துத் தள்ளுகின்ற அதே நேரத்திலே சத்யபிரகாஷ் அந்த மேடைக் கட்டிடத்தினுடைய ஒரு சுவற்றின் மேலே சாய்ந்து சரி செய்து கொள்ள வேண்டியதாகப் போயிற்று.

கூட்டம் மேலும், மேலும் மோதுகையில் ஏழிசை வல்லபி தடுமாறுவதைப் பார்த்து, அவன் சட்டென்று தன்னருகிலே இழுத்துக் கொள்ள, அவன் சுவற்றின் மேல் சாய்ந்திருக்க அவன் மேல் தன் முதுகு முழுவதும் படியும் படியாக ஏழிசை வல்லபி சாய்ந்து நின்று கொண்டிருந்தாள்.

ஒரு நான்கைந்து நிமிடங்களுக்கு மேல் இந்த கலாட்டா நடந்தது. அதற்குள்ளாக, பொருட்காட்சி நிர்வாகிகள் யாரோ நான்கைந்து பேர் வந்து அந்த நாய்களை எல்லாம் ஆட்களை வைத்துத் துரத்தி, ஒரு வழியாக சந்தடி ஓய்ந்து நிமிர்வதற்கு சற்று நேரம் ஆகியது.

"அப்பாடா! பயந்தே போயிட்டேன்." என்ற படி அவனிடமிருந்து மெள்ள விலகினாள் ஏழிசை வல்லபி. அப்படி விலகுகிற நேரத்தில்தான் இருவரும் மிக நெருக்கமான ஒரு நிலையில் இருந்தோம் என்பது இருவருக்கும் புரிய, அந்த ஸ்பரிசத்தில் சற்றே அவர்கள் நிலைகுலைந்து போயிருந்தார்கள்.

ஏழிசை வல்லபி சத்யாவினுடைய முகத்தை நிமிர்ந்து பார்ப்பதற்கு லேசாக வெட்கப்பட்டாள்.

அவன் குரல் குழைந்தது. "டோண்ட் ஃபீல் அன் ஈஸி இசை. இதெல்லாம் நேச்சுரல்." என்பது போல அவன் சொன்னாலுங்கூட, அவன் பார்வை அவள் மீது படிந்து மீண்டது.

சிவந்து போன அவளது முகம் அவனுக்கு ஏதேதோ சொன்னது போலிருந்தது.

அந்த கணத்தில் அந்த நெகிழ்வும் ஒரு வேதனை கலந்த உணர்வும் அவனுக்கும் தேவையாகத்தான் இருந்தது. சட்டென்று அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்கள்.

அவன் ஏதோ பேச வேண்டும் என்பதற்காக, "ஏன் இசை, நான் கேட்கணும்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன். ஒவியம் பிடிச்சுதா?" என்றான்.

அந்த மகிழ்ச்சியோடுதான் இப்போது அவர்கள் அந்த பொருட்காட்சிக்கு வந்திருந்தார்கள்.

கூட்டத்திலே கொஞ்சம், கொஞ்சமாக பிரிந்து விட்டார்கள் என்றாலும் கூட சத்யபிரகாஷும், வல்லபியும் ஒரே பக்கமாக வந்து கொண்டிருந்தார்கள்.

மற்றவர்களெல்லாம் சற்று தள்ளிப் போய் விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அவர்கள் அப்போது ஒரு ஸ்டாலைப் பார்த்து விட்டு, நாடக மேடைக்குப் பக்கத்திலே கிட்டத்தட்ட வந்து விட்டார்கள்.

திடீரென்று ஒரே சத்தமாக இருந்தது.

எல்லோரும் திடு திடுவென்று ஒவ்வொரு பக்கமாக ஓடினார்கள்.

ஏதோ நான்கைந்து நாய்கள் ஒன்று கூடிக் கொண்டு சத்தம் போட்டபடி, குரைத்த படி வேகமாக துரத்திக் கொண்டு வரவும் மக்களெல்லாம் சற்று பீதியடைந்து ஒதுங்கினார்கள்.

கூட்டம் முண்டியடித்துத் தள்ளுகின்ற அதே நேரத்திலே சத்யபிரகாஷ் அந்த மேடைக் கட்டிடத்தினுடைய ஒரு சுவற்றின் மேலே சாய்ந்து சரி செய்து கொள்ள வேண்டியதாகப் போயிற்று.

கூட்டம் மேலும், மேலும் மோதுகையில் ஏழிசை வல்லபி தடுமாறுவதைப் பார்த்து, அவன் சட்டென்று தன்னருகிலே இழுத்துக் கொள்ள, அவன் சுவற்றின் மேல் சாய்ந்திருக்க அவன் மேல் தன் முதுகு முழுவதும் படியும் படியாக ஏழிசை வல்லபி சாய்ந்து நின்று கொண்டிருந்தாள்.

ஒரு நான்கைந்து நிமிடங்களுக்கு மேல் இந்த கலாட்டா நடந்தது. அதற்குள்ளாக, பொருட்காட்சி நிர்வாகிகள் யாரோ நான்கைந்து பேர் வந்து அந்த நாய்களை எல்லாம் ஆட்களை வைத்துத் துரத்தி, ஒரு வழியாக சந்தடி ஓய்ந்து நிமிர்வதற்கு சற்று நேரம் ஆகியது.

"அப்பாடா! பயந்தே போயிட்டேன்." என்ற படி அவனிடமிருந்து மெள்ள விலகினாள் ஏழிசை வல்லபி. அப்படி விலகுகிற நேரத்தில்தான் இருவரும் மிக நெருக்கமான ஒரு நிலையில் இருந்தோம் என்பது இருவருக்கும் புரிய, அந்த ஸ்பரிசத்தில் சற்றே அவர்கள் நிலைகுலைந்து போயிருந்தார்கள்.

ஏழிசை வல்லபி சத்யாவினுடைய முகத்தை நிமிர்ந்து பார்ப்பதற்கு லேசாக வெட்கப்பட்டாள்.

அவன் குரல் குழைந்தது. "டோண்ட் ஃபீல் அன் ஈஸி இசை. இதெல்லாம் நேச்சுரல்." என்பது போல அவன் சொன்னாலுங்கூட, அவன் பார்வை அவள் மீது படிந்து மீண்டது.

சிவந்து போன அவளது முகம் அவனுக்கு ஏதேதோ சொன்னது போலிருந்தது.

அந்த கணத்தில் அந்த நெகிழ்வும் ஒரு வேதனை கலந்த உணர்வும் அவனுக்கும் தேவையாகத்தான் இருந்தது. சட்டென்று அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்கள்.

அவன் ஏதோ பேச வேண்டும் என்பதற்காக, "ஏன் இசை, நான் கேட்கணும்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன். ஓவியம் பிடிச்சுதா?" என்றான்.

உலகத்து நேசமெல்லாம் அவள் பார்வையில் தொற்றி விட்டது போல் ஒரு பார்வையோடு அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். குரலே எழும்பாத ஒரு குரலில்,

"ரொம்ப...!" என்றாள்.

அவனும் பேச்சற்றுப் போய் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"நான் உங்களுக்கு நைட் ஃபோன் பண்றேன்" என்றாள்.

"ம்ம்..." என்றான் அவன்.

அதற்குள்ளாக, "உங்களை எங்கெல்லாம் தேடறது?" என்றபடி வந்து சூழ்ந்து கொண்டார்கள் நித்யா, மைதிலி, உமாகாந்தன் மூவரும்.

"நீங்க வேறப்பா. நாங்க பெரிய அட்வெண்ட்ச்சர்ல மாட்டி சிக்கி, வந்துருக்கோம் வெளியே..." என்றான் சத்ய பிரகாஷ்.

"என்ன ஆச்சு?"

"ஆமா. நாலைஞ்சு புலி துரத்திட்டு வந்திருச்சு. அதை வந்து ஐயா வில்லும், வேலும் எடுத்துப் போராடி ஜெயிச்சேனாக்கும்" என்றான் சத்யா.

"நீ செஞ்சாலும் செய்வே." என்றான் உமா காந்தன்.

அவர்கள் கலகலவென்று பேசிக் கொண்டு வந்தாலும், அதற்குப் பிறகு, ஏழிசை வல்லபி அவ்வளவாகப் பேச வில்லை.

ஒரு மௌனத்தில் ஆழ்ந்து கிடந்தாள் என்பது அவனுக்குப் புரிந்தது.

அன்றிரவு அவளிடமிருந்து ஃபோன் வந்த போது, இன்னும் கூட சில விஷயங்கள் அவனுக்குப் புரிந்தது. அவன் திகைத்துப் போனான்.

அத்தியாயம் - 19

சத்யபிரகாஷ் மிகுந்த எதிர்பார்ப்போடு காத்துக் கொண்டிருந்தான். அவர்கள் எல்லாம் விடைபெற்றுப் பிரிகிற நேரத்தில் அவளுக்கு மட்டுமே கேட்கும் படியாக 'எத்தனை மணிக்கு?' என்று கேட்டான்.

அவளும் அவனுக்கு மட்டுமே கேட்கும்படியாக 'பத்தரை மணிக்கு' என்று சொல்லி விட்டு நகர்ந்து விட்டாள்.

பத்தரை மணி எப்போதடா வரும் என்று காத்துக் கொண்டிருந்தான்.

மறுபடியும் ஏழு, எட்டு மணி வாக்கில் அவளிடத்திலே இருந்து ஒரு மெஸேஜ் வந்தது.

"டென்தெர்ட்டி ஒ.கே.வா?" என்பது போல.

அவனும் 'ஒ.கே.' என்று மெஸேஜ் அனுப்பியிருந்தான்.

இதெல்லாம் அவனுக்கு புதுமையாக இருந்தது.

அவள் ஒரு பள்ளிக்கூடத்திலே ஆசிரியராக இருக்கிறாள். தான் ஒரு வளர்ந்து வரும் தொழிலதிபராக இருக்கிறோம். இப்படியெல்லாம் சின்னப் பிள்ளைகள் போல நேரம் குறித்துக் கொண்டு ஒ.கே. வா என்று கேட்டுக் கொண்டு அதுவும் மற்றவர்கள் அறியாமல் ஒரு இரகசியம் காத்துக் கொண்டு இதெல்லாம் என்ன என்று அவனுக்கே சிரிப்பாக இருந்தது.

உடனே அவனுடைய இன்னொரு மனது சொன்னது தொழிலதிபராக இருந்தால் என்ன? ஆசிரியராக இருந்தால் என்ன? எல்லாரும் மனிதர்கள்தானே! அவரவர்களுக்கென நட்பு, குடும்பம், காதல் இதெல்லாம் இல்லாமலா இருக்கிறது.

இப்பொழுதுதான் முதல் முதலாக தன்னுடைய குடும்பத்தை விட்டு வெளியிலே இருக்கிற ஒரு பெண்ணோடு பழகிக்கொண்டிருக்கிறோம் என்பதால் ஒருவேளை தனக்கு இது ஒரு பூரிப்பான விஷயமாக தெரிகிறதோ என்னமோ?

அதற்கு மேல் அந்த உணர்வை அவன் ஆராய்ந்து பார்க்கத் தயாராயில்லை. ஒரு வகையில் அச்சமாகவும் இருந்தது.

'சரி, எதுவந்தாலும் வரட்டும்' என்று இப்பொழுது காத்துக் கொண்டிருந்தான். தெளிவாக முடிவெடுத்து வைத்திருந்தான்.

அநேகமாக பத்து மணிக்கு அவன் இல்லத்தில் எல்லாரும் உறங்கப் போய் விடுவார்கள்.

ஒருவேளை வல்லபியிடம் இருந்து போன் வந்தால் சட்டென்று வீட்டை விட்டு வெளியே கிளம்பி விட வேண்டும். செல் ஃபோனை எடுத்துக் கொண்டு என்று யோசித்து வைத்திருந்தான்.

அந்த நேரத்தில் அவர்கள் காலனி கொஞ்சம் அமைதி யண்ணாக இருக்கும்.

அவ்வப்போது அந்த நேரத்தில் சற்று நேரம் நடை பயின்று வருவதும் உண்டு.

முக்கியமான பிசினஸ் கால் ஏதாவது பேச வேண்டும் என்றால் கூட அந்த நேரத்தில் அவன் வெளியே போய் பேசி விட்டு வருவான். அதனால் அப்படிப் போவது புதுமையாக இருக்காது என்று அவனுக்குத் தோன்றியது.

பத்தரை மணி வந்தே விட்டது!

சரியாக வல்லபியினிடமிருந்து போன் வந்தது.

அவன் சட்டென்று செல்ஃபோனை எடுத்துக் கொண்டு அவசர அவசரமாக முன் பக்கக் கதவை திறந்து கொண்டு, வாசற் படியை விட்டு வெளியே இறங்கி, காம்பவுண்ட் கேட்டைத் திறந்து கொண்டு தெருவுக்குப் போய் விட்டான்.

அந்த அகலமான தெருவில் அமைதியாக இருக்கும் நேரத்தில் அப்படிச் செல்வதும் கூட கொஞ்சம் சுகமாகத் தான் இருந்தது.

சிலு சிலுவென்று அந்த காற்றை அனுபவித்துக் கொண்டே இடது காதில் செல்போனை பொருத்திக் கொண்டு 'ஹலோ' என்றான்.

"ஹலோ" என்று அந்தப் பக்கம் இருந்து வந்த மென்மையான குரல் அவன் மனத்தை வருடியது.

"நான் வல்லபி பேசறேன்" என்றாள் ஏழிசை வல்லபி.

"சொல்லுங்க இசை. உங்க ஃபோனுக்குத்தான் காத்துக்கிட்டிருக்கேன்" என்றான்.

"இல்லை. நீங்க கேட்டீங்களே அந்த ஓவியம் பிடிச்சிருக்கா அப்படீன்னு. அந்த ஓவியத்துக்கு நன்றி சொல்றதுக்காகத்தான் நான் இப்ப கூப்பிட்டேன்."

"ஓ. அப்படியா!" என்று அவன் மகிழ்ச்சியானான்.

"நீங்க கேட்பீங்க. நேர்லயே சொல்லியிருக்கலாமே அப்படின்னு. சில நேரங்கள்ள நேர்ல பேசறதை விட போன்ல பேசறது ரொம்ப சௌகரியம்" என்றாள் அவள்.

"ஆமாம். என் பிரண்டு கூட சொல்வான் சபார்டி னேட்டை திட்டணும்னா போன்ல திட்டிடலாம்டா. அது ரொம்ப கன்வீனியன்ட். முகத்துக்கு நேரா திட்டறது கஷ்டம் அப்படீன்னு சொல்லுவான்" என்றான் வேண்டுமென்றே.

அவள் செல்லமாக முறைப்பது இங்கிருந்தே தெரிந்தது. "இதானே வேண்டாங்கறது ஆக்சுவலா! உங்களுக்கு நன்றி சொல்ல கூப்பிட்டிருக்கேன்" என்றாள்.

"சொல்லுங்க... எவ்வளவு கிலோ நன்றி. அதை எப்படி சொல்லப் போறீங்க. அதை போன்லயே சொல்லி முடிச்சிடலாம்ற ஐடியாவா" என்றான்.

"வேற எப்படிச் சொல்லணுமாம்?" என்றாள். அதில் லேசாக ஒரு கொஞ்சலும் கெஞ்சலும் இருக்கிறாற் போல தோன்றியது.

அவனுக்குள்ளே ஒரு சிலிர்ப்பு ஓடியது.

சட்டென்று ஒரு பொறியும் தட்டியது.

ஏதோ வேறு புள்ளியில் போகிற மாதிரி இருக்கிறதே என்று உடனே அவன் தன்னை அந்த ஆராய்ச்சியில் இருந்து விடுவித்துக் கொண்டான்.

"இசை எனக்கு ரொம்ப இது" என்றான்.

"எது?" என்றாள்.

"இல்லை நீங்க அந்த ஓவியத்தை வாங்கி கையில வச்சிருந்தப்ப ரொம்ப உணர்ச்சிகரமாக ஒரு

எக்ஸ்பிரஷனோட நின்னீங்க தெரியுங்களா, அது ரொம்ப பிடிச்சது" என்றான்.

"பின்னே அந்த ஓவியத்துக்கு அதுக்கு கூடவா தகுதி இல்லை."

"இன்ஃபாக்ட் மத்தவங்க யாரும் இல்லாம இருந்திருந்தா நான் கரகரன்னு அழுதிருப்பேன். அவ்வளவு அருமையா இருந்தது. உமாகாந்தன் ஓவியம் ஒரு மாதிரினா. உங்களுடையது இன்னொரு மாதிரி. அவருது மைசூர் பாகு மாதிரின்னா. உங்களது பால் அல்வா மாதிரி" என்றாள்.

அவன் சிரித்தான்

"என்ன சிரிக்கறீங்க? ஆப்ட்ரால் நாங்க லேடீஸ். எங்களுக்கு இதெல்லாம் தான் உதாரணமாத் தோணுது."

"ஏங்க நீங்க ஒரு அறிவு ஜீவி. நீங்க ஒரு ஆசிரியர் அப்படீன்னு சொல்லுவாங்க?"

"இருக்கட்டுமே. நானும் மனுஷி தானே." என்றாள் அவள்.

"கண்டிப்பா நீங்க உருகின உருக்கத்துலேயே நீங்க மனுஷிக்கு மேலங்கறத புரிஞ்சுடுச்சு" என்றான் அவன்.

"அவ்வளவு மட்டும்தான் புரிஞ்சுதா?" என்றாள்.

"வேற என்ன புரியணும்? நீங்க கொஞ்சம் கொஞ்சமாக ரொம்ப நெருங்கின ஃபிரண்டா மாறிட்டு வர்றீங்க அப்படிங்கறது புரிஞ்சது."

"அப்பாடா! இவ்வளவாவது புரிஞ்சதே' என்பது போல அவள் அந்தப் பக்கம் புன்னகைத்துக் கொண்டாள்.

"அப்புறம்?" என்றாள்.

"ம்ம்ம்... சொல்லுங்க."

"என்ன திடீர்னு மறுபடியும் மரியாதை?" என்றாள் அவள்.

"ஓ.கே. சொல்லு" என்றான் அவன்.

"இல்லை நீங்க எங்க இருக்கீங்க" என்றாள்.

"ஏன்?"

"இல்லை சுத்தியும் பக்கத்தில யாரும் இல்லையே?" என்றாள்.

அவனுக்கு உள்ளுக்குள் ஏதோ எதிர்பார்ப்பு கிளம்பியது.

"இல்லை. உங்கிட்ட ஃப்ரீயா பேசலாங்கறதுக்காக அப்படியே எங்க காலனி ரோட்டில மெதுவா நடந்துக்கிட்டு இருக்கேன்" என்றான்.

"ஆஹா. பௌர்ணமி நிலவு ஒளியில நல்லா என்ஜாய் பண்றீங்க போல இருக்கு? இதுதான் உங்களுக்கும் எங்களுக்கும் வித்தியாசம். பத்தரை மணி இப்படி நீங்க வெளிய தனியா போக முடியும். நா அப்படி போக முடியுமா?" என்றாள்.

"ஒண்ணு செய்யட்டுமா? வண்டி எடுத்துட்டு வர்றேன். பர்மிஷன் வாங்கிட்டு வீட்டுல ரெண்டு பேரும் அப்படி நடக்கலாம்" என்றான்.

"ஆசை! தோசை!" என்றாள் அவள்.

அவன் சிரித்தான். "அப்புறம் வேற என்னமோ சொல்ல வந்தியே?" என்றான்.

"நீங்க எனக்கு அழகா ஒரு பரிசு தந்திங்கள்ள அதனால நானும் உங்களுக்கு ஒரு பரிசு தரப்போறேன்" என்றாள்.

"ஓ. ரியலி என்ன பரிசு" என்றான். அவன் ஆர்வத்துடன்.

"அந்த ராகவன் யாரு யாருன்னு கேட்டுட்டிருந்தீங்களே சொல்லப் போறேன்!" என்றாள்.

அவன் ஒரு நிமிடம் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான்.

"இப்ப அது எதுக்கு?" என்றான்.

"இல்லை, இப்பதான் உங்களுக்குத் தெரியணும்" என்றாள் அவள் கொஞ்சலாக.

"சரி சொல்லு" என்றான் அவன் வேண்டா வெறுப்பாக.

அவள் அந்தப் பக்கம் கலகலவென்று சிரித்தாள்.

"இதப் பாரு இசை! கடுப்படிக்காதே. எப்ப நான் அதைப் பத்தி பேசினாலும் உங்க அண்ணன் குனிந்து கொண்டு சிரிக்கிறான். நீ என்னடான்னா இப்படி கலகலன்னு சிரிச்சு கழுத்தறுக்கறே."

"ஓ.கோ. எங்க சிரிப்பு உங்களுக்கு கழுத்தறுக்கிற மாதிரி இருக்கா?"

"இல்லைடா உன் சிரிப்பு... என்ன சொல்றது காசை அள்ளி எறிஞ்ச மாதிரி, கோயில் மணி ஒலி மாதிரி நல்லா தான் இருக்கு. ஆனா சிரிக்கிற மேட்டர் என்னைக் கடுப் பாக்குதே" என்றான்.

"சரி இனிமே கடுப்பாக்காது. நான் இப்ப சொல்லிடறேன்!" என்றாள் அவள்.

"சொல்லு, சொல்லு!" என்று அவன் ஆர்வமானான்.

"நீங்க வரைஞ்ச ஓவியத்துல ராகவன் இருக்காரு." என்றாள்.

"வாட்!" என்று அவன் ஒரு நிமிடம் அதிர்ந்து போனான்.

"ஆமாம் சத்தியமா இருக்காரு" என்றாள்.

"ஹலோ! இது என்ன பிராக்டிக்கல் ஜோக்கா. இதுக்கு வேற ஏதாவது பேர் இருக்குதா. என்னமோ என்னை மட்டம் தட்டுற மாதிரி தெரியுதே" என்றான்.

"இல்லை சத்யா உண்மையாத்தான்!" என்றாள்.

"இதுக்கு மேல நம்மளுக்கு தாங்காதும்மா. அவுட் வித் இட்" என்றான் அவன்.

"அதுல என் கூட வேற யாரெல்லாம் இருக்காங்க?" என்றாள்.

"வேற யாரு இருக்காங்க. உங்க வீட்டு கேட் இருக்கு."

"ம்... ம்... அதுல காக்கா இருக்கு" என்றான்.

அவள் கலகலவென்று சிரித்தாள். "அந்த காக்காவுக்குத் தான் நான் ராகவன்னு பேரு வச்சிருக்கிறேன்" என்றாள்.

மறுபடியும் அதிர்ந்து போனான். 'வாட்' என்றான். அங்கேயே நின்று விட்டான்.

நடந்து கொண்டிருந்தவன் சட்டென்று அப்படி நிற்கிறோம். சுற்று முற்றும் போகிறவர்கள் யாராவது தன்னைக் கவனிக்க கூடும் என்பதெல்லாம் அவனுக்கு தோன்றவே யில்லை.

ஒரு நிமிடம் அமைதி காத்தான்.

அந்தப் பக்கம் அவள் பயந்து போனாள்.

"சத்யா. சத்யா என்ன ஆச்சு?" என்றாள்!

அந்த ஒரு நிமிட அமைதிக்குப் பிறகு அவன் சுற்றுப் புறத்தை சற்றும் கவனிக்காமல் கடகடவென்று வெடிச் சிரிப்பு சிரிக்க ஆரம்பித்தான்.

"ஏய்! நிஜமாவா! நிஜமாவா?". என்று கேட்டுக் கொண்டே மறுபடியும் மறுபடியும் சிரித்தான்.

ஒரு நிமிட அமைதிக்குப் பிறகு வல்லபியும் அந்தச் சிரிப்பில் சேர்ந்து கொண்டாள். "நிஜமாத்தான்" என்றாள்.

"அண்ணனும், தங்கையும் இப்படியெல்லாம் ஏமாத்துவீங்களா?" என்றான் அவன்.

"நாங்க ஒண்ணும் ஏமாத்தலை. ராகவனை நீங்க ஆளுன்னு நினைச்சுட்டீங்க."

"எங்களுக்கு என்ன தெரியும், அம்மணி இப்படி காக்காவுக்கெல்லாம் பேரு வச்சிருப்பீங்கன்னு."

"இல்லை, ராகவன்றது எனக்கு புடிச்ச பேரு. அந்த காக்கா என்னோட ரொம்ப பிடிச்ச பிரண்டு. அதனால காக்காவுக்கு ராகவன்னு பேரு வச்சேன்."

அவன் மறுபடியும் சிரித்தான்.

ஏய்! நீ ஒரு இன்ட்ரஸ்டிங் பர்சனாலிட்டிப்பா, ஐ லைக் யூ" என்றான்.

அவள் அந்தப் பக்கம் ஒரு நிமிடம் அமைதியானாள். "நாங்க உங்களை ரொம்ப சீண்டிட்டோமோ?" என்றாள்.

"இல்லை இல்லை இது நல்லாத்தான் இருக்கு. அப்புறம் வேற என்னென்னத்துக்கு பேரு வச்சிருக்கிறே?

"எங்க வீட்டுல அவரைக் கொடி இருக்கு. அப்புறம் செம்பருத்திச் செடி இருக்கு. அப்புறம் ஜாதி மல்லிச் செடி

இருக்கு. அப்புறம் எல்லாச் செடிக்கும் ஒரு பேரு வச்சிருக்கிறேன்" என்றாள்.

அவன் மறுபடியும் சிரித்தான் "நல்லப் பொண்ணும்மா நீ என்றான்.

"ஏன் பேரு வைக்கக் கூடாதா? எல்லாமே உயிர்தானே. உங்களுக்கு பரமஹம்ச யோகானந்தர் கதை தெரியுமா" என்றாள்.

"இந்த நேரத்துல இவ்வளவு சந்தோஷமா பேசிக்கிட்டிருக்கையில சாமியார் கதையா?" என்றான்.

"இல்லை, இதைக் கேளுங்க!" என்றாள்.

"ம்... சொல்லு."

"பரமஹம்சர் அவருடைய ஆசிரமத்தில ஒரு ரோஜாச் செடி இருந்ததாம். அந்த ரோஜாச் செடி பூக்கவே இல்லையாம் ரொம்ப நாள். ஒரு நாள் பரமஹம்சர் பக்கத்தில உட்கார்ந்து சொன்னாராம். இந்த ஆசிரமத்தில யாரும் உனக்கு எந்தத் தொல்லையும் பண்ண மாட்டாங்க அதனால நீ முட்களை உருவாக்கறதுக்குப் பதிலா ரோஜாக்களை உருவாக்கு. உன்னுடைய சக்தியை எல்லாம் முள்ளை உருவாக்குறதுல வேஸ்ட் பண்ணாதே அப்படின்னு அதுக்கிட்ட உட்கார்ந்து பேசினாராம்.

பூ வோன்ட் பிலீவ் இட். கொஞ்ச நாளைக்கு அப்புறம் அந்தச் செடியில முட்களே வரவில்லையாம். நிறைய ரோஜாப் பூ பூத்ததாம். அந்த செடியைக் கூட போட்டோ எடுத்து அவருடைய வரலாற்றில் போட்டிருக்காங்க."

"ஓகோ! அப்படியா!" என்று அவன் ஆழ்ந்து உள்வாங்கிக் கொண்டான்.

"எல்லாமே உயிரினம் தானே! அப்படியிருக்கறப்போ ஏன் நாம அதுக்கிட்ட மனிதர்களைப் போல பழகக் கூடாது? அதான் நான் டிரை பண்றேன்?" என்றாள்.

"சரிம்மா. இதெல்லாம் ஓகே. நாளைக்கு புலிக்குட்டி வளக்கறேன், சிங்கக் குட்டி வளக்கறேன்னு ஆரம்பிச்சுடாதே."

"ஏன் அப்படிச் சொல்றீங்க? புலிக்குட்டி வளக்கறவங்களும் நிறைய பேர் இருக்காங்க தெரியுமா?" என்றாள். "அப்புறம் உன் குழந்தையை யாரு வளர்க்கறது" என்றான்.

"அதையும் வளர்ப்பேன்" என்றாள்.

"ஓஹோ...!"

"அது கல்யாணம் ஆனதுக்கப்புறம் பார்த்துக்கலாம் என்றாள் குழைந்த குரலில்.

"அப்போ கல்யாணம் பண்ற தைரியம் இல்லையோ?"

"என்னை மாதிரி கிறுக்கச்சிக்கு யாரு சார் வருவாங்க?"

"வருவாங்க, வருவாங்க கண்டிப்பா யாராவது வருவாங்க. ஏதாவது ஒரு ஏமாளி மாட்டாமலா போயிருவான்?" என்றான் அவன்.

"இதானே வேண்டாங்கறது?" என்றாள் அவள் கோபித்துக் கொள்வது போல.

சற்று நேரம் அப்படியே பேசிக் கொண்டு அந்தத் தெரு முனையிலேயே திரும்பி மறுபடியும் மெல்ல நடந்து வந்தான்.

பேச்சுக்கிடையிலேயே குபீர் குபீர் என்று சிரித்தான். அவள் என்ன சிரிப்பொலி என்று கேட்கும் பொழுது.

"இல்லை, ராகவன் மேட்டருக்குத்தான் சிரிக்கிறேன்!" என்றான்.

அவளும் அந்தப் பக்கம் சேர்ந்து கொண்டாள்.

"ஓகே! குட் நைட் வைக்கட்டுமா?" என்று அவன் விட்டு கேட் அருகில் வந்தான்.

ஏனோ ராகவன் என்பது ஒரு காகம் என்று தெரிந்த உடனே தன் மனத்தில் இருந்து பெரிய பாரம் இறங்குவதைப் போல உணர்ந்தான்.

சிரித்துக் கொண்டே மேலே பார்த்தான்.

அவர்களது வீட்டருகிலே வந்து விட்டிருந்தான்.

மேல் மாடியில் உமாகாந்தனுடைய அறைக்கு ஒரு பால்கனி வைத்துக் கொடுத்திருந்தான். ஒரு ஜன்னல் இருந்ததை உடைத்து அங்கிருந்து ஒரு பால்கனி அமைத்துக் கொடுத்திருந்தான்.

அந்தப் பால்கனியில் நின்று கொண்டிருந்த உமாகாந்தன் தன்னை கவனித்துக் கொண்டிருந்தான் என்பது அவனுக்குத் தெரியவில்லை. ஆனால், தான் நிமிர்ந்து பார்த்தபொழுது சரேலென்று திரும்பி அவன் உள்ளே நுழைந்து கொள்வது மட்டும் தெரிந்தது.

ஒரு நிமிடம் கேள்விக் குறி ஒன்று மனதிலே தோன்றி மறைந்தாலும் ராகவன் வெறும் காகம் தான் என்ற ஒரு உண்மையும் இன்றைக்கு எல்லாம் கலகலவென்று சிரித்த ஏழிசை வல்லபியினுடைய சிரிப்புமே அவன் உள்ளத்தில் நிறைத்திருந்தது.

அந்தப் புள்ளியிலேயே அவன் தன்னை உணர்ந்து கொண்டு வரப்போகிற உணர்வுகளில் இருந்து விடுவித்துக்

கொண்டிருந்தால். பின்னால் வரவிருந்த எத்தனையோ பிரச்சினைகளை தவிர்த்திருக்கலாம் என்பது அப்போது அவனுக்குப் புரியவில்லை.

அத்தியாயம் - 20

"எனக்கு நேரமாச்சும்மா" என்று கிளம்பிக் கொண்டிருந்தாள் ஏழிசை வல்லபி.

எட்டாகி இருந்தது!

ராகவனுக்கு வேற சாப்பாடு போடணும் என்று அவசர அவசரமாக தட்டில் சாதத்தைக் கலந்து கொண்டிருந்தாள்.

அம்மாவுக்கு கோபம் கோபமாக வந்தது. சிரிப்பாகவும் வந்தது.

"ஏண்டி நீ போடற சாப்பாட்டை நான் போட மாட்டேனா?" என்றாள்.

மகள் அம்மாவை கொஞ்சலாக பார்த்தாள். "போடுவம்மா எனக்கே நீ சாப்பாடு போடறே? ராகவனுக்கு போட மாட்டியா. இருந்தாலும் நானா போட்டா" எனக்கு ஒரு திருப்தி என்றாள்.

"சரி! நான் உனக்கு டிபன் பாக்ஸை ரெடி பண்றேன். நீ போய் போடு" என்றாள் அம்மா.

உடனே அவசரஅவசரமாக சாதத்தை கலந்து எடுத்துக் கொண்டு தங்கள் வீட்டு காம்பவுண்டு கேட்டின் பக்க வாட்டு சுவரில் தூணில் உள்ள வழக்கமாக வைக்கும் இடத்திலே அவள் சாப்பாட்டை கலந்து வைத்தாள்.

ராகவன் இதற்காகவே காத்துக் கொண்டிருந்தார் போலும். அங்கே இங்கேயும் நின்று தலையை திருப்பித்

திருப்பி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவர் இறங்கி வந்து அந்த உணவை எடுத்துக் கொண்டதன் மூலமாக ஏழிசை வல்லபிக்கு நியாயம் செய்தார்.

ஏழிசை வல்லபிக்கு புன்னகை மலர்ந்தது. "தாங்க்ஸ் ராகவா சீக்கிரமா வந்தே! இல்லேன்னா அவ்வளவுதான். நான் ஸ்கூலுக்கு சீக்கிரம் போகணும் தெரியுமா? நீ சீக்கிரம் வந்துரு?" என்றாள்.

அது எதைப் புரிந்து கொண்டதோ தலையை ஒரு ஆட்டு ஆட்டினாற் போல இப்படியும் அப்படியும் பார்த்து விட்டு மீண்டும் சோற்றுப் பருக்கைகளை கொத்திக் கொண்டது.

திடீரென்று ஒரு பைக் வருகிற சத்தம் கேட்டது. அவர்கள் வீடு சற்று உள்ளடங்கி இருப்பதால் அந்த பைக் நேராக அங்கே வந்தபொழுது அவளுக்கு ஆச்சரியம்.

"யார் இந்த நேரத்திலே?" என்று திரும்பிப் பார்த்தாள். முகம் மலர்ந்தது.

"கரெக்டா வந்துட்டேன் பார்த்தீங்களா" என்றபடியே சிரித்துக் கொண்டு இறங்கினான் சத்யபிரகாஷ்.

"சத்யா நீங்களா" என்று அவள் அதிர்ச்சியானாள். "ஆமாம் ராகவனை எப்படி கவனிக்கிறீங்க அப்படிங்கறதை பக்கத்தில் இருந்து பார்க்கலாம் அப்படின்னு வந்தேன்." என்று குறுகுறுப்புடன் சொல்லியபடியே பின்னந்தலையை லேசாக தடவிக் கொண்டான்.

கண்களில் குறும்பு மின்னியது. கூடவே வேற ஏதோவும் மின்னினாற் போல இருந்தது.

அவன் வந்து இறங்கியவுடனே அந்த சத்தத்தை கேட்டவுடனே ராகவன் பறந்து போய் விட்டார்.

"ப்ளீஸ்! அந்தப் பக்கம் வந்துருங்க. அப்பத்தான் ராகவன் வருவாப்ல."

"ஓகோ, நான் நின்னா வரமாட்டாரா?" என்றான்.

"ஆமாம்" என்றாள் அவள் ஒரு சங்கடமான முகபாவத்துடன்.

"ஓகே தென் செட்டில்டு நான் பாருங்க அந்தப் பக்கம் நிக்கிறேன். வரச்சொல்லுங்க உங்க ராகவனை" என்றான்.

அவன் அவர்கள் வீட்டு முன்பக்கத்தில் இருக்கக் கூடிய இடத்திலே சற்று ஓரமாக படிகள் துவங்கும் இடத்தில் நின்று கொள்ள, சொல்லி வைத்தாற் போல ராகவன் மீண்டும் வந்தது.

"இத பாரு எல்லாத்தையும் சாப்பிட்டறணும் சரியா?" என்று அவள் அருகிலே போக ராகவன் அவள் வருவதை சட்டை செய்யாதது போல நிமிர்ந்து ஒரு முறை பார்த்து விட்டு திரும்பவும் சோற்றுப் பருக்கைகளை கொத்தியது.

அவள் சிரித்து விட்டு திரும்பி வந்தாள்.

அவன் ஆழ்ந்த பார்வையுடன் அவளைப் பார்ப்பதைக் கண்டவுடன் அவள் முகம் சிவந்துவிட்டது.

"கரெக்ட் டைமிங் இல்லை. இதைப் பார்த்துடணும் அதை வச்சு ஒரு ஓவியம் வரைஞ்சிருக்கோம். எப்படி நடக்குதுன்னு பார்ப்போம்னு வந்தேன்."

"போதும், ரொம்ப தான் கேலி செய்றீங்க?" என்றாள் அவள்.

அவன் சிரித்துக் கொண்டே அருகிலே வந்தான்.

கண்களில் குறும்பு கொப்பளிக்க அவளைப் புன்னகையுடன் பார்த்தபடி "ராகவனையே இந்தக் கவனிப்பு கவனிக்கிறீங்க. இனி வரப்போறவனை எப்படி கவனிப்பீங்களோ?

"வரட்டும், என்றாள் அவள் லேசாக முகத்தை தூக்கி வைத்தபடி.

"பார்க்கலாம் பார்க்கலாம் நாங்க எங்க போயிடுவோம். நீங்க எங்க போயிடுவீங்க."

என்று சொல்லிக் கொண்டே அவன் வாயிற் படியில் கால் வைக்க, பேச்சுக் குரல் கேட்டு சம்பத் குமார் வந்தான்.

"ஏய் சத்யா! என்ன இந்த நேரத்துல?" என்றான்.

"ஆமாம்பா நேத்து பேசிக்கிட்டிருந்தோம்ல எதுக்கும் ஒன்பது மணிக்கு போயிடலாமா பேங்குக்குங்கறது மாதிரி பிளான் பண்ணிக்கிட்டு வந்தேன்."

"உன் போன் அடிச்சேன். உன் செல்ஃபோன் எடுக்கவே இல்லை."

"ஓ உன் கால் தான் அடிச்சுதா? அப்ப நான் குளிச்சுட்டு இருந்தேன்." திரும்பி வந்து பார்க்கறதுக்குள்ளே ஆஃப் ஆயிடுச்சு அவசரமா ரெடியாயிட்டு இருந்தேன். சரி என்ன பண்ணலாம்!" என்று கேட்டபடியே உள்ளே வந்தான்.

அதற்குள்ளாக வல்லபியின் பெற்றோரும் உள்ளே இருந்து வெளியே வந்தார்கள்.

"வாங்க தம்பி!" என்றார்கள்.

"ஆமாம்மா நீங்க உங்க வேலைகளை பாருங்க எல்லோரும் அவசரமா கிளம்பிக்கிட்டிருக்காங்க" என்று அவன் கை காட்டி விட்டு சம்பத் குமாரை நோக்கித் திரும்பினான்.

"நீயேன் ஒர்ரி பண்ணிக்கிற நான் இப்ப ஆஃப் எடே லீவு போட்டுட்டேன். கொஞ்சம் முன்ன பின்ன கூட போகலாம். இல்லைப்பா, அது இல்லைப் பான்னுட்டு ஒரு டென்னோ கிளாக் மேல போனா அந்த பேங்கல பயங்கர கூட்டமாயிடும். நைனோ கிளாக் பேங்க் ஓபன் பண்ணிடறாங்க ஷார்ப்பா அந்த டைம் போனோம்னா கொஞ்சம் ஃபிரீயா மேனேஜரைப் பார்க்கலாம்னு நினைக்கிறேன்" என்றான்.

"ஆமா தட்ஸ் ஆல் ஸோ பாயிண்ட் ஓகே டென் மினிட்ஸ்ல நான் ரெடியாயி வந்துடறேன். டிரெஸ் மாத்தினா போதும் போயிடலாம்" என்றான்.

"இல்லை இல்லை நீ சாப்பிட்டுட்டு வா நான் வெயிட் பண்றேன்."

"சாப்பாடு என்னப்பா சாப்பாடு ஒன் அவர்ல என்னாயிரப்போவுது" என்றான் சம்பத்குமார்.

"அப்படி இல்லை சம்பத் குமார் அங்க போய் வெயிட் பண்ணி முன்ன பின்ன ஆயிடுச்சுன்னு வச்சுக்கோ உன்னை பட்டினி போட்ட பாவம் ஆகாதுப்பா. இந்தக் குடும்பத்துல காக்காவுக்கு கூட சாப்பாடு போட்டு கவனிச்சுக்கறீங்க. அப்படிப்பட்ட குடும்பத்து நண்பரை நான் பட்டினி போடலாமா?" என்றான்.

சம்பத் குமார் கலகலவென்று சிரித்தபடி "வல்லபி இது எனக்கு இல்லை உனக்கு" என்றான்.

"அதானே! அந்த வார்த்தையைக் காப்பாத்துவோமா? விட்டுருவோமா. பாருங்க நச்சுன்னு டிபன் வருது" என்றபடி அவள் வந்தாள்.

"ஐயோ நான் டிஃபனெல்லாம் சாப்பிட்டுட்டு வந்தாச் சுங்க."

"இல்லை இன்னைக்கு அம்மா வெண் பொங்கல் செஞ்சாங்க ஜஸ்ட் ஒரு ஸ்மால் கப்ல சாப்பிடுங்க" என்றபடி ஒரு கப்பில் வெண் பொங்கலையும் இன்னொரு தட்டில் வடை இரண்டையும் கொண்டு வந்து வைத்தாள்.

"காலங்காத்தால இதுக்கெல்லாம் நேரம் இருக்குதா" என்றான் அவன்.

"அம்மாவுக்கு இதுலதான் ரொம்ப இன்ட்ரஸ்ட். வீக் டேஸ்ல வெறும் தாளிச்ச சாப்பாடே கொண்டு போகாதீங்கன்னு ஹெல்தியா பண்ணிக் கொடுப்பாங்க."

"நானும் கொஞ்சம் கலந்துப்பேன்" என்றாள்.

"அதானே மேன் பவர் நிறைய இருக்கு. நம்ம வீட்டுலயும் அப்படித்தான் மைதிலியும் அம்மாவும் ரொம்ப தொல்லை பண்ணுவாங்க. ஆனா நான் வடை...!" என்று இழுக்க.

"தெரியும் சாம்பார்ல ஊற வச்சுத்தான் சாப்பிடுவீங்க அன்னைக்கு ஏதோ மைதிலி சொன்னா எனக்கு ஞாபகம் இருக்கு" என்றாள்.

அவன் வியப்பாக அவளைப் பார்த்தான்.

"இந்த இன்பர்மேஷன் எல்லாம் எப்ப உங்களுக்கு?"

"இல்லை! அன்னைக்கு விருந்து நடந்துச்சு இல்லே அன்னைக்கு மைதிலி சொன்னாள். எங்க அண்ணனுக்கு உளுந்து வடைன்னா ரொம்ப பிடிக்கும். ஆனா சாம்பார்ல ஊற வச்சுதான் சாப்பிடுவாரு, தயிர்ல ஊர வச்சுத்தான் சாப்பிடுவாரு அப்படின்னு. எங்க வீட்டுலயும் காலை

யிலேயே ஊறப் போட்டுட்டோம்" என்று கொண்டு வந்து வைத்தாள்.

"அப்பா! இன்னும் என்னென்ன டீட்டெயில்ஸ் எல்லாம் வந்திருக்கோ!" என்று அவன் சிரித்தான்.

சம்பத் குமாரும் சிரித்தான். "இந்த லேடீஸ்கெல்லாம் என்ன வேலைன்னு நினைக்கிறே எல்லாம் எல்லாத்தையும் சொல்லியிருப்பாங்க. இவ எனக்கு என்னென்ன பிடிக்கும்னு மைதிலிகிட்ட சொல்லி வச்சிருக்காளோ என்னமோ" என்று சிரித்தான் சம்பத் குமார்.

"அதெல்லாம் மைதிலி நல்லா சமையல் செய்யும்பா. நீ எப்ப வர்றேன்னு சொல்லு லேசா போட்டு வச்சேன்னா உனக்கு பிடிச்சதெல்லாம் அந்தப் பொண்ணு செஞ்சுடுவா எங்க இல்லத்து மகா லெட்சுமி!" என்றான் சத்யா.

"ஓகே, நீங்க ரெண்டு பேரும் பேசுங்க. ஃபைவ் மினிட்ஸ்ல வந்துடறேன்" என்று அவன் உடை மாற்றிக் கொள்ளப் போக. "சாரி நான் கிளம்பணும்" என்றாள் அவள்.

"அப்படியா ஓகோ சரி!" என்று அவன் சற்றே ஏமாற்றமானான்.

'இல்லை' சும்மா ஸ்பெஷல் கிளாஸ் வச்சிடறோம் ஈவ்னிங்ல அண்ட் மானிங்ல ஒரு கால்மணி நேரம், அரைமணி நேரம் முன்னாடி போய் ஹோம் ஒர்க் என்ன பண்ணியிருக்காங்கன்னு பார்த்தா கொஞ்சம் வசதியா இருக்கும்."

"ஆமாமா. உங்க சப்ஜெக்ட் ரொம்ப டஃபான சப்ஜெக்ட் நீங்க வேற ஐடியல் டீச்சர்! கிளம்புங்கப்பா" என்றான்.

அவளும் "சாரி சாரி" என்று திரும்பத் திரும்ப சொல்லி விட்டு வீட்டு வாயில் படியில் இறங்கினாள்.

சட்டென்று அவனும் எழுந்து அந்த கேட் வாயில் வரை போனான்.

"ஓ.கே சத்யா" என்று அவள் திரும்ப.

"ஒகே. சரி மறுபடியும் எப்ப சந்திக்கலாம்?" என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போய் விழிக்க. "இல்லை எப்பவாவது நாம பேசணும்னு நினைக்கிறேன் என்றான்.

"எதைப்பத்தி?" என்று அவள் கேட்க.

அவன் சட்டென்று முகபாவத்தை மாற்றிக் கொண்டு "எல்லாம் இந்த ஓவியத்தைப் பத்திதான்" என்றான்.

பேசலாம் என்று மறுபடியும் அவனுக்கு குழந்தைக்குச் சொல்வது போல சொல்லி விட்டு வண்டியை ஸ்டார்ட் செய்தாள்.

அவள் சற்று தூரம் போவதைப் பார்த்து விட்டு திரும்ப வந்தான் சத்யபிரகாஷ்.

வங்கிக்கு போவதற்காகத் தான் வந்தாயா? ராகவனைப் பார்ப்பதற்காகத்தான் வந்தாயா? அல்லது வேற ஏதாவது காரணம் இருக்கா என்று அவனுடைய உள் மனது அவனைக் கேட்டது.

மெல்லச் சிரித்துக் கொண்டான்.

சம்பத் குமாரும் அவனும் கிளம்பினார்கள்.

அதற்குள்ளாக இன்னொரு முறை அவனுக்கு காஃபி வேறு வந்தது.

நித்ய கல்யாணி காஃபி கொண்டு வந்தாள். "பொங்கல் வடை அக்கா கொடுத்தாங்க. காபி நாங்க கொடுத்தா சாப்பிட மாட்டீங்களா!" என்றபடி வந்தாள் நித்தியா.

"அது சரி இன்னிக்கு உனக்கு காலேஜ் இல்லையா?" என்று கேட்டான்.

"அய்யய்யே! அது உங்களுக்குத் தெரியாதா? காலேஜ் எல்லாம் நான் முடிச்சாச்சு. இப்ப கம்ப்யூட்டர் கோர்ஸ் பண்ணிக்கிட்டிருக்கேன். ஈவினிங் தான் போவேன்" என்றாள்.

"அப்படியா ம்ஹூம் ம்ஹூம்...!" என்றான்.

"இதைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறோமே' என்பது போல லேசாக அசடு வழிந்தான் சத்யபிரகாஷ்.

"ஆக்சுவலா நான் வந்து கம்ப்யூட்டர் கோர்ஸ்ல" என்று அவள் ஆரம்பிக்க சம்பத் குமார் "ஒகே ஒகே உன் புராணம் எல்லாம் அப்புறம் வச்சுக்கலாம். மடமடன்னு காபியை குடிங்க போகலாம்!" என்று அவனை எழுப்பிக் கொண்டு கிளம்பினார்கள்.

பைக்கை எடுக்கும் பொழுது சம்பத் குமார் "உம் பைக்கிலயே போயிடலாம்பா எதுக்கு ரெண்டு வண்டி யெல்லாம்?"

"ஆமாமா! நானே வந்து டிராப் பண்ணிட்டு போயிடுறேன்" என்றான் சத்யபிரகாஷ்.

வண்டியில் ஏறி அமர்ந்த உடனேயே "ஏம்பா நித்யா ஏதோ சொல்ல வந்துச்சு பாவம். நீயேன் அதுக்குள்ள?" என்று இவன் கேட்க. "இல்லை அவள் ஏதோ கம்ப்யூட்டர் கோர்ஸ் படிக்கணுமாம். அதுக்காக அடி போட்டுட்டு இருக்கா?"

"படிக்க வச்சுட வேண்டியதுதானே?" என்றான் சத்யபிரகாஷ்.

"கொஞ்சம் டைம் கொடுக்கணும். அது போய் என்ன கோர்ஸுன்னு பார்க்கணும். இவளுக்கு ஏதாவது ஜாப் ஓரியண்டா படின்னா எனக்கு அதுல இன்ட்ரஸ்ட் இல்ல எனக்கு கம்ப்யூட்டர் தான் அப்படிங்கறா."

"ஏம்பா கம்ப்யூட்டரும் ஜாப் ஓரியண்டட்தான். அதெல்லாம் இன்னும் நாற்பது வருஷம் வரைக்கும் கம்ப்யூட்டர்ல குப்பை கொட்டலாம்" என்றான் சத்யபிரகாஷ்.

"சரிப்பா, நாம டிஸ்கஸ் பண்ணி அவளுக்கு ஏத்த மாதிரி ஒண்ணு செஞ்சிடுவோம். ஆமாம் மைதிலி என்ன படிச்சிருக்கு?" என்று கேட்டான் இவன்.

"அவளா? அவள் எம்.எஸ்.சி. முடிச்சு உன் சிஸ்டர் மாதிரி தான் பி.எட் பண்ணியிருக்கா ரெஜிஸ்டர் பண்ணி வச்சிருக்கோம். பிரைவேட் ஸ்கூல்ல கொஞ்ச நாள் எக்ஸ்பீரியன்சுக்காக போகலாம்னு இருக்கு. இன்னும் முடிவு பண்ணலை. எம்.பில் பண்றேங்கறா அதான் இன்னும் முடிவு பண்ணலையேப்பா" என்றான். இப்படியே அவர்கள் பேசிக் கொண்டு வங்கிப் போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

"சார்! மேனேஜர் வர்றதுக்கு ஒரு ஃபிப்டீன் மினிட்ஸ் ஆகும்!" என்றார்கள் அவர்கள்.

அங்கேயே அமர்ந்து தங்களுக்கு ஒரு முறை என்னென்ன தேவை என்பதை அவர்கள் பட்டியலிட்டுக் கொண்டிருந்த போதுதான் சத்யபிரகாஷுக்கு நினைவுக்கு வந்தது. காலையில் வீட்டில் இருந்து கிளம்புகிற ஆர்வத்தில்

முக்கியமான ஒரு டாக்குமெண்ட்காப்பியை வைத்து விட்டு வந்துவிட்டோம் என்பது.

"சம்பத்!" என்று கவலையுடன் எழுந்தான்?"
"என்னப்பா."

சம்பத் "முக்கியமான டாக்குமெண்ட்டுப்பா அதை விட்டுட்டு வந்துட்டேன்" என்றான்.

"விட்டுட்டு வந்துட்டேன்னா எங்க வச்சிருக்கே பீரோவிலேயா? எங்கே" என்று கேட்டான்.

"இல்லை எடுத்து அந்த ஃபோல்டரிலேயே இன்னொரு தனி ஃபோல்டர் அதை மேஜை மேல வச்சிருந்தேன் டேபிள் மேல. கிரின், கலர்ல, எல்லாத்தையும் எடுத்து வச்ச ஞாபகத்துல வந்துட்டேனே என்ன செய்யலாம்?" என்று யோசித்தான்.

சம்பத் குமார் உடனே "அதுக்கெதுக்கு இவ்வளவு யோசனை. ரெண்டு பேரும் போக வேண்டாம். உன் பைக் சாவியைக் கொடு. நான் போய் எடுத்துட்டு வர்றேன். நீ மேனேஜர் வரவும் கப்புன்னு பிடிச்சு கொஞ்சம் எக்ஸ்பிளெயின் பண்ணிக்கிட்டு இரு. போய் எடுத்துட்டு வர்றேன்" என்றான்.

"அப்படிச் சொல்றியா" என்றா சத்ய பிரகாஷ்.

"ஆமாம்பா! ரெண்டு பேரும் கிளம்பிட்டு திரும்பி வர்றதுக்கு நேரம் ஆயிடும். அதுக்குள்ற மேனேஜர் வேற யாரையாவது பார்க்க உட்கார்ந்துட்டாருன்னா. அதுவும் இல்லாம டென்னோ கிளாக் மேல எப்படியும் நீ சொல்ற மாதிரி ரஷ் வர ஆரம்பிச்சுடும். ஏதோ கையெழுத்து பேச்சுன்னு போகும்."

"மொதல்லே அவரைப் பிடிச்சுக்கறது தான் நல்லது" என்றான்.

"சரிப்பா" என்று சத்யபிரகாஷ் ஒப்புக் கொண்டான்.

சம்பத் குமார் சத்யபிரகாஷினுடைய பைக் சாவியை வாங்கிக் கொண்டு. "இப்ப வீட்ல யாரு இருக்காங்க?" என்று கேட்டான்.

"வீட்ல அம்மாவும் அப்பாவும் இன்னிக்கு பேரூர் கோயிலுக்கு போயிட்டு வரணும். அங்க ஏதோ அறுபதாம் கல்யாணம் நடக்குது அங்கேயும் போய் பார்த்துட்டு வரணும் என்று சொன்னாங்க. அம்மா அப்பா இருக்க மாட்டாங்க. மைதிலி இருப்பா" என்றான்.

"உமாவும் அங்க என்னோட கன்சர்ன்ல இருக்கான். ஏன்னா நான் வந்துட்டேனில்லே" என்றான் மறுபடியும்.

"அப்படியா?" என்றான் சம்பத் குமார்.

பைக்கில் ஏறி அமர்ந்து ஸ்டார் செய்த பொழுது ஏனோ அவன் மனம் உற்சாகம் அடைந்தது. இதுவரை அவனுக்கு இல்லாத உணர்வாக ஒரு புதிய உணர்வாக அந்த உணர்வு தோன்றியது.

சத்யபிரகாஷுக்கு எல்லாம் நினைத்தபடி நடக்கப் போகிறது என்பதுதான் காரணம் என்று அவன் அப்பாவித் தனமாக அப்போதைக்கு எண்ணிக் கொண்டான்.

வண்டி வேகம் எடுத்தது.

அத்தியாயம் - 21

சம்பத் குமாரின் பைக் சம வேகத்தில் சீராக ஓடிக் கொண்டிருந்தது. அவன் போகின்ற வழி அவ்வளவு

டிராஃபிக் இல்லாத வழி. ஏனென்றால் அந்தக் காலை நேரத்தில் கூட்டம் நிறைய இருக்கும் என்பதற்காக அவன் முக்கியத் தெருவின் வழியாக போகாமல் வேறு வழிகளில் குறுக்கே புகுந்து ஓட்டிக் கொண்டிருந்தான்.

நல்ல வேளையாக அவன் போகின்ற வழிகளில் இருக்கின்ற தெருக்களும் நன்றாகவே இருந்தன.

அவனுடைய சிந்தனை ஏழிசை வல்லபியின் பிறந்த நாளை நோக்கி ஓடியது. அன்றைக்கு சத்யபிரகாஷ் ஏழிசை வல்லபிக்கு அந்த அழகான ஓவியத்தைக் கொண்டு வந்து பரிசாக கொடுத்து விட்டு சற்று நேரம் அவர்களோடு அளவளாவி விட்டு கண்காட்சிக்கு போய்விட்டு விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டான்.

அதற்குப் பிறகு அவனுடைய அப்பா செல்வ கணபதியும் அம்மா கருணாம்பிகையும் சற்று நேரம் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஏழிசை வல்லபிக்கு நிறைய தாள்கள் திருத்தும் வேலை இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு அவள் தன்னுடைய அறையிலே போய் அடைந்து கொண்டாள்.

நித்ய கல்யாணியும் ஏதோ கதை புத்தகத்தை எடுத்துக் கொண்டு முன்னறையில் போய் அமர்ந்திருந்தாள்.

'அம்மாவும் அப்பாவும் இந்த ஓவியத்தைப் பற்றி எதுவுமே சொல்ல வில்லையே. தான் இவர்களிடம் கேட்காமலேயே ஏழிசை வல்லபியின் படத்தை சத்யபிரகாஷிடம் கொடுத்து விட்டோமே அது பற்றி ஏதாவது சொல்லுவார்களோ' என்று லேசான கலக்கத்தில் தான் இருந்தான் சம்பத் குமார்.

அப்பொழுதே மணி பத்தரைக்கு மேல் ஆகியிருந்தது! அப்பா "ஏம்பா! சம்பத்து" என்று அழைத்தவுடனே என்னவோ வெடிகுண்டு வரப் போகிறது என்ற லேசான கலக்கத்துடன் போய் அவருடைய எதிரிலே அமர்ந்தான்.

"ஏம்ப்பா, நீதான் போட்டோ கொடுத்தியா?" என்று கேட்டார் அப்பா.

"ஆமாம்பா, நல்லா ஓவியம் வரையறாங்க. இவளுக்கும் ஓவியம்னா ரொம்பப் பிடிக்குது. ஒரு மாடலா வச்சு வரையட்டுமே. அப்படின்னுதான் கொடுத்தேன்" என்றான் தன்னிலை விளக்கம் கொடுப்பது போல.

அப்பா புன்னகைத்தார். "அதைப் பத்தி ஒண்ணும் தப்பில்லைப்பா. கலைஞர்கள் அவங்களை நாம மதிக்கணும். அதுல எல்லாம் தப்பு கிடையாது. ஓவியம் ரொம்ப நல்லா வரைஞ்சிருக்கான் அந்தப்பையன். போட்டோவை விட அந்த ஓவியம் ரொம்ப நல்லா இருக்கு" என்று பாராட்டினார்.

"ஆமாங்க! நம்ம ஏழிசை வல்லபிக்கு கண்ணே பட்டுரும் போல இருந்துச்சு எனக்கு. அவ்வளவு அருமையா வரைந்து இருந்தது அந்தப் புள்ளை.

சம்பத் குமார் 'நல்ல குடும்பம்பா' என்றான்.

அப்பா பெருமூச்சு விட்டார். "எல்லாம் சரிதாம்பா. அந்த வீட்ல தான் அப்படி ஒரு பிரச்சினை இருக்கே" என்றார்.

சம்பத் குமாரும் பெருமூச்சு விட்டு விட்டு சொன்னான். "ஆமாம்பா நல்லவங்களுக்குத்தான் ஆண்டவன் இப்படி சோதனை வைக்கிறான். அவங்க அம்மா அப்பாவும் சரி, சத்யாவும் சரி, உமாவும் சரி, மைதிலியும் சரி, ரொம்ப நல்ல

டைப்பா இருக்காங்க. ஆனா அவங்க குடும்பத்துல போய் இப்படி ஒண்ணு ஆயிப் போச்சு. ரொம்ப கஷ்டப் பட்டிருக்காங்க அப்பா."

"ஆமாம்ப்பா, இதையெல்லாம் இன்னும் சமுதாயம் ஏத்துக்கலை. ஏத்துக்க வைக்கறதுங்கறது கொஞ்சம் கஷ்டம். ஒரு விஷயம் ரொம்ப பிடிச்சதுப்பா. உன் ஃபிரெண்டு சத்யா அந்தப் பையனுக்கு எல்லா வசதியும் செஞ்சு கொடுத்து குடும்பத்துல இருக்க வைக்கிறான் பார்த்தியா அது ரொம்பப் பெரிய விஷயம்" என்றார்.

"ஆமாம்ப்பா, நானும் சில பேருங்ககிட்டே விசாரிச்சேன் சில பேரைப் பார்த்தேன். அவங்ககிட்ட எல்லாம் கேட்கும் போது ரொம்ப கஷ்டப்பட்டிருக்காங்கப்பா. புத்தகங்களை படிச்சாலும் தெரியுது. சமுதாயம் அவங்களை எப்பவுமே கேலி கிண்டலாதான் பார்க்குது. ஆனா அவங்களும் ஒரு உயிரு. அவங்களுக்கு உள்ளேயும் ஒரு ஆன்மா இருக்குதுன்னு ஏன் யோசிக்க மாட்டேங்கறாங்க என்றான்?" சம்பத் குமார்.

"ஆமாம்பா, நீ சொல்ற மாதிரி எல்லா உயிர்களுக்குள்ளேயும் ஆன்மாதானே இருக்கு. அதைப் புரிஞ்சுக்கிட்டா இந்த ஆண் பெண் பேதம், இந்த மாதிரி விஷயங்கள் எல்லாத்துலயும் ஒரு பக்குவம் வரும்" என்றார்.

சம்பத் குமாரினுடைய தந்தை சமுதாயத்திலே பல பெரிய மனிதர்களுடன் பழக்கம் உள்ளவர். சில தொண்டு நிறுவனங்களிலும் அவர் பங்களிப்பவர் என்பதால் எல்லா விஷயங்களையுமே ஒரு முன்னேறிய ஒரு பார்வையாகத்தான் பார்ப்பார்.

"நல்லதுதாம்பா, அந்தக் குடும்பத்துக்கு நீ நட்பு கொடுக்கறது நல்லதுதான்."

"ஆமாம்பா. அவங்க அவ்வளவு சீக்கிரம் யாருகிட்டேயும் பழகறது இல்லை."

"விசாரிச்சேன் நான். ஏன்னா எல்லாருமே தன்னை மறந்து ஏதோ ஒரு கட்டத்துல இந்த விஷயத்தைப் பத்தி ஏதாவது பேசிடறாங்க. காயப் படுத்திடறாங்க. அப்படிங்கற ஒரு வருத்தம் அவங்க குடும்பத்துக்கு இருக்கு. அதனால கொஞ்சம் ஒதுக்கமா இருக்காங்க. அதனால நானாதாம்பா போய் அவருகிட்ட நாம ஃபிரெண்ட்ஸா இருக்கலாம்னு சொன்னேன், சத்யா கிட்டே" என்றான்.

"தப்பில்லைப்பா, நல்ல விஷயம். இந்த வயசுக்கு இவ்வளவு தூரம் வந்து ஒரு ஏழெட்டு வருஷம் ஒரு இடத்தை நிருவகிச்சதுக்காக அந்த இடத்தை வந்து விலை குறைத்துக் கொடுக்கறேன்னு சொல்றாரு பாரு. அதெல்லாம் பெரிய விஷயம்பா."

"ஆமாம்பா" என்று சிலாகித்துக் கொண்டான் சம்பத்குமார்.

நேற்றும் கூட இதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு இந்த குடும்பத்தை மிகவும் பிடிக்கிறது என்பது சம்பத் குமாருக்கு பெருத்த நிம்மதியைத் தந்தது.

இன்னும் சொல்லப் போனால் வல்லபியின் திருமணத்தை முடித்துக் கொண்ட பின்பு இந்தக் குடும்பமும் அந்தக் குடும்பமும் சேர்ந்து எங்காவது தீர்த்த யாத்திரை ரெண்டு மூன்று மாதங்களுக்கு போகப் போகிறார்கள்

என்று இப்படியெல்லாம் வேறு அப்பா சொல்லிக் கொண்டிருந்தார்.

"அவங்க கிட்ட கேட்டீங்களா அப்பா?" என்றான் சம்பத் குமார்.

"இல்லைப்பா, எங்கயாவது போகணும்னு பேசிக் கிட்டிருந்தோம். வல்லபி மேரேஜ் முடிச்சுட்டுதானேப்பா அதைப் பத்தி யோசிக்க முடியும்?" என்றார் அப்பா.

மறைமுகமாக "அப்பா! வல்லபிக்கு திருமண ஏற்பாட்டில் இறங்கு என்று சொல்லுகிறாரோ" என்று தோன்றியது.

"ஆமாம்பா நல்ல பையனா பார்த்துடணும்."

"உன் தங்கை என்ன மனசில வைச்சிருக்காளோ கல்யாணம் பண்ணிப்பாளா இப்போ?" என்று கேட்டார்.

"பண்ணிக்காம என்னப்பா? வேலைக்குப் போய் ரெண்டு வருஷம் ஆச்சு. இன்னம் இழுத்துட்டிருந்தா நல்லா இருக்காது?"

"மொதல்ல வல்லபிக்கு மேரேஜ் பண்ணிடணும்" என்றான் சம்பத் குமார்.

"ஆமாம், அப்புறம் உனக்கும் ஒரு பொண்ணைப் பார்க்கணும்" என்றார் கருணாம்பிகை.

"உடனே ஆரம்பிச்சுடுவீங்களே. மொதல்ல வல்லபிக்கு மேரேஜ் முடியட்டும். செட்டில் ஆகட்டும். அவளுக்கு செய்ய வேண்டிய பண்டிகை சீரு எல்லாம் முடிச்சுட்டு அப்புறம் யோசிக்கலாம்" என்றான் சம்பத் குமார்.

"ஆமாம்பா, நல்ல பையனா பாரு. இந்த சத்யபிரகாஷ் மாதிரி நல்ல பொறுப்புள்ள பையனா இருக்கட்டும்" என்றார் அப்பா.

அதையெல்லாம் யோசித்துக் கொண்டே வண்டியை ஒரு திருப்பத்தில் திருப்பினான் சம்பத் குமார்.

அந்தத் தெருவிலே புகழ் பெற்ற ஒரு ஐஸ்கிரீம் பார்லர் இருந்தது. "தங்கைக்கு அந்த ஐஸ்கிரீம் பார்லர்ல ஐஸ்கிரீம் வாங்கினா பிடிக்கும்" என்று நினைவுக்கு வர. இரண்டு ஃபேமிலி பேக்குகளாக வாங்கினான்.

அதே நேரத்தில் மைதிலிக்கு சத்யபிரகாஷ் போன் செய்து சொல்லியிருந்தான்.

மைதிலி கொஞ்சம் படபடப்பாக இருந்தாள்.

'தான் தனியாக இருக்கும் பொழுது இப்படி எந்த இளைஞனும் தங்கள் வீட்டுக்கு வந்ததில்லை. அவ்வளவு ஏன் இப்படி வேற்று மனிதர்களே அதிகமாக அவர்கள் வீட்டுக்கு வராத அளவுக்கு பார்த்துக் கொள்வார்கள். சத்யபிரகாஷும் அம்மாவும் அப்பாவும்.

ஏனென்றால் வருகிறவர்கள் ஒரு மாறுதலான பார்வையோ அல்லது தேவையற்ற ஒரு வார்த்தையோ விட்டு விட்டால் உமாகாந்தன் மனம் ஒடிந்து போய் விடுகிறான். அதற்கு பிறகு அவனை திரும்பவும் சம நிலைக்கு கொண்டு வருவதற்கு ஒருவாரம் ஆகி விடுகிறது என்பதால் அவர்கள் வெளி ஆட்களிடம் பழகுவதிலே எச்சரிக்கையாகத்தான் இருந்தார்கள்.

மைதிலி கல்லூரியில் படிக்கும் போது ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படிக்கும் போதும் சரி மிகச் சிலரே அதாவது ஒன்றிரண்டு பேர்கள் என்று தான் தன்னுடைய நட்பு வட்டத்தில் வைத்துக் கொண்டிருந்தாள்.

அவர்களும் இப்பொழுதெல்லாம் திருமணம் ஆகி அவர்கள் குடும்பத்தை பார்க்க ஆரம்பித்து விட்டார்கள்.

அதனால் முதல் முதலாக சம்பத் குமார் மாதிரி ஒரு இளைஞன் தங்கள் வீட்டிற்கு வருவது அவளுக்கு கொஞ்சம் படபடப்பாகத்தான் இருந்தது.

மைதிலிக்கும் சரி, ஏழிசை வல்லபியினுடைய குடும்பத்தை மிகவும் பிடித்தது. சமீபத்தில் அவள் ஒரு விஷயத்தை கவனித்திருந்தாள்.

ஏழிசை வல்லபியிடம் மட்டும் அண்ணன் நன்றாக சிரித்துப் பேசுகிறார். அண்ணனுக்கு அனேகமாக ஏழிசை வல்லபியை பிடிக்கிறது போலும். ஆனால், இது எந்த மாதிரியான உறவு என்று எப்படி நாம் சொல்ல முடியும்?" நாம் ஏதாவது வாய் விட்டு ஒன்று கிடக்க ஒன்றாகி விடப் போகிறது என்பது போல் அவள் கண்டு கொள்ளாமல் இருந்தாள்.

இருந்தாலும் நான்கைந்து நாட்கள் அண்ணாவினுடைய அலுவலகத்துக்கு வந்து இரண்டு பேருமாக சேர்ந்து உணவு அருந்தினார்கள் என்றெல்லாம் கேட்கும்போது வல்ல பியைப் போன்ற ஒரு பெண் தங்கள் குடும்பத்துக்கு வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற எண்ணம் தோன்றியது.

கூடவே அண்ணன் திருமணமே வேண்டாம் என்று முடிவு செய்திருப்பது நினைவுக்கு வர அவளுக்கு வேதனையாக இருந்தது.

தான் இன்னமும் அதைப்பற்றியெல்லாம் பேசுகிற வயதை எட்ட வில்லை என்று பெற்றோர்கள் நினைக்கிறார்கள். ஆனால், கொஞ்சம் உலகம் தனக்கும் தெரியும். தானும் ஒரு முதுகலைப் பட்டதாரி ஆசிரியைப் பயிற்சி படிப்பு படித்தவள் என்பதையெல்லாம் இவர்கள் உணர மறுக்கிறார்கள்.

இந்த வயதிற்கு அண்ணன் கண்டிப்பாக ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு குடும்பம் நடத்த வேண்டியது தான். என்ன தான் தியாகம் செய்தாலும் ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு அண்ணாவை யார் கவனித்துக் கொள்ளுவார்கள்?

குடும்பம் மொத்தமுமே திருமணம் செய்து கொள்ளாமல் இருந்து விட வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டாள்.

அப்போது 'உள்ளே வரலாமா?' என்று குரல் கேட்கவும்.

ஒரு நிமிடம் படபடப்பாகி அமைதியானாள்.

சம்பத் குமார் உள்ளே வந்தான்.

கிட்டத்தட்ட ஆறு அடி உயரம் இருந்தான். அளவான உடல் மாநிறம், விசாலமான முகம் அரும்பு மீசை என்று கண்ணுக்கு பாந்தமாக வந்திருந்தான்.

"மைதிலி! அண்ணன் போன் பண்ணினாங்களா?" என்று கேட்டான்.

"ஆமாங்க. அண்ணன் போன் பண்ணினாங்க. நான் எடுத்து வச்சிருக்கேன்" என்றாள்.

"ஒ.கே. முதல்ல நீங்க உள்ள வாங்க" என்றாள்.

அவன் உள்ளே சென்றான்.

"அப்புறம் அண்ணாவோட ஃபிரெண்டை சரியா கவனிக்கலைன்னு அண்ணா கோச்சுக்கப் போறாரு."

"உங்க அண்ணனுக்கா? கோபமெல்லாம் வேற வருமா? அவரு சாமியாருன்னுல்ல நினைச்சுக்கிட்டிருக்கேன்" என்றான் சம்பத் குமார்.

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை, இவ்வளவு அழகா ஒவியம் வரையறவரு எப்படி சாமியாரா இருக்க முடியும்?" என்றாள் அவள் ரோஷத்துடன்.

"இல்லை! கல்யாணமெல்லாம் வேண்டாம் கீண்டாம்னு சொல்லிக்கிட்டிருக்காரு அதனால சொன்னேன்?" என்று சம்பத் குமார் அவளைக் கூர்ந்து பார்த்தவாறு அவள் வாயைப் பிடுங்கினான்.

"ஆமாம். ஏங்க நான் ஒண்ணு சொல்றேன். நீங்களே சொல்லுங்க."

"நீங்க ஒண்ணு சொல்றேன்னு சொல்லிட்டு என்னை சொல்லச் சொன்னா என்னங்க அர்த்தம்."

அவள் சிரித்து விட்டாள். "ஒகே. நான் முதல்ல சொல்றேன் பதில் அப்புறம் நான் கேட்கறதுக்கு நீங்க சொல்லுங்க" என்றாள்.

"இது நல்ல விளையாட்டா இருக்கே. நீங்க கேளுங்க இல்ல சொல்லுங்க" என்றான்.

"இல்லை, எங்க குடும்பத்துல பெரும்பாலும் வெளிக் குடும்பத்தோட பழக்கம் வச்சுக்கறது இல்லை. இப்பதான் முதல் தடவையா உங்க குடும்பத்தோட எங்க குடும்பம் நல்லா பழகிட்டிருக்காங்க. அந்த துணிச்சல்ல கேட்கறேன்" என்றாள்.

"இவ்வளவு பீடிகை எதுக்கு? பீடிகை பலமா இருக்கே" என்று பயந்தவன் போல நடித்தான்.

"அப்படியெல்லாம் பயப்படவேண்டாம்.

"சும்மா சாதாரணமான ஒரு கேள்விதான்" என்றாள்.

"கேளுங்க!" என்று பதில்சொல்ல ஆயத்தமானவன் போல தோளைக் குலுக்கி விட்டு. ஷர்ட்டின் கையை மடக்கி விட்டுக் கொண்டு நிமிரவும் அவள் சிரித்து விட்டாள்.

"அவ்வளவு முஸ்தீபெல்லாம் பண்ணி சொல்ல வேண்டிய பதில் இல்லைங்க. மனசில் இருந்து சொன்னா போதும்" என்றாள்.

"ஓ அப்படி சொல்றீங்களா ஓகே!" என்று அவன் மனசை தயார் செய்து கொள்வது போல நெஞ்சை நீவிக் கொண்டான்.

அவள் கண்களில் குறும்பு மின்னியது.

"நான் கேட்கறேன். அண்ணா என்னதான் நல்லவங்களா இருந்தாலும் முழுக்க, முழுக்க லைஃப் முழுக்க தியாகியா இருந்திட முடியுமா? அவருக்குன்னு ஒரு துணை வேண்டாமா? சொல்லுங்க" என்றாள்.

சம்பத்குமார் புன்னகைத்தான்

"என்னமோ வரப்போகுது. பெருசா ஏதோ கணை வரப் போகுதுன்னு நினைச்சேன் இதானா?" என்றான்.

"நீங்க இதை ரொம்ப லைட்டா சொல்றீங்க. ஆனா இதை நினைச்சா எனக்கு கையும் காலும் ஓட மாட்டேங்குது" என்றாள்.

"ஆமாம்! நானும் கூட இதைப்பத்தி அவன் கிட்ட பேசணும்னு நினைக்கிறேன். அதுக்கு என்ன காரணம் சொல்றான்?" என்று கேட்டான்.

"என்ன காரணம்? உமாவுக்கு ஆதரவு வேணுமாம். வரவங்க வந்து உமாவை எப்படி நடத்துவாங்கன்னு

தெரியாதாம். நாளைக்கு ஏதாவது ஒரு பிரச்சினை வந்து உமாவை வெளியில அனுப்புற சூழ்நிலை வந்துடக் கூடாதாம். உமாவை குடும்பத்தோடு வச்சுக் காட்டணும்னு சபதம் போட்டிருக்காராம்" என்றாள்.

"சபதமா" என்றான் அவன்.

"பொதுவா இந்த மாதிரி இருக்கறவங்க திருநங்கை திருநம்பின்னாலே குடும்பத்துல சேர்க்கமாட்டாங்களாம் வெளியே துரத்திடுவாங்களாம். அவங்க வெளியே போனால் எப்படி.... உங்க கிட்ட சொல்றது" என்றாள்.

"இப்படியே சொல்லலாம். இப்ப நீங்க சொல்லிட்டிருக் கீங்களே அது மாதிரியே?" என்றான் சம்பத் குமார்.

அவன் குறும்பு பேச்சுக்கு அவள் மறுபடியும் சிரித்தாள். "இல்லை ஒண்ணு பிச்சை எடுக்கணுமாம்? இல்லை என்று இல்லை" என்று கீழே பார்த்தாள்.

அவன் அதைப் புரிந்துகொண்டவன் போல "ஓகே ஓகே! புரியுது நீங்க சொல்ல வேண்டாம்?" என்றான்

"இப்படி ஒரு நிலைக்கு உமாவைத் தள்ளணுமா? அப்படின்னா நா எதுக்கு கூடப் பிறந்த சகோதரன்னு இருக்கணும்கறாரு" என்றாள்.

"அப்புறம்" என்று இழுத்தாள்.

அவன் இப்போது அந்த குறும்பை எல்லாம் விட்டுவிட்டு லேசான வேதனை கலந்த முகத்துடன் அவள் சொல்லுவதை கேட்டான்.

"அப்புறம் எனக்கு கல்யாணம் பண்ணனுமாம். அதுக்கு மாப்பிள்ளைக் கிடைக்கிறதே கஷ்டமாம் ஏன்னா உமா இப்படி இருக்கிறதுனால" என்றாள். கிட்டத்தட்ட அழுது விடுவது போல.

அவன் ஒன்றும் பேசவில்லை மவுனமாக நின்றான். "இதையெல்லாம் ஒரு சாக்கா வச்சுட்டு இவரோட வாழ்க்கையை தியாகம் பண்றாராம். சில நேரங்கள்ல நாம ஏண்டா பொறந்தோம்னு இருக்கு" என்றாள் அவள்.

சம்பத் குமார் நெகிழ்ந்து விட்டான்.

"ஏய் மைதிலி! என்ன இப்படியெல்லாம் பேசுறீங்க" என்றான்.

"இல்லை சார், அவரு ஒருத்தர் எத்தனை பாரத்தை சுமப்பாரு. சொன்னா கேட்க மாட்டேங்கறாரு. அவரும் கல்யாணம் பண்ணி குடும்பமும் குழந்தையுமா இருந்தா தான் எங்களுக்கு சந்தோஷம். அவரு புரிஞ்சுக்க மாட்டேங்கறாரு" என்றாள்.

சம்பத் குமார் ஒரு நிமிடம் மவுனமானான்.

"மைதிலி டோன்ட் ஓர்ரி. நாங்க பிரெண்ட்ஸ் எல்லாம் இருக்கோம்ல ஏதாவது வழி செய்வோம். கவலைப் படாதீங்க. உங்களுக்கு என்னங்க மாப்பிள்ளையா கிடைக்காது. உங்க அறிவுக்கும் தகுதிக்கும். திறமைக்கும்" என்றான் அவன்.

"நீங்க ஆறுதலுக்காக சொல்றீங்க" என்றாள்.

"நாம இதைப்பத்தி மறுபடியும் பேசறோம்" என்று சொல்லிவிட்டு "இப்போதைக்கு டாக்குமெண்ட் கொடுப்பீங்களாம். நான் போயிட்டு மறுபடியும் உங்க கிட்ட பேசறேன்" என்று சொல்லி அதை வாங்கிக் கொண்டான்.

திரும்பவும் வாசல் வரைக்கும் போனவன் திரும்ப வந்து "மைதிலி இதெல்லாம் பெரியவங்க விஷயம். நீங்க போட்டு

ரொம்ப வொரி பண்ணிக்காதீங்க" என்று சொல்லி விட்டு வண்டியை எடுத்தான்.

சற்று தூரம் போனவுடன் அவனுடைய மனம் கேட்டது. "கண்டிப்பா ஏதாவது செய்யப் போறியா? என்ன செய்யப் போறே?" என்று கேலி போல கேட்டது.

அந்தக் கணத்தில் தான் அவனுக்குத் தோன்றியது.

"இந்த மைதிலி எவ்வளவு அழகாக இருக்கிறாள். இவ்வளவு தன்னலமற்று யோசிக்கிறாள். எவ்வளவு நல்ல பெண்!" என்று தோன்றியது.

கொஞ்சம் திடுக்கிட்டுப் போனான். அந்தப் பெண்ணைப் பற்றி மதிப்பீடு செய்வதற்கு இதுவா நேரம் என்று. ஆனால் அந்த எண்ணம் மட்டும் அவனுக்குள் விதையாக விழுந்து விஸ்வரூபமாய்க் பெரிதாகிக் கொண்டே இருந்தது.

அத்தியாயம் - 22

கலா டீச்சர் ஏழிசை வல்லபியை ஒரு விதமான சிரிப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

கொஞ்ச நாளாகவே அவர் கவனித்துக் கொண்டு தான் இருக்கிறார்.

இப்போதெல்லாம் ஏழிசை வல்லபியின் முகத்தில் ஒரு தெளிவு இருந்தது.

வெளிச்சம் தெரிந்தது. காரணம் என்ன வென்று கேட்பதற்கு அவருக்கு அவசியம் இருக்க வில்லை.

ஓரளவுக்கு அவருக்கு புரிந்தது. ஆனால், அது சரிதானா? என்று உறுதி செய்து கொள்வதற்கான வாய்ப்புத்தான் இன்னும் அமையவில்லை.

அவன் ஒன்றும் பேசவில்லை மவுனமாக நின்றான். "இதையெல்லாம் ஒரு சாக்கா வச்சுட்டு இவரோட வாழ்க்கையை தியாகம் பண்றாராம். சில நேரங்கள்ல நாம ஏண்டா பொறந்தோம்னு இருக்கு" என்றாள் அவள்.

சம்பத் குமார் நெகிழ்ந்து விட்டான்.

"ஏய் மைதிலி! என்ன இப்படியெல்லாம் பேசுறீங்க" என்றான்.

"இல்லை சார், அவரு ஒருத்தர் எத்தனை பாரத்தை சுமப்பாரு. சொன்னா கேட்க மாட்டேங்கறாரு. அவரும் கல்யாணம் பண்ணி குடும்பமும் குழந்தையுமா இருந்தா தான் எங்களுக்கு சந்தோஷம். அவரு புரிஞ்சுக்க மாட்டேங்கறாரு" என்றாள்.

சம்பத் குமார் ஒரு நிமிடம் மவுனமானான்.

"மைதிலி டோன்ட் ஒர்ரி. நாங்க பிரெண்ட்ஸ் எல்லாம் இருக்கோம்ல ஏதாவது வழி செய்வோம். கவலைப் படாதீங்க. உங்களுக்கு என்னங்க மாப்பிள்ளையா கிடைக்காது. உங்க அறிவுக்கும் தகுதிக்கும். திறமைக்கும்" என்றான் அவன்.

"நீங்க ஆறுதலுக்காக சொல்றீங்க" என்றாள்.

"நாம இதைப்பத்தி மறுபடியும் பேசறோம்" என்று சொல்லிவிட்டு "இப்போதைக்கு டாக்குமெண்ட் கொடுப்பீங்களாம். நான் போயிட்டு மறுபடியும் உங்க கிட்ட பேசறேன்" என்று சொல்லி அதை வாங்கிக் கொண்டான்.

திரும்பவும் வாசல் வரைக்கும் போனவன் திரும்ப வந்து "மைதிலி இதெல்லாம் பெரியவங்க விஷயம். நீங்க போட்டு

ரொம்ப வொரி பண்ணிக்காதீங்க" என்று சொல்லி விட்டு வண்டியை எடுத்தான்.

சற்று தூரம் போனவுடன் அவனுடைய மனம் கேட்டது. "கண்டிப்பா ஏதாவது செய்யப் போறியா? என்ன செய்யப் போறே?" என்று கேலி போல கேட்டது.

அந்தக் கணத்தில் தான் அவனுக்குத் தோன்றியது.

"இந்த மைதிலி எவ்வளவு அழகாக இருக்கிறாள். இவ்வளவு தன்னலமற்று யோசிக்கிறாள். எவ்வளவு நல்ல பெண்!" என்று தோன்றியது.

கொஞ்சம் திடுக்கிட்டுப் போனான். அந்தப் பெண்ணைப் பற்றி மதிப்பீடு செய்வதற்கு இதுவா நேரம் என்று. ஆனால் அந்த எண்ணம் மட்டும் அவனுக்குள் விதையாக விழுந்து விஸ்வரூபமாய்ப் பெரிதாகிக் கொண்டே இருந்தது.

அத்தியாயம் - 22

கலா டீச்சர் ஏழிசை வல்லபியை ஒரு விதமான சிரிப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

கொஞ்ச நாளாகவே அவர் கவனித்துக் கொண்டு தான் இருக்கிறார்.

இப்போதெல்லாம் ஏழிசை வல்லபியின் முகத்தில் ஒரு தெளிவு இருந்தது.

வெளிச்சம் தெரிந்தது. காரணம் என்ன வென்று கேட்பதற்கு அவருக்கு அவசியம் இருக்க வில்லை.

ஓரளவுக்கு அவருக்கு புரிந்தது. ஆனால், அது சரிதானா? என்று உறுதி செய்து கொள்வதற்கான வாய்ப்புத்தான் இன்னும் அமையவில்லை.

அப்பாடா! அந்த ஓவியத்தை வரைந்து சத்யபிரகாஷ் கொடுத்த நாளில் இருந்து சத்யபிரகாஷைப் பற்றிய பேச்சு மிக அதிகமாக இருந்தது.

"ரொம்ப அருமையா வரைஞ்சிருக்காருங்க. நிஜமாவே அவருக்கு இவ்வளவு திறமை இருக்கும்னு எனக்கு தெரியலை" என்றாள்.

"நான் நினைக்கவே இல்லைங்க! எனக்காக ஸ்ட்ரெயின் எடுத்து இவ்வளவு அழகா ஓவியம் ஒண்ணு வரைஞ்சு கொடுப்பாருன்னு நினைக்கவேயில்லை."

"அதுல பாருங்க. எங்க அண்ணன் போய் இந்த ராகவனைப் பற்றியெல்லாம் அவருக்கிட்ட சொல்லியிருக்காரு. சஸ்பென்ஸ்தான்னு சொல்லியிருக்காரு. ஆனாலும் ராகவன் யாரு ராகவன் யாருன்னு அடிக்கடி கேட்டாரு" என்று சொல்லிச் சொல்லி மாய்ந்து விட்டாள்.

கலா டீச்சர் லேசாக ஒற்றைப் புருவத்தை உயர்த்தியபடி "ராகவன் யாருன்னு சத்யாவுக்கு எதுக்குத் தெரியணும்? என்ன அவசியம்?" என்று கேட்டார்.

"இல்லை! ஒரு சுவாரசியம்தான். நீங்க எல்லாம் வேற அன்னைக்கு கிண்டல் பண்ணிக்கிட்டிருந்தீங்களா. அப்படி கிண்டல் பண்ற அளவுக்கு யாரு? அப்படின்னு ஒரு சுவாரசியம்தான்" என்றாள்.

"இல்லை. இது அதுமட்டுமா தெரியலையே?" என்று கேட்டார் கலா டீச்சர்.

"இல்லைங்க டீச்சர்! அவரு நினைச்சுட்டாரு யாரோ ராகவன்னா அவருக்கு எனக்கும் ஏதோ எங்கேஜ் மெண்டோ இல்லை பிரெண்ட்ஷிப்போ என்று அந்த மாதிரி நினைச்சுட்டாரு.

கலா டீச்சர் குபீரென்று சிரித்தார்.

"அந்த அளவுக்கு பைத்தியமாயிட்டானா?" என்றார்.

"நீங்க என்ன சொல்றீங்க?" என்றாள் திடுக்கிட்டுப்போய் ஏழிசை வல்லபி.

"இல்லை. இல்லை. கொஞ்ச நாள் தான் பழகி இருக்கான். அதுக்குள்ள ராகவன் ராகவன்னு திருப்பித் திருப்பிக் கேட்டானே அதுக்குச் சொன்னேன்" என்றாள்.

"இன்னிக்கு வகுப்புல ஒண்ணு நடந்தது தெரியுமா?" என்று விவரித்தாள் ஏழிசை வல்லபி.

அன்றைக்கு உண்மையிலேயே வகுப்பிலே அப்படி ஒரு விஷயம் தான் நடந்திருந்தது.

பிராக்டிக்கல் வகுப்பு பிற்பகலில் இருந்தது. பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் பள்ளிப் படிப்பு முடிவதற்கு இன்னும் ஆறு மாத காலம் தான் இருக்கிறது என்பதால். அவள் அவர்களைக் கண்டிக்க மாட்டாள்.

ஆனால், சிரத்தையுடன் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியதை சொல்லிக் கொடுப்பாள்.

பள்ளி நேரம் முடிந்த பிறகு அவளிடம் சற்று விளையாட்டாக கூட பேசுவார்கள் மாணவர்கள்.

எல்லை மீறாத வரைக்கும், மரியாதை குறைவாக இல்லாத வரைக்கும், அவள் அதை அனுமதிப்பாள்.

அவள் வகுப்புக்கு வேகமாக வந்து கொண்டிருப்பாள். ஒரு மாணவன் ஓடி வந்து ஒரே ஒரு கடி ஜோக் சொல்லட்டுமா என்று கேட்பான். அவளுக்கு சிரிப்பாக வரும். "கேட்கறேன். ஆனா டைம் ஆகுதே" என்பாள்.

"நீங்க நடந்துக்கிட்டே இருங்க. நான் கூடவே வந்து சொல்றேன்!" என்று ஏதாவது ஒரு கடி ஜோக் சொல்லி விட்டு ஓடுவான்.

அவள் புன்னகைத்தபடி வகுப்புக்குப் போவாள். இந்த டீன் ஏஜ் பருவம் தான் எத்தனை அழகு?

அப்போது கிடைக்கிற அனுபவம்தான் வாழ்க்கை முழுவதுக்கும் நினைத்துக் கொள்ள வேண்டிய மாதிரியான அனுபவங்கள் என்பது அவளுக்குத் தெரியும்.

அதனால் இந்த மாதிரி விஷயங்களில் மாணவர்களை அனுசரித்துச் செல்லுவாள் ஆனால் அதே வகுப்பிற்கு வந்தவுடன் ஆளே மாறி விடுவாள்.

அது மாணவர்களுக்கும் தெரியும்.

"மிஸ். நீங்க வகுப்புக்குள்ள வந்தா டெரர். ஆனால் அதே வெளிய தென்றல்" என்பார்கள்.

அவள் சிரித்துக் கொள்ளுவாள். மிகவும் புகழ ஆரம்பித்து விட்டார்கள் என்றால். 'போதும் ஐஸ் வைக்காதீங்க' எத்தனை புகழ்ந்தாலும் பிராக்டிக்கல்ல ஒழுங்கா பண்ணலைன்னா மார்க் கிடையாது. சீரோ கூட போடுவேன்" என்பாள்.

அவர்கள் கோபமாவது போல் நடித்து விட்டு "போங்க மிஸ்" என்பார்கள்.

"நீ போடா முதல்ல இங்கிருந்து!" என்று விரட்டி அனுப்பிவிடுவாள்.

இன்றைக்கு ரெக்கார்டு நோட் எல்லாம் கொஞ்சம் திருத்தி விட்டு வேலையை முடித்து விட்டு ஒரு பத்து நோட்டை மட்டும் அவள் எடுத்துக் கொண்டாள்.

லேப் அஸிஸ்டெண்ட் மாணவர்கள் செய்முறை பயிற்சி முடித்த பிறகு அந்த உபகரணங்களை எல்லாம் சுத்தம் செய்து எடுத்து வைத்துக் கொண்டிருந்தார்.

எல்லா மாணவர்களும் முடிப்பதற்கு பள்ளி நேரம் முடிந்தும் கூட ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. பொறுமை யாக காத்திருந்தாள்.

வேலைகளை முடித்த பின்பு கிளம்பலாம் என்று எத்தனித்த போது உதவிக்காக இருந்த இரண்டு மூன்று மாணவர்கள் அவள் அருகிலே வந்தார்கள்.

"மிஸ்! இந்தப் பழனியப்பன் சொல்றான்" என்றான். ஒரு மாணவன்.

"ஏய்! பசிக்குதுடா லஞ்ச் டைம் முடிஞ்சுடுச்சு! நான் போய் சாப்பிடணும் எனக்கு செகண்ட் பீரியட் கிளாஸ் இருக்கு" என்றாள் அவள்.

"அதெல்லாம் இருக்கட்டும் இதை கேட்டுக்கங்க!" என்றார்கள்.

"சொல்லு சீக்கிரம்!" என்றாள்.

"இல்லை கொஞ்ச நாளாவே நீங்க ரொம்ப பிரெஷ்ஷா இருக்கீங்களாம் பிரைட்டா இருக்கீங்களாம். முகத்துல லைட் போட்ட மாதிரி இருக்குதாம். அப்படின்னு இவன் சொல்றான்" என்றான்.

அவள் திரும்பி அந்த மாணவனை முறைத்தாள்.

"யாரு?"

"இவன் தான் இந்தப் பழனியப்பன்" என்றான்.

"ஏண்டா, இன்னைக்கு பிராக்டிக்கல் ஒழுங்கா செய்யலையா?" என்று கேட்டாள் ஏழிசை வல்லபி.

"இல்லையே ஒழுங்கா செஞ்சுட்டேனே" என்றான் அவசரமாக.

"அப்புறம் எதுக்கு இந்த தேவை இல்லாத ஐஸ் எல்லாம் வைக்கிறே?" என்றபடி அவள் சிரித்துக் கொண்டே நகர்ந்து விட்டாள்.

அதை இப்பொழுது அவசர அவசரமாக சாப்பிட்டுக் கொண்டே கலா டீச்சரிடம் சொன்னாள்.

கலா டீச்சர் புன்னகைத்து விட்டு "அவன் என்ன சொல்றது. எனக்கே அப்படித்தான் தோணுது?" என்றார்.

"என்ன டீச்சர் நீங்களும் கலாட்டா செய்யறீங்க" என்று அவள் கோபித்துக் கொண்டாள். "இல்லை வல்லபி நீங்க எப்ப அந்த சத்யபிரகாஷ் குடும்பத்துகூட பழக ஆரம்பிச்சியோ அப்ப இருந்ததே உன் முகத்துல ஒரு சேஞ்ஜ்" என்றார்.

"அது உமா பெரிய கலைஞர் இல்லை! நல்ல குடும்பம். அவங்களோட பழகறேன். அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம். இப்பதான் கொஞ்சம் நிம்மதியா இருக்கேன். பிரச்சினைகள் எதுவும் இல்லை" என்றாள் பெரிய மனுஷ தோரணையில்.

"ஓகோ அப்ப இதுக்கு முன்னாடி ரொம்ப பிரச்சினை இருந்ததோ?" என்றாள் கலா டீச்சர்.

அவள் விழித்தாள்.

"ஆமாம் பெரிசா எதுவும் பிரச்சினை இல்லையே. என்ன சொன்னா இவங்க கிட்ட இருந்து தப்பிக்க முடியும்?" என்று யோசித்தவள். "சரி அப்படித்தான்

வச்சுக்கோங்களேன் அவங்க பிரெண்ட்ஷிப் புடிக்குதுன்னு வச்சுக்கோங்களேன்."

"அவங்க பிரெண்ட்ஷிப்பா இல்லை சத்யாவோட பிரெண்ட்ஷிப்பா?" என்றார் கலா டீச்சர்

அவள் திடுக்கிட்டுப் போய் சுற்று முற்றும் பார்த்தாள்.

நல்ல வேளையாக அன்றைக்கு எல்லாரும் இரண்டாவது பிரியட் வகுப்புக்கு போய் இருந்தார்கள்.

"என்ன டீச்சர் நீங்களும் இப்படி கேலி செய்யறீங்க?" என்றாள் வெட்கத்துடன்.

"நான் சும்மா சொல்லலை சீரியஸா சொ தமாஷுக்கு சொன்னேன்" என்றாள்.

"நீங்க கூட இப்படியெல்லாம் தமாஷ் ஆரம்பிச்சுடீங்களா" என்றாள். "ஒண்ணு வேண்ணா நான் ஒத்துக்கறேன்" என்றாள்.

"சரி, எவ்வளவோ ஒத்துக்கப்போறேன்னு நினைச்சேன். ஒண்ணே ஒண்ணுதான் ஒத்துக்கறேன்னு சொல்றே சரி சொல்லு" என்றார் கலா.

"சத்யா சார் ரொம்ப நல்ல ஃபிரண்டு. ரொம்ப நாலெட்ஜபிள். அவரு கூட பேசிட்டிருந்தா நேரம் போறது தெரியறது இல்லை. ஒரு அரைமணி நேரம் பேசிட்டிருந்தா கூட முக்கியமா நாலு விஷயமாவது நம்மளுக்கு தெரியுது. இதெல்லாம் எனக்குப் புடிச்சுத்தான் இருக்கு. அதனால வேற மாதிரின்னு ஆயிடுமா?" என்றாள்.

"யாருக்குத் தெரியும்?" என்றார் கலா டீச்சர்.

"வேணாம் டீச்சர். இப்படி சுத்தி முத்தி எல்லாரும் சொல்லி நாளைக்கு ஏதாவது பிரச்சினை ஆகி. அவருகிட்ட

போய் நாளைக்கு என் மரியாதையை கெடுத்துக்கப் போறேன்.''

''அவருகிட்ட போய் சொல்லறதுக்கு முன்னாடி நல்லா யோசிச்சுக்கோ ஒரு முடிவுக்கு வா?'' என்றார் கலாவதி டீச்சர்.

''ச்சே!'' என்றாள் அவள் திடுக்கிட்டுப் போய்

''இல்லை வல்லபி. சத்யா ரொம்ப நல்லவன். அவன் குடும்பத்துக்கு தியாகம் செய்யறதா நினைச்சுக்கிட்டு பெரிய தப்பு பண்ணிட்டிருக்கான். ஆனா அவங்க குடும்பத்துல பிரச்சினைகளும் இருக்கு. உமா இப்படி இருக்கறதனால யாரும் பெண் கொடுக்க தயங்குவாங்க. அந்த குடும்பத்துக்கு எந்தப் பெண் வந்தாலும் அவங்களோட கலை உணர்வு களை புரிஞ்சுக்கணும். அவங்க மன உணர்வு புரிஞ்சுக்கறவங் களாத்தான் இருக்கணும்.

அந்தப் பண்பெல்லாம் உனக்கு இருக்கு. ஆனா அதுக்காக நீ ஒத்துக்கணும்னு எல்லாம் நான் செல்ல மாட்டேன். யோசிச்சுப் பாரு. எனக்கு என்னமோ உன் மனச கொஞ்சம் கொஞ்சமா சத்யாகிட்ட சாயற மாதி தெரியுது.'' என்றாள் கலா டீச்சர்.

வேறு யாராவது இப்படி சொல்லியிருந்தால் அவள் கடித்திருப்பாள். வெகுவாக கோபப்பட்டிருப்பாள். ஆனால் சொன்னது கலா டீச்சர் என்பதால் ஆழ்ந்த சிந்தனையுடன் வாங்கிக்கொண்டாள்.

''டீச்சர், உங்களுக்கு எங்க குடும்பத்தைப் பத்தி தெரியும் சம்பத் அண்ணாவைப் பத்தி தெரியும். அவங்களெல்லாம் இருக்கும் போது தலை இருக்க வால் ஆடலாமா? நான்

அப்படி எல்லாம் முடிவெடுக்க மாட்டேன் டீச்சர்'' என்றாள்.

''அதுவும் கரெக்ட் தான் பாக்கலாம்'' என்ற கலாடீச்சர் அதற்கு மேல் பேச்சை வளர்க்காமல் ''சரி சரி இப்படி எதுக்கு லபக்கு லபக்குன்னு சாப்பிடறே? மெதுவா சாப்பிடு'' என்றாள்.

''இல்லை நெக்ஸ்ட் பீரியட் கிளாஸ் எனக்கு'' என்றாள் அவள்.

''இடையில ஃபிப்டீன் மினிட்ஸ் இன்டர்வெல் இருக்குல்ல. சும்மா அரக்க பறக்க சாப்பிடாமே. நிதானமா சாப்பிடு' என்று விரட்டி விட்டு. தன்னுடைய பிளாஸ்கில் இருந்து டீயை எடுத்து தம்ளரில் ஊற்ற ஆரம்பித்தார்.

வல்லபி சிந்தனையில் ஆழ்ந்தாள்.

கலா டீச்சர் தான் தொடப் பயந்த ஒரு புள்ளியை தொட்டு விட்டார் என்பது புரிந்தது.

அன்றிரவு எல்லாரும் உறங்கிய பிறகு தன்னுடைய அறைக்குப் போனாள்.

அறையின் இரவு விளக்கு நீல நிறத்தில் இருந்தது.

அந்த நீல நிறப் பின்னணியில் அந்த ஓவியம் மிக அழகாக இருந்தது.

அந்த ஓவியத்தையே ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

மெல்ல கட்டிலில் போய் அமர்ந்தாள்.

படுத்துக் கொண்டே அந்த ஓவியத்தை சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சரேலென்று அந்த கற்பனை அவளுக்குத் தோன்றியது. ராகவனுக்கும் அவளுக்கும் இடையிலே கொஞ்சம் தள்ளி நின்றான் சத்யபிரகாஷ்.

அன்றைக்கு வந்து நின்றானே அதுபோல் இரண்டு பேண்ட் பாக்கெட்டிலும் கை விட்டுக் கொண்டு நிற்கிறாற்போல தோற்றம் அவள் உள்ளத்தில் தோன்றியது.

அப்படி ஒரு காட்சி தோன்றியவுடனே குப்பென்று அவளுடைய அடிவயிற்றில் இருந்து மகிழ்ச்சி பொங்கியது.

லேசான ஒரு துடிப்பு உணர்வு அவள் உள்ளமெல்லாம் பரவியது.

அந்தப் பரவசம் அவளுக்குப் பிடித்திருந்தது. ஆனால் கூடவே அச்சம் தோன்றியது.

தன்னை மறந்து எழுந்து சென்று அந்த ஒவியத்தைக் கழற்றி தன் மார்போடு சேர்த்துக் கொண்டு தன்னை மறந்து நின்றாள்.

அப்படி நிற்கின்ற தருணத்தில் தன்னுடைய அறைக் கதவை தான் சாத்த மறந்துவிட்டோம் என்பது அவளுக்குத் தெரியவில்லை.

எதற்காகவோ அந்தப் பக்கம் போன சம்பத் குமார் யதேச்சையாக திரும்பியவன் தங்கை நிற்கிற கோலத்தைப் பார்த்தான்.

தன்னை மறந்து ஏதோ எதிரிலே இருக்கிற ஒரு ஆளை அணைத்துக் கொண்டு நிற்கிறாற்போல அந்த ஒவியத்தை அணைத்துக் கொண்டு நிற்கின்ற தங்கையை சற்று நேரம் நின்று பார்த்தான்.

தான் வந்தது போல வேறு யாராவது பார்த்து விடக் கூடாது என்று நினைத்தானோ என்னவோ? வேண்டு மென்றே "ஏய் நித்யா இரண்டு தோசை ஊத்து" என்று சத்தம் போட்டுக் கொண்டே நகர்ந்தான்.

திடுக்கிட்டுப் போன வல்லபி அவசர அவசரமாக அந்த ஒவியத்தை ஆணியிலே மாட்டிவிட்டு எதிரிலே இருந்த கட்டிலில் போய் அமர்ந்தாள்.

படபடப்பாகி விட்டது.

குப்பென்று வேர்த்து விட்டது!

மணியைப் பார்த்தாள். ஒன்பது மணி ஆகியிருந்தது. அவசரமாக உறங்குகிறவள் போல் படுத்துக் கொண்டாள். ஆனால், உறக்கம் வருவதற்கு வெகு நேரம் ஆயிற்று.

இளமையின் உணர்வுகளும், அறிவுப் பூர்வமான சிந்தனைகளுமாக இரண்டு பக்கமும் அவள் மனம் ஊசலாடியது. எப்போது உறங்கினாள் என்பதே தெரியாத மாதிரி உறங்கிப் போனாள்.

அத்தியாயம் - 23

"என்ன சொல்லுங்க தம்பி. கோயமுத்தூர் மண்ணே மண்ணுதான். இந்த குளிரும் சுகமும் எங்கே கிடைக்கும். இது எல்லாத்தையும் விடுங்க. இந்த சிறுவாணித் தண்ணி இருக்கே. அந்த டேஸ்டு எந்த ஊரு தண்ணிக்கும் வராது தம்பி." என்று சொல்லிக் கொண்டிருந்தார் சபாநாயகம்.

ஒரு நெகிழ்வுடன் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தான் சத்யபிரகாஷ். "சார் வந்ததுக்கு ரொம்ப தாங்க்ஸ் சார்

இதுக்காக நீங்க இவ்வளவு தூரம் சிரமப்பட்டு வருவீங்கன்னு நான் எதிர்பார்க்கலை" என்றான்.

"என்ன தம்பி அப்படி நினைச்சுட்டீங்க நான் உங்களுக்கு வாக்குக் கொடுத்தாச்சு. அந்தக் காரியத்தை நிறைவேத்தித்தானே தரணும்?"

"உங்க யோசனை நல்ல யோசனை தம்பி. இரண்டு பத்திரமா எழுதிட்டு அப்புறமா அப்படியே ப்ரொசீட் பண்ணிக்கறேன்னு சொல்றீங்க இல்லையா. பண்ணிக் கோங்க. எனக்கு இந்தூரு வாழ்க்கை பிடிக்கலைதான். ஆனா என்ன செய்ய. பசங்க ரெண்டு பேரும் வரமாட்டேங் கறானுங்க. அங்க தான் இருப்பேனுங்கறாங்க."

.....!

"அவங்க போக்குலதான் போக இருக்க வேண்டியது இருக்கு. அதனால தான் யோசிச்சேன். ஒரு பொண்ணு இருக்கால்ல. அவளுக்கு ஏதாவது வருமானத்துக்கு வழி பண்ணி வைக்கணும். அவள் இந்தியாவுல தான் இருக்கா சென்னையிலதான் இருக்கா. அதனால இந்த அமௌண்ட்டை வாங்கி இங்கேயே ஏதாவது ஒரு ஏற்பாடு பண்ணிடலாம் என்று நினைக்கிறேன் என்றார்.

"தாராளமா செய்யலாங்கய்யா" என்றான் அவன்.

"ஊருக்குள்ள ஒரு இடம் பாரு தம்பி ஒரு கோடி ரூபாய் கொடுத்து வாங்கிட்டு. ஐந்து செண்ட் இருந்தாலும் போதும் அதுல கொஞ்சம் வாடகை வர்ற மாதிரி நிறைய போர்ஷன்ஸா கட்டி விட்டா அவளுக்கு ஒரு மாத வருமானம் வந்துடும். நம்மளும் அவளுக்கு செய்ய வேண்டிய கடமையைச் செஞ்ச மாதிரி ஆயிடும்" என்றார் அவர்.

"அதுகூட நல்ல யோசனைதான் சார்" என்றான் அவன்.

"பின்னே சும்மாவா நான் உனக்கு இந்த இடத்தைக் கொடுக்கறேன். இந்த வேலையெல்லாம் நீ எனக்குச் செஞ்சு தரணும். என் மகன் மாதிரி" என்றார்.

"கண்டிப்பா செஞ்சு தரேங்கய்யா. சான்ஸ் கிடைக் கணுமே. மேடமாவது சென்னையிலே இருப்பாங்களா?" என்று கேட்டான்.

"அதையேன் கேட்கறப்பா. இந்தப் பசங்க ரெண்டு பேரும் மச்சானையும் கூப்பிட்டுக்கறேன்னு சொல்லிட்டிருக்காங்க. அவரும் அங்க தான் அமெரிக்கா வந்துடறேன்னு சொல்லிக்கிட்டிருக்காரு. நானும் சொல்லிப் பார்த்தேன். சரி அவங்க விருப்பம்." தொடர்ந்து

"நானும் அம்மாவும் அங்க தான் இருக்கோம். பொண்ணை விட்டுட்டுத்தானே இருக்கோம். சரி அவளும் வந்தால் நல்லதாப் போச்சு. அப்படின்னு ஒரு வழியா முடிவெடுத்தாச்சுப்பா" என்றார்.

"நல்லதுங்க சார்" என்றான் அவன்.

"பக்காவா எல்லாம் பிரிபேர் பண்ணிட்டீங்களா?" என்று கேட்டார்.

பிரசாந்தும் சபாநாயகர் வந்திருக்கிறார் என்ற உடனே வந்து அவரைச் சந்தித்து விட்டுப் போனான்.

"பரவாயில்லைப்பா. நீ பழகற மனுஷங்க எல்லாரும் என்னமோ ஒரு விதத்துல உனக்கு ஹெல்ப் பண்றாங்க. அந்த அளவுக்கு உன்னை பிடிச்சுப் போச்சு" என்று பாராட்டினார் சபாநாயகம்.

"இதுல என்னங்க சார் இருக்கு. உண்மையா இருக்கிறேன் அதை நீங்க எல்லாம் புரிஞ்சுக்கறீங்க. அவ்வளவுதான்."

"அதைச் சொல்லு. எத்தனை பேர் இப்ப உண்மையா இருக்கறான்...?"

"நம்ப முடியறதில்லையேப்பா. இப்ப நானே எட்டு வருஷம்...! அங்க இருக்கேன். நீ இந்த பங்களாவுல என்னென்னமோ வேலை பண்ணலாம். இருந்தாலும் நீ உன் சொந்த வீடு மாதிரி நினைச்சு பாதுகாத்துக் கொடுத்தியே. அதை நான் மறக்கக் கூடாதில்லே?"

"ஆமாங்க சார் உங்க டாட்டர் சென்னையில இருக்காங்கன்னா. அவங்களாவது இடையில வந்து பார்த்துட்டுப் போயிருக்கலாம்" என்றான்.

"அதுக்கெல்லாம் அவசியம் இருக்கலப்பா மாப்பிள்ளைக்கு பெரிய பிசினஸ். அதனால அவரும் பெரிய இன்ட்ரஸ்ட் காட்டலை" என்றார்.

மற்றவர்கள் எல்லாம் அமைதியாக அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

சம்பத் குமாரும் கூட அப்போது அவர்களோடு தான் இருந்தான். அந்தப் பெரிய பங்களாவினுடைய கெஸ்ட் ஹவுஸ் சும்மாதான் இருந்தது. அதிலே தான் இப்பொழுது சபாநாயகம் தங்கி இருந்தார். அவர் வருவதற்காக சுத்தம் செய்து தயாராக வைத்திருந்தார்கள்.

வீட்டின் பராமரிப்பை பார்த்து அவர் மகிழ்ந்து போனார். பரவாயில்லப்பா "நான் நல்ல முடிவுதான் எடுத்திருக்கிறேன்" என்று தன்னைத் தானே பாராட்டிக் கொண்டார்.

சம்பத் குமார் சத்யபிரகாஷ் செல்வ கணபதி, ஏழுமலை எல்லாருமாக அமர்ந்து அந்த அக்ரிமெண்டை தயாரித்தார்கள்.

"பாரு, தம்பி ஒரு மூணு மாசத்துல பர்ஸ்ட் இதை முடிச்சுக்கறியா?"

"ஆமாங்க சார் மூணு மாசத்துல பர்ஸ்ட் இதை முடிச்சுக்கறேன். இந்த பங்களா பகுதியை முடிச்சுக்கறேன். அதுக்கப்புறம் சிக்ஸ் மந்த்ஸ் எனக்கு டைம் வேண்டியிருக்கும்!" என்றான்.

"ஒண்ணு பண்ணு. ரெண்டுக்கும் சேர்த்து ஒரு அக்ரிமெண்ட் ஒன் இயருக்கு போட்டுக்கோ, எப்ப வரணும்னு சொல்லு. ஆனா ரொம்ப அடிக்கடி வரமாட்டேன். மேக்ஸிமம் ரெண்டு டிரிப்புதான் வருவேன். அதுக்கு தகுந்தமாதிரி பாத்துக்கோ. அதுக்கு தகுந்த மாதிரி எனக்கும் இங்க வேலைகள் இருக்கு. ரெண்டையும் முடிச்சுட்டு நான் போயிடுவேன்" என்றார்.

"சரிங்க சார். சரிங்க சார். உங்களுக்கு தொல்லை இல்லாம பார்த்துக்கறேன்."

எல்லா வகையிலும் முயற்சி செய்து புரட்டிய ஐம்பது லட்ச ரூபாயை அவரிடத்திலே அட்வான்ஸாக கொடுத்து ஒப்பந்தத்தை போட்டுக் கொண்டார்கள்.

ஏழுமலையின் முகத்தில் பெருமையும் பெருமிதமும் போட்டி போட்டுக் கொண்டிருந்தது.

சபாநாயகத்தோடு சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு விடை பெற்றுக் கொண்டார்கள்.

ரெஜிஸ்ட்ரேஷன் முடிந்து அதற்குப் பிறகு மீதி தொகையை கொடுப்பதாக பேச்சு. அவர் தங்கியிருந்த இரண்டு நாளைக்காக சமையல் செய்வதற்கு கங்காம் மாவை அங்கே விட்டிருந்தான் சத்யபிரகாஷ்.

கங்காம்மா மிகவும் அன்பாக அவரை உபசரித்து அவருக்கு வேண்டியவற்றை செய்து கொடுத்தாள். பேச்சுக்கு நடுவில் 'ரொம்ப நல்ல பிள்ளைங்க. அருமையான பையன். எனக்கு அடைக்கலம் கொடுத்து வச்சிருக்கிறான். நான் என்னங்க பெரிசா வெல்லாம் வேலை செய்யறதில்லை. சும்மா கூட்டிகீட்டி எடுப்பேன். சமையல் கூட செய்ய வேண்டாம்மான்னு பக்கத்துல இருக்கற ஒரு மெஸ்ஸுல சொல்லிட்டானுங்க. அங்க போய் காலைல டிபன், மத்தியானம், நைட்டுக்குன்னு சாப்பிட்டுப்பேன்.

என் வாழ்க்கை இப்படியே ஓடுதுங்க. அவுங்க வூட்ல விசேஷம் இருந்தா போவேன். ஆனா என்னங்க, தம்பி கல்யாணம் பண்ணிக்க மாட்டேங்குது" என்றாள்.

இந்தச் செய்தி சபாநாயகத்துக்கு புதுமையாக இருந்தது.

"ஏன் அப்படி?" என்று கேட்டார்.

"என்னமோ தெரியலைங்க. அவங்க வீட்டுல என்னமோ பிரச்சினை இருக்குமாட்டம் இருக்கு. தம்பி தங்கச்சியை தான் தான் பார்த்துக்கணும் அப்படிங்கறாங்க" என்றார் கங்காம்மா.

சபாநாயகத்துக்கு ஓரளவு விஷயம் தெரிந்து தான் இருந்தது. அதனால் அவர் துருவித் துருவிக் கேட்கவில்லை. ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு "என்னம்மா பண்றது எல்லாருடைய வாழ்க்கையிலும் ஒரு பிரச்சினை. ஆனாலும்

இந்த சின்ன வயசுல இந்தப் பையனுக்கு இவ்வளவு பிரச்சினை வேண்டாம். இதெல்லாம் முடியட்டும். பேசிப் பார்க்கலாம்!" என்றார்.

"சரிம்மா. நான் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்கறேன். நீங்க போங்க" என்று கங்காம்மாவை அனுப்பி வைத்து விட்டார்.

செல்வகணபதியும் விடைபெற்றுக் கொண்டு போக சம்பத் குமாரை அனுப்பி விட்டு நேராக தன்னுடைய ஃபிரஷ்னிங் செண்டருக்கு வந்து சேர்ந்தான் சத்யபிரகாஷ்.

அதுவரையிலும் அவனுக்காக காத்துக் கொண்டிருந்த உமாகாந்தன் "என்ன அண்ணா ஆச்சு?" என்றான் ஆர்வத்துடன்.

"முடிஞ்சதுடா. அக்ரிமெண்ட் போட்டு கையெழுத்துப் போட்டுக் கொடுத்திட்டாரு. இன்னைக்கு நைட் பிளைட்டுக்கு கிளம்பறேன்னு சொன்னாரு."

"நல்ல மனுஷன்டா உண்மையாவே" என்று சொன்னான்.

உமாகாந்தனும் அதை ஆமோதித்துக் கொண்டான்.

"ஏண்ணா, மூணு நாளு நாளா அலைஞ்சிருக்கிறே. வீட்டுக்குப் போய் வேண்ணா தூங்கிட்டு வர்றியா?" என்றான் உமாகாந்தன்.

"இல்லைடா! நீ போய்க்கோ ரெண்டு நாளா அத்தனை பிசினஸ்ஸும் அப்படியே நிக்குதுல. யாரு வந்தாங்க?" என்று யார் யார் வந்தார்கள் என்ற விவரத்தை கேட்டுக் கொண்டான்.

உமாகாந்தன் யார் யார் வந்தார்கள். அவர்களுக்கு என்னென்ன விதமாக பதில் சொன்னோம் என்பதை சொல்லிவிட்டு. ஒரு ஏட்டிலே குறித்து வைத்திருந்ததையும் அவன் கையிலே கொடுத்து விட்டு கிளம்பினான்.

"சரிடா உமா, தாங்க்ஸ்டா! ரெண்டு மூணு நாளா பார்த்துக்கிட்டதுக்கு" என்றான்.

"அண்ணே உதை வாங்குவே" என்றான் உமா.

"உன்கிட்ட உதைவாங்குவது ஒண்ணுதான்டா பாக்கி" என்று சிரித்து விட்டு தன்னுடைய சுழல் நாற்காலியில் அமர்ந்தான் சத்யபிரகாஷ்.

மனது நிறைவாக இருந்தது.

உடனடியாக இந்த தகவலை சொல்லியே ஆகவேண்டும் என்று அவன் மனது உந்தித் தள்ளியது. அதனால் செல்ஃபோனை எடுத்தான்.

அதே சமயத்தில் ஏதோ எடுப்பதற்காக திரும்ப வந்த உமாகாந்தன் என்ன நினைத்துக் கொண்டானோ பின்புறத்தில் இருந்த ரெஸ்ட் ரூமுக்கு போய் விட்டு பின் கேட்டு வழியாக உள்ளே வந்தான்.

வந்தவன் அங்கே இருந்த வார இதழைப் பார்த்து விட்டு எடுத்து படித்துக் கொண்டே அமர்ந்து விட்டான்.

இந்தப் புறத்திலோ சத்யா போனை எடுத்து "ஹலோ இசை!" என்று ஆர்வமாக அழைத்தான்.

"நூறு ஆயுசுங்க உங்களுக்கு" என்றாள் ஏழிசை வல்லபி.

"அய்யோ வேண்டாங்க இதுவே ரொம்ப அதிகம்" என்றான் இவன்.

"அப்படி சொல்லிடுவீங்களா? எத்தனை பேருக்கு உங்களால நல்லது கிடைச்சிட்டிருக்கு. இன்னும் நூறு ஆண்டு காலம் வாழுங்கன்னு வாழ்த்தறதுக்கு எத்தனை பேர் இருக்காங்க தெரியுமா?"

"சரி, இப்ப நான் எதுக்கு கூப்பிட்டேன்னு தெரியுமா?" என்றான் இவன்.

"எதுக்கு?" என்றாள் அவள்.

"அக்ரிமெண்ட் போட்டாச்சு. சபாநாயகம் சார் கையெழுத்துப் போட்டுட்டாரு. இப்பதான் ஒன் அவருக்கு சொன்னாடி முடிஞ்சது. இப்பதான் ஃபெரெஷ்னிங் சண்டருக்கு வந்தேன். வந்ததும் முதல் வேலையா உனக்குத்தான் போன் செய்யறேன்" என்றான்.

"ஓ" என்று அவள் உற்சாகமானாள். "அம்மாவுக்கு சொல்லிட்டீங்களா?" என்றாள்.

"அம்மாவுக்கு அப்பா போய் சொல்லிப்பாரு. என்னமோ உனக்குத்தான் முதலில் சொல்லணும்னு தோணுச்சு சொல்லிட்டேன்" என்றான்.

"ரொம்ப சந்தோஷம். நானும் உங்களுக்கு ஒரு நியூஸ் சொல்லட்டுமா" என்றாள்.

"என்ன நியூஸ்?"

"நான் இங்க தான் உங்க ஏரியாவுல தான் இருக்கேன். இன்டர்விஷன் வந்தேன்ல அதுக்கு ரெம்யூனரேஷன் கொடுக்க வரச் சொன்னாங்க வந்திருக்கேன். வரட்டுமா இல்ல அங்கே?" என்றாள்.

"இதென்னடா வம்பா போச்சு கரும்பு தின்ன கசக்குமா? வேறயா? உடனே புறப்பட்டு இங்க வந்துடணும்" என்றான் ஆணையிடுவது போல.

"வந்தால் என்ன கிடைக்கும்" என்றாள் அவள்.
"கங்காம்மாகிட்ட சொல்லி சூடா கேண்டின்ல இருந்து வடை கிடைக்கும். டீ கிடைக்கும்?" என்றான்.

"அய்ய! இவ்வளவு பெரிய விஷயம் நடந்திருக்கு வடையும், டீயுமா" என்றாள் அவள்.

"நீ மொதல்ல வா. அப்புறம் என்ன கொடுக்கறதுன்னு பார்த்துக்கலாம்" என்றான்.

"வந்துடுவேன்" என்றாள்.

"நீ வாப்பா!" என்று சிரித்தான்.

சொன்னதுபோலவே ஐந்து நிமிடங்களுக்குள்ளாகவே வல்லபியினுடைய வண்டி உள்ளே நுழைவதை உள்ளறையில் இருந்து உமாகாந்தனும் பார்த்தான். இப்போது எழுந்து உள்ளே வந்தால் நாகரீகமாக இருக்காது என்பது போல அந்தப் பக்கம் அமர்ந்து கொண்டான்.

முள்ளின் மேலே இருப்பது போலத்தான் அவனுக்கு இருந்தது. இருந்தாலும் ஒரு சுவாரசியம் இருக்கிறது என்று இந்த அண்ணனும் இந்த வல்லபியும் என்னதான் அப்படி பேசுகிறார்கள் என்று கேட்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டு அவர்கள் கண்ணில் படாதவாறு ஆனால் அவர்கள் இருவரும் தன் கண்ணில் படுமாறு அமர்ந்து கொண்டான்.

அப்படி அமர்ந்து கொண்டதற்காக பின்னால் எத்தனையோ முறை அவன் வருத்தப்பட்டிருக்கிறான். அப்படி விஷயங்கள் அன்றைக்கு நடந்தேறி விட்டது.

உற்சாகமாக உள்ளே நுழைந்தாள் வல்லபி.

"ஏய் இசை வா!" என்றான் அவன்.

மேசையை தட்டி எதிர் இருக்கையை காண்பித்தான். அவளும் உற்சாகமாக வந்து அமர்ந்தாள்.

நிஜமாகவே கங்காம்மா ஒரு தட்டில் இரண்டு வடையும் ஒரு கப் டீயும் கொண்டு வந்து அவளுக்கு கொடுத்து விட்டு "பேசிக்கிட்டிருங்க கண்ணு. அந்த ஐயாவுக்கும் டீ போட்டுக் கொடுத்துட்டு வந்துடறேன்" என்று போனாள்.

அவன் ரிலாக்ஸ்டாக என்பது போல் சொல்வார்களே அப்படி ஓய்வாக சாய்ந்தபடி தலையை கோதிக் கொண்டே அவளை ஆழமாக பார்த்தான்.

அந்தப் பார்வையை உள்வாங்கிக் கொள்வதற்குள்ளாக அவள் திணறிப் போனாள்.

முகம் சிவந்து போக "என்ன ஐயா இன்னிக்கு ரொம்ப உற்சாகமாக இருக்கற மாதிரி இருக்கு? என்றாள்.

"பின்னே மலையை கிள்ளி எலியைப் பிடிச்சிருக்கோ மில்லே?" என்றான் அவன்.

"ஓகோ. இவ்வளவு பெரிய ஏரியா உங்களுக்கு எலியா?"

"சரி வுடு. ஏதோ தப்பான உதாரணம் சொல்லிட்டேன்" என்றான்.

அவள் சிரித்தாள்.

"ஆனாலும் சொன்னதுக்கு வருத்தப்பட மாட்டீங்களே ஆனாலும் ஒரு அலட்சியம் பாரு" என்றாள் அவள்.

"என்ன அலட்சியம்! ஆஹா நான் தப்பான பழமொழி சொல்லிட்டேன் காப்பாத்து தாயே அப்படின்னு கால்ல விழணுமா" என்றான் அவன்.

"அய்யய்யோ! கால்ல எல்லாம் விழணுமா என்னது இது?" என்று அவள் பதறிப் போனாள்.

"ஏய் சும்மா தமாஷுக்கு சொன்னேன். உட்காரு கொஞ்ச நேரம் பேசலாம்" என்றான்.

அவள் அமர்ந்தாள்.

"அப்புறம் சொல்லுங்க!"

"என்ன நடந்ததுன்னு. நான் சொல்றேன் அதுவரைக்கும் நீ இந்த டீயையும் வடையையும் சாப்பிடணும்."

"ரெண்டு மூணு வடை எனக்கு வேண்டாம் நீங்களும் ஒண்ணு எடுத்துக்குங்க" என்றாள்.

"சரி கொடு!" என்றான் அவன்.

அவள் ஒரு வடையை எடுத்து அதை இரண்டாக பிய்த்து ஒரு பாதியை அவன் கையிலே கொடுத்தாள்.

அவன் அதை வாங்கிக் கொண்டான். அவள் மவுனமாக டீயைப் பருகுகிற வரைக்கும் காத்துக் கொண்டிருந்தான்.

பிறகு பேச ஆரம்பித்தார்கள். ஒரு அரை மணி நேரம்தான் அங்கே வல்லபி இருந்திருப்பாள். ஆனால் அந்த அரை மணி நேரத்திற்குள்ளாக பிக்காஸோ, வான்கோ, ரவிவர்மா, ஆதிமூலம் சென்னை ஓவியக் கல்லூரி என்று எல்லாரையும் பற்றி பேசி அலசி மகிழ்ந்தார்கள்.

அவன் பங்குக்கு ஆர்கானிக் கெமிஸ்டிரி, இன்ஆர்கானிக் கெமிஸ்டரி என்று அவளுடைய பாட சம்பந்தமான விஷயங்களையும் அலசித் தள்ளினான்.

அவர்கள் பொதுப்படையான விஷயங்களை பேசினாலும் கூட இரண்டு பேருக்கும் ஒருவருடைய அருகாமையில் இன்னொருவர் இருப்பது சுகமாக இருக்கிறது என்பது அந்தப் பக்கமாக இருந்து பார்த்துக் கொண்டிருந்த உமாகாந்தனுக்கு புரிந்தது.

நீண்டதொரு பெருமூச்சு விட்டுவிட்டு வந்தசுவடு தெரியாமல் அந்தப் பக்கமாக எழுந்து அவன் வெளியே போய் விட்டான்.

இந்தப் பக்கமாக சத்யபிரகாஷ் வல்லபியிடம் சொன்னான். "என்னமோ ரொம்ப உற்சாகமாக இருக்குது வல்லபி" என்று.

"எல்லாம் பெரிய விஷயத்தை முடிச்சிருக்கீங்கள்ல அந்த சந்தோஷம் தான்." என்றாள்.

தொடர்ந்து "இனி அடுத்த வேலையைப் பாருங்க" என்றாள்.

"என்னது அடுத்த வேலை?" என்றான்.

"நல்ல ஒரு பொண்ணா பார்த்து கல்யாணம் பண்ணிக்குங்க" என்றாள்.

"ஆமாம் இங்க பத்து பேர் வரிசையா நிக்கறாங்க... கல்யாணம் பண்ணிக்கறதுதான் கொறைஞ்சு போச்சு" என்றான் அவன்.

"தேடிப் பாருங்க. சுத்தியும் பாருங்க இருந்தாலும் இருப்பாங்க" என்ற அவள்.

"நான் கிளம்பறேன்" என்று அவள் அவசரமாக எழுந்து கிளம்பினாள்.

இப்படி ஒரு வாக்கியத்தைச் சொல்லி விட்டு விட்டால் போதும் என்று போகிற அவளை அவன் ஆழமாக பார்த்துக் கொண்டிருந்தான்.

கேட் வரை போனவள். திரும்பி கையை ஆட்டி விட்டு வண்டியை எடுத்துக் கொண்டு போனாள்.

உற்சாகமும், சந்தோஷமும் அப்போது பொங்கி வழிந்த அந்த கணத்திலே அவனுக்கு அந்த உண்மை புரிகிறாற்போல போல இருந்தது.

எதிர்பார்த்த உண்மைதான் என்றாலும் புரிகிற நேரத்தில் அது தேனருவியைப் போல ஜிவ் என்று மனதுக்குள்ளே இறங்கியது.

அத்தியாயம் - 24

உறக்கமே பிடிக்கவில்லை ஏழிசை வல்லபிக்கு. கொஞ்சம் வரம்பு மீறி பேசி விட்டோமோ என்று பயமாக இருந்தது.

"இப்பவும் பாருங்க. அப்படின்னு வேற சொல்லிட்டு வந்துட்டமே. இப்படியெல்லாம் பேசினா சத்யபிரகாஷுக்கு பிடிக்குமோ? பிடிக்காதோ? ஏதோ ஒரு விதத்துல நம்மை நட்பா நினைக்கிறாரு. அதையும் இப்படி பேசி அந்த நட்பை கெடுத்துக்கிட்டோமோ" என்று அச்சமாக இருந்தது.

இன்னொரு புறத்திலோ 'நீ முதலில் சொல்வாயா? நான் முதலில் சொல்வேனா என்பது போல ஒரு போட்டி தங்களுக்குள் நடக்கிறதோ' என்று தோன்றியது.

ஒரு தரம் மூச்சு நின்று போனது. அப்படியென்றால் தான் சத்யபிராகஷை நேசிக்கிறோமோ? என்ற கேள்வி தோன்றியவுடனேயே அவளது உள் மனது 'ஆஹாஹா' என்று சிரித்தது.

"இதை கண்டுபிடிக்கறதுக்கு இத்தனை நாளாச்சாக்கும்.

எங்கேயோ சூப்பர்விஷன்னா வண்டி எடுத்துட்டு நேரா வீட்டுக்கு வர வேண்டியதுதானே? அது எதுக்கு ஃபிரஷ்னிங்

சென்டருக்கு போறது அப்பவே தெரிந்திருக்க வேண்டாம் என்று சொன்னது."

திடுக்கிட்டுப் போனாள்.

கலா டீச்சர் ஒரு பக்கம் சொல்லுகிறார். மாணவர்கள் கூட கண்டுபிடிச்சுட்டாங்க. ஏதோ நடக்கிறது? என்று அவ்வளவு வெளிப்படையாகவா தெரிகிறது?" என்று தன்னுடைய முகத்தை கண்ணாடியிலே பார்த்துக் கொண்டாள்.

மணியைப் பார்த்தாள். பத்து மணியாகியிருந்தது. இப்போதே சத்யாவிடம் பேச வேண்டும் போல இருந்தது. ஆனால் இப்போதைக்கு ஃபோனை எடுத்தால் அவர் என்ன நினைத்துக் கொள்வார்?

"இந்தப் பெண்கள் இப்படித்தான் மேலே வந்து விழுவார்களோ." என்று கேவலமாக நினைத்துக் கொள்வாரோ?" என்ற அச்சம் அவளுக்குள் எழுந்தது.

அதே நேரத்தில் அவளுக்கொரு குறுஞ் செய்தி வந்தது. "இப்ப உங்கிட்ட பேசலாமா?" என்று சத்யபிரகாஷிடம் இருந்து வந்த செய்தி.

துள்ளிக் குதிக்க வேண்டும் போல இருந்தது. அவளுக்கு. உடனடியாக 'ஏன் கூடாது' என்று அனுப்பினாள்.

"ஓய் நாட்?" என்று வந்த அந்தப் பதிலைப் பார்த்த வுடன். உற்சாகமாக சத்யபிரகாஷ் அந்தப் பக்கம் இருந்து செல்ஃபோனை எடுத்தான்.

தனது அறைக் கதவை மெல்லச் சாத்தி தாழிட்டுக் கொண்டாள் ஏழிசை வல்லபி. ஹாலில் அந்தப் பக்கமாக உட்கார்ந்து ஏதோ செய்தித் தாளை சோபாவில் அமர்ந்தபடி

படித்துக் கொண்டிருந்த சகோதரன் ஒரக் கண்ணால் தான் அறைக்கதவைச் சாத்துவதைப் பார்க்கிறான் என்பது அவளுக்குத் தெரியவில்லை.

தெரிந்தாலும் கவனிக்கிற மனநிலையில் அவள் இல்லை.

சத்யா என்றாள் கிளுகிளுப்பான குரலில். அவனும் அந்தப் பக்கம் இருந்து ஏதோ ரகசியம் பேசுகிறவன் போல குழைந்த குரலிலே "சாரி இசை! நான் இன்னிக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கேன்" என்றான்.

"ஆமா! எனக்கும் கூட ரொம்ப சந்தோஷமாக இருந்தது. எக்ஸைட்டடா தான் இருந்தேன். இப்ப வரைக்கும் தூக்கம் வரலை" என்றாள் அவள்.

"ஆமா எனக்கும் தூக்கம் வரலை. நான் நினைக்கவே இல்லை. இசை, இப்படி ஒரு வாய்ப்பு எனக்கு வரும் அப்படின்னு. ரெண்டு மூணு மாசத்துக்கு முன்னாடி சபாநாயகம் சார் போன் பண்ணி இடத்தை விக்கலாம்ன்னு இருக்கேன். அப்படின்னு சொன்னவுடனே நான் கொஞ்சம் ஆடித்தான் போயிட்டேன்." என்றவன் தொடர்ந்து

"நாம என்ன பண்ணப் போறோம். ஏன்னா பிஸினஸ் நல்லா எஸ்டாபிளிஷ் ஆயிடுச்சு. நிறைய கஸ்டமர்ஸ் வர்றாங்க. அதுவும் வர்றவங்க எல்லாம் பெரிய இடத்துக் காராங்க. இந்த மாதிரி இடம்னா அவங்க தயங்காம வர்றாங்க. இன்னொரு இடத்தைப் பிடிச்சு... என்னடா செய்யப் போறோம் அப்படின்னு பெரிய குழப்பமா இருந்தது?" என்றான்.

"எல்லா குழப்பத்துக்கும் விடிவு வந்திருச்சில்ல. இனிமே சந்தோஷமா இருங்க? நிம்மதியா இருங்க" என்றாள் அவள்.

உண்மையாக, உள்ளத்தின் ஆழத்தில் இருந்து எழுந்து வந்த வார்த்தைகள்.

"ஆமாம் இது ஒரு நல்ல விஷயம் தான். நிம்மதியா இருக்கணும் தான்" என்றான்.

அவள் அடுத்து கேலி பேசுவது போல "சும்மா சொத்து சேர்த்து வச்சா போதுமா? அதை அனுபவிக்க ஒரு குடும்பம் வேண்டாமா?" என்றாள்.

"ஏய்! இதானே ஆகாதுங்கறது, உடனே வம்பு இழுக்க ஆரம்பிச்சுடுவிங்களே. எனக்கு இப்ப குடும்பம் இல்லையா? ஏன் உமா இருக்கான், மைதிலி இருக்கா, அம்மா அப்பா இருக்காங்க. இவங்களெல்லாம் உங்களுக்கு குடும்பமா தெரியலையாக்கும்?" என்றான்.

"யாரு இல்லைன்னு சொன்னா? ஆனா கலா டீச்சர் இன்னைக்கு கூட சொல்லிட்டிருந்தாங்க" என்றாள்.

"அவங்க வேற நம்ம பேரை அரைக்கிறாங்களா" என்றான் அவன்.

"அரைக்கறதெல்லாம் இல்லை. சும்மா உங்களைப் பத்தி பேசிக்குவோம்" என்றாள்.

அவன் அந்தப் பக்கம் கிறக்கமாக சிரித்தான்.

"நீ பார்த்து என்ன செய்தாலும் சரி!" என்றான்.

அவன் குரல் குழைந்து போய் இருந்தது. அந்தக் குரலிலே தெரிந்த குழைவு, அவளையும் தாக்கியது.

"என்ன பேசினோம்னு கேட்கமாட்டீங்களா?" என்றாள்.

"எப்படியும் சொல்லத்தானே போறே. கேட்கலைன்னா விட்டுடவா போறே?" என்றான்.

"ஏன்? விடாம என்ன செய்வேனாம்" என்றாள் அவள்.

"அது உனக்குத் தான் தெரியும்."

"சரி...! விஷயத்துக்கு வருவியாம்" என்று அவன் பேச்சை மாற்றினான்.

"இல்லை கலாமேச்சர் நீங்க ரொம்ப முட்டாள்தனம் பண்ணிட்டிருக்கீங்களாம் அப்படின்னு சொன்னாங்க."

"ஏய்! எத்தனை நாளா காத்துக்கிட்டிருந்தே இப்படியெல்லாம் என்னை மட்டந்தட்டலாம்ன்னுட்டு" என்றான் அவன் அந்தப் பக்கம் இருந்து.

"இல்லை நிஜமாச் சொன்னாங்க" என்றாள் அவள்.

"என்ன முட்டாள் தனம் கண்டுபிடிச்சாங்க கலாமேச்சர்."

"இல்லை குடும்பத்துக்கு தியாகம் செய்யறதா நினைச் சுட்டு உங்க வாழ்க்கையை நீங்க கெடுத்துக்கறீங்களாம்" என்றாள்.

ஒரு நிமிடம் மௌனமாக இருந்தான் சத்யபிரகாஷ். இந்தப் பக்கம் ஏழிசை வல்லபிக்கு பயமாக போய் விட்டது. "சாரி, சாரி, நான் ஏதாவது எல்லை மீர்றேனோ?" என்றாள் அவள் பதற்றத்துடன்.

அவன் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு "இல்லை இல்லை நீ எல்லை மீறலை. நிறைய பேர் அப்படித்தான் நினைச்சுட்டிருக் காங்க. ஆனா பிரையாரிட்டின்னு ஒண்ணு இருக்குல்ல. என்னோட இடத்துல இருந்தா நீ என்ன பண்ணியிருப்பே சொல்லு?" என்றான்.

"தெரியலை. ஆனா என்னைப் பொறுத்த வரைக்கும் நீங்க உங்களுக்குன்னு ஒரு வாழ்க்கை வாழலாம். வாழ்ந்துக் கிட்டே உங்க ஃபேமிலிக்கு செய்யலாம். அதுக்கு தகுந்த

பொண்ணு உங்களுக்கு யாராவது கிடைக்க மாட்டாங் களா?" என்றாள்.

"என்ன நீ இப்படியே சொல்லிட்டிருக்கே?" சுத்தியும் பாருங்க தேடிப் பாருங்கங்கறே இப்ப தேடிப் பாருங்கற அப்படி யாராவது இருக்காங்களா?" என்று கேட்டான்.

அவள் இப்படி நேரடியான கேள்வியை எதிர்பார்க்க வில்லை கொஞ்சம் திகைத்துப் போனாள்.

"தெரியலை,"

"தெரியாத விஷயத்தை எதுக்குப் பேசறே?" என்றான் அவன்.

இப்பொழுது என்ன பதில் சொல்வது என்று அவளுக்குத் தெரியவில்லை.

அவன் சட்டென்று சிரித்து விட்டான். "பயந்துட்டியா சும்மா தமாஷுக்கு சொன்னேன். இதப் பாரு! இசை, ஒரு விஷயம் புரிஞ்சுக்க இப்போதைக்கு எனக்கு உங்கிட்ட பேசறதுக்கு புடிக்குது. உன்னோட நட்பு எனக்குப் புடிக்குது. பேசறேன் இதையே கூட சிலபேர் தப்பா நினைக்கலாம். ஆனா என்னைப் பொறுத்த வரைக்கும் எனக்காக ஒரு தனி வாழ்க்கைன்னு போனா அதிலே நிறைய சிக்கல்கள் தான் வரும்" என்றான்.

"என்ன மாதிரி சிக்கல்கள் வரும் அப்படின்னு நினைக்கறீங்க?" என்றாள் இசை சற்று துணிச்சலோடு.

"மறுபடியும் சொல்றேன். விவரமா கேட்டுக்கோ உமாவோட நிலைமை தெரியும்ல உனக்கு. உமாவை குடும்பத்துல தக்க வைக்கணுங்கறதுக்காக நான் போராடிட்டிருக்கேன். அவன் வெளிய இறங்கினான்னா

பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை தான் இருக்கு. ரொம்ப அடிபட்டுப் போவான். அவனை அப்படி வெளியே விட்டுட்டு நான் இங்க ஒரு பொண்ணோட குடும்ப வாழ்க்கை வாழ முடியுமா? நாளைக்கு குழந்தைங்க பொறந்தாலும் அந்தக் குற்ற உணர்ச்சி எனக்கு இருந்துட்டே இருக்காதா?" என்று கேட்டான்.

"இருக்கும். ஆனா நீங்க ஒரு தனிமனிதர்" என்றாள் ஏழிசை.

"ஏழிசை, என்னால அப்படி நினைக்க முடியலை. நான் குடும்பத்துக்கு மூத்த பையனா இருக்கறதுனால என்னுடைய விருப்பத்தையும் என்னுடைய சுயலாபத்தையும் மட்டும் பார்த்துட்டு போற சூழ்நிலை இல்லை" தொடர்ந்து என்றான்.

"நீங்க என்னை ஃபிரண்டுன்னு சொல்லிட்டதுனால நான் ஓபனா பேசறேன். ஃபிரெண்ட்ஷிப்புக்கு ஆண் பெண்ணுங்கற தெல்லாம் இல்லை. அதனால சில விஷயங்களை நாம வெளிப்படையா பேசலாமா" என்றாள்.

"நீ எதைச் சொன்னாலும் எனக்குப் பிடிக்குது. அது ஏன்னு தெரியலை. நீ ஏதோ பெரிசா தான் சொல்லப் போறேன்னு. தெரியுது பேசு!" என்றான் அவன்.

"நெஞ்சைதொட்டு சொல்லுங்க. உங்களுக்கு ஒரு ஆண் மகனுக்கான உணர்வுகள் வரதில்லையா?" அப்படி கேட்டதற்குப் பிறகு திடுக்கிட்டுப் போனாள் ஏழிசை வல்லபி.

என்ன இப்படியெல்லாம் பேசிக்கொண்டிருக் கிறோம் என்று அவளுக்குள்ளே அச்சம் தோன்றியது. ஆனால் கேட்டாகி விட்டது. இனி என்ன செய்ய முடியும் என்பது

போல பதிலுக்காக மூச்சைப் பிடித்துக் கொண்டு காத்துக்கொண்டிருந்தாள்.

அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான். "இல்லைன்னு யார் சொன்னா? இருக்கு. எனக்குள்ளேயும் நான் போராடிட்டு தான் இருக்கேன். ஆனால் சில நேரங்கள்ள அறிவால அந்த உணர்வுகளை ஜெயிச்சுக்க வேண்டியதாத்தான் இருக்கு. நான் ஒருத்தன் மட்டும் என்னோட பிழைப்பைப் பார்த்தேன்னு வச்சுக்கயேன். இந்தக் குடும்பமே நிலை குலைஞ்சு போயிடும்."

"எனக்கு இப்போதைக்கு உமாவோட வாழ்க்கைக்கு நல்லபடியா வழி செஞ்சு கொடுக்கணும். மைதிலிக்குக் கல்யாணம் பண்ணனும். இது ரெண்டைத் தவிர நான் எதையும் நினைக்கறதா இல்லை" என்றான்.

"சரி நான் ஒரு பேச்சுக்கு கேக்கறேன். ஒரு பெண் வந்து உங்கள விரும்பறேன்னு சொன்னா?" என்று கேட்டாள்.

அவன் மறுபடியும் சிரித்தான். "அந்தப் பொண்ணுக்காக நான் பரிதாபப்படுவேன்" என்று சொன்னான்.

"எதுக்கு பரிதாபப் படணும்?" என்றாள் அவள்.

தாங்கள் பேச வேண்டுமென்பதற்காக பேச்சை வளர்க்கிறோம் என்பது இருவருக்கும் புரிந்தது. வேறு என்னமோ பேச வேண்டும் என்று விருப்பத்தை விட்டு விட்டு இப்போது மேம்போக்காக பேசிக் கொண்டிருக் கிறோம் என்பதும் புரிந்தது. ஆனால் பேச்சை விட்டுவிட இருவரும் தயாராக இல்லை.

"வேண்டாம். என் வாயைப் பிடுங்காதே" என்றான் அவன்.

"இல்லை சொல்லுங்க எதுக்கு பரிதாபப்படணும். உங்களுக்கு என்ன அழகு இல்லையா? அறிவு இல்லையா? நல்ல சம்பாத்தியம் இல்லையா? சொந்தத்துல நல்ல பேரு இல்லையா?" என்று கேட்டாள்.

"எல்லாம் இருக்கு. நாளைக்கு பொறக்கப்போற குழந்தை நார்மலா இருக்குமா இல்லையா அப்படிங்கற பயத்தை சுமந்துக்கிட்டே இருக்கணும். அது தெரியுமா என்றான் அவன்.

"ஐயய்யோ நான் உங்களை ரொம்ப அறிவாளின்னு நினைச்சேன்" என்று மட்டம் தட்டினாள் ஏழிசை.

"அதென்னமோ தெரியலே இசை. நீ மட்டும் என்னை முட்டாள்னு சொன்னா கூட நல்லாதான் இருக்கும் போல இருக்கு. அடுத்து நீ அந்தப் பட்டம் தானே கொடுக்கப் போறே."

"இல்லைங்க நிஜமாவே சொல்றேன். நீங்க பயப்படற அளவுக்கு இது ஜெனிட்டிக் கிடையாது. மரபு சார்ந்த விஷயம் இல்லை. நீங்க பயப்படற அளவுக்கு அப்படி இல்லை" என்றாள்.

"சரி, இதையெல்லாம் புரிஞ்சு ஏத்துக்கற ஒரு பொண்ணா வரணும்ல?" என்றான் அவன்.

"அப்படி வந்தா ஒத்துக்குவீங்களா என்று கேட்டாள்.

"பார்க்கலாம், யோசிக்கலாம்!" என்றான்.

"ஓ.கே. அப்படி ஒரு பொண்ணை நான் கண்டுபிடிச்சுக் கொடுத்தா நீங்க ஒத்துக்குவீங்களா?" என்றாள்.

அவனுக்குள் சட்டென்று ஏமாற்றம் தோன்றினாற் போல இருந்தது. "இந்த வேலையெல்லாம் எப்ப இருந்து

செய்யறே? தரகர் வேலையெல்லாம்" என்று பேச்சை மாற்றினான்.

"பேச்சை மாத்தாதீங்க நான் சொன்னா, இதுதான் பொண்ணுன்னு காமிச்சா ஒத்துக்குவீங்களா?" என்று கேட்டாள்.

"நீ மொதல்ல பொண்ணை கொண்டுவா. அப்புறம் பார்க்கலாம்" என்றான்.

"ஏன் பின் வாங்கறீங்க பார்த்தீங்களா" என்றாள்.

"பேக்கெல்லாம் அடிக்கல. அந்தப் பொண்ணைப் பார்க்கணுமில்ல. அந்தப் பொண்ணை என் மனசுக்குப் பிடிக்கணுமில்லை?" என்றான்.

"அது வேண்ணா கரெக்ட். வேண்ணா சந்திக்க ஏற்பாடு பண்றேன்" என்றாள் அவள்.

"எப்போ?" என்றான் அவன்.

"நாளைக்கு.! நாளைக்கு சந்திக்கறதுக்கு ஏற்பாடு பண்ணுவோமா" என்றாள்.

"ஏய் விளையாடதே"

"இல்லை இல்லை, ஐ ஆம் வெரி சீரியஸ் சத்யா."

"சரி, சேலஞ்ச் வச்சுட்டே சரி பார்க்கலாம். பட் ஒன் திங் அந்தப் பொண்ணை எனக்குப் பிடிக்கணும். வற்புறுத்த வெல்லாம் கூடாது" என்றான்.

"சரி, எத்தனை மணிக்கு?" என்று கேட்டான்.

"நாளைக்கு எனக்கு ஸ்கூல் லீவு தான். அவங்க ஒரு மூணு மணிக்கு உங்க கன்சர்ன்ல இருக்கற மாதிரி நான் பார்த்துக்கறேன்" என்றாள்.

"ரியலி! என்னமோ வேலை பண்றமாதிரி தெரியுது?" என்றான் அவன்.

"அப்படித்தான் வச்சுக்கங்களேன். போதும்" குட் நைட் என்றாள் அவள்.

"என்னமோ குட் நைட் மாதிரி தெரியலை. சரி பார்க்கலாம்" என்று சிரித்து விட்டு அவனும் ஃபோனை வைத்தான்.

தான் பேசிய விதம் குறித்து ஆச்சரியப்பட்ட படி தலையணையை எடுத்து இறுக்கிப் பிடித்துக் கொண்டாள் இசை.

காலை முன் வைத்தாகி விட்டது. இனி பின் வைக்க வழியே இல்லை என்று அவளுக்கு புரிந்தது.

"அது சரி! எத்தனை நாளைக்கு இந்தக் கண்ணாமூச்சி நாளைக்குப் பார்த்து விடலாம்" என்று முடிவெடுத்துக் கொண்டாள்.

இசை என்ன சொல்லுகிறாள்? ஏதோ சொல்கிற மாதிரியும் இருக்கிறது. ஏதோ பெண்ணை கூட்டிக் கொண்டு வருகிறேன் என்கிறாளே' என்று குழப்பத்தில் ஆழ்ந்து போனான் சத்தியபிரகாஷ்.

அத்தியாயம் - 25

"அண்ணா ரவா லட்டு செய்திருக்கேன் அண்ணா" என்றாள் மைதிலி மகிழ்ச்சியாக.

"என்னம்மா விசேஷம்?" என்று வந்தான் சத்யபிரகாஷ்.

காலை உணவுக்காக எல்லாரும் டைனிங் டேபிளில் அமர்ந்திருந்தார்கள். சில நேரங்களில் இப்படி எல்லாரும் ஒன்றாக அமர்ந்து உணவருந்துவது உண்டு.

நேற்று சத்யபிரகாஷ் அந்தப் பெரிய ஒப்பந்தத்தைப் போட்டு விட்டு வந்ததிலிருந்து அப்பாவும் அம்மாவும் ஏக மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

எல்லோருமாக அவனுக்காக காத்துக் கொண்டிருந் தார்கள். தங்கை ஒரு சிறிய தட்டிலே ரவா லட்டைக் கொண்டு வந்து வைத்தாள்.

இது மாதிரி நேரங்களில் கடைகளில் இருந்து வாங்குகிற ஸ்வீட்டை விட வீட்டிலே அவன் தங்கை தானாக செய்து கொடுக்கிற ஸ்வீட் வகைகள் அவர்களுக்கு மிகவும் பிடிக்கும்.

அவளுக்கும் அது தெரியும் என்பதால் வேலை மெனக்கெட்டு இனிப்பை தயார் செய்து வைத்திருந்தாள்.

"குடு, குடு, குடு, உன்னோட கை ஸ்வீட்டா ரொம்ப சூப்பரா இருக்குமே?" என்று அவன் ஆர்வமாக வந்தான்.

"தம்பி, எங்களுக்கெல்லாம் ரொம்ப சந்தோஷம்பா" என்றாள் திலகம்.

அவன் அம்மாவைப் பார்த்து வாஞ்சையாக புன்னகைத் தான்.

"உமா எங்கே?" என்று கேட்டான்.

அதே நேரத்தில் உமாகாந்தன் படிகளில் சரசரவென்று இறங்கி வந்து அவர்களோடு ஒன்றாக டைனிங் டேபிளில் அமர்ந்தான்.

கலகலப்பாக பேசிக்கொண்டு சாப்பிட்டார்கள். "சபாநாயகம்! நல்ல ஆளு" என்றான் உமாகாந்தன் "ஆமாம்டா நல்ல மனிதர்! எத்தனை பேர் இந்தக் காலத்துல நமக்கு நல்லது செஞ்சாங்களேன்னு நினைச்சுப்பார்க் கறாங்க. முடிஞ்ச வரைக்கும் அடுத்தவங்களை எக்ஸ்பிளாய்ட் பண்றாங்க" என்றார் அப்பா.

ஒரு தடவை உமாகாந்தனின் முகம் வாடியது. "இந்த வார்த்தைகள் தனக்கும் தான் பொருந்தும்" என்று அவன் நினைத்தானோ என்னவோ?

சத்யபிரகாஷ் அப்பாவைப் பார்த்து கண்ணாலேயே எச்சரிக்கை செய்தான்.

அப்பாவும் புரிந்து கொண்டவராக உடனே பேச்சை மாற்றினார்.

"அது சரிப்பா, நல்லது நினைச்சா நல்லது நடக்கும்" என்றார்.

சற்று நேரம் ஆனதற்குப் பின் அவன் தன்னுடைய அறைக்குச் சென்று ஃபிரஷ்னிங் சென்டருக்கு கிளம்பு வதற்காக உடைகளை மாற்றிக் கொண்டிருந்தான்.

பேண்டிற்கு மேலாக பெல்ட்டை இறுக்கிக் கட்டிக் கொண்டிருக்கையில் அறை வாசலில் நிழல் ஆடியது. திரும்பிப் பார்த்தான்.

உமாகாந்தன் நின்று கொண்டிருந்தான்.

"என்னப்பா?" என்றான் வாஞ்சையாக.

அவன் உள்ளே வந்து சகோதரனை ஒரு தரம் உற்றுப் பார்த்தான்.

"என்னடா என்ன விஷயம்" என்றான், சத்யபிரகாஷ். "அண்ணா! நீ உன்மையிலேயே ரொம்ப நல்லவண்ணா" என்று நெகிழ்ந்து சொன்னவன்.

சட்டென்று பாய்ந்து சகோதரனை கட்டிப் பிடித்துக் கொண்டான்.

கன்னத்தில் நச்சென்று முத்தம் வைத்தான்.

இதை எதிர்பார்க்காத சத்யபிரகாஷ் கலகலவென்று சிரித்து விட்டு. தானும் அவனை தன் தோளோடு இணைத்துக் கொண்டான். 'என்னடா ஆச்சு உனக்கு?' என்றார்.

"இல்லைண்ணா, இது ஒரு பெரிய அச்சீவ் மெண்ட் எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு" என்றான்.

"சரி, சரி, இவ்வளவுதானே" என்று அவனும் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளாதவன் போல ஆனால் அதை உள்ளூர அதை ரசித்துக் கொண்டவனாக சகோதரனை இன்னும் கொஞ்சம் தோளோடு அழுத்திக் கொண்டான்.

"இதை விட பெரிய விஷயமெல்லாம் நீ நடத்துவடா? இன்னும் கொஞ்ச நாள் போகட்டும் உன்னோட பெயிண்டிங்கெல்லாம் என்ன விலை போகுதுன்னு பாரு?" என்றான்.

அண்ணனைப் பார்த்து "நீ அதுலயும் தான் எனக்கு விட்டுக் கொடுத்திருக்கறே" என்றான்.

சத்யபிரகாஷ் திடுக்கிட்டுப் போனவனாக "என்னடா உளர்றே?" என்றான்.

"பின்னே அந்த ஓவியம் வரைஞ்சிருக்கியே ஏழிசை வல்லபியை, எவ்வளவு சூப்பரா இருக்கு தெரியுமா? நீ

மட்டும் என் கூட போட்டி போட்டீன்னா என்று ஆரம்பிக்க"

"வேண்டாம் நிறுத்து. எனக்கு அதுல இன்ட்ரஸ்ட் இல்லை. உன்னை மாதிரி திறமையும் பொறுமையும் கிடையாது. நான் தான் அன்னைக்கே சொல்லிட்டேனேப்பா எனக்கு பிசினஸ்ல இன்ட்ரஸ்ட் போயிடுச்சு. கண்டதையும் போட்டு குழப்பிக்காதடா. நீ பெயிண்டிங்ல கான்சன்ட்ரேட் பண்ணு. நான் கிளம்பணும். வேலை இருக்கு" என்று கிளம்பினான்.

திரும்ப அறை வாயிலுக்கு வந்தவன் திரும்பி வந்து "தாங்க்ஸ் டா!" என்று உமாவின் கன்னத்திலே ஒரு முத்தம் இட்டுவிட்டு கிளம்பினான்.

"அண்ணா, ஜோரா கொஞ்சிக்கிறீங்க!" என்று கேலி செய்தாள் மைதிலி.

"இதுல இவளுக்கு பொறாமை பாருடா" என்று சிரித்து விட்டு ஃப்ரெஷ்னிங் செண்டருக்கு கிளம்பினான்.

"என்னப்பா புரோகிராம்!" என்றார் அப்பா.

"அப்பா சபாநாயம் சார், நேத்து நைட் போறதா இருந்தது. ஏனோ திடீர்னு கேன்சல் பண்ணிட்டு இன்னிக்கு போறாரு. அவரை ஏர்போர்ட்டுக்கு கொண்டு போய் அனுப்பிட்டு வரணும். அதுக்கப்புறம் இரண்டு கஸ்டமர்ஸ் வரேன்னாங்க. அதுக்கப்புறம் த்ரீ ஓ கிளாக்குக்கு வேற ஒருத்தர் வரேன்னாங்க பாக்கறதுக்கு" என்றான்.

"அப்ப சாப்பாட்டுக்கு வரமாட்டியோ?" என்றார்.

"அப்பா, இல்லைப்பா நான் இப்பவே எடுத்துட்டுப் போயிடறேன். ஈவ்னிங் முடிஞ்சா ஒரு ஃபைவ்தர்ட்டிக்கு வர்றேன்."

"சரிப்பா!" ரொம்ப நாள் கழிச்சு கோயிலுக்கு போலாம்னு நினைச்சேன். சீக்கிரமா வாயேன்! எல்லாருமா சேர்ந்து கோயிலுக்கு போவோம்!" என்றார்.

"சரிப்பா!" என்று புன்னகைத்து விட்டு கிளம்பினான் சத்தியபிரகாஷ்.

ஃபிரஷ்னிங் செண்டருக்கு சென்று... அங்கிருந்து காரை எடுத்துக் கொண்டு சபாநாயகம் சாரை ஏர்போர்ட்டில் கொண்டு போய் விட்டு என்று அன்றைய நிகழ்ச்சிகள் எல்லாம் அவனுக்கு வரிசையாக இருந்ததால் அன்று நேரம் ஓடியதே தெரியவில்லை.

உணவு உண்ணும் போதுதான் அவனுக்கு முந்தைய நாள் பேச்சு நினைவுக்கு வந்தது. 'ஆனாலும் இசை இப்படி வாயடிப்பாங்கன்னு நினைக்கலையே' என்று எண்ணிக் கொண்டான்.

மூன்று மணிக்கு வருகிறேன் என்று சொல்லியிருக் கிறாளோ? யாரையோ அழைத்துக் கொண்டு வருகிறேன் என்று சொல்லியிருக்கிறாளே?

ஏழிசை வல்லபியினுடைய பேச்சை அவன் சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை என்றாலும். கேலி செய்வது போல அவள் பேசுகிறாள் என்று தோன்றினாலும் இன்னொரு பக்கத்தில் கண்டிப்பாக இன்றைக்கு ஏதோ ஒரு செய்தி இருக்கிறது.

யாரை அழைத்துக் கொண்டு வருவாள்? இல்லை நிஜமாக பெண்ணைப் பார்த்து வைத்திருக்கிறாளோ? என்று எண்ணியவுடனே சற்று ஏமாற்றமாக இருந்தது.

அவன் ஆழ்மனது எதிர்பார்த்தது வேறு என்னவோ போலும்.

இவள் வேறு என்னவோ சொல்கிறாள் போலும். என்று ஒரு குழப்பமும் தோன்றியது.

தன் கடமைகளை முடித்து விட்டு மறுபடியும் இருக்கையில் வந்து அமரவும். வாடிக்கையாளர் ஒருவர் வந்தார்.

"இதோ பார் தம்பி, உட்கார்ந்தா சும்மா ஜம்முன்னு இருக்கணும். கும்முன்னு சொர்க்கத்தில் இருக்கிற மாதிரி இருக்கணும். வண்டி ஓடும்போது அசைவே இருக்கக் கூடாது. கோயமுத்தூர்ல எவன்கிட்டயும் என்கிட்ட இருக்கிற மாதிரி சீட் இருக்கக் கூடாது. அதுமாதிரி ஒண்ணு தயார் பண்ணி கொடு சாமி" என்று வந்து அமர்ந்தார்.

சத்யபிரகாஷுக்கு சிரிப்பாக வந்தது. ஆனாலும் அவனிடத்தில் வருகின்ற வாடிக்கையாளர் நிறைய இப்படித் தான் இருந்தார்கள்.

"எங்கிட்ட இருக்கிறதை காட்டிலும் வேற யாருகிட்டேயும் இருக்கக் கூடாது என்ற மனப்பான்மை அவர்களில் சிலரிடத்திலே இருக்கும். அதனால்தானே நம்ம வண்டி ஓடுது" என்று இவன் நினைத்துக்கொள்வான்.

"பண்ணிடலாம் சார். உங்க மனசுக்கு திருப்தியா பண்ணிடலாம். ஒண்ணும் கவலைப்படாதீங்க" என்று அவரிடத்தில் ஒரு பதினைந்து நிமிடம் இருபது நிமிடம் பேசி அவருடைய எதிர்பார்ப்பைத் தெரிந்து கொண்டு அனுப்பி வைத்தான்.

மீண்டும் இருக்கையிலே வந்து அமர்ந்து கொண்டு பெரிய கேட்டையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சரியாக மூன்று மணிக்கு சொல்லி வைத்தாற் போல ஏழிசை வல்லபியினுடைய வண்டி உள்ளே நுழைந்தது.

வண்டியிலிருந்து இறங்கி வந்தாள் ஏழிசை வல்லபி "வாங்க. வாங்க! வாங்க! உன்னைத் தான் எதிர்பார்த்துக் கிட்டிருக்கேன். இந்த மூணு மணிய உனக்காக ஒதுக்கிட்டு வெயிட் பண்ணிட்டிருக்கேன்." என்றான்.

அவள் வந்து எதிரிலே நின்றாள்.

"என்னமோ பெரிய அது தேவையில்லை இது தேவையில்லைன்னு சொன்னீங்க. இப்ப மூணு மணியை எதிர்பார்த்திட்டிருக்கீங்க!" என்றாள் அவள்.

"ஏய்! என்ன! யாரைக் கூட்டிட்டு வரப் போறேங்கற எதிர் பார்ப்புதான். ஆமா என்ன நீ தனியா வந்திருக்கே?

உன்னை மாதிரி இல்லாம. அழகா, அறிவா ஒரு பொண்ணைக் கொண்டு வந்து நிறுத்துவேன்னு எதிர்பார்த் துட்டிருந்தேன்."

"என்னை மட்டம் தட்டினது போதும். ஆனா நீங்க ஒரு பொண்ணை எதிர்பார்த்தீங்களா இல்லையா? அந்த உண்மையை ஒத்துக்கங்க" என்றாள்.

"இல்லை! யாருக்காவது மஸ்கா போட்டு பாவம் எதையோ ஆசையூட்டி கூட்டிட்டு வந்திருவியோன்னு எனக்கு பயமா இருந்தது. ஏன்னா நான் சொல்லப் போற பதில் நீ எதிர்பார்க்காத பதிலாத் தானே இருக்கப்போவுது?" என்றான்.

"எதிர்பார்க்காத பதில்னா ஒரு வேளை சரின்னு சொல்லிடுவீங்களோ?" என்றாள்.

"யாருக்குத் தெரியும்?" என்று அவன் தோளைக் குலுக்கினான்.

இரண்டு பேரும் கண்ணாமூச்சி ஆடுகிறோம் என்பது இருவருக்குமே தெரிந்திருந்தது.

ஆனால் காலையில் உமாகாந்தன் தன்னைக் கட்டி யணைத்து முத்தமிட்ட நேரத்தில் இருந்து சத்யபிர காஷின் மனம் வேறு விதமாகவே சிந்தித்துக் கொண்டிருந்தது.

ஒரு பெண்ணிடம் இந்த வயதில் ஏற்படுகிற ஈர்ப்பைக் காட்டிலும் வாழ்க்கைத் தளத்தில் இருக்கக் கூடிய கடமைகள் பெரிது என்று அவன் எண்ணிக் கொண்டான்.

ஆனால் நேற்று ஏழிசை வல்லபியிடம் எதைச் சொன்னாலும் அவள் தயாராக ஒரு பதிலை வைத்திருந் தாள். அதனால் "அப்படியும் கூட ஒரு பெண்ணைத் தேடிக் கொண்டு வாழ்க்கை நடத்த முடியுமோ?" என்ற ஒரு நப்பாசை கூட அவன் மனத்திலே தோன்றியது.

அதனால்தான் ஏழிசை வல்லபியினுடைய வருகையை ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

"உட்காரு வல்லபி" என்றான்

உட்கார்ந்தாள். "வல்லபி, நான் உன்னை ரொம்ப புத்திசாலியான டீச்சர்ன்னு நினைச்சுக்கிட்டிருக்கேன். ஆனா நீ என்னடான்னா என் வாழ்க்கையில கேம் விளையாடறதா முடிவு பண்ணிட்டே போல இருக்கு."

அவள் அவனைத் தீவிரமாக பார்த்தாள்.

"சத்யா, விளையாடினது போதும். என்னோட கேள்விக்கு பதில் சொல்லுங்க. உங்க சூழ்நிலைகளை யெல்லாம் புரிஞ்சுக்கிட்டு உங்களை நீங்களாகவே ஏத்துக்கிட்டு உங்க சுற்றுப் புறச் சூழலை ஏத்துக்கற பெண் கிடைச்சா சரின்னு சொல்லுவீங்களா இல்லையா?" என்றாள்.

அவன் ஒரு நிமிடம் அவளை ஆழ்ந்து பார்த்து விட்டு சொன்னான். "என்ன! நீ பேசறதை பார்த்தா ஏதோ ஒரு மரப்பாச்சி பொம்மையை நிறுத்தி இதுதான் பொண்ணுன்னு சொல்லுவே ஏத்துக்க முடியுமா? அவ என்ன அப்படி என்ன ஏத்துக்கறது அவளை நான் ஏத்துக்க வேண்டாமா?" என்றான்.

"இது ரோஷம். இந்த ரோஷத்தை வேணா நான் பாராட்டறேன்" என்றாள் இசை.

"இசை விளையாடதே நீ! நிஜமாவே சொல்றேன் யாருக்கிட்டயாவது போய் என்னைப் பத்தி அதை இதை சொல்லி ஒரு பில்டப் கொடுத்து அவங்களை தயார் படுத்திட்டு வந்திடாதே. அதெல்லாம் பெரிய பிரச்சினை யாயிடும்" என்றான் சத்தியபிரகாஷ்.

"ஓகே. அடுத்த ஸ்டெப் போகலாம்! நீங்க பார்த்த பெண், பழகிய பெண் ஓரளவுக்கு உங்களுக்குப் பிடிச்சமாள பொண்ணுன்னா ஏத்துக்குவீங்களா?" என்றாள் அவள்.

"இதப் பார்றா! விடுகதைக்கு மேல விடுகதை போடறா? சரி ஏத்துக்கலாம்னு வச்சுக்குவோம். சரி அந்தப் பொண்ணு எப்படியிருப்பா?"

"என்னை மாதிரி இருப்பா? டிட்டோவா என்னை மாதிரித்தான் இருப்பாள்" என்றாள் அவள்.

சத்யபிரகாஷுக்கு கொஞ்சம் கொஞ்சம் புரிகிற மாதிரி இருந்தது. "இசை!" என்றான் ஒரு மாதிரி குழைந்த குரலில்.

"நீங்க இன்னும் பதில் சொல்லலை!" என்றாள் ஏழிசை வல்லபியும் குழைந்த குரலில்.

"சொல்லிவிடலாமா!" என்று யோசித்தான் அவன்.

அவளும் உண்மையைச் சொல்லி விடலாமா என்று யோசித்த அந்தக் கணத்திலே செல் ஃபோன் மணி அடித்தது. எடுத்துப் பார்த்தான் சத்யபிரகாஷ்.

அந்தப் புறத்தில் இருந்து அப்பா "சத்யா சத்யா" என்றார் பதட்டமாக! "என்னப்பா என்ன விஷயம் சொல்லுங்க" என்றான் அவனும். அக்கறையாய் கவனித்த குரலில். "சத்யா! உமா உமா" என்றார் என்ன உமாவுக்கு

"இல்லை, நீ இங்க வா சொல்றேன்!" என்றார்.

அவன் படபடப்பாக எழுந்து நின்றான். ராஜு என்று அழைத்தான்.

உதவியாளன் ஓடி வந்தான். "ராஜு சென்டரைப் பார்த்துக்கோ. கங்காம்மாவை பார்த்துக்க சொல்லு.

'இசை! நாம அப்புறம் பேசலாம் ஐ ஆம் வெரி சாரி" என்றான்.

"இல்லை நானும் வரேன்" என்றாள் அவள்.

"வேண்டாம் இசை."

"இல்லை நானும் வரேன்" என்று அவள் தன்னுடைய வண்டியை எடுக்க அவன் தன்னுடைய பைக்கை எடுத்தான்.

ஒரு நிமிட இடைவெளி விட்டு வீடு போய் சேர்ந்தார்கள்.

அம்மா அப்பா இரண்டு பேரும் கலங்கிப் போய் சோஃபாவில் அமர்ந்திருந்தார்கள்.

"என்னப்பா ஆச்சு" என்று அவன் போனான்.

தன் கையிலேயிருந்த ஒரு காகிதத்தை நீட்டினார் "அப்பா. என்னப்பா! இது? என்ன?" என்று அவன் கேட்க "படிச்சுப்பாரு!" என்றார்.

கையிலே வாங்கினான்.

அன்புள்ள சத்யாவுக்கு.

உன்னுடைய அன்பும் தியாகமும் என்னை பெரிய அழுத்தத்திற்குள்ளாக்குகிறது. நான் ஏதோ உன் கழுத்தில் தொங்குகிற இரும்புக் குண்டு போல ஒரு எண்ணம் என் மனதுக்குள்ளே நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது.

எனக்காகவும் இந்தக் குடும்பத்துக்காகவும் நீ கொஞ்சம் கூடுதலாக உழைக்கலாம். அது தவறில்லை. ஆனால் உன் வாழ்வையே தியாகம் செய்கிறேன் என்று சொல்லிக் கொள்ளுவது எந்த விதத்திலும் நியாயம் இல்லை.

உனக்கு மகிழ்வு கிடைக்காத சூழ்நிலையில் நாங்கள் மட்டும் மகிழ்ச்சியோடு வாழ்வோம் என்று எப்படி நீ எதிர்பார்க்கலாம்.

மறுபடியும் சொல்லுகிறேன். எனக்கு மூச்சு முட்டுகிறது. இந்த அழுத்தத்தை என்னால் தாங்க முடியவில்லை. அதனால் நான் வீட்டை விட்டு வெளியே போகிறேன்.

என் வாழ்க்கையை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். உண்மையிலேயே உனக்கு என் மேல் அன்பு இருக்குமானால் எனக்காகவே நீ தியாகம் செய்கிறேன் என்ற மடத்தனத்தை விட்டுவிட்டு உன்

வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் அது ஒரு வேளை எனக்கு திருப்தியாக இருந்தால் மறுபடியும் எப்போதாவது உன்னை நான் பார்க்க வருவேன்.

அதுவரைக்கும் என்னைத் தேட முயற்சிக்க வேண்டாம். அம்மாவுக்கும், அப்பாவுக்கும், மைதிலிக்கும் ஆறுதல் கொடு. என்னை மன்னித்துக் கொள் அண்ணா

இப்படிக்கு
உமாகாந்தன்.

அவன் கையிலே அந்தத் தாளை வைத்துக் கொண்டு திகைத்து நின்று கொண்டிருக்கும் பொழுது தன் கேள்விக் கான விடை இப்போது கிடைக்கப் போவதில்லை என்று ஏழிசை வல்லபிக்கு புரிந்தது.

இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பார்வைகள் கவ்வி நின்றன!

எத்தனையோ செய்திகள் அவர்கள் இருவருக்கும் இடையே பார்வையாக பரிமாறிக்கொள்ளப்பட்டன. அந்தப் பார்வைகளில் எதிர்காலம் பற்றிய பெரிய கேள்விக்குறி தொக்கி நின்றது.

முதல் பாகம் நிறைவுற்றது.

கிடைக்குமிடம்
புதுகை புத்தகாலயம்
காமேஸ்வரன் நினைவுப் பகம்
28, [illegible]
[illegible]-628 001

நானென்றும் நீயென்றும்...!

இரண்டாம் பாகம்

ஜெய்சக்தி

நானென்றும் நீயென்றும்...!

நானென்றும் நீயென்றும்...!

இரண்டாம் பாகம்

ஜெய்சக்தி

நானென்றும் நீயென்றும்...!

இரண்டாம் பாகம்

அத்தியாயம் - 1

"இன்றைக்காவது நல்ல பொழுதாக விடிய வேண்டும்." என்று வேண்டிக் கொண்டே தான் விழித்தாள் ஏழிசை வல்லபி.

உமாகாந்தன் போய் கிட்டத்தட்ட ஒரு வாரம் ஆகி இருந்தது.

இந்த ஒரு வாரத்திலும் சத்யபிரகாஷின் வீட்டில் நடைபெற்ற நிகழ்வுகள் எல்லாம் அவள் மனத்தைப் புரட்டிப் போட்டு விட்டன.

அந்த வீட்டில் எல்லையற்ற சோகம் கப்பியிருந்தது.

சத்யபிரகாஷுக்கு பட்ட பாடெல்லாம் வீணாப் போச்சே என்ற துக்கம் பொங்கிப் பொங்கி வந்தது. ஆனால், தானே சோகமயமாக உட்கார்ந்து விட்டால் குடும்பத்தில் எல்லோரும் நிலைகுலைந்து போவார்கள் என்றுதான் அவன் எதையும் காட்டிக் கொள்ளாமல்

"என்ன ஆச்சு இப்போ? வெளியுலகம் பார்க்கறேன்னு போயிருக்கான்.பார்த்துட்டு வரட்டுமே, வெளியுலகம் பார்த்தால்தான் நாம எவ்வளவு அவனுக்காக வொரி பண்ணினோம்னு அவனுக்கு தெரியும். விட்றலாம்." என்றான்

அப்பா அவனை கவலையுடன் பார்த்தார்.

"என்ன சத்யா, இப்படி சொல்றே?. நீயே இப்படி சொன்னா" என்றார்.

அவன் அப்பாவை வாஞ்சையுடன் பார்த்துப் புன்னகைத்தான்.

"அப்பா! அவன் ஒண்ணும் சின்னக் குழந்தை இல்லை. ஹி கேன் மேனேஜ்" என்றான்.

அப்பா அவனை மறுபடியும் பார்த்து "சின்னக் குழந்தை இல்லைதாம்ப்பா ஆனா, மத்தவங்களைப் போல இல்லையே" என்றார்.

சத்யபிரகாஷ் மறுக்கவில்லை. மேலும் கீழும் தலையாட்டிக் கொண்டான்.

"அது உண்மைதாம்பா, ஆனா அதுக்காக அவனை சிறகில வச்சு எத்தனை நாளைக்கு காப்பாத்த முடியும் சொல்லுங்க? ஒரு வேளை அவன் சொல்ற மாதிரி ஓவர் அஃபக்ஷன், ஓவரா போட்டு மூடி வைச்சு அவனுக்கு மூச்சு முட்டிடுச்சு போல இருக்கு.லெட் ஹிம் கோ. லெட் ஹிம் கோ" என்றான்.

அம்மா இப்போது அவனை கவலையுடன் பார்த்தாள்.

மைதிலியும் கூட "என்ன அண்ணா இப்படி சொல்றே?" என்று பார்த்தாள்.

அவன் எல்லோரையும் ஆழமாகப் பார்த்தான்.

"சரி சரி ரொம்ப கவலைப்படாதீங்க. அதுக்காக ஒண்ணும் அவனை அப்படியே விட்டுடலை.தமிழ்நாடு முழுக்க உள்ள நண்பர்கள் கிட்ட சொல்லியிருக்கேன்.

எப்படியும் இந்த வாரத்துக்குள்ள கிடைச்சிருவான். ஆனா நாம்பளும் ஒண்ணு ஞாபகம் வச்சுக்கணும். அவன் ஒண்ணும் சின்னக் குழந்தை இல்லை. அவனா ஏதாவது முடிவு எடுத்தான்னா மோதிப் பார்க்கட்டும் அப்படின்னு விடறதுதான் நல்லது"என்றான்.

"என்னமோப்பா நீயேதான் சொன்னே அவனை வெளியில் விட்டா ரெண்டே ரெண்டு விஷயங்கள் தான் இருக்குன்னு ஒரு தடவை நீதானே சொன்னே?" என்றார் அப்பா.

"ஆமா, இப்பவும் தான் சொல்றேன். ஆனா இப்ப எனக்கு கொஞ்சம் கான்ஃபிடன்ஸ் வந்திருக்குப்பா. ஏன்னா அவனுக்கு ஒவியம் வரையத் தெரியும். எங்கிருந்து வேண்ணா ஓவியம் வரைஞ்சுக்கலாம். சப்போஸ் சென்னை போனா அங்கே ஓவியக் கண்காட்சி இருக்கு. அல்லது எங்கிருந்து வேண்ணாலும் தொடர்பு வச்சுகலாம். ஓவியக் கண்காட்சி நிறுவனர்கள்கிட்டே தொடர்பு வச்சுக்கிட்டு இயர்ன் பண்ணிக்க முடியும். அப்படியும் இல்லைன்னா செல வுக்கு அவனுக்கு பேங்க் அக்கவுண்ட்ல போட்றலாம். கிரெடிட் கார்டெல்லாம் எடுத்துட்டுத்தான் போயிருப் பான். டெபிட் கார்டெல்லாம் எடுத்துட்டுத்தான் போயிருப்பான்."

"தேடிப் பார்த்தியாப்பா?" என்று கேட்டார் அப்பா.

"ஆமாம்பா. தேடிப் பார்த்தேன். இப்ப அவன்கிட்ட ஓரளவுக்கு பணமும் இருக்கு. அதனால மேனேஜ் பண்ணிப்பான். வெளி உலகமும் சுத்திப் பார்த்துட்டு வரட்டும்" என்றான்.

"என்னமோப்பா, நீ தான் இவ்வள்வு தைரியமா சொல்றே" என்றார் அப்பா.

"வேற ஒண்ணும் பண்ண முடியாதுப்பா வேற என்ன பண்ண முடியும் சொல்லுங்க?" என்றான்.

அப்பா ஒரு பெருமூச்சு விட்டுட்டு. "அதுவும் நிஜம்தான். நீ சொன்ன மாதிரி நாம ரொம்ப அவனைப் பொத்திப் பொத்தி வைச்சுட்டோம் போலிருக்கு. அவன் போன உடனே இப்ப நம்பளுக்குத் தாங்க முடியலை." என்றாார்

"அவனுக்கும் ரொம்ப நாளைக்கு வெளியில சுத்த முடியாது. வந்துருவான்ற நம்பிக்கை இருக்கு. சரிப்பா நாங்க வேண்ணா சம்பத் குமாரோட அம்மா அப்பாவோட சேர்ந்து இந்த ராமேஸ்வரம் அங்க இங்கன்னு போயிட்டு வரோம்ப்பா. மனசு ரொம்ப கெட்டுக் கிடக்குது" என்றார் அப்பா.

சத்யபிரகாஷ் அம்மாவையும் அப்பாவையும் பார்த்து, "சரி மைதிலியையும் கூட்டிட்டுப் போங்க" என்றான்.

"மைதிலியையுமா?" என்றார்கள் அவர்கள்.

"ஆமாம்பா, அவளை மட்டும் நீங்க தனியா விட்டீங்கன்னா..! நான் கம்பெனிக்குப் போயிடுவேன். அவ ரொம்ப ஓர்ரி பண்ணிப்பா" என்றான்.

அம்மாவும் அப்பாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு "சரிப்பா.. நீ ?"என்றார்கள்.

"நான் மேனேஜ் பண்ணிப்பேன்பா. எனக்கு ஒண்ணும் பிரச்சினையே இல்லை. கங்காம்மாவை வந்து சமைத்துக் கொடுக்கச் சொன்னா சமைத்துக் கொடுத்துரு வாங்க. நான் போய் கம்பெனியை பார்த்துக்குவேன். பிரச்சினை இல்லை."

ஒரு வழியாக அடுத்த நாள் சம்பத் குமாரின் பெற்றோர்களும் இவர்களுமாக சேர்ந்து ஒரு காரை எடுத்துக் கொண்டு ராமேஸ்வரம் போகிறோம் என்று கிளம்பிப் போனார்கள்.

"அப்பா வழியில் இருக்கிற ஊர்களையெல்லாம் பார்த்துட்டு வாங்க. மதுரையில் எல்லாம் ஸ்டே பண்ணுங்க ஒரு ஒன் வீக் இருந்து பார்த்துட்டு வாங்க" என்றான்.

மைதிலிக்கு துணையாக நித்திய கல்யாணியையும் அழைத்துக் கொண்டார்கள்.

ஏழிசை வல்லபியும் சம்பத் குமாரும் மட்டும்தான் அவர்கள் வீட்டிலே இருந்தார்கள்.

போனதெல்லாம் நினைவுக்கு வர தன்னுடைய அலுவலகத்தில் உள்ளே அதாவது ஓய்வறையிலே அமர்ந்திருந்தவன் தன் முன்னால் இருந்த நீள மேஜையிலே கவிழ்ந்து தலை வைத்துக் கொண்டான்.

பெற்றோர்களிடமும் மைதிலியிடமும் அவன் கவலையைக் காட்ட முடியவில்லை.

பொய்யாக நடிக்க வேண்டியிருந்தது.

தைரியமானவனாக காட்டிக் கொள்ள வேண்டியிருந்தது.

தானும் சோர்ந்து நின்றால் அவர்கள் சுத்தமாக நம்பிக்கை இழந்து விடுவார்கள் என்ற கவலை மிகுந்திருந்தது.

அவனுக்கு இருந்த நண்பர்களின் மூலமாக உண்மையாகவே தமிழகம் முழுவதிலும் அவன் தொடர்பு கொண்டிருந்தான்.

எப்படியாவது தனக்கும் உமாகாந்தனுக்கும் பரிச்சயமானவர்கள் யாராவது ஒருவரிடம் தான் அவன் போவான். அடைக்கலம் கேட்பான் என்ற எண்ணம் அவனுக்குள்ளே தீவிரமாக இருந்தது.

'எங்கே போனானோ? என்ன செய்கிறானோ சாப்பிட்டானோ, தூங்கினானோ? சும்மாவே சென்சிடிவ்.ரெண்டுங்கெட்டான் அப்படிங்கற ஒரு வார்த்தையை சொன்னதுக்கே மூட் அவுட் ஆனான். என்ன செய்வானோ தெரியலையே என்று எண்ணிய போது அவனுக்கு உடம்பில் இருக்கிற ஒவ்வொரு அணுவிலும் கவலையும் வருத்தமும் பொங்கியது.

அந்த மேஜையிலே தலையைக் கவிழ்த்து வைத்து படுத்துக் கொண்டான்.

நல்ல வேளையாக அது உணவு நேரம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அனேகமாக யாரும் வர மாட்டார்கள் அந்த நேரத்தில் என்று ஒய்வறைக்குப் போயிருந்தான்.

மைதிலியும் பெற்றோர்களுடன் போயிருந்ததால் வெளியே தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

சம்பத் குமாரும் ஏழிசை வல்லபியும் வற்புறுத்தி அழைத்தார்கள். ஆனால், அங்கே போகவில்லை. ஏழிசை வல்லபியை பார்த்தால் உள்ளம் வெடித்து விடுமோ போன்ற ஒரு மனப்பாங்கிலே இருந்தான்.

'கண்டதையும் யோசித்து உடம்பைக் கெடுத்துக் காதீங்க தம்பி.' என்று கங்காம்மா கூட அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார்.

அவனும் இப்பொழுது ஓரளவுக்கு தேற்றிக் கொள்ள முனைந்து கொண்டிருந்தான்.

உடனே கிளம்பியிருப்பான் வெளியூரிலே சென்று தேடிப்பார்ப்பதற்கு. ஆனால் தானும் விட்டுவிட்டு சென்றால் இங்கே குடும்பத்தில் பெரிய குழப்பம் வரும் என்றுதான். ஆங்காங்கே தகவல்கள் கொடுத்து உமா காந்தன் எங்கே இருக்கிறான் என்று தெரிந்து கொள்ள கடுமையாக முயற்சிகள் மேற்கொண்டிருந்தான்.

பலவற்றையும் யோசித்துக் கொண்டு கண்களை மூடித் தலைசாய்த்திருந்த சத்யபிரகாஷுக்கு அந்த அறையின் வாயிலிலே யாரோ நிற்பது போல ஒரு உள்ளுணர்வு தோன்றியது.

தலையை நிமிர்த்திப் பார்த்தான்.

ஏழிசை வல்லபி நின்று கொண்டிருந்தாள்.

அவள் முகத்திலும் எல்லையற்ற துக்கம்!

சத்யா என்று ஒரு மாதிரி குழைந்த குரலிலே சொல்லிக் கொண்டு உள்ளே வந்தாள்.

தன்னையும் அறியாமல் அவள் கேவிக் கேவி அழ ஆரம்பித்தாள்.

சத்யபிரகாஷும் தன்னிலை மறந்தவனாக கண்களில் கண்ணீர் கொட்ட குலுங்கி அழுது விட்டான்.

''ப்ளீஸ் சத்யா'' என்று அவள் அருகிலே நின்று அவனுடைய தலையை இழுத்து தன்னுடைய வயிற்றிலே சாய்த்துக் கொண்டாள்.

சத்யபிரகாஷ் அவளது இடுப்பைக் கட்டிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதான்.

''ப்ளீஸ் சத்யா! ப்ளீஸ் சத்யா!'' என்றாள் ஏழிசை வல்லபி. அவனைத் தேற்றுவதற்கான வார்த்தைகளே அவளுக்கு கிடைக்கவில்லை.

ஐந்து நிமிடங்கள் அழட்டும் என்று விட்டுவிட்டாள்.

வல்லபிக்குத் தெரிந்திருந்தது. இந்த ஒரு வார காலமாகவே அவன் தன்னுடைய துக்கத்தை காட்டிக் கொள்ளாமல் மற்றவர்களை எல்லாம் தைரியப் படுத்திக் கொண்டிருக்கிறான் என்று அவளுக்குப் புரிந்தது.

இப்படித் துக்கத்தை அடக்கினால் அதனுடைய விளைவு என்ன ஆகுமோ என்ற அச்சமும் அவளுக்கு இருந்தது.

அதனால் இப்போது அவன் தேம்பி அழுததை அவள் உள்ளூர வரவேற்றாள். ''வெடிச்சு வெளியே

வந்துரட்டும். அப்பதான் ஆறுதலாகும் மனசு'' என்று எண்ணிக் கொண்டாள்.

தன்னுடைய கண்ணையும் கண்ணில் பெருகுகிற கண்ணீரையும் மெல்ல துடைத்துக் கொண்டாள்.

''சத்யா ப்ளீஸ், நீங்களே அப்ஸெட் ஆனீங்கன்னா என்ன பண்றது. ப்ளீஸ்'' என்று தேற்றினாள்.

''நானே! நீங்களே! எல்லாரும் இப்படியே சொல்றீங்களே. நான் மட்டும் மனுஷன் இல்லையா'' என்று அவன் கோபித்தான்.

மெல்ல அவளிடமிருந்து விலகிக் கொண்டான்.

அந்த நிமிடத்தில் தான் தாங்கள் இருவரும் இருந்த நிலை அவர்களுக்கு புரிந்தது போலும்.

அந்தத் துக்கத்துக்கு நடுவிலேயும் அவள் முகம் சிவந்ததை ஒரு தரம் தன்னை மறந்து ரசித்துப் பார்த்தான்.

உடனேயே ''இந்தத் தொடுகை ஒரு நட்பு ரீதியிலானது இதற்கு மேல் கற்பனையெல்லாம் வைத்துக் கொள்ளக் கூடாது.'' என்று தன்னைத் தானே தேற்றிக் கொள்ளவும் செய்தான்.

''என்ன சத்யா, இப்படி ஆகிப்போச்சு ''என்றாள் ஏழிசை வல்லபி.

''அதான் ஏழிசை எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு. அவனை உருவாக்கவும் அவனை ஸ்டெடி பண்ணவும் எவ்வளவு முயற்சிகள் மேற்கொண்டேன்.

அத்தனையும் இப்போ விழலுக்கு இறைச்ச நீராப் போச்சே. வீணாப்போச்சே'' என்றான் அவன்.

''இல்லை. இல்லை. வீணாப் போகலை.ஏன் அப்படி நினைக்கறீங்க. இப்படி யோசித்துப் பாருங்க.தனியா தன்னால உலகத்தை சந்திக்க முடியும் அப்படீங்கற துணிவோட தானே கிளம்பியிருக்காரு. அந்தத் துணிவை நீங்க கொடுத்திருக்கீங்களே. அது எவ்வளவு பெரிய விஷயம்'' என்றாள்.

எதையாவது சொல்லி தன்னைத் தேற்ற முயற்சிக் கின்ற அவளை அவன் புரிந்து கொண்டவன் போல பார்த்தான்.

''நீ எனக்கு ஆறுதலுக்காக சொல்றே'' என்றான்.

''இல்லை சத்யா. ஆறுதலுக்காக இல்லை. இப்ப உங்களை அழ விட்டேன் பார்த்தீங்களா அதுதான் ஆறுதலுக்காக.ஏன்னா உங்க துக்கத்தை அடக்கி வச்சிட்டிருக்கீங்க. மத்தவங்க யாரும் வருத்தப்படக் கூடாதுங்கறதுக்காக நீங்க எல்லாத் துக்கத்தையும் சுமந்துக்கிட்டிருக்கீங்க. உங்களுக்கு சொல்லிக்கறதுக்கும் அழறதுக்கும் பகிர்ந்துக்கறதுக்கும் நான் இருக்கேன்'' என்றாள் அவள்.

''அது தெரிஞ்சுது'' என்றான் அந்த நேரத்திலும் அவன் குறும்பாக.

அவள் முகம் சிவந்தது.

''ஓ.கே. ஓ.கே. நான் ரைட் சென்ஸ்லதான் எடுத்துக் கிட்டேன்பா'' என்ற அவன் மறுபடியும் ''பாரு இசை. இத்தனை கஷ்டப்பட்டு எல்லாம் வீணாப்போச்சே!'' என்றான்.

முகத்தை துடைத்துக் கொண்டு எதிரிலே இருந்த சீட்டை காட்டினான்.

அவள் டேபிளுக்கு அந்தப் புறமாக இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

அவன் எழுந்து போய் வாஷபேஸினில் முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தான்.

''நீயும்!'' என்றான்.

அவளும் எழுந்து போய் வாஷ்பேஷனில் முகத்தை கழுவிக் கொண்டு எதிரிலே வந்து அமர்ந்தாள்.

அதே நேரத்தில் கங்காம்மா அங்கே வந்தார்.

''போனவாரம் இப்படித்தானே தம்பி, நீங்க ரெண்டு பேரும் வந்திருக்கும்போதுதான் அந்தத் தம்பியும்,,'' என்று ஆரம்பித்து ஒரு சில செய்திகளை சொன்னார்.

அவர் சொல்வதை முழுவதுமாக உள்வாங்கிக் கொண்ட சத்யபிரகாஷும் ஏழிசை வல்லபியும் ஒருவரை ஒருவர் அதிர்ந்து போய் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''அப்படின்னா இதான் காரணமா?'' என்ற பார்வை அவர்கள் இருவருக்கும் இடையேயும் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

அதிர்ச்சியில் இருந்து மீளாமலே ஒருவரை ஒருவர் வெகு நேரம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அப்படி ஒரு செய்தி கங்காம்மா சொன்னார்.

அத்தியாயம் - 2

"என்ன கங்காம்மா சொல்றீங்க?" என்று கேட்டான் சத்ய பிரகாஷ்.

"ஆமாம், தம்பி போன வாரம் நீங்க ரெண்டு பேரும் இங்க பேசிட்டிருந்தப்போ. தம்பி வந்துச்சு" என்றார் கங்காம்மா.

"தம்பி வந்தானா? இங்கேயா?" என்றான் மறுபடியும் சத்ய பிரகாஷ்.

"ஆமாம் தம்பி பின்வாசல் வழியா வந்து இந்த ரூம்ல உட்கார்ந்திட்டிருந்தது" என்றாள்.

"எவ்வளவு நேரம் உட்கார்ந்திட்டிருந்தான்?" என்று கேட்டான் சத்யபிரகாஷ்.

"ஆமாம் தம்பி, ஒரு அரை மணி நேரத்துக்கு மேல உட்கார்ந்துக்கிட்டிருந்தது" என்றாள் கங்காம்மா.

"அப்படியா?" என்றான் அவன் ஆழ்ந்த யோசனையுடன்.

"என்ன தம்பி இப்படி சொல்றீங்க? அப்ப தம்பி உங்க கிட்ட வந்து பேசலையா? நான் உங்களோட தானே பேசிட்டிருந்துதுன்னு நினைச்சேன்."

"இல்லையேம்மா."

இந்த இடைவெளிக்குள்ளாக சத்ய பிரகாஷும் ஏழிசை வல்லபியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

தாங்கள் இருவரும் விளையாட்டாக பேசிக் கொண்டிருந்ததை இவன் கேட்டுக் கொண்டிருந்தான் போலும். என்ன நினைத்தானோ தெரியவில்லையே? ஏதேதோ முடிவு செய்து கொண்டானோ? என்று எண்ணிய போதே சத்ய பிரகாஷுக்கு உறுத்தலாக இருந்தது.

ஏழிசை வல்லபிக்கும் கூட கொஞ்சம் வெட்கமாகப் போய் விட்டது.

அப்படியானால் உமாகாந்தனுடைய இந்த முடிவுக்கு தாங்கள் தான் காரணமா? என்ற எண்ணம் அவளுக்குள்ளும் ஓடியது.

"அப்புறம் கொஞ்ச நேரம் கழித்து பின் வாசல் வழியாவே போச்சு. என்ன தம்பி நீங்க வடை பஜ்ஜி சாப்பிடலையான்னு நான் கேட்கும் போது உஷ் அப்படின்னு வாயில விரலை வச்சு காண்பிச்சுட்டு போயிடுச்சு.ஆனா அவசரமா போன மாதிரி இருந்தது. போன அரை மணி நேரத்துல இப்படி நியூஸ் வருதே தம்பி. என்ன தம்பி இப்படி ஆயிப் போச்சு ?"என்றாள் கங்காம்மா.

உடனே வல்லபி குறுக்கிட்டு "கங்காம்மா இப்பதான் கொஞ்சம் அவரு தெளிவாயிட்டு வர்றாரு. திரும்பத் திரும்ப நாம அதைப் பேச வேண்டாமே" என்றாள்.

"சரிங்கம்மா! சரி," என்றவர் திரும்ப மனது கேட்காமல். "கண்டுபிடிக்கறதுக்கு ஏதாவது ஏற்பாடு பண்ணியிருக்கீங்களா தம்பி?" என்று கேட்டாள்.

''எல்லா ஏற்பாடும் பண்ணிட்டுதான் இருக்கேன் கங்காம்மா. ஆனா அவன் ஒண்ணும் சின்னக் குழந்தை இல்லை. அவனா பார்த்து நாம கண்டுபிடிக்க முடியாத ஒரு இடத்தில் போய் இருந்தா யார்தான் என்ன செய்ய முடியும்?'' என்றான் சத்ய பிரகாஷ்.

கங்காம்மா ஒரு பெருமூச்சு விட்டார். ''ராஜா மாதிரி வச்சுக்கிட்டீங்க. கொஞ்சம் கூட தம்பி புரிஞ்சுக்கலையே'' என்றாள் வருத்தத்துடன்.

''இல்லை. இல்லை புரிஞ்சுக்கிட்டான். ரொம்ப நாளா நான் வெளியூர் போயிட்டு வர்றேன்னு கேட்டுட்டு இருந்தான். நான் தான் அவனை தனியா அனுப்பக் கூடாது. அதனால் நிறைய பிரச்சினை வரும்னுட்டு வேண்டாம்னு சொல்லிக்கிட்டிருந்தேன். ஒரு வழியா அண்ணன் கிட்ட சொன்னா ஒத்துக்கமாட்டான்னு கிளம்பிட்டான் போலிருக்கு'' என்றான் சத்ய பிரகாஷ்.

''இருக்கும், இருக்கும். இந்தக் காலத்துப் பசங்களுக்கு வெளியூர் போய் சுத்திப் பாக்கணும்னு ஆசை இருக்குமோ என்னவோ? போயிட்டு வரட்டும் அதெல்லாம் சமாளிச்சுப்பாப்ல. தைரியமான பையன்தான். வந்துருவாப்ல.'' என்றார் கங்காம்மா.

''இதையேதான் நாங்களும் சொல்லிக்கிட்டு சமாதானப் படுத்திட்டு இருக்கோம்'' என்றான் சத்ய பிரகாஷ் வருத்தம் தோய்ந்த குரலில்.

''சரிங்க தம்பி. ரெண்டு பேரும் பேசிட்டு இருங்க. நான் எதுவும் வாங்கிட்டு வரணுமா?'' என்று கேட்டார்.

''இல்லை இல்லை ஒண்ணும் வேண்டாம்'' என்று அவசரமாக சொல்லி விட்டாள் ஏழிசை வல்லபி.

கங்காம்மா சற்று தூரம் நடந்து செல்லுவதை இரண்டு பேரும் அமைதியாகப் பார்த்துக் கொண்டார்கள்.

அதற்குப் பிறகு சத்ய பிரகாஷ் திரும்பி வல்லபியை பார்த்தான்.

'இசை' என்றான். ஆழமான குரலில்.

அவள் மௌனமாக சொல்லுங்க என்பது போல அவனைப் பார்த்தாள்.

''நாம பேசிட்டிருந்ததைப் பார்த்து அவன் ஏதாவது நினைச்சுக்கிட்டானோ?நமக்குள்ள ஏதாவது இருக்கறதா நினைச்சுக்கிட்டானோ?'' என்றான் கவலை தோய்ந்த குரலில்.

இந்தக் கேள்வியைக் கேட்டவுடனே வல்லபி இன்னும் அதிர்ந்து போனாள்.

'இல்லையா பின்னே? நமக்குள்ள ஒண்ணும் இல்லையா?' என்று கேட்க வேண்டும் என்று அவள் மனது ஓலமிட்டது.

இந்தக் கட்டத்திலே சத்ய பிரகாஷ் தன்னுடைய மனத்திற்கு எதிராக தான் போராடிக் கொண்டிருக் கிறான் என்பதையும் ஏதோ ஒன்று இருப்பதை இல்லை என்று நிரூபித்துக் கொள்வதற்காகத் தேவையில்லாமல் தன்னை வருத்திக் கொள்கிறான் என்பதும் அவளுக்குப் புரிந்தது.

அதனால் அவள் மறுப்பெதுவும் சொல்லாமல் கசப்பாகப் புன்னகைத்தாள்.

''வேறொரு சமயமாக இருந்தால் ஏன் இருக்கக் கூடாதா? உங்களுக்கு என்று ஒரு வாழ்க்கை இருக்கக் கூடாதா?'' என்றெல்லாம் அவள் வாதிட்டிருப்பாள்.

ஆனால், இந்தச் சூழ்நிலையில் அப்படியெல்லாம் பேசுவது அபத்தமாக இருக்கும் என்று அவளுக்குத் தோன்றியது.

''இதற்கு என்னதான் முடிவு?'' என்றான். சத்யபிரகாஷ் அவளை நோக்கி.

''தெரியலையே?'' என்றாள் அவள்.

அவன் திரும்ப அவளைப் பார்த்து ''ஏன் இசை பத்திரமா வந்துருவான் தானே?'' என்று கேட்டான்.

''கண்டிப்பா வந்துருவாருங்க இப்படியும் வெளி உலகம் போய் சுத்திப் பார்க்கும் போதுதான். அங்கிருக்கிற அவலங்கள் எல்லாம் தெரிய வரும். அப்பதான் ஒரு அனுபவம் கிடைக்கும். நம்ம எவ்வளவு வசதியா இருந்தோம். அப்படிங்கற எண்ணமும் வந்தால் ஒருவேளை திரும்ப வந்துடுவாரு'' என்றாள்.

அப்போது கூட முழுமையாக வந்துவிடுவான் என்று சொல்வதற்கு அவளுக்கு துணிவு இருக்கவில்லை. 'ஒரு வேளை வந்துவிடுவார்' என்றுதான் சொன்னாள்.

''அம்மாவும், அப்பாவும் ரொம்ப வெக்ஸ் ஆயிட்டாங்க ஏழிசை, அதனால தான் உங்க

பேரண்ட்ஸோட சேர்ந்து கோயிலுக்கெல்லாம் போயிட்டு வரச் சொல்லி அனுப்பிச்சேன்'' என்றான்.

''அதுவும் ஒரு நல்ல முயற்சிதான் சத்யா. வெளியே இறங்கினாங்கன்னா மனசு மாறும். ஒரு வேளை உமாகாந்தன் கூட கண்ணுக்கு தட்டுப் படலாம்'' என்றாள் ஏழிசை வல்லபி.

இதுவரைக்கும் அப்படி ஒரு எண்ணம் சத்யாவுக்கு தோன்றவில்லை.

''ஆமாம் இல்லே, அப்படி ஒரு சான்ஸ் இருக்கில்லே? எதிர்பாராத விதமாக சந்திச்சு கூட்டிட்டு வந்துட்டாங் கன்னா கூட நல்லாருக்கும்'' என்றான் ஆசையோடு.

சற்று நேரம் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். ''இசை என்னைப் புரிஞ்சுக்குவீங்க தானே?'' என்று கேட்டான் சத்ய பிரகாஷ்.

'சொல்லுங்க' என்றாள் அவள்.

''இதுக்குத்தான் இசை எனக்குன்னு ஒரு குடும்பம் வேண்டாம்? எந்த ஆசைகளும் வேண்டாம் அப்படின்னு நினைச்சது. ஆனா அது என்னமோ அவனை மூச்சு முட்ட வச்சுருச்சு அப்படின்னு சொல்றான். நல்லா யோசிச்சுப் பாருங்க எனக்குன்னு ஒரு பொண்ணு வந்தா. அவ தனக்குத் தானே பிரையாரிட்டி கொடுக்கணும்னு நினைப்பா? எனக்கு குடும்பம் குழந்தைகள்னு வந்தா இவங்க எல்லாரும் ரெண்டா பட்சமா போயிரக்கூடிய பெரிய அபாயம் இருக்கில்லே?'' என்றான்.

ஏழிசை வல்லபி அதற்கு எத்தனையோ பதில்களை வைத்திருந்தாள். ஆனால் ஏற்கெனவே அவன் கொடுத்த அதிர்ச்சியில் இருந்து அவள் மீளவில்லை.

நமக்குள்ளே ஏதோ இருக்கிறது என்று அவன் தவறாக நினைத்துக் கொண்டான் என்று சொன்ன அந்தக் கணத்திலே அவளுக்கு சத்ய பிரகாஷின் மீது கோபமாக வந்தது.

''நீங்க வேணும்னே தப்பிச்சுக்க பார்க்கறீங்க! உள்ளதை இல்லைன்னு சொல்றீங்க! உங்களை நீங்களே ஏமாத்திக்கறீங்க!'' என்று அவனிடம் பெரிதாக சண்டை பிடிக்க வேண்டும் என்று அவளுக்கு தோன்றியது.

இப்போது அதற்கான நேரம் இல்லை என்பதும் அவளுக்குத் தெரிந்ததனால் அவன் பேசுவதற்கெல்லாம் அவளும் சரி என்பது போல தலையாட்டிக் கொண்டிருந்தாள்.

ஆனால், உமாகாந்தன் கிளம்பிப் போனது எவ்வளவு ஒரு தவறான முடிவு. அதே அளவுக்கு சத்ய பிரகாஷினுடைய அந்தப் பேச்சும் உண்மை நிலைமையை பிரதிபலிக்க வில்லை என்பது அவளுக்குப் புரிந்தது.

உள்ளம் வாடிப்போனது.

கொஞ்ச நாட்களாக அவள் மனத்தில் ஏதேதோ கனவுகள் பூத்திருந்தன.

அந்தக் கனவுகளை எல்லாம் இந்தக் கணத்தில் சத்ய பிரகாஷ் உடைத்து விட்டதாகவும், கலைத்து விட்ட தாகவும் அவளுக்குத் தோன்றியது.

அதே சமயத்தில் இந்த நிலையில் சத்ய பிரகாஷை விட்டு விலகவும் அவள் மனது இடம் கொடுக்கவில்லை.

'இந்த மாதிரி வருத்தமான ஒரு நேரத்தில் துயரம் நிறைந்த நேரத்தில் அருகில் இருக்க வேண்டியது அவசியம்'' என்று எண்ணினாள்.

சத்யா தன் மீது அன்பு வைத்திருக்கிறாரோ இல்லையோ? சத்யாவின் மீது தனக்கு அன்பு இருக்கிறது.

அந்த அன்பு எதுவாக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும்.

இல்லை என்று வலிந்து வலிந்து சத்ய பிரகாஷ் மறுக்கிற அந்த விதமான அன்பாக இருக்கட்டும். இல்லாமல் போகட்டும். ஆனால், இந்த துக்க நேரத்தில் சத்யாவிடம் நாம் வாதாடக் கூடாது. தோள் கொடுக்க வேண்டும். அதுதான் முக்கியம் என்று எண்ணிக் கொண்டாள்.

உடனே தன் முகபாவத்தை எல்லாம் மாற்றிக் கொண்டு வாஞ்சையாக அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''ஆமா சத்யா உமா தப்பாத்தான் புரிஞ்சுக் கிட்டாரு'' என்றாள்.

என்னதான் தான் மேலோட்டமாக பதில் சொல்லிக் கொண்டிருந்தாலும். ஏழிசை வல்லபி ஒத்துக் கொண்டது அவனுக்கே அதிர்ச்சியாகிப் போனது. அவள் வேறு ஏதாவது பதில் சொல்வாள் என்பது இந்த

நேரத்திலும் கூட அவனுடைய எதிர்பார்ப்பாக இருந்ததோ என்னவோ?

முகத்தில் எந்தப் பாவத்தையும் காட்டாமல் அவள் பார்த்தாள்.

"நாம ரொம்ப நெருங்கிய நண்பர்களாக இருக்கிறோம். நம்முடைய டேஸ்டெல்லாம் ஒத்துப் போகுது. லைக் மைண்டட் பீப்பிள்னு சொல்லுவாங்கல்ல அதுமாதிரி இருக்கோம். பாவம் உமாகாந்தனுக்குப் புரியலை" என்றாள் ஏழிசை வல்லபி பெரிய மனிதத் தோரணையில் முகத்தை வைத்துக் கொண்டு.

தான் நடிக்கிற நாடகம் குறித்து அவளுக்கு கோபமாகவும் இருந்தது. சிரிப்பும் வந்தது.

இப்போது சத்ய பிரகாஷுக்கு அதை ஆமோதிப் பதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

"ஆமா"! என்றான்.

"ஓ.கே. சத்யா, இதுக்கு என்ன செய்யறதுன்னு யோசியுங்க. நீங்க என்ன முயற்சி எடுத்தாலும் அதற்கு நான்துணையா இருப்பேன். ஒரு நெருங்கிய தோழியா. இல்லை அதுக்கு மேலேயும் நீங்க எப்படி நினைச்சாலும் சரி "என்றாள் ஏழிசை வல்லபி.

அப்போது அவளுடைய முகத்தில் தெரிந்த உறுதியைப் பார்க்கும் பொழுது சத்ய பிரகாஷுக்கு மனம் உருகிப் போனது.

தன்னைக் குறித்து ஒரு பரிதாபமும் தோன்றியது. இவ்வளவு அருமையான ஃப்ரெண்ட் தனக்குக்

கிடைப்பாளா? கிடைத்தற்கரிய பொக்கிஷத்தை இழந்து கொண்டிருக்கிறோமா? இப்படி ஒரேயடியாக தான் குடும்பம் குடும்பம் என்று முக்கியத்துவம் கொடுப்பது எந்த வகையில் சரி. என்றெல்லாம் கேள்விகள் பல வாறாக ஓடியது.

தன் குழப்பத்தை மறைத்துக் கொண்டு ஒருவகை ஏமாற்றம் மனதிற்குள்ளே தொக்கி நிற்க ஏழிசை வல்லபியை பார்த்து புன்னகைத்தான்.

ஏழிசை வல்லபி தன் முகபாவத்தை உற்சாகமாக மாற்றிக் கொண்டாள்.

"நான் ஒண்ணு சொல்லட்டுமா சத்யா"என்றாள்.

"சொல்லு இசை. இப்ப உங்கிட்ட மட்டும்தான் மனம் விட்டு பேசிட்டிருக்கிறேன். ஏன் சம்பத் கிட்டகூட நான் இந்த அளவுக்கு பேசலை" என்றான்.

"நீங்க எங்கிட்டயும் ஒண்ணும் உண்மையா பேசலை" என்று உள்ளூர ஏழிசை வல்லபி எண்ணிக் கொண்டாலும் அதை ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டு "இப்போதைக்கு ஒரு நல்ல காரியத்தை முயற்சி பண்ணலாம்" என்றாள்.

"புரியலை" என்றான் சத்யா.

"முதல்ல மைதிலிக்கு ஒரு மாப்பிள்ளை பாருங்க. மைதிலியோட கல்யாண ஏற்பாடெல்லாம் செஞ்சுட்டு...!" என்று மேலும் அவள் ஒரு ஆலோசனை சொன்னாள்.

அந்த ஆலோசனையைக் கேட்ட பிறகு சத்ய பிரகாஷுக்கு முகம் மலர்ந்தது.

"கரெக்ட், இசை இது நல்ல மெத்தடா இருக்கே ட்ரை பண்ணுவோம்" என்றான்.

"ஆமா சத்யா, எல்லாத்தையும் தூக்கி வைச்சுட்டு உங்க துக்கத்தையும் மறந்துட்டு நீங்க சீரியஸா மைதிலிக்கு மாப்பிள்ளை தேட ஆரம்பிங்க. அதுவே ஆரம்ப கட்டமா இருக்கட்டும்" என்றாள் ஏழிசை வல்லபி.

"ரொம்ப கரெக்ட். இது ஏன் எனக்குத் தோணலை" என்றான்.

"உங்களுக்கு உமா கிளம்பிப் போன வருத்தம். நீங்க அவரை அவ்வளவு நேசிச்சிருக்கீங்க. இருக்கத்தானே செய்யும்" என்றாள்.

"ஏன் இசை? உமாவும் போயிட்டான். மைதிலியும் போனா வீடு வெறிச்சுன்னு இருக்காது?" என்றான் சத்யா.

ஏழிசை வல்லபி புன்னகைத்தாள். "இது நல்லா இருக்கே? அதுக்காக அவளுக்கு ஒரு வாழ்க்கை அமைச்சுக் கொடுக்காம இருக்க முடியுமா" என்று கேட்டாள்.

அதுவும் சரிதான் என்று முகத்தை ஒரு மாதிரி வைத்துக் கொண்டு சொன்ன சத்ய பிரகாஷ் "சரி யோசிக்கிறேன்" என்றான்.

"யோசிக்கிறது இல்லை. உடனே ஸ்டெப் எடுங்க" என்றாள் ஏழிசை வல்லபி.

"ஓ.கே., டன்" என்று கொஞ்சம் உற்சாகமானான்.

மைதிலிக்காக அவன் திட்டம் போட்டுக் கொண்டிருக்கையில் மைதிலியின் வாழ்க்கையில் வேறு விதமான ஒரு திருப்பம் நேரப் போகிறது என்பது அப்போது அவர்கள் இருவருக்கும் தெரியவில்லை.

அத்தியாயம் - 3

"இன்னும் கொஞ்சம் வச்சுக்கண்ணா" என்று உபசரித்தாள் ஏழிசை வல்லபி.

"போதும்மா! நீ நல்லா டேஸ்டா காலையில பண்ணிப் போடு. நான் அங்க போயி கணக்கு வழக்கு பார்க்கறதை விட்டுட்டு கண்ணை சொருகிட்டு உட்கார்ந்திருக்கணும்.மேனேஜர் வேற என்னை கிண்டல் பண்றேன்னுட்டு ஏதாவது அபத்தமா ஜோக் அடிப்பாரு" என்றான்.

"ஓ.கோ. அந்த அவஸ்தை வேற உனக்கு இருக்கா" என்று சிரித்தாள் ஏழிசை வல்லபி.

சம்பத் குமார் டிஃபனை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு "ஏம்மா நீ ஏதாவது தலைவரை பார்த்தியா" என்றான்.

"எந்தத் தலைவரை?" என்றாள் அவள்.

"எந்தத் தலைவரை கேட்பேன். என்னம்மா தெரியாத மாதிரி கேட்கறே" என்றான்.

"ஓஹோ, சத்யாவை சொல்றீங்களா?" என்றாள் சகோதரி.

"ஆமாம்மா, நீ ஏதாவது அந்தப் பக்கம் போனியா வீட்டுக்கு?".

"இல்லைண்ணா நேத்து ஒர்க் ஷாப்புக்குத்தான் போனேன்" என்றாள்.

"அப்படியா அங்கே போனியா? ஏன் நீ வீட்டுக்குப் போயிருக்கலாமே" என்றான்.

"இல்லைண்ணா அவங்க வீட்டுல யாரும் இல்லாதப்ப வீட்டுக்கு போறதுக்கு கஷ்டமா இருந்தது அதான்" என்றாள்.

"அதுவும் சரிதான்" என்று சொன்னான்

"எப்படிம்மா இருக்கான்? நான் பார்த்து ரெண்டு நாள் ஆச்சு. எனக்கு பேங்க்ல ஒர்க் கொஞ்சம் அதிகமா இருந்தது.அதுல வேற இந்த ஆடிட்டிங்குக்கு ஒரு குரூப் வந்துட்டாங்க. உனக்குத் தான் தெரியுமே நேத்து வரும்போது பதினொரு மணி. அவங்களையெல்லாம் உபசரிச்சுட்டு... தாட்டிட்டு !"என்றான்.

"ஆமாமா, அது கொஞ்சம் தலைவலிதான்" என்றாள் ஏழிசை வல்லபி.

"இண்ணைக்குந்தாம்மா போகணும். எப்படி இருக்கான்?" என்றான்.

அவள் பெருமூச்சு விட்டாள். "என்ன சொல்றது அண்ணா. கொஞ்சம் மூட் அவுட்லதான் இருக்காரு. வீட்ல வேற ஆட்கள் இல்லையா? கொஞ்சம் கஷ்டமாதான் இருக்கும்"

"நீ ஏண்ணா ரெண்டு நாளா போகாம இருக்கே. இந்த டைம்ல தாண்ணா கண்டிப்பா யாராவது இருக்கணும் கூட."

"ஆமாம்மா உங்கிட்டயாவது சொல்லியிருக்கலாம். ஆனா, நீ அப்படி நைட்டெல்லாம் போக முடியாதில்லே. சரி நான் இன்னிக்குப் பூரா அவன் கூட இருக்கற மாதிரி பார்த்துக்கறேன்."

"ஆமாண்ணா, இந்த டைம்லதான் ஃப்ரெண்ட்ஸோட அரவணைப்பு தேவை இருக்கும்" என்றாள் அவள்.

அவன் பேசிக் கொண்டே இருக்கையிலே மறுபடியும் அவள் ஒரு கரண்டி பொங்கலை வைத்தாள். அவனும் கவனிக்காதவனாக உள்ளே விழுங்கினான்.

துணைக்குச் சட்னியும், சாம்பாரும் சுவையாக இருக்க அவனுக்கு மறுக்கத் தோன்றவில்லை.

"என்ன சொன்னான். ஏதாவது சொன்னானா?" என்றான் சம்பத்.

"ஒண்ணும் சொல்லலை அண்ணா. நான் தான் ஒரு சஜெக்ஷன் கொடுத்தேன்" என்றாள்.

"நீ சஜெஷன் கொடுத்தியா? விடிஞ்சது போ?" என்றான் கிண்டலாக

"ஏன்? நாங்க சஜெஷன் குடுக்க மாட்டோமா?" என்றாள் அவள் கோபத்துடன்.

"குடுப்பே. குடுப்பே. இப்போதைக்குக் கேட்கறதுக்கு அவங்க தானே இருக்காங்க. குடு" என்றான்.

"நீ வந்து ஹெட்மாஸ்டர்கிட்டே, கேட்டுப் பாரு நான் எப்படி எல்லாம் சஜெஷன் கொடுப்பேன்னு வெறும் சஜெஷன் மட்டும் இல்லே. நான் ஆக்டிவாவும் இருப்பேன்" என்றாள்.

அது அவனுக்கும் தெரிந்திருந்தது என்றாலும் "என்ன செய்யறது? ஆலையே இல்லாத ஊருக்கு இலுப்பைப் பூ சக்கரை."

"உனக்குப் பொங்கலே கொடுத்திருக்கக் கூடாதுண்ணா. கஞ்சி காய்ச்சிக் கொடுத்திருக்கணும்" என்றாள் ஏழிசை வல்லபி கடுப்பாக.

"என் அன்பு சகோதரி கஞ்சி காய்ச்சினாலும் அது கூட சுவையாக இருக்கும்"என்று அவன் கேலி செய்தான்.

அவள் சிரித்தாள்.

"முதல்ல அப்படி பேசிடறது, அப்புறம் நாம இப்படி ஏதாவது கொக்கி போட்டா உடனே சொக்கு பொடி போட்டுடுவியே"என்றாள்.

"என்னம்மா செய்யறது?அம்மாவும் ஊருக்குப் போயிருக்காங்க. நித்யாவும் இல்லை. இன்னும் ஒரு வாரத்துக்கு உன்னை நம்பித்தான் பொழப்பே."

அவள் கலகலவென்று சிரித்தாள்.

அவன் தங்கையினுடைய சிரிப்பைப் பார்த்தான். 'இவளுக்கு நல்ல மாப்பிளையாகப் பார்க்க வேண்டும்' என்று எண்ணிக் கொண்டான்.

கூடவே அந்த சந்தேகமும் எழுந்தது. அதை எழுப்புவதற்கான நேரம் இப்போது அல்ல என்று உடனே அந்த எண்ணத்தை உள்ளே அழுத்திக் கொண்டான்.

"அப்புறம்மா என்னென்ன சஜெஷன் கொடுத்தே?" என்று கேட்டான்.

"அதாண்ணா, அவங்க அம்மா அப்பாவெல்லாம் ஊரிலே இருந்து வந்தவுடனே மைதிலிக்கு மாப்பிள்ளை பார்க்கச் சொன்னேன்" என்றாள்.

பொங்கலை அடுத்த விள்ளல் எடுத்து வாயிலே போடப் போன சம்பலத்தின் கை அப்படியே நின்றது.

"என்னது? என்ன சஜெஷன் கொடுத்தே?" என்றான்.

"மைதிலிக்கு மாப்பிள்ளை பார்க்கச் சொன்னேன்" என்றாள்.

அவன் சட்டென்று சுதாரித்துக் கொண்டான்.

நேரடியாகத் தங்கையைப் பார்ப்பதை தவிர்த்தான்.

தீவிரமாக யோசிப்பது போல முகபாவத்தை மாற்றிக் கொண்டான்.

சிந்திப்பவன் போல 'ம்...' என்று இழுத்தான்.

"இதுவும் நல்ல யோசனைதான்" என்றான். பிறகு "தலைவர் என்ன சொன்னாரு" என்றான்.

"தலைவர் எல்லாம நல்ல யோசனைதான். ஆனா மாப்பிள்ளை கிடைக்கணுமே அப்படீன்னாரு"

"இப்படிப் பேசினா நல்லா நாலு வைக்கலாம்னு வரும்" என்றான் சம்பத்.

"ஆமா! எனக்கும் கூடத்தான்." எனவும் அவன் குபீரென்று சிரித்தான்.

"நீ நாலு வச்சிருவியா ஒன்னே ஒன்னு வை பாக்கலாம்" என்றான்.

"அது முடியாதே ஆனா கோபம் வரும். நாலு வைக்கணும்னு நினைக்க மாட்டேன். ஏன் தான் இப்படி ஒரு தாழ்வு மனப்பான்மையோன்னு நினைச்சுக்குவேன்" என்றாள்.

சம்பத் குமார் ஒரு பெருமூச்சு விட்டு விட்டுச் சொன்னான். "அப்படி இல்லைம்மா, அவங்க குடும்பத்தில் இருக்கிற பிரச்சினைக்கு உண்மையாவே பெண் எடுக்கறதுக்கும் பெண் கொடுக்கறதுக்கும் யோசிக்கிறவங்க இருப்பாங்கதான்.அந்த விதத்துல சத்யாவோட கேள்வி நியாயமானதுதான்" என்றான்.

ஏழிசை சகோதரனை தீவிரமாகப் பார்த்தாள். "நாம எந்த விதத்துல உதவி செய்ய முடியும்ண்ணா? என்றாள்.

"ஏதாவது பண்ணத்தாம்மா வேணும். பார்க்கலாம்" என்றவன். வேண்டும் என்றே தங்கையை ஆழம் பார்ப்பது போல " ஏம்மா மைதிலியைப் பத்தி நீ என்ன நினைக்கிறே?" என்று கேட்டான்.

"எதுக்காக கேட்கறே?" என்றாள் அவள்.

"இல்லைம்மா நாங்கெல்லாம் ஒரு டிஸ்டென்ஸ்ல தான் பழகறோம். என்ன இருந்தாலும் பெண்கள் நீங்க

நெருங்கிப் பழகறீங்க. அந்தப் பொண்ணோட குணத்தைப் பத்தி உனக்குக் கொஞ்சம் தெரிந்திருக்கு மில்லே?. நாளைக்கு யாராவது ஒரு மாப்பிள்ளை பார்க்கறதுன்னா கூட கொஞ்சம் குணத்தையும் பார்க்கணுமில்லே?" என்றான்.

அவள் முகத்தில் எதையும் காட்டாமல் அண்ணனைப் பார்த்தாள்.

ஒரு வேளை அண்ணன் ஆழம் பார்க்கிறானோ என்று தோன்றியது.

எதுவாயிருந்தால் என்ன உண்மையைச் சொல்லுவோம் என்று எண்ணியவளாக "சூப்பர் பொண்ணுண்ணா. அமைதியான பொண்ணு. வேலை கிடைச்சா உண்மையாவே சின்சியரா வேலை செய்வா" என்றாள்.

"அதை யாரும்மா கேட்டா? குடும்பத்துல எப்படின்னு சொல்லு" என்றான் சகோதரன்.

"இல்லைண்ணா, நல்லா பொறுப்பா இருக்கா. வீட்ல எல்லாம் நல்லா செய்யறா. எவ்வளவு பொறுமையா ஹேண்டில் பண்ணுவா தெரியுமா? ஏன்னா உமா எமோஷனலா இருப்பாரு. ஒரு அவசரம் இருக்கும் அவருகிட்ட. அதையெல்லாம் புரிஞ்சுக்கிட்டு உமாவுக்கு வேணுங்கறதை கவனிச்சு. நல்லபடியா அவரைக் கூட சமாளிப்பா இருப்பா." என்றாள்.

"ஆமாம்மா, உமாவைப் பொறுத்த வரைக்கும் அந்த வீட்டுல கொஞ்சம் எமோஷனலாதான் இருப்பான்.

அப்படின்னு சத்யாவே சொல்லியிருக்காப்ல'' என்றான் சம்பத்.

''இப்ப கூட பாருங்களேன். நித்யா ஃபோன் பண்றப்ப எல்லாம் நான் கேட்பேன். மைதிலி எப்படி இருக்கான்னு. மைதிலிதான் அவங்க அப்பா அம்மாவுக்கு ரொம்ப தைரியம் சொல்லிட்டிருக் காளாம். மைதிலிதான் ரொம்ப ஸ்டேபிளா இருக்காளாம்'' என்றாள் ஏழிசை.

''ம் அப்படியா?''

''ஆமாண்ணா, அவங்க அம்மா அப்பாகிட்டே பேசிப் பேசியே இப்ப அவங்களை ரெடி பண்ணிட்டாளாம். திரும்பி வரும்போது கொஞ்சம் தைரியமாத்தான் வருவாங்க அப்படின்னு சொல்றா''.

''ம் ஹூம்?! அவ்வளவு மெச்சூர்டா?'' என்றான்.

''சூழ்நிலைன்னு வரும்போது மெச்சூர்டா ஆயித்தானேண்ணா ஆகணும்?'' என்றாள் ஏழிசை வல்லபி.

''அதுவும் நிஜம்தாம்மா. நான் கூட நிறையப் பார்த்திருக்கேன். சின்னப் பொண்ணுங்களுக்கு கல்யாணம் ஆயிருச்சுன்னா அவங்களோட பிஹே வியரே மாறிடுது. அவங்க என்னமோ குடும்பத் தலை வராட்டம் பிகேவ் பண்ண ஆரம்பிச்சுடறாங்க.இது பெண்கள்கிட்ட ஏற்படக் கூடிய ஒரு பெரிய டிரான்ஸ்ஃபர்மேஷன் தான். ஆச்சரியமான விஷயம் தான்.''என்றான் சம்பத் குமார்.

''அண்ணா !''என்று சிரித்தாள் ஏழிசை வல்லபி.

''என்னம்மா'' என்றான்.

''என்னண்ணா. இப்படியெல்லாம் தத்துவம் பேசறே'' என்றாள்.

''தத்துவம் இல்லைம்மா உண்மைதான். நம்ம உறவுக்கார பொண்ணுகளை எடுத்துக்குவோம்.''

''எத்தனை பொண்ணுங்களை பார்த்திருக்கறே?'' என்றாள் ஏழிசை வல்லபி.

''ஏம்மா, நம்ம பெரியப்பா வீட்டுல, சித்தப்பா வீட்டுல, சொந்தக் காரங்க வீட்டுல எத்தனை பேரை பார்த்துருப்போம். கல்யாணம் ஆனதுக்கப்புறமாவே குடும்பப் பொறுப்பு வந்துடுது. ஒரு பெரிய சேஞ்ச் வருதுங்கறது ஒரு ஆச்சரியமான விஷயம்தானே? அதுவும் நீங்களெல்லாம் ஒரு வீட்டுல இருந்து இன்னொரு வீட்டுக்கு போறீங்க. அங்கெல்லாம் சூழ்நிலையை அட்ஜெஸ்ட் பண்ணிட்டு இருக்கறது எவ்வளவு பெரிய விஷயம்.?''

அவள் சிரித்தாள்.

''ஏம்மா, நீயும் கூட ஒரு நாளைக்கு அப்படி கிளம்பிடுவே'' என்றான்.

ஒரு நிமிடம் அமைதி நிலவியது.

''இல்லைண்ணா. எனக்கு கல்யாணத்துல பெரிய இன்ட்ரஸ்ட் இல்லை'' என்றாள் ஏழிசை வல்லபி.

அவன் அதிர்ந்து போய் பார்த்தான்.

"என்னம்மா சொல்றே நீ?" என்றான்.

"உண்மையாவேதாண்ணா, நீ சொல்ற மாதிரி இன்னொரு வீட்டுக்குப் போய் அங்கத்த சூழ்நிலை யெல்லாம் சமாளிக்கிற தெம்பு சக்தி எல்லாம் எனக்கு இருக்குமான்னு தெரியலை" என்றாள்.

"போச்சுடா! நான் உன்னை பயமுறுத்திட்டேனோ" என்றான்.

"இல்லைண்ணா. எனக்கு லைஃப் இப்படியே பிடிச்சிருக்கு. இந்தக் குழந்தைங்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்திட்டு இப்படியே லைஃபை ஓட்டிடலாம்னு நினைக்கிறேன்".

சம்பத் குமார் அவள் முகத்தை ஆழ்ந்து பார்த்தான்.

திடீரென்று ஏழிசை வல்லபி இப்படிப் பேசுவதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்று தோன்றியது.

"ஏம்மா, ஏம்மா, இப்படிப் பேசறே? யாராவது கேட்டா ஏதாவது லவ் ஃபெயிலியர்னு நினைச்சுக்கப் போறாங்க."

அவள் திடுக்கிட்டுப் போய் சகோதரனைப் பார்த்தாள்.

" அய்யய்யோ! அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லைண்ணா. நான் நிஜமாத்தான் சொல்றேன்".

"எப்பவும் அப்படி சொல்லாதே. கொஞ்ச நாளைக்குப் பொறுப்போம். ஒரு ஒன் இயர் டைம். அதுக்குள்ள யார் வீட்டுக்காவது உன்னை அனுப்பித்தான் ஆகணும்".

அவள் முறைத்தாள். "எதுக்கு? யார் வீட்டுக்காவது அனுப்பிச்சா உனக்கு வசதியா இருக்கும். அப்படியா.?"

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லை."

"நான் இங்கிருந்துக்கறேன். நீ பேசாம கல்யாணம் பண்ணிக்க" என்றாள்.

"ஆமாம்மா நீ மட்டும் கல்யாணம் பண்ணிக்க மாட்டே. அப்ப நான் மட்டும் கல்யாணம் பண்ணிக்கணுமா?" என்றான்.

"ஓகே அண்ணா, அதை அப்புறம் பார்த்துக்கலாம். உனக்கு முதல்ல கல்யாணம் ஆகட்டும்" என்றாள்.

"சரிம்மா. அப்படின்னு சொல்லிருவேன்னு நினைக்காதே."

"சரிம்மா" என்று அவன் சொன்னவுடனேயே. மகிழ்ந்து அதைப் பார்த்த சகோதரி தொடர்ந்து வந்த வார்த்தைகளை பார்த்து கடுப்பானாள்.

"இப்போதைக்கு நம்ம ரெண்டு பேர் பிரச்சினை யையும் விடுவோம். நான் ஒண்ணு சொல்லட்டா" என்றாள்.

'சொல்லு" என்றான்.

"சத்யாவும் நீங்களும் உங்க பிரச்சினையெல்லாம் தள்ளி வச்சுட்டு உமா பிரச்சினையை கூட தள்ளி வச்சுட்டு எல்லோருமே சேர்ந்து மைதிலிக்கு ஒரு மாப்பிள்ளை பாருங்க" என்றாள்.

சம்பத் குமார் யோசித்தவன் போல பார்த்தான்.

''ஆமாண்ணா, ஒரு நல்ல மாப்பிள்ளை பாருங்க'' என்றாள்.

''பார்க்கலாம்மா?'' என்றான்.

ஏழிசை வல்லபி சொன்னவள் சும்மா இருக்கவில்லை.

தன்னுடைய பெற்றோர்கள் ஊரிலிருந்து வந்தவுடனேயே அவர்களிடத்திலும் அதையே சொன்னாள்.

அவர்கள் சம்பத் குமாரிடம் ''சம்பத்து, நீ பேசாம சத்யாகிட்ட சொல்லி அந்தப் பொண்ணோட ஜாதகத்தை வாங்கிட்டு வா'' என்று சொன்னார்கள்.

சம்பத் குமார் ஜாதகத்தை வாங்கிக் கொண்டு வந்தான். ஆனால் வருகிற வழியிலேயே வேறு ஒரு வேலையும் செய்தான்.

செய்து விட்டு வீட்டுக்கு வந்தவன் ''அப்பா இப்போதைக்கு இந்த ஜாதகத்தை அப்படியே வைங்க''.

''ஏன்'' என்று கேட்டார்கள் பெற்றோர்கள்.

''காரணம் இருக்குப்பா. நான் சொல்றேன்'' என்றான்.

''என்ன காரணம்'' என்றார்கள் அவர்கள்.

''இல்லைப்பா. சடார்னு இதைப் பேசக் கூடாது. முதல்ல சத்யா கிட்ட பேசி அவனை ரெடி பண்ணனும். அதுக்கப்புறம் அவங்க பேரண்ட்ஸ் கிட்ட பேசணும். இதுக்கெல்லாம் கொஞ்சம் டைம் எடுக்கும்.

அதுக்கப்புறம் நானே சொல்றேன். அதுக்கப்புறமா ஜாதகத்தை வெளியில குடுங்க'' என்றான்.

அடுத்த அறையில இருந்து அதைக் கேட்டுக் கொண்டிருந்தாள் ஏழிசை வல்லபி.

அவளுக்கு சில சந்தேகங்கள் தோன்றின. ஆனால் அதை இப்போது கேட்பது ஏற்புடையதாக இருக்காது என்று எண்ணிக் கொண்டவள் இதற்கு வேறொரிடத்தில் இருந்து விளக்கம் வாங்க வேண்டும் என்று முடிவு செய்தாள்.

அடுத்த நாள் தனது எண்ணத்திற்கு ஏற்ப தான் செல்ல வேண்டிய இரண்டு இடங்களுக்கும் சென்று விட்டு வந்தாள்.

அதற்குப் பிறகு அவளுடைய சிந்தனையில் பெரிய மாற்றம் ஏற்பட்டது.

சத்யாவை மட்டும் அல்ல தன்னுடைய சகோதரனையும் கூட கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தாள்.

பலப்பல உண்மைகள் அவளுக்குத் தெரிந்தன.

ஆனால், அது நல்லதுக்கா கெட்டதுக்கா என்பது மட்டும் அப்போதைக்கு அவளுக்கு புரியவில்லை.

அத்தியாயம் - 4

ரயில் ஓடிக் கொண்டிருந்தது.

ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து கொண்டிருந்தான் உமாகாந்தன்.

வலக் கையை ஊன்றி கன்னத்திற்கு முட்டுக் கொடுத்து வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

காற்று முகத்தில் மோதியது.

வேறு ஒரு சமயமாக இருந்திருந்தால் அந்த ரயில் பயணத்தை அவன் மிகவும் அனுபவித்திருப்பான். ஆனால் இப்போது அவனுடைய எண்ணமெல்லாம் வேறெங்கோ ஓடியது.

தான் எடுத்த முடிவு சரிதானா? என்ற குழப்பம் இப்பொழுதும் அவனுக்குள் இருந்தது. ஆனால் வேறு வழியிருக்கவில்லை என்பதும் அவனுக்கு புரிந்தது.

தான் வீட்டை விட்டுக் கிளம்பிய அன்றைக்கு சகோதரனுடைய ஃப்ரஷ்னிங் சென்டரில அமர்ந்திருந்த அந்த அரைமணி நேரம் இப்பொழுது மீண்டும் அவன் மனத்திரையில் ஓடியது.

அன்று ஏழிசை வல்லபியும் அண்ணனும் சிரித்து சிரித்துப் பேசிக்கொண்டிருந்ததை இந்தப் புறம் இருந்து அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

இடையில் நுழைவதற்கும் வழியில்லாமல்போனது.

சட்டென்று எழுந்து வெளியே வருவதற்கும் வழியில்லாமல் போனது.

இதெல்லாம் அவன் மனதுக்கு அவன் சொல்லிக் கொள்ளுகிற பொய் சாக்குகளோ என்று இப்போது தோன்றுகிறது.

அவனுக்கு ஏதோ ஒன்று தெரிய வேண்டியிருந்தது.

அதற்காகத் தான் அங்கே காத்துக் கொண்டிருந்தான். அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது அந்த உண்மை அவன் நெஞ்சில் அறைந்தது.

சத்யா அண்ணன் தங்கள் வீட்டில் சந்தோஷமாகத் தான் இருக்கிறான். மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறான் என்றாலும் அன்றைக்கு அவன் முகத்தில் பார்த்த மகிழ்ச்சி வேறு விதமாக இருந்தது.

தனக்கு விவரம் தெரிந்த நாளில் இருந்து அண்ணன் நண்பர்கள் சேர்த்துக் கொண்டதே இல்லை.

டீன் ஏஜ் என்று சொல்லக்கூடிய அந்த பதின்ம வயதில் இருக்கும் போது கூட அவன் தெரு முனையில் நின்றோ இல்லை பெண்களை கிண்டல் செய்தோ பார்த்ததே இல்லை.

வயதுக்கு மிஞ்சிய பக்குவத்துடன்தான் எல்லா விஷயங்களிலும் ஒதுங்கிக் கொள்ளுவான்.

அவனுக்குள் அந்த ஆசைகள் எல்லாம் இருந்திருக்காதா என்ன?

ஒருவேளை இதையெல்லாம் கூட குடும்பத்தில் மூத்த பையன் என்பதற்காக அடக்கிக் கொண்டானோ.

சில விஷயங்களில் அண்ணன் தெளிவாக இருந்தான் என்பது உண்மைதான். ஆனால் அது உண்மையான தெளிவு தானா? அவன் உணர்வுகளை அடக்கிக் கொள்ளுகிறானா? என்று அன்றைக்குத்தான் அவனுக்கு சந்தேகம் எழுந்தது.

அப்படியொரு மகிழ்ச்சி அண்ணனுடைய முகத்தில் அலை மோதியது. அதைக் காட்டிலும் வல்லபியினுடைய முகத்தில் இன்னொருவிதமாக உணர்ச்சிகள் மின்னி மறைந்ததை அவன் பார்க்க முடிந்தது.

இரண்டு பேருக்கும் ஏதோ பேச்சு நடந்து கொண்டிருந்தது. அவன் கவனித்த வரை அதில் எதுவுமே விஷயமே இருக்க வில்லை. 'ஸ்வீட் நத்திங்ஸ்' என்பார்களே அது போல நிறைய பேசிக் கொண்டார்கள். ஆனால் மாய்ந்து மாய்ந்து சிரித்தார்கள்.

இரண்டு பேருக்குமே ஒருவருடைய அருகாமை மற்றொருவருக்கு பிடித்திருந்தது என்பது உமாகாந்தனுக்கே புரிந்தது.

உமாகாந்தன் அங்கே அரைமணி நேரம் காத்துக் கொண்டிருந்ததெல்லாம் எந்தக் கட்டத்திலாவது அவர்கள் இருவரும் ஒருவர் மேல் ஒருவருக்குள்ள விருப்பத்தை வெளிப்படுத்திக் கொள்ளுகிறார்களோ அல்லது ஏற்கெனவே வெளிப் படுத்திக் கொண்டதற்கான ஒரு அறிகுறி அவர்கள் பேச்சிலே தெரிகிறதா என்று பார்ப்பதற்காகத்தான்.

ஆனால் அவன் எதிர்பார்த்ததுக்கு மாறாக வேறு ஒரு விஷயம் நடந்தது.

சத்யா அண்ணன் மிகவும் கவனமாக தன்னுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்திக் கொள்ளக் கூடாது என்று போராடிக் கொண்டிருக்கிறான் என்பது புரிந்தது.

தன்னை மீறி 'வல்லபி நான் உன்னை நேசிக்கிறேன்' என்றோ வல்லபியை திருமணம் செய்து கொள்ளுகிற

மாதிரியான பேச்சு வெளிப்படும் என்றோ உமாகாந்தன் எதிர்பார்த்திருக்க, நிச்சயமாக அப்படி ஒரு எண்ணத்தை வெளியிட்டு விடக்கூடாது என்பதில் அண்ணன் எச்சரிக்கையாக இருந்த மாதிரி தோன்றியது.

அப்போதுதான் உமாகாந்தனுக்கு அளவு கடந்த கழிவிரக்கம் தோன்றியது.

'இதற்கெல்லாம் காரணம் அண்ணன் தான்.இல்லை இல்லை அண்ணனுக்கு இப்படியெல்லாம் நேர்வதற்கு காரணம் தான் தான். தான் மட்டும் எல்லோரையும் போல் இருந்திருந்தால் இந்நேரம் அவனுக்கு இந்தப் பெண்ணை பிடித்துப் போயிருக்கலாம். தங்களுடைய பெற்றோரிடம் வந்து சொல்லியிருக்கலாம் 'ஏழிசை வல்லபியை எனக்கு பிடிக்கிறது கல்யாணம் பண்ணித் தாங்க' என்று கேட்டிருக்கலாம். அல்லது 'ஏழிசை வல்லபியிடமே உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது' என்று சொல்லலாம்.இந்த மாதிரி எதுவும் வெளிப் பாடுகள் நடந்து விடக் கூடாது என்பதில் அண்ணன் மிகவும் எச்சரிக்கையாக இருக்கிறான் என்பதைக் காட்டிலும் போராடிக் கொண்டிருக்கிறான் என்பது உமாகாந்தனுக்கு புரிந்தது.

அத்தனைக்கும் காரணம் தான்தான்!

தான் மட்டும் மற்றவர்களைப் போல் இருந்தால் இந்நேரம் அண்ணனுடைய வாழ்க்கை வேறாக இருந்திருக்கும்.

இந்த நேரத்திற்கு அவனுக்குத் திருமணம் ஆகி குழந்தை கூட பிறந்திருக்கலாம்.

இன்னொருவருடைய வாழ்க்கையை அப்படி மாற்றுவதற்கு, மாற்றுவதற்கு என்ன, நிர்பந்திப்பதற்குத் தனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?

இறைவன் தன்னை வித்தியாசமாகப் படைத்து விட்டான் என்பதற்காக ஒரு அண்ணன் என்ற முறையிலே அவன் பொறுப்பு எடுத்துக் கொண்டது தனக்கு மகிழ்ச்சிதான்.

பொத்திப் பொத்தி பாதுகாத்து வளர்த்தது தனக்கு மகிழ்ச்சிதான். அதற்காக அவனுடைய வாழ்க்கையை தியாகம் செய்ய வேண்டுமா என்ன?

அவன் சாமியாரைப் போல இருந்திருந்தால் கூட பரவாயில்லை.

இந்தப் பெண்ணால் ஈர்க்கப் பட்டிருக்கிறான் என்பது தெளிவாக தெரிகிறது. ஆனால் அந்த ஈர்ப்பை அவன் அடக்கி அடக்கி வைக்கிறான். இதனால் யாருக்கு என்ன லாபம்? எனக்குத்தான் என்ன லாபம்? என்று யோசித்தவன் தான் சத்தம் இல்லாமல் எழுந்து வெளியே வந்தான்.

அப்போது தான் எதிரே கங்காம்மா வந்தார்.

'உஷ்' என்று கையைக் காட்டி விட்டு வெளியே வந்தான்.

பைக்கை கூட சத்தம் இல்லாமல் தள்ளிக் கொண்டு வந்து, சற்று தூரம் கழித்த பிறகுதான் ஓட்ட ஆரம்பித் தான்.

பைக்கில் காலைத் தூக்கிப் போட்டு அமரும் போதே முடிவு செய்து கொண்டு விட்டான். 'போதும் இனிமேலும் அண்ணனுடைய வாழ்க்கையில் தன்னால் எந்தப் பிரச்சினையும் ஏற்படக் கூடாது. அவ்வளவு ஏன்? இந்தக் குடும்பம் தன்னையும் தன்னுடைய பிரச்சினைகளையும் சுமந்து கொண்டு தவித்துக் கொண்டிருக்கிறது' என்ற பச்சாதாபம் அவனுக்குத் தோன்றியது.

அப்பொழுதுதான் சட்டென்று முடிவு எடுத்தான்.

வீட்டுக்கு வந்தான்.

மைதிலி, 'அண்ணா' என்று வந்தாள்.

''ம்'' என்று இவன் அவளைக் கவனிக்காதவனாக மாடிக்குப் போனான்.

தன்னுடைய உடைமைகளை எல்லாம் ஒழுங்கு படுத்தினான். எங்கு போனாலும் தங்கிக் கொள்ளுகிற வகையிலே ஒரு ஏழெட்டு மாற்று உடுப்புகளை மட்டும் எடுத்துக் கொண்டான்.

தன்னுடைய அடிப்படைத் தேவைகளுக்கு தேவையான பொருட்களை சேகரித்துக் கொண்டான்.

ஒரு அளவான ஏர்பேக்கில் எல்லாவற்றையும் போட்டு தயாராகிவிட்டான்.

அப்போதும் அவன் மனம் பேதலித்தது.

தன்னால் வெளியே போய் சமாளிக்க முடியுமா? என்று தோன்றியது.

சமாளித்துத்தான் ஆகவேண்டும். இப்போதைக்கு கையிலே தனக்கென்று தொழில் இருக்கிறது. கொஞ்சம் பணம் இருக்கிறது.

கொஞ்ச நாள் ஓட்டலாம் அதற்குள்ளாக படங்கள் வரைந்தால் எங்கு வேண்டுமானாலும் விற்கலாம்.

குறைந்தபட்சம் வெளியூரிலிருந்து கொண்டு அண்ணனுக்கு அனுப்பினால் கூட அவனுடைய ஃப்ரஷ்னிங்கில் வைத்து விற்று விடுவான். பொருளாதாரத்தைப் பற்றி இனி பயப்படவேண்டியதில்லை என்று தோன்றியது.

"மைதிலி ,உன் கையால ஒரு நல்ல காஃபி போட்டுக் கொடு" என்றான்.

தங்கையை ஆசைஆசையாக பார்த்தான்.

மைதிலிக்கு அவன் பார்வை ஆச்சரியமாக இருந்தது.

"என்னண்ணா?" என்றாள்.

"சும்மாதாம்மா, என்னமோ இன்னைக்கு நீ ரொம்ப அழகா இருக்கற மாதிரி தோணுது" என்றான்.

"ஐய்யய்யே, என்னாச்சு உனக்கு எதுக்கு ஐஸ் வைக்கிறே?" என்றாள்.

"ஐஸ் எல்லாம் இல்லைம்மா உண்மையைச் சொன்னா இதுகூட தப்பா" என்றான்.

"சரி நல்ல காஃபியாவே போட்டுத் தரேன்"என்று உள்ளே போனாள் மைதிலி.

அம்மாவும் அப்பாவும் ஹாலிலே அமர்ந்து அப்போது பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்பா என்று வந்து அருகில் அமர்ந்தான்.

"சொல்றா ராஜா" என்றார் அப்பா.

"அப்பா பேசாம சத்யா அண்ணனுக்கு கல்யாணம் பண்ணி வச்சர்லாம்" என்றான்.

அப்பா ஆச்சரியமாக திரும்பி அவனைப் பார்த்தார். "என்னடா, திடீர்னு ஞானோதயம்."

"ஆமாம்பா. அவருக்கும் வயசாகுதில்லே. புடிச்ச பொண்ணு ஏதாவது இருக்கான்னு கேளுங்க. நல்ல பொண்ணா இருந்தா பார்த்து பண்ணி வச்சிடலாம்."

அப்பா பெருமூச்சு விட்டார். "நிறைய தடவை பேசியாச்சுடா .அவன் எங்கே கேட்கிறான்!"

இதுவரையிலும் இந்த டாப்பிக்கை பற்றி அவன் யாரிடமும் பேசியதில்லை. அதனால் விஷயத்தை சேகரித்துக் கொள்ள வேண்டும் என்றும் முடிவாக இருந்தான்.

"என்ன சொல்றான் அண்ணன்?"

"அவன் கல்யாணமே பண்ணிக்க மாட்டானாம். மைதிலிக்கு கல்யாணம் பண்ணுவானாம். உன்னை ஆயுசு பூரா பார்த்துப்பானாம். உனக்குப் பாதுகாப்பா இருக்கணுமாம், அதனால அவனுக்குன்னு ஒரு லைஃப் வேண்டாமாம்" என்றார்.

"என்னை பாதுகாக்கறதுன்னா என்னை இடுப்புல தூக்கி வச்சுக்குவாராமா?" என்றான் உமாகாந்தன்.

"அப்படித்தான்டா நானும் கேட்டேன். அதுக்கு அவன் சொல்றான் வர்ற பொண்ணு நல்லவளா

இருப்பான்னு என்ன நிச்சயம்? அவ எப்படி இருந்தாலும் வீட்டுக்காரரு தனக்குன்னு இருக்கணும்னு தானே எதிர் பார்ப்பா? அப்படி இருக்கும் போது நாளைக்கு ஃப்ரிக்ஷன் வரும்பா, வேண்டாம்பா, அப்படிங்கறான்.''

''இது நல்லா இருக்கேப்பா. நான் என்ன சின்னக் குழந்தையா? வளர்ந்தாச்சு. ஓவியன் ஆயாச்சு. ஏதோ என்னைப் பார்த்துக்கற அளவுக்கு வந்தாச்சு'' என்றான்.

அம்மா கூட நீண்டதொரு பெருமூச்சு விட்டார். அப்பா அவனைப் பார்த்து மறுபடியும் சொன்னார்.

''அப்படிதாம்பா நானும் கேட்டேன். அதுக்கு அவன் சொல்றான். ஏம்பா நான் மட்டும் கல்யாணம் பண்ணிட்டு குடும்பம் குழந்தைன்னு ஃபேமிலி லைஃப்ல இருந்தா ஒரு நேரம் இல்லாட்டி ஒரு நேரம் தம்பி மனசு ஏங்குமில்லே. வேண்டாம்பா அப்படிங்கறான்.''

உண்மையாகவே உமாகாந்தனின் மனம் நெகிழ்ந்து போனது.

''ரொம்ப நல்ல அண்ணன் இல்லப்பா.''

''ஆமாடா ரொம்ப நல்ல அண்ணன் மட்டும் இல்லடா. ரொம்ப நல்ல மகன். நம்ப குடும்பத்துக்கு சொத்துடா அவன்.''

''அப்ப இப்படியே சொல்லிட்டு விட்டுருவீங்களா?'' என்று மறுபடியும் கொடி பிடித்தான் மகன்.

''அதெல்லாம் உன் கையிலதான்டா இருக்கு'' என்றார் அப்பா.

''என் கையிலயா?'' என்று கேட்டான் உமாகாந்தன்.

''ஆமா, நீ ஸ்டெபிலைஸ் ஆயிக் காட்டு. உன்னால தனியா வாழ முடியும்னு காட்டு. அதுக்கப்புறமா உன் அண்ணன் கிட்ட பேசு. அதுக்கப்புறம் ஒருவேளை அவன் மனசு மாறலாம்'' என்றார்.

''ம்.'' என்று மேலும் கீழும் தலையாட்டிக் கொண்டான்.

அதற்குப் பிறகு ஒன்றும் பேசாமல் ஆழமாக அப்பாவைப் பார்த்தபடி அமர்ந்து கொண்டான்.

அதற்குள்ளாக மைதிலி காஃபியை கலந்து எடுத்துக் கொண்டு வந்தாள்.

கையில் வாங்கிக் கொண்ட உமாகாந்தன் காஃபியை சற்று நேரம் அனுபவித்துக் குடித்தான்.

எப்போதாவது அம்மாவின் கன்னத்துத் தாடைகளை பிடித்துக் கொண்டு கொஞ்சுவது உண்டு.

அதுபோல இப்போதும் அம்மாவைக் கொஞ்சினான்.

அப்பா குறும்பாக பார்க்க,

''உனக்கேம்பா பொறாமை'' என்று அப்பாவிடம் போய் அவருடைய கன்னத்தையும் பிடித்துக் கொஞ்சினான்.

அப்பா அம்மா இரண்டு பேரும் சிரித்தார்கள்.

மைதிலி ''என்னமோ ஆயிடுச்சு உனக்கு'' என்றார்.

"உனக்கேன்டி பொறாமை?" என்று அவளைக் கேலி செய்து விட்டு, மெல்ல செல்லக் குட்டு அவள் தலையிலே வைத்து விட்டு "நான் ரூமுக்குப் போறேன்" என்றான்.

"சரிப்பா" என்றான்.

"ஆஃப் அன் அவர் ரெஸ்ட் எடுக்கப் போறேன்.ஆஃப் அன் அவர் கழிச்சு நீங்களெல்லாம் என் ரூமுக்கு வருவீங்களாம். அங்கே ஒரு அதிசயம் காத்துக்கிட்டிருக்கு" என்றான்.

அப்பாவும் அம்மாவும் ஆர்வத்துடன் அவனைப் பார்க்க "ஆமாம், அரை மணி நேரம் கழிச்சு என் ரூமுக்கு வந்து பாருங்க. அதுக்கு நடுவுல நான் என்ன பண்ணிக்கிட்டிருக்கேன்னு வந்து பார்க்கக் கூடாது. வேண்ணா மைதிலியையும் கூட்டிக்கிட்டு வந்து பாருங்க" என்றான்.

அவன் ஏதோ விளையாட்டாக சொல்லுகிறான் என்று நினைத்துக் கொண்டார்கள் பெற்றோர்கள்.

அறைக்கு சென்றவன் அவசர அவசரமாக ஒரு கடிதத்தை எழுதி வைத்து விட்டு சுற்றுமுற்றும் பார்த்தான், அவனுடைய அறையிலே இருந்து பின்கட்டு செல்லுவதற்கு படியிறங்கியது .ஏர்பேக்கை எடுத்துக் கொண்டு அந்தப் படியில் இறங்கி வெளியேறினான்.

கடிதம் எழுதி வைக்கும் முன்பாக டாக்சிக்கு சொல்லி வைத்திருந்தான்.

இப்படியான எதிர்பார்ப்புக்கள் எதுவும் இல்லாத தால் பெற்றோரும் உற்சாகமாகவும் நிம்மதியாக இருந்து விட்டு அரை மணி நேரம் கழித்து ஏதோ விளையாடுகிறான் என்றுதான் அவனுடைய அறைக்கு வந்தார்கள்.

அந்தக் கடிதத்தைப் பார்த்து அதிர்ந்து நின்றார்கள்.

அவர்கள் எப்படி அதிர்ந்து போய் நின்றிருப்பார்கள் என்ற எண்ணம் இப்பொழுது புகை வண்டியில் போய்க் கொண்டிருந்த உமாகாந்தனின் மனத்தில் ஓடியது.

அவனுடைய முகமும் மாறியது. "தம்பி இந்தா தண்ணி குடி" என்று குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

" என்ன ஜெய கோபால் அண்ணே" என்றான்.

"என்னமோ மாதிரி இருக்கே" தண்ணீரை கொடுத்தார் கோபால்.

தண்ணீர் பாட்டிலை கையிலே வாங்கிக் கொண்டான்.

அத்தியாயம் - 5

"ஏம்மா அந்த டவலைக் கொண்டா" என்றான் சத்ய பிரகாஷ்.

"வந்துட்டேண்ணா" என்று வந்தாள் மைதிலி.

வரும் பொழுதே அண்ணன் தலையில் சுருள் முடியில் இருந்து கொட்டிக் கொண்டிருந்த நீர்த்திவலை களை பார்த்த படியே வந்தாள்.

''அண்ணா டவல் எடுத்துட்டுப் போயிருக்கலா மில்லே. தலையை துவட்டுண்ணா. சளி பிடிச்சுக்கும்.''

''ஆமா, பச்சைக் குழந்தை பாரு! சாம்பிராணி புகை போடு'' என்றான் அவன்.

''உட்காருண்ணா! நான் தலையைத் துவட்டி விடறேன்'' என்று அவன் கையைப் பிடித்து இழுத்து அமரச் செய்தாள்.

தலையைத் துவட்டி விடவும் முயற்சி செய்தாள்.

''விடும்மா, நிறைய வேலை இருக்கும்மா. போகணும். ஃப்ரஷ்னிங் செண்டருக்கு ஒரு பெரிய கோடீஸ்வரர் வராரும்மா. கோழி புடிச்சு அமுக்கற மாதிரி அமுக்கினா தான் பொழப்பு நடக்கும்'' என்றான்.

மைதிலி, ''ஃபோன் பண்ணி வரதுக்குக கொஞ்ச நேரம் ஆகும்னு சொல்லிரு.'' என்றாள்.

''போன்ல சொன்னா, போய்யா நீ! நானும் வேற ஆளைப் பாத்துக்கறேன்னுசொல்லிடுவாரு'' என்று அவன் கோபமானான்.

அதே நேரத்தில் சற்றும் எதிர்பாராத விதமாக சம்பத் குமார் உள்ளே வந்தான்.

அண்ணனின் தலையைத் துவட்டிக் கொண்டிருந்த மைதிலி புன்னகைத்தபடி ஏதோ பேசிக் கொண்டிருந்த காட்சி அவன் மனதிலே பதிந்தது.

''ஏம்பா, என்னப்பா நீ இதை மறந்துட்டியா'' என்றான் சம்பத் குமார்.

''என்னது ? எதை மறந்தேன்?'' என்று கேட்டான் சத்யா.

''விடிஞ்சது போ! பேங்க்ல இன்னிக்கு அப்பாய்ண் மெண்ட்பா. ஃபர்ஸ்ட் பார்ட் அமெவுண்ட் இன்னிக்கு கொடுக்கறாங்க .மறந்துட்டியா ?''என்றான்.

''அடடா ஆமா,'' என்று இப்பொழுதுதான் நினைவு படுத்திக் கொண்டான் சத்யபிரகாஷ்.

சம்பத் குமாருக்கு புரிந்தது.

கடந்த பத்து நாட்களில் அந்த வீட்டைக் கப்பியிருந்த சோகமும், அவர்கள் சந்திக்க நேர்ந்த அனுபவங்களும் எல்லாவற்றையுமே கொஞ்சம் புரட்டிப் போடத்தான் செய்தது என்பது அவனுக்கு புரிந்தது.

''ஓ.கே. ஓகே, நீ கொஞ்சம் பிஸியா இருந்துட்டே. இங்கேயும் பிரச்சினை. விடு. விடு. நான் அப்படி சந்தேகப்பட்டுட்டுத்தான் நான் நேத்து ஈவ்னிங்கே பேங்க் மேனேஜர்கிட்ட பேசினேன். அவர் இன்னிக்கு வந்துருங்கன்னு சொல்லிட்டாரு'' என்றான்.

ஒரு நன்றிப் பார்வையை வீசினான் சத்ய பிரகாஷ்.

''அம்மா அப்பா எங்கே?'' என்று அவன் சுற்றும் முற்றும் பார்க்க. ''அம்மா அப்பா எங்கயோ கோயிலுக்குப் போயிருக்காங்க, ஏதோ நாற்பத்தி எட்டு நாள் வேண்டுதலாம். காலையில போய் கும்பிட்டுட்டு வரேன்னு போயிருக்காங்க'' என்றான் சத்ய பிரகாஷ்.

எதற்கான வேண்டுதலாக இருக்கும் என்பது சம்பத் குமாருக்கு தெரிந்துதான் இருந்தது.

"சரி, சரி, இப்ப நீ சீக்கிரம் ரெடியாகு, அன்னிக்கு மாதிரியே நேரத்துல போய் பேங்குல நுழைஞ்சுட்டா டப்புனு என்று இழுக்க,

"கோழி அமுக்குற மாதிரி மேனேஜரை அமுக்குவீங்களா ?"என்றாள் மைதிலி.

சம்பத் குமார் சிரித்தான். "அப்படித்தான் வச்சுக்கங்களேன்" என்றான்.

"அண்ணா நல்லா கோழி பிடிச்சுப் பழகிட்டாரு" என்றாள்.

"ஏம்மா சும்மாரும்மா" என்றான் சத்ய பிரகாஷ்.

"இல்லை சம்பத் சார். இப்பதான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி. ஏதோ ஒரு கோடீஸ்வரர் வராராம், இவங்க ஃப்ரஷ்னிங் செண்டருக்கு. கோழி அமுக்கற மாதிரி அவங்களை அமுக்கணும்னு சொல்லிட்டிருந்தாரு. இப்ப நீங்க வந்து மேனேஜரை அமுக்கணும்னு சொல்றீங்க. பெரிய வலையா எடுத்துட்டுப் போங்க" என்றாள்.

சம்பத் குமார் சத்ய பிரகாஷை கேள்விக்குறியாக பார்த்தான்.

"ஆமாம்பா, எனக்கு இந்த பேங்க் வேலை மறந்தே போச்சு. சிட்டியோட பெரிய ஆளுப்பா அவரு, இப்ப என்ன பண்றது. இது ஞாபகம் இருந்திருந்தா நான் ஏதாவது வெளியூருக்குப் போறேன் நாளைக்கு

வரேன்னு ஏதாவது சொல்லியிருப்பேன். இன்னும் ஒன் அவர்ல வந்திடுவாரே" என்று கவலையானான் சத்ய பிரகாஷ்.

அந்த நேரத்துக்கு அவன் செல்ஃபோன் ஒலித்தது.

"ஐய்யோ கூப்பிடறாருப்பா" என்று அலறிக் கொண்டு எடுத்தான்.

"தம்பி நான் கங்காதரன் பேசறேன்" என்று அந்தப் பக்கம் குரல் கேட்டது.

"சார் சொல்லுங்க, சார்" என்றான் பவ்யமாக.

"தம்பி, நான் ஒண்ணு சொல்லுவேன். நீங்க கோச்சுக்கக் கூடாது" என்றார் அந்தப் பக்கம் இருந்து பேசியவர்.

"இல்லை பரவாயில்லை சொல்லுங்க" என்றான் சத்ய பிரகாஷ்.

என்ன வரப் போகிறதோ என்ற எதிர்பார்ப்பு அவனுக்குள் எகிறியது. "அது ஒண்ணும் இல்ல தம்பி திடீர்னு சிலர் பார்க்க வந்திருக்காங்க. ஒரு அஃபிஷியல் மீட்டிங்கா போச்சு, நாலஞ்சு பேர் உட்கார்ந்து ஒரு விஷயம் பேச வேண்டியிருக்கு. இப்பக் காலையில வர முடியாதே தம்பி. நாளைக்கு வந்துரட்டுமா?" என்றார்.

சத்ய பிரகாஷுக்கு பெரியதொரு விடுதலை உணர்வு ஏற்பட்டது. இருந்தாலும் உடனே ஒத்துக் கொண்டால் அவர் என்ன நினைப்பாரோ என்று நினைத்தானோ என்னவோ "அடடா, அப்படிங்களா சார்? நான் எல்லா ஏற்பாடும் பண்ணிட்டேனே" என்று இழுத்தான்.

அவன் நடிக்கிற நடிப்பை மைதிலி பார்த்து சத்தம் வராமல் ரசித்துச் சிரித்தாள்.

"சாரி, தம்பி நீங்க இன்னிக்கு வேற யாருக்காவது அப்பாய்ண்ட்மெண்ட் குடுத்துக்கோங்களேன். நாளைக்கு கண்டிப்பா வந்துடறேன். காலைல பத்து மணிக்கு ஷார்ப்பா இருப்பேன். இன்னும் என்னென்ன இம்ப்ரூவ் மெண்ட் பண்ணலாம்னு யோசிச்சு வைங்க தம்பி. எவ்வளவு கேட்டாலும் கொடுத்திடறேன். கவலைப்படாதீங்க" என்று அவர் இவனுக்கு சமாதானம் சொன்னார்.

"சரிங்க சார் !"என்று மனமில்லாதவனைப் போலச் சொல்லிவிட்டு செல்ஃபோனை ஆஃப் செய்தான்.

குறும்புக் கார மைதிலி இடையிலே புகுந்து ஸ்பீக்கரை ஆன் செய்தாள். அதனால் அவர் பேசிய தெல்லாம் இவர்கள் இருவருக்கும் கேட்டது.

போனை வைத்ததற்குப் பிறகு சம்பத் குமாரைப் பார்த்துச் சிரித்தாள். சம்பத் குமார் சிரித்துக் கொண்டே மைதிலியை பார்த்தான்.

மைதிலி "பார்த்தீங்களா சார்" என்றாள்.

"ஆமாம், கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி அவர் எனக்கு ஒரு ஆஃபர் கொடுத்தாச்சு. உடனே ஒத்துக்கிட்டா என்ன நாம வரலேன்னு சொல்றோம் இவன் பேசாம சரின்னு சொல்றானேன்னு நினைச்சுக்குவாங்க. உனக்கு தெரியாதுப்பா இந்த ரிச் பீப்பிள் எல்லாம் பயங்கரமா ஈகோ பார்ப்பாங்க" என்றான்.

"ஆமா, நீ இப்படியே நடிச்சு அவங்களை கவுத்துடுவே" என்றான் சம்பத் குமார்.

"நீ நினைக்கிற மாதிரி எல்லாம் இல்லப்பா. அப்படி ஒண்ணும் அவங்ககிட்ட நியாயம் இல்லாம வாங்க மாட்டேன். நியாயமாத்தான் வாங்குவேன்" என்றான் சத்ய பிரகாஷ்.

"இப்ப எதுக்கு இந்தத் தன்னிலை விளக்கம். சீக்கிரம் புறப்படு" என்றான்.

"புறப்படறேன். இதோ அஞ்சு நிமிஷம்" என்று திரும்பியவன். "ஆமா நீ டிஃபன் சாப்பிட்டியா?" என்றான்.

"நான் சாப்ட்டுட்டுத்தாம்பா கிளம்பினேன்" என்றான் சம்பத் குமார்.

அவன் உண்மையில் சாப்பிட்டு விட்டு வரவில்லை என்பது சத்ய பிரகாஷுக்கும் மைதிலிக்கும் புரிந்தது.

"பரவாயில்லை அதனால் என்ன? இங்க சும்மா ரெண்டு தோசை சாப்பிடு" என்று சொல்லிக் கொண்டே "நான் இப்ப போய் டிரஸ் பண்ணிட்டு வந்துடறேன். மைதிலி நீ சம்பத்துக்கு சாப்பிடக் கொடு" என்று சொல்லி விட்டு உள்ளே போனான்.

மைதிலி அண்ணன் சொல்லுவதற்கு முன்பாகவே உள்ளே நுழைந்து தோசை வார்த்து மிளகாய் சட்னி, கொத்தமல்லி சட்னி என்று இரண்டு மூன்று வகை சட்னி என்று எடுத்துக் கொண்டு வந்தாள்.

அவன் அமைதியாக உண்டு முடித்தான்.

அதே நேரத்தில் செல்ஃபோன் மணி ஒலித்தது.

கையில் எடுத்தாள் மைதிலி "சொல்லுங்க அங்கிள், சொல்லுங்க" என்று சொல்லிக் கொண்டே தங்கள் ஹாலைத் தாண்டி கதவுக்குப் பக்கமாக நின்று எட்டி எட்டிப் பார்த்தாள்.

"அப்படியா நீங்க ஒண்ணும் ஓர்ரி பண்ணிக்காதீங்க நான் இப்பவே கொண்டு வரேன். இட்லி மட்டும் போதுந்தானே."

,,,,,,,,,,,,,,,,,,,,,,,,!

"மத்தியானத்துக்கு கவலைப் படாதீங்க. ரசந்தானே வச்சுட்டு வந்துடறேன். உங்களுக்கும் என்ன வேணுமோ நான் கொண்டு வந்து தரேன். நாங்க இருக்கோம் இல்லே. நீங்க ஏன் ஓர்ரி பண்ணிக்கறீங்க" என்றாள் இந்தப் பக்கம் இருந்து.

சம்பத் குமார் ஆச்சரியமாக கவனித்தான்.

செல்ஃபோனை கையிலே வைத்துக் கொண்டு ஆனால் எதிரிலே பேசுகிறவர்களிடம் கையாட்டி பேசுவதைப் போல அவள் பேசியது கொஞ்சம் விசித்திரமாகத் தோன்றியது.

எட்டிப் பார்த்தான்.

நேர் எதிரிலே இருந்த ஒரு பங்களாவில் இருந்து ஒரு பெரியவர் கையை ஆட்டி ஆட்டி பேசிக் கொண்டிருந்தார்.

இவள் இங்கிருந்து பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

'சரிம்மா' என்று அவர் அங்கேயிருந்து கையை அசைத்து விட்டு போனை ஆஃப் செய்தார்.

இவள் திரும்பி சம்பத் குமாரிடம் "அந்த ஆன்டியும் அங்கிளும் தனியா இருக்காங்க. ஒரு சமையல் காரர் இருக்காரு. மத்தவங்களெல்லாம் பார்ட் டைம் சர்வண்ட்ஸ். அவருக்கு ஏதோ அவசரமா வேலைன்னு ஊருக்குப் போயிட்டாரு. அந்த நேரம்னு பார்த்து அந்த ஆன்ட்டிக்கு உடம்பு சரியில்லை. இரண்டு நாளா நான்தான் சமைச்சுக் கொடுக்கறேன். இன்னிக்கு ஏதோ அவங்களுக்கும் கொஞ்சம் உடம்பு சரியில்லையாம். அதனால பத்தியமா வேணுங்கறாங்க" என்று அவனுக்கு விளக்கம் சொன்னாள்.

'ஓ' என்று அவன் கேட்டுக் கொண்டான்.

இதற்குள்ளாக சத்யபிரகாஷ் வெளியிலே வந்தான். "என்னப்பா அக்கம் பக்கத்து வீட்டுக்கெல்லாம் சோஷியல் சர்வீஸ் நடக்கறாப்ல இருக்கு" என்றான் சம்பத் குமார்.

"அதை ஏம்பா கேட்கறே. உமாவையும் இவளையும்" என்றவன் சற்று நிறுத்தினான்.

உமாகாந்தனுடைய நினைவு வந்துவிட்டது போலவும். ஒரு நிமிடம் குரல் தழுதழுத்தது.

"ஐ ஆம் சாரி, நான் ஞாபகப்படுத்தி விட்டுட்டேன்" என்று வருத்தப்பட்டான் சம்பத் குமார்.

"இல்லை இல்லை பரவாயில்லை" என்றவன். "ஏரியாவுக்கே இவளையும் உமாகாந்தனையும்

ரொம்பப் பிடிக்கும். அதுவும் எதிர்த்த வீட்டுல அவங்க பையன் ஃபாரின்ல இருக்கான். இவங்களை அங்கே கூப்பிடறான். ஆனா இவங்க போகமாட்டேன்னு இங்கே தங்கி இருக்காங்க.அட! கவனிச்சுக்குவோம்னு வச்சுக்கயேன். வசதியெல்லாம் இருக்குப்பா ஆனால் மனுஷங்க வேணுமில்லே'' என்றான் சத்ய பிரகாஷ்.

''உண்மை தான்'' என்றான் சம்பத் குமார்.

பேசிக் கொண்டே சத்ய பிரகாஷும் சாப்பிட்டு முடித்தான். அந்த நேரத்திற்குள்ளாக சம்பத் குமார் அந்த ஃபைலில் இருந்து தேவையான விஷயங்களை யெல்லாம் எடுத்து ஒழுங்கு படுத்தினான்.

மைதிலி இயல்பாக நடமாடிக் கொண்டிருந்தாள்.

சம்பத் குமாரின் பார்வை அவ்வப்போது அவளையும் நோக்கி நாடி திரும்பியது.

அப்பொழுது சத்ய பிரகாஷ் கிசுகிசுப்பாக கேட்டான்.

''ஏம்ப்பா அன்னிக்கு திடீர்னு வந்து மைதிலி ஜாதகம் வாங்கிட்டுப் போனிங்கள்ளே'' என்றான் முணு முணுப்பாக.

''உஷ்'' என்று கையை வைத்து எச்சரித்த சம்பத் குமார் ''மைதிலிக்குத் தெரிய வேண்டாம்'' என்றான்.

''ஆமாம்மா, நான் அம்மா அப்பாகிட்ட கூட சொல்லலை. அவங்களுக்கு தெரியாமல் நான் ஜெராக்ஸ் எடுத்து வந்து கொடுத்தேன். ஏதாவது அமைஞ்சதுன்னா அதுக்கப்புறம் பேசிக்கலாம். அப்படின்னு நினைத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றான் சத்ய பிரகாஷ்.

சம்பத் குமார் ஒரு விசித்திரமான புன்னகையை எடுத்து விட்டான்.

''கண்டிப்பா அமையும். கவலைப் படாதே அது எம் பொறுப்பு ''என்றான்.

''எப்படிப் பையன் வேண்டும்?'' என்றான் மறுபடியும்.

''எப்படி..? உன்னை மாதிரி நல்ல பையனா இருந்தா சரி'' என்றான் சத்ய பிரகாஷ்

சம்பத் குமார் அதற்கு பதிலேதும் சொல்ல வில்லை.

சரியென்பது போல தலையை மட்டும் ஆட்டினான்.

ஏதோ சொல்லவந்தவன். கஷ்டப்பட்டு அதைச் சொல்லாமல் அடக்கிக் கொண்டான். ஆனால் அதை சத்ய பிரகாஷும் கவனிக்கவில்லை.

கிளம்பி வெளியே வரும் பொழுது தான். சத்ய பிரகாஷ் சம்பத் குமார் வண்டியில் வந்திருக்கவில்லை என்பதை கவனித்தான். ''அட! பைக்கை காணோம். எப்படி வந்தே?'' என்றான்.

சம்பத் குமார் குறும்பாகப் புன்னகைத்தான். ''அப்படியே சும்மா ஸ்கேட்டிங்ல வந்தேன்னு வச்சுக்கயேன்'' என்றான்.

''நீ செஞ்சாலும் செய்வேப்பா'' என்றான் சத்ய பிரகாஷ்.

''ஆக்சுவலா என் தங்கை கொண்டு வந்து விட்டா'' என்றான்.

இயல்பாக நடந்து கொண்டிருந்த சத்ய பிரகாஷ் சட்டென்று நின்றான்

"இசையா? ஏழிசை வந்திருந்தாப்லயா?" என்றான்.

"ஆமாம்பா, வந்து கேட் கிட்டேயே நிறுத்திட்டு நீங்க உள்ளே போங்க எனக்கு ஸ்பெஷல் க்ளாஸ். இருக்கு டைம் ஆச்சு நான் உள்ள வந்தா மைதிலி சாப்பிடாம விடாது. லேட் ஆயிடும்.அப்படின்னு சொல்லிட்டு கிளம்பிருச்சுப்பா. ஏதோ ஸ்பெஷல் க்ளாஸ் அது இதுன்னு சொன்னதுனால என்னாலயும் கம்பல் பண்ண முடியலே" என்று சொல்லிவிட்டு நாக்கை கடித்துக் கொண்டான்.

சத்ய பிரகாஷ் மௌனமாக அவனைப் பார்த்தான்.

லேசாக தலையில் கொட்டு வைப்பது போல் நடித்துக் கொண்டு "ச்சே, நான் ஒரு உளறு வாயன்ப்பா, சொல்லாதேண்ணா வந்துட்டு உள்ள வரலேன்னா அவங்க சங்கடப்படுவாங்கன்னு சொன்னா. நான் உன்கிட்ட உளறிட்டேன்" என்றான் சம்பத் குமார்.

இன்றைக்கு பேங்கில் தனக்கு தேவையான ஒரு பெரிய காரியம் நடக்கப்போகிறது என்ற சந்தோஷத்தை விட வாயில்படி வரை வந்த ஏழிசை வல்லபி ஏன் உள்ளே வராமல் போனாள் ஏன் தங்களைப் பார்க்காமல் போனாள் என்ற கேள்விதான் சத்ய பிரகாஷின் மனத்தில் தொக்கி நின்றது.

"என்னப்பா யோசனை, வாப்பா" என்று கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சம்பத் குமாரின் இழுப்புக்கு ஒத்துக் கொடுத்து அவன் போய்க்

கொண்டிருந்தாலும் உள்ளத்தில் ஏனோ திடீரென்று ஒரு வெறுமை தோன்றியது.

அத்தியாயம் - 6

"குடுங்க அண்ணே!" என்று தண்ணீர் பாட்டிலை வாங்கிக் கொண்டான் உமாகாந்தன்.

"ஒரு நிமிஷமா கூப்பிட்டுட்டு இருக்கிறேன். மூடு எங்கேயோ இருக்கிற மாதிரி இருக்கு? என்னப்பா" என்றான் ஜெயகோபால்.

உமாகாந்தன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

"வேற எங்க அண்ணா போகும்? அண்ணன் ஞாபகம் வந்துடுச்சு. வீட்டு ஞாபகம் வந்துடுச்சு என்றான்

ஜெயகோபால் கிண்டலாக சிரித்தார்.

"உனக்கென்னப்பா தலையெழுத்தா? உங்க அண்ணா உன்னை தாங்கு தாங்குன்னு தாங்கறான். அப்படி உன்னை பொத்தி பொத்தி பாதுகாத்தான். நீ என்னடான்னா அதை விட்டுட்டு வெளிய வந்திருக்கிறே" என்றார்.

"அண்ணா அதுதான் அண்ணா கஷ்டமா இருக்கு?" என்றான் உமாகாந்தன்.

"தலைகீழா சொல்றப்ப? இப்படி ஒரு ஹெல்ப் கிடைக்காதான்னு அலைஞ்சுக்கிட்டு இருக்கிறவன் எத்தனை பேர் இருக்கான் தெரியுமா?"

"அது எனக்கும் தெரியுதுண்ணே? அவரு ஏனோ என்னைப் ரொம்ப பொத்திப் பொத்தி பாதுகாக்

கறார்ங்கறது எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு. எனக்கும் ஒரு இடம் கொடுக்கட்டும். நான் வேண்டாம்னு சொல்லலை? ஆனா, அதுக்காக தன்னோட வாழ்க்கையையே தொலைச்சுக்கிறாரு. அது கொஞ்ச நாளைக்கு தித்திப்பா இருக்கும், அதுக்கப் புறம்?'' என்றான்.

''பெரிய லெக்சரே அடிச்சிட்ட போ'' என்றான் ஜெயகோபால்.

''உங்களுக்கே புரியலைன்னா...!'' என்று இழுத்தான்?

''புரியுதப்பா புரியுது ''என்று ராகம் போட்டான் ஜெயகோபால்.

ஜெயகோபால் சென்னையிலே ஒரு தொண்டு நிறுவனம் நடத்தி வந்தான்.

சொல்லப்போனால் உமாகாந்தனைக் காட்டிலும் அவன் சத்யபிரகாஷுக்குத்தான் ஓரளவுக்கு நெருங்கிய நண்பன்.

ஊரை விட்டுக் கிளம்பிய உமாகாந்தன் என்ன செய்வதென்று முடிவெடுக்க முடியாமல் சென்னைக்கு ரெயில் ஏறினான்.

ஏறியவனுக்கு பாதியிலே சந்தேகம் வந்தது. கண்டிப்பாக அண்ணன் தன்னுடைய நண்பர்களுக் கெல்லாம் ஃபோன் செய்து விசாரிப்பார்.

இந்தக் காலகட்டத்தில் எந்த நண்பனுடனும் போய் தங்க கூடாது. அதிலும் அண்ணனுக்கு தெரிந்தவர் களிடம் போய் தங்க கூடாது.

கொஞ்ச கால அவகாசம் கொடுத்து விட்டு கொஞ்சம் நிதானம் ஆனதற்குப் பிறகுதான் அங்கே யெல்லாம் போய் தங்க வேண்டும் என்று முடிவு செய்தான். அதனால் இடையிலே சம்பந்தமே இல்லாமல் சேலத்தில் இறங்கிக் கொண்டான்.

அங்கே ஒரு ஓட்டலில் நான்கைந்து நாட்கள் தங்கினான்.

நான்கைந்து நாட்கள் தங்குவதற்குள்ளாக அங்கு பல்வேறு விஷயங்களைப் பார்த்து பயந்து போனான்.

ஒன்றிரண்டு பேர் அவனையே அணுகினார்கள். அவனுடைய நடை உடை பாவனை, கையில் பண ஒட்டம் இதையெல்லாம் பார்த்தார்களோ என்னவோ? நேரடியாக கேட்காமல் மறைமுகமாக கேட்டார்கள்.

அவன் அவர்களிடம் நழுவலாக ஒரு பதிலைச் சொல்லி விட்டு அன்றைக்கே சேலத்தில் இருந்து கிளம்பினான்.

இதற்குள்ளாக நான்கைந்து நாட்கள் ஓடியிருந்தது. இனிமேல் இப்படி தனியாக எங்கேயும் தங்கக் கூடாது.

ஒரு பாதுகாப்பான நிழலை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் வந்துவிட்டது என்று உணர்ந்தான்.

நேராக சென்னைக்குப் போய் ஜெயகோபாலி னுடைய வீட்டுக் கதவை அன்றைக்கு இரவு தட்டினான்.

கதவைத் திறந்து ஜெயகோபால் ஆச்சரியப்பட்டார். ''என்னப்பா இந்த நேரத்துல?'' என்றார்.

ஜெயகோபாலுக்கு உமாகாந்தன் வீட்டை விட்டு வெளியே கிளம்பி விட்டது தெரிந்திருந்தது. ஏனென்றால், சத்யபிரகாஷ் போன் செய்து விசாரித் திருந்தான்.

உமாகாந்தன் நேராக தன்னிடம் வந்து சேருவான் என்பது அவர் எதிர்பாராதது. ஒரு விதத்தில் அவர் மகிழ்ச்சி அடைந்தார். இந்தப் பரந்த உலகத்தில் திருநங்கைகளுக்கும், திருநம்பிகளுக்கும் பாதுகாப்பு இருக்கிறது என்று சொல்ல முடியாது என்பது அவனுக்குத் தெரியும். அதனால்தான் சென்னையிலே அவன் ஒரு தொண்டு நிறுவனத்தை தொடங்கி இயன்ற வரை அவர்களுக்கெல்லாம் உதவி செய்து கொண்டிருந்தான்.

வாழ்வாதாரங்களை பொறுத்த வரையிலும் திருநங்கைகளுக்கும், இன்னமும் ஒரு முடிவான இடம் கிடைக்கவில்லை என்பது அவனுக்கு தெரிந்திருந்தது.

அவ்வளவு ஏன் மிகுந்த போராட்டத்திற்குப் பிறகுதான் ரேஷன் கார்டில் அவர்கள் தங்கள் பேருக்கு நேராக திருநங்கை என்று குறித்துக் கொள்ள முடிகிறது என்பதும் ஜெயகோபாலுக்குத் தெரியும்.

பல்வேறு விஷயங்களுக்காகவும் தங்கள் இருத்தலை நிருபிப்பதற்காகவும் அவர்கள் போராடிக் கொண்டிருக் கிறார்கள் என்பதும்,

அவர்கள் பாவம், ஏற்கெனவே பல குழப்பங்களுக்கு இடையே வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள் என்பதும் அவரை பாதித்தது.

அவர்களை பொது மக்கள் சமமாக கருதா விட்டாலும் பரவாயில்லை. கேலியாவது செய்யாமல் இருக்கலாம். அவர்களது உணர்வுகளை புண்படுத்தாமல் இருக்கலாம் என்று ஜெயகோபாலுக்கு தோன்றியது. அதனால்தான் இத்துறையில் இறங்கி வேலை செய்தான்.

சிலர் விமர்சனம் செய்தார்கள். அவர்களுக்கு பரிந்து கொண்டு வருகிறீர்களே. அவர்களை ஏதாவது சொன்னால் அவர்கள் கண்டபடி பேசுகிறார்கள். ஏதேதோ கெட்ட விதமாக சைகைகள் செய்து காட்டு கிறார்கள். என்றெல்லாம் அவனிடம் பல பேர் கேள்விகள் கேட்பதுண்டு. ஜெயகோபால் பொறுமை யாக விளக்குவான். ''அதெல்லாம் அவர்கள் போட்டுக் கொள்ளுகிற கவசங்கள். சின்னக் குழந்தையில் இருந்து இரண்டு கெட்டான் ஒன்பது என்றெல்லாம் கேலி செய்ததைத்தான் நாம் பார்த்திருக்கிறோம். இன்னொரு படைப்பை இன்னொரு உயிரை கேலி செய்வதற்கு நமக்கு என்ன அதிகாரம் இருக்கு?

இவர்களை மட்டும் அல்ல மாற்றுத் திறனாளி களையும் கூட நொண்டிப் பயலே, குருட்டுப் பயலே என்றெல்லாம் அவர்களுடைய குறைபாடுகளை குறைத்துப் பேசுவது ஒரு பெருமையான விஷயமாக கருதப்படுகிறது.

குழந்தைகளுக்கு சிறுவயதிலிருந்தே நாம் அதை யெல்லாம் பழக்கித் தருகிறோம்.

எல்லா உயிரினங்களையும் சக உயிரினங்களாக மதிக்கக் கற்றுக் கொடுத்தால். இது போல நடக்க மாட்டோம். என்றெல்லாம் அவர் பதில் சொல்வான்.

எங்கேயானாலும் அவர்களைப் பார்த்தால் ஒரு கேலிப் பார்வைதான் நம்மிடத்திலே இருக்கிறது.

சில நேரங்களிலே அவர்களைத் துன்புறுத்தவும் செய்கிறார்கள் என்பதால் அவர்கள் கூட்டமாக சேர்ந்து வசித்து வருகிறார்கள். தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சில நேரங்களில் இந்த மாதிரி முறைகளை மேற்கொள்ளுகிறார்கள் என்பது உண்மை தான். ஆனால், சமுதாயத்தவர்கள் உரிய அங்கீ காரத்தைக் கொடுத்தால் அவர்கள் பாட்டுக்கு அமைதி யாக அவர்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொள் வார்கள்'' என்று அவன் பதில் சொல்வதுண்டு.

''உள்ளே வா'' என்று வரவேற்றார் ஜெயகோபால்.

உமாகாந்தன் உள்ளே போனான்.

''பெரிய ஓவியனாயிட்டே போல இருக்கு. கண் காட்சி எல்லாம் தடபுடல் பட்டுச்சாம், கேள்விப் பட்டேன் ''என்றார் ஜெயகோபால்.

''ஆமாம், எல்லாம் அண்ணனோட ஐடியாதான்.''

''உனக்கு மாதிரி அண்ணன் கிடைக்கணுமே'' என்றார் ஜெயகோபால்.

''அதுவே எனக்கு கவலையா போச்சு'' என்றான் உமாகாந்தன்.

''இதென்னப்பா அநியாயமா இருக்கு''. என்று ஜெயகோபால் கேட்க.

''எனக்கு ரொம்ப நல்ல அண்ணா வாச்சுட்டாரு அதுதான் எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு. ஏன்னா

வருத்தப்பட்டு பாரம் சுமக்கற மாதிரி என்னை சுமக்கறாரோ அப்படின்னு நினைக்கிறேன்.''

ஜெயகோபால் அவனை விசித்திரமாகப் பார்த்தார்.

''அவரவருக்கு அவரவருடைய நியாயம். உன்னோட நியாயம் உனக்குச் சரியா இருக்கலாம்'' என்று சொல்லி அந்த நேரத்திலே அவனுக்கு ஆறுதல் கொடுத்தார்.

வந்தவுடனேயே அறிவுரை சொன்னாலும். வந்த வுடனேயே சத்யபிரகாஷ் பக்கத்தினுடைய நியாயத்தைச் சொன்னாலோ இவன் மறுபடியும் மூட்டையை கட்டிக் கொண்டு கிளம்பி விட்டால் என்ன செய்வது என்ற கவலை ஜெயகோபாலுக்கு இருந்தது.

''சரிப்பா, சாப்பிட்டியா நாலு நாள் எங்கிருந்தே?'' என்று கேட்டார்.

''நாலு நாள்னு எப்படி கரெக்டா சொல்றீங்க?'' என்று கேட்டான் உமாகாந்தன்.

உளறி விட்டோம் என்று தெரிந்தது ஜெயகோ பாலுக்கு. ''உங்க அண்ணா போன் செஞ்சு விசாரிச் சாம்பா''. என்றார்.

''நினைச்சேன் அதுவும் நல்லதா போச்சு. நான் இங்க வரலைன்னு திருப்தியா இருப்பாரு. கரெக்டா நான் இங்க செட்டில் ஆயிட்டேன்'' என்றான்.

''அது இருக்கட்டும் நீ சாப்பிட்டியா இல்லையா?'' என்றார்''

சாப்பிட்டேன்'' என்றான் உமாகாந்தன்.

"முகத்திலேயே எழுதி ஒட்டியிருக்கு சாப்பிட லைன்னு. சரி வா ரெண்டு பேரும் வெளிய போய் சாப்பிட்டுட்டு வரலாம்" என்று அழைத்துக் கொண்டு போனார்.

போகும் போதே "நாலு நாள் எங்கப்பா இருந்தே" என்றார்.

"சேலத்திலே" என்றான் உமகாந்தன்.

கொஞ்சம் திடுக்கிட்டுப் போய் பார்த்தார். "தனியாவா இருந்தே?" என்றார்.

"அதை ஏன் கேட்கறீங்க, ஒட்டல்ல தங்கினேன்," என்று சங்கடப்பட்டவன் போல ஜெயகோபாலைப் பார்க்க 'சொல்லு' என்றார் ஜெயகோபால்.

"ஐய்யய்யோ கொஞ்சம் அசந்தா வேட்டு வச்சுரு வானுங்க போல இருக்கே" என்றான் உமாகாந்தன்.

"இப்பதானே முதல் அனுபவம் ஆயிருக்கு" என்றான் ஜெயகோபால்.

"என்னண்ணா கிண்டலா?" என்றான்

"இல்லைப்பா. வெளி உலகம் இப்படித்தான் இருக்கு. அதைச் சொன்னேன்" என்றார் ஜெயகோபால்.

சாப்பிடும் போது பொதுப்படையாக பேசினார்.

என்ன பண்ணப் போறே எப்படி இருக்கப் போறே என்று அப்போதைக்கு கேட்கவில்லை ஜெயகோபால்.

சாப்பிட்டு விட்டு வந்ததற்குப் பிறகு தன் தங்குமிடமாக இருந்த அந்தப் பெரிய ஹால் போன்ற

அறையில் இருந்த இன்னொரு கட்டிலில் அவனுக்கு தங்குவதற்கு வசதி செய்து கொடுத்துவிட்டு அந்தப் பக்கமாக இருந்த கட்டிலில் படுத்தார் ஜெயகோபால்.

"ஐயோ என்னண்ணா சென்னை இந்தப் பொங்கு பொங்குது" என்றான் உமாகாந்தன்.

"கோயமுத்தூர் சொர்க்கம்பா. கோயமுத்தூர் சிறுவாணித் தண்ணியும் வெதரும் பழகினவங்களுக்கு வேற ஊர் பிடிக்காது" என்றான் ஜெயகேபால்.

"அது என்னமோ நிஜம்தாண்ணா?" என்றவன். "தாங்க்ஸ் அண்ணா" என்றான்.

"எதுக்கு?"என்றான் ஜெயகோபால்.

"வந்த உடனேயே எங்கே திட்டுவீங்களோ? கோபப்படுவீங்களோ? அப்படின்னு நினைச்சேன்."

"நீ என்னப்பா சின்னக் குழந்தையா? வளர்ந்த பையன் உனக்குன்னு சில ஐடியாஸ் இருக்கு. கைவசம் ஒரு கலையை வேற வச்சிருக்கே, ஏதோ ஒரு முடிவோடதானே வெளியே வந்திருப்பே, அதனால தான் நான் ஒண்ணும் பேசலை" என்றான் ஜெய கோபால்.

நேரடியாக இல்லாமல் மறைமுகமாக என்ன திட்டம் வைத்திருக்கிறாய் என்று அவர் கேட்கிறார் என்பது உமாகாந்தனுக்குப் புரிந்தது.

"பெருசா ஒண்ணும் திட்டம் இல்லைண்ணா? ஆனா, தனியா நான் இருக்கறதுக்குப் பழகிக்கணும் யாருக்கும் தொந்தரவு இல்லாமல் இருக்க பழகிக்கணும்.

அதுதான் பார்க்கறேன். அதுக்கு என்ன செய்யணுமோ ஐடியா கொடுங்க'' என்றான் உமாகாந்தன்.

ஜெயகோபால் மறுபடியும் ஒரு பெருமூச்சு விட்டார். சற்று மௌனம் ஆனார்.

''என்னண்ணே ஒண்ணும் பேச மாட்டேங்கறீங்க?'' என்றான் உமாகாந்தன்

''சட்டுன்னு பேசற விஷய மாப்பா இது. நீ சட்டுன்னு முடிவெடுத்துக் கிளம் பிட்டே.''

''இல்லைண்ணா நான் விவரம் எல்லாம் அப்புறம் உங்களுக்குச் சொல்றேன். எனக்காக எனக்காகன்னுட்டு அண்ணன் தன்னுடைய ஆசைகளை எல்லாம் கொன்னுக்கற மாதிரி எனக்குத் தோணுது. எனக்கு மூச்சு முட்டறமாதிரி தோணுது'' என்றான் உமாகாந்தன்.

''அதுவும் ஒரு வகையில கரெக்ட்தான்'' என்றார் ஜெயகோபால்.

''சரிங்க இப்ப என்ன செய்யலாம்?'' என்றான் உமாகாந்தன்.

''ஒண்ணு செய்யலாம், உமா, வெளி உலகம் பார்க்கலாம்'' என்றார்.

''அப்படின்னா?''

''வா, அப்படியே பாம்பே, பூனா, டெல்லி, எல்லாம் டிரெயின்ல போய் ஒரு ரவுண்டு அடிச்சுட்டு வரலாம், உனக்கும் உலகம் பார்த்த மாதிரி இருக்குமில்லே'' என்றார்.

''இப்ப இது ரொம்ப அவசியமா?'' என்றான் உமாகாந்தன்.

''உனக்கு அவசியம் இல்லைடா? எனக்கு அவசியம். ஏன்னா நான் ஒரு கட்டுரை எழுதியாகணும். தனியா போகணும்னு நினைச்சுட்டிருந்தேன். நல்ல வேளையாக நீ வந்தே. ஒரு டூர் போயிட்டு வரலாம் வா.'' என்றான்.

உமாகாந்தனுக்கும் அது நல்ல ஐடியாவாகப் பட்டது. ''டூர்ன்னா எப்படிண்ணா? என்று கேட்டான்.

''எல்லாம் நம்ம வர்க்கத்தையெல்லாம் போய் ஒரு பார்வை பார்த்துட்டு வரலாம் வா''.

இப்படித்தான் கிளம்பி புகை வண்டியேறி விட்டார்கள்.

தன்னை வாஞ்சையாக பார்த்துக் கொண்டிருந்த ஜெயகோபாலை பார்த்து புன்னகைத்தான் உமா காந்தன்.

''வா மகனே வா!, இனிமேல் தான் இருக்கு உனக்கு அனுபவம் எல்லாம்'' என்று உள்ளூர சிரித்துக் கொண்டார் ஜெயகோபால்.

அத்தியாயம் - 7

''வாழ்த்துக்கள் மிஸ்டர் சத்யபிரகாஷ். உங்களை மாதிரி பெரிய வாடிக்கையாளர்கள் கிடைச்சது ரொம்ப சந்தோஷம்,'' என்றார் பேங்க் மேனஜர்,

சம்பத் குமாரைப் பார்த்து புன்னகைத்தார்.

அதுதான் பார்க்கறேன். அதுக்கு என்ன செய்யணுமோ ஐடியா கொடுங்க'' என்றான் உமாகாந்தன்.

ஜெயகோபால் மறுபடியும் ஒரு பெருமூச்சு விட்டார். சற்று மௌனம் ஆனார்.

''என்னண்ணே ஒண்ணும் பேச மாட்டேங்கறீங்க?'' என்றான் உமாகாந்தன்

''சட்டுன்னு பேசற விஷய மாப்பா இது. நீ சட்டுன்னு முடிவெடுத்துக் கிளம் பிட்டே.''

''இல்லைண்ணா நான் விவரம் எல்லாம் அப்புறம் உங்களுக்குச் சொல்றேன். எனக்காக எனக்காகன்னுட்டு அண்ணன் தன்னுடைய ஆசைகளை எல்லாம் கொன்னுக்கற மாதிரி எனக்குத் தோணுது. எனக்கு மூச்சு முட்டறமாதிரி தோணுது'' என்றான் உமாகாந்தன்.

''அதுவும் ஒரு வகையில கரெக்ட்தான்'' என்றார் ஜெயகோபால்.

''சரிங்க இப்ப என்ன செய்யலாம்?'' என்றான் உமாகாந்தன்.

''ஒண்ணு செய்யலாம், உமா, வெளி உலகம் பார்க்கலாம்'' என்றார்.

''அப்படின்னா?''

''வா, அப்படியே பாம்பே, பூனா, டெல்லி, எல்லாம் டிரெயின்ல போய் ஒரு ரவுண்டு அடிச்சுட்டு வரலாம், உனக்கும் உலகம் பார்த்த மாதிரி இருக்குமில்லே'' என்றார்.

''இப்ப இது ரொம்ப அவசியமா?'' என்றான் உமாகாந்தன்.

''உனக்கு அவசியம் இல்லைடா? எனக்கு அவசியம். ஏன்னா நான் ஒரு கட்டுரை எழுதியாகணும். தனியா போகணும்னு நினைச்சுட்டிருந்தேன். நல்ல வேளையாக நீ வந்தே. ஒரு டூர் போயிட்டு வரலாம் வா.'' என்றான்.

உமாகாந்தனுக்கும் அது நல்ல ஐடியாவாகப் பட்டது. ''டூர்ன்னா எப்படிண்ணா? என்று கேட்டான்.

''எல்லாம் நம்ம வர்க்கத்தையெல்லாம் போய் ஒரு பார்வை பார்த்துட்டு வரலாம் வா''.

இப்படித்தான் கிளம்பி புகை வண்டியேறி விட்டார்கள்.

தன்னை வாஞ்சையாக பார்த்துக் கொண்டிருந்த ஜெயகோபாலை பார்த்து புன்னகைத்தான் உமா காந்தன்.

''வா மகனே வா!, இனிமேல் தான் இருக்கு உனக்கு அனுபவம் எல்லாம்'' என்று உள்ளூர சிரித்துக் கொண்டார் ஜெயகோபால்.

அத்தியாயம் - 7

''வாழ்த்துக்கள் மிஸ்டர் சத்யபிரகாஷ். உங்களை மாதிரி பெரிய வாடிக்கையாளர்கள் கிடைச்சது ரொம்ப சந்தோஷம்,'' என்றார் பேங்க் மேனஜர்,

சம்பத் குமாரைப் பார்த்து புன்னகைத்தார்.

"பரவாயில்லை சார் நீங்க! இப்படி ஒரு வாடிக்கை யாளரை கூட்டிட்டு வந்திருக்கீங்க. உங்களுக்கும் அது ஒரு பெரிய ப்ளஸ் பாயிண்ட் தான்" என்றார் மேனேஜர்.

அவன் புன்னகைத்து விட்டு "ரெண்டு பக்கமும் ஹெல்ப் தானே! அதுக்காகத்தான்" என்றான்.

சம்பத் குமாரின் முகத்தில் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது.

செக்கை வாங்கிக் கொண்டு வெளியே வந்தார்கள். "கங்கராஜுலேஷன்பா" என்று சத்ய பிரகாஷினுடைய கையைப் பிடித்துக் கொண்டு குலுக்கோ குலுக்கென்று குலுக்கினான் சம்பத்குமார்.

சத்ய பிரகாஷ் முகத்திலும் மகிழ்ச்சிதான். மனத் திலும் மகிழ்ச்சிதான். ஆனால் ஏனோ அந்த மகிழ்ச்சி முழுமையாக இல்லாதது போல இருந்தான்.

"என்னப்பா திருப்தி ஆச்சா?" என்றான் சம்பத் குமார்.

"இல்லப்பா, இவ்வளவு பெரிய தொகை கிடைச் சிருக்கு ஆனா இது கடன் தானே" என்றான் சத்யபிரகாஷ்.

"அட ராகவேந்திரா!" என்று தலையிலே கையை வைத்துக் கொண்டான் சம்பத் குமார்.

"இது என்ன ரியாக்ஷன்" என்றான் சத்ய பிரகாஷ்.

"ஏம்பா, அவனவன் ஒரு லட்சம் ரூபாய் லோன் வாங்கறதுக்கு படாத பாடு படறான். உனக்கு கோடிக் கணக்குல பேங்கல இருந்து வாங்கிக் கொடுத்திருக்கு. நீ என்ன இவ்வளவு யோசிக்கிறே?" என்றான்.

"இல்லை, ஒழுங்கா திருப்பிச் செலுத்தணுமே அப்படின்னு ஒரு கவலைதான்."

"அது உண்மைதான், ஆனால் பெரிய பிரச்சினை இல்லைப்பா. ஆனா அச்சுல, ஆகாட்டி மொடாவுலம் பாங்க. அந்த மாதிரி ஒழுங்கா கட்ட முடிஞ்சா உனக்கு சொத்து கிடைக்குது.

இல்லைன்னா நல்ல விலை வரும் போது ரீ சேல் பண்ணிட்டு போக வேண்டியதுதான்" என்றான் சம்பத்குமார் பிரகாஷ். உடனே சம்பத் குமார் "இப்படிச் சொல்றேன்றதுனால விக்கணும்னு நினைக் காதே. முடிஞ்ச வரைக்கும் அந்தச் சொத்தை பாது காக்கப் பாரு.

ஒண்ணும் இல்லைப்பா அங்கே விட்டு வாடகையே நாற்பது அம்பது ரூபாய்க்கு வருது. அவுட் ஹவுஸ் ரெடி பண்ணி அதையும் ஒரு வாடகைக்கு விடு. நியே முப்பதாயிரம் முப்பத்தைந்தாயிரம் வாடகை கொடுத் துட்டு இருக்கறே. எல்லாத்தையும் சேர்த்தேன்னா ஒன் லாக் சேர்த்து கட்டிடலாம்.அதுக்கு மேல எவ்வளவு முடியுமோ? கிடைக்கிற தொகையெல்லாம் கட்டிட்டு இருந்தேன்னா ரொம்ப நல்லது. எந்தெந்த விதத்துல சிக்கனமா இருக்க முடியுமோ எவ்வளவு தொகை எடுத்து கொடுக்க முடியுமோ? அப்படி கொடுக்கறது ரொம்ப நல்லது" என்றான் சம்பத்குமார்.

இருவரும் மகிழ்ச்சியாக பேசிக்கொண்டு வெளியிலே வந்தார்கள். வேலையெல்லாம் முடிவதற்கு கிட்டத் தட்ட பிற்பகல் ஆகி விட்டது.

"சரிப்பா சாப்பிடலாம்" என்றான் சத்ய பிரகாஷ்.

"ஆமாம். இங்கே பக்கத்துல நல்ல ஓட்டல்ல எதுலயாவது சாப்பிட்டுக்கலாம்பா" என்று அவனுக்கு ஒரு புது விருந்து கொடுப்பது போல ஒரு பெரிய ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று உணவு வாங்கிக் கொடுத்தான் சத்யபிரகாஷ்.

மெதுவாக தங்களுடைய சொந்த விஷயங்களை பேச ஆரம்பித்தார்கள். "ஏம்பா உமா கிட்ட இருந்து ஏதாவது தகவல் வந்துச்சா" என்று கேட்டான் சம்பத் குமார்.

"ஒண்ணும் தகவல் வரலை. நோ நியூஸ் இஸ் குட் நியூஸ்ன்னு சொல்லுவாங்க. அது மாதிரி சேஃபா இருக்கான்னு நினைக்கிறேன். வேற ஏதாவது பிரச்சினையா இருந்தா உடனடியா என்னைத்தான் காண்டாக்ட் பண்ணியிருப்பான். என்னை விட்டா அவனுக்கு யாரு?" என்றான் சத்யபிரகாஷ்.

"அப்படி நீ நினைக்கறதுதான் ஒருவேளை தப்போ என்னமோ? அதனாலதான் உலகம் தெரிஞ்சுக்கலாம்னு கிளம்பிட்டான்" என்றான் சம்பத் குமார்.

பிறகு "நான் சொன்னதை யோசிச்சியா" என்றான்,

" எதைப்பத்தி" என்றான் சத்யபிரகாஷ்

"இல்லை, மைதிலிக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிடலாமே அதை ஆரம்பிச்சாலே அம்மா, அப்பாவுக்கு மனசு லேசாப் போயிடும். கொஞ்சம் சந்தோஷமா ஆயிடுவாங்க" என்றான்.

"அதுசரிதாம்பா, எத்தனை மாப்பிள்ளை வந்து வரிசையா நிக்குது" என்றான் சத்யபிரகாஷ்.

"நீங்க பார்த்தாதானேப்பா நிக்கும். நீங்க பார்க்கவே இல்லை. அதுக்குள்ள எப்படி வந்து வரிசையா நிற்பாங்க" என்றான் சம்பத்குமார்.

"சரி, நான் இன்னொரு இரண்டு நாள்ள அம்மா, அப்பாகிட்ட பேசிடறேன். அவங்க ஓ.கே. பண்ணிட்டாங்கன்னா மைதிலியோட கல்யாண விஷயம் ஆரம்பிச்சுடலாம்" என்றான்.

"அதை முதல்ல செய்ப்பா, உனக்கே மைண்ட் சேஞ்ச் வரும் பாரு" என்றான் சம்பத் குமார்.

பிறகு "ரொம்ப தாங்க்ஸ் சம்பத். எல்லா விதத்துலயும் கை கொடுக்கறே. இதை நான் மறக்கவே மாட்டேன்" என்றான்.

"என்னப்பா கை கொடுக்கறது பத்து நாள் ஆச்சு, இன்னமும் உமா எங்க இருக்கான் என்று கண்டு பிடிக்க முடியலையே" என்றான் சம்பத்.

"பரவாயில்லைப்பா, அதைப் பத்தி இப்பவே கவலைப்பட வேண்டாம். எல்லா இடத்துலயும் சொல்லி வச்சிருக்கிறேன். எனக்கு தெரிஞ்ச வட்டாரத்துல அவன் எங்க போனாலும் எனக்கு உடனே தகவல் வந்துடும்."

"அப்படியே இல்லைன்னா கூட நேத்து அவனுடைய அக்கவுண்ட்ல ஒரு பத்தாயிரம் போட்டிருக்கேன்.

அவனுக்கு ஏதாவது செலவுக்கு வேணும்னா கூட எடுத்துக்கலாம். அக்கவுண்ட்ல போடற ஃபெசிலிட்டி வந்துடுச்சுல்ல நாம அப்பப்ப பணம் போட்டு வச்சுடலாம். பணம் இருந்தா ஓரளவு சமாளிச்சுடலாம்'' என்றான் சத்யபிரகாஷ்.

''அது உண்மைதாம்பா'' என்றான் சம்பத்.

''சரிப்பா. நான் கிளம்பறேன். நீ பத்திரமா இந்த செக்கைக் கொண்டு போய் டெப்பாசிட் பண்ணிடு உன்னோட அக்கவுண்டுல. எப்படியும் ஃபுல் டே லீவு போட்டுட்டேன். எனக்கு வேற ஒரு வேலை இருக்கு. அதை முடிச்சுட்டு நான் வீட்டுல போய் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கறேன்'' என்றான் சம்பத் குமார்.

''இரு இரு ,நான் வந்து உன்னை ட்ராப் பண்றேன்'' என்றான் சத்ய பிரகாஷ்

''இல்லை இல்லை ,வேண்டாம் இங்க பக்கத்துல ஒரு ஃப்ரெண்ட் இருக்கான், அவனைப் பாத்துட்டு அவன் வண்டியை எடுத்துட்டுப் போயிக்கிறேன், நீ போய்க்கோ'' என்றான்.

சத்ய பிரகாஷ் தன்னுடைய வங்கிக்கு சென்று அந்தச் செக்கை டெபாசிட் செய்து விட்டு, எப்பொழுது சபாநாயகத்தை வரச் சொல்லலாம். எப்பொழுது இடத்தினுடைய ஒரு பகுதிக்கு மட்டும் ரிஜிஸ்ட் ரேஷனை வைத்துக் கொள்ளலாம் என்று யோசித்துக் கொண்டே தன்னுடைய அலுவலகத்திற்கு போய் சேர்ந்தான்.

போய் சேர்ந்ததற்குப் பிறகுதான் அவனுக்கு தோன்றியது 'இவ்வளவு பெரிய விஷயம் நடந்திருக் கிறது. இதில் ஏனோ தனக்கு முழுமையான மகிழ்ச்சி இல்லை. இதற்கு காரணம் என்ன? இந்த விஷயத்தை தொடங்கும் போது உமாகாந்தன் நம்மோடு இருந்தான்.

ஆனால், இப்பொழுது உமாகாந்தன் கூட இல்லை. இது ஒரு காரணமாக இருக்குமோ? என்று எண்ணினான்.

இதுவும் ஒரு காரணம்தான். ஆனால், வேறு என்னமோ இருக்கிறது' என்று அவனுடைய மனசு சொன்னது.

மோவாய்க்கட்டையை நீவிக் கொண்டே யோசித்துப் பார்த்தான்.

உமாகாந்தன் போன அன்றைக்கு நடந்த விஷயங்களை கங்காம்மா சொன்னதற்குப் பிறகு ஒரே ஒரு முறை தான் வந்தாள் ஏழிசை வல்லபி.

கடந்த ஏழெட்டு நாட்களாக ஏழிசை வல்லபியை சந்திக்க முடியவில்லை. இப்பொழுது விஷயம் அவனுக்குப் புரிந்தது. ஏழிசை வல்லபியை சந்திக்க முடியவில்லை என்பதுதான் தன்னுடைய மனக் குறையாக இருக்கிறது என்பது அவனுக்குப் புரிந்து போனது.

ஒரு தரம் அதிர்ந்து போனான்.

திகைத்துப் போனான்.

உடனே அவனுடைய இன்னொரு மனது சொல்லியது. "ரொம்பவும் ஒண்ணு அலட்டிக்காதே, ஷி இஸ் எ குட் ஃபிரண்ட். அதனால தான் வரலை யேன்னு நினைச்சுக்கறே அவ்வளவுதான்" என்று அவனைத் தேற்றியது.

அவன் என்ன சமாதானம் சொல்லிக் கொண்டாலும். அவனுடைய ஆழ்மனது 'ஏழிசை வல்லபியை பார்க்காமல் கொஞ்சம் ஏங்கித்தான் போனோம்' என்பதை ஒத்துக் கொண்டது.

'ஏன் ஏழிசை வல்லபி, இன்றைக்குக் காலையிலே வந்து விட்டு வீட்டுக்குள்ளே கூட வராமல் போனாள்? அவளுக்கு ஏதோ கோபம் இருக்கிறதோ?'

அந்த ஒரு வாரமும் வந்து தனக்கு உதவி செய்து விட்டுப் போனவள், இந்த நான்கைந்து நாட்களாக ஏனோ ஒடி ஒளிகிறாற்போல ஒளிந்து கொள்கிறாளே ஏன்?

இப்படி எண்ணம் அவளுக்கு தோன்றுவதற்கு காரணம் இருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்பாக அவன் அவளைத் தொடர்பு கொள்ள முயற்சி செய்தான் செல்ஃபோனில்.

ஏழிசை வல்லபி கிடைக்கவில்லை. இந்த எண்ணம் தோன்றியவுடனே அவனுக்கு அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. தன்னுடைய செல்போனை எடுத்தான். நேரத்தைப் பார்த்தான்.

நாலரை மணிக்கு மேல் ஆகி இருந்தது.

பள்ளி நேரம் முடிந்து விட்டது என்பதனால் துணிவாக செல்ஃபோனுக்கு அடித்தான்.

அந்தப்புறத்தில் இருந்து ஏழிசை வல்லபியின் குரல் கேட்டது. "ஹலோ!" என்று அந்த இனிமையான குரல் அவன் காதுகளில் தேனிசையாக பாய்ந்தது.

இந்தப் பக்கம் உணர்வு மயமானான். சத்ய பிரகாஷ் "இசை" என்றான் ஆர்வத்துடன்.

அந்தப் பக்கம் ஒரு கணம் மௌனம் நிலவியது.

அவள் தன்னைத் தானே தயார்படுத்திக் கொண்டாளோ என்னவோ?

அந்த ஒரு நிமிடத்திற்குப் பிறகு தான் பேசினாள். "சொல்லுங்க சத்யா" என்றாள்.

"இசை ஏன் பேச மாட்டேங்கறீங்க?" என்றான்.

அவள் தயக்கத்துடன் "இல்லை, ஸ்கூல் வராண்டாவில் நடந்துட்டிருந்தேன். இப்பதான் ஓரமா வந்தேன், சொல்லுங்க" என்றாள்.

"இசை, இன்னைக்கு என்ன நடந்துச்சு தெரியுமா? செக் வாங்கிட்டேன். இந்த பில்டிங் ஒ.டி. போட்டோம் இல்லையா? அந்த செக் வாங்கிட்டேன்" என்றான்.

"ரியலி" என்று மகிழ்ச்சியானாள் இசை.

"ஒரு விஷயம் தெரியுமா? செக்கை வாங்கி பேங்க்ல போட்டதுக்கு அப்புறம் இதை நான் முதல் முதல்ல உங்கிட்டதான் சொல்றேன்" என்றான்.

அப்படிச் சொல்லும் போதுதான் அவனுக்கே அது உறைத்தது.

'அட ஆமா, அம்மா அப்பாவுக்கு கூட ஃபோன் பண்ணிச் சொல்லலை. முதல் முதல்ல ஏழிசைகிட்ட தானே சொல்றோம்' என்று தோன்றியது.

"அப்படியா? ரொம்ப தேங்க்ஸ்" என்றாள்.

"எதுக்கு?" என்றான் அவன்.

"இல்லை, இப்படி ஒரு கௌரவத்தை எனக்குக் கொடுத்தீங்களே, அதுக்காக" என்றாள் ஏழிசை வல்லபி.

"அது இருக்கட்டும். எங்கே நாலு நாளா சத்தத்தைக் காணோம்" என்றான் சத்யபிரகாஷ்.

"ஏன் நான் கூப்பிடலைன்னா நீங்க கூப்பிடக் கூடாதா?" என்றாள்.

"கூப்பிட்டேனே. எடுத்துப் பாரு. நேத்து மிஸ்ட் கால் இருக்கும். முந்தா நேத்து மிஸ்ட் கால் இருக்கும்" என்றான் சத்ய பிரகாஷ்.

ஏழிசை வல்லபிக்கு அது தெரிந்துதான் இருந்தது. "ஓ அப்படியா? இல்லை. இங்க ஸ்கூல்ல ஒரு பிரச்சினை அதனால நான் செல்லை ஆஃப் பண்ணி வச்சுட்டேன்" என்றாள்.

"என்னவோ ஒரு காரணம் சொல்லு.ஆனா, ஆனா என்று இழுத்ததும். குரலைத் தழைத்துக் கொண்டு "ஏன் இசை என் மேல ஏதாவது கோபமா?" என்றான்.

அவள் சற்று திணறினாற்போல திணறி விட்டு. "இல்லை அப்படியெல்லாம் இல்லை" என்றாள்.

"ப்ளீஸ் இசை, இந்த நேரத்துல நீ கோபப்பட்டீன்னா என்னால தாங்க முடியாது. எதுவாயிருந்தாலும் சண்டை வேணாலும் போட்டு. ஆனா உங்கிட்ட என்னால பேசாம இருக்க முடியாது. இப்ப சரின்னு சொல்லு நான் ஸ்கூலுக்கு வரேன்" என்றான்.

"ஐய்யய்யோ வேண்டாம்" என்று பதறினாள்.

"அப்ப எப்ப பார்க்கலாம்?" என்றான்.

"இப்ப ஸ்கூல் டைம் முடிஞ்சிடுச்சு, நாளைக்கு எதாவது ஒரு நேரம் வரட்டுமா? நாளைக்கு ஸ்கூல் லீவு" என்றாள்.

"அதெல்லாம் முடியாது இப்ப ஆஃப் அன் அவர்ல இங்க வா, இல்லைன்னா எங்கேயாவது எக்குத் தப்பா நானே வந்து நிப்பேன்."

அவள் தன்னை மறந்து மகிழ்ச்சியாக சிரித்தாள். "அப்படியெல்லாம் செஞ்சுடாதீங்க நானே வர்றேன்" என்றாள்.

இரண்டு பேரும் மகிழ்ச்சியாக சிரித்துக் கொண்டே அவரவர்கள் செல்போனை ஆஃப் செய்த அந்த நேரத்தில் அந்த உண்மை பளீரென்று இருவர் முகத்திலும் மோதி அறைந்தது.

அத்தியாயம் - 8

ஏழிசை வல்லபியின் டூ வீலர் தனது ஃப்ரஷ்னிங் சென்டரினுடைய எல்லைக்குள் வந்ததுமே சத்யபிர காஷிடமிருந்து ஒரு நிம்மதிப் பெருமூச்சு எழுந்தது.

அவள் அவனிடம் பேசி விட்டுப் ஃபோனை வைத்து ஒரு மணி நேரம் ஆகியிருக்கும்.

இடைவெளியில் அவன் ஒரே ஒரு காரியத்தைத் தான் செய்திருந்தான். தன்னுடைய வீட்டுக்குப் ஃபோன் செய்து அம்மா அப்பாவிடம் லோன் சேங்ஷன் ஆகிவிட்டதை சொன்னான்.

அதற்குப் பிறகு வேறு எந்த வேலையுமே அவனுக்கு ஓடவில்லை. எதைப் பற்றியும் ஆராய்ந்து பார்க்கவும் அவன் மனம் இடங்கொடுக்கவில்லை.

முழுமையாக ஏழிசை வல்லபியை பார்க்க வேண்டும் என்பதிலேயே அவன் மனம் லயித்துக் கிடந்தது. வந்துவிட்டாள்.

ஏழிசை வல்லபி வந்தே விட்டாள்.

இங்கிருந்தே 'ஹாய்' என்று கை ஆட்டினான். தன்னுடைய அலுவலக சேரில் அமர்ந்து கொண்டே.

அதே நேரத்தில் எதிர்பாராத விதமாக அவனுடைய வாடிக்கையாளர் ஒருவர் ஃபோன் செய்தார்.

கோபம் கோபமாக வந்தது. ஆனால், மிக முக்கியமான வாடிக்கையாளர்.

அவரைத் தவிர்ப்பது அவனுடைய தொழிலுக்கு உகந்ததல்ல என்பதால் எடுத்துப் பேசினான்.

வாய் என்னமோ அந்த வாடிக்கையாளருக்கு தகுந்தாற்போல் பதில் சொல்லிக் கொண்டிருந்தாலும். கண்கள் எல்லாம் நடந்து வந்து கொண்டிருந்த ஏழிசை வல்லபியின் மீதே பதிந்திருந்தது.

அவள் சற்று வேகமாக நடந்து வந்தாள்.

அவளுக்கும் எப்போதடா சத்யபிரகாஷிடம் பேசுவோம் என்பது போலிருந்தது போலும்.

முகம் மலர புன்னகைத்துக் கொண்டு அவனை நோக்கி வந்தாள். அவன் ஃடெலிபோனை பிடித்துக் கொண்டே எதிர் இருக்கையைக் காட்டினான்.

அவளும் அமர்ந்தாள்.

ஓரிரு நிமிடங்கள் பேசி முடித்ததற்குப் பிறகு அவளை ஆழ்ந்து பார்த்தான்.

''என்ன மேடம், ரொம்ப பிஸியா இருக்கீங்க போலிருக்கு'' என்றான்.

''நானா நீங்களா?'' என்றாள் அவள்.

''ஓகே ஓகே நாலு நாள் கழிச்சு பார்த்திருக்கோம். இப்ப இந்த சண்டையெல்லாம் வேண்டாம், நல்லதே பேசுவோம்'' என்றான்.

அவள் எப்போதும் அவன் தோளைக் குலுக்குவது போல் குலுக்கி விட்டு சிரித்தாள்.

''ம்... கிண்டல்?'' என்றான் அவன்.

''இல்லையே நானும் அப்பப்ப அந்த மாதிரி செய்வேன்.''

அவன் புன்னகைத்து விட்டு ''பாராட்டெல்லாம் ஒண்ணும் கிடையாதா?'' என்றான்.

''பாராட்டத்தான் நான் நேர்ல வந்துட்டேனே?. நீங்கதான் ஆக்சுவலா ட்ரீட் கொடுக்கணும்'' என்றாள் அவள்.

அவன் தலையைக் கோதிக்கொண்டு அந்த ரிவால்விங் சேரில் சாய்ந்து அமர்ந்தான். அவன் பார்வை ஒரு விதமாக அவள் மேல் பதிந்தது.

''ட்ரீட் கொடுக்கணும்தான். என்னமாதிரி ட்ரீட் வேணும். எங்க போகலாம் சொல்லு'' என்றான்.

''என்ன இப்பவே கூட்டிட்டுப் போய் ட்ரீட் கொடுத்துடுவீங்களாட்டம் இருக்கு.''

''ஆமா. நல்லதுன்னா அன்றே செய் இன்றே செய் என்றெல்லாம் பாட்டு இருக்கே. அதனால அதை இப்பவே செஞ்சுருவோம். சொல்லு என்ன மாதிரி ட்ரீட் வேணும்'' என்றான்.

அவள் சிரித்தாள்.

''நீங்கதான் சொல்லணும்'' என்றான்.

''சரி கிளம்பு, எந்த ஹோட்டல்ல போய் ட்ரீட் கொடுக்கணும். கொடுக்கறேன்'' என்றான்.

அவள் குறுக்கும் மறுக்குமாக தலையாட்டினாள்.

''சார்! ஒரு விஷயம் புரிஞ்சுக்கோங்க. நான் ஒரு பள்ளிக்கூடத்துல டீச்சரா இருக்கேன். உங்களை மாதிரி ஒரு யங்ஸ்டரோட அங்கேயும் இங்கேயும் நான் சுத்தினேன்னா அதைப் பார்த்துட்டு பசங்க...,!'' என்று இழுக்க.

''இரு, இரு, இரு, நீ டீச்சரா இருந்தா? உனக்கு சொந்தக் காரங்க இருக்க மாட்டாங்களா. கசின்ஸ் இருக்க மாட்டாங்களா, ஃப்ரெண்ட்ஸ் இருக்க மாட்டாங்களா'' என்று அடுக்கினான்.

''இருப்பாங்க, இருப்பாங்க'' என்றாள் அவள்

''இருந்தாலும் நினைச்ச இடங்களுக்கெல்லாம் போகக்கூடாதுல்லே.''

அவன் சிரித்துக் கொண்டான். ''இப்படியெல்லாம் தான் சில விஷயங்களை உருவாக்கி வச்சிருக்கீங்க. நீ பள்ளிக் கூடத்துல ஆசிரியை. நீ ஒழுக்கமான ஒரு வாழ்க்கை வாழணும்தான். ஆனா அதுக்காக எல்லாத்தையும் எல்லார்க்கிட்டயும் விளக்கம் சொல்லிக் கிட்டிருக்கணும்கற அவசியம் இல்லை.''

''ஓகே! ஓகே! இப்ப என்னவோ பெரிய ட்ரீட் கொடுக்கற மாதிரி பேச்சு நடக்குது'' என்றாள் அவள்.

''நிஜமா என்ன ட்ரீட் கேட்டாலும் நான் தருவேன். அவ்வளவு ஹாப்பி மூட்ல இருக்கேன். உமா மிஸ்ஸான மேட்டரை கூட மறந்துட்டேன்னா பார்த்துக்கயேன்'' என்றான்.

அவள் புன்னகைத்தாள் ''இல்லை, பரவாயில்லை உங்க சந்தோஷமே எனக்கு ட்ரீட் தான். இப்பப் பத்து நாளைக்குப் பிறகு இவ்வளவு சந்தோஷமா பாக்கறேனே. அதுவே எனக்கு பெரிய ட்ரீட் தான்'' என்றாள்.

''அப்படிப் போடு! செலவில்லாம முடிச்சுட்டே'' என்றான்.

அதற்குப் பிறகு குரலைத் தீவிரமாக்கிக் கொண்டு ''இசை, நான் ஒண்ணு கேட்பேன். நீ கோவிச்சுக்கக் கூடாது'' என்றான்.

''இல்லை கேளுங்க'' என்றாள்.

"நீ ஏன் நாலு நாளா வரலை.?"

"நான் வரலைன்னா என்ன? நீங்க வந்திருக்கலா மில்லே?" என்றாள் அவள்.

"இசை, நான் பர்ப்பஸா தான் வரலை. உங்க பேரண்ட்ஸ் இல்லை. உங்க அண்ணனும் இல்லாதப்ப நான் வந்தா நல்லாயிருக்காது ,அதனால தான் நான் வரலை."

"ஏன் அப்படி நினைக்கணும்? உங்க மனசு தெளிவா இருந்தா...?!" என்று இழுத்தாள்.

"அது வேற விஷயம். அதைத் தனியா வச்சுக்கு வோம்" என்றான் அவன்.

அந்த நேரத்தில் ஏழிசை வல்லபி எதையோ செல்லத் தயாரானவள் போல தொண்டையைச் செருமிக் கொண்டு தன்னைத் தயார் படுத்திக் கொண்டாள்.

"சத்யா, நமக்குள் ஏதோ ஒரு கண்ணாமூச்சி நடக்கற மாதிரி இருக்கு. நாம இதைப் பேசி கொஞ்சம் தெளிவு பண்ணிக்கலாமா? என்றாள் அவள்.

சட்டென்று சத்யபிரகாஷ் கையை உயர்த்தினான்.

"வேண்டாம் இசை எதுவுமே இப்போதைக்குப் பேச வேண்டாம்."

"உன்னோட நட்பு எனக்குத் தேவையா இருக்கு என்னோட நட்பு உனக்கு தேவையா இருக்கா அப்படிங்கறதை நீதான் சொல்லணும்."

"கண்டிப்பா! கண்டிப்பா!" என்று அவள் சொல்லும் போதே ஒரு தடுமாற்றம் அவளிடத்திலே ஏற்பட்டது.

"எனக்குத் தெரியும் இசை. உங்கிட்ட பேசணும். உன்னை தினம் பார்க்கணும். இப்படியெல்லாம் என் மனசுல தோணுது. ஆனா, உனக்குத் தெரியும் நான் என் குடும்பத்துக்குத்தான் ஃபர்ஸ்ட் பிரையாரிட்டி கொடுப்பேன். மைதிலி லைஃப்ல செட்டில் ஆகணும். உமா ஒரு தெளிவான முடிவுக்கு வரணும்."

.....!

"இது ரெண்டும் நடந்ததுக்கு அப்புறம் தான் நான் என்னைப் பத்தி யோசிக்க முடியும்.

.....!

அதுக்கு அப்புறம்தான் நமக்குள்ள உறவு என்னங் கறதைப் பத்தி யோசிக்கிற தைரியம் எனக்கு வரும்" என்றான்.

அவள் அவனை வாஞ்சையாக பார்த்தாள்.

"அப்போ யோசிக்க ஏதோ விஷயம் இருக்குன்னு ஒத்துக்கறீங்க" என்றாள்.

அவன் முகத்தில் மறுபடியும் தடுமாற்றம் தோன்றியது.

மேஜை மேல் இருந்த டேபிள் வெயிட்டை எடுத்து உருட்டினான்.

அவளை நேரடியாக பார்ப்பதைத் தவிர்த்தான்.

ஏழிசை வல்லபி குறும்பாகப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

ஓரிரு நிமிடங்கள் கழித்து தேறிக் கொண்டவனாக நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

"இப்ப நீ ஒரு கேள்வி கேட்கணும்?" என்றான்.

"என்ன கேள்வி?" என்றாள் அவள்.

"உங்க சைடைப் பத்தி மட்டும் பேசிட்டிருக்கீங்களே? என்னைப் பத்தி ஏதாவது கேட்க வேண்டாமான்னு" என்றான்.

அவள் கலகலவென்று சிரித்தாள்.

"ரொம்ப தடுமாறிட்டிருக்கீங்க இல்லை? தெளிவாகட்டும், அதுக்கப்புறம் கேட்கலாம்னு நினைச்சேன்?"

"இப்ப நான் கேட்டுட்டேன், நீ சொல்லு" என்றான்.

அவள் மறுபடியும் புன்னகைத்தாள்.

"நாம ரெண்டு பேருமே சின்னக் குழந்தைங்க இல்லை. லெட் அஸ் அக்ஸப்ட், நமக்குள்ளே ஒரு அட்ராக்ஷன் இருக்குங்கறதை ஏத்துக்கலாம். ஆனால், அது அடுத்த படியா போகணுமா? போகக்கூடாதா என்று தீர்மானிக்கறது நீங்கதான்" என்றாள்.

"அப்படின்னா?" என்றான் அவன்.

"என் பக்கத்துல நான் ஓரளவுக்கு தெளிவாதான் இருக்கேன்" என்றாள்.

"இசை!" என்று அவன் அதிர்ந்து போனான்.

"இதில் அதிர்ந்து போறதுக்கு ஒண்ணுமே இல்லை. நான் எங்க பள்ளிக்கூடத்துல எத்தனையோ பிரச்சினைகளை டீல் பண்ணியிருக்கேன். ஐ நோ தி டிஃபரண்ஸ் பிட்வீன் இன்ஃபாச்சுவேஷன் அன்ட் ரியல் அஃபெக்ஷன், இப்ப கூட பாருங்க, நான் அஃபெக்ஷன்ங்கிற வார்த்தையைத் தான் யூஸ் பண்றேன். நீங்க தெளிவாகுங்க, அதுக்கப்புறம் முடிவு பண்ணிக்கலாம்" என்றாள்.

"இசை எங்க குடும்பம் ..உமா," என்று இழுக்க...

"ப்ளீஸ், ப்ளீஸ் திரும்பத் திரும்ப இதையே சொல்லாதீங்க. இதெல்லாம் எனக்குத் தெரியும்."

"இல்லை, நாம இந்தப் பேச்சை ஆரம்பிக்கப் போய் நம்ம ரெண்டு குடும்பத்துக்குல இருக்கற உறவு உடைஞ்சுடக்கூடாது என்ற பயமும் எனக்கு இருக்கு" என்றான் சத்ய பிரகாஷ்.

"அதை அப்புறம் பார்த்துக்கலாம். அதைப் பத்தி ஏன் இப்ப நீங்க கவலைப்படறீங்க."

"முதல்ல இதுதான் விஷயம் அப்படின்ற முடிவுக்கு நாம வரலாம். இப்போதைக்கு நீங்க அதுக்கே டைம் கேக்கறீங்க. ஓகே டேக் யுவர் டைம். நானும் அதுக்குள்ள தெளிவு பண்ணிக்கிறேன்" என்றாள்.

அவள் பேசிய விதத்தையும் அவள் கம்பீரத்தையும் அவள் தெளிவையும் பார்த்து சத்யபிரகாஷ் ஒரு கணம் அசந்து போனான்.

"யு ஆர் எ கிரேட் லேடி!" என்றான்.

"ஓகே! ஓகே! ஐஸ் எல்லாம் ஒண்ணும் வைக்க வேண்டாம். நீங்க ரொம்ப குழம்பியிருக்கீங்க. நீங்க ஒரு முடிவுக்கு வாங்க. நீங்க..." என்று ஏதோ ஆரம்பித்தாள்.

பிறகு "இப்ப வேண்டாம்!" என்று நிறுத்திக் கொண்டாள்.

"இல்லை சொல்லு" என்றான்.

"இல்லை, ஒவ்வொருவருக்கும் இன்டிவிஜுவல் லைஃப்னு இருக்கு. எனக்கு என்னமோ நீங்க இந்த மாதிரி பிடிவாதம் பிடிக்கறதுனாலதான் உமா கில்டியா ஃபீல் பண்றாருன்னு நினைக்கறேன்."

"இருக்கலாம், அவன் தான் மூச்சு முட்டுதுங் கறானே" என்றான்.

"ஆமா, நீங்க ஓரளவுக்கு தெளிவாயிட்டு" என்று மறுபடியும் சொல்ல "அதுக்குத்தான் நான் டைம் கேட்கறேனே" என்றான்.

"ஓகே! நீங்க டைம் எடுத்துக்கோங்க. அது வரைக்கும் நாம நண்பர்கள் மட்டுமே. வி ஆர் ஃப்ரெண்ட்ஸ்" என்றாள்.

அவன் சட்டென்று சிரித்தான்.

"அது கொஞ்சம் கஷ்டம்தான்னு நினைக்கிறேன்" என்றான்.

அவள் அதிர்ச்சியாக பார்க்க, "இல்லை இந்த மாதிரி ரிலேஷன்ஷிப் இருக்கறதுல ஒரு சின்னக் கோடுதான் இடையிலே. ஒரு மெல்லிய கோடு அப்படின்னு சொல்றாங்க. அதைத் தாண்டக் கூடாதுங்கற ஒரு பயத்துலயே இருக்கோம்" என்றான் அவன்.

"அப்படியெல்லாம் இல்லை. யு கேன் பி ஃப்ரீ" என்றாள் ஏழிசை வல்லபி.

அந்தக் கணத்தில் ஏழிசை வல்லபி ஒரு முடிவிலே இருக்கிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது.

அவன் ஒரு பெருமூச்சு விட்டு விட்டுச் சொன்னான்.

"இசை, இதுக்கு எத்தனை டைம் பிடிக்கும்னு தெரியாது. இப்படி ஒரு உடன் பாட்டுக்கு வந்துட்டு நீயும் உன் லைஃபை ...,!"என்று இழுத்தான்.

இப்போது ஏழிசை வல்லபி கையை உயர்த்தினாள். "பிளட்டானிக லவ்ன்னு ஒண்ணு இருக்கு கேள்விப் பட்டிருக்கீங்களா" என்று கேட்க நினைத்தாள். கேட்கவில்லை,.

அவன் அவளை ஆழ்ந்து பார்த்தான்.

"எஸ். நீங்க நீங்களா உங்க இடத்துல உங்க கடமையைச் செய்ங்க நான் நானா என் இடத்துல என் கடமையைச் செஞ்சுட்டிருக்கேன். மத்தது எல்லாத் தையும் காலத்தின் கையில விட்டுடுவோம். லெட் அஸ் பி ஃப்ரெண்ட்ஸ் .ஃபிரீயா இருங்க, எஞ்ஜாய் யுவர் லைஃப். எல்லாத்தையும் போட்டு குழப்பிக்காதீங்க" என்றாள்.

"ம்..." என்று அவன் உள்வாங்கிக் கொண்டான்.

"உமா இப்ப வெளியே போயிருக்கறது நல்ல விஷயம். அதுக்காக நீங்க ஓர்ரி பண்ண வேண்டாம். லெட் ஹிம் லர்ன் டு ஹேண்டில் திங்க்ஸ். முடியாதப்ப அவரு கண்டிப்பா வந்துடுவாரு."

"ஆமா இசை, எனக்கும் கூட அப்படித் தோண ஆரம்பிச்சுடுச்சு."

"சரி, இப்ப வேற விஷயத்துக்கு போவோமா?" என்றான் சிரித்துக் கொண்டே.

"என்ன விஷயம் ?"என்றாள் அவள்.

"இல்லை. உங்க பள்ளிக்கூடத்துல ஏதோ பிரச்சினைன்னு சொன்னியே? என்ன பிரச்சினை?" என்று ஆரம்பித்தான்.

"ஓகோ, உங்க பிரச்சினையை நான் காது கொடுத்துக் கேட்கறேனேன்னு என் பிரச்சினையை காது கொடுத்துக் கேட்கப் போறீங்களாக்கும்" என்றாள்.

"அப்படித்தான்னு வச்சுக்கயேன். சொல்லு" என்றான்.

சற்று நேரம் தன்னை அங்கே இருக்க வைப்பதற்காக இந்த நாடகம் ஆடுகிறான் என்பது ஏழிசை வல்லபிக்கு புரிந்தே இருந்தது.

அவளும் மும்முரமாக சொல்லுவது போல அந்த நாடகத்தை அவனோடு சேர்ந்து நடத்த ஆரம்பித்தாள்.

அத்தியாயம் - 9

இரண்டு கைகளையும் பின்னந் தலைக்கு அணையாக கொடுத்து விட்டம் பார்த்துப் படுத்துக் கொண்டிருந்தான் சத்ய பிரகாஷ்.

அவன் கண்களில் சிரிப்புத் தேங்கியிருந்தது.

உதடுகளில் புன்னகை மலர்ந்திருந்தது.

அன்றைக்கு ஏழிசை வல்லபி அவனுடைய அலுவலகத்திலே அமர்ந்து கொண்டு பேசிய விதம் அவன் நினைவுகளில் வந்து மோதியது.

அவ்வளவு உற்சாகத்துடன் அவ்வளவு விதவிதமான முகபாவங்களுடன் அவள் பேசிய விதம் ரசனைக்குரிய தாக இருந்தது.

ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் சத்ய பிரகாஷ்.

இரண்டு நாள் என்னதான் நடந்தது என்று கேட்ட போது நடந்ததை விவரித்தாள் ஏழிசை வல்லபி.

ஏழிசை வல்லபி தனது லெபாரட்டரியில் அமர்ந்து கொண்டிருந்தாள்.

அவளது லேப் அஸிஸ்டெண்ட் அடுத்த நாள் ப்ராக்டிக்கல் எக்ஸாமுக்கு தேவையான திரவங்களை தயார் செய்து கொண்டிருந்தார்.

இவள் எழுந்து போய் அவ்வப்பொழுது ஆலோசனை கூறி மேற் பார்வை செய்து கொண்டிருந்தாள்.

ஏதோ ஒரு குடுவையில் ஒரு கலவையை ஊற்றிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்த நேரத்தில் லெபாரட்டரி வாசலில் நிழல் ஆடியது.

அவளது பள்ளியில் கெமிஸ்டிரி லாப் நல்ல பெரிய லேப்பாக கட்டிக் கொடுத்திருந்தார்கள்.

இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்குமாக நடந்து நடந்து அவள் ஒவ்வொன்றையும் தயார் செய்ய வேண்டி இருந்தது.

அவளது தலைமை ஆசிரியர் பள்ளியின் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர். எம்.எல்.ஏ. ஃபண்ட்,

எம்.பி. ஃபண்ட், நபார்டு வங்கியில் வாங்கும் தொகை என்று எங்கெங்கோ வாய்ப்புக் கிடைக்குமோ அங்கெல்லாம் கதவைத் தட்டி நிதி சேர்த்துக் கொண்டு வந்து பள்ளிக்கூடத்தை வளப்படுத்தி அதற்காக பரிசும் கூட வாங்கியவர்.

அவருக்கு ஏழிசை வல்லபி ஒரு நாள் ஒரு ஆலோசனை சொன்னாள். ''சார் இந்த சைன்ஸ் குரூப் டீச்சர்ஸ் அந்த சப்ஜெக்ட் உள்ள கிளாஸ்க்கு மட்டும் போறாங்க. ஆர்ட்ஸ் குரூப் டீச்சர்ஸ் அந்த சப்ஜெக்ட் கிளாஸ்க்கு மட்டும் போறாங்க'' என்றாள்.

''அதானேம்மா முறை?'' என்றார் தலைமை ஆசிரியர் சீனிவாசன்.

''ஆமா சார் ,ஆனா எல்லாருக்கும் எல்லாரையும் தெரியணும். அதுக்கு நாம இப்படி ஒண்ணு பண்ணலாம் சார்''என்றாள் அவள்.

''சொல்லும்மா'' என்றார்.

''வாரத்துல ஒரு நாள் கிளப் ஆக்டிவிட்டீஸ் வைக்கிற மாதிரி ஆஃப்டர் ஸ்கூல் அவர் கவுன்சிலிங் அவர் என்று வைக்கலாம் சார். ஒவ்வொரு டீச்சருக்கும் ஒரு முப்பது ஸ்டுடண்ட்ஸ் கொடுத்தரலாம். அப்படி வரும் பொழுது இந்த குரூப்ல இருக்கறவங்களும் அந்த வகுப்புக்கு போவாங்க'' என்றாள்.

''சரி வைக்கலாம், அதனால என்ன பிரயோஜனம்?'' என்று கேட்டார் தலைமை ஆசிரியர்.

''இல்லை சார், இந்த முப்பது பேருக்கும் ஒரு பர்சனல் பிரச்சினையோ அல்லது ஏதாவது ஒரு

ஆலோசனை தேவைப்பட்டா அவங்க அந்தக் கவுன்சிலரை அணுகணும் அப்படின்னு வச்சிடலாம். அவரு வந்து கவுன்சிலிங் கொடுக்கலாம்'' என்றாள்.

தலைமை ஆசிரியருக்கு அந்த ஐடியா ரொம்பப் பிடித்துப் போயிருந்தது. ''இதனால வேற என்னென்னம்மா பலன் இருக்கு ?''என்றார்.

''இல்லை சார். ஒவ்வொரு ஆசிரியருக்கும் முப்பது பேரு அப்படியெல்லாம் கொடுக்கும் போது எல்லா குழந்தைகளுக்கும் நம்ம மேல கவனம் செலுத்தறாங்க அப்படிங்கற ஒரு பீலிங் இருக்கும். கரிக்குலம் தொடர்பான பிரச்சினைகள் தவிர வேற ஏதாவது பிரச்சினைகள் இருந்தா கூட சொல்லுவாங்க. சொல்லும் போது அது நமக்கு என்னன்னு தெரிஞ்சுட்டு சால்வ் பண்ணும் போது ஒரு கேர் கொடுக்கறோம்கற ஒரு ஃபீலிங் ஸ்டூடண்ட்ஸ்க்கு இருக்கும்'' என்றாள்.

''ரொம்ப கரெக்ட்ம்மா'' என்று அதை நடைமுறைப்படுத்தினார் தலைமை ஆசிரியர் அந்த மாதத்தில் இருந்து.

வாரத்தில் ஒரு நாள் ஒரு அரை மணி நேரம் முக்கால் மணி நேரம் இதற்காக ஒதுக்குவதில் ஆசிரியர்களுக்கும் பெரிய எதிர்ப்பு இருக்கவில்லை.

எப்படி இருந்தாலும் கிளப் ஆகடிவிடீஸ கிளாஸ் என்ற பெயரில் ஒரு குறிப்பிட்ட நேரம் வரை பள்ளியில் இருக்க வேண்டியிருந்தது. அதிலே ஒரு நாளை இதற்காக ஒதுக்குவதில்லை தவறில்லை என்று பெரும் பாலானோர் ஏற்றுக் கொண்டார்கள்.

லெபாரட்டரி ஒர்க் ஏதோ செய்து கொண்டே திரும்பிப் பார்த்தாள் ஏழிசை வல்லபி. அங்கே ஒரு மாணவன் தயங்கியவாறு வந்து நின்றான்.

அவள் புன்னகைத்தபடி "என்ன ராஜேந்திரா உள்ளே வா" என்றாள்.

மிஸ் என்று அவன் தயங்கினான்.

அவனுக்குப் பின்னாலே ஒரு பத்து இருபது மாணவர்கள் வந்து நின்றார்கள்.

"என்ன? பெரிய மாநாடே போடுவீங்க போலிருக்கு, என்ன விஷயம்?" என்று அவளே எழுந்து வெளியே வந்தாள்.

"மிஸ், உங்ககிட்ட பேசணும்" என்றார்கள்.

"என்னப்பா விஷயம்?" என்றாள்.

"கொஞ்சம் பர்சனல் மிஸ்" என்றார்கள்.

"சரி, கொஞ்சம் பொறுங்க ,பிஃப்டீன் மினிட்ஸ்ல ஸ்கூல் அவர் முடிஞ்சிடும் அதுக்கப்புறம் பேசறேன்" என்றாள்.

அவர்கள் போய் நகர்ந்த உடனே திரும்ப அழைத்து "இப்ப எப்படி வந்தீங்க கிளாஸ் இல்லையா?" என்று கேட்டாள்.

"ஃப்ரீ அவர்தான் மேடம்"

"ஃப்ரீ அவரா?" என்றாள்?

"ஆமா இன்னிக்கு சார் லீவு . எங்க தமிழ் சார் லீவு அதனால நாங்க ஃப்ரீ இப்போ."

"ஃப்ரீ அவர்னெல்லாம் ஒண்ணும் கிடையாது. அப்படி இருந்தா வகுப்பை விட்டு வெளியே வரக் கூடாது. போய் வகுப்புல உட்கார்ந்து படிங்க" என்றாள்.

அவர்கள் ஒன்றும் பேச வில்லை.

வகுப்பறைக்குப் போய்விட்டாள்.

பதினைந்து நிமிடம் கழித்து திரும்பவும் வந்தார்கள்.

அவளும் அதற்குள்ளாக வேலையை முடித்து விட்டு அவர்களுக்காக காத்துக் கொண்டிருந்தாள்.

லெபாரட்டரி வாயிலில் வந்து நின்று கொண்டாள்.

அங்கே இருந்த வராண்டாவில் அவர்கள் வந்து நின்றார்கள்.

"என்னப்பா விஷயம்?" என்றாள்.

"இந்த ராஜேந்திரன் டிஸ் கன்டினியூ பண்றானாம்" என்றார்கள் மற்றவர்கள்.

அவனுக்கு அவள்தான் கவுன்சலர்.

ஏழிசை வல்லபி ஒரு நிமிடம் அதிர்ந்து போனாள்.

"ஏம்பா நல்லா படிக்கிற ஸ்டூடண்ட் ஆச்சே ஏன்?" என்றாள்.

"அதான் மிஸ் எங்களுக்கு கவலையா இருக்கு" என்றார்கள் மற்றவர்கள்.

ராஜேந்திரன் வாய் திறந்து பேசினான். "எங்க ஃபேமிலில எங்க அப்பாதான் டெய்லரிங் வேலை பார்த்து எங்களைப் படிக்க வைக்கறாரு. இப்ப

அவருக்கு உடம்பு சரியில்லை. தொடர்ந்து தைக்கிற வேலை செய்ய முடியாது. அதனால என்னை ஸ்கூல்ல இருந்து நிப்பாட்டிட்டு தையல் வேலை பார்க்கச் சொல்றாரு'' என்றான்.

'ஓ.' என்று ஒரு நிமிடம் முகம் வாடிப் போனாள் ஏழிசை வல்லபி.

''வேற வழியே இல்லையாப்பா?'' என்றாள்.

''சரி எதுக்கும் உங்க அப்பாவை கூட்டிட்டு வாயேன், நான் பேசறேன்'' என்றாள்.

அடுத்த நாள் அந்த மாணவனுடைய தந்தை வந்தார்.

அவரிடத்திலே அவள் பேசினாள். ''என்னம்மா பண்றது நல்லா படிக்கிறான்தான். ஆனா குடும் பத்தையும் பார்க்கணும். எனக்கு ஒரு பொண்ணு இருக்கு அவ இப்ப ஒன்பதாவது படிக்கிறா அவளையும் படிக்க வைக்கணும். வேற வழியில்லம்மா இவன் நின்னு தான் ஆகணும்.''

அப்போது வகுப்பு மாணவன் ஒருவன் வந்து ''மிஸ் ஒரு நிமிஷம் எங்க கிளாஸுக்கு வாங்களேன்'' என்று வகுப்புக்கு கூப்பிட்டான்.

அவள் அந்த வகுப்புக்குப் போனவுடனே.

''மிஸ், அவங்க அப்பாகிட்ட நாங்க கேட்டோம் அவங்க பேமிலி ரன் பண்றதுக்கு மாசத்துக்கு தி தவுசன்ட் வேணுமாம்? நாங்க அம்பது அறுபது பே இருக்கோம். நாங்க மாசம் அறுபது ரூபா எழுபது ரூபா

போட்டுக் கொடுத்துடறோம். அவனைப் படிக்க விடச் சொல்லுங்க மிஸ்'' என்றார்கள்.

உண்மையாகவே ஏழிசை வல்லபி நெகிழ்ந்து போனாள்.

''இதெல்லாம் ஓர்க் அவுட் ஆகுமான்னு தெரியலைப்பா, நான் அவருகிட்ட பேசிப் பார்க்கிறேன்'' என்றாள்.

அதைக் கேட்ட உடன் அந்த தந்தையின் முகமும் நெகிழ்ந்து போனது.

''மிஸ் இதெல்லாம் கேட்கறதுக்கு நல்லாயிருக்கு. மாசா மாசம் இந்த குழந்தைங்க கிட்ட நாங்க வசூல் பண்ணிட்டு இருக்க முடியுமா? அப்படியே அவங்க கொடுத்தாலும் அது அவங்க வருமானம் இல்லை. பேரண்ட்ஸோட வருமானம். இந்த குழந்தைங்க என் பையன் மேல இவ்வளவு பிரியம் வச்சிருக்கறதுக்காக நான் ரொம்ப சந்தோஷப் படறேன். ஆனா, இதை எப்படிங்க ஏத்துக்கறது'' என்றார்.

ஏதோ இளைஞர்கள் எல்லாம் பொறுப்பற்றவர்கள் என்பது போல பலரும் பேசிக் கொண்டிருக்கிற பொழுது இந்த மாணவர்கள் எல்லாம் சேர்ந்து செய்கிற இந்த முடிவு அவளுக்குமே நெகிழ்ச்சியைத் தந்தது.

தலைமை ஆசிரியரிடம் சொன்னாள்.

அவருக்குமே மனம் நெகிழ்ந்து போனது. அந்த மாணவர்களை அழைத்துப் பாராட்டினார்.

அதற்குப் பிறகு அவர் சொன்னார். ''நீங்க ஒரு ஆசையில அன்புல சொல்றீங்கப்பா. அது ஓர்க் அவுட்

ஆகாது. நீங்க கவலைப் படாதீங்க. இப்ப பதினொண்ணாவது தானே? இப்ப டிஸ்கன்டினியு பண்ணினா பரவாயில்லை. பன்னிரண்டாவதுல அவன் டைரக்டா ஆர்ட்ஸ் குரூப் எக்ஸாம் எழுதலாம் அதுக்கு நான் ஏற்பாடு பண்ணி படிக்க வைக்கிறேன்'' என்றார்.

ஏழிசை வல்லபியும் மகிழ்ந்து போனாள். ''ஆமாங்க சார். நானும் ஹெல்ப் பண்றேன்'' என்றாள்.

ராஜேந்திரன் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் பல்ப் போட்ட வெளிச்சம் தெரிந்தது.

''தாங்க்ஸ் மிஸ், தாங்க்ஸ் மிஸ்'' என்றான்.

''நீ உங்க அப்பாவுக்கு ஹெல்ப் பண்ணு. ட்வெல்த் புக்ஸ் எல்லாம் இப்பவே ஒரு செட் நான் உனக்கு வாங்கித் தரேன். படிச்சிட்டிரு. ட்வெல்த் டைரக்டா போய் எழுதலாம். அதுக்கு நான் ஹெல்ப் பண்றேன். நான் மிஸ்கிட்ட எல்லாம் சொல்லி உனக்கு சொல்லித் தரச் சொல்றேன்'' என்றாள்.

அதே போல ராஜேந்திரனுக்கு தன்னுடைய சக தோழிகளான ஆசிரியர்களிடத்தில் சொல்லி வாரத்தில் ஒரு நாள் வீட்டுக்கு வருமாறு ஏற்பாடு செய்து பாடம் சொல்லிக் கொடுப்பது என்று முடிவானது.

இதெல்லாம் அன்றைக்கு ஏழிசை வல்லபியை ஒரு மகிழ்ச்சியான மன நிலையில் வைத்திருந்தது.

அந்தப் பேச்சு வார்த்தை போய்க் கொண்டிருக்கும் பொழுதுதான் சத்ய பிரகாஷ் அவளை அழைத்தான். அப்பொழுதுதான் அவள் 'ஒரு பிரச்சினை போய்ட்டு

இருக்கு. நான் நேர்ல வரேன்' என்று சொல்லி விட்டு வந்தாள்.

சக மாணவர்கள் ஒரு மாணவனுக்கு உதவி செய்ய முன் வந்ததையும் அதை ஏற்றுக் கொள்ளாத அவனுடைய தன்மானத்தையும் பற்றி அவள் சிலாகித்து பெருமையாக பேசிய பொழுது அவள் முகத்திலே தெரிந்த உணர்ச்சிகள்தான் சத்ய பிரகாஷை கிறங்கடித்தன.

அவள் சொல்லுகிற விஷயத்தைக் காட்டிலும் அவள் சொன்ன விதம் அவன் உள்ளத்துக்குள்ளேயே ஏதோ விதமான எழுச்சியை ஏற்படுத்தியது என்று சொல்லலாம்.

அவள் கூட ஒரு கட்டத்தில் நிறுத்தி விட்டு ''நான் சொல்றதை கேட்கறீங்களா'' என்றாள்

''ம்ம்ம்... கேட்கறேன்'' என்றான் அவன்.

''ஓகோ, இந்தப் பிரச்சினையினால தான் நாலு நாளா அம்மணி எங்களை கண்டுக்கலையா.?''

''நான் என்ன கண்டுக்கறது. நீங்க கூப்பிட்டு பேசலாமில்லே'' என்றாள் அவள்.

''ஆமா, பேசியிருக்கலாம். நான் இந்த பேங்க் விவகாரத்துல மறந்துட்டேன்'' என்று அவன் அதற்கு ஒரு விளக்கம் சொன்னான்.

''ஓகே, இப்ப அந்தப் பையனுக்கு ஹெல்ப் பண்ணனும். அவ்வளவு தானே? அவங்க அப்பாவுக்கு

ஒரு வேலை வாங்கிக் கொடுத்துட்டா அவன் கன்டினியூ பண்ணுவானா?'' என்று கேட்டான்.

''அவரு தான் கொஞ்சம் உடம்பு சரியில்லை என்கிறாரே. ரொம்ப கஷ்டமான வேலை அவரால செய்ய முடியாதுன்னு நினைக்கிறேன்'' என்றாள்.

''ஓகே! நம்மகிட்டே இங்க வர கஸடமர் யார்கிட்டயாவது சொல்லி அவருக்கு ஏத்த மாதிரி வேலை வாங்கித் தரேன். அந்தப் பையனை ஈவினிங்ல போய் தைக்கறதுக்கு ஹெல்ப் பண்ணச் சொல்லு, படிக்கட்டும், ஏற்பாடு பண்ணிடுவோம்.''

ஏழிசை வல்லபி உண்மையிலேயே மகிழ்ந்து போனாள்.

''அப்படியில்லைன்னா ஆஃப்டர் ஸ்கூல் அவர்ஸ் அவன் இங்க உதவி செய்யற மாதிரி வரட்டும், இங்க உட்கார்ந்து படிக்கட்டும் ,அவங்க அப்பாகிட்ட நாம பார்ட் டைம் வேலை கொடுக்கறோம்னு சொல்லி ஏதாவது ஒண்ணு பண்ணிக்கலாம்.நீ அதுக்காக ஒர்ரி பண்ணாதே'' என்றான்.

ஏழிசை வல்லபியின் முகம் பூவாய் மலர்வதைப் பார்த்து அவனுக்கும் மகிழ்ச்சியானது.

அதற்குப் பிறகு இரண்டு பேருமே சற்று நேரம் மகிழ்வாக பேசிக் கொண்டிருந்தார்கள்.

''இசை'' என்றான் சத்ய பிரகாஷ்.

'சொல்லுங்க' என்றாள்.

''ஆக்சுவலா உமா கிளம்பிப் போனதுக்கு அப்புறம் இன்னிக்குத் தான் நான் கொஞ்சம் சந்தோஷமா பேசிட்டு இருக்கேன்'' என்றான்.

''ஆமா, கொஞ்சம் கொஞ்சமா மனசை தேத்திக்க வேண்டியதுதான் மறந்துருங்கன்னு சொல்ல மாட்டேன். கண்டிப்பா மறக்க முடியாது. மனதை தேத்திக்க வேண்டியதுதான்'' என்றாள் அவள்.

''இல்லை, இசை அவன் ரொம்ப வல்னரபிள் பொசிஷன்ல இருக்கான், உனக்கு அது தெரியாது'' என்றான்.

அவள் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு 'தெரியும்'. என்றாள்,

''அதனால தான் இவ்வளவு நாள் ரொம்ப யோசிச்சேன் அவனை என் பொறுப்பல வச்சிட்டிருந்தேன்'' என்றான்.

''கவலைப்படாதீங்க,! கண்டிப்பா சீக்கிரமே நல்ல செய்தி கிடைக்கும்'' என்றாள் அவள்.

அதற்குப் பிறகு சற்று நேரம் உற்சாகமாக பேசிவிட்டு கிளம்பினாள்.

அன்றிரவே பத்து மணிக்கு மேலாக அவனுக்கு ஒரு டெலிஃபோன் கால் வந்தது.

ஏழிசை வல்லபி சொல்லி விட்டுப் போன ஆருடம் பலித்து விட்டது.

நல்ல செய்தி வந்தே விட்டது.

அந்த ஃபோன் கால் முடிந்தவுடனேயே சற்றும் தயங்காமல் நேரம் கடத்தாமல் அவன் ஏழிசை வல்லபிக்குத் தான் போன் செய்தான்.

"ஹலோ எப்ப இருந்து குடுகுடுப்பைக்காரன் ஆனே?" என்று கேட்டான் அவன்.

அவளுக்கு அந்தப் பக்கம் புரியவில்லை.

"இல்லை இன்னிக்கு நல்ல செய்தி வரும்னு சொன்னியே, அதைத்தான் கேட்டேன்" என்று இவன் இந்தப் பக்கம் சிரித்தான்.

அந்தப் பக்கம் அவள் கொஞ்சம் ரிலாக்ஸ் ஆனாள்.

அத்தியாயம் - 10

ரயில் ஓடிக் கொண்டிருந்தது.

"இனி பெரும்பாலும் நாம சப்பாத்தியை வச்சு கிட்டுத்தான் ஓட்டணும்." என்றார் ஜெயகோபால்.

"அது ஒண்ணும் பிரச்சினை இல்லைண்ணா. சாப்பாடு ஒரு பிரச்சினையே இல்லை" என்றான் உமாகாந்தன்.

"அப்படித்தான் சொல்லுவே, ஒரு இரண்டு நாள் சேர்ந்தாப்ல சாப்பிட்டுப் பாரு. வாழ்க்கையே வெறுத்துப் போகும்" என்றார் ஜெயகோபால்.

"அப்படி இல்லைண்ணா எங்க வீட்டுல மைதிலி வாரத்துக்கு மூணு நாள் சப்பாத்தி பண்ணிடும். சாப்பிட்டுப் பழக்கம்தான். அதனால பிரச்சினை இல்லை."

"அப்ப சரி, சப்பாத்தியை ரசிச்சு சாப்பிட்டு ஓட்டலாம்" என்றான்.

அந்த நேரத்தில் ரயிலிலே சப்பாத்தி சப்ஜி என்று விற்றுக் கொண்டு வந்தார்கள்.

"ஏம்பா சாப்பிட்ரலாமா?" என்றான் ஜெய கோபால்.

"சரிங்க அண்ணே!" என்றான்.

ஆளுக்குக் கொஞ்சம் சப்பாத்திகளை வாங்கிச் சாப்பிட்டார்கள். வேக வைத்த முட்டைகளையும் விற்றுக் கொண்டு வந்தார்கள். அதிலும் இரண்டு வாங்கிக் கொடுத்தான் ஜெயகோபால்.

"நான் தரேண்ணே, பணம்" என்று உமாகாந்தன் போட்டி போட "அதெல்லாம் வேண்டாம் பணம் இல்லைன்னா நான் கேட்கிறேன் உங்கிட்ட" என்று ஜெயகோபால் உபசரித்தார்.

உமாகாந்தனுக்கு இது கொஞ்சம் உறுத்தலாக இருந்தது. வந்ததில் இருந்து ஜெயகோபாலே செலவு செய்து கொண்டிருந்தார்.

"சரி, பார்க்கலாம் வெளியூர் போய் ஏதாவது ஒரு செலவை நாம் எடுத்துக் கொள்ளலாம்" என்று முடிவு செய்து கொண்டான்.

அவர்கள் சாப்பிட்டு முடித்து விட்டு விச்ராந்தியாக அமர்ந்தார்கள்.

வண்டி டெல்லியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

இரண்டு நாள் பயணம், அதனால் அந்த இரண்டு நாளையும் வண்டியிலே கழித்தாக வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு இருந்தது.

ஜெயகோபால் உமாகாந்தனிடம் ''தம்பி, இரண்டு நாள் இதுல தான் வண்டி ஓட்டி ஆகணும்னு ஆயிடுச்சு. அதனால என்ஜாய் பண்ணு நல்லா. சுற்றுப்புறச் சூழ்நிலைகளையெல்லாம் பார்த்து என்ஜாய் பண்ணு'' என்றான்.

''அப்படித்தாண்ணா, வாட் கேன் நாட் டு பி கியூர்ட் ஹாஸ் டு பி என்ட்யுர்ட்ம்பாங்க, அது மாதிரி எதை மாத்த முடியாதோ அதை ஏத்துக்கணும்தானே'' என்றான்.

ஜெயகோபால் முறைத்தான்.

''இரண்டு நாளைக்குள்ளே ஏதாவது தத்துவம் பேசினே, மவனே'' என்று சிரித்தான்.

''ஓகோ உங்களுக்கு தத்துவம் பிடிக்காதா? எங்க வீட்டுல நான் அள்ளித் தெளிப்பேன், ரொம்ப ரசிப்பாங்க'' என்றான்.

''நான் ரசிக்கவெல்லாம் மாட்டேம்பா, கடுப்பாகி விடுவேன்'' என்றார் ஜெயகோபால்.

உமாகாந்தன் ''ம் ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு ரகம்!'' என்றான்.

''மறுபடியும் பாத்தியா'' என்றார் ஜெயகோபால்.

அவன் வேடிக்கையாக மிரட்டுகிறான் என்பது தெரிந்தது.

இரண்டு பேரும் சிரித்தார்கள்.

''இப்படித்தான் ஏதாவது வம்பிழுத்துக்கிட்டேதான் ஓட்டியாகணும்'' என்றார்.

அப்பொழுதுதான் அது நிகழ்ந்தது.

சரசரவென்று வண்டிக்குள்ளே ஒரு ஆறு ஏழு பேர் வந்தார்கள்.

பார்த்தாலே திருநங்கைகள் என்று தெரிந்தது.

வந்து பெட்டிகளில் ஒவ்வொருவரிடமாக கையை நீட்டினார்கள்.

எல்லோரும் அவரவர்களுக்கு இயன்றதை எடுத்துக் கொடுத்தார்கள்.

உமாகாந்தனும் சட்டென்று தன்னுடைய பாக்கெட்டில் கையை விட்டு ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தான்.

யாரிடமோ எப்போதோ கேட்டது நினைவுக்கு வந்தது. அண்ணனிடம் ஆம் அண்ணனிடம் கேட்டது நினைவுக்கு வந்தது. 'கடை கேட்டல் ரயில் கேட்டல், கடை கடையாக போய் காசு வாங்கணும். இல்லைன்னா இப்படி டிரெயின்ல காசு வாங்கணும். பிச்சை எடுப்பது என்பதைத்தான் இப்படி நாகரிகமாக சொல்கிறார்கள்' என்பது உமாகாந்தனுக்கு புரிந்தது.

ஆனால் யாராவது ஒருவர் வாங்கிக் கொண்டால் மற்றவர்களிடம் கொடுத்தாச்சு என்று சொன்னால் மற்றவர்கள் நகர்ந்து விடுகிறார்கள்.

ஜெயகோபால் 'தேதியா' என்றவுடனே "அச்சா பையா!" என்று நகர்ந்தார்கள்.

திடீரென்று அவர்களிலே ஒரு திருநங்கை ஜெயகோபாலை நோக்கி வந்தாள். "அண்ணே நல்லா இருக்கீங்களா" என்று கேட்டாள்.

தமிழர் என்பது தெரிந்தது.

"நல்லா இருக்கேம்மா" என்றவர் உற்றுப் பார்த்து விட்டு "சுகந்தா தானே" என்றார்.

அந்தத் திருநங்கை சிரித்தாள். "ஞாபகம் வச்சுட்டு இருக்கீங்களா."

"பின்னே அவ்வளவு சீக்கிரம் மறந்துட முடியுமா?" என்றான் ஜெயகோபால்.

'ஏம்மா' என்றான் ஒரு கேள்விக் குறி போல.

"என்னண்ணே பண்றது நீங்க என்னமோ வேலை வாங்கிக் கொடுத்தீங்கதான். ஆனா எங்கண்ணே நிம்மதியா வேலை செய்ய விடறாங்க? எங்கே போனாலும் தொல்லையாத்தான் இருக்கு.வேற விதமாதான் பார்க்கறாங்க. ஏதோ பிரச்சினைகள் கிளப்பறாங்க. இங்க தொடறது, அங்க தொடறது, வர்றியாங்கறது, இதெல்லாம் கஷ்டமா இருக்குண்ணே" என்றான்.

ஜெயகோபாலுக்கு அருகில் இடம் காலியாக இருக்கவும் சட்டென்று அமர்ந்து கொண்டாள். "ஏம்மா நான் வேலைக்கு சேர்த்த இடத்திலயும் அப்படி பிரச்சினை இருந்ததா என்ன?"

"நீங்க வேறேண்ணா, ஓனர் ரொம்ப நல்லவரு, ஸ்டாஃபும் நல்லவங்கதான். ஆனா நேரடியா சொல்ல மாட்டாங்க இந்த மாதிரி ஏதாவது பின்னாடி கிசுகிசுன்னுட்டே இருப்பாங்க.

நான் என்னவோ அங்க தனியா இருக்கற மாதிரி இருந்துச்சுண்ணே. பேசாம நம்ம ஆளுகளோட சேர்ந்துடுவோம்னுதான் வந்துட்டேன்."

"ஏம்மா, நல்லா இருக்கியா?" என்றார் ஜெயகோபால்.

"எங்கே நல்லாயிருக்கிறது பாருங்க. ஒண்ணு அந்தத் தொழிலுக்குப் போகணும். எனக்கு அதுல விருப்பம் இல்லை. அப்போ இப்படித்தான் பிச்சை எடுக்கணும், ஒரு நாளைக்கு கிடைக்கும். ஒரு நாளைக்கு கிடைக்காது. எங்க தாதிக்கிட்ட கொண்டு போய் கொடுத்திடணும்" என்றாள்.

"சரி, உனக்குப் பிடிச்ச வாழ்க்கையை வாழறே" என்றான் ஜெயகோபால்.

"பிடிச்ச வாழ்க்கை இல்லைண்ணா. வேற வழி யில்லை, இதுதான் எனக்கு இண்ணைக்கு வாய்ப்புன்ற மாதிரி ஆயிப்போச்சு. இல்லாட்டி மறுபடியும் நான் அந்த தொழிலுக்குத்தான் போகணும்" என்றாள்.

"மறுபடியும்,,?" என்றான் ஜெயகோபால்.

"இல்லைண்ணே அப்படி நான் சொல்லலை. இன்னை வரைக்கும் தப்பிச்சுட்டேண்ணே, சாகற வரைக்கும் அதுக்கெல்லாம் போகற மாதிரி இல்லை.

அதை விட இந்த பிச்சை பரவாயில்லை'' என்றாள் அந்தப் பெண்.

''நீ வேண்ணா சென்னை வந்துடறியா, என் தொண்டு நிறுவனத்துல வேலை செய்யறியா'' என்றார்.

''இல்லைண்ணா. இப்போதைக்கு நான் சென்னை வரலை, அங்க வந்தா எங்க ஃபேமிலில வேற பிரச்சனையா கிடக்கும்'' என்று பேசிக் கொண்டிருந்தவள் உமாகாந்தனை இரண்டு மூன்று முறை திரும்பித் திரும்பி பார்த்தாள்.

சந்தேகம் வந்து விட்டது போலும். ஜெய கோபாலிடம் மெதுவாக ''இது எங்க வகையறா போல இருக்கே'' என்றாள் முணுமுணுப்பாக ,

ஜெயகோபால் அந்த கேள்விக்கு நேரடியாக பதில் சொன்னான். ''இவரு உமாகாந்தன்ம்மா பெரிய ஓவியர்'' என்றான்.

''ஓகோ'' என்று அவள் தலையாட்டிக்கொண்டாள்.

''அண்ணே நான் ஒரு ரெண்டு தடவை உங்க செல்ஃபோனுக்கு அடிச்சேன். ஆனா ரிங் போச்சு ராங் நம்பர்னு சொன்னாங்கண்ணே'' என்றாள்.

''நான் செல் நம்பர் மாத்திட்டேனேம்மா, நோட் பண்ணிக்கம்மா'' என்று தன்னுடைய செல் நம்பரை கொடுத்தார் ஜெயகோபால்.

''கேளும்மா. ஏதாவது ஹெல்ப் வேணும்னா கேளு. நீ அங்க வேலைக்கு வரதுன்னா வா நான் அப்பாய்ண்ட் பண்ணிக்கறேன்'' என்றார்.

''இல்லண்ணே, இங்க ஒரு குழுவாயிட்டோம். இதிலிருந்து இப்போதைக்கு நான் திரும்பி வரலை, சென்னைக்கு வரதா இருந்தா கண்டிப்பா நான் உங்களைத் தேடித்தான் வருவேன்.''

'வாம்மா' என்றவர் தன்னுடைய பாக்கெட்டில் கையை விட்டு ஒரு ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தார்.

அவள் சந்தோஷமாக அதை வாங்கிக் கொண்டு போனாள்.

திரும்பி உமாகாந்தனை பார்த்தார். உமாகாந்தன் சற்றே அதிர்ச்சி அடைந்தவன் போல அமர்ந்து கொண்டிருந்தான்.

''தம்பி இவங்களெல்லாம் பாவம்பா, இவங்களை யெல்லாம் குடும்பத்துல ஏத்துக்கலை. அதுவும் இந்தப் பொண்ணு இருக்கே படாதபாடு பட்டுடுச்சு, இப்படின்னு தெரிஞ்ச உடனேயே வீட்டுல முதல் வேலையா தொரத்திட்டாங்க'' என்றார் ஜெய கோபால்.

உமாகாந்தன் பேச வாயெழாமல் கேட்டுக் கொண்டிருந்தான். ''இதை விட இன்னொரு கேசு வந்துச்சுப்பா. பேரு சூப்பர் பேரு ஜெயந்தின்னு வந்தது. அது பேரு கூட ஜெயக்குமார் பட் திருநங்கையான வுடனே ஜெயந்தின்னு வச்சுக்கிச்சு.அவங்க வீட்டுல சொன்னா நம்புவியோ இல்லையோ? அவங்க சித்தி விஷம் வச்சுட்டாங்க. நல்ல வேளையா இவன் தம்பி, சித்தியோட மகன் சொல்லிட்டான், அவன் வந்து

சொல்லி "அக்கா நீ சாப்பிடாத. நீ இங்கேயிருந்து கிளம்பிடுன்னு சொல்லியிருக்கான். அதுக்கப்புறம் அடிச்சு புடிச்சிட்டு என்கிட்ட வந்துச்சு. அதுக்கு அப்படித்தான் ஒரு இடத்தில் வேலை வாங்கிக் கொடுத்தேன். ஆனால் இவங்களுக்கு வேலை செய்கிற இடங்கள்ளேயும் நிறைய தொல்லைகள் இருக்கு.

".....!"

ஒண்ணு கேலி பார்வை பார்க்கறாங்க. இல்லைன்னா வேறு விதமான உறவுக்குக் கூப்பிடறாங்க. அப்புறம் ஒரு வழியா அந்தப் பொண்ணு டிகிரி முடிச்சது. மேற்கொண்டு படிச்சுட்டு இப்ப ஏதோ ஒரு தொழில் சொந்தமா பண்ணுது" என்றார்.

உமாகாந்தன் ம்ஹூம் என்று கேட்டுக்கொண்டான். அதற்குப் பிறகு ஜெயகோபால் லேசாக சொல்லுவது போல "அந்த விதத்துல நீ அதிர்ஷ்டக்காரன்பா. உனக்கு எந்த விதமான பிரச்சினையும் இல்லாம உங்க அண்ணன் ஃபுல் புரொட்டக்ஷன் கொடுத்துட்டான். அதனால நீ வெளியுலக பிரச்சினைகளைப் பார்க்கலை" என்றான்.

உமாகாந்தன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

தான் இந்த மாதிரி ஒரு வண்டியில் பிச்சை எடுக்க நேர்ந்தாலோ அல்லது ஏதாவது ஒரு இக்கட்டில் மாட்டிக் கொண்டு விழிக்க நேர்ந்தாலோ?

கேள்விப் பட்டாலே அண்ணன் தாங்க மாட்டான்.

பெற்றோர்கள் தாங்க மாட்டார்கள்.

மைதிலி தாங்க மாட்டாள்.

எவ்வளவு அருமையான குடும்பம் தன்னுடையது என்று தோன்றியது.

அப்பொழுதுதான் ஜெயகோபால் அந்த விஷயத்தை சொன்னார்.

"உனக்குத் தெரியாதுப்பா. ஒரு அஞ்சாறு வருஷத்துக்கு முன்னாடியே உங்க அண்ணன் என்னை வந்து பார்த்தாப்ல" என்றார்.

அவன் "மேல சொல்லுங்க" என்பது போல பார்த்துக் கொண்டிருந்தான்.

"நானும் உங்க அண்ணனும் இதே மாதிரிதான் ஒரு டூர் மாதிரி போனோம். எங்கெங்கே திருநங்கைகள் இருக்கறாங்கறாங்களோ அந்த இடங்களுக்கெல்லாம் நாங்க போய் அந்த சூழ்நிலைகள் எப்படி இருக்குன்னு பார்த்துட்டு வந்தோம்.

அது உங்க குடும்பத்துல யாருக்குமே தெரியாது. அவன் எங்கேயோ ஃஆபீஸ் டூர் போறதா சொல்லிட்டு வந்தான். போய் பார்த்துட்டு வந்தோம். டென் டேஸ் போனோம்."

சொல்லும் போதே ஜெயகோபாலுடைய குரல் ஆழத்துக்குப் போனது.

அந்தப் பழைய அனுபவங்கள் எல்லாம் நினைவுக்கு வந்தது போலும்.

உமாகாந்தன் பேச்சற்றுப் போய் பார்த்துக் கொண்டிருந்தான். "ஆமாம்பா, உன்னைப் போல

இருக்கறவங்களோட வாழ்க்கை எப்படி இருக்கு. எந்த மாதிரி சூழ்நிலையில் இருக்கறாங்க அப்படின்னு பார்க்கறதுக்காக வந்தான்'' என்றார்.

உமாகாந்தன் உண்மையிலேயே நெகிழ்ந்து போனான்.

''எனக்கு மாதிரி அண்ணன் உலகத்துல யாருக்குமே கிடைக்காது'' என்றான்.

''நிச்சயமா!'' என்ற ஜெயகோபால் 'இப்பவாவது உன் குடும்பத்தைப் புரிஞ்சுக்கோ' என்று சொல்ல வில்லை.

நேரடியாக சொல்வதை விட அனுபவங்கள் இன்னும் பாடங் கற்றுக் கொடுக்கும் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது.

அதனால் தான் உமாகாந்தன் தன்னைத் தேடி வந்ததிலிந்து இதுவரை ஜெயகோபால் வீட்டுக்குத் திரும்பிப் போ என்றோ, வெளி உலகம் உனக்கு பாதுகாப்பு இல்லாதது என்றோ, வெளி உலகத்தில் உன்னைப் போல் நிறையப் பேர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றோ, உன்னை மாதிரி இருக்கிறவர்களுக்கெல்லாம் வீட்டிலே அன்பு கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றோ, ஆனால் நீ மட்டும் அதை புரிந்து கொள்ளாமல் வெளியே வந்துவிட்டாய் என்றோ, ஒரு வார்த்தைக் கூட சொல்ல வில்லை.

அதற்கு மாறாக வேண்டுமென்றே தனக்கு அவசியமே இல்லாத இந்த டூருக்கு போகலாம் வா என்று அழைத்துக் கொண்டு கிளம்பியிருந்தார்.

பத்து வார்த்தை சொல்லாத ஒன்றை ஒரு காட்சி உணர வைத்து விடும், கண்ணால் கண்டு புரிந்து கொள்ளட்டும் என்று எண்ணினான்.

அந்தக் கணத்தில் உமாகாந்தன் நடுங்கிப் போய் அமர்ந்திருந்தான்.

தன் குடும்பத்தினுடைய அருமை அவனுக்கு புரியத் தொடங்கிய அதே கணத்தில் தான் போய் பார்க்க நேருகிற அனுபவங்கள் எப்படியாக இருக்கும். அதைத் தாங்குகிற சக்தி தனக்கு இருக்குமா என்ற கவலையும் தோன்றியது.ஆனாலும் தொடர்ந்து போய்ப் பார்த்து விடுவது என்ற முடிவு செய்து கொண்டான்.

அன்றிரவு பத்து மணிக்கு மேல் உமாகாந்தன் உறங்கியதற்குப் பிறகு தன்னுடைய செல்ஃ போனை எடுத்துக் கொண்டு அந்த ரயில் பெட்டியின் கடைசியில் போய் நின்று ஜெயகோபால் குறிப்பிட்ட ஒருவருக்கு போன் செய்தான்.

அத்தியாயம் - 11

''எப்போலேருந்து குடுகுடுப்பைக்காரன் ஆனே?'' என்ற சத்ய பிரகாஷின் கேள்வி அவளுக்கு அதிர்ச்சி ஊட்டியது.

''என்னது?'' என்று திடுக்கிட்டு விட்டாள்.

அவன் அந்தப் புறம் கடகடவென்று சிரித்தான்.

"இல்லை, நேத்து சாயங்காலம் தானே சொன்னே நேத்தா இன்னிக்கு சாயங்காலம் தானே சொன்னே?. இன்னும் பன்னிரண்டு மணி ஆகலையே. இன்னிக்குத் தானே சொன்னே. நல்ல செய்தி வரப்போகுது அப்படின்னு குடுகுடுப்பாண்டி மாதிரி. நல்ல செய்தி வந்தே வந்துடுச்சு" என்றான்.

அவள் உற்சாகமானாள். "அப்படியா சத்யா? என்ன விஷயம் சொல்லுங்க. உமா பத்தி ஏதாவது தெரிஞ்சதா?" என்றாள்.

"அதே தான்" என்றான்.

"உமா கிட்டத்தட்ட கிடைச்சுட்டான்னு வச்சுக்கயேன்" என்றான்.

"என்ன தொலைஞ்சு போன குழந்தையை சொல்ற மாதிரி சொல்றீங்க" என்றாள்.

"குழந்தை இல்லைதான். ஆனாலும் கிட்டத்தட்ட தொலைஞ்சு போன மாதிரிதானே? நல்ல வேளை என் ப்ரெண்டு ஒருத்தர் கூட தான் இருக்கான். இப்பதான் அவரு எனக்கு போன் பண்ணினாரு" என்றான்.

"அப்படியா" என்று அவளும் இந்தப் பக்கம் சந்தோஷமானாள்.

"ஐ ஆம் வெரி ஹாப்பி ஃபார் யு. ஐ ஆம் ரியலி ஹாப்பி ஃபார் யு சத்யா" என்றாள்.

"தாங்க் யூ, தாங்க் யூ" என்றான்.

"பெரிய பாரம் இறங்கின மாதிரி இருக்கு இசை. உடனே உனக்குத்தான் போன் பண்றேன்" என்றான்.

"அப்படியா, இன்னும் அம்மா அப்பாகிட்ட யெல்லாம் சொல்லலையா?" என்றாள்.

"கிடைச்சாச்சுல்ல" என்று உச்சுகக் கொட்டினான்.

"உன்கிட்ட பேசிட்டுப் போய் பார்க்கிறேன். முழிச்சுக்கிட்டிருந்தாங்கன்னா சொல்லுவேன். இல்லைன்னா காலையில சொல்லுவேன்."

.....!

"அது ஏன் இசை உடனே உன்கிட்ட சொல்லணும்னு தோணுச்சு.?"

"அதானே?" என்றாள் அவளும் வம்பிழுப்பவளாக. "போயும் போயும் உங்கிட்ட சொல்லணும்னு என் மனசு இந்தப் பாடு படுத்துதே. சம்பத் கிட்ட கூட இன்னும் சொல்லலை தெரியுமா?"

"என்னது, போயும் போயுமா? இதுதான் மடியைப் பிடித்து மாங்காய் போட்டுட்டு....!" என்று இழுத்தாள்.

அவன் கலகலவென சிரித்தான். "பின்னே எங்க அம்மா இருக்காங்க. எங்க அப்பா இருக்காங்க. மைதிலி இருக்குது. சம்பத் கிட்ட சொல்லியிருக்கலாம். இல்லை நான் உங்கிட்ட சொல்றேன்" என்றான்.

"ஹலோ, என்ன ஒரேயடியா வம்பு பண்ணிட்டிருக்கீங்க?. கிட்டத்தட்ட நடு ராத்திரியில எழுப்பி குடுகுடுப்பைக்காரன்றீங்க.ஃபார் யுவர்

இன்ஃபர்மேஷன் எங்கேயுமே லேடீஸ் யாரும் போய் நடு ராத்திரியில குறி சொல்றது இல்லை தெரியுமா?'' என்றாள்.

''சரி, குறி சொல்ற குறத்தின்னு வச்சுக்கலாமே. ஏன்னா நீ சாயங்காலம் தானே சொல்லியிருக்கே. அதனால குறி சொல்ற குறத்தின்னு வச்சுக்கலாமே'' என்றான்.

''என்னமோ தெரியலை, நல்லா வாங்கப்போறீங்க'' என்றாள்.

''நீ ஏதாவது கொடுக்கப்போறியா. நீ ஏதாவது கொடுத்தா நான் வாங்கிக்கத் தயார்'' என்றான்.

அவள் ஒரு கணம் திடுக்கிட்டுப் போனாள்.

''என்ன பாராட்டுக் கொடுப்பேன்னு நினைச்சீங்களா? நேர் எதிரா வேற கிடைக்கும்'' என்றாள்.

''வேறேன்னா... வேறேன்னா....?'' என்றான் அவன் ஆர்வமாகக் கேட்பவன் போல.

''உதை! சார் உதை'' என்றாள்.

''குடுங்கப்பா, குடுங்க. அழகுப் பெண்ணின் கையாலே அடி விழுந்தாலும் சந்தோஷம். அப்படின்னு பாடட்டுமா?''

''ஆமா, ஆமா, இப்படியும் பாடுவீங்க. அதுக்கப்புறம் அடிடா அவளை உதைடா அவளை ன்னும் பாடுவீங்க. உங்க ஆண் வர்க்கம் இருக்கீங்களே?'' என்றாள்.

''அம்மணி, ஆண் வர்க்கம் இருக்கறதுனாலதான் பெண்களுக்கு பெருமையே கிடைக்குது. இல்லைன்னா

பெண்கள் லைஃப் என்னாகும் தெரியுமா? வேஸ்ட் ஆயிடும் அம்மணி.''

''அதேதான் உங்களுக்கும். பெண்கள் இல்லைன்னா யு ஆர் ஆல் குட் ஃபார் நத்திங்னு ஆயிடுவீங்க'' என்றாள்.

''அது என்னமோ நிஜம்தான்'' என்றான் அவன் ஆழ்ந்த குரலில்.

''ஐய்யய்யே!'' என்றாள் இவள்.

''ஏன்?'' என்றான் அவன்.

''இல்லை. இவ்வளவு நேரம் ஃபைட் பண்ணினீங்க. இப்ப சடார்ன்னு அது என்னமோ நிஜம்தான்னு சொல்லிட்டீங்க. பொசுக்குன்னு போச்சு எனக்கு.'' என்று காற்றுப் போன பலூனைப் போல இந்தப் பக்கம் இருந்து அவள் சத்தம் கொடுத்தாள்.

''டீச்சரம்மா இந்தக் குறும்பெல்லாம் பண்ணுவீங்களா?'' என்றான்.

''அதை எதுக்கு இப்ப ஞாபகப் படுத்தறீங்க? அப்புறம் பிரம்பைக் கையில எடுக்கணும்'' என்றாள் அவள்.

''ஓகோ! பள்ளிக்கூடத்துல பிரம்பை வச்சுகிட்டுத் தான் மிரட்டறீங்களா?''

''அங்கெல்லாம் அன்பால மிரட்டுனா புரிஞ்சுக்கு வாங்க. அது புரியாதவங்க கிட்ட பிரம்பைத்தானே தானே காட்ட முடியும்?''

"ஏய், நீ ஒரேயடியா என்ன இந்த மாதிரி வார்றே எங்களுக்கு அன்பு புரியாதா?" என்றான்.

"புரியுமா?" என்றாள் அவள்.

"இல்லை, இப்படி ஒரு குற்றச் சாட்டுக்கு என்ன அர்த்தம்?" என்றான் அவன்.

"வேறு ஒண்ணும் இல்லைங்க எங்க பள்ளிக் கூடத்து குழந்தைங்ககிட்ட அன்பு காட்டினா அவங்களும் திருப்பி அன்பு காட்டுவாங்க. அதைக் காட்டக் கூடாதுன்னு போராடிப் போராடி அழுத்தி வைக்க மாட்டாங்க" என்றாள் அவள்.

அவள் ஏதோ செய்தி சொல்கிறாற்போல அவனுக்குத் தெரிந்தது. ஆனாலும் அந்த நேரத்தில் அதைத் தெரிந்து கொள்வதாகக் காட்டுவது உசிதம் என்பது அவனுக்கு தோன்றவில்லை அதனால் "புரியலைப்பா" என்றான்.

அவளும் சட்டென்று சுதாரித்துக் கொண்டாள். "ஓகே, ஓகே, புரியாமயே இருந்துட்டுப் போகட்டும். எவ்வளவு நல்ல விஷயம் சொல்லியிருக்கீங்க. ஐ டோன்ட் வாட் டு ஹர்ட் யு. நீங்க சந்தோஷமாவே இருங்க" என்றாள்.

"சந்தோஷமாவே இருங்கன்னு சொல்றது என்னமோ வாழ்த்து மாதிரி தெரியலையே. வசை மாதிரி தெரியுதே. இசை இசை தாம்பா பாடணும். இசை வசை பாடக்கூடாது" என்றான்.

அவள் வெடித்துச் சிரித்தாள்.

சிரித்து விட்டு "அய்யோ, பேசாம இருங்க. இப்படி இந்த நேரத்துல சிரிச்சேன்னா அம்மா அப்பாவெல்லாம் வந்து என்னன்னு கேட்கப் போறாங்க?" என்றாள்.

"கேட்டா பதில் சொல்லு. ப்ரெண்டு பேசினாங்க ஜோக்கா பேசினாங்க அதனால சிரிச்சேன்னு" .

எப்போதாவது தோழிகள் வெளியூரிலிருந்து இந்த மாதிரி அவளை அழைப்பது உண்டு. என்பதனால் அவர்களுக்கு ஒன்றும் பெரிதாகத் தெரியாது என்பது அவளுக்குத் தெரியும். இருந்தாலும் சத்யாவைச் சீண்டுவது அவளுக்கு ஏனோ ஒரு சந்தோஷமாக இருந்தது.

"சத்யா ரொம்ப நாள் கழிச்சு, இல்லை இல்லை முதல் முதலா இப்படி சந்தோஷமா பேசறீங்க" என்றாள்.

அவன் குரல் உடனே ஆழமாக மாறியது.

நீண்டதொரு பெருமூச்சு விட்டான். "தெரியலை இசை உங்கிட்ட இப்படி விளையாடறதுக்கு பிடிக்குது. நீ ஒரு குட் ஃப்ரெண்ட். அன்டர்ஸ்டாண்ட் பண்ணிக்கு வேன்னு நினைக்கிறேன்" என்றான்.

"திரும்பத் திரும்ப இந்த விளக்கம் எல்லாம் சொல்ல வேண்டியதெல்லாம் இல்லை. யு கேரி ஆன்" என்றாள் அவள்.

"கேரி ஆனா? ஐ கேன் நாட் கேரி யு லேடி" என்றான் அவன்.

"ஹலோ, ஹலோ கேரி ஆன்னா ஒரு ஃபிரேஸ். அதுக்கு அர்த்தம் தூக்கிட்டு போறது இல்லை. வேற அர்த்தம்" என்றாள்.

"ஓஹோ அப்படியா?" என்றான் அவன் புரியாதவன் போல.

அவள் மறுபடியும் கலகலவென்று சிரித்தாள்.

அந்தச் சிரிப்பு அவனுக்கும் தொத்திக் கொண்டது. பிறகு ஆழ்ந்த குரலில் சொன்னான். "இசை, உனக்குத் தெரியாது உமா கிளம்பிப் போனதிலிருந்து கிட்டத் தட்ட இந்த இருபது நாள்ல நான் ரொம்ப வேதனைப் பட்டுட்டேன்.சொல்லவும் முடியலை. மெல்லவும் முடியலை தைரியமா இருக்க வேண்டியிருக்கு. அட்லீஸ்ட் நடிக்க வேண்டியதாயிருக்கு. ஏன்னா நான் அப்செட் ஆனேன்னா அம்மா அப்பாவெல்லாம் பயந்துருவாங்க. உனக்குத் தெரியாது இசை, அவள் ரொம்ப வல்னரபிள் பொசிஷன்ல இருக்கான்.இப்ப ஜெயகோபால் பாதுகாப்புல இருக்கான்ன உடனே எனக்கு மனசு கொஞ்சம் லேசாயிடுச்சு" என்றான்.

"ஓ! ஜெயகோபால் யாரு? உங்க ஃப்ரெண்டா.?"

"ஆமா, அவன் வந்து இந்த மாதிரி டிரான்ஸ் ஜெண்டர் பீப்பிளுக்காக ஒரு தொண்டு நிறுவனம் நடத்திட்டு வர்றான். சில சமயங்களில் தொண்டு நிறுவனங்கள் ஒரு மாதிரி இயங்கறாங்கன்னு சொல்றாங்க. ஆனா எனக்குத் தெரிஞ்சு ஜெயகோபால் உண்மையான சேவை மனப்பான்மையோடதான் செஞ்சுட்டு இருக்கான்" என்றான்.

"நல்லதுங்க, நீங்க யாருக்கும் எப்பவும் கெடுதல் செஞ்சது இல்லை. அதனால நிச்சயமா உங்களுக்கு கெடுதல் நடக்காது. உங்களைப் போல ஒரு அண்ணன் கிடைக்கறதுக்கு உமா கொடுத்து வச்சிருக்கணும்" என்றான்.

"போதும். போதும். இப்படிச் சொல்லிச் சொல்லி தான் அவனுக்கு கடுப்பாயிடுச்சு போல இருக்கு."

"இருக்கலாம் ஆனா நீங்க இதைக் கொஞ்சம் மாத்தலாம். உமாவுக்கு ஒரு ஹாப்பி நியூஸ் கொடுக்கலாம்" என்றாள் அவள்.

"எப்படி?" என்றான் சத்யா.

"உமா மாதிரி, உமாவுக்கு ஒரு அண்ணன் கிடைச்ச மாதிரின்னு வேற யாராவது இந்தப் பொண்ணுக்கு இப்படி ஒரு ஆள் ஹஸ்பெண்ட்டா கிடைச்சது தவம். பெரிய விஷயம்னு சொல்ற மாதிரி...!" என்று அவள் இழுக்க.

"ஓகே, ஓகே, எங்கே வர்றீங்கன்னு தெரியுது! ஏற்கெனவே பொண்ணு பார்க்கறேன் பார்க்கறேன்னு ஏமாத்திட்டீங்க" என்றான்.

"நீங்க எங்கே பொண்ணை காட்டறதுக்கே விடலையே? அதுக்குள்ளயே பயந்து ஓடிட்டிங்களே! கோழை! கோழை!" என்றாள்.

"நாங்கெல்லாம் கோழை கிடையாது இசை. வீரம்னு கிளம்பினா என்ன பண்ணுவோம் எப்படி நடப்போம் னெல்லாம் உங்களுக்குத் தெரியாது. அதுக்கான சூழ்நிலை அமையலை. வரட்டும்" என்றான் அவன்.

"என்ன வரட்டும்?" என்றாள் அவள்.

"இல்லை, அதுக்கான சூழ்நிலை வரட்டும். அப்ப ஐயா யாருன்னு தெரிஞ்சுக்குவீங்க நீங்க."

"என்னது? அந்தப் பக்கம் மீசையை முறுக்கற மாதிரி தெரியுது" என்றாள் அவள்.

அவன் திடுக்கிட்டுப் போனான்.

பேசிக் கொண்டே இயல்பாக அவன் மீசையை முறுக்கிக் கொள்ளத்தான் செய்தான்.

"அது... அது... எப்படி?" என்றான் அவன்.

"ஹலோ, ஹலோ, இந்த மாதிரி பேசும் பொழுது என்ன கெஸ்ச்சர் பண்ணுவீங்க ஜெண்ட்ஸ்ன்னு எனக்குத் தெரியாதா? எத்தனை டீன் ஏஜ் பசங்களை பார்த்துட்டிருக்கேன்."

"அப்ப டீன் ஏஜ்ஜும் நானும் ஒண்ணா?" என்றான்.

"இந்த மேட்டர்ன்னு வரட்டும். எல்லாரும் ஒண்ணு தான்" என்றாள்.

"எந்த மேட்டர்?"என்றான் அவன் குழப்பத்துடன்.

அவள் சொல்ல வந்தது வேறாக இருந்தாலும் சட்டென்று பேச்சை மாற்றி விட்டு "இல்லை இந்த ஹீரோயிசம் என்கிற மேட்டர் வந்தாலே....!" என்று இழுத்தாள்.

அவன் குபீரென்று சிரித்தான். "இசை, நீ கெட்டிக் காரிதான்" என்றான்.

"இல்லைன்னா, உங்க மாதிரி ஆளுங்களோட குப்பை கொட்ட முடியுமா?" என்றாள்.

"நாங்க என்ன நிறைய குப்பை சேர்த்து வச்சிருக் கோமா நீ வாரிக் கொட்டறதுக்கு?" என்றான்.

"பின்னே? கொஞ்சம் கொஞ்சமாக இப்ப குப்பை எடுத்துகிட்டில்ல இருக்கோம்?" என்றாள்.

"ஹலோ, என்ன குப்பையைக் கண்டீங்க?" என்றான்.

"பின்னே? உலகத்தையே நாமதான் தாங்கறோம். உமாவை இடுப்புல வச்சுட்டு நடக்கப் போறோம். அது ஒரு பெரிய ரெஸ்பான்ஸிபிலிட்டின்ற நினைப்புல தேவையில்லாத குப்பை சேர்த்து வச்சிருக்கீங்களே அதைக் கொஞ்சம் இறக்கி வைங்க.அவர் மூச்சு முட்டுதுன்னு சொல்ற அளவுக்கு கொண்டுவந்துட்டீங்க. லெட் ஹிம் பி ஃப்ரீ. அவருக்கு ஃபிரீடம் கொடுங்க."

"ஃபிரீடம் எங்க கொடுக்கறது அவன் தான் எடுத்துட்டு கிளம்பிட்டானே?" என்றான்.

"அது நல்லதுதான் விடுங்க."

அப்போது தான் வல்லபியிடத்தில் சொன்னான். "இசை, இன்னொண்ணு தெரியுமா ஜெயகோபால் நம்ம ஃப்ரெண்டு இருக்காரே அவரு,, நேரடியா அட்வைஸ் பண்ணினா இவனுக்குப் புரியுமோ புரியாதோன்னு இப்ப என்ன பண்ணியிருக்கான் தெரியுமா? உமாவைக் கூட்டிட்டு கிட்டத்தட்ட ஒரு ஆல் இந்தியா டூர் மாதிரி எங்கெல்லாம் திருநங்கைகள் இருக்காங்களோ அந்த

இடங்களுக்கெல்லாம் கூட்டிட்டுப் போயிருக்கான். இப்ப டெல்லியில இருக்காங்க'' என்றான்.

''அப்படியா, இட்ஸ் ரியலி வெரி நைஸ். அந்த மாதிரி எக்ஸ்போஷர் உமாவுக்கு வேணும்தான்'' என்றாள்.

''ஏன் அப்படிச் சொல்றே.?''

''இல்லைங்க. நான் உங்க ஃபேமிலி கூட பழகினதுக் கப்புறம், உமா கூட கொஞ்சம் ஃப்ரெண்ட்ஷிப்னு வந்ததுக்கு அப்புறமும் இவங்களைப் பத்தி நிறைய விஷயம் படிச்சுட்டு இருக்கேன். ஜென்ரலா என்ன தெரியுதுன்னா இந்த மாதிரி ஃபேமிலிஸ்ல அவங்களை வெளியில அனுப்பிடறாங்க. ஆனா நீங்க சிம்ப்ளி கிரேட் சத்யா, நீங்க அவருக்கு மாரல் சப்போர்ட் ஏன் எல்லா சப்போர்ட்டும் கொடுத்திருக்கீங்க. அவர் வெளியில் சுத்தி மத்தவங்களோட நிலைமையெல்லாம் பார்த்துட்டு வரும் போதுதான் உங்களோட அருமை அவருக்குப் புரியும்'' என்றாள்.

அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

''அது இல்லை இசை பாயிண்ட். என்னோட அருமை புரியணுங்கறது இல்லை. எனக்கென்னன்னா அவன் ஃபேமிலில இருக்கணும். பேமிலில இருந்து அவனை சக்சஸ் புல்லா ஆக்கணும். அதுக்காக நாங்க எந்தத் தியாகம் செஞ்சாலும் பரவாயில்லை'' என்றான்.

''சத்யா! நான் இன்னொண்ணு சொல்லட்டுமா?'' என்றாள் இசை.

''சொல்லு?'' என்றான் சத்யா.

''தியாகம் செஞ்சு தியாகம் செஞ்சுன்னு சொல்ற போது அவங்களுக்கு குற்றமனப்பான்மை அதிகமாகும். தே ஃபீல் கில்ட்டி. நீங்க நீங்களா இருந்துட்டு அவங்களை ஏத்துக்கங்க. ஒரு மாற்றுத்திறனாளிகள் ஆகட்டும். மற்றவர்கள் எல்லாரும் என்ன சொல்றாங்க எங்களுக்கு அனுதாபம் காட்டாதீங்க.வி டோன்ட் வான்ட் சிம்பத்தி, எங்களை ஃப்ரீயா உங்களை மாதிரியே நடத்துங்க. அதைத்தான் நாங்க விரும்பறோம்னு சொல்றாங்க.''

''ஓ! ஆமா இல்லே. தட்ஸ் எ பாயிண்ட்'' என்றான் சத்யா

''இந்த லைன்ல யோசிங்க சத்யா'' என்றாள்.

குபீரென்று சிரித்தான் சத்யா.

''டீச்சரம்மா நல்லா பாடம் நடத்தறீங்க. அப்புறம் ரிவிஷன் பண்றேன்னு கொஷ்டின் ஏதாவது கேட்பீங்களா?'' என்றான்.

''மக்கு பசங்களா இருந்தா கேட்கத்தான் வேணும். ஆனா நீங்கதான் ப்ரில்லியண்ட் ஆச்சே?'' என்றாள்.

''ஏய், நீ உங்க ஸ்கூல்லயும் இப்படித்தான் பசங்களை மக்குன்னு திட்டுவியா?'' என்றான்.

''ஹலோ! பசங்களை எப்பவும் மக்குன்னு திட்ட மாட்டேன். யு ஒண்ட் பிலிவ் இட் புத்திசாலின்னுதான் திட்டுவேன். அட புத்திசாலியே அப்படின்னுதான் திட்டுவேன்.''

''அப்ப எங்களையும் அப்படியே திட்றது.?''

"நீங்களா? அப்படி இருக்கற மாதிரி தெரியலையே" என்றாள்.

அவன் 'ஹேய்!" என்றான் மிரட்டுவது போல.

"நிஜமா தாங்க. புரியாத விஷயங்களை யெல்லாம் இழுத்துப் போட்டு அனலைஸ் பண்ணிட்டு இருக்கீங்க. புரிய வேண்டிய விஷயமெல்லாம் புரிஞ்சுக்க மாட்டேங்கறீங்க" என்றாள்.

"எதைப் புரிஞ்சுக்கலை ?"என்றான் அவன்.

"நீங்களே தேடி கண்டுபிடிச்சுக்கங்க. அப்புறம் நான் ஒண்ணு சொன்னா இவ்வளவு மக்கா நானு அப்படின்னு அதுக்கொரு சண்டை போடுவீங்க." என்று சிரித்தாள்.

"சரி இசை, நான் சம்பத் கிட்ட பேசணும், அதுக்கு முதல்லே அம்மா அப்பாகிட்ட மைதிலிக்கிட்ட எல்லாத்துக்கிட்டயும் சொல்லிட்டு உங்க கிட்ட பேசறேன். மறுபடியும் சந்திப்போமா?" என்றான்.

"நாளைக்கு சந்திப்போமா? என்றாள் அவள்.சாலமன் பாப்பையா பாணியில்.

"சந்திக்கலாமே?" என்றான்.

உடனே அவள் "ஹலோ, சீரியஸா எடுத்துக்காதீங்க. நாளைக்கு முடிஞ்சாதான் சந்திக்க முடியும். நாளைக்கு எனக்கு வேற வேலைகள் இருக்கு" என்றாள்.

"ஓகே, நேர்ல பார்க்க முடியலைன்னா பரவா யில்லை. ஃபோன்லயாவது பேசிடுவியாம்" என்றான்.

"ஓய் நாட்?" என்றாள்.

அதற்கு மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந் தார்கள்.

என்ன பேசினார்கள் என்று இருவருக்குமே தெரிய வில்லை. ஆனால் இருவரும் பேசினார்கள்.

பேசி விட்டு ஃபோனை வைக்கும் போது இரண்டு பக்கமுமே பேசினது போதவில்லை. இன்னும் கொஞ்சம் பேசலாம் என்ற எண்ணம் தான் இருந்தது.

இரண்டு பேருமே இரண்டு பக்கமும் சிரித்துக் கொண்டார்கள்.

அத்தியாயம் - 12

"மைதிலி இங்கே வா" என்று யாரோ குரல் கொடுத்தார்கள்.

"மேடம்! இங்க சத்தம் போடக் கூடாது" என்று பியூன் அவர்களை அதட்டினான்.

மைதிலி என்ற பெயரைக் கேட்டவுடனே தன்னை அறியாமல் அந்தத் திசையில் திரும்பிப் பார்த்தான் சம்பத் குமார்.

அவனுக்கு எதிரே இப்பொழுது இரண்டு வாடிக்கை யாளர்கள் அமர்ந்திருந்தார்கள். கணவனும் மனைவியும்.

அவர்கள் ஏதோ லோன் விஷயமாக வந்திருந் தார்கள். அவர்களுடைய விஷயம் என்ன என்று கவனிக்கும்படி மேனேஜர் சொல்லியிருந்தார்.அதில்

ஆழ்ந்த கவனம் செலுத்திக் கொண்டிருந்தவன் மைதிலி என்ற பெயரைக் கேட்டவுடனே திரும்பிப் பார்த்தான்.

நல்லவேளையாக அவன் நினைத்த மைதிலி அங்கே இல்லை.

மெல்லத் தனக்குள் புன்னகைத்துக் கொண்டு திரும்பி வாடிக்கையாளர்களிடம் பேசுவதில் ஆழ்ந்தான்.

ஒரு பதினைந்து இருபது நிமிடம் அவர்களுடன் பேசி அவர்களை அனுப்பி விட்டு சற்று ஓய்வாக அமர்ந்தான்.

"சார், காஃபி" என்று பியூன் கொண்டு வந்தான்.

வாங்கிக் கொண்டான்.

அவனுடைய நினைவு வேறு எங்கோ ஓடியது.

சத்யா ஒரு நல்ல செய்தியை இரண்டு நாட்களுக்கு முன்பு சொல்லியிருந்தான்.

அந்தச் செய்திக்குப் பிறகு சத்யா உற்சாகமாகத்தான் இருந்தான். எல்லோருக்குமே பாரம் இறங்கினாற் போல இருந்தது.

அடுத்த முதல் வேலையாக மைதிலிக்கு மாப்பிள்ளை பார்த்து விடலாம் என்றான் சத்யா.

சம்பத் குமாரும் "சரி பார்க்கலாம்" என்று சொல்லி விட்டு வந்திருந்தான். ஆனால், சத்ய பிரகாஷ் இதுவரையிலும் அவனுடைய பெற்றோர்களிடம் பேசவில்லை.

பேசிவிட்டுச் சொல்லுகிறேன் அதற்குப் பிறகு மேற்கொண்டு புரொசீட் பண்ணலாம் என்று சொல்லியிருந்தான்.

சம்பத்குமார் இன்றைக்குக் காலையில் புறப்படும் பொழுது அவனுடைய அப்பா அவனை அழைத்து ஒரு செய்தியைச் சொன்னார். "சம்பத் நீ அன்னிக்கு மைதிலியோட ஜாதகம் கொண்டுவந்தியே. அதைக் கொடு" என்று கேட்டார்.

"அப்பா! கொஞ்சம் பொறுக்கலாம்னு சொன்னேனே?" என்றான் சம்பத்.

"இந்த விஷயத்திலெல்லாம் அப்படி பொறுக்கக் கூடாதுப்பா. ஆரம்பித்து விட வேண்டும். ஏன்னா ஒண்ணு சரியா வரும், சரியா வராது. தொடர்ந்து பார்த்துக்கிட்டு இருக்கும் போதுதான் ஏதோ ஒண்ணு கிளிக் ஆகும். நீ கொடு" என்றார்.

சம்பத் குமாருக்கு வேறு வழியிருக்கவில்லை. "அப்பா நான் வந்து சத்ய பிரகாஷ்கிட்ட மட்டும் சொல்லி ஜாதகம் வாங்கிட்டு வந்திருக்கேன், இன்னும் மைதிலியோட அம்மா அப்பாவுக்குத் தெரியாது. அவங்ககிட்ட சொன்னதுக்கு அப்புறம் நீங்க அவங்ககிட்ட பேசுங்க" என்றான்.

"அந்த பாயிண்டை எங்கிட்டே விடு ,நான் பேசிக்கறேன் அவங்ககிட்ட. நீங்க பேசறதை விட நான் பேசறது பெட்டரா இருக்கும்" என்றார் அப்பா.

சம்பத் குமார் "சரிப்பா! உங்க இஷ்டம்" என்று சொல்லி விட்டு வந்தான்.

அதற்கு மேலும் மறுத்தால் அது நன்றாக இருக்காது என்பதால் 'உங்க இஷ்டம்ப்பா' என்று சொல்லி விட்டு வந்துவிட்டான். ஆனால் வங்கிக்கு வந்ததற்குப் பிறகு இன்றைக்கு எல்லாம் அந்தச் செய்தியிலேயே அவன் மனசு ஓடிக் கொண்டிருந்தது.

அதற்கு ஏற்றாற்போல் ஏதோ ஒரு மைதிலியை யாரோ ஒரு தோழி குரல் கொடுத்து அழைக்கவும் அவனுடைய சிந்தனைகள் பிய்த்துக் கொண்டு ஓடியது.

'மைதிலிக்கு மாப்பிள்ளை வந்துடுமா? உடனடியா அமைஞ்சுடுமா, அமைஞ்சு உமாகாந்தனை வரவழைக்க முடியுமா?' என்று அவனுடைய சிந்தனைகள் ஓடியது.

இதற்கெல்லாம் முன்பாக இன்னொரு கேள்வி இருக்கிறதே. மைதிலி கல்யாணத்திற்கு உடன் படுகிறாளா இது தெரிய வேண்டுமல்லவா? என்று எண்ணிக் கொண்டான்.

தான் எப்படிக் கேட்பது? வல்லபியை விட்டுக் கேட்போமா? ஏனென்றால் பெண்களுக்கு விருப்பம் இல்லாமல் இறங்கி அதனால் நாளைக்கு வருத்தம் உண்டு பண்ணக் கூடாதே ; என்ற கவலையும் அவனுக்கு இருந்தது.

அந்தக் கவலையைத் தீர்த்துக் கொள்வதற்காக அன்று மாலை வங்கியில் இருந்து கிளம்பியவுடனே நேராக சத்ய பிரகாஷைப் பார்க்கப் போனான்.

சத்ய பிரகாஷ் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தான்.

''சம்பத், இப்பதாம்பா கொஞ்சம் நிம்மதியா சாப்பிட முடியுது'' என்றான்.

''ஆமாம், எல்லாருக்குமே இது ஊவா முள்ளு மாதிரி உறுத்திட்டு தான் இருந்தது.

''எப்படிடா சொல்றது? எப்படிடா வருத்தத்தை காமிச்சுக்கறதுன்னு எல்லாருமே அடக்கித்தான் வாசிச்சோம். ஏன்னா, ஏற்கனவே நீ உமாகாந்தன் மேல நீ ரொம்ப அஃபக்ஷனேட்.அப்படி இருக்கையில நாங்களும் வருத்தப் படற மாதிரி காண்பிச்சா நீ ரொம்ப அப்செட் ஆயிடுவேன்னுதான் நாங்க காட்டிக்கலை'' என்றான்.

''ரொம்ப தாங்க்ஸ்ப்பா'' என்றான் சத்ய பிரகாஷ்.

''அப்புறம் இண்ணைக்குக் காலையில கிளம்பும் போது அப்பா ஒரு விஷயம் சொன்னாங்க'' என்றான்.

''என்ன விஷயம்?'' என்றான் சத்ய பிரகாஷ்.

''மைதிலி ஜாதகத்தைப் பார்க்கணும்கறாரு. ஏதோ அலையன்ஸ் வர்ற மாதிரி சொல்றாரு என்ன பண்ணலாம்'' என்றான்.

''பார்த்துடலாம், ஆனா இன்னும் அம்மா அப்பா கிட்ட பேசலையே. அம்மா அப்பாவுக்கு தெரியாம தானே நான் உனக்கு ஜாதகம் கொடுத்தேன்.''

''நீ வேறேப்பா. எங்க அப்பா அதெல்லாம் நாங்க பார்த்துக்கறோம். நான் அவருகிட்ட சொல்லிக்கிறேன். அப்படிங்கறாரு.''

சத்ய பிரகாஷ் முகம் மலர புன்னகைத்தான்.'' நல்லதுதானேப்பா. ஒரே வேலையா முடிச்சிடலா மில்லே'' என்றான்.

"ஓஹோ! மைதிலிக்குக் கல்யாணம் பண்றது வேலையா?" என்றான் சம்பத் குமார்.

"அது இல்லைப்பா. எங்களுக்கு இந்த மாதிரி ஒரு நட்பு கிடைக்கும்னு நாங்க நினைச்சோமா? நீங்க இப்ப ஃபேமிலியோட ஃப்ரெண்ட்ஸா இருக்கீங்க. எங்களுக்காக கவலைப் படறீங்க. எங்களுக்காக ஸ்டெப் எடுக்கறீங்க. அப்படீங்கறப்ப உங்க அப்பா பார்த்து ஒரு மாப் பிள்ளை கொண்டு வந்தா அது நல்ல மாப்பிள்ளையா தானே இருக்கும்." தொடர்ந்து

"நீங்க எங்க வெல் விஷர் ஆயிட்டீங்க , உங்க வெல்விஷர் நாங்க ஆயிட்டோமில்லே?" என்றான் சத்ய பிரகாஷ்.

"ரொம்ப ஜஸ் வைக்கிறே?" என்றான் சம்பத் குமார்.

அதே நேரத்தில் சம்பத் குமாருக்கு அவனுடைய தந்தையிடம் இருந்து போன் வந்தது.

"சம்பத்து! ஒரு அஸ்ட்ராலயன்ஸ் செட் ஆகும் போல இருக்கு. காலைல தான் சொன்னேன். அவங்க ஜாதகத்தை வாங்கிட்டுப் போய் பார்த்து பொருத்தமா இருக்கு அப்படிங்கறாங்க. எப்பப் பார்க்கலாம் அப்படின்னு முடிவு பண்ணனும். அது வேண்ணா நீ சத்ய பிரகாஷ்கிட்ட முதல்ல கேட்டுட்டு சொல்றியா ?"என்றார்.

"ஏம்பா, இனிமே எல்லாம் நான் பார்த்துக்குவேன். நான் அவங்க கிட்ட சொல்லிக்குவேன் அப்படின்னு சொன்னீங்க?"

"சொன்னேம்பா. கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டாங்க. ஆனா எதுவாயிருந்தாலும் சத்யாவை கேட்கணும், சத்யாவை கேட்கணும் அப்படிங்கறாங்க. நீ கேளேன். சத்யாவை. இப்ப நீ எங்கிருக்கிறே?" என்றார்கள்.

"சத்யா ஆஃபீஸ்ல தாம்பா இருக்கேன்" என்றான் அவன்.

"பார்த்தியா, நல்ல சகுனமா தெரியுது. நீ ஒண்ணு பண்ணு. சத்யாகிட்ட பேசிடு" என்றார் அப்பா.

"சரிங்க அப்பா" என்று ஃபோனை வைத்து விட்டு சத்யா பிரகாஷிடம் விஷயத்தைச் சொன்னான் சம்பத் குமார்.

சொன்னவன் தன்னுடைய சந்தேகத்தையும் சேர்த்துச் சொன்னான்.

"எல்லாம் சரிப்பா. எல்லா ஏற்பாடும் பண்ணிட்டு கடைசியில மைதிலி ஏதாவது சொல்லிடப் போகுது. மைதிலிக்கு விருப்பம் இருக்கா கல்யாணம் பண்ணிக் கிறதுல? அதை முதல்ல தெரிஞ்சுக்கணுமில்லே" என்றான்.

"ஆமா அம்மாவை விட்டுக் கேட்கச் சொல்லு வோமா?" என்றான் சத்யா.

"அது என்னமோ பண்ணப்பா. ஆனா முதல்ல விருப்பம் இருக்கான்னு தெரிஞ்சுக்கோ" என்றான்.

சத்யாபிரகாஷ் அப்பொழுதுதான் அந்த யோசனையைச் சொன்னான். "ஏம்பா, வல்லபியை

விட்டுக் சேட்டா என்ன?வல்லபியை நாளைக்கு வரச் சொல்லேன். மைதிலிகிட்ட பேசச் சொல்லு'' என்றான்.

சம்பத் குமார் ''எனக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லை. உனக்குத்தான் ஃப்ரெண்ட் ஆச்சே? நீயே வல்லபியை கேட்கறது?'' என்றார் சம்பத் குமார்.

''ஓகே! நான் இன்னிக்கு ஃபிக்ஸ் பண்ணிடறேன். நாளைக்கு வல்லபி நாமெல்லாம் கிளம்பி வந்ததுக்கு அப்புறம் போய்...!'' என்று இழுக்க.

''ம் !வல்லபிக்கு ஸ்கூல் இருக்குமில்லே?'' என்றான்.

''இருக்கு, இருக்கு. நாளைக்கு ஸ்கூல் இருக்கு, பட் நாளண்ணைக்கு லீவுன்னு நினைக்கிறேன். ஏதோ புனித வெள்ளியோ என்னமோ சொன்னாங்க.போய் வேண்ணா பேசச் சொல்வோமா?'' என்றான்.

''ஆமாம்பா, லேடிஸ்கிட்டன்னா இன்னும் கொஞ்சம் விவரமா பேசுவாங்க. உள்ளதைச் சொல்லு வாங்க. நம்மகிட்ட சொல்றதுக்கு வெட்கப் படுவாங்க'' என்றான் சத்யா.

''அதுவும் சரிதான்'' என்றான் சம்பத் குமார்.

இதையெல்லாம் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே அவனுடைய உள்ளத்தில் ஒரு லேசான வெறுமை கிளம்பிக் கொண்டிருப்பதை அறிந்தான்சம்பத்.

''ஏம்பா,'' என்று ஏதோ பேசி அந்த நினைவை மாற்றிக் கொள்வதற்கு முயற்சி செய்தான்.

''இல்லை இப்ப உமா'' என்று சம்பத் இழுக்க ''ம் அது தான் சொன்னேனே. இரண்டு நாளைக்கு முன்னாலே

வேணுகோபால் போன் பண்ணாப்ல'' என்றான் சத்ய பிரகாஷ்.

''அது யாரு?'' என்று கேட்டான்.

''அவரு நமக்கு ஒரு ஃபிரண்டு சென்னையில இருக்காரு. இப்ப உமா அவரு கூட தான் இருக்கான். டெல்லியில் இருக்கறதா சொன்னார்.''

''ரொம்ப நல்லதா போச்சுப்பா.இது ஒரு பெரிய கவலையா இருந்தது'' என்றான்.

''இப்ப மைதிலி மேரேஜ் ரெடி பண்ணினா வருவாப்லயா?'' என்று கேட்டான் சம்பத் குமார்.

''தெரியலையேப்பா. ஆனா எப்படியாவது வரணும்.''

''வர வைக்கணும். வந்தா அப்படியே இங்கேயே கோழி அமுக்கற மாதிரி அமுத்திடணும்'' என்றான் சம்பத் குமார்.

''தெரியலையே இவ்வளவு நாளும் நம்ம கைக்கு அடங்கின மாதிரி நினைச்சுட்டு இருந்தேன்.திடீர்னு ஒரு நாளைக்கு துண்டை உதறி தோளில போடற மாதிரி போட்டுட்டு மூச்சு முட்டுதுன்னு போயிட்டான்'' என்றான் சத்ய பிரகாஷ்.

அதைச் சொல்லும் பொழுது அவனது குரலில் ஆழ்ந்த வேதனை தெரிந்தது.

இத்தனை நாள் இது பற்றி அதிகமாக பேசாத சம்பத் குமார் இப்பொழுது உரிமையோடு சொன்னான். ''சத்யா, நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே. அவன் அப்படிக் கிளம்பினது ஒரு வகையில நல்லதுதான்'' என்று.

"என்ன சம்பத், நீயும் இப்படியே பேசறே?" என்றான் சத்யா.

"இல்லைப்பா! உமா போனதுக்கப் புறம் நிறைய பேர்கிட்ட விசாரிச்சேன். நிறைய விஷயங்கள் தெரிஞ்சுட்டேன் ,இதையெல்லாம் நாம வாயால சொன்னா புரியுமோ, புரியாதோ? போயிட்டு வரட்டும். ஃபர்ஸ்ட் ஹாண்ட் எக்ஸ்பிரியன்ஸ்ன்னு சொல்றாங்கல்ல. அது மாதிரி நேரடியான அனுபவம் கிடைக் கட்டும். கிடைச்சதுக்கு அப்புறம் அவன் சீர் தூக்கிப் பார்க்கட்டும், இந்த லைஃப்பா அந்த லைஃப் பான்னுட்டு, அப்புறம் வரட்டும்" என்றான்.

சொல்லி விட்டு "அப்புறம்...!" என்று இழுத்தான் சம்பத் குமார்.

"சொல்லுப்பா" என்றான் சத்ய பிரகாஷ்.

"அவன் லைஃப்பை மட்டுமே நீ நினைச்சுட்டிருக் காதப்பா, உன்னோட லைஃபையும் நீ யோசிப்பா. ஒருத்தருக்காக ஒருத்தர் வாழ்க்கையே தியாகம் பண்றதெல்லாம் நடக்கற காரியம் இல்லை" என்றான்.

அப்பொழுதுதான் சத்யா தன் மனம் திறந்தான். "இத பாரு சம்பத், எனக்கு மேரேஜ் லைஃப் மேலே வெறுப்பெல்லாம் கிடையாது. ஆனால் ஒரு இளம் வயசுப் பையன். அண்ணன் கல்யாணம் பண்ணி... கொழந்தை பெத்து.. அப்படி போயிட்டு இருக்கும் போது அவனுக்கு ஒரு ஏக்கம் வராதா?" என்றான் தொடர்ந்து

"அது எப்படிப்பா? அவன் பார்க்கப் பார்க்க நான் மட்டும் சந்தோஷமா இருக்கறது?" என்றான் சத்ய பிரகாஷ்.

"கஷ்டம்தாம்பா. ஆனா, தன்னுடைய வாழ்க்கை இதுதான்னு அவனுக்கு புரிய வைக்கணும்"

"அவ்வளவு ஏன் இந்த மாதிரி திருநங்கைகள் கூட கல்யாணம் செஞ்சுக்கறாங்க. அப்படின்னு நான் பேப்பர்ல கூட படிச்சிருக்கேன்."

சத்யா கொஞ்சம் அதிர்ந்தாற்போல அவனைப் பார்த்தான். "என்னப்பா சொல்றே நீ" என்றான்,

"இருக்காங்கப்பா சென்னையில ஒரு ஜோடி இருக்காங்க. அதுமாதிரி அவனுக்கும் ஒரு நல்ல ஜோடி கிடைச்சா, ஒரு தோழமை கிடைச்சா அவனும் செட்டில் ஆவான். எப்படி இருந்தாலும் அவனுக்குக குழந்தை பிறக்கறது கஷ்டம், இதை ஏத்துக்கத்தாம்பா வேணும்" என்றான் சம்பத் குமார்.

சத்யா பெருமூச்சு விட்டான்.

"எங்க வீட்டுக்கு வர பொண்ணு என்னை மட்டும் இல்லை என் குடும்பத்தையும் ஏத்துக்கணும். அதுலயும் உமாவோட பிரச்சினைகளை புரிஞ்சுட்டு அவனை ஒரு அன்போட தாய் மாதிரி நடத்தற பொண்ணா இருக்கணும். அப்படி கிடைக்கணுமில்லே" என்றான்.

"கிடைச்சா?" என்றான் சம்பத் குமார்.

"கிடைச்சா பார்க்கலாம்."

"சரி, உனக்கு அந்த மாதிரி ஒரு பொண்ணு கிடைக்கும்னு என் உள் மனசு சொல்லுது. அப்படி வந்தா ஏத்துக்குவியா" என்றான்.

"பார்க்கலாம்பா. நீ முதல்ல மைதிலிக்குப் பாரு" என்றான்.

இரண்டு தோழர்களுமே ஒருவரை ஒருவர் ஆழம் பார்த்துக்கொள்கிறார்கள் என்பது அப்போது அவர்களுக்குத் தெரிய வில்லை.

எங்கேயாவது வல்லபியினுடைய பேச்சை சத்யா எடுப்பானோ என்று சம்பத் குமாரும். மைதிலி திருமணத்தைப் பற்றிய பேச்சை சம்பத் குமார் எடுப்பானோ என்று இரண்டு பேரும் ஒருவரிடம் ஒருவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களுக்கே தெரிந்திருந்தது.

ஆனாலும் தொடர்வோம் என்னும் முறையிலே தங்கள் முயற்சிகளைத் தொடர்ந்தார்கள். அவர்கள் எதிர்பாராதது என்னவென்றால் மைதிலியை பெண் பார்க்கும் ஒரு நிகழ்ச்சியில் நடந்த ஒரு அசம்பாவிதம்.அது ஒரு பக்கம் என்றால் திருமணத்தைக் குறித்து மைதிலியின் கருத்துக்கள் இன்னொரு பக்கத்திலே அவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இரண்டு பேருமே திகைத்துப் போக வேண்டிய நிலைமைகளும் ஏற்பட்டன.

மைதிலி அப்படி ஒரு அதிர்ச்சி வைத்தியத்தை அவர்களுக்கு கொடுத்தாள்.

அத்தியாயம் - 13

இடுப்பில் கையை வைத்துக் கொண்டு கோபமாக நின்று கொண்டிருந்தாள் மைதிலி. எதிரிலே ஏதோ குற்றவாளிக் கூண்டில் நிற்கிறவனைப் போல சத்ய பிரகாஷ் நின்று கொண்டிருந்தான்.

ஒரு நிமிடம் நின்றவன் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தான்.

உமாகாந்தனையும் மைதிலியையும் அவன் எப்பொழுதும் செல்லக் குழந்தைகளைப் போலவே நினைத்தவன் என்பதால் மைதிலியின் கோபம் அவனுக்குச் சிரிப்பைத் தான் மூட்டியது.

லேசான சிரிப்பு இதழ்க்கடை ஓரத்தில் நெளிய தங்கையை வாஞ்சையாக பார்த்தபடி உட்கார்ந்திருந் தான்.

"சிரிக்காதேண்ணா நீ" என்றாள் அவள். மறுபடியும் கோபமாக.

"என்னம்மா நீ புரிஞ்சுக்காம பேசிட்டிருக்கே" என்றான்.

"என்னத்தைப் புரிஞ்சுக்கறது. நீங்க யாரைக் கேட்டுட்டு பொண்ணு பார்க்கற ஏற்பாடெல்லாம் செஞ்சீங்க.,"

"இது நல்லா இருக்கே. உன்னைக் கல்யாணம் பண்ணி அனுப்ப வேண்டாமா? இங்கேயே வீட்ல வச்சுக்க முடியுமா?" என்றான்.

"ஏன் உமாகாந்தன் போயாச்சு, இவ எதுக்கு இங்கே? இவளையும் அனுப்பிடுவோம்னு பார்க்கிறியா?" என்றாள் மைதிலி மறுபடியும் கோபமாக.

சத்ய பிரகாஷ் இப்பொழுது சிரிப்பை அடக்கிக் கொண்டு சீரியஸாக பேச ஆரம்பித்தான் "இத பாரு மைதிலி, உனக்கு இப்ப ட்வெண்டி திரி ஆகப் போகுது. இழுத்துட்டே இருக்கக் கூடாதும்மா. நல்ல மாப்பிள்ளை கிடைச்சா பண்ணிடலாம்.அப்பா அம்மா நான் எல்லாரும் அதைத்தான் பிரியப்படறோம்."

"போண்ணா, நான் அப்படியெல்லாம் எல்லாரையும் விட்டுட்டு போகமாட்டேன்" என்றாள் அவள்.

"என்னம்மா நீ? டீச்சர் டிரெயினிங் முடிச்சிருக்கிறே, குழந்தைத் தனமா பேசறே?" என்றான் அவன்.

அவள் கோபமாக கையைக் காலை உதறிக் கொண்டு அவளது அறையின் மீதிருந்த கட்டிலின் மேல் அமர்ந்தாள்.

அதே நேரத்தில் சம்பத் குமாரும் ஏழிசை வல்லபியும் உள்ளே வந்தார்கள். அவர்களைப் பார்த்த உடனே சத்ய பிரகாஷுக்கு கூடுதல் பலம் சேர்ந்தது போல இருந்தது.

"வாங்க, வாங்க" என்று வரவேற்றான்.

"வாங்க வாங்க கடன்தாம்ப்பா "என்றான் சம்பத் குமார்.

"ஆமாம் நிறைய கடனைக் கொடுத்தா தானே உங்களை பொழைப்பு நடக்கும்" என்றான் சத்ய பிரகாஷ்.

"என்ன பேங்க் காரங்களைப் பார்த்தாலே கடன்காரங்கன்னு நினைச்சுப்பிங்களா," என்றான் சம்பத் குமார்.

"அப்படித்தானேப்பா சிக்க வச்சுடறீங்க" என்றான் சத்ய பிரகாஷ்.

இரண்டு பேரும் இப்படியே சிரித்துக் கொண்டே பேசிக் கொண்டே திரும்பினார்கள். "என்ன மைதிலி கோபமா இருக்கா போல இருக்கு" என்றாள் ஏழிசை வல்லபி.

"அதை ஏன் கேட்கறே? மைதிலி இப்ப ஃபுல் ஸ்பீட்ல கோபத்துல இருக்கறாப்ல என்னன்னு கேளு" என்றான் சத்ய பிரகாஷ்.

சத்ய பிரகாஷ் ஏழிசை வல்லபியிடம் உரிமையாகப் பேசுவதை லேசாக கவனித்துக் கொண்டான் சம்பத் குமார்.

"என்னவாம்?" என்றாள் ஏழிசை வல்லபி.

கேட்டுக் கொண்டே போய் அவளது அருகிலே அமர்ந்தாள்.

"இல்லை, பொண்ணு பார்க்கற ஏற்பாடு அவளுக்குப் பிடிக்கலையாம்" என்றான்.

சம்பத் குமார் "உடனே இது எல்லாப் பொண்ணுங்களும் சொல்றதுதானே?" என்றான்.

மைதிலி இதுவரை இல்லாமல் உரிமை எடுத்துக் கொண்டவள் போல. அவனைப் பார்த்து முறைத்தாள். "நான் கேட்டேனா?" என்றாள்.

"என்னத்தை?" என்றான் சம்பத் குமார்.

"இல்லை, எனக்குக் கல்யாணம் பண்ணி வைங்கன்னு கேட்டேனா. நீங்களே இனிஷியேடிவ் எடுத்தீங்களா" என்றாள்?

சம்பத் குமார் இந்த நேரடியான தாக்குதலை எதிர்பார்க்கவில்லை.

சத்ய பிரகாஷ் சட்டென்று எழுந்தான்,

"இதப்பாருப்பா, அண்ணனும் தங்கையும் வந்திருக்கீங்க, இவளை எப்படி சமாதானப் படுத்துவீங்களோ படுத்துங்க. அவ உங்களைப் படுத்தினாலும் சரி, நீங்க அவளைப் படுத்தினாலும் சரி ஆனா நாளைக்குப் பொண்ணு பார்க்க வர்றாங்க" என்றான்.

"பேசாதேண்ணா" என்றாள் மறுபடியும் மைதிலி.

"நான் பேசினாலும் பேசாட்டியும் வறப்போறாங்க, அதுதான் உண்மை" என்று சற்றே கோபமாக சொல்லி விட்டு எழுந்து வெளியே போய் ஹாலில் அமர்ந்து கொண்டான்.

பிறகு "நான் கொஞ்சம் நடந்துட்டு வர்றேன்." என்று வெளியே நடக்கப் போயிவிட்டான்.

கோபம் அதிகமாக வரும் பொழுது அந்த மாதிரி ஒரு இருபது நிமிடங்கள் உலவி விட்டு வருவான்.

அது போல இப்பொழுது கிளம்பிவிட்டான்.

ஏழிசை வல்லபியும் சம்பத் குமாரும் மைதிலியை அன்புடன் பார்த்தார்கள். "என்னங்க மைதிலி நீங்களே இப்படிச் சொல்றீங்க?" என்றான் சம்பத் குமார்.

"நாங்களே என்ன நாங்களே, இப்பதான் உமா வெளியே போய் இருக்கான். அம்மா அப்பா, அண்ணன் எல்லாரும் மூட் அவுட்ல இருக்காங்க. இப்ப நான் மட்டும் கல்யாணம் பண்ணிட்டு கிளம்பிட்டா நல்லா இருக்குமா?" என்றாள்.

"ஐயோ, புரிஞ்சுக்க மைதிலி. உனக்கு கல்யாண ஏற்பாடு செஞ்சா ஒருவேளை உமாகாந்தன் திரும்பி வர்றதுக்கு வாய்ப்பு இருக்கில்ல. அதுக்குத்தான் இந்த ஏற்பாடு "என்றாள் ஏழிசை வல்லபி.

"இது நல்லா இருக்கே, அவன் திரும்பி வருவாங்கறதுக்காக நான் போய் யாருகிட்டயாவது மாட்டிக்க முடியுமா?" என்றாள்.

சம்பத் குமார் சிரித்தான். "யாருகிட்டயாவது மாட்டிவிடுவோமா? நல்ல ஆளா பார்த்துத்தான் மாட்டுவோம்."

"என்னத்தை நல்ல ஆளா பார்த்து மாட்றது. யாரோ வருவாங்களாம். அவங்க முன்னாடி போய் நாங்க காட்சிப் பொருளாட்டம் நிக்கணுமாம்.அவங்க பார்த்து என்னை புடிச்சிருக்குன்னு சொல்லுவாங்களாம் உடனே பசுமாடாட்டம் தலையாட்டணுமா நான்?" என்றாள்.

"ஓஹோ இது உரிமைப் போராட்டமா? சரிப்பா சரி நீங்க ரெண்டு பேரும் பேசிக்குங்க" என்று சொல்லி விட்டு சம்பத் குமார் வெளியே வந்தான்.

சரியாக அந்த நேரத்திற்கு கேட்டின் அருகில் நின்று கொண்டிருந்த சத்யாவைப் பார்த்து "சத்யா இருப்பா.

நானும் வர்றேன். இரண்டு பேரும் போயிட்டு வரலாம்'' என்றான்.

இரண்டு பேரும் அருகிலே இருந்த ஒரு பார்க்கிலே சற்று நேரம் அமர்ந்து விட்டு வரலாம் என்று கிளம்பினார்கள்.

''ஆமாப்பா! லேடிஸே பேசி முடிவு பண்ணட்டும்'' என்றான் சம்பத் குமார்.

ஏழிசை வல்லபியும் கூட மைதிலி எல்லாப் பெண்களையும் போலத்தான் தன்னுடைய மறுப்பை தெரிவிக்கிறாள் என்று எண்ணிக் கொண்டான். ஆனால் மைதிலி உண்மையிலேயே தீவிரமாக ஏதோ கருத்துச் சொல்ல வருகிறாள் என்பது இப்போது அவளுக்குப் புரிந்தது

''நீங்க சொல்லுங்க இசை. எனக்கெல்லாம் இந்தப் பொண்ணு பார்க்கற படலமே பிடிக்கறதில்லை. யாரோ ஒருத்தங்க புது ஃபேமிலி திடீர்னு வந்து புரொபோசல் பண்ணுவாங்களாம். எந்த விதத்திலும் ஆராயாம நான் போய் அவங்க பொண்ணு பார்க்கற படலதுக்கு நிக்கணுமா?''

''சரி, அது பிடிக்கலைன்னா பரவாயில்லை ,ஏதாவது கோயில்ல வச்சுப் பார்த்துக்கலாம். அப்படி இல்லைன்னா ஏதாவது தியேட்டர்ல வச்சுப் பார்த்துக்கலாம். இல்லை தூரத்துல அவங்க ஒருபக்கம் நம்ம ஒருபக்கம் நின்னு கூட பார்த்துக்கலாம், அந்த மாதிரி ஏதாவது ஒரு ஏற்பாடு பண்ணிக்கலாமா?'' என்றாள் ஏழிசை வல்லபி.

இப்போது மைதிலிக்கு இன்னும் கோபம் அதிகரித்தது.

''கோபப்படுத்தாதீங்க, எப்படி இருந்தா என்ன? எல்லாக் கருத்தும் ஒண்ணுதான்.''

''இல்லை, நீதான் காட்சிப் பொருளா நிக்கறதுதான் புடிக்கலைன்னு சொல்றயே?. இல்லை ஒரு ஹோட்டல்ல கூட பார்ட்டி மாதிரி வச்சுக் கூட மீட் பண்ணலாம்'' என்றாள் ஏழிசை வல்லபி.

மைதிலி ஒரு பெருமூச்சு விட்டாள்.

''என் பாய்ண்டே உங்களுக்குப் புரியலை.''

''என்னதான்உன் மனசுல இருக்கு சொல்லு'' என்றாள்.

''இப்ப எனக்கு கல்யாணம் பிடிக்கலை'' என்றால்.

''ஏன்?'' என்றாள் ஏழிசை.

''இப்பதான் உமா ஃபேமிலியை விட்டு வெளிய போயிருக்கான். அதுவே ,எல்லாருக்கும் வருத்தமா இருக்கு. இந்த சூழ்நிலையில் நானும் போனேன்னா அண்ணன் அம்மா அப்பா எல்லாரும் கஷ்டப்படுவாங்க'' என்றாள் மைதிலி.

''அது உண்மைதான் ஆனா, உங்க அண்ணன் என்ன நினைக்கிறார்னா இந்த மாதிரி ஒரு கல்யாண ஏற்பாட்டைப் பண்ணினா அட்லீஸ்ட் உமாகாந்தனுக்கு ஒரு பாதி பர்டனாவது குறையும். ஏன்னா அவன் தனக்காக எல்லாரும் தியாகம் பண்றதா நினைக்கிறான். மைதிலிக்கு ஒரு கல்யாணம் நடந்துட்டா அட்லீஸ்ட்

அவனுக்கு சரி மைதிலிக்காவது நடந்ததே அப்படிங்கற ஒரு திருப்தி வரும். தன்னால குடும்பத்துல ஒரு பாதிப்பும் இல்லை என்ற திருப்தி வரும்னு நினைக்கிறாரு.''

மைதிலி அமைதியாக அமர்ந்து கொண்டாள். மெல்ல தான் சொல்வதை அவள் கேட்க ஆரம்பிக் கிறாள் என்ற உடனே, ஏழிசை வல்லபி இன்னொரு அஸ்திரத்தை எடுத்து வீசினாள்.

''நல்லா யோசிச்சுப் பாரும்மா. பொண்ணு பார்க்க வர்றவங்க கிட்ட உங்க அண்ணன் சம்மதம் சொல்லி யாச்சு. உங்க அம்மா அப்பா சம்மதம் சொல்லியாச்சு. இப்பப் பார்த்து வேண்டாம்னு சொன்னா அவங்க என்ன நினைப்பாங்க? அவங்களுக்கு மதிப்பில்லாம போயிடும் இல்லை.?''

மைதிலி மறுபடியும் ஒரு பெருமூச்சு விட்டுட்டு ''அதுக்காக வேண்ணா ஒத்துக்கறேன். வந்து பார்த்துட்டு போகட்டும். ஏன்னா வர்றவங்களை வேண்டாம்னு சொல்ல முடியாது. பட் இந்த மாப்பிள்ளையை கல்யாணம் பண்ணிக்கோ எல்லா விதத்துலயும் உனக்கு பொருத்தம், நல்லவங்க, அப்படின்னு என்னை தொந்தரவு பண்ணக் கூடாது'' என்றாள்.

''ஓ.கே வரட்டும் உண்மையாவே உனக்குப் புடிச்சிருந்தா சொன்னா போதும்.''

மைதிலி மறுபடியும் ஏழிசை வல்லபியை பார்த்தாள். ''நான் சொல்றது உங்களுக்குப் புரியவேயில்லை'' என்றாள்.

ஏழிசை வல்லபி ''என்னத்தை புரியலை புரியலைன்னு சொல்றே''

''எனக்கு இந்த மாதிரி புதுசா, தெரியாதவங் களோட அலையன்ஸே புடிக்கலை.''

''ஓகே விடு, இப்போதைக்கு வந்துட்டுப் போகட்டும். அப்பா அம்மா கிட்ட சொல்லி நல்ல தெரிஞ்ச ஃபேமிலியில பார்க்கச் சொல்லுவோம்.''

மைதிலி ஒரு வழியாக சமாதானம் செய்யப் பட்டாள்.

இருபது நிமிடம் கழித்து சத்யபிரகாஷும் சம்பத் குமாரும் வந்தார்கள். அதற்குள்ளாக மைதிலியும் ஏழிசை வல்லபியும் பேசிக் கொண்டே சமையல் அறை போய் அவர்களுக்குத் தேவையான சிற்றுண்டிகளை தட்டில் எடுத்து வைத்துக் கொண்டு வந்தார்கள்.

''என்ன சமாதானம் ஆயாச்சா?'' என்றான் சத்யா,

ஏழிசை வல்லபி அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

அந்த அழகான புன்னகையைப் பார்த்து ஒரு நிமிடம் திகைத்துப் போய் நின்று விட்டான் சத்யா.

வல்லபி அதைக் கண்டு கொள்ளாதவள் போல ''ஒரு மாதிரி சரி பண்ணியிருக்கேன்'' என்றாள்.

''என்னத்தை ஒரு மாதிரி சரி பண்ணியிருக்கீங்க'' என்று மைதிலி பழித்துக் காட்டினாள்.

எல்லாரும் புன்னகைத்தார்கள். ''மைதிலிக்கு கல்யாணம் ஓகேவாம், ஆனால் இப்படி காட்சிப்

பொருள் மாதிரி பொண்ணு பார்க்கப் போய் நிக்கறது எல்லாம் பிடிக்கலையாம்'' என்றாள்.

''அது மட்டுமா சொன்னேன்?'' என்றாள் மைதிலி.

''அப்புறம் இன்னொண்ணும் சொன்னா'' என்றாள் தட்டுக்களில் இனிப்பும் காரமும் எடுத்துக் கொண்டே ''சாப்பிடுங்க'' என்றாள் ஏழிசை வல்லபி.

அவர்கள் எல்லோருமாக சோஃபாவில் அமர்ந்து கொண்டார்கள்.

''வேறு என்ன சொன்னாள்?'' என்றான் சத்ய பிரகாஷ்.

அவள் மைதிலியைப் பார்த்து லேசாக புன்னகைத்து விட்டுத் திரும்பி ''இல்லை, மைதிலி சொல்றா யாரோ தெரியாத ஆசாமிக புதுசா வந்து பொண்ணு கேட்பாங்க அவங்களுக்கு பொண்ணைக் கொடுத்துடுவீங்களா? அப்படின்னு கேட்கறா,?'' என்றாள்.

சத்ய பிரகாஷும் சம்பத் குமாரும் இந்த விதமான அணுகுமுறையை எதிர்பார்க்கவில்லை என்பதால் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். ''இது என்னடா புது வம்பா இருக்கு?'' என்று எண்ணிக் கொண்டான் சத்யா.

''ஆமாம் என்னமோ ஜாதகம் பார்த்தோம், ஏதோ புரொபோஸல் வந்துச்சு, ஜாதி இது அப்படின்னு போயிட்டு நாளைக்கு வருத்தம் வரக் கூடாது, நல்லாத் தெரிஞ்ச ஃபேமிலியா இருக்கணுமாம்'' என்றாள் ஏழிசை வல்லபி.

சம்பத் குமாருக்கு லேசாக புரிகிறாற் போல இருந்தது. ஆனால் எதுவும் காட்டிக் கொள்ளாதவன் போல ''இதுதானே மைதிலிக்கு பிரச்சினை? ஒண்ணும் கவலைப்படாதீங்க, அப்பா அம்மாவுக்கு தெரிஞ்ச ஃபேமிலிதான் இது, .நல்ல ஃபேமிலியா பார்த்துதான் சொல்லியிருக்காங்க'' என்றான்.

மைதிலிக்கு ஒன்றும் பேசுவதற்கு வழியில்லை. சற்று நேரம் திருமணத்தைப் பற்றிப் பேசி சிரித்துக் கொண்டு இருந்தார்கள்.

''அண்ணா நீ எப்படியோ என்னை தாட்டி விடலாம்னு பார்க்கறே? சும்மா விடமாட்டேன் இருநூறு பவுன் போடணும்'' என்றாள் மைதிலி.

''இருநூறு பவுன்தானே, விடு. வீட்டையே எழுதி வச்சிடறேன்.''

''வீடு நாளைக்குக் கொடுப்பியோ கொடுக்க மாட்டியோ'' என்றாள்.

''இல்லைம்மா, இப்பவே எழுதி வச்சிடறேன்.''

''ஓஹோ! இருநூறு பவுன் போடறதுல இருந்து தப்பிக்கிறியா?'' என்றாள் மைதிலி.

''சரி விடு. இப்ப தானே இடம் வாங்கியிருக்கேன் .ஒரு கமிட் மெண்ட்ல மாட்டியிருக்கேன். உனக்கு கண்டிப்பா ஒரு அக்ரி மெண்ட் போட்டுத் தந்துடட்டுமா'' என்றான் சத்யா.

''சரி'' என்றாள் மைதிலி.

எல்லாரும் சிரித்தார்கள். அதற்குப் பிறகும் மைதிலி சீரியஸாக முகபாவத்துடன் சொன்னாள். ''அண்ணா

நகை கேட்காதவங்களா பாருண்ணா. நகை கேட்டாங் கன்னா எனக்கு வேல்யூ இல்லைன்னு அர்த்தம். நான் கொண்டு போற நகைக்குத்தான் வேல்யூன்னு அர்த்தம். அப்படி மாப்பிள்ளையே வேண்டாம்.''

உடனே சத்யா சம்பத் குமாரைப் பார்த்து ''அப்படி எவணாவது இளிச்சவாயன் மாட்டுவான்கறே.?

''இருப்பாங்க இவங்களுக்குன்னு பொறந்த இளிச்சவாயன் இருக்க மாட்டானா?'' என்றான் சம்பத். மறுபடியும் சிரித்தார்கள்.

''எங்களைக் கண்டால் அப்படி இருக்கா?'' என்று இசையும், மைதிலியும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டார்கள்.

சம்பத் குமாரும், சத்யாவும் வரிந்து கட்சி கட்டிக் கொண்டு சற்று நேரம் வாதாடிக்கொண்டிருந்தார்கள்.

சற்று நேரத்தில் சத்யா ''எனக்கு மறுபடியும் ஒர்க் ஷாப் போகணும். கொஞ்சம் வேலை இருக்கு. நீங்க கொஞ்ச நேரம் இருந்துட்டுப் போங்க'' என்றபடி கிளம்பினான்.

வல்லபியும் சம்பத் குமாரும் அவளோடு சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களது இரண்டு பேருடைய பெற்றோர்களும் அன்றைக்கு ஏதோ ஒரு விசேஷம் வெள்ளிக் கிழமை கோவிலுக்குப் போகிறோம் என்று கிளம்பியிருந் தார்கள்.

''நல்லா கூட்டு சேர்ந்துட்டாங்க உங்க அம்மா அப்பாவும் எங்க அம்மா அப்பாவும் இல்லே மைதிலி'' என்றாள் ஏழிசை வல்லபி.

''போயிட்டு வரட்டும்பா, இப்படியாவது அவர்களுக்கு சந்தோஷம் கிடைக்கட்டும்'' என்றான் சம்பத் குமார்.

''ஓகே ஓகே நான் சும்மா வேடிக்கைக்குத்தான் சொன்னேன்'' என்றாள்.

பேசிக் கொண்டே ஏழிசை வல்லபி ''இரும்மா இதெல்லாம் கொண்டு போய் சிங்க்ல போட்டுட்டு வந்துடறேன்'' என்று அந்தப் பக்கம் போனாள்.

அந்த நேரத்தில் மைதிலி சம்பத் குமாரைப் பார்த்துக் கேட்டாள். ''என்னமோ, உங்களுக்குத் தெரிஞ்ச ஃபேமிலி உங்களுக்குத் தெரிஞ்ச ஃபேமிலின்னு சொல்றீங்களே எங்களுக்குத் தெரிய வேண்டாமா? எங்களுக்குத் தெரிஞ்ச பேமிலியில இருந்து மாப்பிள்ளை கொண்டு வாங்க'' என்றாள்.

சம்பத் குமார் இதை எதிர்பார்க்கவில்லை.

''உங்களுக்குத் தெரிஞ்ச ஃபேமிலியா?'' என்று விழித்தான்.

அவள் அவனை ஒருவிதமாக பார்த்தாள் 'இதுகூட புரியலையா' என்பது போல, கிட்டத்தட்ட தலையில் அடித்துக் கொள்ளாத குறையாக கிண்டலாக சிரித்து விட்டு அறைக்குப் போனாள்.

சம்பத் குமார் அவள் போன திசையைப் பார்த்து ஏதோ கொஞ்சம் புரிந்தவன் போல குப்பென்று உள்ளே மகிழ்ச்சி பொங்க அமர்ந்திருந்தான்.

சமையல் அறையில் இருந்து வந்த ஏழிசை வல்லபிக்கு அண்ணன் முகத்தைப் பார்த்த உடனே ஆச்சரியமாக இருந்தது.

அவ்வளவு மகிழ்ச்சி அந்த முகத்திலே தெரிந்தது.

"எண்ணண்ணா விஷயம்? என்றாள்

"மைதிலி கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டாப்ல" என்று அவன் பேச்சை மாற்றினான்.

அதற்குள்ளாக உள்ளே இருந்த மைதிலி. 'நான் சொன்ன கண்டிஷன் ஞாபகம் இருக்கட்டும்" என்றாள்.

"இருக்குது, இருக்குது .நாங்க கிளம்பறோம்" என்றான் சம்பத் குமார்.

அவர்கள் கிளம்புகிறோம் என்ற உடனேயே சட்டென்று வெளியே வந்தாள்.

அவள் முகம் சிவந்து கிடந்தது. என்ன நடக்கிறது இங்கே என்பது போல் ஏழிசை வல்லபி இருவரையும் மாறி மாறிப்பார்த்துக் கொண்டு சிந்தனையுடன் போய் அண்ணனின் வண்டியில் ஏறினாள்.

வண்டி வேகமெடுத்தது.

அத்தியாயம் -14

"என்னத்துக்கு இவ்வளவு கஷ்டப் படறீங்க.' கொஞ்சம் கடையில வாங்கி வச்சா தீர்ந்தது"என்று கேலி செய்து கொண்டிருந்தார்கள் பெரியவர்கள் இருவரும்.

"கடையில எதுக்கு வாங்கறது இத்தனை பேரு லேடிஸ் இருக்கோம். சுத்தமா செஞ்சா ஒரு நாலு நாளைக்கு வச்சுக்கலாம் .எல்லாரும் சாப்பிட்டுக்கலாம்" என்றாள் திலகம்.

"எப்படியோ செல்வ கணபதி சார்! நம்மளை வச்சு பரிசோதனை பண்றதுன்னு இவங்க முடிவு பண்ணிட்டாங்க" என்று கிண்டல் செய்தார் ஏழுமலை.

திலகம் முறைத்தாள். "என்னமோ இது வரைக்கும் நாங்க செஞ்சு கொடுத்த பலகாரத்தை சாப்பிடாத மாதிரி நாடகம் பண்றாரு" என்றாள்.

"ஆமாங்க, இவங்களுக்கு இதே வேலையாப் போச்சு. பெண்கள்னா உடனே அவங்க செய்யற சமையலை கிண்டல் பண்ண வேண்டியது. பத்து நாளைக்கு ஹோட்டல்ல சாப்பிடச் சொல்லுங்க. அப்பத் தெரியும் அல்சர் அது இதுன்னு வந்து நிப்பாங்க" என்றாள் கருணாம்பிகை.

"பாருங்கப்பா! பெண்கள் ரெண்டு பேரும் சேர்ந்துட்டாங்க" என்று சிரித்துக் கொண்டார்கள்.

ஏழிசை வல்லபி பிற்பகலில் விடுமுறை போட்டு விட்டு வருவதாக சொல்லியிருந்தாள். அதற்குள்ளாக கருணாம்பிகையும் திலகமும் சேர்ந்து கொஞ்சம் இனிப்புக்கள் தயாரித்து விடலாம் என்று செய்து கொண்டிருந்தார்கள்.

"போதும்மா. அளவாச் செய்ங்க. அப்புறம் நீங்க டயர்டா ஆயிடுவீங்க." என்றார் ஏழுமலை.

மைதிலியும் உதவி செய்து கொண்டிருந்தாள்.

நித்ய கல்யாணியும் வந்திருந்தாள். அவர்கள் வீடு கலகலப்பாக இருந்தது.

சம்பத் குமார் பிற்பகலில் விடுமுறை போட்டு விட்டு வருவதாகச் சொல்லியிருந்தான். மதியம் இரண்டு மணி வாக்கில் அவர்களும் வந்து சேர்ந்து விட்டார்கள்.

சத்ய பிரகாஷும் வந்து சேர்ந்து விட்டான். வீடே நிறைவாக இருந்தது.

இரண்டு குடும்பங்களும் சேர்ந்து எல்லாவற்றையும் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள்.

நித்யா "மைதிலி, நான் உனக்கு ஃபேஷியல் பண்ணி விடறேன்" என்றாள்.

சம்பத் குமார் சிரித்தான். "சிக்கிட்டியா?" என்றான்.

"ஏம்பா! அவளை கேலி பண்றே? அவதான் உண்மையாவே கோர்ஸ் எடுத்துருக்காளே" என்றார் செல்வ கணபதி.

"எப்படியோ யாரு கிடைப்பாங்கன்னு பார்த்துட்டிருந்தா. நீ கிடைச்சே?" என்றான் சம்பத். "போண்ணா" என்று சொல்லிவிட்டு நித்ய கல்யாணி மைதிலிக்கு அழகாக அலங்காரம் செய்து விட்டாள்.

எளிமையாக இருந்தது.

பார்ப்பதற்கும் நன்றாக இருந்தது.

"ஏம்பா! எத்தனை மணிக்கு வர்றாங்க" என்றான் சத்ய பிரகாஷ்.

"நாலு மணிக்கு வர்றதா சொல்லியிருக்காங்க" என்றார் செல்வ கணபதி.

வீடே எதிர்பார்ப்பில் இருந்தது.

"ஏம்பா எதிர்பார்ப்பு இருக்கா? ஏதாவது கேட்டிருங்காங்களா.?"

"இல்லைப்பா. கண்டிஷன்லாம் எதுவும் சொல்லலை. பொண்ணு புடிச்சுதுன்னா அப்புறம் பார்த்துக்கலாம்னு சொல்லியிருக்காங்க. முதல்ல நாலு மணிக்கு வரட்டும். பொண்ணை அவங்க பார்க்கட்டும். மைதிலிக்கும் அவங்களைப் பிடிக்கணும் இல்லையா? அதுக்கப்புறம் முடிவு பண்ணிக்கலாம்" என்றார் செல்வகணபதி.

"அது சரி அங்கிள். நல்ல குடும்பம் தானே?" என்று திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டான்.

"ரொம்ப நல்ல குடும்பம்தாம்பா, புரோக்கர் தான் வந்து சொன்னாரு. ஆனா எனக்கும் தெரிஞ்ச குடும்பம்தான். ரொம்ப நல்ல குடும்பம்தான்" என்றார் செல்வகணபதி.

சத்ய பிரகாஷ் சற்றே ஏமாற்றம் அடைந்தான். "அங்கிள், அப்ப நீங்க நேரடியா பேசலையா? ஃபோன்ல பேசினதுதான். வரட்டும். வந்து பொண்ணு பிடிச்சிருந்தா அப்புறம் மேற்கொண்டு நாம உட்கார்ந்து பேசிக்கலாம்" என்றார் செல்வகணபதி.

எல்லாருமே நாலு மணி என்கிற போது முகம் திருத்தி உடை மாற்றி எதிர்பார்த்துக் கொண்டு காத்துக் கொண்டிருந்தார்கள்.

மைதிலி மட்டும் சற்றே முகத்தைத் தூக்கிக் கொண்டவள் போல உள்ளே அமர்ந்திருந்தாள்.

சம்பத் குமார் ஏழிசை வல்லபி உள்ளே இருந்தவளிடம் 'இசை' என்று ஏதோ சொல்லப் போனான்.

"என்னண்ணா?" என்று கேட்டாள் அவள்.

"அம்மா, கூப்பிடறாங்க பாரு." என்றவன் அவளிடம் "என்ன மைதிலி, இது? கொஞ்சம் சந்தோஷமா இருக்கலாமில்லே?" என்றான்.

"எனக்கு ஒண்ணும் இதெல்லாம் பிடிக்கலை."

"பரவாயில்லைங்க. உங்களுக்குப் பிடிக்கலைன்னா பரவாயில்லை. உங்கண்ணனுக்காக கொஞ்சம் ஹாப்பியா மூஞ்சியை வச்சுக்கோங்க" என்றான்.

"அண்ணனுக்காக பிடிக்காததெல்லாம் செய்ய முடியுமா?" என்றாள்.

"ஹலோ! ஜஸ்ட் டிராமா பண்ணுங்க போதும். அவங்க வந்து பார்த்த உடனே அப்படியே உங்களைத் தூக்கி நாங்க அவங்ககிட்ட கொடுத்துடப்போறது இல்லை. நிறைய புரொஸீஜர் இருக்கு. அதுக்கப்புறம் பேசுவோம். அப்புறம் பிடிக்கலைன்னா பார்ப்போம்.ஜஸ்ட் முதல்ல மாப்பிள்ளையை பிடிக்குதான்னு மட்டும் பாருங்க."

மைதிலியின் முகம் வாடி விட்டது.

அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

கடலளவு உணர்ச்சிகள் அந்த முகத்திலே தெரிந்தன.

சம்பத் குமார் ஒரு கணம் திகைத்து நின்று விட்டான்.

அடித் தொண்டையில் இருந்து 'மைதிலி' என்று குழைந்து கொண்டு குரல் மேலே வந்தது.

"என்ன மைதிலி இது?" என்றான்.

"அதான், மாப்பிள்ளை வர்றார்னு சொல்லிட்டிங்கள்ல, போங்க! தயவு செய்து வெளியில போங்க" என்றாள் அவள் கோபமாக.

சம்பத் குமார் லேசான திகைப்புடன் வெளியே வந்து அமர்ந்து விட்டான்.

தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்கு பத்துப் பதினைந்து நிமிடங்களுக்கு மேல் தேவை இருந்தது.
"என்னப்பா என்ன?" என்று வந்தான் சத்ய பிரகாஷ்.

"ஒண்ணும் இல்லை சத்யா. இன்னிக்கு ஆஃபீஸ்ல கொஞ்சம் வேலை. கொஞ்சம் டயர்ட் ஆயிட்டேன்" என்றான்.

"சரி, சரி, உனக்கு ஃப்ரெஷ்ஷா காஃபி கொண்டு வந்து கொடுக்கச் சொல்றேன். குடி" என்றான்.

நித்யா ஓடிப்போய் உரிமையாக உள்ளே நுழைந்து காபி தயாரித்துக் கொண்டு வந்து அண்ணனுக்குக் கொடுத்தாள்.

உண்மையில் அந்த நேரத்தில் சம்பத் குமாருக்கு காஃபி தேவையிருக்கவில்லை. ஆனால் வேண்டாம் என்று சொன்னாலும் தலைவலி என்று தான் சொன்ன பொய்க்கு நிறைய விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும் என்பதால் காஃபியை வாங்கிக் கொண்டான்.

அமைதியாக அருந்தினான்.

'புரியலையா?' என்பது போல தன்னை நிமிர்ந்து பார்த்த மைதிலியின் கண்கள் தான் ஜூம் செய்தாற் போல அவன் முகத்திற்கு அருகே வந்து வந்து போனது.

இனம் புரியாத உணர்வுகள் அவனுக்குள்ளே இருந்து கிளம்பின.

ஒரு பரவச நிலையிலும் இருந்தான்,. வேதனை கலந்த இன்ப நிலை போல ஏதோ ஒரு உணர்வு அவனைத் தாக்கியது போல அமர்ந்து கொண்டான்.

ஒரு பத்து நிமிடங்களுக்குப் பிறகு தன்னைத் தானே சுதாரித்துக் கொண்டு அப்பாவிடம். "அப்பா எத்தனை மணிக்குன்னு சொன்னீங்க?" என்றான்.

"நாலு மணிக்குன்னு சொன்னாங்கப்பா" என்றார் அவர் மறுபடியும்.

அவன் கைக் கடிகாரத்தைப் பார்த்தான்.

மூன்று . ஐம்பது ஆகிவிட்டது. இன்னும் பத்து நிமிடத்தில் வரப் போகிறார்கள்.

மைதிலிக்கு பிடிக்காத ஒன்றை செய்யச் சொல்லி அவளை வருத்துகிறோம் என்று அவனுக்கும் வருத்தமாகத்தான் இருந்தது.

சத்யா மெதுவாக அவன் அருகிலே வந்து மெல்லிய குரலில் "என்னப்பா விஷயம்?" என்றான்.

"இல்லைப்பா. மைதிலிக்கு இந்த ஏற்பாடு பிடிக்கலை போல இருக்கு" என்றான்.

"எனக்கும் தெரிஞ்சது. சரி விடு. வர்றவங்க வந்துட்டுப் போகட்டும் .அதுக்கு அப்புறம் பார்த்துக் கலாம்" என்றான் அவனும் மெல்லிய குரலில்.

ஹாலில் இருந்த அந்த பழைய காலத்து கடிகாரம் நாலு முறை அடித்து ஓய்ந்தது.

அவர்களுடைய தாத்தா காலத்தில் இருந்து இருக்கிற கெடிகாரம் என்பதால் அதற்கொரு மரியாதை அவர்கள் வீட்டிலே இருந்தது.

அது அடித்ததைத் திரும்பிப் பார்த்த செல்வ கணபதி கூட "பெண்டுலம் கெடிகாரம்! இப்பெல்லாம் எந்த வீட்டுலயும் இருக்காது!" என்றார்.

"ஆமாம். எங்க தாத்தா வாங்கினது அதனால பெருமையா வச்சிருக்கோம்" என்றான் சத்ய பிரகாஷ்.

மறுபடியும் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். நாலு நாலரையாகியது.

ஐந்து ஆகியது .

ஐந்து மணிக்கு மேல் அவர்களுக்கு சந்தேகம் வந்து விட்டது.

செல்வ கணபதி புரோக்கருக்கு ஃபோன் அடித்து கேட்டார்.

"சார் நானே அங்க வந்துட்டு இருக்கேன்" என்றார் புரோக்கர்.

"சரி வாங்க" என்றார்கள்.

பத்துப் பதினைந்து நிமிடத்தில் தன்னுடைய டூ.வி.எஸ். பிஃப்டியில் வந்து இறங்கினார் புரோக்கர்.

"என்னங்க ஆச்சு நாகசாமி?" என்று கேட்டார் செல்வ கணபதி.

நாகசாமியின் முகம் வேர்த்து விட்டது போல இருந்தது. உள்ளே வந்து உட்கார்ந்தார். "கொஞ்சம் தண்ணி கொடுங்க" என்றார்.

உடனே ஏழிசை வல்லபி எழுந்து போய் செம்பிலே தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

ஒரு செம்பு தண்ணீரையும் மடமடவென்று குடித்தார்.

அவர் வந்த விதமும் அமர்ந்த விதமும் ஏதேதோ செய்திகளைச் சொல்ல இவர்களெல்லாம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"என்னப்பா விஷயம்?" என்றார் செல்வ கணபதி சந்தேகத்துடன்.

"சார். அவங்க லாஸ்ட் மினிட்ல ப்ராப்ளம் பண்ணிட்டாங்க" என்றார் நாகசாமி.

"ஏன்?" என்றார் செல்வகணபதி.

"இல்லைங்க சார். நான் இப்படி ஒரு பொண்ணு இருக்கு. டீச்சர் டிரெயினிங் முடிச்சிருக்கு அப்படின்னு சொன்னேன். நல்ல ஃபேமிலி. நீங்க சொன்ன ஃபேமிலின்னு சொன்னேன். ஜாதகம் எல்லாம் கொடுத்தேன். ஆனா அவங்க இந்த வீட்ல உமாகாந்தன்னு ஒரு தம்பி இருக்காராமே. அது பத்தி ஏதோ கேள்விப் பட்டிருப்பாங்க போலிருக்கு. அதனால

என்று கேட்டாங்க. நான் எவ்வளவோ சொன்னேன். இல்லை பார்க்கலாம். இப்ப முடியாது. இன்னிக்கு நாங்க வரலை. வர்றதா இருந்தா சொல்லி அனுப்பறோம்னு சொல்லிட்டாங்க."

ஏழிசை வல்லபி அவசரமாக எழுந்து மைதிலி அறைக்குப் போய்ப் பார்த்தாள்.

மைதிலி அதிர்ச்சி அடைவாள் என்பது போல அங்கே போய் பார்க்க. அவளோ 'அப்பாடா நிம்மதி' என்று ஏழிசை வல்லபியை பார்த்துச் சிரித்தாள்.

ஏழிசை வல்லபிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

திரும்பவும் ஹாலுக்கு வந்தாள். "ஏம்பா ஜாதகம் பார்த்துருக்காங்க. நம்ம ஃபேமிலி பேக்ரவுண்ட் எல்லாம் சொல்லியிருக்கோம். அப்புறம் ஏம்பா நானே ஃபோன்ல சொன்னேம்பா" என்றார் செல்வம்.

"இல்லை. அவங்க இங்க வர்றாதாத்தான் இருந்தாங்க, யாரோ முறைப்பொண்ணு இருக்கும் போல இருக்கு. அந்தம்மா ஏதோ சொல்லி கில்லி மனசை கலைச்சு விட்டுடுச்சு."

"அடப் போப்பா! இந்த மாதிரி மனசு மாற்றவங்க வேண்டாம்." என்றார்.

இருந்தாலும் செல்வகணபதிக்கு கோபம் தாங்க முடியவில்லை.

"இரு நான் அவருகிட்ட ஒரு வார்த்தை கேட்கறேன். அந்த நடராஜன் கிட்டே" என்றார்.

நாகசாமி "வேண்டாம் சார் விட்டுடுங்க இதோட" என்றார்.

"அதெப்படி விடறது?" என்றவர் செல்ஃபோனை எடுத்து ஸ்பீக்கரை ஆன் செய்தார். ஹாலில் இருக்கிறவர்கள் கேட்க வேண்டும் போல ஸ்பீக்கரை ஆன் செய்து "என்னங்க நடராஜன்? இந்த மாதிரிப் பண்ணிட்டீங்க" என்றார் செல்வ கணபதி.

"ஏன்? என்ன பண்ணினோம்" என்று அந்தப் பக்கம் இருந்து மிதப்பாக குரல் வந்தது.

"இல்லை, நீங்க எல்லாம் தயாரா இருங்க. நாலு மணிக்கு வரோம்னு சொன்னீங்கள்ளே?. வரலைன்னா முதல்லே சொல்லணும் இல்லே.நீங்க ஜாதகம் எல்லாம் பார்த்தீங்களே? பிடிக்கலைன்னா அலையன்ஸ் பிடிக்கலைன்னு அப்பவே சொல்ல வேண்டியது தானே?" என்றார்.

"நீங்க எல்லா விஷயத்தையும் முதல்ல சொன்னீங்களா?" என்று கேட்டார் அந்தப்பக்கம் இருந்து.

"நான் எல்லா விஷயத்தையும் புரோக்கர்கிட்ட சொல்லியிருக்கேன். உங்க கிட்டயும் சொல்லியிருக்கேன் உமாகாந்தன்னு இப்படி ஒரு பையன் அவங்க வீட்ல. இப்படி ஒரு ப்ராப்ளம் ன்னு சொன்னேன். அப்ப நீங்க சரின்னுதானே சொன்னீங்க.?"

"அப்ப எனக்குச் சரியா புரியலை. நீங்களும் பூசி மெழுகி தான் சொன்னீங்க. கரெக்டா சொல்லியிருந்தா எனக்குப் புரிஞ்சிருக்கும்" என்றார்.

செல்வ கணபதிக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

"எதுக்கு நாங்க பூசி மெழுகறோம்" என்றார்.

"சார். இப்ப நாங்க வரலை சார். அவ்வளவுதான். விடுங்க. புடிக்கலைன்னா விடுங்க" என்றார்.

"இதென்ன சார்! இப்படிச் சொல்விட்டு பேச்சு மாற்றது. அட்லீஸ்ட் வந்து பார்த்துட்டு போயிருக்கலாமில்லே?"

"அது...! எங்க பையன் வேண்டாங்கறான்.எதுக்காக சும்மா போய் ஒரு பொண்ணைப் பார்த்துட்டு வேண்டாம்னு சொல்லிட்டு வர்றது. நம்ம தான் அலையன்ஸ் வச்சுக்கப் போறது இல்லையில்லே. எதுக்காக பார்க்கணும்னு நினைக்கிறான்."

"பரவாயில்லை உங்க பையனுக்காவது, இப்பவாவது, இப்படியெல்லாம் யோசிக்கத் தோணுதே" என்றார் செல்வ கணபதி.

தன்னை மறந்து கோபத்தில் இருந்ததால் அப்படி வார்த்தையை விட்டுவிட்டார்.

உடனே அந்தப் பக்கம் இருந்து அதே அளவுக்கு கோபம் பிரதிபலித்தது.

"என்ன சார் ஒரு மாதிரி பேசறீங்க. இவ்வளவு ஏன்? நான் ஒண்ணு கேட்கறேன். அதுக்குப் பதில் சொல்லுங்க. உங்க வீட்ல ஒரு பையன் இருக்கானில்லே அவனுக்குப் பண்ண வேண்டியதுதானே? அதை விட்டுட்டு எதுக்காக வெளியில பொண்ணு தேடறீங்க

அப்ப நீங்கள்லாம் அவ்வளவு விவரமா இருப்பீங்க? நாங்க மாட்டிக்கணுமா?'' என்றார்

'சார்!'' என்று செல்வகணபதி அதிர்ந்து போய் ஏதோ சொல்ல ஆரம்பிக்கவும் 'நான் வைக்கிறேன்' என்று அந்தப் பக்கம் ஆஃப் செய்து விட்டார்.

செல்வ கணபதி திகைத்துப் போனார். அந்த ஹாலிலே அமைதி நிலவியது.

ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பதற்கு துணிவு இல்லாதது போல எல்லோரும் அப்படியே அமர்ந்திருந் தார்கள்.

அப்பொழுதுதான் சட்டென்று சம்பத் குமார் எழுந்தான்.

''என்னப்பா, எதுக்காக அவரு அப்படிப் பேசறாரு. நீங்க இனிமே யாருக்கும் போய் மாப்பிள்ளை பார்க்க வேண்டாம். மைதிலியை நானே கல்யாணம் பண்ணிக்கிறேன்'' என்றான்.

இதை எதிர்பாராமல் மற்றவர்கள் எல்லோரும் திகைத்தார்கள். ''ஆமாம்! சத்யா. அவரு கேட்டது கரெக்ட்தானே? உங்க வீட்ல ஒரு பையன் இருக்கும் போது எதுக்கு வெளியில பார்க்கறீங்கன்னு கேட்கறாரு இல்ல. உனக்கு ஜாதகத்துல நம்பிக்கை இருக்கா? எனக்கு நம்பிக்கை இல்லை. எனக்கு மைதிலியைப் பிடிச்சிருக்கு. நான் பண்ணிக்கிறேன்'' என்றான் சம்பத் குமார்.

மறுபடியும் அங்கே அமைதிதான் நிலவியது. ''என்ன நான் பாட்டுக்கும் சொல்லிட்டிருக்கிறேன்.யாரும் பேச மாட்டேங்கறீங்க?'' என்றான் சம்பத் குமார்.

சத்யா ஒரு பெருமூச்சுவிட்டான்.

ஏழுமலையும் திலகமும் கூட ஒன்றும் வாய் திறந்து பேசவில்லை.

''என்ன சத்யா? நான் பேசிட்டே இருக்கேன். நீ இப்ப போய் மைதிலிட்ட கேளு. மைதிலிக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதமான்னு கேளு'' என்றான்.

சத்யா மறுபடியும் சம்பத் குமாருடைய முகத்தைப் பார்த்துவிட்டு ''பொறு சம்பத். அவசரப்படாதே. இது நீ ரோஷத்துல சொல்ற வார்த்தை. ரோஷத்துக்காக வெல்லாம் எந்த கமிட்மெண்டும் பண்ண வேண்டாம். வீட்டுக்குப் போயி நல்லா யோசனை பண்ணிட்டு முடிவெடுத்துக்கலாம்'' என்றான்.

''சரிப்பா! நாங்க கிளம்பறோம்'' என்று கிளம்பினார்கள்.

அவர்கள் போவதை இந்தக் குடும்பத்தினர் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க, மைதிலி கதவோரமாக வந்து நின்று வெளியே செல்லுகிற சம்பத் குமாரை ஆவலாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கதவு வரை சென்ற சம்பத் குமார் திரும்பி மைதிலியிடம் போய் வருகிறேன் என்பது போல தலையாட்ட அவளும் தலையாட்டுவதை சத்யா கூர்ந்து கவனித்துக் கொண்டான்.

அத்தியாயம் -15

"வீட்ல யாரும் இல்லையா?" என்று குரல் கேட்கவும் அடுக்களையில் வேலையாக இருந்த மைதிலி எட்டிப் பார்த்தாள்.

ஒரு கணம் அவளுக்குள்ளே சிலிர்ப்பு ஓடியது.

குறும்புச் சிரிப்புடன் சம்பத் குமார் நின்று கொண்டிருந்தான்.

அவள் படபடப்பானாள்.

"வாங்க வாங்க" என்று தடுமாற்றத்துடன்.

அவள் தடுமாற்றத்தை கண்டு அவன் தனது கேலிப் பார்வையை நிறுத்தி விட்டு உள்ளே வந்தான். "எங்கே ஒருத்தரையும் காணோம்?" என்றான்.

ஒருவரும் இல்லாத நேரமாகப் பார்த்துத்தான் அவன் அங்கே வருமாறு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது என்பது மைதிலிக்குத் தெரியவில்லை.

நேற்று மாலை அந்த வெடிப்புக்குப் பிறகு வீட்டுக்குப் போனதற்குப் பிறகு நடந்த நிகழ்வுகள் எல்லாம் வேகமாக சம்பத் குமாரினுடைய மனத்திரையில் ஓடியது.

ஏழிசை வல்லபியின் வண்டியின் அம்மாவும் சம்பத் குமாரினுடைய பைக்கில் பின்னால் அப்பாவும் அமர்ந்து கொண்டார்கள்.

அப்பொழுது வெளியே வந்த சத்யா "இருங்க. இருங்க. கார்லயே போயிடலாம்" என்று அவர்களைக் காரிலே ஏற்றிக் கொண்டான்.

காரிலே ஏற்றிக் கொண்டானே தவிர என்ன பேசுவது என்று அவனுக்கும் தெரியவில்லை. இவர்களுக்கும் தெரியவில்லை.

அமைதியாகவே ஓட்டிக் கொண்டு வந்தான். அவர்கள் வீட்டிலே இறக்கி விட்ட பிறகு "உள்ளே வந்துட்டுப் போகலாமே சத்யா." என்றார்.

"இல்லைங்க அங்கிள். நான் நாளைக்கு வர்றேன்" என்று சொல்லி விட்டு அவன் மௌனமாக கைகூப்பி வணங்கி விட்டுப் போனான்.

சம்பத் குமாரும் வாய் திறக்க வில்லை.

வீட்டுக்குள் போனதும் சம்பத் குமார் நேராகப் போய் தன்னுடைய அறையிலே அடைந்து கொண்டான்.

ஏழிசை வல்லபியும் நித்ய கல்யாணியும் அவரவர் அறைக்குள்ளே போய் புகுந்து கொண்டார்கள்.

அம்மாவும் அப்பாவும் தான் சற்று நேரம் ஹாலிலே அமர்ந்திருந்தார்கள். சம்பத் குமாரோ ஏழிசை வல்லபியோ வந்து தங்களிடத்திலே ஏதாவது பேசக்கூடும் என்று எதிர்பார்த்தார்கள்.ஆனால் சம்பத் குமாரும் பேசவில்லை.

ஏழிசை வல்லபியும் பேசவில்லை.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த செல்வ கணபதி மனைவியிடம் 'ஏன் கருணா, இப்பக் கூப்பிட்டு பேசலாமா?' என்றார்.

"அவன் என்னமோ படபடன்னு பேசிட்டான். யோசிச்சு சொன்னானா? இல்லை, கோபத்துல சொன்னானான்னு தெரியலை. இன்னைக்கெல்லாம் விட்டுடுவோம். நாளைக்கு பேசலாம்" என்றார் கருணாம்பிகை.

'அதுவும் சரிதான்' என்று தோன்றியது.

ஏழிசை வல்லபிக்கும் இரவெல்லாம் ஆழ்ந்த உறக்கம் வரவில்லை. 'அண்ணா அனுதாபத்தின் பேரில் சொன்னாரா? உண்மையில் சொன்னாரா? அனுதாபத்தின் பேரில் வருகிற ஒரு உறவு எப்படி நிலைக்க முடியும்.

ஒருவேளை மைதிலிக்கும் சம்பத் குமாருக்கும் ஒருவருக்கு மேல் ஒருவர் நாட்டம் இருக்கிறதோ என்ற எண்ணமும் அவளுக்குள்ளே ஓடியது.அப்படியிருந்து விட்டால் இந்த உறவை ஏற்படுத்திக் கொள்வதில் பிரச்னை இருக்காது. ஆனால், ஏதோ ஒரு ரோஷத்துக் காக என்று செய்து கொண்டு விட்டு நாளைக்கு ஏதாவது ஒரு கட்டத்தில் அண்ணன் அதை சொல்லிக் காட்டி விட்டால் உறவே நலிந்து போகும் என்ற ஒரு பயமும் அவளுக்கு இருந்தது.

ஒன்பது மணி வாக்கில் அண்ணனுடைய அறை வாசலில் போய் நின்றாள். 'அண்ணா' என்றாள்.

சம்பத் குமார் தன் அறையிலிருந்த சோஃபாவிலே சாய்ந்து அமர்ந்திருந்தான்.

இடது காலின் மேல் வலது காலை டானா வடிவத்தில் வைத்திருந்தான்.

வலது கை தலையைப் பிடித்திருந்தது.

வல்லபி உள்ளே வந்தாள். "வாம்மா!" என்றான்.

அவள் மெல்ல நீள சோஃபாவின் ஒரு புறத்திலே அமர்ந்தாள்.

அவன் முகத்தைப் பார்த்தாள்.

அவன் தங்கையின் முகத்தை அன்பாக பார்த்து விட்டு. 'என்னம்மா?' என்றான்.

'அண்ணா இன்னிக்கு சாயங்காலம் நீ..!" என்று இழுத்தாள்.

அவன் ஒரு குழப்பத்துடன் அவளைப் பார்த்தான். "இல்லை வல்லபி. எனக்கே தெரியலை. இந்தத் தாட் எனக்குள் இருந்துருக்கணும். அதனாலதான் அது வெளிய வந்திருக்கு" என்றான்.

வல்லபி ஒரு நிமிடம் அமைதியாக இருந்தாள்.

பிறகு "ப்ரொப்போஸல்லே ஒண்ணும் தப்பு இல்லைண்ணா. நீ எப்படியும் யாரையாவது கல்யாணம் பண்ணத்தான் வேணும். மைதிலி நல்ல பொண்ணு தான். ஆனா ஒரு ரோஷத்துக்காக அப்படி?" என்று இழுத்தாள்...

"அதைப் பத்தித் தாம்மா யோசிச்சிட்டு இருக்கேன். இந்த ஒரு நைட் அதைப் பத்தி பேச வேண்டாம். நானும் கிளியரா யோசிச்சுக்கறேன்" என்றான்.

"சரிண்ணா, ஒரு குடும்பத்துல வாக்குக் கொடுத்துட்டு பின் வாங்கறது தப்பு. இப்பத் தான் அந்த அலையன்ஸ்ல அடிபட்டிருக்காங்க" என்றாள்.

"தெரியும்மா எனக்கும் தெரியும். நான் தானே கூட இருந்தேன்."என்றான்.

அப்பொழுது கூட அவன் அந்த ரகசியத்தைச் சொல்ல வில்லை.

"ஏம்மா அப்படி ஏதாவது நடந்தா உனக்கு ஏதாவது ஆட்சேபணை இருக்கா?" என்றான்.

வல்லபி சட்டென்று அவனுடைய கரத்தைப் பிடித்துக் கொண்டாள்.

"என்னண்ணா இப்படி பேசறே? எனக்கு என்னமோ உனக்கு மைதிலியைப் பிடித்து இருக்கிற மாதிரிதான் நினைப்பு. அப்படிப் பிடிச்சிருந்து இந்தக் கல்யாணம் நடந்தா எனக்கு ரொம்ப சந்தோஷம்ண்ணா. என்னை விட சந்தோஷப்படறவங்க யாரும் இருக்க மாட்டாங்க. ஆனா எந்த ஒரு கமிட்மெண்ட்டுக்காகவும் நீ உன்னுடைய லைஃபை "என்றாள்...

"இல்லைம்மா இல்லை. அப்படி நிச்சயமா இல்லை."

சம்பத் முகத்தில் லேசாக ஒரு வெட்கம் தோன்றியது.

தங்கையிடம் எப்படிச் சொல்வது என்று நினைத்தானோ என்னவோ அவளைப் பார்க்காமல் வேறு புறமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு "எனக்கும் மைதிலியை பிடிக்குதுன்னுதான் நினைக்கிறேன்" என்றான்.

வல்லபி முகத்தில் மகிழ்ச்சி பரவியது.

"அப்படின்னா நல்லதுதாண்ணா. அண்ணா, எதுக்கும் நீ சொன்ன மாதிரி நல்லா யோசிச்சுக்க. காலையில அம்மா அப்பாகிட்ட பேசலாம்" என்றாள்.

"காலையில எங்கேம்மா?" என்று இவன் இழுக்க...

"இல்லைண்ணா. இன்னிக்கு மத்தியானம் போட்ட லீவை நாளைக்கு காலையிலயும் போடுவோம். இதைப் பத்திப்பேசுவோம். எப்படியோ த கேட் இஸ் அவுட் ஆஃப் த பேக், வேற வழியில்லை. ஃபைனலைஸ் பண்ணித்தான் ஆகணும். எய்தர் தட் வே, ஆர் திஸ் வே" என்றாள்.

"சரிம்மா" என்றான்.

அதற்குப் பிறகு சத்ய பிரகாஷிடம் இருந்து ஃபோன் வந்தது.

"என்ன பேசப்போகிறானோ?" என்ற குழப்பத்துடன் தான் சம்பத் குமார் எடுத்தான்.

"சம்பத். நீ எங்களுக்காக ரோஷப் பட்டது ரொம்பப் பிடிச்சது. ஆனால் அதுக்காக உன் வாழ்க்கையை பணயம் வைக்கணும்னு இல்லை. நல்லா யோசிச்சுக்கோ" என்று ஆரம்பிக்க.

சம்பத் குமார் ஏதோ இந்தப் பக்கம் சொல்ல வந்தான்.

"இல்லையில்லை. நான் சொல்றதை நல்லா கேட்டுக்கோ" என்றான் சத்யா.

"ம்... சொல்லு" என்றான் சம்பத் குமார்.

"இப்படி நாம சொல்லிட்டோமே என்பதற்காக நீ அந்தக் காரியத்தை தொடர்ந்து செய்யணும் அப்படிங்கற அவசியம் இல்லை. யு ஆர் ஆல்வேஸ் மை ஃப்ரெண்ட். ஒரு வேளை நாம அவசரப்பட்டு

சொல்லிட்டோம் இது நமக்கு தேவையில்லாததுன்னு நீ நினைச்சேன்னா அதை அழகா நாளைக்கு எங்ககிட்ட சொல்லிடலாம்.அப்பவும் நாம ஃப்ரெண்ட்ஸ்தான். ஏன்னா இந்த மாதிரி எந்த எதிர்பார்ப்போடயும் நான் பழகலை'' என்றான்.

சம்பத் குமார் நெகிழ்ந்து போனான்.

''இந்த மாதிரியான பண்புகள் உங்க குடும்பத்துல இருக்கறதுனால தான் பிடிச்சது'' என்றான்.

''ஓகே! இது அவசரமா டிஸைட் பண்ண வேண்டிய விஷயம் இல்லை. நல்லா யோசிச்சுக்கோ'' என்றான்.

மறுநாள் காலையில் தனது பெற்றோரிடம் உறுதியாக சொல்லி விட்டான். ''என் மனசில் இருந்துதான் அந்தக் கருத்து வந்திருக்கு. அதனால மைதிலியை எனக்குப் பிடிச்சுத்தான் இருக்கு. நீங்க புரொசிட் பண்ணுங்க'' என்று,

அதற்குப் பிறகு இரண்டு பக்கத்திலும் இருக்கக் கூடிய பெற்றோர்கள் ஏதோ ஒருநாடகம் செய்துதான் இப்பொழுது வெளியே கிளம்பி அவர்கள் இருவரையும் தனியே சந்திக்க வைத்திருந்தார்கள்.

அதுவும் சம்பத் குமாரினுடைய வற்புறுத்தலினாலும் ஏழிசை வல்லபியினுடைய வற்புறுத்தலினாலும் தான்.

''மைதிலிக்கு பிடிச்சிருக்கான்னு தெரிஞ்சுக்கணும். அதுக்கப்புறம் தான் நாம புரொசீட் பண்ண முடியும்'' என்று சொல்லி விட்டான் சம்பத் குமார்.

''இவ்வளவு சொல்லிட்டே? இனிப் போய் நாங்க எப்படி கேட்கறது. நீயே கேளு'' என்று சொல்லி விட்டார் பெற்றோர்கள்.

இப்பொழுது அதெல்லாம் நினைவுக்கு வர லேசாக தனது அரும்பு மீசையை நீவியபடி புன்னகையோடு நின்றான் சம்பத் குமார்.

அவனை நிமிர்ந்து பார்ப்பதற்குள் மைதிலிக்கு படபடப்பாகி விட்டது.

''நான்... நான்...'' என்று திணறினாள்.

''நீ... நீ...!''என்றான் அவன் மறுபடியும்.

''இல்லை. நான் தெரிஞ்ச ஃபேமிலின்னு சொன்ன தாலே ஏதோ வற்புறுத்தற மாதிரி....'' என்று இழுத்தாள்.

''ஹலோ! நீ தெரிஞ்ச பேமிலின்னு சொன்னப்பவே எனக்கு தெரிஞ்சது. இது கூட புரியலையான்னு பார்த்தியே ஒரு பார்வை. அதுக்கப்புறமும் ஒருத்தனுக்குப் புரியலைன்னா அவனுக்கு மேல் மாடி காலின்னு அர்த்தம்'' என்றான்.

''இதை வேற சொல்லணுமா?'' என்றாள் அவள்.

''என்ன அப்ப எங்க மேல் மாடி காலியா?'' என்றான் அவன்.

''பின்னே வேற எப்படி சொல்றது? நேரடியா சொல்லியாச்சு. மறை முகமா சொல்லியாச்சு இதுக்கு மேலே?'' என்று வெட்கத்துடன் நிற்க.

"அடக் கிறுக்கா, உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்குன்னா சொல்ல முடியும்னு கேட்கறே?" என்றான்.

அவள் ஆமாம் என்பது போல தலையாட்டிக் கொண்டு தலையைக் குனிந்தாள்.

"சரி நான் வந்த வேலை முடிந்தது, கிளம்பறேன்." என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள். "என்ன வேலை.?"

"இல்லை. இந்தப் பெரியவங்களெல்லாம் டிராமா பண்ணி வெளிய போயிருக்காங்களே எதுக்குத் தெரியுமா? நீ பாட்டுக்குச் சொல்லிட்டே. உன்னை மாதிரி ஒருத்தனை கல்யாணம் பண்றதுக்கு மைதிலிக்கு விருப்பம் இருக்குமா? அப்படின்னு அவங்க கவலை அவங்களுக்கு. அதனால நேரடியா கேட்டுடலாம்னு தான் வந்தேன்.

"ஓகோ! அதான் அம்மாவும் அப்பாவும் திருட்டு முழி முழிச்சுட்டு கிளம்பினாங்களா?. இந்த சத்யாண்ணா கூட என்னமோ ஆடு திருடின கள்ளன் மாதிரி" என்றாள்.

"ஏய், அவனைத் திருடன்னு சொல்லாதே. நான் தான் திருடன்" என்றான்.

"நீங்களா எதைத் திருடினீங்க?" என்றாள்.

"இதோ இந்த உள்ளத்தைத்தான்." என்று லேசாக அவன் அவள் கழுத்துப் பக்கமாக கையைக் கொண்டு வர அவள் சட்டென்று தள்ளி விட்டாள்.

"இந்த வேலையெல்லாம் ஆகாது சார். பேங்க்கோட கணக்குப் பண்றதெல்லாம் நிறுத்திக்கங்க. இங்க வந்து கணக்குப் பண்ற வேலையெல்லாம் வேண்டாம்."

"சரிங்க. டீச்சரம்மா நாங்க கணக்குப் பண்ணலை. அப்ப நீங்க எனக்கு கணக்குச் சொல்லித் தாங்க" என்றான்.

"கணக்கு மட்டுமா? இலக்கியம் இலக்கணம், எல்லாம் சொல்லித் தருவோம்" என்றாள்.

அவன் சிரித்தான்.

"பரவாயில்லை. ஏதோ புத்திசாலியாத்தான் இருக்கே."

அவள் முறைத்தாள்.

"இல்லை சில பேரு, நல்லா படிச்சிருப்பாங்க... ஆனா எப்பப் பாரு சிடுசிடுன்னு இருப்பாங்க.ஆனா நீ கலகலப்பாகவும் இருக்கியே. அதான் உங்கிட்ட எனக்கு ரொம்பப் பிடிச்சது."

"அதெல்லாம் சரிதான்" என்றாள்.

"எல்லாம் சரிதான் சரிதான்னு எட்டடி தள்ளி நின்னு சொல்லிட்டிருந்தா எப்படி? கொஞ்சம் இப்படி வர்றது.?"

"எப்படி?" என்றாள்.

"ரொம்ப வேண்டாம்மா. ஒரு அரையடி பக்கத்துல வாயேன்" என்றான்.

அவள் ரொம்பவும் தயங்கியபடி வந்தாள்.

அவன் சட்டென்று தன்னோடு இழுத்து அணைத்துக் கொண்டான்.

"ஜாதகத்தை வாங்கிட்டுப் போனேன் சத்யா கிட்ட இருந்து. ஆனால் அடுத்தவங்களுக்குன்னு அந்த ஜாதகம் கேட்டவுடனே எனக்கு ஒரு பக்கமே கழண்டு போன மாதிரி ஆயிடுச்சு" என்றான் கிறக்கமாக.

'ம்' என்றாள் அவள்.

'ஆமா, கதை கேளு!" என்றான் அவன்.

"கதைதானே சொல்லிக்கிட்டிருக்கீங்க?" என்றாள் அவள்.

"நிறைய கதை வச்சிருக்கேன். சொல்லப் போறேன்" என்றான்.

அவள் சட்டென்று முகத்தை திருப்பிக் கொண்டு காஃபி, டீ ஏதாவது என்று பேச்சை மாற்றினாள்.

"ஒரு பெரிய ஆங்கில நாவலோட டைட்டில் இருக்கு தெரியுமா?" என்றான் அவன்.

அவள் நிமிர்ந்து பார்க்க "காஃபி, டீ ஆர் மீ? அப்படின்னு ஒரு தலைப்பு" என்றான்.

"ஹலோ! அப்படியெல்லாம் நாங்க ஏலம் போட மாட்டோம். முறையா லைசென்ஸ் வாங்கணும்" என்றாள் அவள்.

"லைசென்ஸ் வாங்கிடுவோம். அப்பா அம்மாகிட்ட சொல்லிட்டேன் நான். எவ்வளவு சீக்கிரம் ஏற்பாடு பண்ண முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஏற்பாடு பண்ணுங்க அப்படின்னு சொல்லிட்டேன்."

"அதுதானே நடக்காது சம்பத் குமார்" என்றாள் அவள்.

"ஏன்?" என்றான் அவன்.

"எனக்கொரு கண்டிஷன் இருக்கு" என்றாள்.

"இதப்பாரு எனக்கு எந்தக் கண்டிஷனும் இல்லை. நகை, பணம், கல்யாணச் செலவு கூட நானே பண்ணிடறேன். அதெல்லாம் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இப்போ நீ இப்போ இந்தக் கட்டின புடவையோட வந்தாலும் சரி" என்றான்.

"அதில்லை பாயிண்ட். நாங்க எங்களையே கொடுக்கறோம். அது போக உங்களுக்கு இத்தனையெல்லாம் வாரி வழங்கணுமோ?" என்றாள்.

"அதானே பார்த்தேன்!" என்று சிரித்தான்.

"இல்லைங்க. நிஜமாவே எனக்கு ஒரு கண்டிஷன் இருக்கு" என்றாள்.

"சொல்லு மைதிலி. எல்லா வீட்லயும் மாப்பிள்ளை கண்டிஷன் போடுவாங்க. இங்க என்ன பொண்ணு கண்டிஷன் போடறே?" என்றான்.

"ஆமா நேத்து ப்ரொபோஸ் பண்ணினீங்க. அதுவும் எல்லார் முன்னாடியும் போட்டு ஒடைச்சு ஒரு நேர் சீர் நிதானம் இல்லாம. அப்படி புரொபோஸ் பண்ணியிருக்கீங்க போனாப் போவுதுன்னு நாங்க ஒத்துக்கிட்டு இருக்கோம். ஒரு ரொமான்டிக் அப்ரோச்ன்னு ஏதாவது இருக்கா உங்ககிட்ட?" என்றாள்.

அவன் சிரித்தான்.

"இதையெல்லாம் மீறி நாங்க ஒத்துக்கிட்டோம்னா எங்களுக்கு ஏதாவது ஒரு சலுகை வேணுமில்லே?" என்றாள்.

"சொல்லும்மா" என்றான் அவன். கண்களில் தனது அன்பையும், காதலையும் தேக்கி அவளைப் பார்த்தபடி.

அந்தப் பார்வை அவளைக் கவர ஒரு நிமிடம் பார்த்தவள் சட்டென்று தலையை குனிந்து கொண்டு தன்னுடைய நிபந்தனையைச் சொன்னாள்.

சம்பத் குமார் கொஞ்சம் திகைத்துத்தான் போனான்.

அத்தியாயம் - 16

"இன்னும் எவ்வளவு தூரம் போகணும் அண்ணா?" என்று கேட்டுக் கொண்டிருந்தான் உமாகாந்தன்.

"வாப்பா இன்னும் கொஞ்ச தூரம்தான்." என்று அழைத்துக் கொண்டு போனார் ஜெயகோபால்.

மெயின் ரோட்டில் இருந்து கிளை ரோட்டுக்குப் போய் கிளை ரோட்டில் இருந்து இன்னும் சற்று தூரம் போயிருந்தார்கள்.

அந்தப் பகுதியே மக்கள் நெருக்கடி மிகுந்த பகுதியாக இருந்தது.

இவர்கள் இரண்டு பேரும் நடந்து போவதைப் பார்த்த உடனேயே வழியிலே இருந்த சிறுசிறு கடைக்காரர்கள் ஒரு விதமாக சிரித்தார்கள்.

அங்கங்கே மூன்று பேர் நான்கு பேர் என்று நின்று கொண்டிருந்த ஆட்கள் அவர்களைப் பார்த்த உடனேயே பார்வையைப் பரிமாறிக் கொண்டார்கள்.

இது மாதிரி சூழ்நிலைகளை எல்லாம் சந்தித்து இராததிதனால் உமாகாந்தனுக்கு கொஞ்சம் பயம் ஏற்பட்டது.

"அண்ணா, என்னமோ சரியில்லைண்ணா" என்றான்.

"நீ அந்தப் பக்கம் இந்தப் பக்கம் பார்க்காதே. நேரா வா" என்றார் ஜெயகோபால்.

"இல்லை அண்ணா .அந்த ஆம்பளைங்களெல்லாம் பார்க்கற பார்வையே..."

"அதாம்பா சொன்னேன். நீ பார்க்காதே. நேரா வா" என்றார்.

"எதுவும் பிரச்சினை பண்ணினாங்கன்னா?" என்று சொல்லவும்.

"அதெல்லாம் ஒண்ணும் பிரச்சினை வராதுப்பா. நான் இருக்கேனில்லே கூட, இவங்களுக்கெல்லாம் என்னைத் தெரியும்" என்றார் ஜெயகோபால்.

அதற்குப் பிறகுதான் உமாகாந்தனுடைய மனத்தில் கொஞ்சம் அமைதி ஏற்பட்டது.

இப்பொழுது திடீரென்று ஒரு சேரி மாதிரியான பகுதியில் நுழைந்தார் ஜெயகோபால்.

தடம் ஒரு மாதிரி இருந்தது.

ஒரு பத்தடி தடம் இருக்கும். இரண்டு பக்கமும் சேறும் சகதியுமாக இருந்தது.

வீடுகளில் இருந்து துவைக்கிற, புழங்குகிற தண்ணீ ரெல்லாம் ரோட்டுக்கே வருகிற மாதிரி தெரிந்தது.

ரோடென்று அங்கே எதுவும் இருக்க வில்லை.

இன்னும் கொஞ்சம் உள்ளே போனவுடன் ஒரு விதமான துர்நாற்றம் கூட வந்தது.

ஜெயகோபால் அண்ணனுக்கு இங்கே என்ன வேலை என்று உமாகாந்தனுக்கு கடுப்பாக இருந்தது.ஆனால் ஜெயகோபாலோ, கையை விட்டால் எங்கே குழந்தை ஓடிவிடுமோ என்று குழந்தையினுடைய கையை இறுகப் பிடித்துக் கொள்கிற ஒரு தந்தையைப் போல உமாகாந்தனுடைய வலக்கையை தனது இடக்கையால் பிடித்துக்கொண்டு வெக்கு வெக்கென்று நடந்து கொண்டிருந்தார்.

சற்று தூரம் போனதற்குப் பிறகு இன்னும் கொஞ்சம் ஒரு சின்ன மைதானம் போல உள்ளடங்கிய இடத்திற்குப் போனார்கள்.

அங்கே வரிசையாக குடிசைகள் இருந்தது.

குடிசைகள் என்றால் தனித்தனியாகவோ கொஞ்சம் வசதிகள் உள்ள மாதிரியோ இருக்கவில்லை.

ஒவ்வொரு குடிசைக்கும் முன்னாலே சாக்குப்பை களைப் போல தொங்க விட்டிருந்தார்கள்.

இதுதான் வீடுகளுக்கான கதவு போல் இருக்கிறதே என்று எண்ணிக் கொண்டான் உமாகாந்தன்.

அங்கே உள்ளே நுழைந்தவுடன் எதிரே வந்த இரண்டு பேர் "யாரைப் பார்க்கணும்?" என்றார்கள்.

"எனக்கு தாதியைப் பார்க்கணும்" என்றார் ஜெயகோபால்.

உடனே "ஏய் தாதி... தாதியைப் பார்க்க வந்திருக் காங்க" என்றார்கள் அவர்கள்.

ஒரிரு நிமிடங்களுக்குள்ளாக கிடுகிடுவென்று ஒரு பத்து முப்பது பேருக்கு மேல் வந்து அவர்களைச் சுற்றிக் கொண்டார்கள்.

"ஏய்! வழியை விடுங்கடி" என்று மிரட்டலான குரல் கேட்டது.

ஜெயகோபாலும் உமாகாந்தனும் அந்த திசையைப் பார்க்க நடுத்தர வயதைக் கடந்த ஒரு பெண்மணி வந்து கொண்டிருந்தாள்.

"தாரா அம்மா, நல்லா இருக்கீங்களா?" என்றார் ஜெயகோபால்.

"வாங்க தம்பி, வாங்க, இங்க எங்கே? வந்து ரொம்ப நாளாச்சு" என்றார் தாரா.

"எங்கம்மா? இடையில கொஞ்சம் சொந்த வேலையா இருந்துட்டேன். இப்பதான் மறுபடியும் எஞ்சிய வேலையெல்லாம் ஆரம்பிச்சிருக்கேன்" என்றார் ஜெயகோபால்.

"ஏதோ உங்களைப் போல நாலு நல்லவங்க வந்திட்டிருந்தா இந்தா இவளுகளுக்கெல்லாம்

கொஞ்சம் ஹெல்ப்பா இருக்கும்'' என்றாள் அந்த தாரா என்கிற அம்மாள்.

உமாவுக்கு வேறு சந்தேகம் ஒடியது.

ஜெயகோபாலை சந்தேகமாக பார்த்தான்.

ஜெயகோபால் அடிக்குரலில் ''டேய் அப்படிப் பார்க்காதே. அந்த மாதிரி யெல்லாம் ஒண்ணும் இல்லை.''என்றார்.

உமாகாந்தன் தன்னுடைய நினைப்பை ஜெய கோபால் புரிந்து கொண்டு விட்டார் என்ற உடனேயே கொஞ்சம் வெட்கிப் போனான்.

''இல்லைண்ணே'' என்று இழுத்தான்.

''ஒண்ணும் பேசாதே. வா நீ'' என்று அந்தத் தாராவின் பின்னாலே போனார்கள்.

தாராவின் குடிசை மட்டும் இருக்கிறதிலே கொஞ்சம் பரவாயில்லை மாதிரி இருந்தது.

எதிரெதிராக இரண்டு கட்டில்கள் கூட இருந்தன. இரண்டு மூன்று சேர்கள் இருந்தன.

''உமா நீ வேண்ணா இந்த வீடு இதெல்லாம் போய் பார்த்துட்டு வா.''

தாரா ஜெயகோபாலை கேள்விக் குறியாக பார்க்க இல்லை, நம்ம பையன் தான். கொஞ்சம் நம்ம இடங்களையெல்லாம் பார்க்கணும்னு சொன்னான்.சரி நேரடியா பார்க்கட்டுமேன்னு கூட்டிக்கிட்டு வந்தேன்.'' என்றார்

உடனே தாரா ''ஏய், நீலா இங்க வா'' என்று குரல் கொடுத்தார்.

நிலா என்ற அந்தத் திருநங்கை வந்து நின்றாள்.

''இந்தா. இந்தத் தம்பியைக் கூட்டிட்டுப் போய் நம்ம காலனியைக் காட்டு'' என்றார்.

காலனி என்று சொல்லும்பொழுதே அதிலே கிண்டல் தன்மை தெரிந்தது.

''ஆமா, நம்ம காலனியை பார்த்துட்டாலும்...'' என்று இழுத்தாள் நீலா.

''வாயடிக்காதடி. கூட்டிக்கிட்டுப் போ'' என்றார் தாரா.

நீலா உமாகாந்தனை அழைத்துக் கொண்டு நகர்ந்தாள்.

உமாகாந்தன் ஜெயகோபாலிடம் ''எனக்கு ஒண்ணும் எதுவும் பார்க்கணும்னு...'' என்று இழுக்க...

''இல்லை இல்லை. ஒரு ஐடியா கிடைக்கும் இல்லே. பார்த்துட்டு வா.''

''ஆமாப்பா ஒரு அஞ்சு நிமிஷம் போயிட்டு வா. அதுக்குள்ள நான் இங்க டீ போட்டு வைக்கிறேன்'' என்றார்.

அந்தச் சூழ்நிலையைப் பார்த்தாலே அவனுக்கு தேனீர் குடிக்க வேண்டும் என்று கூட தோன்ற வில்லை.

''என்ன நீங்களும் எங்க மாதிரிதானா?'' என்றாள் திருநங்கை.

அவன் 'ம்' என்றான்.

"ஆனால் வேற கேட்டகரியாட்ட இருக்கு?" என்றாள்.

அவள். 'ம்' என்றான்.

"இப்ப என்னாத்துக்கு இங்கே வந்திருக்கீங்க.? கல்யாணம் கட்டிக்கவா, பொண்ணு பார்க்கவா?" என்று கேட்டுவிட்டு அவள் கிளுகிளுவென்று சிரித்தாள்.

உமாகாந்தனுக்கு கடுப்பாகத்தான் இருந்தது.

"நான் ஒண்ணும் அந்த ஐடியாவுல வரலை."

"ஐய்யய்யோ. மன்னிச்சுக்குங்க. ஜெயகாபாலண்ணன் கூட்டிட்டு வந்தாலே நல்ல ஆளாத்தான் இருப்பீங்க" என்றாள் நீலா.

"என்ன விஷயம் ?வீட்டை விட்டு வந்துட்டிங்களா?" என்றாள்.

உமாகாந்தன் திடுக்கிட்டுப் போய் அவளைப் பார்த்தான்.

"என்ன ஆச்சரியமா பார்க்கறீங்க? இங்க எல்லார் கதையும் அதான்.வீட்ல அடிச்சு துரத்தினாங்களா இல்லை நீங்களே வந்தீங்களா?" என்றாள்.

"ஐய்யய்யோ எங்க வீட்லயெல்லாம் ரொம்ப நல்லா பார்த்துப்பாங்க. நானாத்தான்.." என்றான் உமாகாந்தன்.

நீலா சட்டென்று நின்றாள்.

"என்னாது? உங்க வீட்லயெல்லாம் நல்லா பார்த்துப்பாங்களா?" என்றாள்.

"ஆமா, எங்க அம்மா அப்பா அண்ணா, சிஸ்டர் எல்லாருக்கும் என் மேல உயிரு" என்றான் உமாகாந்தன் பெருமையாக. சொல்லும் பொழுதே அவன் குரல் தழுதழுத்தது.

நீலா நின்றவள் நகரவில்லை. "அடப் பாவி மகனே. அப்படி ஒரு நிழல் இருக்கையில எதுக்கு நீ வெளிய வந்தே?" என்றாள்.

"இல்லை. அவங்களுக்கெல்லாம் நாம பாரமா இருக்கோமோன்னு.."என்று உமாகாந்தன் இழுத்தான்,.

"நல்லா ஆச்சு போ. நாங்கெல்லாமும் வெளியே தான் வந்தோம். எப்படி வந்தோம் தெரியுமா? எங்களை அடிச்சு துரத்தினாங்க. இங்க கதை கதையா இருக்கும் கேளு" என்றவள் "ஏய் மாலா இங்கே வா" என்றாள்.

ஒரு விதமாக ஆடி அசைந்து கொண்டு போன மாலா என்கிற பெண் "என்னத்துக்கு அக்கா கூப்பிட்டே?" என்றபடி வந்தாள்.

"இங்கே வா. உன் கதையைச் சொல்லு. இந்தத் தம்பிகிட்டே" என்றாள்.

"என் கதை என்ன குறும்படமா? திரைப்படமா? சொல்றதுக்கு? ராமாயணம்" என்றாள்.

"இல்லடி, காரணமாத்தான் சொல்றேன், சொல்லு" என்றாள்.

"வேண்டாம் தம்பி. சொன்னா உனக்கு கஷ்டமா போயிடும்" என்றாள் மாலா.

"இல்லடி சொல்லு."

"எங்க அண்ணனே எனக்கு ஆள் கூட்டியாந்தான். மாட்டேன்னு சொன்னதுக்கு அடிச்சு துரத்தினாங்க. ஆனா இப்ப என்னாச்சு. நான் அப்படிதான் வந்து மாட்டிக்கிட்டேன்" என்றாள் மாலா.

உமாகாந்தன் திடுக்கிட்டுப் போய் பார்த்தான்.

அது மாதிரி ஒரு ஏழெட்டுப் பேரை அழைத்து தங்களுடைய கதைகளை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக சொல்லச் சொன்னாள் நீலா.

அதிலே ஒருத்தி ஒப்பாரியே வைத்தாள்.

நானு ஆணுன்னு இல்லாம
பொண்ணுன்னு இல்லாம
அரவாணியா பொறந்தேனுட்டு
அண்ணந்தம்பி ஒதச்சாங்க
வீட்ட விட்டு வெளியே வந்த என்ன
ஊரே தொரத்தி அடிக்குதே"

அந்தப் பெண்ணோடு கூட இரண்டு பேர் சேர்ந்து கொண்டார்கள்.

"ஆணாக இருந்திருந்தா
அம்பெடுப்பேன்
வில்லெடுப்பேன்
ஐவரோடு பங்கெடுப்பேன்
பெண்ணாக இருந்திருந்தா
பூலோகம் ஆண்டிருப்பேன்

ஆணும் இல்ல பெண்ணும் இல்ல
அவல நிலை பாருமம்மா"

என்று பாடினார்கள்.

உமாகாந்தன் மனம் உருகிப் போனது.

அவர்களுடைய கதைகளைக் கேட்டவன் உண்மையிலேயே பயந்து போனான்.

மனம் உருகிப் போனது ஒரு பக்கம் என்றாலும் அதைக் காட்டிலும் அடி வயிற்றில் இருந்து பயம் கிளம்பியது.

"இந்தா இவளைத்தான் ரெயில்வே ஸ்டேஷன்ல வச்சு அடி அடின்னு அடிச்சாங்க. இந்தா இவளைப் பாரு கொஞ்சம் அழகா இருக்கா சிவப்பா இருக்கான்னு மாசா மாசம் போலீஸ் ஸ்டேஷன் கூட்டிட்டுப் போயிடுவாங்க.இந்தா இவ கொஞ்சம் கருப்பா இருக்கால்ல ஏதாவது பொருள் காணாம போனா ஏதாவது சந்தேகக் கேஸ்ல இழுத்துட்டுப் போயிடுவாங்க. போலிசுக்கும் இவளுக்கும் ஒரு... என்னா சொல்றது ரொம்ப நெருக்கம்.

இவ பேரை காண்பிச்சுட்டு அவங்களே வெளிய கொண்டு வந்துடுவாங்க. இந்தா ஒரு இருநூறு முந்நூறுன்னு கொடுத்து அனுப்பிடுவாங்க" என்றாள்.

சொல்லிக்கொண்டே வந்தவள் ஒரு மரத்தடியைச் சுற்றிலும் திண்ணை மாதிரி இருந்தது. "இங்கே உட்காரு" என்றாள்.

உமாகாந்தனும் அமர்ந்தான்.

''இந்தாப் பாரு கண்ணு. எத்தனை நாளா ஜெய கோபால் அண்ணனோட சுத்திக்கிட்டு இருக்கிறே?'' என்று கேட்டாள்.

கிட்டத்தட்ட பதினைந்து நாளா சுத்திட்டு இருக்கோம் என்றான்.

''எங்கெல்லாம் போனீங்க?'' என்றாள் நீலா.

அவள் பேசுவது இப்படி இருந்தாலும் உள்ளம் எல்லாம் அன்பு நிறையத் தான் பேசினாள் என்பது உமாகாந்தனுக்கு புரிந்தது.

தன்னை மறந்து உண்மையான பதில்களையும் அவன் சொல்லிக்கொண்டிருந்தான்.

''ஜெயகோபால் அண்ணன் ஏதோ டூர் ஆராய்ச்சியெல்லாம் பண்றாராம். நிறைய விஷயங் களை சேகரிக்கணும்னுட்டு டெல்லி போனோம். பூனா பக்கத்துல போனோம். பாம்பே ஏரியாவெல்லாம் பார்த்தோம் இப்பதான் நம்ம சென்னைக்கு வர்ற வழியில இடையில இங்க இறங்கினோம்'' என்றான்.

''ஜெயகோபால் அண்ணன் வேணும்னுதான் உன்னை கூட்டிட்டு போயிருக்கும்'' என்றாள் நீலா.

''இல்லை, இல்லை அவர் ஏற்கெனவே புரோகிராம்ல இருந்தாரு.''

''அப்ப வுடு. இப்ப நீ என்னத்தை பார்த்தே? எங்களை எல்லாம் நீங்க படிச்சவங்களெல்லாம் என்ன சொல்றீங்க. மேல் டூ ஃபீமேல், எம் டு எப்ங்கறீங்க. உங்களை எல்லாம் எப் டு எம்ங்கறீங்க பீமேல் டூ மேல்ங்கறீங்க.

நாங்கெல்லாம் எப்பவும் கூட்டமா இருக்கோம். எங்களுக்குள்ள தத்து எடுத்துக்கறோம். அக்கா தங்கச்சி உறவு வச்சுக்கறோம் அம்மா மக உறவு வச்சுக்கறோம். ஆனா, பொழைக்கிற பொழப்பு ஒண்ணும் லேசு பொழப்பு இல்லப்பா. ஒரு நாளைக்கு சோறு கிடைக்கறதுக்குள்ள படு பாடா போகுது. இங்க இருக்கறதுல பாதிக்கு மேல எல்லா தொழிலும்தான் செய்யுது. எது எதுக்கு என்னென்ன வியாதி இருக்குமோ. ஏதாவது ஆச்சுன்னா என்ன பண்றது தூக்கி தெருவுல போட்டுட்டு போயிருவாங்க.

என்னதான் நாங்க நீ எனக்கு அக்கா, நான் உனக்கு தங்கச்சி இதோ இது அத்தை, அது மாமி, அது அம்மா அப்படின்னெல்லாம் கொஞ்சிக்கிட்டாலும் எங்க வூட்டு நினைப்பு வரும் போது ஒண்ணுமே ஓடாது கண்ணு.

நானும் நல்ல குடும்பத்துல தான் பொறந்தேன். பெரிய குடும்பம்தான்.இந்த மாதிரி ஒரு நிலைமை வர வரைக்கும் அவ்வளவு தங்கமா தான் என்னையும் வச்சிட்டிருந்தாங்க. ஆனா இப்ப போனா உள்ளயே விட மாட்டேங்கறாங்க. அடிச்சு துரத்துறாங்க.

நீ இருக்கறதையே சொல்லாதேங்கறாங்க. அவங்களையெல்லாம் பொறுத்த வரைக்கும் நாம செத்துப் போனவங்கப்பா'' என்றவள் குலுங்கி குலுங்கி அழுது விட்டாள்.

உமாகாந்தனுக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை.

''அழாதீங்கக்கா'' என்றான்.

உடனே அவள் ஒப்பாரியைப் போல ஒரு பாட்டை எடுத்து விட்டாள்.

உமாகாந்தன் மனமெல்லாம் சோகம் நிரம்ப அவளுடைய துக்கம் நிறைந்த அந்தப் பாட்டை உருகிக் கேட்டான்.

கண்ணை மூடிய பொழுது ''உனக்கு இதெல்லாம் தலையெழுத்தாடா?'' என்று சத்யா அண்ணன் பின்னால் இருந்து குரல் கொடுத்தது போல ஒரு பிம்பம் அவன் மனத்தில் தோன்றியது.

அதற்குள்ளாக ''இந்தா நீலா, என்னாத்துக்கு அழுகறே நீ.தாரா அம்மா கூப்பிடறாங்க'' என்று ஒருத்தி ஓடிவந்தாள்.

உடனே ''நீ போ சாமி. நான் அழுதுப்புட்டு வாரேன்'' என்றாள் அவள்.

உமாகாந்தனை வந்தவள் அழைத்துக் கொண்டு போனாள்.

உமாகாந்தனுடைய முகத்தைப் பார்த்த ஜெயகோபால் உள்ளுக்குள்ளே சிரித்துக் கொண்டான்.

அன்றைக்கு அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு வந்தவுடனே இரவு உணவு முடித்தார்கள். தங்கள் அறைக்கு வந்த பிறகு ஜெயகோபால் கேட்டான்.

''என்னப்பா அந்த நீலா என்ன சொல்லுச்சு? அதுகிட்ட பேசிட்டிருந்ததில் இருந்து மூட் அவுட்டா இருக்கியே.''

''அண்ணா நிஜமாவே உங்களுக்கு டூரா? இல்லை எனக்கு புத்தியில உறைக்கணும்கறதுக்காக இந்த ஏற்பாடு பண்ணியிருக்கிங்களா ?''என்று கேட்டான் உமாகாந்தன்.

''ஐய்யய்யே! நீ என்னப்பா நிஜமாவே டூர் தான், நீ வரவும் தனியா சுத்தணுமே நமக்கும் ஒரு துணையாச் சேன்னு நினைச்சேன்'' என்றவர் ஒரு டைரி மாதிரி ஒன்றைக் காண்பித்தார்.

அதிலே அவர்கள் பயண விபரங்கள், சந்தித்தவர்கள், அவர்களைப் பற்றிய விவரங்கள் எல்லாம் குறித்து வைத்திருந்தார்.

கொஞ்சம் மனம் தேறிக் கொண்ட உமாகாந்தன் ''அண்ணா இது என்னண்ணா? சேரி மாதிரி இடங்களே இப்படி ஒரு குழுவாட்டமா இருக்காங்களே, இவங்களை யாரும் இந்த சமுதாயத்தில் நினைத்தே பார்க்க மாட்டாங்களா?'' என்று கேட்டான்.

''யாருப்பா நினைக்கிறாங்க. அதனால தான் அவங்களே ஒரு குழுவா தாயி, மகள்ன்னு தத்தெடுத்துக் கறாங்க அதுலயும் இந்த எம்.டு,எஃப். இருக்காங்க பாரு, கொடுமையான ஒரு ஆபரேஷன் பண்ணிப்பாங்க. முதல்லே எல்லாம் ஆரம்ப காலத்துல எல்லாம், இப்ப இவங்களே ஏதோ வைத்தியம் பண்ணி எடுத்துட்டு என்னமோ அந்தக் கதையெல்லாம் கேட்டு... என்ன பண்றது?'' என்றான்.

உமாகாந்தன் நீண்ட பெருமூச்சு விட்டான்.

சட்டென்று முகத்தை இரு கைகளையும் பொத்திக் கொண்டு தேம்பி அழ ஆரம்பித்தான்.

"ஏம்பா, இவங்க வாழ்க்கையை நினைச்சு அழறியா" என்று கேட்டார் ஜெயகோபால்.

"ஆமாம் அண்ணா, ஆனா, எனக்கு கிடைச்சிருக்கிற வாழ்க்கையையும் நினைச்சுத்தாண்ணா அழறேன்."

"அழுதுடு. நல்லா அழுதுடு" என்று சொன்ன ஜெயகோபால் அலட்டிக்கொள்ளாமல் போர்வையை இழுத்துப் போர்த்தி படுத்துக் கொண்டார்.

உமாகாந்தன் தான் வெகு நேரம் கண்ணீர் விட்டபடி அமர்ந்திருந்தான்.

அத்தியாயம் - 17

சற்று நேரம் ஆதுரத்துடனும் ஒரு விதமான கையாலாகத்தனத்துடனும் பார்த்துக் கொண்டிருந்தார் ஜெயகோபால்.

பொங்கிப் பொங்கி அழுது கொண்டிருந்தான் உமாகாந்தன்.

பத்து நிமிடங்களுக்கு மேல் அழ விட்டு விட்டார்.

அவன் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கவும் எழுந்து வந்து அவன் தலையையும் தோளையும் தடவிக் கொடுத்தார்.

"அடப் பயலே! என்னடா நீ பையைத் தூக்கிட்டு வெளியே வந்தவுடனேயே பெரிய தைரிய சாலின்னு நினைச்சேன். இப்படி புலபுலன்னு அழறியே" என்றார்.

அவன் மெதுவாக கண்களையும் முகத்தையும் துடைத்துக் கொண்டான்.

"அண்ணே இல்லண்ணே" என்றான் மறுபடியும் குரல் தழுதழுத்தது. "இது ஒரு விதத்துல சந்தோஷக் கண்ணீருன்னு சொல்லலாம்" என்றான்.

"ஒரு விதத்துலன்னா இன்னொரு விதத்துல" என்று வாயைக் கிண்டினார் ஜெயகோபால்.

பேச விட்டால் கொஞ்சம் சோகம் குறையும் என்பதால் அப்படி ஒரு முறையை அவர் கையாண்டார்.

"இல்லண்ணே! நாம போய் பார்த்த இடங்கள்ளே எல்லாரும் சொன்ன கதை. இந்த மாதிரி பிரச்சினை வந்த உடனே குடும்பத்தில் குழப்பம் வரும்ன்னு அடிச்சு தொரத்தற மாதிரிதான் இருந்துருக்கு.பாதி பேர் பாவம். எப்படியாவது போய் வீட்ல சேர மாட்டோமா நம்மளையும் வீட்ல மனுஷனா ஏத்துக்க மாட்டாங்களா அப்படின்னு ஏங்கிப் போய் இருக்காங்க. ஆனா எங்க அண்ணன் எனக்கு எந்தக் கஷ்டமும் தெரியாமல் நல்லா அருமையா வளர்த்தாரே இப்படி ஒரு குடுப்பினை எனக்குக் கிடைச்சது. இப்படி ஒரு பிரச்சினைக்கு நடுவில இப்படி ஒரு குடுப்பினை எனக்கு கிடைச்சதில்லே. அதை நினைச்சு எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்குண்ணே".

"அப்புறம் என்ன? பேக் அப்" என்றார் அவர்.

அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான் "ஆனால் இன்னொரு பக்கத்துல பார்க்கும்போது

என்னால எப்பவுமே என் அண்ணனுக்கு சிரமம் தான். நான் அவனுக்கு எப்பவுமே பாரமாதான் இருக்கப் போறேன்.

அது மட்டும் இல்லை. எனக்காக அவன் வாழ்க்கையை தியாகம் பண்றேன். வேற கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்னு சொல்றதெல்லாம் எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்குண்ணே.. என் வாழ்க்கை இறைவன் சித்தம்.

நான் எந்தப் பிறவிப் பலனை அனுபவிக்கிறேனோ? கர்ம வினைன்னு சொல்றாங்களே அந்த மாதிரி அனுபவிக்கிறேன். அவனும் எதுக்கு கஷ்டப் படணும்.? அதுல எனக்கு உடன்பாடு இல்லைண்ணே'' என்றான்.

ஜெயகோபால் புரிந்து கொண்டாற்போல தலையாட்டினார். ''அது என்னமோ நிஜம்தாம்பா. அவனை மாதிரி ஒரு அண்ணன் கிடைக்கறதுகு நீ கொடுத்து வச்சிருக்கணும். இப்ப இல்லே, ஒரு ஏழெட்டு வருஷத்துக்கு முன்னாடியே, உனக்கு இந்தப் பிரச்சினை ஆரம்பிக்கும் போதே யார் யார்மூலமோ என் அட்ரஸ் பிடிச்சு என்கிட்ட வந்தாரு, ஏன்னா நான் பூரா திருநங்கைகள் கிட்ட பழகிட்டிருக்கேன்கறது அவருக்கு தெரியும். என்னென்ன மாதிரி பிரச்னைகள் வரும்ன்னுட்டு வந்தாரு. அது மட்டும் இல்ல இப்ப நாம போயிட்டு வந்தோமே அது மாதிரி நானும் சத்யாவும் போயிட்டு வந்தோம்'' என்றார்.

இதெல்லாம் அவனுக்கு செய்தி. கண்களை அகல விரித்துக் கொண்டு ஜெயகோபாலைப் பார்த்தான்.

''நிஜமாவா அண்ணா,''

''ஆமாம்பா உன்னுடைய பிராப்ளம் என்ன?அதுக்கு என்னென்ன சொல்யூஷன் இருக்கு. ஒருவேளை நீ உன்னோட கேட்டகிரியோட போயிருந்தா நிம்மதியா இருக்க முடியுமான்னாம் தெரிஞ்சுக்கணும்னுட்டு வந்தான். இந்தியா முழுதும் சுத்தினான்டா அவன். நம்மளாவது கொஞ்ச இடம் பார்த்தோம். அதுலயே நீ அரண்டு போயிட்ட. எல்லா இடத்தையும் பார்த்து இப்படித்தான் அவனும் அழு அழுன்னு அழுதான்.''

உமா கண்களில் கண்ணீர் நிரம்பியது.

''இப்படிச் சூழ்நிலையில் அவனை எப்படிண்ணா வெளியே அனுப்ப முடியும். ஒருவேளை அவங்களுக்கு ஏத்த மாதிரி கல்வி முறை, வாழ்க்கை முறை ஒரு காலனை சேஷன் மாதிரிஇருந்தா கூட அனுப்பலாம். இந்த மாதிரி ஒரு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையில அவனை வெளியே அனுப்ப முடியாது. இப்ப கூட ஊர்லயே வீட்டை விட்டு வெளி யேறினா அவனுக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை தான் இருக்கு என்று ரொம்ப நேரம் பேசிட்டிருந்தான். அப்பதான் முடிவெடுத்தான்னு நினைக்கிறேன். உனக்காகவே வாழ்க்கையை விட்டுக் கொடுக்கறது அப்படின்னு முடிவெடுத்துட்டான்.ஜெம் ஆப் எ மேன்,''

''.....?''

''இப்படி ஆள் எல்லாம் உனக்கு கிடைக்கறதுக்கு நீ கொடுத்து வச்சிருக்கணும். அது நல்லா தெரியுதுங்

கண்ணா. அதனாலதான் எனக்கு ரொம்ப கவலையா இருக்கு'' என்றான்.

என்னப்பா இது? அன்பு கிடைச்சாலும் கவலைப் படறீங்க, கிடைக்கலைன்னாலும் கவலைப்படறீங்க?'' என்றார் ஜெயகோபால்.

''இல்லை, எனக்கு ஆதரவு கொடுக்கறாரு சரி. அதுக்காக அவரு வாழ்க்கையை எதுக்காக தியாகம் பண்ணனும்'' என்றான் உமாகாந்தன்.

ஜெயகோபால் சிந்தனையுடன் தலையாட்டிக் கொண்டார். ''ஆமாம் இது கொஞ்சம் அதிகமாத் தான் தெரியுது. நான் கூட அதைப் பத்தி அவன்கிட்ட பேசினேன். தம்பி இப்படி இருக்கையில நான் மட்டும் கல்யாணம் பண்ணிட்டு வாழ்க்கை நடத்திட்டு குழந்தை குட்டி பெத்துக்கிட்டு இருந்தா ஒரு நேரம் இல்லாட்டி ஒரு நேரம் அவனுக்கு தோணுமில்லேங் கறான்'' என்றான்.

''அதனாலதாண்ணா நான் வெளியே வந்தேன், அப்புறமாவது அவரு ஏதாவது முடிவெடுப்பாரான்னு பாப்போம்''.

''தப்பு பண்றப்பா. எனக்கு என்னமோ அப்படி யெல்லாம் கன்வின்ஸ் பண்ண முடியாது. உண்மையா உங்க அண்ணனை கன்வின்ஸ் பண்ணனும்னு நினைச்சேன்னா அவங்கிட்ட பேசு. அண்ணா நீ குடும்பத்தோட இருந்தா நான் சந்தோஷப்படுவேன். உன் குழந்தைகளை நான் அன்பா வளர்ப்பேன் அந்த மாதிரி ஏதாவது சொல்லு'' என்றார் ஜெயகோபால்.

''ஆமாண்ணா, அது வேண்ணா கரெக்ட்'' என்றவன் மறுபடியும் பெருமூச்சு விட்டு விட்டு.

''இதுலே எனக்கு இன்னமும் ஒரு சங்கடம் என்னன்னா இந்த மைதிலிப் புள்ளையோட வாழ்க்கை வேற நம்மளால பாதிச்சிடுமோ. மாப்பிள்ளை பார்க்கப் போகும் போது இதை ஒரு பிரச்சினையா சொல்லுவாங்களோ அப்படிங்கற கவலையும் எனக்கு இருக்கு.''

''ஒடி வந்துட்டா மட்டும் சொல்ல மாட்டாங்களா?'' என்றான் ஜெயகோபால்.

''எப்படியும் அந்தப் பிரச்சினையை சந்திச்சுத்தாம்பா ஆகணும். நீ சொல்ற மாதிரி மைதிலிக்கு ஒரு வாழ்க்கை அமையணும்தான். அவளுக்கு அமையணும்னா அதுக்கேத்த மாதிரி மாப்பிள்ளை வருவாங்க. இப்பெல்லாம் ஓரளவுக்கு அவேர்னஸ் வந்துட்டு இருக்கு. நிறைய வீட்ல திருநங்கைகள் இருக்கிறாங்க. அதை ஒரு பொருட்டா எடுத்துக்காம கல்யாணம் பண்றவங்களும் இருக்கிறாங்க'' என்றான்.

அப்படி யாராவது கிடைப்பாங்களா அண்ணா?''

''கிடைக்கலாம், கிடைக்காம போவாங்கன்னு நாம ஏன் நினைக்கணும் உலகத்தில் எது வேணாலும் நடக்கலாம், கிடைக்கலாம்'' என்றான் ஜெயகோபால்.

''கிடைச்சா நல்லாயிருக்கும்ண்ணா'' என்றான் உமாகாந்தன்.

''இத பாருப்பா, நல்லா யோசனை பண்ணி முடிவெடுத்துக்கோ, என்னோட ஆலோசனை

என்னன்னா உன்னுடைய அண்ணனுடைய நிழல்லே இருந்துட்டு உன்னை மாதிரி இருக்கறவங்களுக்கு ஏதாவது சேவை பண்ணு.''

''.....''

''கோயமுத்தூர்ல ஒரு ஆர்கனைசேஷன் மாதிரி வச்சு அவங்களுக்கு என்னென்ன மாதிரி உதவி செய்ய முடியும்னு பாரு. அதுதான் புத்திசாலித்தனம். இன்னொண்ணு உங்க அண்ணனுக்கு என்னோட நிலைமையை நான் ஏத்துக்கிட்டேன் இதை வச்சுக் கிட்டு என்னால வாழ முடியும்.அதுக்காக உன் வாழ்க் கையைக் கெடுத்துக்க வேண்டிய அவசியம் இல்லை. அவரவரோட வாழ்க்கை அவரவரோடது என்பதைப் புரிய வை''

''ஆமாம் அண்ணா. ஆனா, என்னோட அடி மனசுல நா அங்க போய் உட்காருவது எனக்குப் பிடிக்கலை. திரும்பத் திரும்ப என்னைப் பார்த்தாங்கன்னா ஒரே அனுதாபம்தான் வரும். எனக்கென்னமோ இரண்டு மனசா இருக்குண்ணா'' என்றான் உமாகாந்தன்.

''ஓகே. இப்பப் போக வேண்டாம். இன்னொரு ஆறு மாசம் என் கூட இரு. ஒரு வருஷம் என் கூட இரு. நம்ம ரூம் தான் பெருசா இருக்கே. அங்க இருந்துட்டு டிராயிங்ஸ் போடு. இங்கே சென்னையில ஏதாவது ஓவியக் கண்காட்சின்னு பிளான் பண்ணலாம். உனக்கு எப்ப தோணுதோ அப்ப போயிக்கலாம்'' என்றான் ஜெயகோபால்.

அதற்கும் விழித்தான் உமாகாந்தன்.

''என்னப்பா?'' என்றார்.

''இல்லை. எல்லாரையும் விட்டுட்டு என்னால இருக்க முடியுமான்னு தெரியலை?'' என்றான்.

ஜெயகோபால் கடகடவென்று சிரித்தார்.

''ஏம்பா! கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசைன்னா எப்படிப்பா?'' என்றார்.

உடனே உமாகாந்தன் தன்னுடைய முகவாய்க் கட்டையை தடவிக் கொண்டான். ''மீசைதான் வரலையே? இனிமேதான் வரணும்'' என்றான்.

ஜெயகோபால் சிரித்தார். ''நல்லா தெளிவா முடிவு பண்ணிக்கோ. நீ இந்த ரூம்ல இருக்கலாம். இதுவரைக்கும் நான் யாரையும் அலவ் பண்ணினது இல்லை. பட் உன்னோட கேஸ் டிஃபரண்ட், வேண்ணா கிச்சன் மாதிரி அந்த ரூம் இருக்கு நீ யூஸ் பண்ணிக்கோ நீ டிராயிங்ஸ் ஆரம்பிச்சிடு'' என்றான்.

''அப்படித்தாண்ணா செய்யணும். கொஞ்ச நாளைக்கு நான் இருக்கற இடம் தெரியக்கூடாது. அதுக்குள்ளே எனக்கு ஒரு ஹெல்ப் பண்ணனுமே?'' என்றான்.

''சொல்லுப்பா'' என்றான்.

''எங்கண்ணன் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டாதான் நான் திரும்பி வர்றேங்கற மாதிரி விஷயத்தை அண்ணனுக்கு புரிய வைக்கணுமே'' என்றான்.

''அது செஞ்சுடலாம்பா. அது ஒண்ணும் பெரிய விஷயமில்லை. கண்டிஷனே கூட போடலாம்.நீ

கல்யாணம் பண்ணிக்கிட்டாதான் நான் வருவேன்னு சொன்னா கொஞ்சம் யோசிப்பான்.''

அப்பொழுதுதான் உமாகாந்தன் ஜெயகோபாலிடம் அந்த உண்மையைச் சொன்னான். ''சமீப காலமா அண்ணனோட லைஃப்ல ஒரு லேடி வந்திருக்காங்க. அவங்க நல்ல எஜூக்கேட்டட், டீச்சர், எங்களுக்கு ஃபேமிலி ப்ரெண்ட் ஆயிட்டாங்க. அண்ணனை பார்க்கும் போது அவங்களுக்கும் ஒரு அட்ராக்ஷன் இருக்கற மாதிரி தெரியுது. அண்ணனுக்கும் அவங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு. இருந்தாலும் என்னைக் காரணம் காட்டிட்டு கல்யாணம் வேண்டாம்னு சொல்லிட்டிருக் காரு. அது மட்டும் இல்லை தன் மனசு கூட அவரு போராடறதைப் பார்க்கும் பொழுது எனக்கு ரொம்ப வருத்தமா இருக்குண்ணா''.

''ஓஹோ, அப்ப உங்க அண்ணனை கல்யாணம் பண்ணிக்கறதுக்கு ஒரு ஆள் ரெடியா இருக்குங்கறே?'' ''தெரியலை ஆனா அவங்க ரெண்டு பேருக்குமான அட்ராக்ஷன் இருக்கு. நான் அங்க இருந்தேன்னா அண்ணா என்னை காண்பிச்சுட்டே தனக்கு கிடைக்கிற ஒரு நல்ல வாய்ப்பை இழந்துடுவாங்களோ அப்படின்னு இருக்கு'' என்றான்.

''அப்ப சரி, நீ வந்தது ஒரு வகையில நல்லதுதான். யோசிக்கட்டும். வேண்ணா உன் சார்பா நான் உங்க அண்ணன் கிட்ட பேசறேன்.''

''நான் இருக்கிற இடமெல்லாம் சொல்லாதீங் கண்ணா. உடனே கிளம்பி வந்துடுவாரு. வந்து

எதையாவது சொல்லி என்னை எப்படியாவது திசை திருப்பி கூட்டிட்டுப் போயிடுவாரு. கொஞ்ச நாள் ஐ வான்ட் டு பி ஆன் மை ஓன்'' என்றான்.

''ஓகே'' இடம் சொல்லாமல் நான் பேசறேன். என்ன சொல்லட்டும் சொல்லு.?''

''அண்ணே நீ கல்யாணம் பண்ணிட்டாதான். நான் ஊருக்கே வருவேன் அப்படிங்கறான், ஆறு மாசம் டைம்ன்னு சொல்லுங்க'' என்றான்.

''சரி சொல்லிருவோம்.''

''சரி, இப்ப அந்தப் பக்கத்து மெஸ்ஸுக்கு போயிட்டு வந்துடலாம். லேட்டா போனோம்னா பரோட்டா கிடைக்காது'' என்றார் ஜெயகோபால்.

சொல்லி விட்டு திரும்பிப் பார்த்து ''அது என்னப்பா நான் உலகத்தில் நிறைய பேரை பார்த்திருக்கேன் உலகத்தில் நம்ம ஊர் பக்கம் தொண்ணூறு சதவீதம் பரோட்டாவை லைக் பண்றாங்க. உனக்கு ஏன் பிடிக்கறது இல்லை.?''

''நானே வெட்டியான சுமாரான ஆள்தான்னா. அதனால எனக்குப் பிடிக்கலைன்னு வச்சுக்கங்களேன். சில பேருக்கு நம்ம ஊரு இட்லி தோசைதான் விருப்பம். அப்படி வச்சுக்கோங்க.''

''சரி வச்சுக்கலாம் கிளம்பு.'' என்று சட்டையை மாட்டிக் கொண்டு மெஸ்ஸுக்கு கிளம்பினார்கள்.

''அண்ணே நீங்கதான் கிச்சன் வச்சிருக்கீங்களே! பொருள் சமையலுக்கு வேணும்கறது இருக்கே'' என்றான்.

"ஆமா! இருக்கு. யாரு செய்யறது? எனக்கு அதுல ஆர்வமே இல்லை" என்றார் ஜெயகோபால்.

"அப்புறம் எதுக்கு எல்லாம் வாங்கி வச்சிருக்கீங்க? "எல்லாம் ஒரு ஆர்வக் கோளாறுதான். வாங்கினப்ப இன்ட்ரஸ்ட்டா இருந்துச்சு,அப்புறம் என்னத்தை ஒருத்தனுக்கு சமைச்சு பாத்திரம் கழுவி போப்பா..." என்றார் ஜெயகோபால்.

"நாளையிலிருந்து நாம இங்கே சமைப்போமா?" என்றான் உமாகாந்தன்.

"அப்படிங்கறே? சமைப்பியா?"

" ஓரளவுக்குத் தெரியும். சமாளிச்சுடுவோம்."

"வேண்ணா இந்தப் பாத்திரங் கழுவுறதுக்கு மட்டும் ஒரு ஆள் போட்டுக்கலாம்."

இரண்டு பேரும் தீவிரமாக திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் மெஸ்ஸுக்கு போய் விட்டு திரும்ப வந்த உடனே உமாகாந்தன் "அண்ணா நான் இன்னிக்கு நிம்மதியா தூங்கப் போறேன்ணா. நாளையிலிருந்து ஒவியம் சமையல் ரெண்டையும் ஆரம்பிச்சுடுவோம்" என்றான்.

"சரிடாப்பா! நீ தூங்கு. நான் கொஞ்ச நேரம் நான் இந்தா வெளியில உட்கார்ந்துட்டு வரேன் "என்று வராண்டாவில் போய் அமர்ந்தார் ஜெயகோபால்.

சத்ய பிரகாஷிடம் பேசி விடலாமா என்று அவர் நினைக்கையிலேயே அவனுக்கே ஃபோன் வந்தது.

ஓரிரு நிமிடங்கள் பேசியவன் எழுந்து உள்ளே வரும் போது "என்னமோ நம்மளுகு வீட்டு சாப்பாட்டுக்கே குடுப்பினையில்லை போல இருக்கு. நாளையிலிருந்து வீட்டுச் சாப்பாடு கிடைக்கும்னு நினைச்சேன். அதுக்கும் வேட்டு வச்சிடுவாங்க போல இருக்கு" என்று சொல்லிக் கொண்டே வந்தான்.

படுக்கையை உதறிப் போட்டுக் கொண்டிருந்த உமாகாந்தன் திரும்பிப் பார்த்தான். "என்னண்ணே என் சமையல் மேல அவ்வளவு பயமா?" என்றான்.

"இல்லடா பயலே. உன் சகோதரி மைதிலிக்கு கல்யாணம் நிச்சயமாயிருக்குதாம்" என்றான்.

"அண்ணா" என்று உற்சாகமானான் உமாகாந்தன்.

"இரு, இரு, இரு, அப்படி சந்தோஷப்பட்டுடாதே. அடுத்த வெடி வச்சிருக்கிறேன்" என்றார் ஜெயகோபால்.

"என்ன?" என்றான் உமாகாந்தன் ஆர்வமாக.

ஜெயகோபால் உள்ளுர சிரித்துக் கொண்டே அந்த வெடியை எடுத்துப் போட்டார்.

உமாகாந்தன் யோசனையில் ஆழ்ந்தபடி அமர்ந்து விட்டான்.

அத்தியாயம் - 18

"நான் இப்படியாகும்னு நினைக்கவே இல்லை" என்று மகிழ்ச்சியாக சிரித்தான் சத்ய பிரகாஷ்.

"நானும் கூடத்தான்!" என்றாள் ஏழிசை வல்லபி.

வழக்கம் போல அன்றைக்கு மாலையில் சத்ய பிரகாஷினுடைய கார் ஃப்ரஷ்னிங் செண்டருக்கு வந்திருந்தாள் ஏழிசை வல்லபி.

"ஏன் இசை, உங்க அண்ணன் பயங்கரமான ஆளு" என்றான்.

"ஆமா, நானே எதிர்பார்க்கலை" என்றாள் ஏழிசை வல்லபி.

"நான் கூட ரோஷத்துல சொல்றானோன்னு நினைச்சேன். இப்ப கூட எனக்கு அந்த மாதிரி ஒரு டவுட் இருக்கு" என்ற சத்ய பிரகாஷ் சற்று நேரம் யோசிப்பவன் போல் அமர்ந்து விட்டு "ஏன் இசை, நான் ஒண்ணு கேட்டா கோபிச்சுக்க மாட்டியே?" என்றான்.

"கேளுங்க" என்றாள்.

"இல்லை, உங்க அம்மா அப்பாவுக்கு இதுல பூரண சம்மதமா?" என்று கேட்டான்.

"அப்படித்தான் தெரியுது" என்றாள் ஏழிசை வல்லபி.

"இல்லை, பெற்றோர்களுக்கு இதுல முழுமையான சம்மதம் இல்லாம செய்யறது நாளைக்குப் பிரச்சினையாப் போயிடும்."

"ஹலோ எல்லாம் நல்லபடியா போயிட்டிருக்கு. இப்ப எதுக்கு நீங்க புதுசா இந்த சந்தேகத்தை கிளப்பறீங்க?" என்றாள் ஏழிசை.

"ஏன்னா எல்லாச் சந்தேகங்களையும் முதல்ல தீத்துக்கறது நல்லது. பிரச்சினைகளையெல்லாம் முதலில்

சந்திச்சிட்டோம்னா அதுக்கப்புறம் பின்னாடி வாழ்க்கை நல்லாயிருக்குமில்லே" என்றான்.

"இல்லையில்லை. எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் அம்மா அப்பாவுக்கு முழுமையான திருப்திதான். அதுலயும் அம்மா அப்பா சொல்றதுக்கு மேல எதுவும் பேச மாட்டாங்க" என்றாள் ஏழிசை.

"அது இன்னும் ஆபத்தாச்சே?" என்றான்.

"ஏன்?" என்றாள்.

"மனசுக்குள்ளே வருத்தத்தை வச்சுகிட்டு அதை மருமகள்கிட்ட வேற விதமா காட்டினாங்கன்னா?" என்றான்.

ஏழிசை வல்லபி அவனை உறுத்துப் பார்த்தாள். "எங்க அம்மாவைப் பார்த்தா அப்படியெல்லாம் தெரியுதா?" என்றாள்.

"எப்படி?" என்றான் அவன்.

"இல்லை, மருமகளைக் கொடுமைப் படுத்தற மாதிரி தெரியுதா?".

"சேச்சே! நான் அப்படிச் சொல்லலை. என்னோட கவலை உங்களுக்குப் புரியலை இசை."

"நீங்க என்னதான் நினைக்கறீங்க? வெளிப்படையா பேசுங்க."

"இல்லை இசை, பொதுவா இந்த மாதிரி ஏதாவது ஊனங்கள், பிரச்சினைகள், இருக்கற வீட்டுல பொண்ணைக் கொடுக்கற போது பெரியவங்களுக்கு ஒரு கவலை இருக்கும். அதனால ஏதாவது

பிற்காலத்தில் ஏதாவது பாதிப்பு வருமோங்கற கவலை இருக்கும் அதான்.''

இசை அதை ஒத்துக் கொண்டாள்.

''ஆமாம், ஆனால் அப்பா தீர்க்கமா யோசிச்சுத்தான் சொல்றாங்கன்னு நினைக்கிறேன். அப்பா தீர்க்கமா யோசிச்சு சொல்றாங்கன்னா அம்மா அதை எப்பவுமே ஏத்துக்குவாங்க'' என்றாள் ஏழிசை வல்லபி.

''எப்படியோ எல்லாம் நல்லபடியா நடந்தாச் சரி'' என்றான் சத்ய பிரகாஷ்.

''என்ன, நீங்க எவ்வளவு பெரிய விஷயம் நடந்திருக்கு. எங்க அண்ணன் உங்க தங்கையை கல்யாணம் பண்றதுக்கு ஆசைப்பட்டுக கேட்டிருக்கான். இதுக்காக நீங்க சந்தோஷப்படணும் இல்லே. இப்படி அனலைஸ் பண்ணிட்டே இருக்கிங்களே. அய்யய்யோ வரவர நீங்க ரொம்ப சினிக்காயிட்டிங்க'' என்றாள்.

அவன் ஒரு பெருமூச்சு விட்டான்.

''அப்படித்தான் ஆயிட்டேன் போலத்தான் இருக்கு. எப்ப உமாகாந்தனுக்கு இந்தப் பிரச்சினை ஆரம்பிச்சதோ அப்ப இருந்து எந்த சந்தோஷத்தையுமே முழுமையா அனுபவிக்க முடியலை. அது குறுகிய கால சந்தோஷமா இருக்குமா? இல்லை அதில் ஏதாவது பிரச்சினை இருக்குமா இப்படி போகுமா அப்படிப் போகுமாங்கற கவலைதான் எனக்கு இசை'' என்றான்.

அந்த நேரத்தில் எழுந்து அவனை அணைத்துக் கொள்ள வேண்டும்போல ஏழிசை வல்லபிக்கு தோன்றியது.

ஒரு நிமிடம் அமைதியாக அமர்ந்து கொண்டாள்.

பிறகு சொன்னாள். ''புரியுதுங்க. அதுவும் நீங்க சிங்கிளா இந்தப் பிரச்சினைகளை ஹேண்டில் பண்ணியிருக்கீங்க. அதனால உங்களுக்கு இந்த மாதிரி பயம் ஏற்படுவது இயற்கைதான். ஆனால் இனிமேல் எல்லாம் நல்லதா நினைச்சுங்கங்க.''

''ஏன்.?''

''இன்னொரு தோள் உங்களுக்குக் கிடைக்குது சப்போர்ட்டுக்கு. நீங்க தனியா சுமந்துட்டு இருந்த தெல்லாம் இனிமேல் எங்க அண்ணன் கூட ஷேர் பண்ணிக்கலாம். அவனும் சப்போர்ட் கொடுப்பான்.'' என்றாள்.

''ஆமாம். கடவுளுக்கு இப்பதான் என்மேல கொஞ்சம் கருணை பிறந்திருக்கு'' என்றான் சத்ய பிரகாஷ்.

பிறகு லேசான குறும்புச் சிரிப்புடன் ''மைதிலி பயங்கரமான ஆள்தான்'' என்றான்.

ஏழிசை வல்லபி அழகாகச் சிரித்தாள். ''ஆமா! ரெண்டு பேரும் உள்ளுக்குள்ளேயே வச்சுக்கிட்டு சரியான நேரம் பார்த்து உடைக்கிறாங்க.''என்றாள்.

''சூழ்நிலையும் அவங்களுக்கு சாதகமா போச்சு. மைதிலிக்கு கல்யாணம் பண்ணிடுங்க கல்யாணம் பண்ணிடுங்கன்னு சொல்றானேன்னு நினைச்சேன். மனசுல இப்படி ஒரு ஐடியா வச்சுட்டுத்தான் சொல்லியிருக்கான்.''

"என்ன இப்ப? எங்க அண்ணனுக்கு என்ன குறை.? இது மாதிரி ஒரு மாப்பிள்ளை உங்களுக்குக் கிடைக்குமா?" என்றாள் ஏழிசை.

"ஐய்யோ, அது மாதிரி ஒரு மாப்பிள்ளையும் கிடைக்காது. மைதிலி மாதிரி ஒரு தங்கையும் கிடைக்க மாட்டா? உங்களை மாதிரி ஒரு....." என்று இழுத்தான்.

"ஒரு.. ஒரு ...."என்றாள் அவள்.

"ஃப்ரண்டும் கிடைக்க மாட்டீங்க!" என்றான்.

"அப்பாடா! ஃப்ரண்டுன்னாவது .....இப்பவாவது..... உறைச்சிருக்கே?" என்றாள்.

உறைச்சிருக்கே என்பது கொஞ்சம் கடினமான சொல்லாக இருந்தாலும் கூட ஏழிசை வல்லபி வேண்டும் என்று தான் அதைப் பயன்படுத்தினாள்.

"என்ன பண்றது? உங்க அண்ணனுக்கு இருக்கற தைரியம் எனக்கு இல்லை." என்றான்.

"இது வேண்ணா உண்மை" என்றாள்.

பிறகு அவள் சட்டென்று "சரி, இப்போ மைதிலிக்கு கல்யாணம் பண்ணி வச்சாச்சு. இனிமேலாவது உங்க கல்யாணத்தைப் பத்தி யோசிக்கலாமில்லே" என்றாள்.

"பார்க்கலாம் இசை. இந்த கல்யாணம் நல்லபடியா நடக்கணும். விஷயங்களெல்லாம் நல்ல படியா நடக்கணும். அதுக்கப்புறம் யோசிப்போம்."

"நல்லா யோசிச்சிங்க போங்க. யோசிச்சு முடிக்கறதுக் குள்ள நரைமுடி வந்துடும்" என்றாள் அவள்.

"வரட்டுமே, உண்மையிலே என் மேல பிரியம் இருக்கிற பொண்ணா இருந்தா அது வரைக்கும் காத்துட்டு இருப்பா. எனக்காக ஒருத்தி பிறந்துதானே இருப்பா? என் மேல உண்மையான அன்பு இருந்தா அவ காத்துக்கிட்டு தான் இருப்பா" என்றான்.

"நரைமுடி வரவரைக்கும் காத்துட்டு இருந்தாத்தான் உண்மையான அன்பாக்கும்" என்று இழுத்தாள்.

அவன் சந்தேகமாகப் பார்க்க "ரொம்ப சந்தேகப் படாதீங்க. அவ புத்திசாலிப் பொண்ணா இருந்தா கட்டிக் கடத்திட்டுப்போய் கல்யாணம் பண்ணிடுவா?" என்றாள்.

அவன் கபகபவென்று சிரித்தான்.

"அப்படியா? கடத்திடுவாளா என்ன?"

"ஆமாம் பின்னே? அவ்வளவு காலம் காத்துக் கிடந்து அதுக்கப்புறம் கல்யாணம் பண்ணி எதுக்கு?" என்றாள் அவள்.

"அதானே எதுக்கு?" என்றான் அவன்.

"அதனால கொஞ்சமாவது அறிவுள்ள பொண்ணா இருந்தா எப்போ எங்கே மடக்கிக் கொண்டு போகணும்னு அவளுக்குத் தெரியும்."

அவள் என்ன சொல்கிறாள் என்பது முழுமையாக புரிந்த போதும் சத்ய பிரகாஷ் அதைப் புரிந்து கொள்ளாதவன் போலவே இருந்தான்.

ஏழிசை வல்லபிக்குக கோபம் கோபமாக வந்தது. "ஆனாலும் இப்படி ஒரு ....."என்றவள் நிறுத்திக் கொண்டாள்.

"ம். ஃபில் இன் த பிளாங்க்ஸ்".

"வேண்டாம் நீங்களே ஃபில் அப் பண்ணிக்கோங்க" என்று சொன்னவள் "சரி நான் கிளம்பறேன்" என்று கிளம்பினாள்.

ஏழிசை வல்லபியை தான் ரொம்பவும் தான் படுத்துகிறோமோ என்று அவனுக்குத் தோன்றியது. அதனால் அவளுக்கு ஆறுதல் கூறுவது போல 'இசை' என்றான் குழைந்த குரலில். அவள் நின்று திரும்பிப் பார்த்தாள்.

"நாம யாருக்கும் எதுவும் கெடுதல் செய்ய வில்லை இசை. ஆண்டவன் நமக்கு நல்லதே நடத்துவான். நம்ம வாழ்க்கை நல்லாதான் இருக்கும்னு நான் நினைக்கிறேன்."

"நம்ம வாழ்க்கை!" என்ற சொல்லிலே அவள் சற்று மகிழ்ந்து போனாள்.

"அதாவது உன்னோட வாழ்க்கையும் சரி என்னோட வாழ்க்கையும் சரி" என்று அவன் மேலும் விளக்கம் சொல்லப் போய். "அதை வேறு நின்று கேட்டோமே" என்று கடுப்பாகி "நான் வரேன்" என்று சொல்லி விட்டு கிளம்பி விட்டாள்.

அவளுடைய கோபத்தை அவன் கொஞ்சம் ரசித்துக் கொண்டான்.

"சரி இன்னைக்கு நைட் ஃபோன் போட்டு சமாளிச்சுடுவோம்" என்று எண்ணிக் கொண்டான்.

ஏழிசை வல்லபி இந்தப் பக்கம் கிளம்பியதும் தான் அந்தப் பக்கம் இருந்து ஜெயகோபாலுடைய ஃபோன் வந்தது.

ஜெயகோபால் ஏற்கெனவே "நீயா கூப்பிடாதே நானே கூப்பிடறேன் சூழ்நிலையைப் பொறுத்து!" என்று சொல்லியிருந்தான். ஆனால் ஒரு வாரமாக அவனிடமிருந்து போன் வரவில்லை என்பதால் இவன் கொஞ்சம் கவலையாகத் தான் இருந்தான்.

இதற்கிடையிலே ஒரு வேலை மட்டும் செய்திருந்தான்.

தம்பியினுடைய அக்கவுண்டில் பதினைந்தாயிரம் ரூபாய் மட்டும் போட்டு வைத்திருந்தான்.

"ஜெயகோபால் சொல்லு ஃபோன் எங்கேயிருந்து?"

"இங்கிருந்து. நாங்க சென்னைக்கு வந்தாச்சுப்பா" என்றான் அவன்.

"அப்புறம், தம்பி எப்படி இருக்கான்" என்று கேட்டான் சத்ய பிரகாஷ்.

"இப்பதாம்பா கொஞ்சம் கொஞ்சம் புரியுது. அண்ணன்னா என்ன? அவன் காட்டின அன்பு என்ன? குடும்பத்தோட இருக்கறது எவ்வளவு சந்தோஷம். அப்படியெல்லாம் புரியுது" என்றான் ஜெயகோபால்.

"பரவாயில்லை. பரவாயில்லை. எங்களைப் பத்தி புரியணும்கறது இல்லை. அவன் நல்லா இருந்தா சரி. ஹாப்பியா இருந்தா போதும்" என்றான் சத்யா.

"அதானே! இருக்கறதை விட்டுட்டு பறக்கறதைப் பிடிக்கறேன்னு கிளம்பி வந்தான். இப்பதான் உலகம்

எவ்வளவு கொடுமையானதுன்னு புரியுது, எவ்வளவு விஷயங்கள் அதுல இருங்குங்கறதை பார்த்து பையன் கொஞ்சம் ஷாக்தான்.''

''ஏம்பா நீ எல்லா இடத்துக்குமா கூட்டிட்டு போனே? அவனை எதுக்கு கலவரப்படுத்தறே'' என்றான் சத்ய பிரகாஷ்.

''கலவரப்படுத்தலைப்பா. அவன் என்ன சின்னப் பையனா? கையில ஃபீடிங் பாட்டிலைக் கொடுத்து பாலைக் குடின்னு சொல்ல? பார்த்துக்கட்டும். தெரிஞ்சுக்கட்டும்'' என்றான்.

''சரி, சரி, ரொம்ப மூட் அவுட் ஆயிடப் போறான்பா. நீ கூட இருக்கறதுனாலதான் நான் கவலை இல்லாம இருக்கறேன். ஆனா ஷாக் ட்ரீட் மெண்ட் கொடுக்கறேன்னுட்டு ரொம்ப அவனைக் கஷடப்படுத் திடாதே'' என்றான்.

''இல்லையில்லை .நீயும் நானும் சுத்தின அளவுக் கெல்லாம் கூட கூட்டிட்டுப் போகலை. முக்கியமா மூணு நாலு இடம்தான். டில்லி, பூனே, பாம்பேவுக்கு பக்கத்துல ஒரு இடம். அப்புறம் சென்னைக்குப் பக்கத்துல ஒரு இடம். இங்கதான் கூட்டிட்டுப் போனே. அதுலயே பய அரண்டு போயிட்டான்.''

''சரி விடு, இப்ப என்ன சொல்றான். அவன் செலவுக்கு நான் அக்கவுண்ட்ல பணம் போட்டிருக்கேன்'' என்றான்.

''ஆமாம், அதை வேற நேத்து ஐநூறு ரூபாய் எடுக்கறேன்னு போய் ஏடிஎம்ல பார்த்துட்டு வந்து ஒரே

நெகிழ்ச்சிதான். அண்ணன் பாரு எனக்காக என்ன வெல்லாம் செய்யறான் அப்படின்னுட்டு.'' இத்தனை நேரம் அண்ணன் மேல பாசத்தைக் கொட்டி ஃபிலிங்ல இருந்தான்.''

இந்தப் பக்கம் மகிழ்ச்சியாக சிரித்த சத்யா ''உனக்கு விஷயம் தெரியுமா? மைதிலிக்கு மாப்பிள்ளை பேசியிருக்கு'' என்றான்.

''அப்படியா?'' என்ற ஜெயகோபால் ஆசையாக கேட்டார்.

''ஆமா! ஜெயகோபால் ஆனால் அதுலயும் ஒரு சிக்கல் ஆயிடுச்சு!'' என்றான்.

''என்ன?'' என்று கேட்டான் ஜெயகோபால்.

''சிஸ்டர் கண்டிஷன் போடறா?'' என்றான்.

''அப்படியா? என்னவாம்.? என்னப்பா இது மாப்பிள்ளைங்க தான் கண்டிஷன் போடுவாங்க. இப்ப சிஸ்டர் கண்டிஷன் போடறா?

''இந்த மாப்பிள்ளை ரொம்ப நெருங்கியவர்தான், அவர் எந்த கண்டிஷனும் போடலை, இப்ப இது கண்டிஷன் போடுது.''

''என்னவாம்''

''கல்யாணத்துக்கு உமாகாந்தன் வந்தாத் தான் கல்யாணம் பண்ணிப்பாளாம்'' என்று.

''இவன் என்னமோ இன்னும் ஆறு மாசம் போகமாட்டேன் நான் தனியா இருந்து பழகறேன்னு சொல்லிக்கிட்டிருக்கானே'' என்றான் ஜெயகோபால்.

''கல்யாணத்துக்கு எப்படியும் மூணு மாசம் ஆயிடும் அட்லீஸ்ட் இவன் ஒரு மாசத்துக்கு முன்னாடியாவது வந்தா தான் நல்லாயிருக்கும். ஏன்னா மைதிலி ரொம்ப மூட் அவுட் ஆகறா. அதுக்குள்ள ஏதாவது நேரடியா பேசறதுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடேம்பா'' என்றான் சத்ய பிரகாஷ்.

''இரப்பா, இப்பதான் கனிஞ்சு வருது. அதுக்குள்ள தடி கொண்டு அடிக்கக் கூடாது. இப்பதான் வீடுங்கறது எவ்வளவு சொர்க்கம். உன்னை மாதிரி சகோதரன் கிடைச்சது எவ்வளவு பெரிய விஷயம்கறதெல்லாம் புரியுது. இன்னும் கொஞ்சம் மனசு கனியட்டும் அப்புறம் பேசிடுவோம்.''

''சரிப்பா! எங்க மேல எல்லாம் கோபமாக இருக்கானா?'' என்றான்.

''கோபமெல்லாம் இல்லை வருத்தம் தான் படறான்.''

''ஏன் வருத்தம்?'' என்றான் சத்ய பிரகாஷ்.

''இல்லை. அவனைக் காப்பாத்தறேன் அவனைப் பார்த்துக்கறேன்னு சொல்லிட்டு தேவையில்லாம நீ உன் லைஃப்பை தியாகம் பண்றியாம். அது அவனுக்கு பிடிக்கலையாம். அது என்னமோ அவனுக்கு கழுத்தைச் சுத்தி வளையம் போட்டுக்கற மாதிரி இருக்காம். எப்ப சத்யா அண்ணன் கல்யாணம் பண்ணிக்கறாரோ அப்பதான் போவேன்னு என்று ஒரு ஸ்டேட் மெண்ட் வேற விட்டிருக்கான்.''

சத்யா 'ஓ' என்று உற்சாகமிழந்தான்.

''என்னப்பா நீ! இளவட்டம் எல்லாம் கல்யாணம் பண்ணிக்கறதுன்னா குதிப்பாங்க. நீ என்ன சுரத்து இல்லாம காத்து போன பலூன் மாதிரி உஷ்ன்னு சொல்றே'' என்றான்.

''ஜெயகோபால், உனக்குத்தெரிஞ்சது தானே? உண்மையைச் சொல்லு என் சிச்சுவேஷன் தெரியு மில்லே மைதிலியும் கிளம்பியாச்சு. உமாகாந்தனுக்கு நாளைக்கு ஒரு ஆறுதல் வேண்டாம் ?''என்றான்.

''வேணும்தான். கொஞ்சம் கொஞ்சமாதாம்பா நகர்த்தணும். ஆனா எனக்கு என்னமோ அவன் பாயிண்டும் கரெக்டுன்னுதான் தோணுது'' என்றான்.

பிறகு தொடர்ந்து ''அவன் சொல்றதைப் பார்த்தா கிட்டத்தட்ட ஏதோ உங்களுக்கு தோழமையா ஒரு பொண்ணு கூட இருக்கறமாதிரி தெரியுதே?''.

''இதெல்லாம் சொல்லிட்டானா?''

''ஆமாம்பா. அவன் என்ன சொல்றான் தெரியுமா?'' என்று மேலும் சில நிமிடங்கள் உமாகாந்தன் பேசியவுடன் சத்ய பிரகாஷே கொஞ்சம் திகைத்துப் போனான்.

அதற்குப் பிறகு ''சரி ,முதல்ல நீ எப்படியாவது மைதிலி கல்யாணத்துக்கு அவன் வர மாதிரி பண்ணு. அதுக்கப்புறம் பார்க்கலாம்'' என்றான்.

''இல்லை, நீ உறுதி மொழி கொடு'' என்றான் ஜெயகோபால்.

''ப்ளீஸ்! எனக்குக கொஞ்சம் டைம் கொடுங்க'' என்றான்.

"சரி, ஒன் வீக் டைம். அதுக்குள்ள ஏதாவது ஒரு முடிவு சொல்லு."

"ஒன் வீக்கெல்லாம் முடியாதப்பா மைதிலி கல்யாணம் முடியட்டும். அதுக்கப்புறம் பார்க்கலாம், அதுக்கப்புறம் ஒன் மந்த் டைம் கொடுக்கச் சொல்லு" என்றான்.

"ஆனாலும் இது கொஞ்சம் ஓவர்பா" என்று கொஞ்சம் கடிந்து கொண்டுதான் ஜெயகோபால் ஃபோனை வைத்தான். ஆனால் சத்ய பிரகாஷ் செல் போனை ஆப் செய்து விட்டு இவ்வளவு எல்லாம் சகோதரன் கவனித்திருக்கிறான் என்று யோசனையில் ஆழ்ந்தான்.

"எப்படியோ மைதிலி கல்யாணம் முடியட்டும் முதலில்" என்று எண்ணிக் கொண்டான். ஆனால் மைதிலி கல்யாணத்திலே கூட சிக்கல்கள் வரப் போகிறது என்பது அப்போது அவனுக்குத் தெரியவில்லை.

அத்தியாயம் - 19

எல்லாரும் அமர்ந்து திட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

"சிம்பிளா பண்ணிடலாம்பா. வல்லபி கல்யாணம் இருக்கு. நித்யா படிப்பு இருக்கு. கல்யாணம் சிம்பிளா பண்ணிக்கலாம்" என்றான் சம்பத் குமார்.

"போப்பா! ஒரே ஒரு மகன். உன் கல்யாணத்தை நாங்க சிம்பிளாவெல்லாம் நடத்த முடியாது. வேணுங்

கறதை நான் ஃபிக்சட்ல போட்டு வச்சிருக்கேன். நீ அதைப் பத்தி கவலைப்படாதே" என்றார் அப்பா.

"ஒரு நாள் கல்யாணத்துக்காக இவ்வளவெல்லாம் செலவு செய்யறது வேஸ்ட்டுப்பா" என்றான் மகன்.

செல்வ கணபதி அதை ஏற்றுக் கொள்ளவில்லை. "இல்லைப்பா. நாம முறைப்படி செஞ்சிடுவோம். அதிலயும் எனக்கு உனக்குத் தமிழ் முறைப்படி கல்யாணம் பண்ணனும்னு ரொம்ப ஆசை. அது படி செஞ்சிடுவோம்" என்றார்.

"சரிப்பா! அதெல்லாம் உங்கள் விருப்பம்" என்று சொன்னாலும் சம்பத் குமாரின் மனதுக்குள்ளே மைதிலி போட்ட அந்தக் கண்டிஷன் உறுத்திக் கொண்டே இருந்தது. சகோதரன் வரவேண்டுமாமே? அவனை எங்கே என்று தேடிக் கண்டுபிடிப்பது. யாருடைய பொறுப்பிலோ இருக்கிறான் என்பது நிஜம்தான். திடீரென்று அவனும் முரண்டு பிடித்து வரமாட்டேன் என்று சொல்லி விட்டால் என்ன செய்வது என்ற எண்ணம் ஓடிக் கொண்டே தான் இருந்தது.

முதல் வேளையாக இதை சத்யாவிடம் சொல்ல வேண்டும் என்று எண்ணிக் கொண்டான். சொல்லவும் செய்தான்.

அன்று மாலை வங்கியிலிருந்து நேராக சத்யாவைப் பார்க்கச் சென்று விட்டான். "வாங்க மச்சான்" என்று சிரித்தான் சத்யா.

"இதுவும் கூட நல்லாத்தான் இருக்கு. இல்லை?" என்றான்.

பிறகு மறுபடியும் ஒரு முறை சிந்தனையுடன் தனது நண்பனை பார்த்தான். ''ஏன் சம்பத்து, எங்களுக்கு ஏதோ ஹெல்ப் பண்ற மாதிரி நினைச்சுட்டு இதுல எதுவும் இறங்கிறியோ?'' என்றான்.

''இன்னொரு தடவை இதைக் கேட்டேன்னு வச்சுக்கயேன்'' என்று சுற்றும் முற்றும் பார்த்தான்.

''கையில கிடைச்சதை எடுத்து அடிச்சுடுவியாக்கும். அடி இதுவரைக்கும் என்னை அடிக்கறதுகுன்னு யாரும் இல்லை'' என்றான் சத்யா.

ஆனால் மகிழ்ச்சியாக இதை சொன்னான்.

''தாங்க்ஸ் சம்பத். எனக்கு ஒரு பெரிய கவலையை தீர்த்துருக்கே. மைதிலிக்கு வரன் பார்க்கணும். அதுவும் நல்லவங்களா இருக்கணும். இந்தப் பிரச்சினைக ளெல்லாம் பெரிது படுத்தாதவங்களா இருக்கணும். அப்படின்னு நான் வேண்டாத தெய்வங்கள் இல்லை.''

சம்பத் குமார் சத்யாவை நேராக பார்த்தான். பிறகு சொன்னான். ''பாருப்பா. நான் உனக்கு ஏதோ உதவி பண்றதா நினைச்சுக்கிட்டு பண்றேன் அப்படிங்கற மாதிரி எண்ணமெல்லாம் இருந்துதுன்னா இன்னை யோட ஃபுல் ஸ்டாப் வச்சிடு. எனக்கு மைதிலியை பிடிச்சுத்தானிருந்தது. மைதிலிக்கும் என்னை பிடிச்சுத்தானிருந்தது. எனக்கு அந்த விஷயம் ஓரளவுக்கு புரியவும் தான் நான் என்னை அறியாம இதை சொல்லிட்டேன்னு நினைக்கிறேன்'' என்றான்.

சத்யா அவனே பேசட்டும் என்பதைப் போல அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தான்.

''சட்டென்று விஷயம் வெளியே வந்தது வேண்ணா நான் எதிர்பார்க்காம நடந்தது. சூழ்நிலை அப்படி அமையவும் என்னையும் மீறி ரோஷம் வந்துருச்சுன்னு நினைக்கிறேன்'' என்றான்.

''அதாம்பா சொல்றேன். எங்களுக்காக நீ ரோஷப் பட்டியில்லே. அதுக்காக தாங்க்ஸ்'' என்றான் சத்யா.

''அது சரி! அடுத்தது என்னன்னு பார்ப்போம்'' என்றான்.

''அடுத்தது என்ன? நீ தான் சொல்லணும்'' என்றான் சத்யா.

''இல்லைப்பா உன் சிஸ்டர் ஒரு கண்டிஷன் போட்டிருக்காப்பா?''

''என் சிஸ்டரா? உங்கிட்டயா ?''என்றவன் தொடர்ந்து ''இத பார்றா. ஒரே நாள்ல உங்கிட்ட பேச்சு வார்த்தை நடக்குதா.

''நீங்க தானேப்பா நேத்து நேரடியா பேசிக்குங்கன்னு சொன்னீங்க. போனேன்ல நேத்து? அப்பதான் சொன்னா.''

''ஓ.கே. ஓ.கே. இனி அதெல்லாம் உங்க இஷ்டம். ஃபோன்ல பேசுவீங்களோ சந்திப்பீங்களோ. சந்திக் கணும்னு இருந்தா சொல்லுப்பா. நானே ஏற்பாடு பண்ணிக் கொடுத்துடறேன்.''

''இதுக்கு என்ன அர்த்தம்.? நாளைக்கு உனக்கு ஏதாவது பொண்ணு பார்க்கும் போது நாங்க இந்த மாதிரி ஹெல்ப் பண்ணனும்னு அர்த்தமா?'' என்றான்.

"புரிஞ்சா சரி." என்றான் சத்யா.

"இன்னும் நிறைய விஷயங்கள் புரியாமதான் இருக்குது" என்றான் சம்பத்.

சட்டென்று அதிர்ந்தாற்போல சத்யா சம்பத் குமாரைப் பார்த்தான். " இதுககு என்ன அர்த்தம்?" என்றான்.

"ஒண்ணும் இல்லை." என்று பேச்சை மாற்றி விட்டான் சம்பத்.

"என்ன கண்டிஷன்னு கேட்கலையே நீ ?"என்றான்.

"அவளுக்கு என்னப்பா சின்னப் புள்ளை? ஏதாவது கண்டிஷன் போடுவா. உங்களுக்குள்ளே எவ்வளவோ இருக்கும் அதை ஏன் எங்கிட்ட சொல்லணும்."

"அட மடையா" என்பது போல் பார்த்தான்.

அவன் பார்வையைக் கண்ட பிறகுதான் "ஏதோ விஷயம் இருக்கிறது "என்று சத்யாவுக்கு புரிந்தது.

"என்னப்பா?"

"என்னன்னா... கல்யாணத்துக்கு உமாகாந்தன் வரணுமாம், வந்தாதான் கல்யாணம் நடக்குமாம்" என்றான்.

சத்யா புன்னகைத்தான்.

"ஆக்சுவலா எப்படியாவது உமாவைக் கொண்டு வரணும்னுதான் முயற்சி பண்ணிட்டிருக்கேன். ஆனா இவ இதை கண்டிஷனாவெல்லாம் போட்டா எப்படி?"

"கண்டிஷனாப் போட்டாதான் நாம சீரியஸா எடுத்துக்குவோமாம்."

"சரி பார்ப்போம்" என்றான் சத்யா.

"ஏன்ப்பா உண்மையாவே உமா எங்கிருக்கிறான்னு உனக்குத் தெரியுமா?" என்றான்.

"தெரியும். ஜெய கோபால் பொறுப்புல இருக்கிறான்னுதான் சொன்னேனே."

"அப்புறம் என்ன? மூவ் பண்ணி வரவச்சுடலாம் தானே?"

"அதுல தானேப்பா பிரச்சினையே அவனும் ஒரு பிடிவாதக்காரன். ஆனால் மைதிலியோட மேரேஜ்னா எப்படியாவது வந்துடுவான்னு நினைக்கிறேன். எப்படியாவது முயற்சி பண்ணி கொண்டு வந்துடணும்னு நினைக்கிறேன்."

ஏனோ சத்யாவினுடைய உள் மனது சொன்னது அது அவ்வளவு எளிதான காரியமாக இருக்கப் போவதில்லை என்று,

சம்பத் அப்போது ஒரு சில விஷயங்களைச் சொன்னான். "எனக்கு என்ன தோணுதுன்னா உமா வரணும்னா அவனும் கண்டிஷன் போடுவான்னு நினைக்கிறேன்."

சத்யா ஒரு பெருமூச்சு விட்டான். "பார்ப்போம் சமாளிப்போம். எப்படி இருந்தாலும் அவனுக்கும் மைதிலியோட மேரேஜ் பார்க்கணும்னு ஆர்வம்

இருக்கும். அதை வச்சுதான் நாம எதையாவது பண்ணனும்'' என்றான்.

இரண்டு பேருமே எதிர்பாராமல் இன்னொரு பிரச்சினை சம்பத் குமார் வீட்டில் அன்றைக்கு நடந்தது.

★ ★ ★

புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தார் கருணாம்பிகை .

செல்வ கணபதி நேற்றிலிருந்தே கவனித்துக் கொண்டிருந்தார். எப்பொழுது இந்தபேச்சு வார்த்தை ஆரம்பித்ததோ அப்போதிருந்தே கருணாம்பிகையின் முகத்திலே ஒரு கலக்கம் தோன்றி இருந்தது.

''என்ன கருணாம்பிகை.?''

''இல்லை. தூக்கம் வரலை.''

''ஏன் தூக்கம் வரலை? வா இரண்டு பேரும் கொஞ்ச தூரம் நடந்துட்டு வரலாம்'' என்றான்.

''இல்லை'' என்று மறுபடியும் இழுத்தாள்.

''என்னப்பா சொல்லு?'' என்றார் செல்வகணபதி.

''இல்லை. நட்பா பழகறதுங்கறது வேற. பொண்ணு எடுக்கறதுங்கறது வேற'' என்றார்..

இதை செல்வ கணபதி ஓரளவுக்கு எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தார்.

''நட்பு அதனால கெட்டுப் போயிடும்னு நினைக்கறியா? ஏன் அப்படி நினைக்கணும்.? நட்பு உறவா மாறட்டுமே!'' என்றார்.

கருணாம்பிகை அவரைக் கவலையுடன் பார்த்தார். ''நிஜமாவே உங்களுக்குப் புரியலையா?''

செல்வகணபதிக்கு கருணாம்பிகை என்ன கேட்கிறார் என்பது புரிந்துதான் இருந்தது.ஆனால் தெரியாதவர் போல அவளுடைய வாயிலே இருந்து வரட்டும் என்று எண்ணியவர் போல பார்த்தார்.

கருணாம்பிகை ''ஏங்க, அந்த வீட்டுல உமாகாந்தன் இப்படி இருக்கானே? அது... அது நாளைக்கு பொறக்கற குழந்தைங்களை.....'' என்று இழுத்தாள்.

செல்வ கணபதி புன்னகைத்தார். ''எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் இது அப்படியெல்லாம் குடும்பத்தில பரவற விஷயமா இல்லை. அப்படி இருந்தா ஒரு தாத்தா அப்படி இருந்தா பெயரன் பேத்தின்னு யாருக்காவது அப்படி ஆகுமில்லே. அப்படியெல்லாம் எதுவும் இல்லை'' என்றார்.

''எனக்கென்னமோ பயமாதாங்க இருக்கு.'' என்றாள்.

அப்போது செல்வ கணபதி எழுந்து அமர்ந்தார். கருணாம்பிகையையும் எழுப்பி அமர்த்தினார். ''கருணா, நான் ஒரு விஷயம் கேட்கறேன் .இதுக்கு பதில் சொல்லு'' என்றார்.

கருணாம்பிகை அவருடைய முகத்தை கவலையுடன் பார்த்தாள்.

''நாளைக்கு நீயோ நானோ உயிரோட இருப்போம்னு தெரியுமா?''

இதைக் கேட்டவுடன் கருணாம்பிகை திகைத்துப் போனாள். "என்ன? இப்படியெல்லாம் பேசறீங்க" என்றாள்.

"நெருப்புன்னா வாய் வெந்துடப் போகுதா என்ன? நான் கேட்கறதுக்குப் பதில் சொல்லு" என்றார்.

"ஆமா! தெரியாது"என்றார்.

"அப்ப நாளைக்கு என்ன நடக்கும்னு யாருக்குத் தெரியும். நம்ம பரம்பரையில அப்படி ஒரு குழந்தை பொறந்துதான் ஆகணும்னா என்ன பண்ண முடியும்? ஆக்சுவலா அவங்களையெல்லாம் தெய்வத்தோட அவதாரம்னு சொல்றவங்க கூட இருக்காங்க."

கருணாம்பிகை மௌனமாக அமர்ந்தாள்.

"வாழ்க்கை நம்ம கையிலதான் இருக்கு. நாம தான் அமைக்கப் போறோம். திருத்தப் போறோம். இப்படியெல்லாம் நினைச்சோம்னாலே நமக்கு டென்ஷன் தான். நம்மைப் படைச்சவன் இருக்கான். அவன் கையில விட்டுடு, சரணாகதி அடைஞ்சிட்டோம்னு வச்சுக்கோ அதுக்கப்புறம் நடக்கறதெல்லாம் அவன் இஷ்டம்தான்."

"எனக்கும் அது தெரியுதுங்க. உங்களோட பழகிப் பழகி, பேசிப் பேசி அது தத்துவமா எனக்குப் புரியுது."

"ஆனால் பிராக்டிகலா வரும்போது கஷ்டமா இருக்குன்னு சொல்றியா?" என்று தொடர்ந்தார் செல்வ கணபதி.

அவள் மேலும் கீழும் தலையாட்டினாள்.

"இப்படி நினைச்சுக்கயேன். இப்போ அந்தக் குடும்பத்துல பாவம் எல்லாரும் நொந்து போயிருக்காங்க. இதுல அந்த உமா பையனோட தப்பு ஏதாவது இருக்குதா? அவன் குடிகாரனா, கொள்ளைக் காரனா, இல்லை டிரக் அடிக்கட்டா சொல்லு? அவன் தப்பு ஏதாவது இருக்கா? அப்படி இல்லாம அவன் உடம்புல இருக்கக் கூடிய பிரச்சினைன்னால அவன் குடும்பம் நொந்து போயிருக்கு. அப்படி ஒரு குடும்பத்துல ஒரு பொண்ணு எடுத்தா அவங்களுக்கு எவ்வளவு மனசு சந்தோஷமா இருக்கும். அப்படி ஒரு சந்தோஷம் குடுத்ததுகக்கு ஆண்டவன் நமக்கு பரிசு கொடுக்க மாட்டானா?" என்றார்.

கருணாம்பிகை கொஞ்சம் மனம் தேறினாள்.

"எல்லாம் ஆண்டவன் சித்தம்தான் கருணா. சம்பத் குமாருக்கு அந்தப் பிள்ளையைப் பிடிச்சிருக்கு. சும்மாவெல்லாம் அவன் சொல்லலை. நானும் கொஞ்ச நாளா கவனிச்சிட்டிருக்கேன். அந்தப் பிள்ளைக்கும் அவனைப் பிடிச்சிருக்க மாதிரிதான் தெரியுது. சட்டுன்னு ஆழ்மனசுல இல்லாம அப்படி வார்த்தை வெளியில வராது."

"அது எனக்கும் தாங்க புரியுது."

"அந்தப் பிள்ளையை கல்யாணம் பண்ணினா அவன் சந்தோஷமா தான் இருப்பான்னு நினைக்கிறேன்."

"இருந்தாலும் அடுத்த தலைமுறை எப்படி...?"

"தலைமுறை பத்தி சிந்திக்கறதுக்கு நாம யாரு. உங்க பெரியப்பா பொண்ணு, அது பேரென்ன,?" என்றார்.

அதற்குள்ளாக கருணாம்பிகையே ''செங்கமலம்'' என்றாள்.

''அந்த செங்கமலத்தம்மாவுக்கு குழந்தையே பிறக்கலையில்லே. அப்புறம் அவங்க ஒரு குழந்தையை தத்தெடுத்துட்டு வளக்கலையா?''

''அது இல்லை உமாகாந்தன்...?''

''இப்ப காலம் மாறிக்கிட்டு இருக்கு கருணா. எல்லாருமே இப்ப அவங்களை ஒரு முக்கியமான சமுதாய அங்கமா பேச ஆரம்பிச்சுட்டாங்க. இனிமே அவங்களுக்குள்ளேயும் மாற்றம் வரும். படிப்பாங்க. பலதொழில்களுக்கு போவாங்க. அப்ப அவங்களுக்கு ஒரு ரெக்கனிஷன், ஒரு ரெஸ்பெக்ட் எல்லாம் கிடைக்கும். அப்படியே நம்ம குடும்பத்துல பிறந்தா கூட அதுநல்ல விதமாத்தான் வளரும்.''

அதற்கு மேல் கருணாம்பிகைக்கு பேசுவதற்கு ஒன்றும் இல்லை. ''எல்லாத்தையும் ஆண்டவன் பொறுப்பிலே விடு. நிம்மதியா இரு!'' என்று சொல்லி விட்டுப் படுத்தார் செல்வகணபதி.

கருணாம்பிகையும் அப்படியே படுத்தாள். ஆனால் படுத்ததற்கு பிறகு மீண்டும் செல்வகணபதி எழுந்து அமர்ந்தார். ''கருணா!'' என்றார்.

கருணாம்பிகையும் எழுந்து அமர்ந்தாள். ''இன்னொரு விஷயம் தெரிஞ்சுக்க'' என்றார்.

''என்னங்க?''

''இப்ப வந்தது மட்டும் அதிர்ச்சியில்லை. இன்னொரு அதிர்ச்சியும் இருக்கு'' என்றார்.

கருணாம்பிகை திகைத்துப் போய் அவளைப் பார்த்தார்.

''ஆமா! புள்ளை. இன்னொரு அதிர்ச்சிக்கும் தயார் ஆயிக்கோ.''

கருணாம்பிகை விழிக்க, ''அது வரப்ப பார்த்துக் கலாம். இப்பத் தூங்கு'' என்று அவரைத் தேற்றியும் படுக்கச் செய்து விட்டு தான் சற்று நேரம் தலையணையில் சாய்ந்து அமர்ந்திருந்தார்.

அதே நேரம் ஏதோ கேட்பதற்காக வந்த சம்பத் குமார் இந்த உரையாடல் முழுவதையும் கேட்டு விட்டு மெல்ல தன்னுடைய அறையை நோக்கிப் போனான்.

அம்மாவிடம் இருந்து இப்படி ஒரு எதிர்ப்பு வரும் என்று அவன் எதிர்பார்க்க வில்லை.

என்னதான் அப்பா அந்த நேரத்திற்கு பேசிச் சமாளித்து விட்டாலும். இதனால் நாளைக்குக் குடும்பத்தில் ஏதாவது குழப்பம் வராமல் இருக்க வேண்டுமே என்ற கவலையும் அவனுக்கு ஏற்பட்டது.

மெல்ல நடந்து போய் ஏழிசை வல்லபியின் அறையில் எட்டிப் பார்த்தான். ஏழிசை வல்லபியும் உறக்கம் வராமல் தான் புரண்டு படுத்துக் கொண்டிருந் தாள் என்பது அவனுக்கத் தெரிந்தது.

இன்னொரு 'எப்பிசோடு' இருக்கிறது என்று எண்ணிக் கொண்டவனாக ஹாலில் வந்து அமர்ந்து கொண்டான்.

சற்று நேரம் வரை அவனுக்கு உறக்கம் வரவில்லை.

இந்த திருமணத்திற்கும் இந்த திருமணத்திற்கு பின்னால் நிகழப் போகிற நிகழ்வுகளுக்கும் என்னென்ன விளைவுகள் ஏற்படுமோ என்ற கவலை அவனுக்கும்தான் அப்பொழுது தோன்றியது.

அவன் மனத்திலும் திருமணம் குறித்த லேசான சலனம் ஏற்பட்டது.

அத்தியாயம் - 20

"ஹலோ! வாங்க, வாங்க, வாங்க" என்றான் சத்ய பிரகாஷ் மிகுந்த மகிழ்ச்சியுடன்.

"எதுக்கு இத்தனை வாங்க" என்று சிரித்துக் கொண்டே உள்ளே வந்தாள் ஏழிசை வல்லபி.

"வல்லபி" என்றான் அவன் மறுபடியும் மகிழ்ச்சியோடு.

'எஸ். சொல்லுங்க' என்றாள் அவள் அதற்கு மேல் கேலியாக.

"உட்காரு, உட்காரு," என்றான்.

கடைப் பையனை அழைத்து "ஸ்வீட் வாங்கிட்டு வாப்பா" என்றான் கிளம்பியவனை அழைத்து "பக்கத்துல கிருஷ்ணா ஸ்வீட்ஸ்ல போய் வாங்கிட்டு வா" என்று அனுப்பினான்.

பையன் போனதற்குப் பிறகு "வல்லபி எங்கே கங்காம்மா இல்லையா?" என்று கேட்டாள்.

"கங்காம்மா பசங்க எல்லாம் சேர்ந்து கோயிலுக்குப் போயிருக்காங்க. இன்னிக்கு ராஜா மட்டும் தான் இருக்கான். அவனும் கூட லீவு கேட்டிருக்கான். சரி ஒன் அவர் இருந்துட்டுப் போடான்னு சொல்லியிருக்கேன்."

"ஓகோ, எங்கே போயிருக்காங்க?" என்றாள் அவள்.

"பண்ணாரி மாரியம்மன் தேர்த் திருவிழாவாம். நேத்து குண்டம் இறங்கினாங்க போல இருக்கு.இந்த வாரமெல்லாம் அங்கே திருவிழா இருக்கும். அங்கே போறோம் அப்படின்னுட்டு போறாங்க."

"பரவாயில்லையே!" என்றாள் அவள்.

ராஜு அவர்களுக்கு ஐந்தே நிமிடத்தில் ஸ்வீட்டை கொண்டு வந்து கொடுத்து விட்டு "அண்ணா ,நான் கிளம்பறேண்ணா" என்றான்.

"சரி நீ இந்த ஷார்ட் கட்ல போனின்னா போய் சேர்ந்துடலாம். இந்நேரம் அவங்க டிஃபன் சாப்பிட்டு முடிச்சிருப்பாங்க. நீதான் இங்கே டிபன் சாப்பிட்டியில்லே போயிடு. என்ன புரோகிராம்" என்றான்.

"பண்ணாரில சாமி கும்பிட்டுட்டு அப்படியே கோபி ரூட்ல போய் தென் திருப்பதி பார்த்துட்டு அப்படியே போய் கொடிவேரி போறோம்ண்ணா" என்றான்.

"அப்ப எப்படியும் நைட் பண்ணிருவீங்களா?"

"அதெல்லாம் ஆயிடுங்கண்ணா."

"அப்ப நான் ஒருத்தனே இங்க வேலை செய்யறதா?"

"நீங்க ஒரு நாளைக்கு லீவுன்னு சொல்லிடுங் கண்ணா" என்றான் அவன் கெஞ்சலாக.

"சரி! சரி !போயிட்டு வாங்க" என்றான்.

திரும்பவும் இரண்டு எட்டு வைத்தவுடனே அழைத்து "ஏய் ராஜு, இன்னைக்கு ஆகற செலவெல்லாம் நம்பளதுடா." என்றான்,

"அண்ணே!" என்று உற்சாகமானான்.

"ஆமாம், தங்கச்சிக்கு கல்யாணம் பேசி முடிச்சிருக்கேன்."

"இதை சொல்லவே இல்லையேண்ணா. இதுக் கெல்லாம் இந்த ட்ரீட் பத்துமா?" என்றான் அவன்.

"இதுக்கு மேல என்னடா வேணும்? பஸ் செலவு கொடுத்திருக்கேன். பிரியாணி செய்யச் சொல்லி எல்லா செலவும் கொடுத்திருக்கேன்."

"சரி, சரி ,இப்போதைக்கு இது போதும்."

"டேய், கொஞ்ச நேரம் உன்னை நிக்க விட்டா என் சொத்தையே எழுதி வாங்கிடுவடா நீ, கிளம்புடா" என்றான் அவன் சிரித்துக் கொண்டே.

"சரிங்க அண்ணா" என்று அவன் ஒரு விதமாக சிரித்து விட்டு கிளம்பினான்.

இந்த உரையாடலை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஏழிசை வல்லபி.

"ஸ்வீட் சாப்பிடும்மா" என்றான்.

"நீங்க?" என்றாள்.

"நானும்தான்" என்று உள்ளே சென்று இப்படி வி.ஐ.பி.க்கள் வந்தால் கொடுப்பதற்கு என்று

வைத்திருந்த பிளேட்டை இரண்டு பேருக்குமாக ஸ்வீட் காரத்தை வைத்துக் கொண்டு ப்ளாஸகில் இருந்த காபியை ஊற்றி வைத்தான்.

இரண்டு பேரும் சற்று நேரம் அமைதியாக இருந்தார்கள்.

அதற்குப் பிறகு "ரொம்ப சந்தோஷமா இருக்கில்லே" என்றாள் சத்யா.

"ஆமா! உண்மையிலே ரொம்ப சந்தோஷம் தான் அண்ணாவுக்கு மைதிலியைப் பிடிச்சிருக்கேன்னு".

அவன் சம்பத்திடம் கேட்ட அதே கேள்வியை அவளிடமும் கேட்டான்.

"ஏன் இசை! நான் ஒண்ணு கேட்கறேன் கோபிச்சுக்க கூடாது" என்றான்.

"கேளுங்க!" என்றாள் அவள்.

அவன் "இல்லை. உங்கள் அண்ணன் அன்னைக்கு ஃப்ரெண்டுங்கற ரோஷத்துல சொல்லிட்டான். உண்மையாவே இந்த எண்ணமா, வெறும் ரோஷமான்னு நான் அவன் கிட்டயும் கேட்டேன். இல்லைப்பா அப்படியெல்லாம் இல்லைன்னு சொல்லிட்டான். இருந்தாலும் உங்க பேரன்ட்சுக்கு எல்லாம் பிடிக்கணும் இல்ல.

ஏழிசை வல்லபி ஒரு பெருமூச்சு விட்டாள். "அப்படி ஒரு பிரச்சினை இருந்தது. அப்பாவுக்கு ஒண்ணும் அப்ஜெக்ஷன் இல்லை. அம்மாவுக்கு ஒரு பயம் இருந்தது."

உடனே சத்யாவின் முகத்தில் கலவரம் தோன்றியது. "அய்யய்யோ. அப்படியெல்லாம் நினைக்காதீங்க. அப்புறம் அப்பா அண்ணா எல்லாம் பேசி அவங்களை சரி பண்ணிட்டாங்க."

"அதை மனசுல வச்சுட்டு ...?"

"அதெல்லாம் பண்ண மாட்டாங்க. அம்மா அதெல்லாம் பண்ண மாட்டாங்க. அம்மா ரொம்ப ல்லவங்க" என்றாள் ஏழிசை வல்லபி.

"புரிஞ்சுக்கிட்டாங்க அப்படின்னா அதுக்கப்புறம் மைதிலிக்கு பிரச்சினை இருக்காது" என்றாள்.

"அப்புறம் இன்னொரு விஷயம்!" என்றான் சத்ய பிரகாஷ். "என்ன எதிர்பார்ப்புன்னு தெரிஞ்சுக் கிட்டா?" என்றான்.

"என்ன எதிர்பார்ப்பு அப்படின்னு நீங்க எங்க அம்மா அப்பாவை கேட்க வேண்டியதுதானே."

"அவங்க தான் எதுவுமே சொல்ல மாட்டேங் கறாங்களே. நான் எப்படியும் தங்கைக்கு மினிமம் நாற்பது பவுன் ஐம்பது பவுன் போட்ருவேன். கல்யாண செலவு பண்ணிடுவோம். வேற ஏதாவது எதிர்பார்ப் பாங்களா?"

"ஹலோ! இந்த டர்ம்ஸ் எல்லாம் எங்கிட்ட பேசாதீங்க. அண்ணன் எந்த எதிர்பார்ப்பும் இல்லைன்னு சொல்லிட்டான். மைதிலிகிட்டயே சொன்னானாமே, கட்டின புடவையோட வா நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு" என்றாள் ஏழிசை.

"ம்ஹூம், இதெல்லாம் வேற நடந்துச்சா?" என்று மகிழ்ச்சியாக சிரித்தான்.

"பின்னே? நீங்கதானே பேசச் சொல்லி அனுப் பினிங்க, இவரு போய் அப்படி வீர வசனம் பேசிட்டு வந்திருக்காரு. சொல்லிட்டு வந்து எங்கிட்டயும் பெருமையா சென்னாரு" என்றாள்.

"நீ என்ன சொன்னே?"

"அது உனக்காச்சு, மைதிலிக்காச்சு, என்னை இதுல யெல்லாம் இழுக்காதே, அப்படின்னு சொல்லிட்டேன்" என்றாள்.

"ஓகோ!" என்றவன் மறுபடியும் அவளைப் பார்த்தான். நான் இப்படி கேட்கறேன்னு தப்பா நினைக்காதே ஏழிசை" என்று மறுபடியும் இழுத்தான்.

"எதுக்கு இவ்வளவு கஷ்டப் படறீங்க? என்ன வேணும்னாலும் ஃப்ரியா கேளுங்க" என்றாள்.

அவன் கேட்கப் போகிற அடுத்த கேள்வியைப் பற்றி கொஞ்சம் யோசித்து இருந்தாலும் அப்படி சொல்லி இருக்க மாட்டாள். ஆனால் அவள் சொல்லி விட்டாள்.

சத்யா கொஞ்சம் தயங்கியவன் போல விழித்து விட்டு.

"இல்லை இதுக்குக் கைமாறா ஒரு வேளை உன்னை நான் கல்யாணம் பண்ணனும்னு கேட்பானோ சம்பத் குமார்?" என்றான்.

ஏழிசை வல்லபி சுத்தமாக இதை எதிர்பார்க்க வில்லை.

அடிபட்டாற் போல் அவனைப் பார்த்தாள்.

"நீங்க என்னை இப்படிக் கூப்பிட்டு வச்சு மூக்கறுத்திருக்க வேணாம்" என்றாள்.

"ஐய்யோ, இசை அப்படி இல்லை. நீ புரிஞ்சுக்கோ" என்றான் அவன்.

அவள் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள மிகவும் பாடு பட்டு விட்டாள்.

அவன் கண்களுக்குப் படாத வண்ணம் சேர் இருக்கையின் கீழே தன் இரு கை முஷ்டிகளையும் இறுகப் பிடித்துக் கொண்டு ஒரு நிமிடம் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

"ஐம் சாரி, நான் இப்படி கேட்கக் கூடாதுதான். ஆனா விஷயம் என்னன்னா?" என்றான் அவன் மறுபடியும்.

அவள் இப்போது ஓரளவு தேறியிருந்தாள். அழுத்தமாக நேரடியாக அவனைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

உண்மையில் அந்தப் பார்வையை எதிர்கொள்கிற சக்தி சத்யாவுக்கு இருக்க வில்லை.

"உண்மை என்னன்னா நான் கல்யாணமே பண்ணிக்க வேண்டாம்னு இருக்கேன்?" என்றான்.

அவள் ஒரு பெருமூச்சு விட்டாள்.

"சத்யா, உங்க மேல எதுவும் திணிக்கப்படாது சத்யா" என்றாள்.

அவன் தர்ம சங்கடமாக அவளைப் பார்த்தான்,

"அப்படியெல்லாம் நினைச்சுக்காதீங்க. நிச்சயமா எங்க அண்ணன் இதை ஒரு கண்டிஷனா வைக்க மாட்டான். அப்படி ஒரு கண்டிஷனா வச்சு நான் உங்களை கல்யாணம் பண்ணிக்கணும்னு சொல்லிக் கேட்டா உலகத்தில் இருக்கிற கடைசி ஆம்பளை நீங்களா இருந்தா கூட நான் பண்ணிக்க மாட்டேன்" என்றாள்.

அவளுடைய கோபம் அவனுக்கு புரிந்தது.

"நீ கோபப் படறேன்னு நினைக்கிறேன்?" என்றான்.

"இதுக்கும் கூட கோபப் படலைன்னா நான் உப்பு போட்டு சாப்பிடறதுலே அர்த்தமே இல்லை" என்றாள்.

இதைக் கேட்டவுடனே சத்யா கொஞ்சம் அதிர்ந்து போனான்.

உள்ளூர பயந்தும் போனான்.

தான் ஏழிசை வல்லபியை தேவையில்லாமல் காயப்படுத்தி விட்டோமோ என்று தோன்றியது.

அவள் சட்டென்று எழுந்து "நான் கொஞ்சம் முகம் கழுவிக்கணும்" என்றாள்.

எழுந்து அவன் கையைக் காட்டினான்.

உள்ளறையில் இருந்த வாஷபேஸினில் போய் முகத்தை கழுவிக் கொண்டு நிமிர்ந்தாள்.

நிமிர்ந்த கணத்தில் அவளுக்கு அந்த எண்ணம் தோன்றியது.

"சத்யா இங்கே என்னமோ இருக்கு பாருங்க!" என்று அழைத்தாள்.

அவள் என்ன சொல்ல வருகிறாளோ என்ற எண்ணத்துடன். சத்ய பிரகாஷ் வேகமாக வந்தான். "என்ன, என்ன இசை" என்றான்.

"அங்கே பாருங்க!" என்று காட்டினாள்.

சுவற்றின் மேல் ஒரு பல்லி போய்க் கொண்டிருந்தது.

"பல்லி ...பல்லின்னா எனக்குப் பயம்" என்றாள்.

அவள் நின்று கொண்டிருந்த இடத்திற்கு ஒரு இரண்டடி தொலைவில் பல்லி ஊர்ந்து கொண்டிருந்தது.

"சரி, நீ இப்படி வந்துடு" என்றான் சத்யா.

"இல்லை, நான் அதைத் தாண்டி வரும் போது என் மேல விழுந்துடுச்சுன்னா?" என்றாள்.

"ஓ.கே ஓகே. நான் வந்து அங்கே நிக்கறேன்" என்று அவன் பல்லிக்கும் அவளுக்கும் இருக்கிற இடை வெளிக்குள்ளாக போய் நின்றான்.

ஓரிரு விநாடிகள் அவர்கள் ஒருவரை ஒருவர் உரசிக் கொண்டிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. சட்டென்று அந்த மூலையில் இருந்த பக்க வாட்டுச் சுவற்றில் தன்னை சாய்த்துக் கொண்டாள்.

'சத்யா!' என்றாள் ஒரு விதமான குரலில்.

திரும்பி அவளைப் பார்த்த சத்யா கொஞ்சம் திகைத்துத்தான் போனான்.

இசை நின்ற விதத்திலும், பார்த்த விதத்திலும் ஒரு அழைப்பு இருந்தது.

தன்னை மறந்து அவள் அருகிலே நெருங்கினான். 'இசை' என்று உணர்ச்சி வசப்பட்டு நின்றான்.

ஏழிசை வல்லபி சட்டென்று அவனது சட்டைக் காலரை தன்னுடைய இரு கைகளாலும் பிடித்து அருகிலே இழுத்தாள்.

தன் முகத்தை நிமிர்த்தினாள்.

அவனும் கண்களை மூடி மெய் மறந்தவனாக அவளுக்கு வாகாக குனிந்து கொடுத்தான்.

அரை நிமிடம் ஆயிற்று,!

ஒரு நிமிடம் ஆயிற்று!

இசையிடம் இருந்து அவன் எதிர்பார்த்த எதுவும் கிடைக்க வில்லை.

லேசாக கண்களை விழித்துப் பார்த்த சத்யா இசையினுடைய முகத்தைப் பார்த்தான். அதில் தெரிந்த தாபமும் எல்லையற்ற அன்பும் அவனைக் கிறங்கடித்தது.

அதற்கு மேல் பொறுக்க மாட்டாமல் அவனே அவளை தன் வலக்கையால் இழுத்து முத்து மாலை ஒன்றை கோர்த்துப் போட்டாற் போல தன் அன்பையெல்லாம் வாரி இறைத்தான்.

ஏழிசை வல்லபி தடுக்க வில்லை. ஆனால் ஒரு நிமிடம் கழித்து அவன் கொஞ்சம் எல்லை மீறுகிற நிலை வரும் போது சட்டென்று அவனை விலக்கி நிறுத்தினாள்.

அவளும் விலகிக் கொண்டாள்.

கிடுகிடுவென்று வெளியே வந்து சேரில் அமர்ந்தாள்.

சத்ய பிரகாஷும் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

மெதுவாக வந்து அந்த அறை வாயிலில் நின்றான்.

ஏழிசை வல்லபி எழுந்து நின்றாள்.

அவனை நேராகப் பார்த்தாள்.

"உனக்கு உன்னைப் புரிய வைத்தேன் பார்!" என்ற கர்வம் அவளிடத்திலே தெரிந்தது.

"பொய். பொய். ரொம்பப் பேசறீங்க சத்யா!" என்றாள்.

அவன் 'இசை' என்று தடுமாறினான்.

"ஐ ஆம் சாரி, உங்களை உங்களுக்குப் புரிய வைக்கறதுக்கு எனக்கு வேற வழி தெரியலை. ஆனால் இதுக்காக மேல வந்து விழுவேன்னு நினைக்காதீங்க. இனி நானா உங்க லைஃப்ல குறுக்கிட மாட்டேன்" என்று சொல்லிக் கொண்டவள் மனதுக்குள்ளாக 'நீங்களா வருவீங்க!' என்று எண்ணிக் கொண்டாள்.

"இசை ப்ளீஸ்!" என்று அவன் ஏதோ சொல்ல வர அவள் சட்டென்று தோள் பையை எடுத்து தோளிலே போட்டுக் கொண்டு சரசரவென்று வெளியேறி வண்டியை எடுத்தாள்.

அதற்குப் பின்பு சத்ய பிரகாஷ் பார்த்த ஏழிசை வல்லபி முற்றிலும் வேறாக இருந்தாள்.

அத்தியாயம் -21

வெகு நேரம் உறக்கம் வரவில்லை சத்ய பிரகாஷுக்கு,

புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தான்.

தான் செய்யக் கூடாத ஒரு தவறை செய்து விட்டோமோ என்று அவன் மனத்திலே குழப்பம் தோன்றியது.

ஒரு நல்ல பெண்ணை, ஒரு சுயமரியாதை உள்ள பெண்ணை தான் தேவையில்லாமல் புண்படுத்தி விட்டோம் என்பது அவனுக்குப் புரிந்தது. ஆனால் செய்வதற்கு ஒன்றும் இல்லாமல் போனது.

அவன் மனம் இரண்டு பெரும் முடிவுகளுக்கிடையே ஊசலாடிக் கொண்டிருந்தது.

தனக்கும் சலனங்கள் ஏற்படுகிறது என்பது அவனுக்குப் புரிந்தது.

இந்த சலனங்களை மீறி அவன் திருமணமே வேண்டாம் என்று ஒரு வாழ்க்கையை வாழ முடியுமா என்ற சந்தேகம் அவனுக்கு ஏழிசை வல்லபியை பார்த்ததற்குப் பிறகு தோன்றியிருந்தது.

அதுவரையிலும் அவன் பெண்களை அலட்சியமாகத் தான் பார்த்து விட்டு சென்று விடுவான்.

பெண்கள் ஒரு எல்லையைத் தாண்டி வந்து விட முடியாதபடி தன் மனதுக்கு முன்னால் ஒரு கோடு போட்டுக் கொண்டான். ஆனால் வல்லபியைப்

பார்த்தவுடன் அந்தக் கோடு கானல் நீர்க் கோடு போல மறைந்து போனது.

நாளுக்கு நாள் அவளுடைய நல்ல குணங்கள் அவனுடைய பண்பு இவற்றின் பால் மனம் செல்லுகிறது என்பது புரிந்தது.

அதைக் காட்டிலும் மெல்ல மெல்ல அவர்களுடைய குடும்பமே அவனுக்கு பிடித்தமான குடும்பமாக மாறியது. அது இப்பொழுது தங்கையின் திருமணத்தில் வந்து நிற்கிறது.

சம்பத் குமார் மைதிலியை திருமணம் செய்து கொள்கிறேன் என்று கேட்டவுடனேயே அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் கூடவே அடுத்த படியாக என் தங்கையை நீ கல்யாணம் செய்து கொள் என்று கேட்பானோ என்று தோன்றியது.

சூழ்நிலைகள் மட்டும் சரியாக இருந்தால் சம்பத் குமார் இவனைக் கேட்பதற்கு முன்பாக இவன் வல்லபியை திருமணம் செய்து கொடுங்கள் என்று கேட்டிருப்பான். கதையே வேறாக இருந்திருக்கும். ஆனால் உமாகாந்தன் வாழ்க்கையை நினைக்கும் போது அவனால் அப்படிச் சொல்ல முடியவில்லை.

அத்தனை துன்பங்களை உமாகாந்தன் அந்த மாற்றம் ஏற்படுகிற காலத்தில் டிரான்ஸெஷன் பீரியடில் அனுபவித்திருக்கிறான்.

அதிலும் அவன் சகோதரனைத் தான் தன்னுடைய இனம் என்று எண்ணிக் கொண்டு என்னவோ எல்லாவற்றையும் இவனிடத்திலே வந்து ஒப்பிப்பான்.

அவனோடு கூடவே அந்தத் துன்பங்களையும் தானும் அனுபவித்தாற் போலவே சத்யபிரகாஷுக்கு ஒரு எண்ணம் இருந்தது. அதனால் எந்தச் சூழ்நிலையிலும் சகோதரனைக் கைவிட்டு விட்டு தன்னுடைய சந்தோஷத்துக்கு நாம் அடிப் போடக் கூடாது என்று அப்போதே முடிவு செய்து கொண்டான்.

இப்போது உண்மையில் சம்பத் குமாரிடம் உன்னுடைய தங்கையை எனக்குக் கொடு என்று கேட்க வேண்டிய நிலைமைதான் ஆனால் உமாகாந்தனுடைய நினைவு அவனைத் தனக்குள்ளேயே சுருக்கிக் கொள்ளச் செய்தது.

ஏழிசை வல்லபி நொடிப் பொழுதிலே அவனைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அவனுடைய உள்ளம் என்ன என்பதை அவனுக்கே உணர்த்தி விட்டுச் சென்று விட்டாள்.ஆனால் அப்படிச் செல்லும் பொழுது எந்த அளவுக்கு அவளிடத்திலே அவளிடம் கர்வம் இருந்ததோ அந்த அளவுக்கு அவள் காயப்பட்ட மாதிரி இவனுக்குத் தோன்றியது.

பெரியதொரு பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

இது நடக்காது.

இப்போதைய சலனத்தில் சற்று ஒதுங்கி இருந்து விட்டால் அல்லது இதே ரோஷத்தில் அவளை விட்டு விட்டாலும் கூட பின்னாலே அவள் மனம் மாறி வேறு யாரையாவது திருமணம் செய்து கொள்ள முடியும்.

ஆனால் இப்பொழுது என்ன ஒரு பிரச்சினை என்றால் உறவினர்களாகிப் போகும் போது அடிக்கடி

சந்திக்க வேண்டி வரும். அது இருவருக்குமே தர்ம சங்கடத்தை தரும் என்ற கவலையும் அவனுக்கு இருந்தது.

இந்தக் காலகட்டத்திற்குள்ளாக உமாகாந்தன் வேறு கல்யாணத்திற்கு வருவானா? வரமாட்டானா என்று ஒரு பெரிய குழப்பம் வேறு இருக்கிறது!

மைதிலி ஆனால் நிபந்தனை போட்டுக் கொண்டிருக் கிறாள்.

அதைக் கூட எப்படியாவது உமாகாந்தன் காலில் கையில் விழுந்தாவது நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் ஜெயகோபால் சொல்லு கிறார் இன்னொரு நிபந்தனையும் உமாகாந்தன் போடுகிறானாமே. இனி அவன் என்ன நிபந்தனை போடுவானோ தெரியவில்லையே. இப்படி ஒவ்வொருவர் நிபந்தனையையும் நிறைவேற்றுவதுதான் என் வாழ்க்கையா என்ற சலிப்பும் கூட தோன்றியது.

அந்தக் கட்டத்தில் ஏழிசை வல்லபியுடன் பேசினால் நன்றாக இருக்கும் போல தோன்றியது. நடந்த வற்றிற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற எண்ணமும் உணர்வும் அவனுக்கு அதிகரித்துக் கொண்டே இருந்தது.

மணியைப் பார்த்தான்.

பதினொரு மணி இருக்கும்.

இப்படி ஒரு எண்ணத்தை சுமந்து கொண்டு, கழுத்தில் கட்டிய குண்டு போல தூக்கிக் கொண்டு,

அலைவதை விட அவளிடத்தில் பேசி மன்னிப்புக் கேட்டு விடலாம் என்பவனாக போனை எடுத்தான்.

செல்போனில் ஏழிசை வல்லபியினுடைய எண்களை அழுத்தினான்.

எப்பொழுதுமே உடனடியாக பதில் வரும். ஆனால் இப்பொழுது மெசேஜ் வந்தது. ''இனிமேல் என்னைத் தொடர்பு கொள்ள முயற்சிக்காதீர்கள். நாம் இனிமேல் வெறும் உறவுக்காரர்கள் மட்டுமே'' என்று வந்த அந்த குறுஞ்செய்தியைப் பார்த்து விட்டு அவன் திகைத்துப் போனான்.

ஆனால் ''ஓகே ஐ அன்டர் ஸ்டாண்ட். ஐ ஆம் வெரி சாரி, இப் ஐ ஹேவ் வுண்டட் யு'' என்ற ஒரு செய்த அனுப்பினான்.

''எனக்குப் புரிகிறது. ஆனால், நான் உன்னைக் காயப்படுத்தி விட்டேனோ என்று நினைக்கிறேன். அதற்காக மன்னிப்புக் கேட்கிறேன் என்று அனுப்பியிருந்தான்.

அதற்கு எந்த விதமான பதிலும் வரவில்லை.

சம்பத் குமார் வழக்கம் போல வந்து போகிறான்.

இனிமேல் இதையெல்லாம் தூக்கி வைத்து விட்டு வேறு விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான் சத்ய பிரகாஷ்.

★ ★ ★

''என்னம்மா, உடம்புக்கெல்லாம் நல்லா இருக்குதா?'' என்றார் டாக்டர். சொல்லி விட்டு ''அதானே நல்லா

இருந்தா நாங்க எப்படி பிழைக்கிறது? நீங்க எதுக்கு இங்க வரப் போறீங்க?'' என்று சொல்லிவிட்டு தனக்குத் தானே சிரித்துக் கொண்டார் டாக்டர் விஜயகுமார்.

செல்வ கணபதியும், கருணாம்பிகையும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

வழக்கமான செக் அப் எல்லாம் முடிந்தது. ''எல்லாம் நல்லாதான் இருக்கு. பிபி மட்டும் கொஞ்சம் அதிகமா இருக்கற மாதிரி இருக்குது. உப்பைக் குறைச்சுக்கங்க, டென்ஷன் ஆயிக்காதீங்க!'' என்றார்.

''அதான் டாக்டர் கொஞ்சம் டென்ஷன் ஆயிக்கறா அது...! ஒரு முக்கியமான விஷயம் வேற நடந்திருக்கு, அதான் உங்ககிட்ட கூட்டிட்டு வந்தேன்'' என்றார்.

''என்ன விஷயம் சொல்லுங்க?'' என்றார் அவர் சேரை ஆட்டிக் கொண்டே.

இத்தனை பேர் நோயாளிகளை பார்க்கிற இவர் எப்படி சிரித்த முகமாக இருக்கிறார் என்பது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

''டாட்டருக்கு கல்யாணம் நிச்சயம் ஆயிருக்கு.!''

''அது சரி, இது சந்தோஷப்பட வேண்டிய விஷயம் தானே? இதுக்கு எதுக்கு டென்ஷன் ஆகறது?'' என்று.

''இல்லை, அவங்க ஃபேமிலியில அப்படி ஒரு பிரச்சினை இருக்கு'' என்று சொன்னார் விளக்கமாக.

டாக்டர் பொறுமையாக கேட்டுக் கொண்டார்.

பிறகு கருணாம்பிகையைப் பார்த்து ஆதாரத்துடன் சிரித்தார். ''அம்மா, உங்க பையன் ரொம்ப நல்ல

பையன்ம்மா. சந்தோஷப்படுங்க. இதெல்லாம் தொத்து வியாதி கிடையாது.இதெல்லாம் பரம்பரையா வரக் கூடிய விஷயம் இல்லை. அப்படி பார்த்திங்கன்னா ஒரு வீட்ல அப்படி ஆயிருந்தா பேரன் அதுக்குப் பேரன்னு ஆயிருக்கணுமில்லே. அப்படியெல்லாம் இல்லை. அதனால அந்தக் கவலையெல்லாம் எதுவும் படாதீங்க. சந்தோஷமா இருங்க.'' என்றார்.

கருணாம்பிகையினுடைய முகம் தெளிவடைந்தது. ''இல்லை டாக்டர் இதுல வேற இன்னொண்ணு'' என்று ஆரம்பித்தார்.

செல்வ கணபதி அதற்கும் ஒரு விளக்கம் சொன்னார்.

''அதுவும் ஒண்ணும் கவலைப்பட வேண்டிய விஷயம் இல்லைம்மா. ஆனா என்ன நெருங்கின உறவுகள்ல கல்யாணம் பண்றதை கொஞ்சம் தவிர்க்கலாம். ஆனால் சூழ்நிலைகள் அப்படி இருந்தா அது ஒண்ணும் பிரச்சினை இல்லைம்மா''என்று அதற்கும் ஆறுதல் சொன்னார்.

இவர்கள் இரண்டு பேரும் அமர்ந்திருக்க உடன் வந்த சம்பத் குமார் அமைதியாக இருந்தான்.

''என்னப்பா மாப்பிள்ளை ஒண்ணும் பேச மாட்டேங்கறே?''

''அவங்க ரெண்டு பேரும் மனசு விட்டுப் பேசட்டும் டாக்டர் அதுக்காகதான் நான் கூட வந்தேன்.''

உண்மையில் சம்பத் குமார் வர வேண்டாம் என்றுதான் நினைத்தான். ஆனால் கருணாம்பிகை

வற்புறுத்தி அழைத்தாள். ஏனென்றால் டாக்டர் ஏதாவது ஏறுக்குமாறாக சொன்னால் ''பார்த்தியா, இதுக்குத்தான் நான் சொன்னேன்'' என்று சொல்லலாம் என்று எண்ணிக் கொண்டுதான் அழைத்துக் கொண்டு வந்தாள்.

டாக்டர் தனக்கே புத்தி சொல்வதைக கேட்டவுடன் கருணாம்பிகைக்கு ஓரளவு மனசு தெளிவாகியது.

தந்தையும் மகனும் திட்டமிட்டுக் கொண்டுதான் அழைத்து வந்தார்கள் என்பது அவளுக்குத் தெரியவில்லை.

அன்றைக்கு இரவு அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை கேட்டுக்கொண்டிருந்த சம்பத் குமார் அடுத்த நாள் அப்பாவுடன் வெளியே உலாவப் போகிறேன் என்று அழைத்துக் கொண்டு போனான். அப்பொழுது ''அப்பா! என்னப்பா இது அம்மா ஏதோ சொல்லிக் கிட்டிருந்தாங்க என்றான்.

''நீ எங்கடா அதைக் கேட்டே ?''என்று கேலி செய்தார் அப்பா.

''இல்லைப்பா, நான் உங்ககிட்ட பேசலாம்னு வந்தேன். அந்த டைம் பார்த்து அம்மா சொல்லிட்டு இருந்தாங்க. ஏன் இடையில நுழையணும்னு நான் வந்துட்டேன்.''

''அவளுக்கு ஏதோ சந்தேகம்பா''

மகன் தந்தையை கவலையுடன் பார்த்தான்.

இருவரும் அந்த பார்க் பெஞ்சிலே அமர்ந்தார்கள்.

அந்த அதிகாலை நேரம் மிக அழகாக இருந்தது.

காலை நேரம் என்பதால் பறவைகளின் சத்தம் கேட்டது, குழந்தைகளினுடைய ஆட்டம் பாட்டம் இன்றி அமைதியாக இருந்தது.

''என்ன தம்பி, உனக்குப் பிரச்சினை சொல்லு'' என்றார் அப்பா.

''இதை மனசுல வச்சுக்கிட்டு நாளைக்கு மைதிலிக் கிட்ட ஏதாவது பேசிட்டாலோ அல்லது சத்யா கிட்ட ஏதாவது பேசிட்டாலோ அல்லது அவங்க வீட்ல யாருகிட்டயாவது.....'' என்று இழுத்தான்.

''சரி! என்ன பண்ணலாம் சொல்லு'' என்றார்.

''இல்லைப்பா. அம்மா மனசுல இருக்கற சந்தேகத்தை கிளியர் பண்ணிடலாம்'' என்றான்.

''எப்படி? ரப்பர் போட்டு அழிப்பியா?'' என்றார்.

''நம்ம டாக்டர் கிட்ட கூட்டிட்டுப் போய் அவரு கிட்ட விவரத்தைச் சொல்லச் சொல்லி அவரையே விளகக்ச் சொல்லுவோம்.''

''ஏம்பா ஒருவேளை அங்க போய் அவரு அப்படி யெல்லாம் இருக்கறதுக்கு சான்ஸ் இருக்குன்னு சொல்லிட்டாருன்னு வை'' என்றார் அப்பா.

அவன் அப்பாவை வருத்தத்துடன் பார்த்தான். ''ஏம்பா உங்களுக்கே அந்த டவுட் இருக்கற மாதிரி இருக்கு'' என்றான்.

''இல்லை தம்பி, எனக்கும் தோணுது. ஆனா அதுக்காக உங்க கல்யாணத்தை நான் வேண்டாம்னு

சொல்ல மாட்டேன். அவளுக்கு நான் நேத்து என்ன பதில் சொன்னேன் கேட்டிருப்பியில்லே.''

''கேட்டேன்பா. இருந்தாலும் தெளிவு பண்ணிடலாம். நீங்களும் தெரிஞ்சுக்கங்கப்பா. ஆஸ் ஃபார் அஸ் ஐ நோ அந்த மாதிரியெல்லாம் எதுவும் இல்லை'' என்றான்.

''சரிப்பா! உன் இஷ்டம். ஆனா இந்த மாதிரி டாக்டர் சொல்லி கிளியர் பண்ணிட்டா நல்லதுதான். நாளைக்கு இதைப்பத்தின ஒரு பேச்சு இருக்காது.''

'சரிப்பா' என்றான்.

எழுந்தார்கள்.

மகனுடைய கையை மெல்லப் பிடித்து தந்தை சொன்னார். ''தம்பி, உங்க அம்மா ரொம்ப நல்லவதாம்பா'' என்று சொன்னார்.

''தெரியும்பா, அம்மா நல்லவங்கன்னு நீங்க சர்டிஃபிகேட் கொடுக்கணுமா என்ன?''

''அவங்க என்மேல இருகிற அக்கறையினாலதானே கவலைப்படறாங்க, அதைக்கிளியர் பண்ண வேண்டியது எனககு ரொம்ப அவசியம்பா.''

''சரிப்பா. நீ சரியான கோணத்துல புரிஞ்சுக் கிட்டேன்னா ஓகே!'' என்றுதான் பேசி அழைத்து வந்திருந்தார்கள் என்பது கருணாம்பிகைக்கு தெரியாது.

''ஏம்பா! டாக்டர்கிட்ட முன்னாடியே சொல்லி வச்சுடலாமா?'' என்று அப்பா கேட்டார்.

''வேண்டாம்பா. அப்படி சொல்லி பிரிபேர் பண்றது. வேண்டாம்.''

''அவரு என்ன பதில் சொல்றாரோ அதை அம்மா கேட்டுக்கட்டும். அதுக்கப்புறம் அம்மாவுக்கு விளக்கம் சொல்லிக்கலாம்'' என்றான் சம்பத்.

அவன் எதிர்பார்த்தது போலவே டாக்டரும் பேசவும் அம்மாவின் மனம் தெளிவாகியது ஏன் அப்பாவின் மனமும் கூடத்தான் என்பது அவனுக்குப் புரிந்தது.

ஹாஸ்பிட்டல்லே இருந்து வெளியே வந்ததும். ''என்னம்மா இப்ப திருப்திதானே?'' என்றான்.

''திருப்திதான் தங்கம்.ஆனா நான் எதுக்காக .....'' என்று ஆரம்பித்தவுடனே.

''தெரியும்மா. மகன் மேல இருக்கற அக்கறையினால தான் நீங்க கவலைப்பட்டீங்கன்னு எனக்குத் தெரியும். நானும் அம்மா மனசுல எந்த சந்தேகமும் இருக்கக் கூடாதுங்கறதுக்காகத்தான் இந்த மீட்டிங்கையே ஏற்பாடு பண்ணினேன்'' என்றான்.

''சரி தங்கம். உன்னோட சந்தோஷம் தான் எங்களோட சந்தோஷம்'' என்றாள்.

''அப்படி...'' என்று இழுக்கவும் '' என்ன இழுக்கறே?'' என்றார்.

''இல்லை. என்னோட சந்தோஷம்தான் உங்களோட சந்தோஷம். அப்படின்னா...?'' என்று வெட்கத்தோடு சிரித்தான்.

''என்ன. அடிக்கடி பாக்கறதுககு சான்ஸ் ஏற்பாடு பண்ணித் தரணுமா? பண்ணிட்டாப் போவுது'' என்றார் அம்மா.

சம்பத் குமாரின் முகம் சிவந்தது.

''ஏம்பா, இப்பதான் ஏழிசையும் ஃப்ரண்டு. சத்யாவும் ஃப்ரண்டு. அதான் மாத்தி மாத்தி போயிட்டு வந்துக்கறீங்கதானே'' என்றாள்.

''சரி புரிஞ்சாச் சரி!'' என்று கிளம்பினான் மகன்.

''எங்கேப்பா?'' என்றார் அப்பா.

''இல்லைப்பா, நான் சத்யாவைப் பார்க்கறதுக்குப் போறேன்'' என்றான்.

''இல்லை. இல்லை. நீ வீட்டுக்கு வா. பத்திரிகை மாடல் சரியான்னு காட்டிட்டு வரணும்'' என்றார் அப்பா.

அப்பாவும் அம்மாவும் குறும்பாக சிரித்தார்கள்.

மகன் முகம் சிவந்து நிற்பதை ரசித்துப் பார்த்தார்கள்.

அத்தியாயம் -22

ஒரு மாதத்திற்கு மேல் ஓடி விட்டது.

ஏற்பாடுகள் எல்லாம் நன்றாகவே நடந்து கொண்டிருந்தன.

பத்திரிகை மாடல் காட்டுகிறேன் என்று ஒரு நான்கு முறை சம்பத் குமார் வந்து போனான்.

''இந்த மாடல் மிக நல்லா இருக்குமா? அந்த மாடல் நகை நல்லாயிருக்குமா?'' என்று சத்ய பிரகாஷ் அவர்கள் வீட்டுக்கு ஒரு மூன்று நான்கு முறை வந்து போனான்.

மைதிலியிடம் அவ்வப்போது ஃபோனில் பேசிக் கொண்டு அந்த நினைவுகளிலேயே மூழ்கிய சம்பத் குமார் ஒரு விஷயத்தை கவனிக்கத் தவறி விட்டான்.

முன்பெல்லாம் அடிக்கடி சத்ய பிரகாஷினுடைய ஃப்ரஷ்னிங் சென்டருக்குப் போனேன் என்று சொல்லுகிற தங்கை இப்பொழுதெல்லாம் அப்படிச் சொல்லுவது இல்லை என்பதையும் தங்கள் வீட்டுக்கு சத்ய பிரகாஷ் வரும் போது கூட ஒரு விருந்தினரைப் போல உபசரித்து விட்டு ஒதுங்கிக் கொள்வதையும் அவன் கவனிக்க வில்லை.

இன்றைக்கு ''ஏம்மா வல்லபி ?''என்று அழைத்துக் கொண்டு வந்தான்.

''என்னம்மா?'' என்றாள் தங்கை.

''ஏம்மா, சாயங்காலம் மைதிலி வீட்டுக்குப் போயிட்டு வரலாமா?'' என்றான்.

''எதுக்கு?'' என்றாள் தங்கை.

''எதுக்கும்மா? ஏதாவது ஒரு காரணம் நீதான் கண்டுபிடிச்சுத் தரணும்'' என்றான்.

ஏழிசை வல்லபி சிரித்தாள். ''ஐய்யோ, அண்ணா'' என்று தலையில் அடித்துக் கொண்டாள்.

"இல்லை, சும்மா போனா அவங்க ஏதாவது நினச்சுக் கறாங்க. நீயா ஏதாவது ஒரு காரணம் கண்டுபிடியேன்" என்றான்.

"நானா?" என்று தங்கை யோசிப்பது போல் நடித்து விட்டு "எனக்கு இதுலயெல்லாம் அனுபவம் இல்லை யேண்ணா. ஒரு காரணமும் தெரியலையே" என்றாள்.

அதை அடுத்த அறையில் இருந்து கேட்டுக் கொண்டிருந்தாள் போலும் நித்ய கல்யாணி. "அப்படிப் போடுக்கா" என்றாள்.

"ஐய்யய்யோ, இந்த வாண்டு வேற இதையெல்லாம் கேட்டுடுச்சு போல இருக்கே" என்றான்.

"அசடு வழியாதேண்ணா" என்றாள் தங்கை.

இரண்டு பேரும் தன்னை கேலி செய்வதை இவன் ரசித்துக் கொண்டாலும் "என்னம்மா, சும்மா வெறும் கேலி தான் பண்றீங்க. விஷயம் எதுவும் நடக்க மாட்டேங்குதே."என்றாள்,

நித்ய கல்யாணி யோசித்தாள். "அண்ணா ஒண்ணு செய்வோமா?" என்றாள்.

"ஒண்ணு என்ன? எத்தனை வேணும்னாலும் செய்? எனக்குக் காரியம் நடந்தா சரி."

"பியூட்டி பார்லர்ல இருந்து நான் அந்த ஹேர் ஸ்டைல் ஆல்பம் வாங்கிட்டு வரேன், அதைக் கொண்டு போய்க் காட்டுவோமா" என்றாள்.

சம்பத் குமார் "ஐயே, அசடே!" என்பது போல அவளைப் பார்த்தான்.

"என்னண்ணா?" என்றாள் அவள்.

"ஏம்மா, இந்த ஆல்பத்தைக் கொண்டு போய் நான் காட்டினா நல்லாயிருக்குமா?" என்றான் அவன். "இது லேடீஸ் சமாச்சாரம் வேற?" என்றான் தொடர்ந்து.

நித்யா சிரித்தாள். "இல்லைண்ணா, நீ காட்டலை, நான் கொண்டு போய் காட்டப் போறேன். நீ என்னை டிராப் பண்றே" என்றாள்.

"ஏம்மா ஏழிசை வல்லபி இருக்காளே, இவளைக் கொண்டு வந்து டிராப் பண்ண சொல்லக் கூடாதான்னு நினைச்சுக்க மாட்டாங்களா.?"

"இல்லைண்ணா. எனக்கு எக்ஸாம் டைம் அதனால என்னால வரமுடியாது உண்மையாவே அண்ணா!" என்றாள் ஏழிசை வல்லபி.

சம்பத் குமாரும் நித்யாவும் அவள் கேலி செய்வதாக நினைத்துக் கொண்டு சிரித்தார்கள். ஏழிசை வல்லபி அதற்கு மேல் வளர்க்க வில்லை.

"நீங்களே போயிட்டு வந்துடுங்கண்ணா, உண்மை யாவே நான் இப்ப பேப்பர் கரெக்ஷனுக்கு போகணும்."

"சரிம்மா, இதுவும் நல்லதாவே போச்சு. நல்ல காரணம்தான்" என்றவன் "பேப்பர் கரெக்ஷன் எங்கே?" என்றான்.

"அதாண்ணா, அந்த ஸ்கூல்லே" என்று அவள் பள்ளிக் கூடத்துப் பெயரைச் சொன்னாள்.

"ஏன் அக்கா, நீ அந்தப் பள்ளிக் கூடத்துக்கு போகும் போதுதானே சத்யா சாரோட ஃப்ரஷ்னிங் சென்டருக்கு போயிட்டு வருவே?" என்றாள் நித்யா.

ஏழிசை வல்லபிக்கு கோபம் பொங்கியது. தங்கை இந்த நேரம் பார்த்துத் தன் காலை வாருகிறாளே என்று, "ஆமா, ஆனா பேப்பர் வேல்யூவேஷனுக்கெல்லாம் போகும் போது அதுக்கெல்லாம் டைம் இருக்காது. கொஞ்ச நேரம் தான் டைம் இருக்கும். அதுக்குள்ள சாப்பிட்டுட்டு உள்ள போயிடணும். அதுவும் பேப்பர் வேல்யூவேஷனுக்கெல்லாம் போகும்போது நிறைய பேர் வருவாங்க, எனக்கும் கம்பெனி இருக்கும்" என்றாள்.

"ஓஹோ! கம்பெனி இல்லாததால் தான் அப்பப் போனியோ?" என்றாள் தங்கை மறுபடியும்.

"உதை வாங்குவடி," என்றாள் ஏழிசை வல்லபி,

"சரிண்ணா, நான் கிளம்பணும்" என்று அவசரமாக கிளம்பினாள்.

உண்மையிலே அவள் நேரத்தில் கிளம்ப வேண்டியது தான் இருந்தது.

எட்டு மணிக்கெல்லாம் சென்டரில் இருக்க வேண்டும் என்பதால் ஏழு மணிக்கெல்லாம் அடித்துப் பிடித்துக் கொண்டு போகிறாள் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது. "அப்படின்னா சரிம்மா" என்று சொல்லி விட்டு தனது அறைக்கு வந்த பிறகுதான் சம்பத் குமாருக்கு அது உறைத்தது.

இந்த மாதத்தில் எல்லாம் சத்யா அந்த சென்டருகுப் போகவில்லை என்பதும் சத்ய பிரகாஷைப் பற்றி அவள் அதிகமாக பேசவில்லை என்பதும் அவனுக்கு புரிந்தது.

திடீரென்று மனதிலே கவலை தோன்றியது.

இருந்தாலும் ஆல்பத்தைக் கொண்டுபோய் கொடுக்கிற சாக்கிலே அவன் மைதிலியைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் இருந்ததால் இதை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு தங்கையுடன் கிளம்பினான்.

உள்ளே நுழையும் பொழுது சத்ய பிரகாஷ், அவனுடைய தங்கை மைதிலி எல்லோரும் அமர்ந்து பத்திரிகைகளை மடித்து வைத்துக் கொண்டிருந்தார்கள்.

"வாங்க, வாங்க மாப்பிள்ளை, பத்திரிகை எல்லாம் வந்துடுச்சு. கவர்ல போட்டு ரெடி பண்ணிட்டோம்னா அப்புறம் கொடுக்கறதுக்கு சரியா இருக்குமில்லே. அந்த வேலை தான் பண்ணிக்கிட்டிருக்கோம்" என்றான்.

சத்ய பிரகாஷும் கூட அமர்ந்து கொண்டு அந்த வேலையைச் செய்து கொண்டிருந்தான்.

"வாங்க மாப்ளே," என்றான்.

"ம் மச்சான் சொல்லுங்க" என்றான் அவன்.

"சரி, சரி ,ரெண்டு பேரும் உட்கார்ந்து பேசிகிட்டு இருங்க" என்று சொல்லிக் கொண்டே அப்பா எழுந்து அந்தப் பக்கம் போனார்.

மைதிலி "காஃபி போட்டுட்டு வர்றேன்" என்று நகர்ந்தாள்.

எப்படி இவர்கள் இருவரும் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பது என்று யோசித்துக் கொண்டிருந்த சத்ய பிரகாஷ் காஃபி வரும்வரை காத்துக் கொண்டிருந்தான்.

பிறகு "பேசிட்டு இருங்க. நான் ஃபேஷ் வாஷ் பண்ணிட்டு வந்துடறேன். புழுங்குதுப்பா ரொம்ப" என்று சொல்லிக் கொண்டே நகர்ந்தான்.

நித்யாவும் கூட "ஆன்ட்டி, ஒரு ஆல்பம் கொண்டு வந்தேன் பாருங்க" என்று சொல்லிக் கொண்டு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தாற்போல நகர்ந்தாள்.

சம்பத் குமாரினுடைய கண்கள் மைதிலியின் மேல் ஆவலுடன் பதிந்தன. "உட்கார்றது!" என்றான்.

அவள் சிரித்துக் கொண்டே எதிரிலே அமர்ந்தாள்.

காபியை ஒரு முறை குடித்து விட்டு "ஏன் மைதிலி இந்த காஃபி சாப்பிடும் போதுதான் ரசனை யெல்லாம் தெரிஞ்சுடுமாம். உனக்கு என்னென்ன தெரியும்?" என்றான்.

அவன் ஏதோ விளம்பரத்தை வைத்துக் கொண்டு கேலி செய்கிறான் என்று புரிய "எனக்கு என்னென்ன தெரியும்னு கல்யாணம் ஆனதுக்கு அப்புறம் தெரிஞ்சுக்கங்க. ஆனா அதுக்குள்ள நீங்க காஃபி போட கத்துக்கங்க" என்றாள் அவள்.

சிரித்தான் அவன். "ம், இந்தக் காஃபியில தான் நிறைய வேலை இருக்கு போல இருக்கு" என்றான்.

"சரி, இப்ப காலையில என்னத்துக்கு விஜயம்?" என்றாள் மைதிலி.

"தரிசனத்துக்குத்தான்" என்றான் அவன்.

"தரிசனம் தான் கிடைச்சிடுச்சு இல்லே, கிளம்புங்க" என்றாள் அவள்.

"ஹலோ! இது என் ஃப்ரண்டு வீடு. நாங்க எப்ப வேண்ணா வருவோம். எப்ப வேண்ணா கிளம்புவோம். மூணாவது மாசம் கழுத்துல தாலி ஏறினதுக்கு அப்புறம் இப்படியெல்லாம் மிரட்டலாம் தெரியுதா?" என்றான்.

"இல்லை, நான் கொஞ்சம் டிரெயினிங் எடுத்துக் கறேன்" என்றாள் மைதிலி.

"டிரெயினிங் இதுக்கு மட்டும் தான் எடுத்துக் கணுமா? வேற நிறைய விஷயங்கள் இருக்கு. எல்லாத் துலயும் எடுத்துக்க ஒத்துக்கறியா? அப்படின்னா என்னை மிரட்டலாம்" என்றான்.

"ச்சே! உங்ககிட்ட போய் பேசினேன் பாரு" என்றாள்.

"பேசாதே, பேசாம எதிரில உட்காரு. நான் கொஞ்ச நேரம் காஃபியோட ஒண்ணா" என்று சொல்லிக் கொண்டே காபியை அருந்த அவன் கண்கள் அவளையும் சேர்த்துப் பருகியது.

அவள் அழகு காட்டி விட்டு "காஃபியை மட்டும் முழுங்குங்க" என்றாள்.

அவன் சிரித்தான்.

அதற்குப் பிறகும் ஓரிரு நிமிடங்கள் இப்படியே பேசிக் கொண்டிருக்க அவனுக்கு வாய்ப்புக் கொடுத்த பெரியவர்கள் "அப்புறம் தம்பி!" என்று பேச்சுக் கொடுத்துக் கொண்டே வந்தார்கள்.

மைதிலி, "சரி, நான் வரேன்" என்று கண் அசைத்து விட்டு அந்தப் பக்கம் போனாள்.

நித்யா தான் கொண்டு வந்திருந்த ஆல்பத்தை அவளிடத்தில் காட்டுகையில் வேண்டுமென்றே சம்பத் குமார் கண்ணில் படுகிற மாதிரி ஒரு இடத்தில் மைதிலியை அமர்த்திக் கொண்டாள்

"இந்த மாடல் பாருங்க அண்ணி, இந்த மாடல் பாருங்க அண்ணி," என்று அந்த டேபிளின் மேல் வைத்து திருப்பித் திருப்பிக் காட்டினாள்.

மைதிலி வெட்கத்துடன் "இப்ப வேலை இருக்கு. நான் அப்புறமா பார்த்துட்டுத் தரேனே?" என்றாள்,

"இல்லையே, இந்த ஆல்பத்தை இப்பக் கொண்டு போய் கொடுக்கணுமே?"

"இப்பவெல்லாம் முடியாது. அங்க பாரு உங்க அண்ணா அங்க உட்கார்ந்திட்டு இருக்காரு. நான் பார்த்துட்டு சாயங்காலம் தரேன்" என்றாள்.

சாயங்காலமா? அப்ப என்னால வரமுடியாதே? அப்ப அண்ணன் தான் வரணும்" என்றாள் நித்யா ஏதோ தான் வராவிட்டால் மைதிலி பெரிதாக கவலைப்பட்டு விடுவாள் போல.

மைதிலி அவளை முறைத்தாள்.

"அதானே நாங்க வரலைன்னா நீங்க கவலைப்படப் போறீங்களா? அண்ணா வரணும். அதானே? அண்ணனையே அனுப்பறேன்" என்றாள்.

அப்பொழுதுதான் மைதிலி சட்டென்று "ஏன் ஏழிசை வல்லபி அண்ணி, ஆளையே காணோம் அவங்களை அனுப்பேன்?" என்றாள்.

சத்யா சம்பத் குமாருடன் பேசிக் கொண்டிருந்தாலும் கூட இதைக் கேட்டவுடனே அவன் பேச்சு ஒரு நிமிடம் தடைப் பட்டதை சம்பத் குமார் கவனித்தான். ஏதோ இருக்கிறது என்பது அவனுக்குப் புரிந்தது.

அன்றிரவு தங்கையினுடைய அறைக்குப் போனான்.

அவள் ஜன்னல் பக்கமாக நின்று வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். சொல்லவொண்ணாத வேதனை, எல்லையற்ற வருத்தம் அவள் முகத்திலே குடி கொண்டிருந்ததைப் பார்த்தவுடனே சம்பத் குமாரினுடைய மனம் உருகி விட்டது.

"ஏழிசை!" என்றான்.

திரும்பி அண்ணனைப் பார்த்தாள் சகோதரி.

"வாட் இஸ் த மேட்டர்ம்மா? என்ன விஷயம்?" என்றான்.

"ஒண்ணும் இல்லை" என்றாள் அவள்.

"இல்லையே, ஏதோ இருக்குதே. எப்படி எப்படியோ டெவலப் ஆகும்னு நானும் நினைச்சனேம்மா, ஏன் எல்லாம் ஒரு ஸடாண்ட்ஸ்டில்ல நிக்குது" என்றான் அவன்.

"எதைச் சொல்றே நீ ?"என்றாள் அவள் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு.

"இங்கே பாரும்மா, நான் என்னென்னவோ கனவு கண்டுக்கிட்டு இருந்தேன். ஆனா நீங்க என்னமோ ஒரு குழப்பத்துல இருக்கற மாதிரி தெரியுதே."

"நான் இல்லை" என்றாள் அவள்.

"பின்னே வேற யாரு?" என்றான் அவன்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள் ஏழிசை வல்லபி.

"இங்கே பாரு வல்லபி, என் முகத்தைப் பார்த்துப் பேசு" என்று அவள் தோளில் கையை வைத்து தன் பக்கம் திருப்பினான் சம்பத் குமார்.

அண்ணனின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கத் தயங்கினவளாய் அவள் தலையைக் குனிந்த வாறே நின்று கொண்டிருந்தாள்.

"என்னமோ, உன்னை வேதனைப் படுத்துது, சம்திங் இஸ் ஈட்டிங் யூ, என்னம்மா?" என்றான்.

"ஒண்ணும் இல்லைண்ணா ப்ளீஸ். என்னை என் போக்குல விட்டுடுங்க" என்றாள் ஏழிசை வல்லபி.

"இல்லைம்மா, நீ நினைக்கிற மாதிரி இல்லை. இந்த கல்யாணத்துக்கு உன்னோட சந்தோஷமும் ஒரு காரணம்" என்றான்.

அவள் விடுக்கென்று நிமிர்ந்து பார்த்தாள். "அப்போ உனக்கு மைதிலியைப் பிடிக்கலையா?" என்று கேட்டாள்.

"யார் சொன்னா மைதிலியை எனக்குப் பிடிச்சது, மைதிலியை மட்டும் இல்லை வேற ஏதாவது ஒரு பொண்ணைப் பார்த்து கூட பிடிச்சிருக்கும்?" என்றான்.

"வேண்டாண்ணா, அடுத்த வாக்கியத்தை சொல்லாதேண்ணா" என்றாள் அவள்.

"ஏம்மா உண்மையைச் சொல்லக் கூடாது? இந்தக் கல்யாணம் உனக்காகவும்தான்" என்றான் சம்பத் குமார்.

அந்த நிமிடத்தில் ஏழிசை வல்லபி உடைந்து போனாள்.

கேவிக் கேவி அழுது விட்டாள்.

"என்னம்மா ஆச்சு ?"என்றான்.

"இதையே இதையேதான் அவரும்" என்று தேம்பினாள்.

"என்னம்மா, சொல்லும்மா?" என்றான் அவன்.

"அவரு நீங்க.... ஒருவேளை இதை நிபந்தனையா போடுவீங்களா அப்படின்னு எங்கிட்ட கேட்டாரு" என்றாள் அவமானம் நிறைந்த முகத்துடன்,

சட்டென்று கட்டிலில் அமர்ந்தாள்.

சம்பத் குமார் தனது கை முஷ்டியை இறுக்கிக் கொண்டான்.

"அவன் கேட்டானா? எப்ப கேட்டான் உன்கிட்ட?"

"அது இருக்கும், கல்யாண நிச்சயத்துக்கு முன்னாடியே" என்றாள்.

''மடையன் மடையன்'' என்று பல்லைக் கடித்துக் கொண்டான்.

''ப்ளீஸ் அண்ணா, இனிமேல் இந்த புரோபோஸல் பத்தி என்கிட்ட பேசாதீங்க. முடிஞ்சது. நான் இனிமே இப்படியே என் லைஃபை லீட் பண்ணிப்பேன்'' என்றாள்.

சம்பத் குமார் சற்று நேரம் அவளையே ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

''சரிம்மா இனிமே நான் உன்னை தொந்தரவு பண்ண மாட்டேன். ஆனா இந்தக் கல்யாணத்துல நீ சந்தோஷமா நடந்துக்கணும். எதையும் பெரியவங்க கிட்ட காட்டிக்காம சந்தோஷமா சிரிச்சுப் பேசிக்கணும். எனக்காக.... அண்ணனுக்காக...'' என்றான்.

அவள் வேதனையுடன் அவனைப் பார்த்தாள்.

''தனிப்பட்ட முறையில் உங்க சண்டையை வச்சுக்கோங்கம்மா. அதை வேண்டாம்னு சொல்லலை.''

அவள் மறுபடியும் வெளியே பார்த்தாள். ''நிஜமாத் தான். ஃபுல் பர்மிஷன் கொடுக்கறேன், நீ கிழி, நார் நாரா கிழிச்சுடு'' என்றான்.

அண்ணன் தன்னை கேலி செய்கிறானோ என்று பார்க்க அவன் முகத்தில் ஆழமான பாவத்துடன் தான் சொன்னான்.

ஏழிசை வல்லபி ஒன்றும் பேசவில்லை.

''சொல்லும்மா. கல்யாணத்துல சந்தோஷமா நிப்பே தானே?'' என்றான்.

''நிச்சயமா அண்ணா'' என்று கண்ணை துடைத்துக் கொண்டவள். ''உன்னுடைய கல்யாணம் எனக்கு சந்தோஷமான விஷயம்தாண்ணா?'' என்றாள்.

''ஆமா, உங்க பிரச்சினை வேற, அதை நீ தனியா டீல் பண்ணிக்கோ'' என்றான். சொல்லி விட்டு தன்னுடைய தங்கையின் முகத்தை நிமிர்த்தினான். ''ஏம்மா, நீ தான் அறிவாளின்னு நான் நினைச்சுக்கிட்டிருந்தேன். அவன் உன்னை விட பெரிய அறிவுக் களஞ்சியமா இருக்கறான் போல இருக்கு.''

''ஏண்ணா, உனக்கு இந்தப் பிரச்சினையோட தீவிரம் தெரியலையா?'' என்று கேட்டாள்.

ஏனோ அவளுக்கு சம்பத் குமார் உள்ளுக்குள் சிரிக்கிறான் போல தோன்றியது.

''புரிஞ்சதும்மா, அதான் நான் சொல்லிட்டேன்ல நான் தலையிட மாட்டேன்னு சரியா?'' என்று சொல்லி விட்டு வெளியே போன அண்ணனுடைய முகத்தில் ஒரு விதமான சிரிப்பு பரவியிருந்ததாக அவளுக்குத் தோன்றியது.

கோபம் வந்தது.

கட்டிலை ஓங்கிக் குத்தினாள்.

''இப்ப மட்டும் அவரு மட்டும் எதிர்ல இருந்தா....'' என்று எண்ணிக் கொண்டாள்.

அதே நேரத்தில் சத்ய பிரகாஷ் அங்கே ஏதோ கனவு கண்டு விட்டு திடுக்கிட்டு விழித்தான்.

அத்தியாயம் - 23

ஜவுளிக்கடையில் இருந்தார்கள். சம்பத்குமாரின் குடும்பத்தினரும் சத்யபிரகாஷின் குடும்பத்தினரும்

கோவையில் புகழ் பெற்ற ஜவுளிக் கடைகளுள் ஒன்றான அந்த ஜவுளிக்கடையில் மூன்றாவது தளத்திலே பட்டுப் புடவைகளை பார்க்கக் கூடிய செக்ஷனில் இருந்தார்கள்.

இன்று மணமகளுக்கு ஜவுளி எடுக்கிற நாள் என்று தீர்மானம் செய்திருந்தார்கள்.

சத்ய பிரகாஷின் குடும்பத்தினர் கொஞ்சம் மகிழ்ச்சியாகவே இருந்தார்கள். ஏனென்றால் போன வாரத்தில் உமாகாந்தன் அவர்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

அந்த நிகழ்வு இப்போது சத்ய பிரகாஷின் மனதில் ஓடியது.

மைதிலி வாடிய முகத்துடன் நடமாடிக் கொண்டிருந்தாள். ''ஏம்மா, கல்யாணமே நிச்சயமானதுக்கப்புறம் ஏன் வாடிப் போய் நடமாடிட்டிருக்கிறே?'' என்று கேட்டான் சத்ய பிரகாஷ்.

''அண்ணா, நீங்க பாட்டுக்கு பத்திரிகை எல்லாம் கொடுக்க ஆரம்பிச்சுட்டீங்க. இன்னும் கல்யாணத்துக்கு ஒரு மாசம் தான் இருக்கு. ஆனா நான் சொன்ன கண்டிஷன் மட்டும் அப்படியே தான் இருக்கு'' என்றாள் அவள்.

சத்யா சற்றுக் குழப்பத்துடன் அவளைப் பார்த்தான்.

''என்னம்மா சொல்றே?'' என்றான்.

''அதாண்ணா உமா கல்யாணத்துக்கு வரலை அப்படின்னா நான் மணவறையில உட்கார மாட்டேன்'' என்றாள்.

''வேண்டாம்மா, சட்டுன்னு அபசகுனமாவெல்லாம் அப்படி சொல்லாதே.''

''ஆமாண்ணா, உமாண்ணா வரலைன்னா அந்தக் கல்யாணத்துல மனசார உட்கார முடியாது.''

''இங்க பாரும்மா, உமா எங்கிருக்கான்னு தெரியும். நான் தகவல் கொடுத்துட்டேன். வந்துடறேன், அப்படின்னுதான் சொல்லியிருக்கானாம்.''

''அதெல்லாம் தெரியாது உனக்கு, அவனைப் பத்தித் தெரியாது உனக்கு. சரிசரின்னு சொல்லிட்டு லாஸ்ட் மினிட் வரைக்கும் வராம விட்டுடுவான் பாரு.''

''அப்படியெல்லாம் இல்லைம்மா. எனக்கு உன்னோட கல்யாணத்தைப் பார்க்க ஆசையிருக்கிற மாதிரித்தானே அவனுக்கும் உன்னோட கல்யாணத்தை பார்க்கணும்னு ஆசையா இருக்கும்.''

''இருக்கும்ண்ணா. ஆனா அவனுக்குக் கூடவே ஒரு பிடிவாதமும் இருக்கு'' என்றாள்.

சத்யா அதை ஒத்துக் கொண்டான்.

அம்மாவும், அப்பாவும் இந்த உரையாடலை கேட்டுக் கொண்டு ஹால் சோஃபாவில் அமர்ந்திருந்தவர்கள் தலையிடவே இல்லை.

சத்யா திரும்பிப் பார்த்து ''என்னப்பா, நீங்க ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கறீங்க'' என்றான்.

"நீ சொல்றதும் கரெக்டா இருக்கு. அவ சொல்றதும் கரெக்டா இருக்கு. ஆனா அவன் மனசுல என்ன இருக்குன்னு யாருக்குத் தெரியும். எவ்வளவு பேர் எங்கெங்கோ அலையறாங்க. நாம இவ்வளவு பிரியத்தை வச்சுக்கிட்டு அவனுக்காக காத்துக்கிட்டு இருக்கோம். ஆனா அவன் ஏன் இவ்வளவு பிடிவாதம் பிடிக்கிறான்னு தெரியலை. அவனும் ஒரு கண்டிஷன் போட்டிருக்கானே" என்றார் அப்பா.

சத்ய பிரகாஷின் முகம் சிவந்தது.

"நீ தான் அந்த நிபந்தனைக்கு ஒத்துக்கலாம் இல்லே அண்ணா?" என்று கேட்டாள் மைதிலி.

"என்னம்மா இப்படி பேசறே? அவன் தான் புரியாம நிபந்தனை போடறான்னா.?"

"சரிண்ணா ,இப்போதைக்கு நிபந்தனைக்கு சரின்னு சொல்லு" என்றாள் மைதிலி.

"சரின்னெல்லாம் சொல்ல மாட்டேம்மா. யோசிக்கிறேன்னு வேண்ணா சொல்றேன்" என்றான் சத்யா

"ம்! இது, இதைத்தான் எதிர்பார்த்தேன்" என்று குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தார்கள்.

உமாகாந்தன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்.

'அண்ணா' என்று ஆசையாய் ஓடிப் போய் மைதிலி அவனைக் கட்டிக் கொண்டாள்.

"வாடா, வாடா," என்றார்கள் அம்மா அப்பா இரண்டு பேரும்.

மகிழ்ச்சியோடு எழுந்து அவனை நோக்கிப் போனார்கள்.

கனத்த அவனுடைய சூட்கேசை கையிலே வாங்கிக் கொண்டான் சத்யா.

அதில் சக்கரம் இருந்ததனால் மைதிலி அதை உருட்டிக் கொண்டே நகர்த்த அண்ணனும் தம்பியும் ஒருவரை ஒருவர் ஆரத் தழுவிக் கொண்டார்கள்.

கண்களில் கண்ணீர் சுரந்தது.

"என்னடா இப்படிப் பண்ணிட்டே?" என்றான் சத்யா.

"என்ன பண்ணினேன் ?வெளி உலக அனுபவம் வேணும்னுட்டு போனேன், இதில என்ன தப்பு?" என்றான் அவன்.

"கிடைச்சுதா?" என்றான்.

"நிறைய நிறைய கிடைச்சது. வண்டி வண்டியா கிடைச்சுது. அதெல்லாம் தினம் சொல்றேன். இப்போதைக்கு வந்திருக்க மாட்டேன். மைதிலிக் குட்டி ஏங்கிப் போயிடுவாள்னுட்டு வந்தேன்."

"தாங்க்ஸ்டா, தாங்க்ஸ்" என்றான் சத்யா.

"சும்மா தாங்க்ஸ் எல்லாம் சொல்லி ஐஸ் வைக்காதே. நீ உன்னோட ஸ்டான்ட்ல தானே நின்னுட்டு இருக்கிறே ?"என்று கேட்டான் உமா.

சத்யா சிரித்தான்.

"இங்கே பாரு, நீ யோசிக்கிறேன்னு சொல்லியிருக்க யில்லே. அதை நம்பித்தான் வந்திருக்கேன். மைதிலி குட்டி ஏமாந்துடக் கூடாதுன்னுட்டுதான் வந்திருக்கேன். அதுக்கப்புறம் த்ரி மந்த்ஸ், ஆறுமாதம் டைம் கொடுப்பேன், பாசிட்டிவ் பதில் வரலைன்னா என்னோட நடவடிக்கையே வேற மாதிரி இருக்கும்" என்றான் உமாகாந்தன் பாதி விளையாட்டும் பாதி சீரியஸுமாக.

சத்யா திடுக்கிட்டுப் போனான். "சரிடா, சரிடா முதல்ல கல்யாணத்தைப் பார்க்கலாம்டா அதுக்கப் புறம்."

"நானும் இப்ப கல்யாணத்தைப் பத்தித்தான் பேசறேன்" என்றான்.

"ஓகே, ஓகே, நான்தான் கன்சிடர் பண்றேன்னு சொல்லிட்டேனே."

"ஆமா, பெரிய பிரைம் மினிஸ்டரு கன்சிடர் பண்றாராமா?"

"டேய், போயும் போய் பிரைம் மினிஸ்டர் கூட ஒப்பிடறே? இப்பல்லாம் பிரைம் மினிஸ்டரே ரப்பர் ஸ்டாம்ப் ஆயிட்டாங்கடா" என்று சிரித்தான் சத்யா.

"ஜோக்கு, ஜோக்கு ம்" என்று கடுப்பானான் உமாகாந்தன்.

"அதெல்லாம் இருக்கட்டும், முதல்ல உள்ளே வா, உட்காரு" என்ற மைதிலி ஓடிப்போய் தன் கையால் அண்ணனுக்கு சூடாக காஃபி போட்டுக் கொண்டு வந்தாள்.

அப்பா, அம்மா, ஒருபுறம் அண்ணன் தங்கை ஒரு புறம் என்று எல்லோரும் சுற்றிலும் அமர்ந்து கொள்ள உமாகாந்தன் நடுவிலே அமர்ந்து கொண்டான்.

அம்மா அவன் கன்னத்தை வழித்தாள். "திலகா, இத்தனை நாள் நான் இல்லாம என்ன பண்ணினே?" என்றான் உமாகாந்தன்.

'அடி' என்று அவனை மிரட்டுவது போல நடித்த அப்பா சிரித்தார்.

எப்போதாவது நல்ல மூடு இருக்கும்போது அம்மாவை பெயர் சொல்லி அழைப்பான்.

"ஏன் திலகாவை' கூப்புட்டா ஏழுமலைக்கு எதுக்கு கோபம் வரணும் ?"என்றான் அவன்.

"ஆமா! திலகான்னு கூப்பிடற முதல் ரைட் அவருக்குத்தானே" என்று மற்றவர்கள் சிரித்தார்கள்.

மைதிலி கொண்டு வந்த காஃபியை அனுபவித்துப் பருகினான் உமாகாந்தன்.

"அப்பா, இந்த மாதிரி காஃபி, என் மைதிலி குட்டி போட்டுக் கொடுக்கிற டேஸ்டான காஃபி சாப்பிட்டு எவ்வளவு நாளாச்சு!" என்றான்.

அம்மா அழுது விட்டாள். "உனக்கு என்ன தலையெழுத்தா? நாங்க இத்தனை பேர் இருக்கோம், விட்டுட்டு ஊருஊரா எதுக்குடா சுத்தினே?" என்றார்.

ஏழுமலை ஒன்றும் பேசவில்லை.

இந்தப் பாச நாடகத்தை சற்று நெகிழ்வோடு அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

"போனதும் ஒருவகையில நல்லதாப் போச்சும்மா. உலகம் புரிஞ்சுக்கிட்டேன்" என்றான்.

சத்யா அவனை வேதனையுடன் பார்த்தான். "எந்த உலகம் உனக்குத் தெரியக் கூடாதுன்னு நான் வச்சிருந்தேனோ....." என்று இழுக்க.

"இல்லைண்ணா, பரவாயில்லை நான் தெரிஞ்சுக் கிட்டதுதான் நல்லது. அதுசரி அதெல்லாம் விடுங்க கல்யாண ஏற்பாடு எந்த அளவுல இருக்கு?" என்று அதிலே இறங்கினான்.

இப்பொழுது அதெல்லாம் நினைவுக்கு வர சத்யா மகிழ்ச்சியுடன் சகோதரனை பார்த்துக் கொண்டிருந் தான். ஆனாலும் அத்தனை கூட்டம் வந்திருந்தாலும். அவனுக்கு ஏனோ நிறைவாக அமையவில்லை. ஏனென்றால் அங்கே ஏழிசை வல்லபி இல்லை. எப்படிக் கேட்பது என்று விழித்துக் கொண்டிருந்தான்.

ஆபத்பாந்தவன் போல உமாகாந்தன் சம்பத் குமாரிடம் கேட்டான் "ஹலோ பேங்க் மச்சான்" என்று அவன் வந்ததிலிருந்து அவனை பேங்க் மச்சான் என்றுதான் கேலி செய்து கொண்டிருந்தான்.

"பேங்க் மச்சான், எங்கே உங்க சகோதரியைக் காணோம்" என்று கேட்டான்.

"அதை ஏம்பா கேட்கறே? இன்னிக்கு ஏதோ முக்கியமான ரிசல்ட் ஒர்க்காம். மீட்டிங் இருக்கு நான் வரமுடியாது அப்படின்னா. நானே போய் ஹெச் எம் கிட்ட ரிக்வெஸ்ட் பண்ணினேன். சரி நீங்க ஜவுளிக் கடைக்குப் போங்கப்பா நான் ஒரு ஒன் அவர்ல

அனுப்பி வச்சுடறேன். ஏன்னா அவ வரலைன்னா மத்த டீச்சர்ஸ் ஏதாவது நினைப்பாங்கன்னார்.

அதற்குப் பிறகு அவரே ஃபோன் செய்து "இல்லப்பா மத்த டீச்சர்ஸ் எல்லாரும் பாவம் அவ என்னைக்குமே லீவு எடுக்க மாட்டா, அவளை அனுப்புங்க சார்ன்னு ரெக்கமண்ட் பண்றாங்க. அதனால அனுப்பிடறேன் அப்படின்னு சொன்னாரு. அதான் எதிர்பார்த்துட்டு இருக்கோம்" என்றான் சம்பத் குமார்.

மைதிலி சம்பத் குமாரிடம் "அண்ணி வரட்டும், அவங்க வந்ததுக்கு அப்புறம் செலக்ட் பண்ணிக்கலாம்" என்றான்.

பெரியவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். "சரி. அப்ப ஒண்ணு பண்ணுங்க மத்தவங்களுக்கெல்லாம் எடுத்து செலக்ட் பண்ணி வைங்க" என்று இரு குடும்பத்தினரும் அவரவர்களுக்கு தனித்தனியாக தேர்வு செய்யஆரம்பித்தார்கள்.

சம்பத் குமார் மைதிலியிடம் "ஏய், உனக்குப் பிடிச்சதா ஒரு பத்துப் பதினைந்து எடுத்து வை, அதிலிருந்து பார்த்து செலக்ட் பண்ணிக்கலாம்" என்றான்.

"அதுவும் சரிதான்" என்று மைதிலி பார்க்க ஆரம்பித்தாள்.

நித்யா மைதிலியின் அருகிலே அமர்ந்து கொண்டிருந்தாள்.

ஒரு ஐந்து நிமிடங்கள் போயிருக்கும்.

"இதோ, இதோ வந்துட்டாளே, வந்துட்டாளே, வல்லபி வந்துட்டாளே. ஏழிசை வந்துட்டாளே" என்று குரல்கள் கேட்க எல்லோரும் ஆர்வமாக திரும்பினார்கள்.

சத்யபிரகாஷுக்கும் கொள்ளை கொள்ளையாய் ஆர்வம் இருந்தது. ஆனால் சட்டென்று திரும்பி விடாமல் எதேச்சையாக பார்ப்பவன் போல திரும்பினான்.

ஏழிசை வல்லபி நடந்து வந்து கொண்டிருக்க அவளோடு கூட ஒரு இளைஞன் வந்து கொண்டிருந்தான்.

சம்பத் குமார் சத்ய பிரகாஷின் முகத்தை கவனித்துக் கொண்டிருந்தவன் சொன்னான் "அது எங்க அத்தை பையன். எங்க சிவகாமி அத்தையுடைய பையன். அவன் பேரு மதன். மதனகோபால்" என்றான்.

"அப்படியா?" என்றான் சத்யபிரகாஷ். "அத்தைக்கு நம்ம வல்லபியை பொண்ணெடுத்துக்கணும்னு ரொம்ப ஆசை. எப்படி எப்படியோ ஜாடை ஜாடையா கேட்கறாங்க. எங்க வீட்டுல இன்னும் முடிவு எடுக்கலை. பையன் நல்ல பையன் தான். துபாய்ல வேலை செய்யறான். அங்க அவனுக்கு பர்மனன்ட் ஜாப், கவர்மெண்ட் ஜாப். போனா சத்யா, வல்லபி பர்மெனன்டா அங்க இருக்கணும். அதுக்குத்தான் யோசிக்கறோம்" என்றான்.

சொல்லிக்கொண்டே சத்ய பிரகாஷினுடைய முகத்தைப் பார்த்தான்.

சத்ய பிரகாஷ் தன்னுடைய உணர்வுகளை அடக்கிக் கொள்வதற்குப் பெரும் பாடு பட்டுவிட்டான்.

இப்பொழுதுதான் அந்த கூட்டத்திலேயே ஒரு வெளிச்சம் வந்தாற்போலத் தோன்றியது.

சம்பத் குமார் "பார் மைதிலி! நீ எதிர்பார்த்த ஆள் வந்தாச்சு" என்றான் குறும்பாக.

வல்லபி சட்டென்று திரும்பி சகோதரனைப் பார்த்தாள். "எனக்காகவா வெயிட் பண்றீங்க?" என்றாள்.

"ஆமாம்மா, நீ வந்தாத்தான் புடவை எடுத்துக்கு வேன்னு சொல்லிட்டிருக்காப்ல மைதிலி" என்றான்.

"ஏன், மைதிலி அப்படியா?"

"ஆமாம் நாங்க எல்லாருமே உங்களுக்காகத்தான் வெயிட் பண்றோம்" என்று ஒரு மாதிரி இழுத்தாள்,

மைதிலி அவளை கேலி செய்வதாக நினைத்துக் கொண்டு எல்லோரும் சிரித்தார்கள்.

"நான் கூடத்தான்!" என்றான் அந்த மதனகோபால்.

சத்ய பிரகாஷ் திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தான். "அடடா ஆமாம் ஸ்கூல்ல ஆஃப் அன் அவர் வெயிட் பண்ணித்தான் கூட்டிட்டு வந்தேன்" என்றான் மதனகோபால்.

சம்பத் குமார் சிரித்தான். "உன் சேட்டையை ஆரம்பிச்சுட்டியா?"

"அப்புறம் இந்தமாதிரி இடத்துலயெல்லாம் பேசாமல் அப்புறம் எங்க பேசறது?" என்றான் மதனகோபால்.

"அத்தான். சும்மா இருங்க அத்தான்." என்றாள் ஏழிசை வல்லபி.

"சரிங்க தேவியாரே. நீங்க சொல்லிட்டா நாங்க ஒண்ணும் பேச மாட்டோம்" என்றான் மதனகோபால்.
"டேய்! அப்படி இப்படின்னு பேசாம இருந்துடாதடா நீ! கொஞ்சம் கலகலன்னு பேசினாதான் நல்லா இருக்கும்" என்றான் சம்பத் குமார்.

உமாகாந்தனும் சத்யபிரகாஷும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"இங்கே வாங்க அண்ணி" என்றாள் மைதிலி.

அவள் ஒவ்வொரு முறை அண்ணி அண்ணி என்று அழைக்கும் பொழுதும் ஏழிசை வல்லபிக்குள் அதிர் வலைகள் எழுந்தன என்றால் அது சத்ய பிரகாஷுக்கும் எதிரொலித்தது.

சம்பத் குமார் வழக்கம் போல சத்ய பிரகாஷிடம் சொன்னான். "நாத்தனாராம். அண்ணி முறையாகு தாம். அதனால அண்ணின்னுதான் கூப்பிடுவேங்கறா. ஏழிசை வல்லபியும் சொல்லி சொல்லி பார்த்துட்டா அக்கான்னு கூப்பிடேன் அப்படின்னு. இல்லையில்லை அண்ணிதான் அப்படின்னுட்டா" என்று

"இத்தனை பேச்சு வார்த்தையெல்லாம் நடத்தறீங் களா?" என்றான் உமாகாந்தன்.

"இத்தனை தானாடா? இதுக்கு மேலயும் போயிட்டோம். அதைக் கேட்டு நீ யென்ன பண்ணப் போறே?" என்றான் சம்பத் குமார்.

"அதானே, நாங்க எதுக்கு இதெல்லாம் கேட்கறோம். பேசுங்கப்பா பேசுங்க.?"

"அது...!" என்றான் சம்பத்.

"அதானே, இப்ப டாக் டைம் ஃப்ரீங்கறாங்க. என்னென்னமோ ஸ்கீமெல்லாம் கொண்டு வந்திருக்காங்க. எதுக்கும் எங்க அண்ணனுக்கு செலவு வைக்காம பேசுங்க" என்றான்.

"ஏன் உங்க அண்ணன் பாதி, நீ, பாதி பில் பே பண்ண மாட்டீங்களா. ஏதோ கல்யாணம் வரைக்கும் பில் வரும், அதுக்கப்புறம் நாங்க பே பண்ணிப்போம்ல" என்றான் சம்பத் குமார்.

அதற்குள்ளாக அங்கே யாரோ பெரியவர் "சரிப்பா, லொடலொடன்னு பேசாமே இங்க புடவை எடுக்கறதைப் பாருங்க" என்றார்.

உடனே மதன கோபால் "அது எப்படியும் இரண்டு நாள் ஆகும். அதுக்குள்ள நாம போய் குளிச்சிட்டு டிஃபன் சாப்பிட்டுட்டு வந்துடலாம் "என்றான்.

எல்லாரும் சிரித்தார்கள்.

"ஏன்டா நீ இந்த மொக்கை ஜோக் அடிக்கறதை நீ விடவேயில்லையா?" என்றார் செல்வகணபதி. அவரும் கூட அப்படி கேட்டவுடனே எல்லோரும் சிரித்தார்கள்.

சத்ய பிரகாஷும் சிரித்துக் கொண்டே யதார்த்தமாகத் திரும்பியவனின் பார்வை ஏழிசை வல்லபியின் முகத்தில் மோதியது.

அவளும் தான் சிரித்தாள். ஆனால் இரண்டு பேருடைய சிரிப்பிலுமே உயிரோட்டம் இல்லாமல் இருந்ததையும் கவனித்த சம்பத் குமார் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

அத்தியாயம் - 24

"கெட்டி மேளம்! கெட்டி மேளம்" என்று யாரோ முழங்கினார்கள். சுற்றிலும் நெருங்கிய உறவினர்கள் எல்லாரும் அட்சதை தூவ மைதிலியின் கழுத்தில் மங்கல நாண் பூட்டினான் சம்பத் குமார்.

மணவறையில் இரண்டு பக்கமும் பெற்றோர்கள் நின்று கொண்டிருக்க அவர்களுக்கு அருகிலேயே செல்வ கணபதிக்கு அருகில் நித்யா நின்று கொண்டிருந்தாள்.

ஏழிசை வல்லபி அதற்குப் பக்கத்திலே நின்று கொண்டிருந்தாள்.

அப்படியே வரிசையாக நிற்கும் பொழுது ஏழிசை வல்லபியை அடுத்து உமாகாந்தன் நின்று கொண்டிருந் தான்.

உமாகாந்தனுக்கு அருகிலே சத்ய பிரகாஷ் நின்று கொண்டிருந்தான்.

தாலி கட்டி முடிந்தவுடன் மேடையை விட்டு சர்ரென்று இறங்கி விட்டான் சத்ய பிரகாஷ்.

மேடைக்குச் சற்று அருகிலே கீழே நின்று நெஞ்சு கொள்ளா மகிழ்ச்சியுடன் அந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அதே நேரத்தில் வல்லபியும் உமாகாந்தனும் இறங்கி வந்தார்கள்.

தன்னுடைய தோழனே தன் தங்கைக்கு மணமகனாக வரக்கூடும் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை. வெறும் மூன்று மாத பழக்கத்திற்குள் இந்தக் குடும்பத்தினர் தங்களோடு ஒட்டிக் கொண்டது மட்டுமல்லாமல் தங்கள் வீட்டில் முக்கியமான ஒரு கவலையையே தீர்த்திருக்கிறார்கள் என்பது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு என்று வள்ளுவர் சொன்னதைப் போல தங்கள் வீட்டுக் கவலையின் ஒரு பெரும் பகுதியை சம்பத் குமார் தீர்த்து வைத்து விட்டான் என்ற நன்றி உணர்வுடன் அவன் சம்பத் குமாரைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனும் மைதிலியின் கழுத்தில் தாலி கட்டி முடித்தவுடனே சத்ய பிரகாஷைப் பார்த்துத்தான் நட்புடன் சிரித்தான்.

இதே நட்பு என்றைக்கும் தொடர வேண்டும் என்ற வேண்டுதல் கூட அந்த நேரத்திலே சத்ய பிரகாஷின் மனதில் தோன்றியது.

மேடையில் இரண்டு பெற்றோர்களிடம் ஆசி வாங்கியவுடனே சட்டென்று மைதிலியை எழுப்பிக் கொண்டு கீழே இறங்கி வந்தான் சம்பத் குமார்.

நேராக சத்ய பிரகாஷை நோக்கி வந்தார்கள்.

அந்த நேரத்தில் சத்ய பிரகாஷுக்கு அருகிலே இருந்த உமாகாந்தன் தனக்குப் பக்கத்திலே தான் ஏழிசை வல்லபி நிற்கிறாள் என்பதைக் கவனித்தவனாக சட்டென்று அவள் கையைப் பிடித்து இழுத்தான், சட்டென்று நகர்ந்து கொண்டு ஏழிசை வல்லபியை சத்ய பிரகாஷின் அருகிலே நிற்கச் செய்து விட்டு அவன் விலகிக் கொண்டான்.

அவர்கள் பக்கத்தில் நிறைய கூட்டம் இருந்ததால். ஏழிசை வல்லபியும் அதை கவனிக்க வில்லை.

சம்பத் குமார் இறங்கி வருவதை அவளும் ஆச்சரியமாக பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

அவர்கள் நேராக இறங்கி வந்தவுடனே சட்டென்று எதிர்பாராத விதமாக மைதிலி சத்ய பிரகாஷின் காலைத் தொட்டு கும்பிட்டு விட்டு பக்கத்தில் இருந்த ஏழிசை வல்லபியின் காலையும் தொட்டுக் கும்பிட்டாள்.

அது ஏதோ ஜோடியாக நிற்கின்றவர்களிடத்தில் ஆசீர்வாதம் வாங்குவது போல அமைந்ததைக் கண்டு இரண்டு பேருமே திடுக்கிட்டுப் போனார்கள். ஆனால் ஏழிசை வல்லபிக்கு செய்வதற்கு ஒன்றும் இல்லாமல் போனது.

வேறு வழியின்றி ஆசீர்வாதம் செய்தாள்.

மைதிலி எழுந்து நின்ற அந்த வேளையில் ஏழிசை வல்லபி அவளைத் தழுவிக் கொள்ள சத்ய பிரகாஷ் சம்பத் குமாரை தழுவிக் கொண்டான்.

"என்னப்பா கால்ல விழுகணுமா? சொல்லு" என்று சம்பத் அவன் காலில் விழப்போக சட்டென்று தன் கைகளால் அவனைத் தடுத்துத் தழுவிக் கொண்டான் சத்ய பிரகாஷ்.

"ரொம்ப தாங்க்ஸ்பா, தாங்க்ஸ் எ லாட்" என்றான் நெகிழ்ந்து.

"ஹலோ! நாங்க தான் உனக்கு தாங்க்ஸ் சொல்லணும். ஏன்னா இப்படி ஒரு அருமையான பெண்ணை வளர்த்துக் கொடுத்திருக்கீங்களே. பார்த்துக் கொடுத்திருக்கீங்களே" என்றான்.

"என்னமோ நேத்து வரைக்கும் யாரோ மாட்டிக்கப் போறேன் மாட்டிக்கப்போறேன்னு சொல்லிட்டிருந் தாங்க" என்றான் மதனகோபால் இடையில் நுழைந்து.

"ஆமா, தாலி மாட்டப் போறேன்னு சொல்லிட் டிருந்தேன்டா, நீ தப்பாப் புரிஞ்சுக்கிட்டடா" என்றான் சம்பத் குமார்.

"ஓஹோ! உடனே பல்டி அடிச்சாச்சு பாரு. இப்பவே டிரெயினிங் எடுத்தாச்சு பாரு" என்றான்.

பெரியவர்கள் எல்லாரும் சிரித்தார்கள்.

அதற்குப் பிறகு அன்றைக்கெல்லாம் ஒரே கலாட்டாவாக இளைஞர்கள் நடந்துகொண்டார்கள்.

மதன கோபால் ஏழிசை வல்லபியை விழுந்து விழுந்து கவனிப்பதை ஒரு வித தவிப்புடன் கவனித்துக் கொண்டிருந்தான் சத்ய பிரகாஷ்.

"வல்லபி, நீ சாப்பிடு, வல்லபி உடம்பை தேத்து. என்ன ஒரு மாதிரி டல்லாவே இருக்கே."

"போன தடவைக்கு வந்தப்ப இந்த தடவை பார்க்கும் போது இளைச்ச மாதிரி இருக்கியே. உட்காரு, சாப்பிடு" என்று பந்தியிலே உபசரிப்பதும். அவளுக்கென்று தனியாக ஏதாவது ஸ்வீட் மாதிரி கொண்டு வந்து கொடுப்பதையும் பார்த்து அவனுக்கு உள்ளுர எரிச்சல் கிளம்பியது.

அவன் ஸ்டோர் ரூமிலே ஏதோ பார்ப்பதற்காகப் போய் விட்டு வெளியே வரும் போது ஏழிசை வல்லபி "வெத்தலை பாக்கு, பீடா இருக்கா தட்டுல வச்சுட்டீங்களா ?"என்று கேட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

இரண்டு பேருமே எதிர்பாராமல் மோதிக் கொண்டார்கள்.

சத்ய பிரகாஷ் " இசை, நான் ஒரு தடவை நான் உங்கிட்ட பேசணும்" என்றான்.

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்து 'எதுக்கு?' என்றாள்.

"பேசணும்னா பேசணும்" என்றான்.

"எனக்கு வேலை இருக்கு," என்றாள் அவள்.

அதற்குள்ளாக அவன் நகராமல் நின்று கொண்டு வழியை மறித்தான்.

அவள் கோபமாக அவனைப் பார்த்தாள்.

"இத பாருங்க சத்யா, டோன்ட் டிஸ்டர்ப் மி, நகருங்க" என்றாள்.

"நகர்றேன் ஆனா நீ என் கூட நின்னு ரெண்டு நிமிஷம் பேசணும்."

அவள் மௌனமாக இருக்கவே மெதுவாக நகர்ந்தார்கள்.

"என் கூட நின்னு கூட பேச வேண்டாம் நடந்துக்கிட்ட பேசினா கூட போதும்" என்றான் கடுப்போடு.

அவள் வெற்றிலை பாக்குத் தட்டை கையிலே வைத்துக் கொண்டு நகர அவனும் அவளோடு மெதுவான நடையிலே நடந்தான்.

சத்ய பிரகாஷும் பட்டு வேட்டி சட்டையிலே இருந்தான், முழுக் கைச் சட்டையை மடித்துக் கொண்டு அவன் நடமாடிய விதம் பார்க்க அழகாக இருந்தது என்றால் ஏழிசை வல்லபி அந்த அழகான அரக்கு வண்ண பட்டுப் புடவையில் ஜொலித்துக் கொண்டிருந்தாள்.

அவ்வப் போது அவள் பாராத வண்ணம் அதைக் கவனித்து அவன் ரசித்துக் கொண்டான்.

ரசிக்கிறோம் என்று உணர்ந்த கணத்திலேயே சட்டென்று தன் கவனத்தை வேறு பக்கம் மாற்றிக் கொண்டான். "என்ன சொல்லணும்?" என்றாள் ஏழிசை வல்லபி.

"இதப் பாரு ஏழிசை வல்லி, ஒரு வேளை நீ அந்த மதனகோபாலையே கல்யாணம் பண்றதா இருக்கலாம். ஆனா அதுக்காக இப்படி கல்யாண வீட்லயே ஓப்பனா வழிய விடாதே, நல்லால்லே" என்றான்.

அவள் அவனை முறைத்துப் பார்த்தாள்.

"அவன் உங்ககிட்ட சொன்னானா என்னைக் கல்யாணம் பண்றேன்னு சொன்னானா?"

சத்ய பிரகாஷ் தோளைக் குலுக்கினான்.

"அப்படியெல்லாம் சொல்லலை இருந்தாலும் எல்லாருக்கும் அப்படி ஒரு இம்ப்ரஷனாதான் இருக்கு" என்றான்.

"எல்லாருக்கும் வர இம்ப்ரஷனுக்கெல்லாம் என்ன பண்ண முடியும்.? எங்க ஸ்கூல்ல கூடத்தான் கலா டீச்சர் முதற் கொண்டு....!" என்று இழுத்தாள்.

"கலா டீச்சர் முதற் கொண்டு....?" என்றான் அவன் ஆர்வமாக.

அவள் சட்டென்று பெருமூச்சு விட்டு விட்டு "பாஸ்ட் இஸ் பாஸ்ட். இதையெல்லாம் பேசி என்னத்துக்கு ஆகப்போகுது?"

"ஓஹோ! அப்ப பிரசன்ட் தான் இந்த மதன கோபாலா?" என்றான்.

அவள் உதடுகளை கடித்துக் கொண்டு நின்று ஒரு நிமிடம் தன் கோபத்தை அடக்கினாள்.

திரும்பி சத்ய பிரகாஷை பார்த்தாள். "சத்யா இப்பவும் நான் உங்களை உயர்வாதான் நினைக்கிறேன். ரொம்பக் கீழே இறங்காதீங்க" என்றாள்.

"இல்லை, நானும் அப்படி சொல்லக் கூடாதுன்னு தான் நினைச்சேன். ஆனா கொஞ்சம் ஓவராத்தான் இருக்கு" என்றான் சத்ய பிரகாஷ்.

"இதப் பாருங்க, அவன் பிஹேவ் பண்ணத் தெரியாம நடந்துக்கறான். நான் அவன் கிட்ட சொல்லிட்டுத்தான் இருக்கேன். ஆனா அவன் புரிஞ்சுக்கமாட்டேங்கறான். ஆனா வாட் கேன் ஐ டு" என்றாள்.

"உன்னால ஒண்ணும் பண்ண முடியாதா? சரி நான் சம்பத் குமார் கிட்ட பேசிக்கறேன்" என்று நகர்ந்தான்.

அவள் சட்டென்று எதிர்பாராத விதமாக அவனுடைய கையைப் பிடித்து இழுத்தாள். "இப்படி யெல்லாம் அண்ணன் கிட்ட போய் சொல்லி என்னை கேவலப்படுத்தாதீங்க" என்றாள்.

சொல்லிக் கொண்டே தான் தான் அவன் கையைப் பிடித்துக் கொண்டிருக்கிறோம் என்று உணர்ந்தவளாக கையை விட்டாள்.

சத்ய பிரகாஷ் சுற்றும் முற்றும் பார்த்தான். தான் என்ன செய்கிறோம் என்று உணராதவன் போல "இங்கே பாரு, இவ்வளவு அழகா நடமாடிட்டு அதிலயும் இன்னொருத்தனை ரொம்ப கூலா உங்கிட்ட பழக விட்டுட்டு.....! வேண்டாம் ஏழிசை. என்னைச்

சீண்டறதா நினைச்சுட்டு ஏதாவது பண்ணாதே, அப்புறம் எனக்கு கோபம் மட்டும் வந்துச்சு, அவனை உண்டு இல்லைன்னு பண்ணிடுவேன்.''

ஏழிசை வல்லபி ஏளனமாகப் பார்த்து சிரித்தாள். ''அவ்வளவு கோபமாக இருந்தா எதிலயாவது போய் முட்டிக்குங்க'' என்றாள்.

''ஏய்!'' என்று அவன் பல்லைக் கடித்துக் கொண்டு அவள் வலக்கையைப் பிடித்து முறுக்கினான்.

அந்தக் கணத்தில் ஏழிசை வல்லபி நெஞ்சு நிறைந்த வேதனையுடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''ப்ளீஸ் சத்யா, வேண்டாம்'' என்றாள்.

''என்ன வேண்டாம்?'' என்றான் அவன்.

''உங்களுக்கு எதுவுமே புரியலை சத்யா. உங்களுக்குப் புரிய வைக்க என்னால முடியாது. நானும் என் பேரண்ட்ஸ் சொல்லுக்கு மதிப்புக் கொடுத்துத்தான் ஆகணும். எல்லாமே ஒண்ணும் எனக்குப் புடிச்சு நடக்கலை'' என்றவள் அவன் கையை உதறிக் கொண்டு அங்கிருந்து நடந்தாள்.

அவன் மறுபடியும் எட்டி அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

''இங்க பாரு வல்லபி, மைதிலி மேரேஜ்ல இருக்கற சந்தோஷத்தை எல்லாம் கெடுத்துடாதே. அந்த மதனகோபாலை உடனே ஊருக்குப் போகச் சொல்லு'' என்றான்.

அவள் அவனை முறைத்தாள்.

''நேரா போய் எங்க அம்மா அப்பாகிட்டே சொல்லுங்க. இல்லைன்னா சம்பத் குமார்கிட்ட சொல்லுங்க. டோன்ட் இரிட்டேட் மீ'' என்றாள்.

அவன் மறுபடியும் சுற்று முற்றும் பார்த்தான்.

நல்ல வேளையாக அந்த இரண்டு மூன்று நிமிடங்கள் யாரும் வரவில்லை. என்று எண்ணிக் கொண்டவன். ''நான் உன்னை இரிட்டேட் பண்ணலை. நீதான் என்னை இரிட்டேட் பண்ணிக்கிட்டு இருக்கறே. தெரியலை. இது எங்க போய் முடியும்னு தெரியலை.'' என்று பல்லைக் கடித்து முறைத்து விட்டு நகர்ந்தான்.

இது அத்தனையையும் எதற்காகவோ அந்த பக்கம் வந்த உமாகாந்தன் மறைந்து நின்று கொண்டு கவனிக்கிறான் என்பதை அவர்கள் இருவருமே உணர்ந்து கொள்ளவில்லை.

ஏழிசை வல்லபி சட்டென்று முகத்தை தேற்றிக் கொண்டவளாக நகர்ந்தாள். ஆனால் பத்து எட்டு நகர்ந்தவுடனே தான் அவளுக்கு புரிந்தது. சத்ய ப்ரகாஷுக்கு ஏன் இவ்வளவு கோபம் வர வேண்டும் என்பதற்கான காரணம்.

சட்டென்று முகம் மலர்ந்தது.

''ஓஹோ இருங்க. இருங்க'' என்று எண்ணிக் கொண்டு நகர்ந்தாள்.

அதே நேரத்தில் உமாகாந்தன் எதிரிலே வந்து ''அண்ணி'' என்று நின்றான்.

ஏழிசை வல்லபி உமாகாந்தனிடம் ஏதோ சொல்ல முயற்சிக்க ''பார்த்தேன், பார்த்தேன் அண்ணன் கோபத்தையெல்லாம் பார்த்தேன்'' என்றான்.

உடனே அவள் ''பாருங்க உமா. அந்த மதனகோபால் வந்து பேசறதுக்கு நான் என்ன பண்ணுவேன். இவரு என்னைக் கடிக்கறாரு?'' என்றாள்.

''நீங்க என்னை கடிக்கறதுக்கு என்ன உரிமை இருக்குன்னு கேட்க வேண்டியதுதானே?'' என்றான் உமாகாந்தன்.

''அதானே, எப்படி முகத்தில் அடிச்சாப்ல கேட்கறது? அவனை உண்டு இல்லைன்னு பண்ணிடுவாராம், அதைப் போய் அவன் கிட்ட சொல்ல வேண்டியது தானே'' என்றாள் ஏழிசை வல்லபி. சொல்லுவதற்கு ஒரு ஆள் கிடைத்த சந்தோஷத்தில்.

சம்பத் குமாரிடம் இதைச் சொல்லுவதற்கில்லை. மற்றவர்களிடம் இதைச் சொல்ல முடியாமல் விழித்துக் கொண்டிருந்த வேளையிலே உமாகாந்தன் அவளோடு சேர்ந்து கொள்ள அவள் தன் மனம் விட்டு அவனிடம் சொன்னாள்.

''அண்ணி ...!''என்றான் அவன்.

''சொல்லுங்க!'' என்றாள் அவள் சலிப்புடன்.

''உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? நான் ஒரு நிபந்தனை போட்டுத்தான் நான் இந்தக் கல்யாணத்துக்கு வந்துருக்கேன்.''

''போட்டாரே, உங்க அண்ணனும்தான் ஒரு நிபந்தனை. அதில தான் நொந்து போய் விலகி இருக்கேன்.''

''இருங்க. இருங்க. இந்த வெத்தலைத் தட்டைக் கொடுத்துட்டு வந்து என்ன விவரம்னு எனக்கு சொல்லுங்க. ஐ வான்ட் டு நோ எவ்ரி திங்'' என்றான் உமாகாந்தன்.

''போங்க, உமா, உங்களுக்கு வேற இதெல்லாம் விளையாட்டா இருக்கா?'' என்றாள் அவள்.

''இல்லைங்க, அண்ணி ஐ ஆம் வெரி சீரியஸ்.''

''இதப் பாருங்க உமா. சும்மா நீங்க அண்ணி அண்ணின்னு கூப்பிடாதீங்க'' என்றாள்.

''ஏன் மைதிலி உங்க அண்ணன் ஒய்ஃப் தானே நீங்க அவளுக்கு நாத்தி தானே. மைதிலிக்கு அண்ணின்னா எனக்கும் அண்ணிதானே?'' என்றான்.

''நீங்க அப்படி வர்றீங்களா?'' என்றாள்.

''பின்னே வேற என்ன நினைச்சீங்க?'' என்றவன். உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

மேலும் அடக்க முடியாமல் குபீரென்று சிரித்து விட்டான். ''என்ன, உங்களுக்கு என்னைப் பார்த்தா சிரிப்பா இருக்கா?'' என்றாள்.

''இல்லை. இல்லை. எனக்கு ஏதோ ஒரு சந்தோஷம்'' என்றவன் ''வெத்தலைத் தட்டை கொடுத்துட்டு வாங்க'' என்று நின்றான்.

அவள் போய் வெற்றிலைத் தட்டை சாப்பிட்டுவிட்டு வந்தவர்கள் எடுத்துக் கொள்வதற்காக ஒரு பக்கமாக வைத்து விட்டு இன்னொரு தட்டிலே பீடாகைகள் இருந்ததையும் போட்டு வைத்து விட்டு இந்தப் பக்கம் வந்தாள். அதுவரையிலும் உமாகாந்தன் அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

"இருங்க, இருங்க, என்ன கேட்டான் எங்க அண்ணன்?" என்றான்.

"அது எங்களுக்குள்ளே இருக்கிற விஷயம்?" என்றாள் அவள்.

"நான் பாவம் இல்லை. உங்களுக்கும் நான் ஃப்ரெண்டுதானே. எங்க அண்ணன் சில நேரத்துல இப்படித்தான் ரொம்ப காயப்படுத்திடுவான். அப்படி இப்படி ஏதாவது உங்ககிட்டே பேசிட்டானா? என்ன? நான் அவனைக் கேட்கறேன். நீங்க சொல்லுங்க" என்றான்.

'யாராவது சொல்லுவதற்கு கிடைக்க மாட்டார்களா' என்பது போல இருந்த ஏழிசை வல்லபி கொட்டித் தீர்த்து விட்டாள்.

உமாகாந்தன் அமைதியாக கேட்டுக் கொண்டான்.

"ம்ஹூம். அப்படியா விஷயம். இருங்க எங்க அண்ணனை வச்சுக்கறேன்" என்றான்.

உடனே அவள் "வேண்டாம், வேண்டாம், சண்டை கிண்டை போட்டுடாதீங்க."

"போங்க அண்ணி .நான் பார்த்துக்கறேன் உங்க ஃப்ரெண்டை, நாங்க ஒண்ணும் பண்ணிட மாட்டோம்" என்று அனுப்பி வைத்துவிட்டு அவள் போன திசையை பார்த்துக் கொண்டே நின்றான்.

அவன் முகத்திலே விசித்திரமானதொரு புன்னகை தோன்றியது.

அத்தியாம் - 25

காரை ஓட்டிக் கொண்டு ஃப்ரஷனிங் செண்டருக்குள்ளே கொண்டு வந்து நிறுத்தினான் சம்பத் குமார்.

வழக்கம் இல்லாத வழக்கமாக சத்யா ஏதோ ஒரு காரின் அருகில் வேலை செய்து கொண்டிருந்தான்.

சத்யா அழுக்கான உடைகளில் களத்தில் இறங்கி அவன் வேலை செய்வதை இதுவரை சம்பத் குமார் பார்த்ததில்லை.

நான்கைந்து பேர் பையன்கள் உதவிக்கு இருந்தார்கள் என்பதால் பக்கத்திலே நின்று கொண்டு இப்படி இப்படிச் செய்ய வேண்டும் என்று வேலை வாங்குவதைப் பார்த்திருக்கிறானே ஒழிய சத்ய பிரகாஷே இறங்கி வேலை செய்வதை அவன் இதுவரை பார்த்ததில்லை.

கார் உள்ளே நுழைவதைப் பார்த்த சத்ய பிரகாஷ் திரும்பினான்.

"அடடே, சம்பத்து வாப்பா வாப்பா!" என்று சொல்லிக் கொண்டே டவலுக்காக கையை நீட்ட உதவி

ஆட்கள் ஓடோடிச் சென்று ஒரு டவலை எடுத்துக் கொண்டு வந்து தந்தார்கள்.

கையையும் முகத்தையும் துடைத்துக் கொண்டு சம்பத்தை நோக்கி வந்தான். ''என்னப்பா இன்னைக்கு பேங்க் இல்லையா?'' என்றவன் '' ஓ! இண்ணைககு ஞாயிற்றுக் கிழமை'' என்றான்.

''உனக்குத்தான் ஞாயிற்றுக்கிழமை திங்கட்கிழமை எந்தக் கிழமையும் கிடையாது. எங்களுக்கெல்லாம் இன்னிக்கு ஒரு நாள்தாம்பா விடுமுறை'' என்றான் சம்பத் குமார்.

பேசிக்கொண்டே ''அப்பாடா! ஒரு வழியா ஏர் போர்ட்டுக்கு போயிட்டு வந்துட்டேன்'' என்றான்.

''அதானே பார்த்தேன், கார்ல வந்த உடனே எனக்கே ஆச்சரியமா போச்சு'' என்று பேசிக் கொண்டே அலுவலகத்தை நோக்கிப் போனார்கள்.

''ஏர் போர்ட்டுக்கா?'' என்றான் மறுபடியும் சத்ய பிரகாஷ்.

''ஆமா! நம்ம அத்தை மகன் இருக்கானே. அவனை அனுப்பி வச்சுட்டு வந்தேன்'' என்றான்.

''ஓ, அப்படியா?'' என்று கொஞ்சம் நிம்மதி அடைந்த குரலில் கேட்டான் சத்ய பிரகாஷ். ''ஆமாம்ப்பா, அவன் வந்து வீட்ல ஒரு கலக்கு கலக்கிட்டான்'' என்றான்.

''உங்களை மட்டுமா?'' என்று எண்ணிக் கொண்டவன் அடுத்து என்ன சொல்லப் போகிறானோ

என்ற படபடத்த இதயத்துடன் சம்பத் குமார் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்கலானான்.

''ஏழிசையை கல்யாணம் கட்டிக் கொடுத்தாதான் ஆச்சுன்னு அவன் ஒரே பிடிவாதம். அத்தைக்கும் ஒரே ஆசை'' என்றான்.

''இப்படி நல்ல மாப்பிள்ளை கிடைச்சா கொடுத்துட வேண்டியதுதானேப்பா?'' என்றான் சத்யா.

சம்பத் குமார் ஒரு முறை அவனை ஆழப் பார்த்து விட்டு ''எங்கேப்பா ஏழிசைவல்லபிதான் ஒத்துக்க மாட்டேங்குதே'' என்றான்.

''ஏன், அவங்களுக்கு என்னவாம் ?''என்றான்.

''என்ன புதுசா அவங்க இவங்க'' என்றான் சம்பத் குமார்.

''இல்லைப்பா இப்ப மைதிலிக்கு முறை அண்ணின்னு கூப்பிட ஆரம்பிச்சாச்சு. இனிமே நானும் மரியாதை கொடுத்தாதான் நல்லாயிருக்கும்.''

''அட போப்பா, நீயும் உன் மரியாதையும். ஒரே தலைவலியா இருக்கு எனக்கு ஏழிசையோட'' என்றான்.

''ஏன்?'' என்றான் சத்ய பிரகாஷ்.

''அப்புறம் பின்னே? மனுஷனுக்குக் கோபம் வராதாக்கும்? கல்யாணம் பண்ணிக்க மாட்டாளாம். இப்படியே இருப்பாளாம். இப்படின்னு தெரிஞ்சிருந்தா நானும் கல்யாணம் பண்ணிக்காம இருந்திருப்பேனே. நீ உமாவுக்காக கல்யாணம் பண்ணாம இருக்கற மாதிரி

நான் ஏழிசை வல்லபிக்காக கல்யாணம் பண்ணாம இருந்திருப்பேன்'' என்றான்.

''ஏம்பா மைதிலிக்கு இப்பத் தான் ஒரு நல்ல வாழ்க்கை கிடைச்சிருக்கேன்னு சந்தோஷப்பட்டுகிட்டு இருக்கேன். நீ அதுக்கு வேட்டு வைக்கிறே?'' என்றான்.

''முடிவா சொல்லிட்டாப்லயா?'' என்றான்.

''ஆமா, அவனுக்குக் கொஞ்சம் வருத்தம்தான். ஆனா என்ன பண்றது.? ஆனா நான் ஒரு மாதிரி தேத்தி அனுப்பியிருக்கேன்'' என்றான் சம்பத் குமார்.

''என்னன்னு.?''

''அது வேற ஒண்ணும் இல்லை. இரண்டு மாசம் பொறுப்பா, ஏழிசை ஏதாவது ஒரு முடிவு எடுக்கட்டும் அது வரைக்கும் பொறு அப்படின்னு சொல்லியிருக்கேன்.''

சத்ய பிரகாஷுக்கு உள்ளூர ''போனவனை விட வேண்டியதுதானே?'' என்றிருந்தது. ஆனால் அதற்கு மேல் பேசுவதற்கு ஒன்றுமில்லாமல் 'அதுவும் சரிதான்' என்றான்.

பேசிக் கொண்டே அலுவலகத்துக்கு வந்தார்கள்.

சம்பத் குமார் மேஜைக்கு அந்தப் புறம் இருந்த இருக்கையில் அமர சத்ய பிரகாஷ் போய் ஓரிரு விநாடிகளில் முகம் திருத்தி உடை மாற்றிக் கொண்டு வந்தான்.

''போப்பா சத்யா, இப்படியே பார்த்துப் பார்த்து பழகிட்டு அழுக்கு டிரெஸ்ல பார்த்தா புடிக்கலை'' என்றான்.

''இல்லைப்பா, கொஞ்சம் மனசு சரியில்லைன்னா வேலையில இறங்கிடறது'' என்றான்.

''சத்யா. உனக்கு என்னப்பா ஆச்சு?'' என்றான் சம்பத்.

''இல்லை, மைதிலி போனதிலிருந்து வீடு ரொம்ப வெறுமையா இருக்கு. அம்மா அப்பாவும் கஷ்டப் படறாங்க உமாகாந்தன் ஹெல்ப் பண்றான். வயசான காலத்துல அம்மா கஷ்டப் படறதைப் பார்த்தா கஷ்டமா இருக்கு'' என்றான்.

''அப்ப சரி, கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தானே'' என்றான் சம்பத் குமார்.

''அட சும்மா இருப்பா. ஆ ஊன்னா கல்யாணம்னு ஆரம்பிச்சுக்கறீங்க.''

''அதுவும் சரிதான். இப்ப நான் கல்யாணம் பண்ணி என்னத்தைக் கண்டேன்?'' என்றான் சம்பத் குமார்.

சத்ய பிரகாஷ் திடுக்கிட்டுப் போனான்.

''என்னப்பா சொல்றே? ஏம்பா அண்ணன்காரன்பா நான். எங்கிட்ட வந்து இப்படிச் சொல்றே?'' என்றான்.

''பின்னே என்னப்பா எனக்கும் அங்கே பிரச்சினை தான்.''

''என்ன பிரச்சினை?'' என்று கேட்டான் சத்ய பிரகாஷ் கவலையுடன்.

''எல்லாம் உன் சிஸ்டர் தான். ஏழிசை வல்லபி கல்யாணம் ஆகாம இருக்காளாம். நித்யா இருக்காளாம், பெரியவங்க இருக்காங்களாம், அடக்கி வாசிங்க.

அப்புறம் ஏழிசைக்கு சீக்கிரம் மாப்பிள்ளை பார்க்கணுமாம். அவளை அந்தப் பக்கம் தாட்டி விட்டாதான் இவளுக்கு குற்ற உணர்ச்சி குறையுமாம். கேளு'' என்றான்.

சத்யா ஒரு நிமிடம் திகைத்துப் போனான். இப்படி எல்லாமா மைதிலி பேசுது ?''என்றான்.

''நீ வேறப்பா. இந்தப் பொம்பளைங்களுக்கு மட்டும் கழுத்துல ஒரு தாலி ஏறிடுச்சுன்னு வச்சுக்கோ. அதுக்கப்புறம் எப்படித்தான் அந்த மெச்சூரிட்டி வருமோ தெரியலை? பாண்டக் கிழவிகளாட்டம் பேசுவாங்கப்பா'' என்றான்.

சத்ய பிரகாஷுக்கு பெருமையாகவும் இருந்தது. இவ்வளவு பொறுப்பாக தன் தங்கை பேசுகிறாளா என்று இருந்தது. ஆனால் இன்னொரு பக்கம் கவலையாக இருந்தது.

இதைத் தன்னிடமே வந்து சொல்வதன் மூலமாக நேரடியாக இல்லாமல் மறைமுகமாக சம்பத் குமார் ஒரு குற்றச் சாட்டு வைக்கிறான் போல தோன்றியது.

''நான் வேண்ணா மைதிலிக்கிட்டே'' என்று இழுக்க... ''ஐய்யய்யே இது என் பிரச்சினைப்பா என் சாமர்த்தியத்துல நான் பார்த்துக்குவேன். விடு'' என்றான்.

இரண்டு பேரும் சற்று நேரம் கலகலவென்று பேசிக் கொண்டு சரிப்பா ''ஏர்லி மானிங் எழுந்து அவனை ஏர்போர்ட்ல விட்டுட்டு வந்தேன். போகலாம். இன்னிக்கு ஒரு நாள் தான் ஓய்வு. பார்க்கலாம் மைதிலி

ஒத்து வந்துச்சுன்னா எங்காவது வெளியில கூட்டிட்டுப் போகலாம். அவ எங்கே? இத்தனை பேர் இருக்கும் போது நான் வரலை வரலைங்கறா'' என்றான்.

''பேசாம ஒரு ஹனிமூன் போயிட்டு வாங்களேன்'' என்றான் சத்ய பிரகாஷ்.

''அதுவும் கேட்டனே? அதுக்கும் கண்டிஷன் போடறாப்பா'' என்றான்.

சத்ய பிரகாஷ் பல்லைக் கடித்துக் கொண்டான்.

''நீ டென்ஷன் ஆகாதப்பா. இதெல்லாம் இருக்கறது தான் மேரேஜ் லைஃப்ல. மெதுவா பார்த்துக்கலாம் விடு. நான் எங்கே போப்போறேன், அவ எங்கே போப்போறா?''

''என்ன கண்டிஷன்?'' என்றான்.

''அது சத்யா அண்ணனுக்கு நிச்சயமாவது ஆகணுமாம், அப்பத்தான் ஹனிமூன் வருவாளாம். இதைக் கேளு'' என்றவுடன் சத்ய பிரகாஷ் சிரித்து விட்டான்.

''நீ சிரிக்கறப்பா, என் பாடு எனக்குத்தான் தெரியும். தினமும் நான் படற பாடிருக்கே? ஐயய்யய்யோ?''

உண்மையிலேயே சத்ய பிரகாஷுக்கு சிரிப்பு வந்துவிட்டது.

''கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரியா?'' என்றான்.

''இல்லையில்லை, அவ்வளவு மோசம் இல்லை. இருந்தாலும்....!'' என்று இழுத்தான்.

"சரி பேசாம ஏழிசைகிட்ட பேசி ...!"

"அதெப்படிப்பா பேசாம பேசறது ?"என்றான்.

"அடப் போப்பா .நீ ஜோக் அடிச்சுட்டு. ஏழிசைகிட்ட பேசலாம்ல" என்றான் சத்யா.

"நான் பேசிப் பார்த்தாச்சு. கல்யாணங்கற பேச்சைப் பேசாதேங்கறா"

" நீ வேண்ணா பேசு" என்றான்.

"நானா?" என்றான்.

"ஆமா! நீங்க ரெண்டு பேரும் தான் ரொம்ப ஃப்ரெண்ட்ஸ் .நீ எது சொன்னாலும் அவ கேட்பா அவ என்ன சொன்னாலும் நீ கேட்பே"

"அந்த மாதிரி டர்ம்ஸ் இப்ப எங்களுக்குள்ளே இல்லை என்று சொல்லலாமா?" என்று நினைத்தான்.

சொல்லி எதற்காக சம்பத் குமாரை வருத்தப்பட வைக்க வேண்டும் என்று நினைத்தான்.

சம்பத் குமார் சற்று நேரம் இப்படியே விளையாட்டாக பேசி விட்டு தான் சொல்ல வந்த செய்திகளை சொல்லிவிட்டான்.

அதற்குள்ளாக கங்காம்மா வழக்கம் போல காஃபியை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து விட்டு சம்பத் குமாரிடம் "தம்பி, நம்ம தம்பிக்கு புத்தி சொல்லுங்க. ரொம்ப கஷ்டப் படுத்திக்குது. உடம்பைப் பாருங்க. எவ்வளவு டயர்டா இருக்கு பாருங்க. மைதிலி கல்யாணம் பண்ணிட்டுப்போனதிலிருந்து மனுஷனுக்கு மனசுக்குள்ள சங்கடம்" என்றார் யதார்த்தமாக.

யதார்த்தமாக அன்பைக் காட்டுகிற அந்தத் தாயுள்ளம் படைத்த பெண்ணை வாஞ்சையாக பார்த்தான் சத்ய பிரகாஷ். "நீங்க வேற ஏன் கங்காம்மா எல்லாத்துக்கிட்டயும் கம்ப்ளெயிண்ட் பண்ணிக் கிட்டு?" என்றான்.

"இல்லை தம்பி. சம்பத். தம்பி நிஜமாத்தான் மொதல்ல ஒரே கலகலப்பா இருப்பாரு. ஓர்க் ஷாப்பே ஜாலியா இருக்கும். இப்ப அப்படி இல்லை."

"அது சிஸ்டர் கல்யாணம் பண்ணியிருக்காங்கள்ளே அதனால. சரியாப் போயிடும்" என்றான் சம்பத் குமார்.

காஃபியைப் பருகிவிட்டு எழுந்தான்.

அவன் செல்லுவதை ஆழ்ந்த பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் சத்ய பிரகாஷ்.

மறுபடியும் போய் வேலையில் ஆழ்ந்தான்.

தன்னை மறப்பதற்காகவா அல்லது தன் உள்ளத்தில் நிறைந்திருக்கிறவளை மறப்பதற்காகவா என்று தெரியாத வண்ணம் இப்பொழுதெல்லாம் கடுமையாக உழைக்க ஆரம்பித்திருந்தான்.

கங்காம்மா அதையும் போய் வீட்டில் சொல்லியிருந்தாள்.

இந்த ஒரு வாரமாகவே உமாகாந்தனும் சகோதரனை ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

அன்றைக்கு ஆறு மணிக்கு வீட்டிற்குப் போனான் சத்ய பிரகாஷ்.

வீட்டிலே நிசப்தம் நிலவியது!

'மைதிலி இருக்கும் பொழுது இப்படியா இருந்தது' என்று எண்ணிக் கொண்டே உள்ளே போனான்.

வழக்கத்துக்கு விரோதமாக எதிர் எதிர் சோஃபாக்களில் அம்மாவும் அப்பாவும் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தார்கள்.

"என்னப்பா என்ன விஷயம்?" என்று கேட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

"நீ வா நீ. முகத்தை கழுவிட்டு வா. உங்கிட்ட பேசணும்" என்றார்.

அவன் இரண்டு பக்கமும் அம்மாவையும் அப்பாவையும் மாறி மாறிப் பார்த்து விட்டு போய் முகம் கழுவி விட்டு வந்தான்.

"நாங்க இப்போ வெளிய கிளம்பலாம்னு இருக்கோம்." என்றார் அப்பா,

"ஆறு மணிக்கு மேலேயா?" என்றான் அவன்.

"பரவாயில்லை. இன்னிக்கு விடு. நாளைக்கு நல்ல நாளா இருக்கு" என்று அப்பா ஒற்றை விரலை ஆட்டி ஆட்டி கணக்குப் போட்டார்.

"எதுக்கு நல்ல நாளு?" என்றான் சத்ய பிரகாஷ்.

"உனக்குப் பொண்ணு பார்க்கத்தான்பா போறோம்" என்றார் அப்பா.

"வாட்! நான் பொண்ணு பார்க்கச் சொல்லலையே?" என்றான் சத்ய பிரகாஷ்.

"இனிமேயெல்லாம் உன்னைக் கேட்டுட்டு இருக்கற மாதிரி இல்லை. அங்க பாரு, அவனைப் பாரு" என்றார்.

உமாகாந்தன் மாடிக்குச் செல்லுகிற படியில் இறங்கி வந்து கீழ்ப்படியில் நின்றான்.

"அவன் தான். உன் தம்பி சொல்றான். பேக் பண்ணி வச்சிருக்கானாம். ஒண்ணு நீ கல்யாணம் பண்ணிக் கணுமாம் இல்லைன்னா அவன் கிளம்பிடுவானாம்" என்றார்.

"என்னடா உமா?" என்பது போல் அவன் பரிதாபமாக பார்த்தான்.

"ஆமா அண்ணே. நீ எனக்காக தியாகம் பண்றேன் தியாகம் பண்றேன்னுட்டு கிடக்கறே,ஜனங்க என்ன பேசுவாங்க, இது தான் கெட்டதும் இல்லாம வனத்தையும் கெடுக்குதுங்கறாங்க, எனக்கு ரொம்ப உறுத்தலாக இருக்கு" என்றான் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு.

அப்பொழுதுதான் ஏழுமலை மகனைப் பார்த்து உறுதியாக சொன்னார்.

"இந்தா சத்யா. நான் சொல்றதை நல்லா மனசுல வாங்கிக்கோ. நாளைக்கு பொண்ணு பார்க்கப் போகலாம். நீ வர்றே! அதுக்கு நீ ஒத்துக்கலைன்னா அந்த ரூம்ல போய் பாரு. நான் ஒரு சூட்கேஸ் பேக் பண்ணி ரெடியா வச்சிருக்கேன். உங்க அம்மா ஒரு சூட்கேஸ் பேக் பண்ணி ரெடியா வச்சிருக்கா, உமாகாந்தன் கூட கிளம்பி நாங்க போறோம்" என்றார்.

"அப்பா!" என்று அவன் பரிதாபமாகப் பார்த்தான்.

''பின்னே என்னப்பா? நாங்க அவனுக்குன்னு பேசுவோமா உனக்குன்னு பேசுவோமா? எனக்காக அண்ணன் இப்படி குடும்பம் இல்லாம உட்கார்ந் திருக்கறது எனக்கு பிடிக்கலை. எனக்கு கஷ்டமா இருக்கு. உறுத்தலா இருக்குன்னு அவன் சொல்றான் .நீ என்னமோ அவனுக்காக தியாகம் பண்றேன் தியாகம் பண்றேன்னு நீ சொல்றே. நாங்க யாருக்குன்னு பேசறது?'' என்றார் அம்மா.

சத்ய பிரகாஷுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

''அது சரி, அப்படிப் பார்க்கறதுனாலும் நல்ல பொண்ணா பாக்கறோம்பா. நீ உம்ன்னு சொல்லு உனக்குப் பிடிச்ச பொண்ணா கொண்டு வந்து நிறுத்தறோம்.''

''எனக்கு புடிச்ச பொண்ணா?'' என்று அவன் திகைத்துப் பார்க்கையிலேயே ''இன்னைக்கு கோட்டா முடிஞ்சது. அப்புறம் பேசுவோம். இந்தா திலகா சூடா காஃபி கொண்டு வந்து அவனுக்கு கொடு'' என்ற அப்பா எழுந்து ''நான் கோயிலுக்குப் போயிட்டு வரேன்!'' என்று கிளம்பினார்.

'அம்மா' என்று அம்மாவின் முகத்தைப் பார்த்தான். ''அவரையே கேளு தம்பி!'' என்று அம்மா உள்ளே காஃபி போடப் போனார்.

''டேய்!'' என்று அவன் அடுத்தபடியாக உமாகாந்தனை நோக்கிப் போனான்.

''சஸ்பென்ஸ்'' என்று சொல்லிவிட்டு அவனும் கிளம்பி விட்டான்.

அத்தியாயம் - 26

காரை விட்டு இறங்கினார்கள் சத்யாவும் ஏழிசை வல்லபியும்,

ஊட்டிக்குச் செல்லுகிற வழியிலே ஒரு அழகான தனியார் கெஸ்ட் ஹவுஸ் .

அவனுடைய பணக்கார வாடிக்கையாளர் ஒருவரிடம் கேட்டு வாங்கியிருந்தான்.

ஏழிசை வல்லபி 'அப்படியெல்லாம் வரமாட்டேன்' என்று பிடிவாதம் பிடித்தாள். ஆனால், ''இல்லை நான் உங்கிட்ட பேசி ஆகணும்'' என்று அவனும் பிடிவாதம் பிடித்து அழைத்துக் கொண்டு வந்திருந்தான்.

''என்ன உரிமையில் இப்படி என்னைக் கூட்டிட்டு வர்றீங்க!'' என்று சிணுங்கினாள் ஏழிசை வல்லபி.

''எல்லாம் நிச்சயமாயிடுச்சுங்கற உரிமையிலதான்!'' என்று சிரித்தான் சத்ய பிரகாஷ்.

அவள் திரும்பி அவனை முறைத்தாள்.

''நியாயப்படி நான் உங்ககிட்ட பேசவே கூடாது தெரியுமா?'' என்றாள்.

''பேசாதே.!'' என்றான் அவன் குறும்பாக.

''வேண்டாம் சத்யா. நீங்க ரொம்ப மிஸ் பிஹேவ் பண்ணிட்டிங்க, அந்த டாப்பிக் ஆரம்பிச்சீங்க, அவ்வளவுதான்'' என்றாள்.

"இல்லையில்லை. நீ அந்த டாப்பிக்கெல்லாம் ஆரம்பிக்கணும். பேசணும். மனசுல இருக்கற எல்லாத்தையும் இறக்கி வைக்கணும். அதுக்காகத்தான் இங்க வந்திருக்கோம்" என்றான் அவன்.

நேற்று முன்தினம்தான் நிச்சயதார்த்தம் நடந்திருக்கிறது.

அம்மா, அப்பா, உமாகாந்தன், சம்பத் குமார், மைதிலி என்று எல்லோருமாக சேர்ந்து கொண்டு அவனைக் கட்டம் கட்டியதில் வேறு வழியில்லாமல் சத்ய பிரகாஷ் இறங்கி வந்தான். திருமணத்திற்கு ஒப்புதல் அளித்தான்.

உடனடியாக நான்கைந்து நாட்களுக்குள்ளாக நிச்சயதார்த்தம் வைத்தார்கள் பெரியோர்கள்.

"ஆமாம், இவனை டப்புன்னு பிடிச்சுப் போட்டுடணும். விலாங்கு மீன், இல்லைன்னா நழுவிடுவான்." என்று கேலி செய்தான் சம்பத் குமார்.

"அப்படியெல்லாம் நழுவ முடியாமத்தான் உடும்புப் பிடி போட்டுட்டீங்களே எல்லாரும் சேர்ந்து" என்று அப்போதும் கூட லேசான குறை சொல்லும் குரலிலே தான் பேசினான் சத்யா.

"அண்ணே. நீ இப்படிப் பேசறதை அண்ணி கேட்டாங்க, அவ்வளவுதான்" என்றான் உமாகாந்தன்.

"டேய், டேய், அவகிட்ட வேற போட்டுக் கொடுத்துடாதடா" என்றான் சம்பத் குமார். என்னதான் திருமண நிச்சயதார்த்தம் ஏற்பாடு செய்யப் பட்டு நடைபெற்ற போதிலும் கூட ஏழிசை வல்லபி

முகத்தில் பெரிய அளவில் மகிழ்ச்சியைக் காட்டாமல் தான் அழுத்தமாகவே நடமாடிக்கொண்டிருந்தாள்.

அழகுப் பதுமையாக நிச்சயதார்த்தத்திற்காக அவளை அழைத்து வந்து சேரிலே அமர்த்தினார்கள்.

சத்ய பிரகாஷ் முன் வரிசையில் இல்லாமல் பின் வரிசையில் அமர்ந்து கொண்டான். பெரியவர்கள் பேசுகிறோம் என்று இரண்டு பக்கமும் அமர்ந்து கலாட்டா செய்தார்கள்.

செல்வ கணபதி, அவரும் கூட அமர்ந்து கொண்டு கலாட்டா செய்தார்.

"பாருங்க சம்பந்தி. எங்க பொண்ணை தினம் ஒரு கார்ல கூட்டிட்டு போறேன்னு ஓர்க் ஷாப் கார்லயெல்லாம் கூட்டிட்டுப் போகக்கூடாது. சொந்தக் கார்ல தான் கூட்டிட்டுப் போகணும்" என்றார் அவர்.

எல்லாரும் சிரித்தார்கள். சத்ய பிரகாஷ் லேசான சிரிப்போடு இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந் தான்.

உடனே ஏழுமலை "எங்க வீட்ல ரெண்டு பேரு ஓவியம் வரையறாங்கன்னு சும்மா சும்மா ஓவியம் கேட்கக் கூடாது." என்றார்.

அவர்கள் இரண்டு பேரும் உற்சாகமாக உரையாடிக் கொள்வதைப் பார்த்து இளைஞர்கள் கூட கொஞ்சம் அசந்துதான் போனார்கள்.

உறவினர்களில் இரண்டு இளைஞர்கள் பேசிக் கொண்டார்கள். "என்னப்பா பெரியவங்க இந்தப் போடு போடுறாங்க" என்று.

அந்த மாதிரி அன்றைக்கு அவர்கள் கலாட்டா செய்து விட்டார்கள்.

சம்பந்திகள் இவ்வளவு மகிழ்ச்சியாக இருப்பதைப் பார்க்கும்பொழுது சத்ய பிரகாஷுக்கும் கூட மனசு நிறைவாகத்தான் இருந்தது.

சம்பத் குமார் தான் முன்னாடி நின்று எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருந்தான். மைதிலி அவனுக்குத் துணையாக நடமாடிக் கொண்டிருந்தாள்.

இரண்டு பேரும் ஜோடியாக நின்று ஏற்பாடுகள் செய்வதை பார்க்கும்போதே கண்ணுக்கு நிறைவாக இருந்தது.

நிச்சயதார்த்தம் முடிந்து எல்லாரும் போனதற்குப் பிறகு சம்பத் சத்ய பிரகாஷிடம் வந்து 'பேசணுமா?' என்று கண்ணைக் காட்டினான்.

''பேசணும்தான். ஆனா பயமா இருக்கு'' என்றான் சத்ய பிரகாஷ்.

சம்பத் குமார் சிரித்தான் 'ஏன்?' என்றான்.

''இல்லைப்பா. இன்னும் கோபம் அடங்கலை'' என்றான்.

சம்பத் குமார் உடனே ''கோபம் போய் பேசினாத் தாம்பா அடங்கும். வாங்குறதை வாங்கினாத்தான் அது சரியாகும்'' என்றான்.

''அனுபவம் பேசுதாக்கும்'' என்றான்.

''ஆமா, எதுக்கும் நீ போய் டிரையல் பார்த்துடு. அப்படி சரியாகலைன்னா வேற ஏதாவது பண்ணுவோம்'' என்றான்.

''ஏம்பா, இவ்வளவு கோபத்தோட எப்படிப்பா நிச்சயத்துக்கு ஒத்துக்கிட்டாப்ல? என்றான் உண்மையான கவலையுடன் சத்ய பிரகாஷ்.

சம்பத் குமார் வெடிச் சிரிப்பு சிரித்தான். ''உனக்கு இன்னும் லேடீஸ் சைக்காலஜி தெரியாதுப்பா? அவங்களுக்கு வேணும்னா வேண்டாம்னு அர்த்தம், வேண்டாம்னா வேணும்னு அர்த்தம்'' என்றான்.

''ஒரு அகராதியே தனியா தயார் பண்ணனும் போல இருக்கு'' என்று இரண்டு பேரும் சிரித்தார்கள்.

பேசிக் கொண்டே ஏழிசை இருக்கும் அறைக்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டான் சம்பத் குமார்.

''ஏம்மா வல்லபி'' என்று ஏதோ கேட்டுக் கொண்டு உள்ளே வருவதுபோல் போனான்.

''என்னண்ணா?'' என்று உற்சாகமாகத் திரும்பியவள் சம்பத் குமாருக்கு பின்னே நின்ற சத்ய பிரகாஷை பார்த்த உடனே முகத்தை இறுக்கமாக்கிக் கொண்டாள்.

அதைப் பார்த்த சம்பத் குமாருக்கு சிரிப்பாக வந்தது.

சட்டென்று திரும்பி ''யம்மா, இரு, இரு, ஏதோ மறந்துட்டு வந்துட்டேன்'' என்பது போல வெளியே போனான்.

வல்லபி முறைத்தாள்.

"இப்ப எதுக்கு அவரை துணைக்குக் கூட்டிட்டு வந்தீங்க? அவரு வேற டிராமா போட்டுட்டுப் போறாரு" என்றாள்.

"அம்மணி. நான் கூட்டிட்டு வரலை அம்மணி. அவன் தான் என்னைக் கூட்டிட்டு வந்தான்" என்றான் சத்ய பிரகாஷ்.

அவள் சட்டென்று முகத்தை முறுக்கிக் கொண்டாள். "அதானே, அதெல்லாம் வேற தெரியுமாக்கும்" என்றாள்.

சட்டென்று சத்ய பிரகாஷின் முகம் மலர்ந்தது.

இதுவரை முகத்தில் இருந்த இறுக்கம் எல்லாம் மறைந்தது.

"ஆனாலும் இத்தனை கோபம் ஆகாது."

"பேசாதீங்க. கல்யாணம் முடியட்டும். அப்புறம் பேசிக்கலாம் அப்ப இருகு டார்ச்சர்" என்றாள் அவள்.

"இப்ப மட்டும் என்ன டார்ச்சர் இல்லாமயா இருக்கு? அது பேசிக்கலாம். அது நிறைய பேச வேண்டி இருக்கு. பேசிக்கலாம்" என்றான் சத்ய பிரகாஷ்.

"வேண்டாம்" என்று அவள் ஒற்றை விரலை ஆட்டினாள்.

"சரி. வேண்டாம். சரி இப்ப என்ன வேணும் சொல்லு. எதுக்கு இப்படி அடம் பிடிக்கறே?" என்றான்.

"யாரு அடம் பிடிச்சது? நானா? நீங்கதான்" என்றாள்.

அவள் கோபத்தில் இறங்காமலே இருப்பதை பார்த்த வுடன் சத்ய பிரகாஷ் ஓரிரு நிமிடங்கள் பேசிவிட்டு சரி நாளைக்குப் பார்க்கலாம் என்று கிளம்பிவிட்டான்.

சம்பத் குமார் வெளியிலே அமர்ந்திருந்தவன் "என்னாச்சு?" என்று வந்தான்.

"என்னாச்சு, உங்க வீட்டு குழந்தை அழுது. இல்லை. இல்லை. முறைக்குது" என்றான் சத்யா.

இரண்டு பேரும் சிரித்தார்கள்.

"நான் ஒரு ஐடியா கொடுக்கட்டா?" என்றான்.

"எப்படி ஐடியா? பேசாம இருந்தவனை சிக்க வச்சுட்டீங்க" என்றான் சத்யா.

"மறுபடியும் மறுபடியும் சிக்க வச்சுட்டீங்கன்னு சொல்லாதே, அப்புறம் எனக்கே கோபம் வந்துடும்" என்றான் சம்பத்.

"சரிப்பா சரிப்பா... நன்றி சொல்றேம்பா. எப்படி நன்றி சொல்லணும் சொல்லு..."

"எப்படி? இப்போதைக்கு என் அருமைத் தங்கைக் கிட்ட சரண்டர் ஆயிட வேண்டியது.' 'எல்லாம நாம சொல்லிக கொடுக்க வேண்டியிருக்கு" என்றான்.

"எங்கேப்பா? ஊசி நுழையற அளவுக்கு கூட இடம் கிடைக்க மாட்டேங்குது. அப்படியே ஒரு பெரிய தடை போட்டு நிக்க வச்சுட்டாப்ல. தாண்ட முடியலைப்பா" என்றான்.

மறுபடியும் சம்பத் குமார் சிரித்தான். "சரி ஒண்ணு செய்ங்க. நாளைக்கு வேண்டாம் நாளாண்ணைக்கு எங்காவது வெளியில போயிட்டு வாங்க" என்றான்.

"அய்யய்யோ பெரியவங்க ஒத்துக்குவாங்களா?" என்றான்.

"எங்காவது போயிட்டு வாங்கப்பா, மார்னிங் போயிட்டு ஈவினிங் வர்றமாதிரி வாங்க. அப்படி என்ன... உனக்கு எப்படி நடந்துக்கணும்னு தெரியாத ஆளா நீ?" என்றான்.

"இதுவும் சொல்லுவீங்களே?" என்றான் சத்ய பிரகாஷ்.

சம்பத் குமார் சிரித்தான். "என்ன பண்றது? இப்ப நான் உனக்குச் சொன்ன மாதிரி நீ எனக்குச் சொன்னியா? எனக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தியா நீ? ஏதோ ஆல்பத்தை தூக்கிட்டு இன்விடேஷனைத் தூக்கிட்டு நான் அலைந்தேன். போனாப் போகுது விடு. உனக்கு நான் பெரிய கருணை பண்றேன், போய்க்கோ" என்றான்.

சத்ய பிரகாஷ் சிரித்தான்.

அப்படி பெரியவர்களிடம் சம்பத் குமாரே அனுமதி வாங்கிக் கொடுத்துத்தான் அவர்கள் இன்றைக்கு இங்கு வந்திருந்தார்கள்.

வரும் வழியிலும் ஏழிசை வல்லபி அமைதியாகவே வந்தாள்.

"விட்டுப் பிடிக்க வேண்டும்" என்ற எண்ணத்திலே சத்ய பிரகாஷ் காரை அமைதியாகவே ஓட்டிக் கொண்டு வந்தான்.

மலைப் பாதை என்பதால் அதிலே கவனம் செலுத்தி கிட்டத்தட்ட இரண்டரை மணி நேர பயணத்திற்குப்

பிறகு அவர்கள் கெஸ்ட் ஹவுஸ்க்கு வந்து சேர்ந்திருந்தார்கள்.

"டிராவல் பண்ணி வர்றதுகே இவ்வளவு நேரம் ஆயிடுச்சு. இங்கிருந்து த்ரி தர்ட்டிக்கு கிளம்பிடலாம்" என்றான் சத்ய பிரகாஷ்.

"ம்" என்றாள் அவள்.

அந்த கெஸ்ட் ஹவுஸ் போன உடனே அங்கே இருக்கிற வாட்ச் மேன், மற்றும் சமையல் காரர் ஓடோடி வந்து "முதலாளி போன் பண்ணியிருந்தாங்க. உங்க போட்டோ கூட ரெண்டு பேர்த்துதும் அனுப்பியிருந்தாங்க" என்றான்.

சத்ய பிரகாஷ் இதை எதிர்பார்க்கவில்லை.

"ஆமா யாரு வேண்ணா வந்துடக் கூடாதுல்ல. வாங்க வாங்க உட்காருங்க" என்று அவர்களை உபசரித்து விட்டு "காஃபி டீ என்ன சாப்பிடறீங்க?" என்று கேட்டார்கள்.

"காஃபி கொடுங்க!" என்றான் சத்ய பிரகாஷ்.

வெளியே இருந்த புல் வெளியிலே லேசாக வெயில் ஏறிக் கொண்டிருந்த அந்த நேரத்திலே இரண்டு அழகான சேர்களை போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தார்கள் இரண்டு பேரும்.

இங்கிதம் தெரிந்த வேலைக்காரர்கள் பின்னணியிலே இருந்தார்கள்.

போகும் போது "எதுனாலும் கூப்பிடுங்க. மத்தியானம் ஒரு மணிக்கு லஞ்ச் ரெடியாயிடும். அய்யா

உங்களை நல்லா கவனிக்கனும்னு சொல்லியிருக்காங்க'' என்று சொல்லி விட்டு பின்பக்கம் சென்று விட்டான்.

மெதுவாக காஃபியை அருந்தியபடியே ஏழிசை வல்லபியின் முகத்தை ரசனையுடன் பார்த்தான் சத்ய பிரகாஷ்.

அவளது முகத்திலும் வெட்கம் தோன்றி மறைந்தது.

''என்ன கோபம் அப்படி?'' என்றான் அவன் மெதுவாக டாப்பிக்கை தொட்டபடி,

''பேசாதீங்க?'' என்று அவள் மறுபடியும் சீறினாள்.

''என்னடா?'' என்று அவன் குரல் குழைவதைப் பார்த்தவுடன் சட்டென்று எழுந்து அந்த கெஸ்ட் ஹவுஸிலிருந்த அறைக்குள்ளே நுழைந்து விட்டாள் அவள்.

அவனும் எழுந்து பின்னோடு போனான்.

அங்கே இருந்த அறையில் ஜன்னலைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள் ஏழிசை வல்லபி.

பின்னாலேயே சென்ற சத்ய பிரகாஷ் கொஞ்சம் அருகிலே போய் நின்றான்.

''நான் ஆனா தப்பு செஞ்சுட்டேன் தான் இல்லேன்னு சொல்லலை. சாரி.''

''பின்னே நீங்க அப்படி கேட்பீங்களா? அப்படி கேட்பீங்களா?'' என்றாள் அவள்.

சொல்லும் பொழுதே அவள் உதடுகள் துடித்தன. கண்கள் கலங்கியது.

''அப்படி என்னடா கேட்டேன்.? கேட்டுட்டு நானே ரொம்ப வருத்தப்பட்டேன். அது ஏன் கேட்டேன் அப்படின்னு யோசிக்க மாட்டியா?''

''எனக்கு அதெல்லாம் வேண்டாம். நீங்க கேட்டது எவ்வளவு பெரிய தப்பு தெரியுமா'' என்றாள் அவள்.

''தப்புதாம்மா. அப்படிக் கேட்டுட்டு நான் எத்தனை நாள் தூங்காம இருந்தேன் தெரியுமா? எப்படி மன்னிப்பு கேட்கனும் சொல்லு'' என்றவன் சட்டென்று மண்டியிட்டான்.

''மன்னிச்சுக்கங்க தேவி'' என்றான் பாதி உண்மையும் பாதி விளையாட்டுமாக,

உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்த அவளது முகத்திலே லேசான புன்னகை அரும்பியது.

இதுதான் சமயம் என்று மெதுவாக அவன் அடுத்த கட்டத்திற்கு தாவினான்.

அத்தியாயம் -27

குறும்பாகச் சிரித்தான் சத்ய பிரகாஷ்.

பொய்க் கோபத்துடன் அவனை முறைத்தாள் ஏழிசை வல்லபி. ''வேண்டாம், வேண்டாம், சிரிச்சு சிரிச்சு மயக்கற இந்த சித்து வேலையெல்லாம் வேண்டாம்'' என்றாள் அவள்.

அவன் ''ஓகே, ஓகே, நான் இப்படி எதிர்ல உட்கார்றேன். நீ இங்க உட்காரு'' என்றான். அவன் சட்டென்று அப்படி ஒத்துக் கொண்டது அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது.

அவளுக்குத் தன் மேலேயே கோபம் வந்தது. பக்கத்தில் வந்தால் விரட்டுகிறோம். விலகி இருந்தாலோ வருத்தமாக இருக்கிறது. இது என்னடா மனப்போக்கு என்று அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

''சரி, இசை, அட்லீஸ்ட் இப்படி பக்கத்திலயாவது உட்காரு'' என்றான் சத்யா.

'சரி' என்றவள் அவன் அருகிலே அமர்ந்து கொண்டாள்.

''வேண்டாம், வேண்டாம், நான் எதிரிலேயே உட்கார்றேன். நான் சில விஷயங்கள் சொல்லணும். அதை நீ மனசில வாங்கிட்டு அப்புறமா நான் ஏன் இப்படி செஞ்சேன்னு ஒரு முடிவுக்கு வா'' என்றான்.

''ஒண்ணும் வேண்டாம். நான் எதிரிலே உட்கார்றேன். பொய்ச் சமாதானமெல்லாம் சொல்ல வேண்டாம். நீங்க என்னைக் காயப்படுத்தினது உண்மைதானே?'' என்றாள் அவள்.

''காயப்படுத்தினது உண்மைதான். ஏன்னா நோக்கமே அதுதான்'' என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள். ''ஆமா வல்லபி, காயப்படுத்தி அந்தக் கோபத்துல யாவது நீ விலகினாக் கூட பரவாயில்லைன்னு நினைச்சேன்'' என்றான்.

அவள் வாயைத் திறந்து ஏதோ சொல்ல முயற்சிக்க... ''இரு, இரு, ஏன் அப்படி நினைச்சேன்னா அட்லீஸ்ட் உன் லைஃபாவது நல்லாயிருக்கணும் அப்படின்னு நினைச்சேன்'' என்றான்.

அவள் அமைதியாக அவனைப் பார்த்தாள்.

ஏதோ ஒரு பெரிய விஷயம் சொல்லப் போகிறான் என்பது அவளுக்குப் புரிந்தது.

''ஆனால் இன்னொண்ணையும் புரிஞ்சுக்கோ. எனக்கு உன் மேல் நெஞ்சு கொள்ளாத பிரியம் இருக்கு. என் மனசு பூராவும் நீதான் இருக்கே. நீ இல்லாத ஒரு வாழ்க்கை எனக்கு நரகமாத்தான் இருக்கும்.ஆனாலும் நான் ஏன் அப்படி செஞ்சேன் அப்படின்னா?'' என்றான்.

அவள் மூச்சைப் பிடித்துக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தாள். ''உன் வாழ்க்கையும் நரகம் ஆயிடக் கூடாது அப்படிங்கறதுக்காகத்தான்.''

''போதும், சத்யா சும்மா நீங்களே உங்களைப் போட்டு வதைச்சுக்கறீங்க. தேவையில்லாம ஏமாத்திக் கறீங்க'' என்றாள்.

''இல்லை. நான் சில விஷயங்கள் சொல்றேன். நீ அதைக் கேட்டுட்டு அப்புறம் சொல்லு. ''அப்போ உமா சின்னப் பையன், இல்லை இல்லை சின்னப் பொண்ணு. எப்படி சிலதையெல்லாம் சொல்றதுன்னு எனக்கு தெரியலை.'' என்று சற்று முகம் சிவந்தான்.

பிறகு ''இல்லை, பரவாயில்லை, நீ என் லைஃப் பார்ட்னர் ஆகப் போறே. அதனால உங்கிட்ட மனசு விட்டுப் பேசலாம். என்னைத் தப்பா நினைக்க மாட்டியில்லே'' என்றான்.

''இல்லை, சொல்லுங்க நான் பூரா அடலஸ்ன்ட் குழந்தைங்ககிட்ட பழகிட்டிருக்கேன். பல விஷயங்

கள்லே நான் அவங்களுக்கு நேரடியாகவும் மறை முகமாகவும் அறிவுரை சொல்றது உண்டு. அதனால நீங்க என்ன சொன்னாலும் நான் புரிஞ்சுக்குவேன்'' என்றாள்.

''அப்படின்னா சரி!'' என்று அவன் மகிழ்ச்சியானான். ''அப்ப சின்னப் பொண்ணு. உமா மகேஸ்வரின்னு பெயர். ப்ளஸ் டூ படிக்கிறா. ஆனா அப்பதான் அவகிட்ட அந்த சேஞ்ச் வருது. எப்பப் பாரு பசங்களோடதான் விளையாடுவா அதைக் கூட நாங்க முதல்ல பெரிசா எடுத்துக்கலை. ஏன்னா சில குழந்தைங்க மேன்லியா இருப்பாங்க. அவங்களுக்கு பசங்களோட கம்பெனி பிடிக்கும். அதனால நாங்க அதை பெரிசா எடுத்துக்கலை. ஷி வாஸ் எ வெரி குட் பிளேயர். நல்ல பிளேயர் அவ. நல்ல ஆக்டிவா இருப்பா. அதனால அதையெல்லாம் என்கரேஜ் தான் பண்ணினேன். ஆனா ப்ளஸ் டூ ஃபர்ஸ்ட் இயர் படிக்கும்போதே அவளிடத்தில் கொஞ்சம் கொஞ்சமாக சேஞ்ச் வந்தது'' என்றான்.

அவள் ''ஓகோ'' என்று கேட்டுக் கொண்டாள்.

''ஆமாம், என்னோட சட்டை பேண்ட் எல்லாம் எடுத்துப் போட்டுப்பா. ஜீன்ஸ் போட்டுப்பா. ஷர்ட்டை மடிச்சு விட்டுப்பா. என்னென்னமோ பையனை மாதிரி பண்ணிட்டிருப்பா. ஷாட் ஹேர் தான் வச்சுப்பேம்பா. சரி நாங்க அதையெல்லாம் பெரிசா எடுத்துக்கலை.ஆனா அம்மா மட்டும் கண்டிச்சுட்டே இருப்பாங்க. அதுலயும் அவளுக்கு கோபம் வந்தது.''

.....!

''ப்ளஸ் டூன்னு வரும்போது கிட்டத்தட்ட முடிக்கும் போதுதான் ஹெச்.எம். என்னைக் கூப்பிட்டாங்க. ஏன்னா அந்த மாதிரி ஒரு சில விஷயங்கள் நடந்திருக்கு. இவளுக்கு லேடிஸ் டாய்லட்டுக்கு போறதுக்கே புடிக்காதாம். ரொம்ப நேரம் வெயிட் பண்ணி எல்லா பெண்களும் வந்ததுக்கப்புறம்தான் போயிட்டு வருவா.அப்ப இருந்தே அவளுக்குள்ள ஒரு ஃப்ரஸ்ட்ரேஷன் ஆரம்பிச்சிருக்கு.'' என்றான்.

அவள் கவனமுடன் கேட்க ஆரம்பித்தாள்.

''நல்லா யோசிச்சுப்பாரு இசை. இந்த மாதிரி கொடுமையெல்லாம் யாருக்குமே வரவேண்டாம். அவளுடைய ஹார்மோன் குழப்பமாகிறது. அவளுக்குப் பெண்ணாயிருக்கப் பிடிக்கலை. ஆனா பெண்ணுக் குண்டான எல்லா அவஸ்தைகளும் இருக்கு. நான் என்ன சொல்றேன்னு புரியுதா?'' என்றான்.

அவள் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு 'புரியுது.' என்றாள்.

''அந்த மாதாந்திர நாட்கள்ளே அவ்வளவு கடுமை யான கோபத்துல இருப்பா. ஏன்னா அவளுக்குப் பிடிக்காது. உடலும் மனமும் வேற வேறயா இருக்கு. மனசு சொல்றதை உடல் கேட்க மாட்டேங்குது. உடலோட இயக்கத்தை மனசும் ஏத்துக்க மாட்டேங்குது. எவ்வளவு ஒரு கொடுமையான சூழ்நிலைன்னு நினைச்சுப்பாரு'' என்றான்.

''ஆமாங்க. கஷ்டம்தான்''

நல்ல வேளையா நான் சைக்கியாலஜிஸ்டை பார்த்தேன். டாக்டர்ஸை பார்த்தேன், தர்மோ புராடக்ட்ஸ்ன்னு சொன்னாங்க. அதனால நான் கொஞ்சம் தெளிவா இருந்தேன். அவளுக்கு ஃபுல் சப்போர்ட் கொடுத்தேன்'' என்றான்.

ஏழிசை வல்லபி அவனைப் பெருமையுடன் பார்த்தாள்.

''நிஜமாவே நீங்க கிரேட்டுங்க'' என்றாள்.

''வேற வழி இல்லை, ஏன்னா நானும் ஆதரவு கொடுக்கலைன்னா ஒண்ணு அவள் தற்கொலைக்கு முயற்சி பண்ணிட்டிருந்திருப்பா. இல்லைன்னா இப்படித்தான் வெளிய போய் அங்கே பிரச்சினைகள்ல மாட்டிட்டிருந்திருப்பா. ஏன்னா இந்த மாதிரி மாறினவங்களுக்கு இரண்டே இரண்டு வழிதான். இந்த டிரான்ஸ் ஜென்டர் பீப்பிளை ரெண்டு விதமா சொல்றாங்க. ஒண்ணு வந்து ஃபீமேல் டு மேல் இன்னொண்ணு வந்து மேல் டு ஃபீமேல். இந்த மேல் டு பீமேல்ல இருக்கறவங்களெல்லாம் குரூப்பா இருக்காங்க. அவங்களுக்கு இவங்கள மாதிரி பிரச்சினை இல்லை. ஆனா இந்த ஃபீமேல் டு மேல் குருப்பா இல்லை. அங்கங்கே தனியாத் தான் இருக்காங்க. எந்த ஃபேமிலில ஏத்துப்பாங்க சொல்லு பார்க்கலாம். கல்யாணம் பண்ணி வக்கத்தான் பார்ப்பாங்க. ஆனால் மறுபடியும் பிரச்சினைதான் வரும்.''

''புரியுதுங்க'' என்றாள் அவள்.

''நல்லவேளையா உமாவுக்கு.....!'' என்றவன் முகம் சிவக்க ''கொஞ்சம் என்னைத் தப்பா நினைக்க மாட்டியே'' என்றான் மறுபடியும்.

''இல்லை, பரவாயில்லை சொல்லுங்க'' என்றாள் அவள்.

''இந்த மார்பக வளர்ச்சியெல்லாம் ஹார்மோன் ப்ராப்ளத்தினால் கம்மியாகவே இருந்தது. அதனால பார்க்கறதுக்கு கொஞ்சம் பாயிஷாத்தான் இருந்தா. அதனால சில பிரச்சினைகளில் இருந்து தப்பிச்சா'' என்றான்.

''அதற்குப் பிறகு டாக்டர்ஸோட அட்வைஸ் படி சில ஆபரேஷன்ஸ் பண்ண வேண்டியிருந்தது. அதற்குப் பிறகுதான் அந்த மாதாந்திர பிரச்சினைகள்.....!'' என்று இழுத்தான்.

''ஆமா, அதுக்காக சில ஆபரேஷன்கள் பண்ண வேண்டியிருந்தது.''

ஏழிசை வல்லபி ''என்னங்க இதுக்கும் நீங்க கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்றதுக்கும் என்னங்க'' என்றாள்.

''இல்லை வல்லபி, நல்லா யோசிச்சுப் பாரு. லைஃப் லாங்கா இவளுக்கு ஏதாவது சப்போர்ட் கொடுத் தாகணும். ஐ ஆம் சாரி. இவனுக்கு இப்ப சப்போர்ட் கொடுத்தாகணும்'' என்றான்.

வல்லபி சொன்னாள் ''இங்க தான் நீங்க தப்பு பண்ணிட்டீங்க. உமா முதல்ல லெட்டர்ல என்ன

எழுதியிருந்தாப்ல. நாங்க மத்த மனிதர்கள் போல இல்லைதான். ஆனா எனக்கு மூச்சு முட்டுதுன்னு எழுதியிருந்தாரு ஞாபகம் இருக்கா?'' என்றாள்.

''ஆமாம்'' என்று அவன் சிந்தனையுடன் அவளைப் பார்த்தான்.

''அதுக்கு என்ன அர்த்தம் தெரியுமா? நாம அவருக்கு சப்போர்ட் கொடுக்கறோம். சப்போர்ட் கொடுக்க றோம்னா அதை ஏத்துக்கறாங்க. அவங்க அனுதாபத்தை விரும்பறது இல்லை. ஆனா நீங்க என்ன பண்ணிட்டீங்கதியாகங்கற பேர்ல ரொம்ப அனுதாபம் காமிச்சு அவரைக் கஷ்டப் படுத்திட்டீங்க.''

அவன் வேதனையுடன் அவளைப் பார்த்தான்.

''என்னோட அன்பு உனக்குப் புரியலையா?'' என்றான்.

''அய்யோ, புரியுதுங்க. ஆனா அன்புமே அழுத்தமா இருக்கக் கூடாது. நீங்க உண்மையா அவர் மேல அன்பு வச்சிருக்கீங்கன்னா அவரை இயங்க விடுங்க. பின்னாடி இருந்து சப்போர்ட் கொடுங்க. இப்ப வெளியே போனாரு. இங்கிருந்து அவருக்குத் தேவையான பணம் இருக்கற மாதிரி பார்த்துட்டீங்க. அது மாதிரியான புரொட்டெக்ஷன் மட்டும் கொடுத்தாப் போதும். அதைத்தான் அவரு எதிர்பார்க்கிறாரு.''

இத்தனைக்குப் பிறகும் சத்ய பிரகாஷ் சமாதானம் அடையவில்லை. ''இல்லை, வல்லபி, நான் உன்கிட்ட சொல்ல மறந்துட்டேன். இல்லை மறைச்சுட்டேன்'' என்றான்.

''இன்னும் பாக்கி இருக்கா?'' என்றாள் வல்லபி.

''ஆமாம்'' என்றான்.

''நான் ஒரு புஸ்தகத்தில படிச்சேன். ஷாவினின்னு சொல்லி ஒரு ஸைக்காலஜிஸ்ட் எழுதியிருந்தாங்க. இந்த மாதிரி ரெண்டாவது குழந்தைக்கு ஆகுதுன்னா. அதுக்கு காரணம் முதல் குழந்தைதானாம்'' என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள்.

''என்னங்க சொல்றீங்க?'' என்றாள்.

''ஆமாம், ஒரு குழந்தை வயித்துல இருக்கும் போதே, கருவில் இருக்கும்போதே மூத்த குழந்தை அடுத்த குழந்தையோட ஜீன்ல கன்ஃபியூஸ் பண்ணி விட்டுடு மாம். அப்படி ஆகறதுனால தான் இப்படி வர்றதுக்கு வாய்ப்பு இருக்கு. ஏன்னா அந்த முதல் குழந்தை வந்து தானே டாமினன்ட்டா இருக்கணும்னு நினைக்குமாம்'' என்றான்.

வல்லபி கொஞ்சம் திகைத்துத்தான் போனாள்.

''ஆமா, நான் கூட அந்த மாதிரி ஏதோ கட்டுரை படிச்சிருக்கேன்'' என்றாள்.

''அதுதான். என்னுடைய குற்ற மனப்பான்மைக்குக் காரணம்'' என்றாள்.

வல்லபி குபீரென்று சிரித்தாள்.

''சிரிக்காதே வல்லபி'' என்றான் சத்ய பிரகாஷ்.

அவள் சிரிப்பை அடக்கிக் கொண்டாள். ''ஓகே, ஓகே, என்றவள் ஏங்க அது கான்ஷியஸ்ஸா உங்களுக்கு அறிவு தெரிஞ்சு நீங்க பண்ணின விஷயம் இல்லை. சம்திங்

பியான்ட் யுவர் லிமிட். அதுக்கெல்லாம் நீங்க பொறுப்பு எடுத்துக்க முடியாதுங்க.சரி, அப்படியே இருந்தாலும் இப்ப உமாகாந்தனுக்கு என்னென்ன வேணுமோ எல்லாம் செஞ்சுட்டீங்க இனிமே..''.

''ஓகே, எனக்குப் புரிஞ்சது'' என்ற அவன் தொடர்ந்தான்.

''இனிமே அவரை ஃப்ரியா விட்டுடுங்க. ஆனா என்னுடைய கண்காணிப்பு பாசம், அரவணைப்பு, எல்லாம் அவங்கிட்ட இருக்கற மாதிரி பார்த்துக்கணும். அதானே'' என்றான்.

''ஆமாங்க.''

''இது உமாகாந்தன் மாதிரி டிரான்ஸ்ஜென்டர் பீப்பிள்க்கு மட்டும் இல்லை. ஹாண்டிகேப்ட் மாற்றுத்திறனாளிகள்னெல்லாம் சொல்றோம் இல்லை. எல்லாருக்குமே பொருந்தும். அவங்க யாருமே அனுதாபத்தை விரும்பறது இல்லை. அவங்களை நம்மைப் போல உங்களைப் போல சக மனிதர்களா நடத்துங்க'' என்றான்.

''அது உண்மை தான்.'' என்று ஏற்றுக் கொண்டான் சத்ய பிரகாஷ்.

பல நாட்களுக்குப் பிறகு அவன் முகத்திலே இருந்த டென்ஷன் வடிந்து ஒரு இளக்கம் முகத்தில் தோன்றுவதை ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் வல்லபி.

அவன் முகம் அவள் பார்வை பட்டு மாறியது.

''ஓ! என் மேல கருணை பிறந்திருச்சாக்கும்?'' என்றான்.

''இன்னும் ஒண்ணும் கருணை பிறக்கலை. இதுக்கும் என்னை கடுப்பேத்தினதுக்கும் என்ன சம்பந்தம்.?''

''ஆமா ஒரு நிபந்தனை மாதிரி உங்க அண்ணன் போட்டானா என்று நான் கேட்டேன்ல. அப்ப நிபந்தனையா உன்னைப் பிடிச்சு எனக்கு கல்யாணம் பண்ணி வைப்பாங்களான்னு உனக்கு கோபம் வருமில்லே. அந்தக் கோபம் உன்னுடைய சுயமரியாதையை பாதிக்குமில்லே. அதனால எம் மேல வெறுப்பாகி விலகிப் போவேன்னு நினைச்சேன்'' என்றான்.

அவள் இழுத்து ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு கோபமாகவும் பார்த்தாள்.

ஸ்ட்டென்று எழுந்தாள்.

அவனுடைய இரு காதுகளையும் பிடித்து முறுக்கித் தன் அருகே இழுத்தாள். ''இவ்வளவெல்லாம் கிராஸா வேலை செய்யுமா? புத்தி... குறுக்குப் புத்தி'' என்று செல்லமாக கொஞ்சிக் கொண்டே.

அவனைத் தன் பக்கமாக இழுத்தாள். அவன் முகத்தை நிமிர்த்தி அவன் முன் நெற்றியிலே தன் இதழ்களைப் பதித்தாள்.

இதைச் சற்றும் எதிர்பாராத சத்ய பிரகாஷ் தானும் வளைந்து கொடுத்தான்.

"ஐய்யோ, ஐய்யோ, மலையைக் கிள்ளி எலியைப் பிடிக்கிறவர் நீங்க. எதையோ நினைச்சுட்டு எதையோ இடிக்கிறது" என்று சிரித்தாள் ஏழிசை வல்லபி.

அவன் சற்றே வெட்கத்துடன் அவளைப் பார்த்தான்.

"பின்னே என்னங்க? இப்படி என்னைக் கோபப் படுத்தினா நான் விலகிடுவேனாம். சரி விலகிட்டா.....? அதுக்கப்புறம் ஐயா ரொம்ப சந்தோஷமா இருப்பீங்களா?" என்றாள்.

"அதுதான் முடியலையே?" என்றான் அவன்.

"மைதிலிக்குப் புரிஞ்சது, எங்க அண்ணனுக்கு புரிஞ்சது, எனக்குப் புரிஞ்சது உங்களுக்கு புரியலை யாக்கும்" என்றாள்.

"நல்ல வேளையா இத்தனை பேருக்கும் புரிஞ்சது னால நான் தப்பிச்சேன்" என்றவன் சட்டென்று எழுந்து அவளைத் தன்னருகே இழுத்தான்.

"சீக்கிரம்....! சீக்கிரம் கல்யாண ஏற்பாடு பண்ணச் சொல்லு. இதுக்கு மேல தாங்காது" என்று அவளை நோக்கி குனிந்தவன், தலை து பரிசுகளை வாரி இறைத்து விட்டு ஓரிரு நிமிடங்களில் தன்னை மீட்டுக் கொண்டான்.

"வேண்டாம். ரூமுக்குள்ளே இருந்தா சரிப்படாது. வெளியில வா." என்று சொல்லி விட்டு வராண்டாவிலே இருந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான்.

முகத்தில் சிரிப்பு தேங்கியிருந்தது.

அவளும் தன்னை மீட்டுக் கொண்டு வெளியே வருவதற்கு ஓரிரு நிமிடங்கள் ஆயிற்று. ஆனால் அப்போது இருவர் முகங்களிலும் அப்படி ஒரு வெட்கமும் மகிழ்ச்சியும் பொங்கி வழிந்தது.

அத்தியாயம் - 28

"அப்பாடா, கோயிலுக்குப் போயிட்டு வந்தாச்சு" என்றான் சம்பத் குமார்.

மைதிலி பக்தி மயமாக இருந்தாள். அவர்கள் இப்பொழுது கோவையில் இருந்து ஒரு மணி நேர பயணத்தில் இருந்த ஒரு கோயிலில் இருந்தார்கள்.

கருவலூர் மாரியம்மன் கோயில் என்று அந்தக் கோவிலுக்குப் பெயர்.

எங்கேயாவது வெளியிலே அழைத்துச் செல்ல வேண்டும் மனைவியை என்று திட்டம் போட்டுக் கொண்டிருந்தான் சம்பத் குமார்.

நண்பர்கள் யாரோ சொன்னார்கள். இந்தக் கோவிலில் தேர்த் திருவிழா நடக்கிறது அழைத்துக் கொண்டு போ என்று.

சம்பத் குமாருக்கு கிராமங்களில் நடக்கிற திருவிழாக் களுக்கு செல்வது என்றால் மகிழ்ச்சி. அதனால் காரை எடுத்துக் கொண்டு மனைவியை அழைத்துக் கொண்டு வந்து விட்டான்.

கோவிலைச் சுற்றி விட்டு உள்ளே இருந்த அம்மனை சுற்றி விட்டு வெளியே வந்தார்கள்.

மாலை நேரமாகப் பார்த்து அங்கே வந்திருந்தார்கள்.

முதலில் கோவிலுக்கு போயிடலாம். கோவிலுக்கு போயிடலாம் என்று சொல்லிக் கொண்டு வந்தான் சம்பத் குமார்.

ஏன் அப்படிச் சொல்லுகிறான் என்பது அவளுக்கு புரியவில்லை.

கோவிலில் பூஜையை முடித்துவிட்டு வெளியே வந்தார்கள்.

தேர் புறப்படுவதற்குத் தயாராக நின்று கொண்டிருந்தது. பக்கவாட்டில் இருந்த படிகளில் ஏறி உயரத்துக்குப் போய் அம்மனை தரிசித்து விட்டு வந்தார்கள்.

மைதிலி சிறுவர்கள் விளையாடுகிற விளையாட்டுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வமாக இருந்தாள்.

அவன் அதை ரசித்துக் கொண்டான்.

"இந்த மாதிரி இடங்கள்லேதான் என்ஜாய் பண்ண முடியும்" என்றாள் மைதிலி.

அவன் குறும்பாகச் சிரித்தான். "நான் கூட இருந்தா எங்க வேண்ணா என்ஜாய் பண்ணலாம்" என்றான்.

அவள் சிரித்து விட்டு "ஆமாம் கட்டுச் சோத்துல எலியை வச்சுக் கட்டின மாதிரி" என்றாள்.

அவளுடைய உதாரணத்துக்கு அவன் சிரித்தான்.

"கடைசியில என்னை நீ இவ்வளவு கேவலப்படுத்திட்டியே?" என்றான்.

"நான் ஒண்ணும் கேவலப்படுத்தலை. நீங்க அவ்வளவு கொடைச்சல் தெரியுமா?" என்றாள்.

"தாங்க்ஸ் ஃபார் தி காம்ப்ளி மெண்ட்" என்று சற்றும் வெட்கமே இல்லாமல் சிரித்தான் அவன்.

மைதிலியும் சிரித்து விட்டாள்.

வேண்டும் என்றே கூட்டத்திற்கு நடுவிலே அவளை அழைத்துக் கொண்டு போனான். "அந்தப் பக்கம் இடம் இருக்கில்லே. அங்கே போலாமில்லே?" என்றாள் அவள்.

"இங்கதான் சௌகரியம்" என்றான்.மெல்ல இழைந்தான்.

அவனுடைய இந்த மாதிரிக் குறும்புகளை ரசித்துக் கொண்டாள் மைதிலி.

"இங்கே யாரோ ஃப்ரண்டு அன்னதானமெல்லாம் பண்றாருன்னு சொன்னீங்க?!" என்றாள்.

"வா இந்தத் தேரோடவே கொஞ்ச தூரம் போகலாம். இந்த மாதிரி என்ஜாய்மெண்ட் எல்லாம் நகரத்துல அப்பப்ப கிடைக்காது. இது வேற மாதிரி இருக்கும்." என்று அழைத்துக் கொண்டு போனான்.

சற்று நேரம் அவனுடைய தோளை அணைத்துக் கொண்டு அவளும், அவளை அணைத்துக் கொண்டு அவனும் தேர்க் கூட்டத்தோடு போய்விட்டு வந்தார்கள்.

அதற்குப் பிறகு காரை எடுத்துக் கொண்டு அந்த ஊருக்கு வெளியிலே ஒரு பகுதியிலே நண்பர்கள்

குழுவாக சேர்ந்து நடத்துகிற அந்த அன்னதானத்துக்குப் போய் சேர்ந்தார்கள்.

"இரண்டு நாளைக்குத் தொடர்ந்து அன்னதானம் நடக்கும்" என்றான் அவன்.

போவதற்கு முன்பாக வழியிலே இருந்த இன்னொரு பெரிய தோட்டத்தில் உரிமையாளரிடம் சொல்லி விட்டு ஒரு ஓரமாக அமர்ந்து கொண்டார்கள்.

அவரும் தெரிந்தவர்தானாம். அவன் கொஞ்ச நாளைக்கு முன்னே இந்தப் பகுதியிலே இருந்த வங்கியிலே வேலை செய்தவனாம். அதனால் அந்தப் பகுதியில் இருக்கிற மக்களை எல்லாம் அவனுக்குத் தெரிந்திருந்தது.

அந்த நிலத்துக்காரர் அவர்களை நன்றாக உபசரித்தார்.

பிறகு புதிதாக கல்யாணம் ஆனவர்கள் என்பதைத் தெரிந்து கொண்டவர் போல "பேசிக் கிட்டிருங்க தம்பி" என்று தனிமை கொடுத்துப் போனார்.

"இப்ப என்ன ஒரே ரொமாண்டிக் மூடு" என்று சிரித்தாள் மைதிலி.

"ஆமாம், நீ எங்கேயும் வெளிய வரமாட்டேம்பே. இப்ப கூட இங்க வரோம்னு சொல்லிட்டா வந்தோம். வேற எங்கேயோன்னு சொல்லவும் கிளம்பினே" என்றான்.

"ஆமா, வீட்டுல ஒரு வயசுப் புள்ளை இருக்குல்ல. பார்த்துத் தான் நடந்துக்கணும்" என்றாள் மைதிலி.

"நீ வேற அந்த வயசுப் புள்ளையே பார்த்துப் பரிதாபப்பட்டு அண்ணா, அண்ணியை எங்காவது கூட்டிட்டு போயிட்டு வாண்ணா அப்படின்னு ரெக்கமண்ட் பண்றா" என்று சிரித்தான் சம்பத் குமார்.

"சரி, சரி, இப்ப இப்ப எதுக்கு தனியா வளைச்சுக் கட்டியிருக்கீங்க?" என்றாள் அவள்.

"ஆமா, இங்கே உன்னை உட்கார வச்சு எந்தக் கோட்டையை பிடிக்க?" என்றான் அவன்.

"இல்லை, இல்லை, எனக்குத் தெரியும். ஏதோ பேசத் தானே கூட்டிட்டு வந்திருக்கீங்க" என்றாள் அவள்.

"இல்லை.... மைதிலி வல்லபிகிட்ட ஏதாவது சொன்னியா?" என்றான் அவன்.

"நானா?" என்றாள் அவள்.

"ஆமா, போனாப் போகுதுன்னுதான் நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேனாம். அப்படின்னு சொல்லியிருக்கியா என்ன?"

அவள் ஒரிரு தினங்களுக்கு முன்பாக ஏழிசை வல்லபியிடம் விளையாட்டுப் போல அப்படி சொல்லித் தான் இருந்தாள். அதற்குப் பிறகு ஏழிசை வல்லபி கூட சம்பத் குமாரை கண்டித்திருந்தாள்.

"ஏன் மைதிலி, இரண்டு பேரும் இருக்காங்க. அடக்கி வாசிக்கணும் அடக்கி வாசிக்கணும்னுட்டு இப்ப என்னைப் போய் போட்டுக் கொடுத்திருக்கியே?" என்றான் அவன்.

"பின்னே எனக்கென்னமோ ரொம்பத் தெரிஞ்சவங்க குடும்பம் அப்படின்னு நான் சொன்னதுனாலதான் போனாப் போகுதுன்னு நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டிங்களோ அப்படின்னு ஒரு எண்ணம்" என்றாள்.

அவன் சிரித்தான்.

"மக்கு, அப்படியெல்லாம் கிடையாது. உண்மை என்ன தெரியுமா?" என்றான்.

அவள் கண்களை அகல விரித்துக் கொண்டு அவனைப் பார்த்தாள்.

"உண்மை என்னன்னா உங்க அண்ணன் கிட்ட இருந்து ஜாதகம் கொண்டு போகும்போதே நான் என்ன பண்ணினேன் தெரியுமா?"

அவள் சுற்று முற்றும் பார்த்தாள்.

"என்னத்தைப் பார்க்கறே?" என்றான்.

"இல்லை கிளி ஜோசியக் காரங்க யாராவது இருந்தா ஜோசியம் கேட்டுடலாம்னு பார்க்கறேன்".

அவன் சிரித்தான்.

"முதல்ல எங்க குடும்ப ஜோசியர் கிட்ட போய் நம்ம ரெண்டு பேர் ஜாதகத்துக்கும் பொருத்தம் பார்த்தேன்" என்றான்.

அவள் "நிஜமாவா?" என்றாள்.

"ஆமா மைதிலி, முதல் வேலையா பொருத்தம் பார்த்து வச்சுக்கிட்டு அப்புறமா அப்பா கிட்ட ஆரம்பிக்கலாம்னு நினைச்சே. அதுக்குள்ள அவரு

அலையன்ஸ் கொண்டு வந்துட்டாரு. எனக்கு ஒண்ணும் பண்றதுக்கு வழியில்லாம போச்சு. எங்கே அந்த மாப்பிள்ளை வந்து பார்த்து பிடிச்சிருக்குன்னு சொல்லுவானோன்னு கடுப்புல தான் இருந்தேன்.நல்ல வேளையா அவன் வரலை" என்றான்.

மைதிலியின் முகம் மலர்ந்தது. "அப்படியா சொல்றீங்க?" என்றாள்.

"ஆமாடா, நிஜமாத்தான்.அண்ணனுக்கு கல்யாணம் ஆகலைன்னு வருத்தப் பட்டே பாரு அன்னைக்கே தெரிஞ்சு போச்சு. இந்தப் பொண்ணைத் தான் நாம் கல்யாணம் பண்ணிக்கணும்னு. ஆனா உடனே சொன்னா நீ நம்புவியோ என்னமோ? அதுக்குள்ளே ஜாதகம் பார்த்து வைக்கணும்னு தான் நினைச்சேன். அதுக்குள்ள பிரச்சினை வரவும் பட்டுன்னு போட்டுத் தள்ளிட்டேன்"

அவள் சிரித்தாள். "ரொம்பத் தான் போங்க" என்றாள்.

அதற்கான பரிசுகள் அவனுக்குக் கிடைத்தன.

"ஆமா, எல்லாம் கொஞ்சம் லேட்டாத்தான் புரியுது" என்றவன் "வா கொஞ்ச நேரம் நடந்துட்டு வரலாம்" என்றவன் அவளுடன் கை கோர்த்துக் கொண்டு லேசான இருள் சூழ்ந்த அந்த வேளையில் சற்று தூரம் நடந்தான்.

இரண்டு பக்கமும் தென்னந்தோப்புகள் இருக்க ஒரு வண்டிப்பாதையாக அங்கே ஒரு தடம் போனது. அதில் நடப்பதற்கு இனிமையாக இருந்தது.

"இல்லை மைதிலி, இதுவும் கூட தெரியலையா? என்று ஒரு பார்வை பார்த்தியே அன்னைக்கு கவுந்தவன் தான்" என்றான்.

"அதெல்லாம் சரிதான். இப்போ சத்யாண்ணாவும் வல்லபியும் என்ன பண்ணிட்டிருப்பாங்க?" என்றாள்.

"அவங்க என்னத்தையோ பண்ணிட்டுப் போறாங்க. நம்ம ரெண்டு பேரும் நம்ம வேலையைப் பார்ப்போம்" என்றான்.

மைதிலி அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

"இல்லைங்க, எனக்கும் கொஞ்சம் கவலை இருக்கு" என்றாள்.

"என்ன கவலை?" என்றான் அவன்.

அவள் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

"எனக்கு நல்ல வாழ்க்கை அமைஞ்சுடுச்சு. சத்யா அண்ணாவுக்கும் அவர் விருப்பப்படியே வல்லபி கிடைக்கப் போறாங்க. ஆனால்," என்று இழுத்தாள்.

நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள்.

அந்த அரை குறை வெளிச்சத்தில் அவள் கண்களிலும், முகங்களிலும் தெரிந்த பாவம் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது.

குரல் குழைந்தது. "ஏய், என்ன இந்த இடத்தில் வச்சு இப்படிப் பார்க்கறே?" என்றான்.

"இல்லைங்க, இதுக்கு அர்த்தம் வேற" என்றாள்.

"சொல்லுடா!" என்றான் அவன் குழைந்த குரலில்.

"உமாகாந்தனை நினைச்சாத்தான் எனக்குக் கவலையா இருக்கு" என்றாள் அவள்.

சம்பத் குமார் மீண்டும் ஒரு பெருமூச்சு விட்டான்.

"எனக்கும்தான் ஆனா, அவன் தெளிவா இருக்கான். அவன் ஏதோ ஒரு முடிவு எடுக்கப்போறான். அது என்ன முடிவு என்று நாம் காத்திருந்துதான் பார்க்க வேண்டும்." என்றான்.

மறுபடியும் அவளிடம் மைதிலி "அவன் ஒண்ணும் குழந்தை இல்லை. நாம எல்லாரும் அவனுக்கு என்ன சப்போர்ட் கொடுக்கணுமோ கொடுக்கலாம்.அவன் ஒண்ணும் நம்ம மேரேஜ் லைஃபைப் பார்த்து பொறாமைப் படற நிலைமையிலெல்லாம் இல்லை. நல்லா பக்குவம் ஆயிட்டான். சந்தோஷம்தான் படுவான். புரியுதா?" என்றான் அவன்.

'ம்' என்றாள் அவள்.

"உண்மையிலே நாம அவனுக்கு ஏதாவது செய்யணும்னா அவன் முன்னாடி நாம சந்தோஷமா இருக்கணும். அவன் அதைத்தான் விரும்பறான்." என்றான்.

அவள் குறும்பாகச் சிரித்தாள்.

"சந்தடி சாக்குல சிந்து பாடிடுவீங்களே?" என்றாள்.

"பின்னே இப்படி ஒரு நிலா வெளிச்சத்துல இந்த மாதிரி ஒரு இடத்துல கூட சிந்து பாடலைன்னு வச்சுக்கோ அப்புறம் நீ அன்னைக்குக் கேட்டியே உனக்கு

ஒண்ணும் புரியாதா மடையான்னு'' என்று அவன் தொடர.

''ஐய்யய்யோ, நான் அப்படியெல்லாம் கேட்கலை'' என்று அவள் பதற ''நேரடியா கேட்கலை பார்வையிலே கேட்டே.அப்புறமும் நான் புரிய வைக்கலன்னா எப்படி?'' என்றான் அவன்.

மெல்ல அவளை நோக்கிக் குனிந்தான்.

''ஹலோ, இதெல்லாம் தனி இடம் பார்த்து வச்சுக்கலாம்.'' என்று அவள் வெட்கத்துடன் அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு நகர்ந்தாள்.

''ஆமா, இன்னைக்கு ஒழுங்கா என்னை கவனிச்சுக் கணும்'' என்று சிரித்துக் கொண்டே அவனும் பின் தொடர்ந்தான்.

பேச்சை மாற்றிவிட்டாலும் உமா என்ன செய்யப் போகிறான் என்பது அவனுக்கும் ஒரு கேள்வியாகத் தான் இருந்தது.

அத்தியாயம் - 29

மெல்ல நடைபோட்டுக் கொண்டிருந்தான் சத்ய பிரகாஷ்

இரண்டு நாட்களுக்கு முன்புதான் திருமணம் முடிந்திருந்தது.

ஏழிசை வல்லபியின் கழுத்தில் தாலியைக் கட்டி நிமிர்ந்தபொழுது ஏதோ உலகத்தையே ஜெயித்து

விட்டாற் போல அவனுக்குள்ளே ஒரு பெருமிதம் தோன்றியது.

குடும்பத்தினர் அனைவருக்குமே மகிழ்ச்சி பிரவாகமாகப் பொங்கியது என்றுதான் சொல்ல வேண்டும்.

கலா டீச்சர் அன்றைக்கு கலாட்டா மயமாக இருந்தார்.

சத்ய பிரகாஷும் கூட சிரித்துக் கொண்டே ''டீச்சர், நீங்க கலா டீச்சர் இல்லை. கலாட்டா டீச்சர்'' என்று சொன்னான்.

ஏழிசை வல்லபியின் தோழிகள் எல்லாம் ''பாவம் சார், ராகவன் போட்டின்னு நினைச்சாரு'' என்று அதை வேறு கிண்டல் செய்தார்கள்.

ஏழிசை வல்லபியினுடைய இன்னொரு தோழி சொன்னாள். ''சார், இப்ப உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? கேசவன், மாதவன் அப்புறம் எல்லாமே வைணவப் பேரா போச்சாம். அதனால சங்கரன் என்று ஒரு பெயரு. இத்தனை பேரு வர ஆரம்பிச்சாட்டாங்க சார்.''

சத்ய பிரகாஷ் இதை எல்லாம் அன்பான ஒரு புன்னகையுடன் கேட்டுக் கொண்டு அங்கீகரித்துக் கொண்டு இருந்தான்.

''என்ன பதிலே காணோம்?'' என்றார் கலா டீச்சர்.

''இன்னைக்கு ஒரு நாள் உங்க ராஜ்ஜியம். என்ன வேணும்னாலும் பேசுங்க?'' என்றான்.

"நிஜமா சொல்லு. நீ ராகவன் யாருன்னு கவலைப்படலை?" என்று கேட்டார்.

சத்ய பிரகாஷினுடைய முகம் சிவந்து விட்டது.

இதையெல்லாம் அங்கே நின்று கவனித்துக் கொண்டிருந்த சம்பத் குமார் சொன்னான்.

"டீச்சர், உங்களுக்குத் தெரியாது. எங்கிட்ட தனியா விசாரணை, ஏழிசை வல்லபிகிட்ட விசாரணை, நான் வேற சஸ்பென்ஸ்ன்னு சொல்லிட்டு வந்துட்டேனா. ஏழிசை வல்லபியை கேட்டுக் கேட்டுப் பார்த்திருக்காரு அவளும் அதையே மெயிண்டெய்ன் பண்ணி ஐயோ சாமி!" என்று கேலி செய்ய

சத்யா திரும்பி முறைத்தான். "பேசுவப்பா பேசுவே. மைதிலியை பொண்ணு பார்க்க வந்தாங்கள்ளே அன்னிக்கு நீ எவ்வளவு டென்ஷனா இருந்தேன்னு எனக்குத்தானே தெரியும்" என்றான் அவன்.

"உங்களுக்கு இன்னொரு விஷயம் தெரியாதா?" என்று வந்தான் உமாகாந்தன்.

"படம் வரைஞ்சு கொடுத்தாரில்லே அண்ணன் படம். அது கூட அவரே வரைஞ்சாரு" என்றான்.

கலா டீச்சர் "ஆமாமா, எனக்கும் தெரியும்" என்று சிரித்தார்.

"முதல்ல நீ வரைஞ்சு கொடுத்துடுடா அப்படின்னாரு. அப்புறம் பார்த்தா ரொம்ப நாளா தூசு தட்டி வச்சிருந்த டிராயிங் போர்டு, ஸ்டாண்டு, மத்த திங்க்ஸ் எல்லாம் எடுத்து தீவிரமா இவரே வரையறாரு.

அப்பவே இவருக்கு விட்டுக் கொடுக்கக் கூடாதுங்கற எண்ணம் வந்துடுச்சு பார்த்திங்களா?" என்றான் உமாகாந்தன்.

சத்ய பிரகாஷின் முகம் சிவந்து போனது.

ஏழிசை வல்லபி ஓரக்கண்ணால் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

அதெல்லாம் இப்பொழுது நினைவுக்கு வர லேசான ஒரு புன்னகையுடன் மனைவியின் வரவுக்காக காத்துக் கொண்டிருந்தான்.

திருமணத்தன்றைக்கு சடங்கு வேண்டாம் என்று சொல்லியிருந்தான்.

மிகவும் நாசூக்கான முறையிலே இது மாதிரி விஷயங்கள் நடத்தப் பட வேண்டும் என்பதும் அவனுடைய கட்டளையாக இருந்தது.

சம்பத் குமாரும் மைதிலியும் அதற்கு ஏற்ப ஏதோ பெண் வீட்டுக்கு வருவது போல வந்து அங்கே இந்த ஏற்பாட்டை செய்திருந்தார்கள்.

என்னதான் ஏழிசை வல்லபியிடம் சிரித்துக் கொண்டிருந்தாலும் இழைந்து கொண்டிருந்தாலும் பேசிக் கொண்டிருந்தாலும் தனிப்பட்ட முறையில் பேசுவதற்கு இந்த இரண்டு நாட்களாக வாய்ப்பு கிடைக்க வில்லை.

ஏழிசை வல்லபி உள்ளே வரவும் காத்துக் கொண்டிருந்த சத்யா எழுந்து சென்று வரவேற்றான்.

"வாங்க தேவியாரே. வாங்க" என்று ஒரு வணக்கம் போட்டான்.

அவள் சிரித்தாள்.

என்னதான் படித்த பெண்ணாக இருந்தாலும் இந்தமாதிரி ஒரு அனுபவம் என்னும் போது இயற்கையாக ஏற்படக் கூடிய கூச்சமும் நாணமுமாக அவள் மெல்ல அடியெடுத்து வைத்தாள்.

"ஏழிசை, இரண்டு நாளா பேசறதுக்கே வாய்ப்புக் கிடைக்கலை. தரிசனம் மட்டும் கிடைக்குது. பேச முடியலை எப்படி இருந்திருக்கும்?" என்றான் அவன்.

அவள் புன்னகையுடன் அவனைப் பார்த்தாள்.

"என்னமோ ரொம்ப உருகிப் போன மாதிரி சொல்றீங்க? எப்படியெல்லாம் என்னை வம்பு பண்ணினீங்க?" என்று கேட்டாள்.

"ஆமாமா. அதுக்கெல்லாம் மன்னிப்பு கேட்கணும் இல்லே. என்ன பண்ணனும் சொல்லு? சாஷ்டாங்கமா கால்ல விழுந்துடலாமா, மண்டி போடலாமா, இல்லை தோப்புக்கரணம் போடலாமா?"என்றான் தொடர்ந்து

"மூணு ஆப்ஷன் தானே ஆயிருக்கு இன்னொரு ஆப்ஷன் வேணுமே?" என்று சிரித்தான்.

"இன்னொரு ஆப்ஷன் இருக்குங்க" என்றாள் அவள்.

"சொல்லு, செஞ்சுருவோம்."

"ஆல் தி அபவ். இவை யெல்லாமே அப்படின்னு..." என்று சொல்லி முடிப்பதற்குள்ளாகவே அவன் உண்மையாக தோப்புக்கரணம் போடப் போனான்.

அவள் சட்டென்று அவனுடைய இரு கைகளையும் பிடித்துக் கொண்டாள்.

அவன் பார்வை மாறியது.

இந்த நாடகம் எல்லாம் ஏதாவது ஒரு தொடக்கத்திற்காகத்தான் என்பது அவளுக்கும் புரிந்தது.

தன் கைகளில் கிடைத்த கைகளை விடாமல் அவன் இறுகப் பிடித்துக் கொண்டு அருகிலே இழுத்துக் கொண்டான். அப்படியே சென்று அருகிலே அமர வைத்துக் கொண்டான்.

"என்னமோ கவிதையெல்லாம் எழுதுவே அப்படின் னாங்க. ஒரு கவிதையும் எழுதலையா?" என்று கேட்டான்.

"நிறைய எழுதறேன்."

"ஒண்ணு ரெண்டாவது சாம்பிளுக்கு சொல்லக் கூடாதா?" என்றான்.

சொன்னாள்.

'தூரிகை பிடித்தொரு
ஓவியம் வரைந்தாய்
ஆருயிர் நிறைந்தாய்
காதலைக் கடைந்தாய்!
பேரெது ஊரெது
பலதும் மறந்தேன்
தூரிகை முனையிலே
வெண்ணெயாய் உருகினேன்!

மெல்ல இழுத்த அவன் கைகளுக்குள் அடங்கியபடி சொன்னாள்.

'இது நீங்க ஓவியம் வரைஞ்சப்ப எழுதினது. இது நீங்க வருத்தினப்ப எழுதினது.'' என்று இன்னொரு கவிதை சொன்னாள்.

''யாரெனக் கேட்டாய்?
என்னையா கேட்டாய்?
உன்னையே கேட்டாய்?
உனது கேள்வியால்
உன் மீதே நீ
தூசுகள் தெளித்துக் கொண்டாய்.
நிச்சயமாய் நீ
ஒரு நாள் உணர்வாய்!
பொய்மை துரத்துவாய்
உன் ஐயங்களெல்லாம் பஞ்சாய்ப் பறக்க

பஞ்சு மெத்தையில்
பாடம் படிப்பேன்!
நிச்சயமாய் நீ
பாடம் கேட்பாய்!

அவன் ரசித்துக் கேட்டான். பார்வை மாறியது.

முகத்தில் கிறக்கம் ஏறியது.

'படிப்போம்... படிப்போம்' என்றான்

மெல்ல அடுத்த கட்டத்திற்குத் தாவ முயற்சிக்கையில் அவள் மெல்ல அவனை விலக்கினாள்.

''என்னமோ நிபந்தனையெல்லாம் சொன்னீங்களே?'' என்றாள் அவள்.

''நான் தான் சொல்லிட்டேனேம்மா. அதை மறந்துரு அப்படின்னு. நீ மட்டும் என்னவாம் உமாகாந்தன்

போன உடனே ஒருவேளை நம்மளை தப்பா நினைச்சிருப்பானோ அப்படின்னு கேட்டேல்ல.?''

''ஆமா அதை வேற ஞாபகப் படுத்தாதீங்க. வேணும்னுதான் அப்படிக் கேட்டேன். நீங்க உடனே கோபிச்சுட்டு...!''

''நாலு நாள் டெஸ்ட் வச்சுட்டியில்ல. ஆமா உங்களால இருக்க முடியுதான்னு பாருங்க அப்படின்னு தான் டெஸ்ட் வச்சேன்.''

''ஆனா, நாலு நாளிலே விழுந்தடிச்சிட்டு கூப்பிட்டீங்களா இல்லையா?'' என்றாள்.

''அதைவிட இன்னொரு நாள் ஒரு பரீட்சை வச்சயே?'' என்றான் அவன்.

அவள் முகம் சிவந்து போனது.

''இப்ப அது மாதிரி ஏதாவது ஆரம்பிக்கலாமில்லே'' என்றான்.

''ஆசை, தோசை, அப்பளம் வடை!'' என்றாள் அவள்.

அவன் சிரித்தான்.

மெல்லக் கையைக் கொண்டு வந்து அவள் காதருகில் சொன்னான். ''ஐ ஆம் ரியலி சாரி ஏழிசை. உண்மை என்ன தெரியுமா? நானும் எப்படி எப்படியோ முயற்சி செய்து பார்த்தேன்.'' என்றான்.

''எதுக்கு?'' என்றாள் அவள் கோபமாக.

''கொஞ்சமாவது உங்கிட்ட இருந்து விலகி இருக்க முடியுமா? அல்லது உன்னை விலக்கி வைக்க

முடியுமான்னு முயற்சி பண்ணினேன். நடக்கவே இல்லை.நான் இந்த விஷயத்துல தோத்துட்டேன்'' என்றான் அவன்.

அவள் மெல்லச் சிரித்தாள். ''அப்ப நான் ஜெயிச்சதா வச்சுக்கலாமா?'' என்றாள்.

''அய்யே, அசடே'' என்றான் அவன்.

''என்ன?'' என்பது போல அவள் பார்க்க.

''உனக்குப் புரியவே இல்லை. இந்த மேட்டர்ல மட்டும் தோக்கறவங்கதான் ஜெயிச்சாங்க.'' என்றான்.

அவள் அழகு காட்டி விட்டு சொன்னாள். ''அப்படி ஒண்ணும் இல்லை. ஜெயிச்சும் கவுக்கலாம்'' என்றாள் அவள்.

''ம், அப்படியா?'' என்று அவன் இன்னும் நெருங்க.

''ஆமாம், ஜெயிச்சது நானா இருக்கறமாதிரி நெனைச்சுட்டே இப்ப உங்ககிட்ட தோத்துட்டே இருக்கேன் பாருங்க.'' என்று சொல்லிவிட்டு அவன் மார்பிலே முகம் பதித்துக் கொண்டாள்.

கிறக்கமாகச் சிரித்த சத்ய பிரகாஷ் சொன்னான். ''ரெண்டு பேரும் தோக்கறோம். ரெண்டு பேரும் ஜெயிக்கறோம்.இது நல்லா இருக்கில்ல'' என்றான்.

''ரொம்ப ரொம்ப நல்லாயிருக்கு'' என்றவள் ''என்னவோ உமாகாந்தனுக்காக வாழ்க்கையே தியாகம் பண்றேன்னு சொன்னீங்க. இப்ப உமாகாந்தன் நினைப்பே வரலையா?'' என்றாள்.

''இப்போதைக்கு எல்லாரும் அந்தக் கதவுக்கு வெளியிலே. நாம மட்டும் தான் உள்ளே'' என்றான்.

''இல்லைங்க. ஒரு விஷயத்தை நாம் மறக்கவே கூடாது. நாம நினைச்சுட்டு இருக்கோம். நம்மதான் போராடிட்டிருந்தோம்னு. ஆனா உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா. கலா டீச்சர் போய் உமாகாந்தன் கிட்டே பேசியிருக்காங்க''.

''அப்படியா? இது எப்ப நடந்துச்சு?''

''ஆமாங்க, நான் உங்க ஆஃபீஸ்ல இருந்து வந்தேன்ல அப்ப முதல் தடவை கோவிச்சுட்டு நான் இரண்டு இடத்துக்கு போயிட்டு வந்தேன். ஒண்ணு கோயில், இன்னொன்னு கலா டீச்சர் வீடு, நான் கலா டீச்சர் வீட்டுக்குப் போய் நான் எதையுமே நினைச்சுப் பேசலை. ஆனாலும் அனுபவ சாலி இல்லையா புரிஞ்சுக்கிட்டாங்க. உமா மைதிலி கல்யாணத்துக்காக வந்ததுக்கு பிறகு உமாகிட்ட பேசியிருக்காங்க''.

''அப்படியா,'' என்றான் சத்ய பிரகாஷ்.

''உண்மை என்னன்னா உமா போய் கலா டீச்சர் கிட்ட பேசியிருக்காரு.''

''ஆஹா, என்ன பேசினான்?'' என்றான்.

''இல்லை, எம் மனசுல என்ன இருக்குன்னு நேரடியா கேட்கறதுக்கு கூச்சப்பட்டுட்டு அங்க போய் கேட்டிருக்காரு. அப்புறம் அவங்க ஓரளவுக்கு விளக்கியிருக்காங்க. அப்புறம்'' என்றாள்.

''ம். சொல்லு சொல்லு''

"அந்த மதனகோபால் வந்தவுடனே நீங்க ரொம்ப டென்ஷனாகி...." என்று அவள் கிளுகிளு என்று சிரித்தாள்.

"ஆமா, உங்க அண்ணன் வந்து திருப்பித் திருப்பி எங்கிட்ட சொல்றான். அத்தை கேட்கறாங்க. துபாய்க்கு அனுப்பறதுக்கு யோசிக்கறோம். இல்லாட்டி கொடுத்துடுவோம் அப்படின்னு சொல்றான். அப்ப மைதிலி கல்யாணம் ஃபிக்ஸ் ஆயிருந்தது. இல்லைன்னா அவன் பண்ணினதுக்கு... நாலு இழுத்திருப்பேன்!" என்று இழுத்தான்.

"ஓஹோ இழுத்துடுவீங்களோ?" என்றாள் ஏழிசை வல்லபி.

"அதுக்குத்தான் வழியில்லாம போச்சே!" என்றவன் குபீரென்று சிரித்தான்.

"ஆனா வேணும்னுதான் பண்ணியிருக்கான்" என்றான்.

ஏழிசை வல்லபி சிரித்தாள் "அண்ணன் உங்களை உசுப்பி விடறதுக்காக பண்ணியிருக்காரு. மதன கோபால் உண்மையிலே...! அப்கோர்ஸ் ஹி வான்டட் டு மேரி மி ஆனா. என் மனசுதான் எங்கிட்ட இல்லையே" என்றாள்.

"ஏய், அது எங்கே போயிருந்தது? திருவீதி உலா போயிருந்ததா?" என்றான்.

"இல்லை, இல்லை, அது ஒரு கார் ஓர்க்ஷாப்புக்கு ரிப்பேருக்குப் போயிருந்தது" என்றாள்.

"அப்படியா? ரிப்பேர் ஆகி வந்துடுச்சா?" என்றான்.

"நீங்க வேற அந்த ஓர்க் ஷாப் போன உடனே அது இன்னும் டேமேஜ் ஆகி அந்த ஓனர் சரி பண்ணினா தான் ஆகும் அப்படின்னு ஆயிருச்சு தெரியுமா?"

"அப்படியா. ஓனர் சரி பண்ணக் காத்துகிட்டிருக்' காரு. அப்பக் கொஞ்சம் சரி பண்ண ஆரம்பிப்போமா? ஏன்னா அது லைஃப் லாங் பிராசஸ்" என்று அவன் நெருங்க அவள் மெல்ல இடங்கொடுக்க அவன் ஆழமான குரலில் சொன்னான்.

வல்லபி "உமாவை மறக்கலை. சம்பத்தை மறக்கலை. மைதிலியை மறக்கலை. அம்மா அப்பாவை மறக்கலை. எல்லாம் அவங்கவங்க இடத்துல ஆனா இந்த இதயத்திலே காதலுக்குன்னு இடம் ஒண்ணு இருக்கு பார்த்தியா. அதுக்குள்ள நீதான்.என்னைக்கு அந்த ஓவியத்தைப் பார்த்து ரொம்ப ஆசைப்பட்டு ஏமாந்த முகத்தோடு போனியோ அன்னிக்கே என் மனசு தொலைஞ்சு போச்சு. நீ ஓவியத்தை வாங்கறேன்னு அந்த ஓவியத்தை வரைஞ்சவனையே வளைச்சுட்டியே பெண்ணே" என்றான்.

வெறும் பேச்சாக இருந்தால் அவள் பேச்சால் பதில் கொடுத்திருப்பாளோ என்னவோ? பேச்சு பேச்சாக இருக்க அவன் காரியத்தில் கண்ணாவதைக் கண்டவுடன் அவளும் இழைந்து கொடுத்தாள்.

"இதோ பார். இனிமேலெல்லாம் நானும் நீயும் வேற வேற இல்லை. சுத்தத் தமிழ்ல சொல்லணும்னா

நானென்றும் நீயென்றும் நம்மளைப் பிரிச்சுக்கவே முடியாது. நான்தான் நீ நீதான் நான்'' என்றான்.

அந்த சொற்களில் குழைந்து கிடந்த அன்பு அவளை உருக்கியது.

அந்த உருக்கத்தில் அவள் அவனுக்கு இழைந்து கொடுக்கலானாள்.

அவனும் குழைந்து கொண்டு உளறலானான்.

அத்தியாயம் - 30

''உமா, வேணுங்கறதெல்லாம் எடுத்துக்கிட்டியா?'' என்றார்கள் மொத்த குடும்பத்தினரும்.

''ஒரு சூட்கேஸ் நிறைய எடுத்துருக்கேன் போதும். ஏண்ணே போதுமில்லே?'' என்றான் அவன் ஜெய கோபாலைப் பார்த்து.

''போதும்பா. எப்ப வேணும்னா வந்துக்கறதுதானே?'' என்றான் ஜெயகோபால்.

இரண்டு திருமணங்களிலும் வெகு ஆர்வமாக பங்கெடுத்துக் கொண்ட உமாகாந்தன் இப்பொழுது ஒரு முடிவு எடுத்திருந்தான்.

அண்ணனிடமும் சொல்லி விட்டான்.

''அண்ணே நான் ஏதோ உங்ககிட்டேயிருந்தெல்லாம் தப்பிச்சுட்டுப் போற மாதிரி ஓடினேன். கொஞ்சமே கொஞ்சம் எங்களை மாதிரி இருக்கறவங்களோட உலகத்தைப் பார்த்தேன். இன்னும் நிறைய பிரச்சினைகள் இருக்குண்ணா. ப்ராப்பர் ஐடென்டி

இல்லை. ரேஷன் கார்டுல பெயர் போடறதுக்கு அனுமதிச்சிருக்காங்க. இன்னும் நிறைய உரிமைக ளெல்லாம் வாங்க வேண்டியிருக்கு எங்க கம்யூனிட்டி'' என்றான்.

சத்யா இப்பொழுது ஒரு தெளிவுக்கு வந்திருந்தான்.

இருவரும் எதிரெதிராக அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

உமாகாந்தன் சுயமாக முடிவுகளை எடுத்துக் கொள்ளக் கூடிய தகுதியை அடைந்துவிட்டான் என்பது புரிய அன்புடனும் வாஞ்சையாகவும் பார்த்துக் கொண்டிருந்தான்.

''அதனால அண்ணா நான் என்ன பண்ணப் போறேன்னா ஒரு ஒன் இயர் எங்களை மாதிரி இருக்கறவங்களோட வாழ்க்கை எல்லாம் ஸ்டடி பண்ணப் போறேன்'' என்றான்.

சத்யாவின் முகத்தில் லேசான கலவரம் தோன்றியது.

''தாங்குவியாப்பா? நீ நொந்துடுவேப்பா'' என்றான்.

''இல்லைண்ணா இனிஷியல் ஷாக்கும்பாங்கல்ல அந்த மாதிரி ஆரம்ப கட்ட அதிர்ச்சி சரியாயிடுச்சு. நிறைய பிரச்சினைகள்லதான் இருக்காங்கன்னு தெரியுது. நாயுங் கூட இந்த வாழ்க்கை வாழாதுங்கறதுமாதிரி சில இடங்களிலெல்லாம் ரொம்ப கஷ்டப்பட்டுட்டிருக் காங்கண்ணா. இப்ப ஜெயகோபால் அண்ணன் பாருங்க, சேவை செய்யறாருல்ல. அவரு மாதிரி ஆட்களுக்கு நாம சப்போர்ட் கொடுக்கறது நம்ம

கடமை. நான் அவரு கூட போய் ஸ்டடி பண்ணிட்டு கோயம்புத்தூர்ல ஒரு பேஸ் வச்சுட்டு ஏதாவது பண்ணலாம்ன்னுட்டு இருக்கேன்'' என்றான்.

''சரி தம்பி, உனக்கு என்ன வேணுமோ கேளு. என்ன சப்போர்ட் வேணுமோ கேளு'' என்றான் சத்ய பிரகாஷ்.

''எனக்கு ஏதாவது நீ பண்ணனும்னு நினைச்சீன்னா உன்னோட ஃப்ரஷ்னிங் செண்டர்ல என்ட்ரன்ஸ் ஓரமா ஒரு ஆபீஸ், கீழே ஒரு பத்துக்கு இருபது அதே மாதிரி மேலே ஒரு பத்துக்கு இருபது ஏதோ ஒரு நாலு பேர் ஸ்டே பண்றமாதிரி போட்டுக் கொடுண்ணே'' என்றான்.

''கண்டிப்பாடா ராஜா!'' என்றான்.

''நான் ஃபுல்லா ரவுண்ட் அடிச்சிட்டு வந்து அங்கே ஒரு ஆஃபீஸ் போட்டுக்கறேன். ஏதோ ஒரு என் ஜி ஓ மாதிரி பண்ணி என்னை மாதிரி இருக்கறவங்களுக்கு சர்வீஸ் பண்ணனும் அப்படின்னு நினைக்கிறேன் அண்ணா'' என்றான்.

உமாகாந்தன் இப்படி பேசும்போது சம்பத் குமாரும் சத்யபிரகாஷும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

உமாகாந்தனது திட்டத்துக்குக் காரணம் என்ன என்பது அவர்கள் இருவருக்கும் புரிந்திருந்தது.

ஓராண்டு காலம் அந்த இரண்டு ஜோடிகளும் சுதந்திரமாகவும் ஜாலியாகவும் இருக்க வேண்டுமாம்.

தான் இருந்தால் அவர்கள் ஃப்ரீயாக சந்தோஷமாக இருக்க மாட்டார்களாம்.

அதே சமயத்தில் தன்னைப் பற்றிய கவலையும் வேண்டாம் என்பதற்காக இப்படி ஒரு யோசனையை செய்திருக்கிறான் என்பது இருவருக்குமே புரிந்தது.

அதில் ஓரளவு நியாயமும் தெரிந்ததால் அவனை அவன் போக்கிலே விட்டு விட்டார்கள்.

''ஏண்ணே, இன்னும் ரெண்டு மாசத்துல பத்திரம் கைக்கு வந்துடுமில்லே'' என்றான்.

''ஆமாம்பா, வந்துடும்னு நினைக்கிறேன்'' என்றான் சத்ய பிரகாஷ்.

''வாங்கினதுக்கப்புறம் இந்த ஏற்பாடு பண்ணுங்க'' என்றான்.

''அது என்னடா ஒரு ஒன் மந்த்ல முடிச்சிடலாம். அதிக பட்சம் டூ மந்த்ஸ். மெட்டிரியல் எல்லாம் கலெக்ட் பண்ணிட்டு வேலை ஆரம்பிச்சோம்னா முடிஞ்சது'' என்றான்.

''சரிண்ணே!'' என்றான் உமாகாந்தன்.

''அப்ப நீ எங்களோட இருக்க மாட்டியா'' என்று கேட்டான்.

''கண்டிப்பாண்ணே, நம்ம வீட்ல தான் ஸ்டே பண்ணுவேன். நீ எப்படி ஆபீஸ் வர்றே அது மாதிரி நானும் இந்த சோஷியல் ஆக்டிவிட்டீஸ் எல்லாம் பார்க்கப்போறேன். ஐ வான் டு பி எ சோஷியல் ஆக்டிவிட்டிஸ்ட்'' என்றான்.

"சரிடா, உனக்கு எது மனசுக்கு சரியோ அதைச் செய்!" என்றான் சம்பத் குமார்.

கூட அமர்ந்திருந்த ஜெயகோபால் கடகடவென்று சிரித்தார்.

"எதுக்கண்ணே சிரிக்கறீங்க?" என்றார்கள் எல்லோரும்.

"இல்லைப்பா, நீங்க மைதிலி கல்யாணம் ஃபிக்ஸ் ஆயிடுச்சு நீங்க வான்னு சொன்னீங்கள்ல அதற்கு முதல் நாள் தான் நானும் இவனும் ஒரு திட்டம் போட்டிருந்தோம்."

"என்னன்னு?" என்று கேட்டான் சம்பத் குமார்.

"வேற ஒண்ணும் இல்லை, வீட்லயே சமைச்சுக் கலாம். இவன் சமைக்கறேன்னான். ஆஹா வீட்டு சாப்பாடு கிடைக்கப் போகுதுன்னு ஆசையா இருந்தேன். அன்னைக்குப் பார்த்து சத்யா ஃபோன் பண்ணினான். சரி போ, நம்மளுக்கு கொடுத்து வைக்கலை அப்படின்னு நினைச்சேன். ஆனா இப்போ நடந்துடும் போல இருக்கு" என்றான்.

உடனே சத்ய பிரகாஷும் சம்பத் குமாரும் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு பெருமூச்சு விட்டார்கள்.

"உங்க தலையெழுத்து அப்படி இருந்தால் விட்டா போகும்" என்றார்கள் கோரஸாக.

உடனே உமாகாந்தன் மைதிலியைப் பார்த்து "பாரு மைதிலி" என்றவன் உடனே தலையைத் திருப்பி

அண்ணி "இங்க பாருங்க" என்றான் வல்லபியை பார்த்து.

"அவங்க கிடக்கறாங்கப்பா. அவங்களுக்கு ஒண்ணுமே தெரியாது" என்றாள் வல்லபி.

"அண்ணி அப்படி நினைச்சுக்காதீங்க. சூப்பரா ஒரு வெங்காய தோசை போடுவாங்க தெரியுமா உங்களுக்கு?" என்றாள் மைதிலி.

பழைய நினைவுகளுடன் உமாகாந்தனும் சத்ய பிரகாஷும் திரும்பிப் பார்த்தார்கள்.

சத்ய பிரகாஷ் ஏக்கம் நிறைந்த குரலில் சொன்னான். "உமா, நீ வளர்ந்துட்டே. சிறகடிச்சுப் பறக்கணும்னு நினைக்கறே. நான் தடுக்கணும்னு நினைக்கலை. ஆனா எப்ப எங்களுக்கு உன்னைப் பார்க்கணும்னு தோணினா வருவியா?" என்றான்.

"இதென்ன பெரிய விஷயம் அண்ணா, நீ தகவல் கொடு வரேன்" என்றான்.

"அது மட்டும் இல்லைண்ணா, மூணு மாசத்துக்கு ஒரு வாட்டி ஒரு கண்காட்சி போட்டுடுவோம்" என்றான்.

"தட்ஸ் எ குட் ஐடியா!" என்றான் சத்ய பிரகாஷ்.

உடனே உமா குறும்பாகப் பார்த்து ஏழிசை வல்லபியிடம் சொன்னான் "அண்ணி ஜாக்கிரதை. பொண்ணுங்க யாராவது எனக்கு ஓவியம் கிடைக் கலைன்னு ஏங்கிப் போய் வந்து கேட்டா இவரு அந்தப் பொண்ணுக்கு ஓவியம் வரைஞ்சு கொடுக்கறேன்னு கிளம்பிடப் போறாரு." என்று எல்லாரும் சிரித்தார்கள்.

"பின்னே? இவரு ஒவியம் வரைஞ்சாலும் வரைஞ்சாரு. ஒவியம் வரைஞ்சு எப்படியோ ஒரு ஒவியத்தையே கூட்டிட்டு வந்திட்டாரு" என்றான் ஜெயகோபால்.

வல்லபி வெட்கத்துடன் புன்னகைத்தாள்.

உமாகாந்தன் இதையெல்லாம் ஆசையுடன் பார்த்துக் கொண்டான்.

இரண்டு பக்கமும் பெற்றோர்கள் சற்றுத் தொலைவிலே இருந்து ஆனால் இதெல்லாம் அவர்கள் காதுபட கேட்கிற மாதிரி இடத்திலே இருந்து மகிழ்ச்சியுடன் கேட்டுக் கொண்டார்கள்.

"ஒரு வருஷம் டைம். அதுக்கப்புறம் எனக்கு முக்கியமான வேலை இருக்கு" என்றான் உமாகாந்தன்.

"என்ன வேலை?" என்றான் சம்பத் குமார்.

"ஆளுக்கு ஒரு குழந்தை பிறந்துடும் இல்லை. அந்தக் குழந்தைங்களை போட்டோ எடுக்கக் கூடாதுன்னு வாங்க. அந்தக் குழந்தைங்களை ஒவியமா வரைஞ்சுடுவேன். அதுமட்டும் இல்லை. இரண்டு குழந்தைகளுக்கும் நான் தான் பேரு வைப்பேன்." என்றான்.

"சரிப்பா!" என்றான் சத்யா அவசரமாக.

"நல்ல பேரா வச்சுருவேங்க, அண்ணி கவலைப் படாதீங்க. அதுக்கப்புறம் ஒன் இயர் இங்க டேரா போட்டுட்டு ரெண்டு வீட்டுக் குழந்தையும் வளர்த்துக் கொடுத்துட்டு அப்புறம் மறுபடியும் எங்க இயக்கத்து வேலையை ஆரம்பிச்சிட வேண்டியதுதான்".

சம்பத் குமாரும், சத்ய பிரகாஷும் ஒரு விதநெகிழ்வோடு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களது பார்வை புரிந்தது போல உமாகாந்தன் சொன்னான். "அண்ணே நீ ரொம்ப சோகமாகப் பார்க்காதே. நீங்களெல்லாம் கல்யாணம் பண்ணிட்டு கஷ்டப் படப போறீங்க. நான் கல்யாணம் பண்ணாம கஷ்டப் படப் போறேன்."

அவர்கள் சற்றே சோகம் கலந்தாற் போல சிரித்தார்கள்.

உமாகாந்தன் இப்போது அவர்களை சீரியஸாகப் பார்த்தான். "ஐ ஆம் ரியலி சீரியஸ் அண்ணா, வாழ்க்கையில் கல்யாணம் மட்டும் நோக்கம் அல்ல. வேறே வேறே விதமாக வாழலாம். என்னைக் கடவுள் வேற நோக்கங்களுக்காக படைச்சிருக்காரு அப்படின்னு எனக்குத் தோணுது. இப்ப நீங்களெல்லாம் நான் தான் ஒர்ஸ் ஆண் நீங்களெல்லாம் ஒரு பெண் அப்படின்னு சொல்லிக்கிறீங்க. அந்த நான் நீ இரண்டுமே எனக்குள்ளே இருக்கு. அதனால நான் ஒரு கம்பைண்ட் பர்சனாலிட்டி. சொல்லப்போனா உங்களை விட சூப்பர் பர்சனாலிட்டி. அதனால ரெண்டு இனத்தோட நல்ல குணங்களையும் உள்வாங்கி நான் உங்களுக்குத் திருப்பித் தரப்போறேன்."

"உங்களுக்குன்னா... சொசைட்டிக்கு!" என்றான்.

தொடர்ந்து ஒரு கவிதை சொன்னான். கவிஞர் இன்குலாப் எழுதிய கவிதை.

"பிறப்பால் தாழ்த்திட ஆயிரம் சாதிகள்
பெண்களை வதைத்திடும் உங்களின் நீதிகள்
உருப்பால் வளர்ந்ததே உங்கள் பண்பாடெனில்
நிர்வாணமாய் அதன் நெஞ்சில் நடக்கிறோம்
நாங்கள் நடக்கிறோம்
கூந்தல் முடித்தெம் முகங்கள் நிமிர்த்தினோம்
குங்குமம் தீட்டி எம் உறுதி உணர்த்தினோம்
சீந்துவார் இல்லை எனும் இழிவை மறுக்கிறோம்
சிறுமை செய்தால் நாங்கள் மனிதராய் எதிர்க்கிறோம்.

சட்டென்று எழுந்தான் சத்ய பிரகாஷ்.

உமாகாந்தனை எழுப்பித் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

"ரொம்ப தூரம் போயிட்டேடா. நீ எங்கேயோ போயிட்டே.ஐ ஆம் வெரி ப்ரவுட் ஆஃப் யூ. உன்னைப் பத்தி ரொம்பப் பெருமைப் படறேன்" என்று சொல்லிக் கொண்டான்.

அதே உணர்வோடு அவர்கள் எல்லோருமாக சேர்ந்து ஜெயகோபாலையும் உமாகாந்தனையும் புகை வண்டி நிலையத்திற்குச் சென்று வழி அனுப்பி விட்டு வந்தார்கள்.

"ஞாபகம் வச்சுக்கோங்க, நான் வேற நீ வேற இல்லை. நான் உங்க எல்லாத்துக்குள்ளேயும் இருக்கேன்" என்று சொல்லிச் சிரித்து விட்டு ஓடிப் போய் ரயிலில் ஏறிக் கொண்டான் உமாகாந்தன்.

வல்லபி ஒரு கவரை உமாகாந்தனிடம் கொடுத்தாள்.

உள்ளே ஒரு கவிதை!

படித்துப் பார்த்தவள் முகத்தில் புன்னகை உறைந்தது!

ரயில் கண்களில் இருந்து மறையும் வரை நின்று பார்த்துக் கொண்டிருந்த குடும்பத்தினர் வீடு வந்து சேர்ந்தார்கள்.

இப்பொழுது அவரவரது வீடுகளுக்கு வந்தார்கள்.

அன்றிரவு சம்பத் குமார் மைதிலியிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

"இங்க பாரு, உம் பிரதர் முக்கியமான வேலை கொடுத்திருக்கான்" என்று.

"என்னமோ ஏதோ!" என்று மைதிலி பார்க்க "அவன் ஒரு வருஷத்துல வரதுக்குள்ள அவன் கையில ஒரு குழந்தை கொடுக்கணுமாமே" என்றான் முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டு

மைதிலி பொய்யாக அவனை அடிப்பவள் போல அடித்து விளையாட ஆரம்பித்தாள்.

இதே காட்சி!

கிட்டத்தட்ட இதே காட்சி!

சத்ய பிரகாஷின் அறையிலும் நடந்து கொண்டிருந்தது.

"உமா கெட்டிகாரன் இசை" என்றான்.

"ஆமாங்க, ரொம்ப டிப்ளமேட்டிக்" என்றாள்.

"அவனுக்கு உள்ளூர அவன் இங்கிருந்தா நாம ஃப்ரீயா இருக்க மாட்டோம் அப்படின்னு எண்ணம் அதுக்காகத்தான் பய கிளம்பியிருக்கான்" என்றான்.

''சரிங்க! அவர் சொன்ன மாதிரி சமுதாயத்துக்கு அவரு உபயோகமா இருக்கட்டுமே'' என்றாள்.

''ஆமாடா!'' என்றான்.

ஆமா நீ ஏதோ பேப்பரை அவன் கையிலே கொடுத்தியே? கவிதையோ?!

'ம்...' என்றாள்.

'சொல்றது...?'

சொன்னாள்.

மனிதர் பலவிதம்
ஆன்மா ஒன்றுதான்
இனங்கள் பலவிதம்
இறைமை ஒன்றிதை
மனிதர் உணர்ந்திடும்
நாளும் வந்திடும்!
மனமே கலங்காது
கடமை ஆற்றிடு!

உரமாய்ச் சாய்ந்திட
தோள்களிங் குண்டு
பிறவிகள் தோறும்
சேர்ந்தே இருப்போம்
உறவாய் உன்னைப்
பெற்றதில் மகிழ்ந்தோம்
மறவாதே நீநம்
குடும்பத்தின் பெருமை!

அவள் சொல்லி முடித்ததும் அவன் முகம் மென்மையாய் மாறியது.

'தேங்க்ஸ்...! தேங்க்ஸ்!' என்று நெகிழ்ந்தான்.

'எதுக்கு தேங்க்ஸ்? நான் என்ன அந்நியமா?' என்றாள்.

'அதானே...!' என்று கிறக்கமாகப் பார்த்தபடி இழைந்தான்.

பிறகு ''நமக்கு ஒரு வேலை கொடுத்துட்டானே?!'' என்றான் கவலையாக.

அவள் என்னமோ ஏதோ என்று பார்க்க ''அடுத்த வருஷத்துக்குள்ள குழந்தை கேட்கறானே?'' என்றான்.

வல்லபி சிரித்தாள்.

''சும்மாவே ஆடற சாமி. இனி வேப்பிலை அடிச்சா கேட்க வேணுமா? நீ தான் சொல்லிட்டீயே! நானென்றும் நீ யென்றும் வேற வேற இல்லை நாம ரெண்டு பேரும் ஒண்ணுன்னு சொல்லிட்டீயே. நம்மளுக்குள்ளே அவன் வேற இருக்கானோ'' என்று குழைந்து கொண்டே இழைந்தான்.

இருவரும் கொஞ்ச நாட்களுக்குள்ளாக தங்கள் கையிலே தவழப் போகிற அந்த வாரிசைப் பற்றி கனவு கண்டு கொண்டே அதற்கான ஏற்பாடுகளை இறங்கலானார்கள்.

''இசை, எப்போதும் வாழ்க்கை இப்படி இனிமை யாவே போயிடும். அப்படின்னு சொல்ல முடியாது. உமாகாந்தன் வாழ்க்கையிலும் போராட்டம் இருக்கத் தான் செய்யும். நம்மையே எடுத்துக்கயேன். ஒரு பெரிய லோன் போட்டோம். அதையெல்லாம் அடைச்சிரு வேன்னாலும்'' என்றான்.

ஒரு நிமிடம் மௌனம் காத்தான் ''இருந்தாலும் மனதுக்கு இனியவள் பக்கத்திலே இருக்கும் போது எதுவுமே சுமையா இருக்காதில்லே'' என்றான்.

'ம்'என்றாள் அவள். அவன் மார்பில் முகம் பதித்துக் கொண்டு.

இரண்டு பேருடைய முகங்களிலும் எல்லையற்ற காதலும் அன்பும் தெரிந்தது.

வாழ்வில் இன்னொரு கட்டத்தை எட்டிப் பிடிக்க அவர்கள் இரண்டு பேரும் தாயாரானார்கள்.

இரு கரம் கோர்த்து இணைந்து நடக்கும் இனிய உணர்வோடு முதலடி எட்டி வைத்தார்கள்.

அப்போது கவிதையும், ஓவியமும் ஒன்றுக்கொன்று துணையாய் இணைந்து மகிழ்ந்தது!

பயணம் தொடர்ந்தது!

★ ★ ★